# நீங்களும் எழுதலாம்

## கவிதையிதழ் தொகுப்பு - 1

(12 இதழ்கள்)



ஆசிரியர்

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்

## கவிதை இதழ் தொகுப்பு -1

(12 இதழ்கள்)

தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

ஆசிரியர்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு :- நீங்களும் எழுதலாம்
நூலின் வகை :- கவிதையிதழ்கள் (12)
-தொகுப்பு - 1
ஆசிரியர் :- எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
வெளியீடு :- நீங்களும் எழுதலாம்
முதற் பதிப்பு :- 2020 ஐப்பசி
பதிப்புரிமை :- ஆசிரியருக்கு

முகவரி :- 43/4, சனல் ஒழுங்கை
திருகோணமலை.
தொ.பே:- 0778812912

பக்கங்கள் :- 18 + 468 =486
தாளின் தன்மை :- 70gsm Bank
நூலின் அளவு :- 9x4
பிரதிகள் :- 300
அச்சிட்டோர்
:- மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ்,
அல்வாய். தொ.பே:0776688318, 021 226 3099.
e-mail: mathurangraphics@gmail.com

விலை :- 900/=

ISBN :- 978-955-53138-1-0

e-mail:- n.ezhuthalam18@gmail.com

வங்கிமூலக் கொள்வனவு :-
- R.Thanabalasingam
106653402077
Sampath Bank,
Trincomalee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-Tittle :- Neeingalum Ezhuthalam Ithalkalin Thokuppu I

Category :- Poetry Magazine (12)

Editor :- S.R.Thanabalasingam

Publisher :- Neeingalum Ezhuthalam

First Edition :- 2020 October

Copy right :- To Editor.

Address :- 43/4, Channel Lane, Trinvomalee, Srilanka.

Printing :- Mathuran Graphics & Offset Printers

Pages :- 18+468 = 486

Prize :- 900/=

ISBN :- 978-955-53138-1-0

e-mail :- n.ezhuthalam18@gmail.com

T.P.No :- 0778812912

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அவையத்தில் முந்தியிருக்கச் செய்த
தந்தை சின்னப்பொடி இராமன்



ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்த
தாய் இராமன் தங்கம்

ஆகியோருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தேன்மொழி (1955) தொடக்கம் மறுபாதி (2009) வரை ஈழத்திலே கவிதைக்கான இதழ்கள் முப்பதிற்கு மேற்பட்டவை வெளிவந்துள்ளன. இவற்றுள் நீண்ட காலமாக வெளிவந்துள்ள இதழாக (2007-2020) நீங்களும் எழுதலாம் திகழ்கின்றது என்று கருத வாய்ப்புள்ளது. இவ்வாறே எண்ணிக்கை அளவிலும் இன்றுவரை வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலையிலிருந்து வெளிவரும் இரண்டாவது இதழாகவும் இது விளங்குகிறது.

தேன்மொழி (வரதர்) நவீன கவிதை எழுச்சி பெறத் தொடங்கிய காலகட்டத்தைப் பிரதிபலிக்கின்ற (மஹாகவி முதலானோர்) கவிதைகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. கவிஞன் (எம்.ஏ.நு.்.மான்) இதழ் ஏலவே ஆரம்பித்த கவிதைச் செல்நெறியை மேன்மேலும் வளம்படுத்திற்று. ஏற்புடைய கட்டுரைகளையும் மொழிபெயர்புக் கவிதைகளையும் வெளியிட்டிருந்தது. இவ்விதத்தில் வளமான புதிய தலைமுறையொன்று உருவாக தடமமைத்திருந்தது. "கவிதை" இதழ் (அ.யேசுராசா) மற்றொரு தலைமுறை உருவாக வழி காட்டியது. பதிய தலைமுறைக் கவிஞர்களது பேட்டிகளை பிரசுரித்திருந்தமை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கது. இதில் பிரசுரமான சில கவிதைகள் சிங்களப் பத்திரிகை ஒன்றிலும் மறுபிரசுரமானமை குறிப்பிடத்தக்கது.இவ்வழியில் குறிப்பாக திருகோணமலை பிரதேச கவிஞர்களுக்கு பெருமளவிலும் வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் சார்ந்த கவிஞர்களுக்கு கணிசமான அளவிலும் களமமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வவுனியா கல்வியியற் கல்லூரி, திருகோணமலை பிரதேச கல்லூரிகளின் மாணவர்கள் வெகு ஆர்வத்துடன் கவிதைகளை எழுதிவருவது கவனத்திற்குரியது. முதல் ஆறு இதழ்களின் கணக்கெடுப்பின்படி எண்பத்து மூன்று (83) கவிஞர்களுள் 53 கவிஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைப் பிரதேசம் சார்ந்தவர்களென்பது நினைவு கூரத்தக்கது. இப்போது இவ்வெண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்குமென்று நம்பலாம். இது தொடருமாயின் குறிப்பாக திருகோணமலையைப் பொறுத்தளவில் தி.த.சரவணமுத்துப்பிள்ளை, பிரமிள் சிவசேகரம், தாமரைத் தீவான், அஷ்மா நூர்தீன் முதலான கவிஞர்கள் பரம்பரை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படுமென்றும் நம்பலாம்.

மேற்கூறிய ஆரோக்கியமான நிலை ஏற்பட வேண்டுமாயின் இதழாசிரியர் கவிதைகளின் தரத்தில் திருத்தங்கள் செய்வதில் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது என்று கருதுகின்றேன். நவீன கவிதையும், புதுக்கவிதையும் (சிறுகதை, நாவல் போன்று) உலகப் பொதுவான வடிவங்களாதலின் மொழிபெயர்ப்புக் கவிதைகளுக்கு தொடர்ந்து இடமளிப்பதும் அவசியமாகின்றது. எம்.ஏ.நு.ஃ.மானின் பாலஸ்தீன மொழிபெயர்ப்புக் கவிதைகள் போர்க்கால புதிய தலைமுறைக் கவிஞர்களில் ஏற்படுத்திய செல்வாக்கு நாமறிந்ததே. ஈழத்து முன்னோடிக் கவிஞர்களின் கவிதைகளை முழுமையாகப் பிரசுரிப்பதும் அவர்களது பேட்டிகளை அவ்வப்போது வெளியிடுவதும் அதிக பயன் தருமென்பதில் ஐயமில்லை.

முன்னோடிக் கவிஞர்களது தேர்விலும், கவிதைகளின் தேர்விலும் கூடிய கவனமெடுப்பது வேண்டப்படுவது என்பது ஒரு புறமிருக்க, புதிய தலைமுறையினர் தமது நிதானமான வாசிப்பினூடாக அத்தகைய கவிதைகளிலிருந்து உறிஞ்சக் கூடியனவற்றை உறிஞ்சிக் கொள்வதும் மிக அவசிமானது. அவ்வாறே மொழிபெயர்ப்புக் கவிதைகளில் எடுத்துரைப்பு முறைகளும் அற்புதமானவை. ஈழத்திலே சி.சிவசேகரத்தின் கவிதைகளிலேயே பல்வேறு உத்திமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவருட்பட ஈழத்திலே முக்கிய கவிஞர்கள் பலரும் நு.ஃ.மான், சண்முகம் சிவலிங்கம், இ.முருகையன், சோ.பத்மநாதன், அ.யேசுராசா, சேரன் முதலானோர் மொழி பெயர்ப்புக்கவிதை முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் என்பதில் ஐயமில்லை.

நீங்களும் எழுதலாம் இதழில் எப்பொருள் பற்றியும் எழுதலாம் என்றாலும் (முதல் 12 இதழ்கள்) அரசியலும் காதலுமே அதிகமெழுதப்படு கின்றன. இன்னவைதான் எழுத வேண்டுமென ஒரு படைப்பாளிக்கு கட்டளையிட முடியாது. ஆயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டிலும் அயல் விட்டிலுமுள்ள வறுமை, அடிக்கடி தமது ஊரில் நிகழும் தற்கொலைகளை நுண்கடன் தரும் பயத்தை, தனது வீட்டிலோ அயல் வீட்டிலோ உள்ள முதிர் கன்னியர், புலமைத்தேர்வு யுத்தம், தெருவில் நிம்மதியாகத் தூங்கும் 'பெருங்குடிமகன்' ஒருமுறையாவது கண்முன்னால் தென்படும் மாற்றுத் திறனாளிகள், ரீ.வி.மெஹா தொடரின் முன்னால் நிகழ்கின்ற குடும்ப, சமூக சமத்துவம், இளந்தலைமுறை யினருக்கும் முகநூலுக்குமிடையிலான இரத்த உறவு முதலான விடயங்களுள் ஏதோவொன்றோ சிலவோ படைப்பாளிகளின் கவனத்தை ஈர்த்திருக்க வாய்ப்புள்ளது. ஆகவே அதுபற்றி, அவைபற்றி சிந்தித்து எழுத முன்வரவேண்டும். மேற்கூறிய வற்றில் ஏதோவொன்றில் படைப்பாளி தான் தொடர்புபடும் வாய்ப்பு ஏற்பட்டிருக்குமாயின் அதனை தனது உணர்வுத் தளத்திற்குள் கொண்டு வரவேண்டும். அடிக்கடி சிந்தித்துவரின் சடுதியாக அது கவிதையாக வெடிக்கும். "உள்ளத்தில் உள்ளது கவிதை, இன்ப உருவெடுப்பது கவிதை" என்று கவிமணி அர்த்தமின்றிக் கூறவில்லை. கிழக்கிலங்கையில் முஸ்லிம் பெண்கள் பலரிடம் அத்தகைய இயல்பு நிரம்பவுள்ளது. அரசியல் பிரமுகர் அஷ்ரப் காலமானபோது அவர்கள் பலர் ஒப்பாரி பாடியுள்ளனர். உயர்ந்த முறையில் கனகச்சிதமான அணிகளுடன் பாடல்கள் வெளிப்பட்டமை கவிமணி கூற்றிற்கு கட்டியங் கூறுகின்றது.

நீங்களும் எழுதலாம் பெண் கவிஞர்கள் சிலர் வெகு இயல்பாக தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். (எ.கா:-அருளானந்தி விஜயராஜ், தி.காயத்திரி, ம.கம்ஷி) தொன்மங்களைக்கூடப் பயன்படுத்தியுள்ளனர்.

புதிய தலைமுறையினர் பேசுபொருளில் கவனஞ் செலுத்துவது மட்டுமின்றி எடுத்துரைப்பு முறையிலும் கவனஞ் செலுத்த வேண்டும். தன்மை, முன்னிலை, படர்க்கை, நிலைநின்று தமது உணர்வுகளை மட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள் நின்று வெளிப்படுத்தி வருகின்றனர். மூத்த தலைமுறைக் கவிஞர்கள் பயன்படுத்தும் எளிய உத்திமுறைகள் பலவுள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பயன்படுத்தவியலும் எ-டு:-

I.மஹாகவி அன்றாட நிகழ்வுகளினூடாக கவிதை எழுதும் முறையை அறிமுகப்படுத்தினார். சாதிப் பிரச்சினையை எழுதிய 'தேரும் திங்களும்' அத்தகையது. நுஃமான் அரசியல் கவிதைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பயன்படுத்த முற்பட்டார். (எ.டு: நேற்றைய மாலையும் இன்றைய காலையும்)

II. கற்பனையூடாக ஒரு சம்பவத்தை உருவாக்க முடியும். சுபத்திரன் பின்வருமாறு பாடினார்.

பஞ்சுபடும் பாடுபடும் அவர்தம் உள்ளம்
பாடுபட்டுப் பலனிழந்து நிற்கும்போது
நஞ்சனையார் அவருள்ளம் காண்பதில்லை
நலன் தனது சுயநலத்தை நாடிநிற்கும்
வஞ்சனையார் வாழுகின்றார்.. வாழ்வு இல்லை
வெஞ்சினமே கொள்ளுதடா வீணர் கூட்டம்.
விளங்கவில்லை அவர் துயரம் சொல்லப் போமோ.

இதனை நு.்.மான் பின்வருமாறு காண்கிறார்.

**அவர்களும் பூனைகளும் நாய்களும்**
கார்கள் எல்லாம் போனபிறகு
ஹோட்டல் கதவுகள் மூடியபிறகு
விளக்குகள் எல்லாம் அணைந்த பிறகு
அவர்கள் வருவர்
தினமும் வருவர்
சப்பி எஞ்சிய இறைச்சித் துண்டுகள்
கைதுடைத்த கடதாசித் துண்டுகள்
கோழிமுட்டைகள்
நண்டுக் கோதுகள்
காய்கறி அரிந்த கழிவுகள்
நூடில்ஸ்
்.பிறைற்றைஸ்
தென்னந் தும்புகள்
தேங்காய் பூந்துகள்
குப்பைத் தொட்டியில் குவிந்து கிடக்கும்
அவர்கள் வருகையிலே
நின்று சுவைத்த
பூனைகள், நாய்கள்
பொறாமையோடு விலகிச்செல்லும்
தொலைவில்
அவர்கள் முகத்தைப் பார்த்தவாறே
உட்கார்ந்திருக்கும்
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு நாளும்...."

III. நாட்டார் பாடல் மரபிலிருந்து பல விடயங்களை உள்வாங்க முடியும்.

"அரிசிப் பொதியோடு வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி
நெல்லுப் பொதியோடு வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே பாடல் மரபில் மிகச்சில மாற்றங்களை மட்டும் செய்து அரசியல் (இந்திய அமைதிப்படையின் வரவு) கவிதையொன்றை எழுதுகின்றார் சோ.பத்மநாதன்

"அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிய தமிழீழம் கண்டீரோ தம்பி
பருப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
பருத்தித் துறையூரும் கண்டீரோ தம்பி"

"ஆக்காண்டி ஆக்காண்டி எங்கெங்கே
முட்டை வைத்தாய்" இப்பாடலை அறியாதவர் இருக்கமுடியாது. அதே பாடலை முன்மாதிரியாகக்கொண்டு சண்முகம் சிவலிங்கம் தொழிலாளர் துயரங்களைப் பேசுகிறார். மு.பொன்னம்பலம் (சமகால) அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை விமர்சிக்கப் பயன்படுத்துகிறார். கருணையோகன் பெண்களின் குரலாக இனங்காண்கின்றார்.

கிராமத்தில் நிகழ்கின்ற உடுக்கடிப் பாடல் மரபினை சமகாலக் கொடுமைகள் பற்றிப் பேசப் பயன்படுத்துகிறார் சி.சிவசேகரம்.

பூசாரி கூறுகிறான்

"தின்பண்டங்கள் கொண்டுவா
திரவ வகை கொண்டு வா
என்னுடைய சாமி
இன்னமும் நீ நிற்பதேன்
சொன்னதெல்லாம் கொண்டுவா"
......
கோழி அறுத்தோம் ஆடுபலி தந்தோம்
காசுபணம் தந்தோம் கட்டிடவும் துணிதந்தோம்
................
கோழிகளும் ஆடுகளும் கொண்டுபசி தீருவதோ
சாராயம் கள்ளருந்தி தாகம் தணிகுவதோ
பத்தாயிரம் உயிர்கள் பலிகேட்கும் தெய்வமிது
ரத்தத்தைக் கொண்டுவா
கிழடுபட்ட தசை வேண்டாம்
இளைய பரம்பரையின்
இனிய தசைகொண்டு வா
பட்டம் பதவி அதிகாரம் பணமுடையோர்
பெற்றெடுத்த பிள்ளைகளின்
ஊளைத் தசை வேண்டாம்...."

செ.குணரத்தினம் வெளியிட்ட 'குமுறுதுடா என்மனசு' தொகுப்பு முழுதும் நாட்டார் பாடல் வடிவங்களைப் பயன்படுத்தியுள்ளது.

IV. தொன்மங்களைப் பயன்படுத்துவதும் பயனுடையது. ஈழத்துக் கவிஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மங்கள் கவிதைகளின் சி.விமலன் தொகுத்த 'மூவாயிரம் ஆண்டுகள் இழுத்துவந்த சிலுவை' என்ற தொகுப்பே (2015) இதுவாகும். தொகுப்பு நூலொன்று வெளி வந்துள்ளது.

V. உயர்கல்வி கற்கும் மாணவர்கள் சங்க இலக்கியச் செய்யுள் மரபுகளை நன்கு பயன்படுத்தமுடியும் வில்வரத்தினம், சிவசேகரம், துவாரகன், சுதர்சன், அண்மைக்காலமாக சேரன் முதலானோர் கவிதைகளில் அவற்றினை இனங்கண்டு கொள்க.

சங்கச் செய்யுள்களின் பயன்பாடு என்று கூறும்பொழுது இன்னொரு முக்கியமான விடயமும் எனது நினைவில் எழுகின்றது. நாற்பதுகளின் பிற்பகுதியில் திருமலை மண்ணில் எமது சிறுகதை முன்னோடியான இலங்கையர்கோன் பணியாற்றியபோது வ.அ.இராசரத்தினத்திற்கு 'சங்கச்செய்யுள்களைப் படித்தால் போதும் சிறந்த சிறுகதைகளை எழுதலாம் என்று கூறியிருந்தார். (வ.அ.இன் 'திணைக்கதைகள்' தொகுப்பு அவ்வழி எழுதப்பட்டதே.

சில வருடங்களுக்கு முன்னர் பேராசிரியர் ஹார்ட் கூறியது "சிறுகதை எழுதுவோர் ஆங்கிலச் சிறுகதைகளை தேடி வாசிக்கவேண்டியதில்லை 'ஐங்குறுநூறு' நூலை வாசித்தாலே போதும்" என்பதாகும். "சங்கக் கவிதையில் இன்றைய கவிஞர்களுக்குத் தேவையான எல்லாமே இருக்கின்றன" என்று வ.ஐ.ச.ஜெயபாலன் தனிப்பட்ட உரையாடலின்போது அண்மையில் எனக்குக் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. க.பொ.த உயர் வகுப்பு கலைமாணவர்கள் மட்டுமே சங்க இலக்கியங்களைப் படிக்க முடியுமென்றில்லை முற்குறிப்பிட்ட கவிஞர்கள் பலர் கலைப்பட்ட தாரிகளல்லர் என்பது ஒரு புறமிருக்க இளம் படைப்பாளிகள் எளிமையாக எழுதப்பட்ட சங்க இலக்கிய உரைநூல்களை வாசித்தாலே போதும். இ.சு.முரளிதரன் வெளியிட்ட 'கலையுருக்காட்டி' (2019) என்ற கவிதைத் தொகுப்பு தனிக்கவனத்திற் குரியதொன்று. தமிழ் இலக்கிய மரபிலே ஒவ்வொரு காலகட்டத்திலும் தோற்றம் பெற்ற கவிதை வடிவங்களை கையாண்டு சமகால சமூக அரசியல் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன அக்கவிதைகள்.

ஆக இளங்கவிஞர்கள் சிறந்த கவிஞர்களாக உருவாக தேடலும், வாசிப்பும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிப்பும் கூர்மையான அவதானிப்பும் தணியாத தாகமும் அவர்களுக்கு இருப்பது அவசியமானது என்பதே மனங்கொள்ளப்படவேண்டியது.

நீங்களும் எழுதலாம். இதழின் பக்கங்கங்களை அதிகரிக்க வேண்டுமென்பதில்லை. அது கையைக் கடிக்குஞ் செயலும் கூட. வெளிவரும் இதழ்களைத் திட்டமிட்டுத் தயாரித்தாலே போதுமானது.

எது எவ்வாறாயினும் நீங்களும் எழுதலாம் இதழ் எஸ்.சத்யதேவன், தி.காயத்திரி, அருளானந்தி விஜயராஜ், ம.கம்ஷி, வே.சசிகலா, கோ.தர்சினி வி.ஆர்த்திகா, சு.யுவன், புவிலக்ஷி, பாரதிபுத்திரன் (தமிழேந்திரன்) வி.கௌரிசங்கர், பாவெல், ஜெனித்தா மோகன், துஸாந்திபரமநாதன், முதலிய இளைய கவிஞர்களை ஈழத்து நவீன கவிதையுலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேற்கூறியவர்கள் உட்பட வேறு சிலர், கவிஞர்கள் இவ்விதழில் எழுதி வந்துள்ள, எழுதி வருகின்ற கவிதைகளுள் கணிசமானவை ஈழத்திலே புதுக்கவிதை தோற்றம் பெற்ற ஆரம்பகாலக் கவிஞர்கள் பலரும் எழுதிய துணுக்குக் கவிதைகள் போன்று அமையாமல் திருப்தி தருகின்றனவாக அமைவது பாராட்டத் தக்கது. இத்தகையோர் தொடர்ந்து எழுதி வருவார்களாயின் அது நீங்களும் எழுதலாம் இதழிற்கு பெருமை சேர்க்கும் விடயமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்களுடன்
***பேராசிரியர் செ. யோகராசா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

நீங்களும் எழுதலாம் கவிதை இதழின் ஆசிரியர் என்ற ரீதியில் உங்களோடு சில வார்த்தைகள்.

"தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி" என்ற மகுட வாசகத்துடன் வெளிவரும் நீங்களும் எழுதலாம் இதழின் நோக்கங்களை, பயன்பாடுகளை சொல்லி விளங்க படைப்பாளிகள், வாசகர்கள் ஆகிய நீங்கள் அரிவரிகளல்லர். இதழ்களின் வடிவமைப்பும், உள்ளடக்கங்களும், ஆசிரியர் தலையங்கங்களும் இயன்றளவு புரிய வைத்துவிடும்.

ஒன்றைச் சொல்லும் போது
சொல்ல வேண்டிய
இன்னொன்றைச்
சொல்லாமல் விட்டுவிடுகிறோமோ
என்ற பயம் எழுகிறது.

ஆதலின் இவ்விடத்து நான் தனிப்பட எதுவும் சொல்வதற்கில்லை. இது வொரு சிற்றிதழ். கூட்டு இயங்கியல். என்பின்னால் இருப்போரே எனது பலம். எழுந்த சூழல், உடனிருந்தோர் குறித்து விபரித்துரைக்க ஏற்ற தருணமன்று.

இருபத்தேழு (27) இதழ்கள் வெளிவந்து இருபத்தெட்டை (28) எட்டுகிற நேரம். இவ்வேளையில் இத்தொகுப்பு முயற்சி ஏன் என்ற கேள்விகள் எழாதிரா.

இயந்திரத்தனமான தொழில்நுட்பக் காலமிது. தனி இதழ்களின் பேணுகை எதிர்பார்க்கவியலாததொன்று. இணையத்தில் பேணலாம் எனின் அது பூரண திருப்தி தருவதன்று. அதற்கும் அது பற்றிய தகவல் வேண்டும். தகவலறியச் செய்யும் வழிகளும் உண்டு.

1. அதன் உள்ளடக்கங்களை தேர்ந்தெடுத்து வெளியிடுவது.

1. தரமான கவிதைகளைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவது.

அவையும் பல்வேறு அடிப்படைகளில் அமையலாம்

(எ.டு) மொழி பெயர்ப்புக்கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. விடயதானங்களை தொகுத்து வெளியிடுவது (எ.டு ) நீங்களும் எழுதலாம் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்த கவிதை சம்பந்தமான கருத்தாடல்கள் (கட்டுரைகள்) 'கவிதையும் கவிஞனும்' என்ற நூலாக 2011ல் வெளிவந்தது.

2. இதழ்களை அவ்வாறே மீள வெளிக்கொணர்வது. இதனூடாக இதழ்களின் ஒட்டுமொத்த பரிமாணத்தை விளங்கிக் கொள்வதோடு. இதழியல் பற்றி வருங்காலத்தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கும் உதவும். உருவம், உள்ளடக்கம் என்பவற்றின் நேரடிப் பார்வையின் ஊடாக இதழ்களின் காலச்சூழ்நிலையை மனக்கண் கொண்டுவர முடியும். சாதாரண வாசகன் கூட (வாசகர் கடிதம்) சேர்ந்து பயணிக்கிறான் என்பது மாத்திரமன்று, ஒரு காலத்தில் கடித இலக்கியங்கள் கவனிப்பைப் பெற்றிருந்தன. இந்தியாவில் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் சௌந்தரசுகன் இதழ் கடித இலக்கியத்திற்கு படைப்பாளிக்கு நாற்பது (40%) விதமான பக்கங்களை ஒதுக்கிவருவதும் இதனூடாக பல்வேறு இலக்கியத் தகவல்கள் பரிமாறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (தகவல்தொழில்நுட்பகாலமான தற்போது இது இல்லாமற் போகச் சாத்தியமுண்டு).

மீள வெளிக்கொணர்தல் அடிப்படையில் முதல் பன்னிரு (12) இதழ்களை ஒன்றாகத் தொகுத்துள்ளேன். அடுத்த பன்னிரு (13-24) இதழ்களையும் "தொகுப்பு 2" ஆகத்தர உத்தேசம்.

'நீங்களும் எழுதலாம்' கவிதைச் சிற்றிதழ் 2007 இல் (பங்குனி - சித்திரை) வெளிவர ஆரம்பித்தது. அந்நாட் தொட்டு நீங்களும் எழுதலாம் இதழின் கவிதை சம்பந்தமான பணியும் பன்முகத்தன்மை பெற்றது ஒரு புறம். மறுபுறம் (குறிப்பாக திருகோணமலையில்) அதனை மையப் படுத்தியதாக ஓர் இலக்கிய ஊடாட்டம் தொடர்ந்தது. இலக்கியச் செயற்பாடுகள் மேலெழுந்தன. அத்தோடு சிலவிடத்து சமூகஞ்சார் செயற்பாடுகளாகவும் விரிவடைந்தன. கருத்துருவாக்கங்களிலும் பங்கெடுத்தது. அவை இன்றுவரை தொடர்கின்றன. இச்செயற்பாடுகள் பிற்சேர்க்கையாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

ஈழத்து கவிதைப்பரப்பில் நீங்களும் எழுதலாம் இதழ்களின் செல்வாக்கு பங்களிப்பு குறித்து தொகுப்பு I ஐ வைத்து மதிப்பீடு செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்படுபவர்கள் இக்கவிதைகள் எழுந்த காலத்தை (2007 - 2009) நினைவிற் கொள்வது நன்று.

கவிதைகளின் தரத்திலும் பேசுபொருள் களிலும் குறைபாடுகள் இடம்பெற்றிருக்க வாய்ப்புக்களுள்ளன. பின்னோக்கி நின்று பார்க்கின்ற பொழுது இவை இன்னும் புலனாகக் கூடும் என்பதுண்மையே. பேசுபொருள்களோடு, பேசாப்பொருள்களும் (சாமானியர் பேசத் தயங்குகின்ற, புலப்படாத) பேசப்பட வேண்டும்.

தொகுப்பு I ற்கு கனதியான அணிந்துரை வழங்கிய பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் சுட்டிக்காட்டிய விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

கவிதை இதழொன்று ஆரோக்கியமாக பயணிப்பதற்கு விமர்சனங்கள் உதவும். அந்த வகையில் படைப்பாளிகள் வாசகர்களது விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அன்பான வாசகர்களே

உங்களிடம் தரப்பட்டிருப்பது ஒரு பூமாலை அல்ல, ஒரு பூஞ்செடி அல்ல. ஒரு பூந்தோட்டம். இந்தப் பெருவெளியுள் உங்களுக்குத் தேவையான ஏதாவதொன்று இருக்கக்கூடும்.

இறுதியாக பாரதி கூறிய

தேடிச்சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி
..........................................
வேடிக்கை மனிதர் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?"
என்ற கூற்றோடு நிறைவு செய்கிறேன்.

அன்புடன் ஆசிரியர்
***எஸ். ஆர். தனபாலசிங்கம்***
***09. 10. 2020.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றிக்குரியவர்கள்...**

***பேராசிரியர் செ.யோகராசா***

பல்வேறு வேலைப் பளுக்களுக் கிடையிலும் ஆழமானதும் நேர்த்தியானதுமான அணிந்துரையினை வழங்கி இத் தொகுப்பிற்கு மேலும் வளமூட்டிய பேராசிரியர் செ.யோகராசா என்றும் நன்றிக்குரியவர்.

***சு.மகேஸ்வரன்*** - மதுரன் கிறா(f)பிக்ஸ் - அல்வாய் வடமேற்கு

இதனைத் தொகுக்க முற்பட்ட போது ஏற்பட்ட இடையூறுகள் பல. சிதைவடைந்த, பூரணமடையாத, இறுவட்டுக்களைக் கொண்டு இணையத்தில் தேடிக் கண்டுபிடித்து இத் தொகுப்பு வெளிவர மிகுந்த சிரத்தை எடுத்தவர் சு.மகேஸ்வரன். என்றும் நன்றிக்குரியவர்.

***நீங்களும் எழுதலாம் இதழை வடிவமைப்பதிலும் கணினிமயப்படுத்தலிலும் பங்களிப்பை வழங்கிய நன்றிக்குரியவர்கள்***

எஸ்.சத்தியதேவன், எஸ்.யசோதரன், கே.மாக்ஸ் ஸ்ரீராம், க.தீபகாந்தன், சி.வானதி, பெ.பத்மபிரஷன், ச.திருச்செந்தூரன், மு.யாழவன், ஆர்.நித்தியா, (Edge netcafe) Astra Printers (சிவபாலன்), A.R.Traders டினேஸ்காந்

***அட்டைப்பட ஓவியர்:*** கே.சிறிதரன்(ஆசிரியர்)

***குறிப்புரை வழங்கிய சிரேஸ்ட ஊடகவியலாளர்***
அ.அச்சுதன்

***செவ்வை பார்த்துதவுவோர் :-*** எழுத்தானர்களான நந்தினி சேவியர், ஷெல்லிதாசன், திருமலை சுந்தா, திருமலை நவம், நிலாவெளியூர் கெஜ்தர்மா, சிவரமணி, சூசைஎட்வேட், சௌ.சந்திரகலா, இலக்கியச் செயற் பாடுகளை ஒழுங்குபடுத்தி செவ்வை செய்த கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளூர் ஊடகங்களில் பதிவிட்டோர் :-* குறிப்பாக த.சிவசுப்பிரமணியம்(தம்புசிவா), மேமன்கவி, கே.எஸ்.சிவகுமாரன், அ.அச்சுதன், கலைவாதி கலீல், தமிழேந்திரன், ஏ.எமில், பேராசிரியர் துரைமனோகரன், கே.விஜயன் இன்னும் பலர்.

*நீங்களும் எழுதலாம்* இதழின் படைப்பாளிகள், வாசகர்கள், நலன்விரும்பிகள், நிகழ்வுகளுக்கு ஒத்துழைத்தோர்

*என் இலக்கிய செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் என் குடும்பம்*

மனைவி-மேனகா,

புதல்வர்கள் :- த.நிதர்சன் M.B.B.S.
த.நிருசன், எழுதுனர் - வங்கி.

*என்னோடு ஏதோ ஒருவிதத்தில் ஊடாடி பெயர் விடுபட்டுப்போன அனைத்து உள்ளங்களுக்கும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதழாசிரியர்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| இதழ் ஒன்று | 1 | - | 24 |
| இதழ் இரண்டு | 25 | - | 52 |
| இதழ் மூன்று | 53 | - | 80 |
| இதழ் நான்கு | 81 | - | 108 |
| இதழ் ஐந்து | 109 | - | 136 |
| இதழ் ஆறு | 137 | - | 214 |
| இதழ் ஏழு | 215 | - | 250 |
| இதழ் எட்டு | 251 | - | 286 |
| இதழ் ஒன்பது | 287 | - | 322 |
| இதழ் பத்து | 323 | - | 362 |
| இதழ் பதினொன்று | 363 | - | 402 |
| இதழ் பன்னிரண்டு | 403 | - | 442 |

பிற்சேர்க்கை

| | | | |
|---|---|---|---|
| இதழ் 13 - 24 வரையான படைப்பாளர் பட்டியல் | 444 | - | 449 |
| ஊடகவியலாளனின் பார்வையில் | 450 | - | 451 |
| இலக்கியச் செயற்பாடுகள் | 452 | - | 467 |
| மீண்டும் உங்களுடன் | | | 468 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி – சித்திரை – 2007.

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் 01 எழுத்து 1



தளைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்களும் எழுதலாம்**
இருமாத கவிதை இதழ்
பங்குனி சித்திரை 2007

**ஆசிரியர்**
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

- எஸ்.சத்யதேவன்
- தம்பிதில்லைமுகிலன்
- கம்பன் நம்பி
- வே.சசிகலா
- கோ.செந்தூரன்
- ந.நவதர்ஷினி
- வி.குணபாலா
- தாமரைத்தீவான்
- செ.யோகானந்தன்
- எஸ்.கமலகாந்தன்
- க.கிருஷ்ணவேணி
- எம்.எச்.அகமட்ருமி
- எம்.என் முகமட் ஷப்ராத்
- சம்பூர்.எம்.வதனரூபன்
- நந்தினிசேவியர்
- பா.கபிலன்
- கோவை அன்சார்
- கவித்தா நிஜாம்
- அ.ஜயந்தன்
- வி.அருளானந்தி
- தமிழ்வாசன்
- கோ.தர்ஷினி
- வெண்ணிலா
- வீரா.வீரக்குமார்
- வையலான்

**வடிவமைப்பு**
எஸ்.சத்யதேவன்

**அட்டைப்படம்**
பா.கபிலன்

**தொடர்புகளுக்கு**

ஆசிரியர்
"நீங்களும் எழுதலாம்"
103/1 திருமால்வீதி
திருகோணமலை

*கடிதவழி இதழைப் பெறவிரும்புவோர் 5 ரூபா பெறுமதி கொண்டமுத்திரைகள் ஐந்தினை அனுப்பிவைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்...

இளையதலைமுறைப் படைப்பாளிகளை (மாணவர் உட்பட) அறிமுகப்படுத்துவதுடன், களங்களை விரிப்பதுவும், தலைமுறை இடைவெளிகளை நீக்குவதும் கவிதை சம்பந்தமான விளக்கங்கள், விமர்சனங்கள் பரிசோதனைகள் என்பவற்றுக்கு இடம் கொடுப்பதும், கவிதையினூடாக சமூகப்பொறுப்புணர்வு பற்றிய கருத்துக்களை முன்வைப்பதும் ஆகிய நோக்கங்களைக் கொண்டு "**நீங்களும் எழுதலாம்**" என்ற இருமாத கவிதை இதழ் தனது பணியைத் தொடங்கி இருக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் ஒதுங்கல்கள் பல. அவ்வாறான ஒதுங்கல்களிலிருந்து உங்களை விடுவிக்கும் நோக்குடன்தான் நீங்களும் எழுதலாம் என்ற இக்கவி இதழ்.

இவ்விதழ் ஆரம்ப எழுத்தாளர்களுக்கு பயில்களமாகவும், மற்றையோரிடையான காத்திரமான பங்களிப்புகளை, புதிய பரிசோதனை முயற்சிகளை வரவேற்பதாகவும் அமையவேண்டுமென்பதுடன் ஆர்வமுள்ள அனைவருக்கும் எவ்வித பாரபட்சமுமின்றி களமமைப்பதன் மூலம வளமான தலைமுறையை உருவாக்க வேண்டுமென்பதே எமது அவா.

நீங்களும் எழுதலாம்.
அன்புடன்
***ஆசிரியர்***

கவிதைகள் மிகச் சுருக்கமாக அமைவது பிரசுரத்திற்கு வசதியாகும். புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப் பெயரையும் குறிப்பிடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

இருளில் துப்பாக்கிகள்
தம் இருப்பை தெரிவிக்கும்
விடியல் ஒவ்வொன்றிலும்
ஒதுங்கல்கள் விரிவடையும்

ஒதுங்கலினூடுதானும்
உயிர்வாழும் நம்பிக்கை
ஒவ்வொரு ஒதுங்கலிலும்
உயிர்த்தெழும்

நீட்டப்படும் முனைகளின் முன்னால்
இலையின் மரணமும்
போகத்தின் வர்ணனைகளும்
ஒதுங்கலின் புகலிடமே

ஒதுங்கலைக்கூட ஒன்றிணைக்க
முடியாத ஒதுங்கல்
மரணத்தால் ஒதுங்கல்
ஒதுங்கலும்
ஒரு மரணம்தான்
தேவை ஒதுங்கலிலிருந்தான
ஒதுங்கல்

**எஸ்.சத்யதேவன்**

## நள்ளிரவு

என்னை நீ அறியாது
உன்னை நான் அறியாது ஏன்
தன்னையே தானறியாத
தாயின் கருவறை

**பா.கபிலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்மம்

எழுத முடியவில்லை
வெளி உலகு
திறந்திருக்கும் யன்னல்
சூழவும் நெருக்கும்
ஆழ் துயரம்
முடிவுற முடிவுற
பிறிதொன்றென
முகிழும் சோகம்

நீரில் அமிழா
தக்கையென
மேலெழும் வன்மம்
எல்லை
தேடும்
சலியா மனத்துணிபு
இதைத் தவிர
வேறெதை எழுத
வேறெதைத்தான் எழுத

**நந்தினி சேவியர்**

## கோபுரங்கள்

இசங்களின் இடிபாடுகளுக்கிடையில்
நெருங்குண்டு
மூச்சுவிட்டபடி
சிதைவுகளை ஒழுங்கமைக்க;
குப்பைகளின் கோபுரங்கள்
அழகாக இருந்தது
எல்லாவற்றின் பங்கேற்போடும்
மேலும் மேலும்
குப்பைகளைக்
கொட்டிக் கொண்டேயிருக்கிறோம்

**அ.ஜயந்தன், கம்பர்மலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனுக்கு ஒரு மடல்

காவலனாய் நீயும்
காலம் முழுமையும் - என்னை
காத்திடுவாய் என்றே
கழுத்தில் வாங்கினேன் தாலி

வளமாக நாமும்
விதமாக வாழ்ந்திட
வேண்டுமென்றீர் ரொக்கம்
தயங்காமல் என்னை
வெளிநாடு அனுப்பினீர் !
மறுக்காமல் நானும்
தேசம் விட்டு வந்தேன்

ஓடாய்த் தேய்ந்து
ஒரு மனதாய் நானும்
அனுப்பும் பணத்தையிங்கு
அஞ்சாமல் அழித்திடுதல்
முறைதானோ? கூறும்.

கண்ணீர் சிந்தி
கண்காணாத் தேசத்தில்
கடுமையாய் உழைத்தும்
மிஞ்சியது ஏது?

குடிபோதை
குடியைக் கெடுக்குமென்று
குழந்தைகூட அறியும்
அறியாமல் நீயும்
அழிப்பது நியாயமா?

அர்த்தமில்லாக் கனவுகளாய்
என் வாழ்வும்
அஸ்தமித்துவிடுமோ?
பதில் சொல்வாய்
பாதகனே !

**அருளானந்தி விஜயராஜ் ~அன்புவழிபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுத்துப் பட்டையும் சிவப்புப் பேனாவும்

ஆ. போதும்.
என்னை விட்டுவிடச் சொல்லுங்கள்.

என்னிடம் சில சிவத்தமையுடன்.
கூர்முனைப் பேனாக்களும்
இருப்பது
உண்மையே.

அவை ரத்தமும் சதையும்
சிந்தப்படுதலும்
சிந்துதலும் பற்றி
எழுதுவது உண்டென்பதால்.

அவை ரத்தத்தினால்
நிரப்பப்பட்டவை என
யாரோ சில(ர)தை
தவறாக்கிச் சொல்லிக் கொண்டார்கள்!
நம்புங்கள் ! அதனால் முதலில்...
என் சட்டையின் கழுத்துப் பட்டையை
பிடித்திருக்கும் கைகளையுடையவனை
விலக்கச் சொல்லுங்கள்!

சோற்றுக் கூட்டமல்ல...
வெற்றுச் சொற்கோவையாளனுமல்ல...
உண்மைகளை மட்டும்
பறையடிக்கும் ஊடகக்காரன

என்பதனாலேயே எதையும்.
ஏன் நாளையே இதையும் கூட
முதலில் என்னை
விட்டுவிடச் சொல்லுங்கள் !
பிறகு...

**சம்பூர் எம்.வதனரூபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

நாங்கள் எங்கள் உயிர்களை தக்க வைத்து
இரண்டு தசாப்தங்கள் முற்றுப் பெற்றுவிட்டன
ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு கணமும்
நாங்கள் புதிது புதிதாய் உயிர்த்தோம்
மரணப்படுக்கைவரை சென்று.
இது எங்களுடைய எத்தனையாவது
அவதாரம் என்பது தெரியாது
கடந்த காலத்தைப்போலவே
தேவையற்ற விவாதங்களுடனும்
முரண்பாடுகளுடனும்
காயங்களுடனும் மரணங்களுடனும்
வாழ்ந்து வருகிறோம்
இன்னும்

**எஸ்.கமலகாந்தன்**

## யுத்தமே...

எம் உடல்களை பசிக்கும்
எம் உதிரத்தை தாகத்திற்கும்
தினமும் பறித்து கொள்....!
போதவில்லையா ?
எம் சொத்துக்களான
மாணவ முத்துக்களும்
இங்கு உள்ளன
வெண்புறா எங்கே
செம்புறாவே..?

**கோ.தர்சினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்க்கு நீ தாயாக வேண்டும்

அவள் உணவிலிருந்து
உனக்கு உணவளிக்கிறாள்.
அவள் உதிரத்திலிருந்து
உனக்கு உதிரம் அளிக்கிறாள்
அவள் உயிரால் உயிர்பெற்று
உலகில் நீ பிறக்கும் போது
அவள் இறக்கிறாள்
ஆம் அவள் சவமாகிறாள்
சுயமாய் நீ நிற்கும் வரை
சுகத்தை இழக்கின்றாள்
ஆதலினால்........

**க.கிருஷ்ணவேணி**

## நரகம்

எமலோகத்தில்
எம்மவர் பிரச்சினை !
அடிதடியில் ஆத்மாக்கள்!

யமலோக சபை கூடிற்று
முடிவொன்று பண்ணிற்று
இலங்கையர்க்கு அங்கும்
இடமில்லை !

இடைவெளியில்
இலங்கை ஆத்மாக்கள்.

**வீரா.வீரக்குமார்**

ஆக்கபூர்வமான கருத்துக்கள்
விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகிதப்புலர்வு

இந்தக்கூட்டின் இயக்கம்
உயிர்ப்பின் உயிர்ப்பு
உயிர்ப்புக்கு முதல் ஒரு
மெய்ப்பாடு புலப்படாது புலப்படும்

நெய்யுருக்கும் நெருப்பு
நீர்த்துளியில் சுடர்விடும்
கார்முகில்கள் அனல் வீசி
பயிர் வளர்க்கும்

மணி ஊற்றுச் சொரிய
புதைபொருள் வெளிவரும்
கண் இமைக்குள்
பொழுது புலரும்

எண்ணப்பொறி
முற்கால இருப்பை
தன் வரிக்குள் அடக்கும்

நீயும் நானும்
முகம்மாறி நடப்போம்

ஆண்மகவு ஈன
சிலுவை சுமப்பாள் பெண்

**தம்பி தில்லைமுகிலன்**

## வழி

ஆற்றல்மிகு கரத்தில்
ஆயுதங்கள் ஏந்துதலே
மாற்றத்திற்கான வழி
மாற்றுவழி ஏதுமில்லை

**எஸ்.ஜி.கணேசவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப் பிணம்

கண்ணை விரித்தும்
வாயைக்குவித்தும்
மேனியை எரிக்கும்
சூரியனின் உச்ச தரிசனத்தின்
நிழல் அறுந்து போய்
பின் நீளுகின்ற பிற்சாய்வில்...

உடலைச் சரித்தேன்
உண்ட களைப்பினாலும்
இமைகள் மூடிய
சூக்கும நிலையில்
முகத்திலும் உடலிலும்
மற்றைய அவயங்களிலும்...

ஒன்றிரண்டு என
ஆரம்பித்து ஏறுவரிசையில்
வந்தமர்ந்தன அவைகள்
காதில் புகுந்து சிறகடித்தும்
வாயில் மோப்பம் பிடித்தும்
ஏதோ ஆராய்ச்சியில் அவைகள்...

புலன்கள் அடங்கிய
பிணமான பின் தான்
இவைகளின் பிரவேசம்
இருக்குமென்பதே இயல்பானது.
இ...து என்ன இயல்பு?
மாறாய் நான் பிணமானேனா?

இல்லையே கைகள் அசைகின்றன
மொய்தலை உணர்கிறேன்.
இன்னும் உயிருடன் நான்
அப்படியானால்...
அவைகள் தமக்கான
இயல்புடன் இருக்கவில்லை
அல்லது நான் உயிர்பிணம்

**வி.குணபாலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் செயல்

1 ஆதியில் வந்தாய் சொல்லுகிறோம். ஆனால்
அவர்கள் செவ்வாயில் ஆய்வு செய்வார் !
போதுமடா எங்கள் ஏழு செவ்வாய்க் கவர்
போகட்டும் பெட்டியில் பார்த்திடுவோம் !

2. எந்தப் பொருளை எடுத்தாலும் அதை
எம்மவர் கண்டு பிடித்ததில்லை !
அந்த மொழிப்படி அவன் இல்லாமலே
அணுவும் இங்கே அசைந்திடுமோ?

3. மின்னொளியா - ஒலிப்பெட்டியா - காட்சியா
மேலாம் மருத்துவ ஆய்வுகளா ?
தன்னிகரில்லாத ஊர்திகளா பெரும்
சண்டையில் வெல்லும் கருவிகளா ?

4. ஏவுகணைகளா-செய்மதியா-கோலால்
எழுதும் தாள்களா அச்சகமா ?
சாவையும் வெல்லும் படிமங்களா - உயிர்
தன்னைப் படைக்கும் இறைமைகளா ?

5. எல்லாம் அவன் செயல் என்பதே உண்மையாம்.
எம்மவர் வாளுடன் நின்று விட்டார் !
பொல்லாக் கருவிகள் கண்டிருந்தால் செவ்வாய்
போயிருப்போம் - அவர் பார்த்திருப்பார்

6. விண்ணில் மறுமையில் வாழ்ந்திடவே யாமும்
வேண்டிய திம்மையில் செய்திடுவோம்
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்துநலம்செய்து
மடியும் சிந்தனை என்று வரும் ?

7. தெய்வமும், கோயிலும், சிற்பமும், ஓவியமும்,
சேரிசை, கூத்துமே செய்ததல்லாமல்
உய்யும்படி ஒருநாடு அரசென
ஒன்றும் இதுவரை சொந்தமில்லை !

8. ஆதியர் போலவே இன்று மிருக்கிறோம்
அணுவளவும் முன் னேற்றமில்லை
சாதிகள் - சாமிகள்- சமயக்கலப்புக்கள்
சாத்திரங்கள் எல்லாம் போயினவோ ?

**தாமரைத்தீவான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குள் நீ

நான் எழுதிய முதல் கவிதை
உன் பெயர் !
நான் வீழ்ந்த முதல் தோல்வி
உன் புன்னகை !

நான் தனிமையில் இருப்பதாய்
எல்லோரும் உணர்கிறார்கள்
என்னுள் புதைந்துள்ள
உன்னை அறியாமல்...

இருபது வருடம்
உன்னோடிருந்தும்
உன் வைராக்கிய இதயத்தை
அறியாமல் என் காதல்
உன் பார்வை வீச்சில்
நான் அதிர்ந்து போய்...

ஆயிரம் முறை அலைகிறேன்
உன் சுவாசக் காற்றுக்காய்...

புரட்டிப்பார் !
எதை வைத்திருக்கிறாய் !
நான் காதல் கொள்ள ?
என் இதயம் நடு வீதியில்
அநாதையாய் !

என் பயணத்தில் நடை போட்டபடி
தோல்வியை உணர்ந்து
என் மனதிற்குள்

சிரிக்கும் உன்முகம்
ஆறுதலாய்...

**எம்.எச்.அஹமட் ருமி – பேருவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மண்டைக்கனமுடைய மனிதனுக்கு***

சிந்தி !
ஆழமாய் அழகாய்ச் சிந்தி
உன் எச்சில் புத்தியை
குழிதோண்டிப் புதைத்துவிடு !

நீர் ஊற்றுபாயும் நெஞ்சத்தில்
நீ தீ மூட்டாதே !
கன்னத்தில் சிவக்க அறை
தனக்குத்தானே
முட்டாள் புத்தியை எண்ணி !

ஏழையின் ஒரு குரல்
கேட்கிறது !
ஒன்றும் தெரியாதவனாய் நடிப்பு
உனக்கு சின்னப்புத்தி
அழிந்த மேகமாய்
உள்ளக் கிடங்கு !

நக்கலாய்ச் சிரிப்பு
கானல்நீராய் வாழ்க்கை !
பெரிய பெரிய ஆசைகள்
கிஞ்சித்தும் சிந்தனையில்லை
நான் என்ற அகங்காரம்

முட்டாள் தனமான முடிவுகள்
இவை இன்றைய மனிதரின்
மண்டைக் கனம் !

***கவித்தாநிஜாம் — கிண்ணியா***

***மந்தி***

மாவிட்டபுரத்திலோர் மந்தி - அது
மடைச்சேட்டை புரியது வாசலில் குந்தி.

***திருகோணமலைக் கவிராயர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பதின் மேன்மை

'கல்வி கனி'
இனிது என்று
ஓடிச் சென்று
பறித்துக்கொண்டான் ஒருவன்
சீசீ! இது என்ன?
புளிப்புப்பழம் என்று
தூக்கி எறிந்தான்
இன்னொருவன்

காலங்கள் கடந்தன
பட்டம் பதவியோடும்
செல்வச் செழிப்போடும்
மாடமாளிகையின் கண்ணே
மரியாதையுடன்
வீற்றிருந்தான்
ஒரு செல்வந்தன்

அவன்தான் - அன்று
'கல்வி' எனும்
நற்கனியை இனிதே
உண்டு மகிழ்ந்தவன்.
அக்கனியை தூக்கியெறிந்தவன்
அந்தோ தெருவோரம்...

**நமசிவாயம் நவதர்ஷனி –கேகாலை**

## மெச்சுகிறேன்

குச்சுக் குடிசைக்குள் இருக்கின்ற
கோபத்தை மெச்சுகிறேன்
எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக்கண்கள் நெருப்பெறிந்து
நீறாக்கும்

**சுபத்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களுக்கான....

எங்களது வாய்களும்
சில சமயத்து கண்களும்
எங்களுடையவை என்பதால்
(குறைந்தபட்சம்)
எங்களுக்கானவை பற்றியும்...

இருட்டில் !
இல்லாததைத்தேடுவதில் !

நிலவுக்குப்போனமை
இறந்த காலமாயிற்று
கூடவே
காதுகளும் இருப்பதால் !
எஞ்சியிருப்பவை...
........ ........ ....... ........?

தவழாமலே நடப்பது பற்றி
ஆராய்ச்சி செய்யாமலே
கண்டுபிடிப்பது பற்றி
எதையோ கிறுக்கி
உச்சங்களை தொடுவது பற்றி

எங்களுக்கான
அதிக பட்ச கவலை
கதிரைகள் பற்றியதே !

எச்சரிக்கை....!
எங்களிடம்
கத்தரிக்கோல்களும் உள்ளன.

**வையலான்**

## குலவு கூவல்

தேன் நதியின் தீரத்திலே சிட்டு
வான்மதியின் குளிர் வசந்தம் பட்டு
நான் தனியென கடல் குரல் இட்டு
மென்னுணர்வில் பாடியது பாட்டு

**கம்பன் நம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் அநாதை

அன்பினை அறியாது
ஆதரவற்று அலைபவன்தான்
அநாதையா..? - இல்லை

வேதனையை நிதர்சனமாக்கி
வேலையற்றுத் திரிபவன்தான்
அநாதையா ?

போக்கிடமே இல்லாது
போக்கிரியாய்த் திரிபவன்தான்
அநாதையா ..?

வளங்கள் பல இருந்தும்
வாழ்வை வெறுப்பவன்தான்
அநாதையா ..?

யார் அநாதை ...?
யாரதை அறிவார் ..?

**வெண்ணிலா, திருமால் வீதி.**

வெண்மணற் பரப்பினிலே என் மேனி
கண்பரப்பு முன்னாலே நீலக்கடல்
முன்னைய வரலாற்று மலைக்கோயில் -
பொழில்
என்னை மகிழ

***அக்கினிவண்ணன்***

அனைத்து தரப் படைப்பாளர்களிட
மிருந்தும் தரமான படைப்புக்கள்
எதிர்பார்க்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றொரு நாள்

அன்றொரு நாள்
விடியற் பொழுதில்
அகதி முகாம் நோக்கி
என் கால்களை
நகர்த்துகிறேன்.
கண்விழித்த குழந்தைகள்
கல்லறை முன்னால்
ஊர்ந்து திரிகின்றார்கள்
சொத்துச்சுகம் என
வாழ்ந்த மக்கட் கூட்டம்
பாதை தெரியாமல்
மண்ணிலே புரள்கிறது
காலம் அவர்களை
கல்லறைவரை விரட்டியிருக்கிறது
கோவிலைச் சுற்றியே
வாழ்ந்த கூட்டம்
சகுனம் பார்த்தே
பழக்கப்பட்டவர்கள்
வாழ்வைத் தொலைத்தபடியே
தலைகுனிந்து நிற்கின்றார்கள்
உயிருக்காய் மன்றாடும்
அடிமைத்தனம் எத்தனை நாளோ ?
காற்றடித்து ஓய்ந்துபோன
பூமியெங்கும்
உயிர்ச்சருகுகள்
சத்தமில்லாமல்
உதிர்ந்து போகின்றன.
மீண்டும் வசந்தம் முளைப்பதற்காய்

**க.யோகானந்தன் -திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனை வாழவிடு

நீ! நீயாக இருக்க
விரும்புகிறாயா?
அவனையும் அவனாக
இருக்கவிடு!

நேற்றுவரை
நேசத்திற்கு உரியவன்
இன்று முதல் மோசமா?
இதுவும் உலக நியதி !

நாளை மீண்டும்
அவன் நண்பனாகலாம்
குற்றம் பார்ப்பின்
சுற்றம் எங்கே?

இன்னா செய்தார்க்கு
இனியவை செய்ய
சொன்ன வள்ளுவரை
இந்நாளில் நினை

பூவும் பொட்டும் !
புன்னகையும் !
அவளுக்கும் அவசியம்
எனவே
அவனை வாழவிடு !

**தமிழ் வாசன்**

## சொல்வாய்

வட்டத்தோசை சுட்டது போல்
வானில் இருந்த சந்திரனை
துட்டச் சிறுவன் யார் உடைத்தான்
சொல்வாய் உண்மை தோன்றிடவே

**மு.செல்லையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பார்வை

சமாதானப்பாதை திறந்தாலும்.. திறவாமலும்.
நாட்டை விட்டகலா யுத்த மேகங்கள்
ரொக்கட்டைவிட வேகமாய்
உயரும் வாழ்க்கைச் செலவுகள்

இனவாத ஜுவாலையில் மனிதவெள்ளம்
ஏ 9 பாதை திறந்தாலும்... திறவாமலும்...
இவைகள் பற்றி அவர்களுக்கென்ன கவலை

முகம் கொடுக்காத உள்நாட்டுப்
பிரச்சினைகள்
இதனால் மௌனித்து மரணித்துப் போன
மனித இதயங்கள்

விண் அலை தொ(ல்)லை தரும்
கிரிக்கட் வர்ணனையில்
மூழ்கும் ஒரு தாழ்வு நிலை - இருந்தும் என்ன
ஓவர்- விக்கட்- ரன்- எல்பீடபிள்யூ - ஸ்கோர்
இவைகளிலேதான் மக்கள் பார்வை

**கோவை அன்சார் –கொழும்பு**

## அன்னையர் தினமா இன்று?

கருவறையில் எனைச் சுமந்து
பதினொரு வருடம் எனைக் காத்து
என் நெஞ்சம் நிறைந்த
தாயின் தினமா இன்று?
சிறுநோய் வந்திடினும்
பெரிதாய் தவிதவித்திடும்
கல்வியை இனிதாய் ஊட்டும்
என் அன்னையின் தினமா இன்று ?

**கோ.செந்தாரன் – மல்லிகைத்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய பிள்ளையானால்

உலகை ஆட்சிசெய்த திமிர்கள்
உன்னுள்ளே தீப்பிழம்பாய்
ஆசைகள் உணர்வுகள்
உதிர்ந்து போயின
ஊருக்கு வாழ்வதா? பேருக்கு வாழ்வதா?
உள்ளக்கிடங்கு
எரிமலையாய் குமுறும்
சின்னத் தூக்கத்தில் கெட்ட கனவுகள்
உனையறியாமலே
புதுயுகம் பிறக்கும்
ஆனால்
உலகத்தின் பார்வையையோ...

**எம்.என்.முகமட் ஷப்ராத்**

## துன்பம்

இயற்கை வளம் கொண்ட நாடோ
இரத்த வெள்ளத்தில்
இரவு நேரமதிலும்
இளைப்பாறலில்லை
இன்றோ நாளையோ என உயிர் ஊசலாடும்
நித்தமும் காணும் காட்சி
நெஞ்சை உருக வைக்கும்
துன்பத்திற்கும் அதிர்வுக்கும், இடையில்
தொடரும் நம் வாழ்வு

**வே.சசிகலா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடுங்கள்

இன்னவைதான் கவி எழுத
ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்சொல்லாதீர்
மின்னல் முகில் சோலை கடல்
தென்றலினை மறவுங்கள் - மீந்திருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு
என்பவற்றை பாடுங்கள்

**மகாகவி**

## ஓ, வண்டிக்காரா

பனியின் விழி நீர்த்துயரத் திருளில் பாதை
மறையுமுன்னே
பிணியில்தேயும் நிலவின்நிழல் நம்பின்னால்
தொடரும் முன்னே
ஓ.ஓ.வண்டிக்காரா.. ஓட்டு வண்டியை ஓட்டு

**நீலாவணன்**

| | |
|---|---|
| பயில் களம்<br>காத்திரத்தின் களம்<br>பரிசோதனைக் களம்<br>விமர்சனக் களம்<br>விளக்கக் களம் | **நீங்களும் எழுதலாம்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதியும் மேனாட்டுக் கவிஞரும்

நமது காலத்து இயந்திரப்
புரட்சியையும் வளர்ச்சியையும் வரவேற்ற
புலவன், உற்பத்தித்தொழிலை பிரமதேவன்
கலையென்று நாமகரணம் செய்தான்.
இந்தவகையில் பாரதியைக்கவர்ந்த புலவன்
எமில் ஹெர்ஹரேன் (1855-1916) என்னும்
பெல்ஜிய நாட்டுக் கவிஞர். கவிதைக்குரிய
பொருள் இனியதும் நல்லதும் என்ற
மரபுணர்ச்சியின் காரணமாக காற்றையும்,
வானையும், வயலையும் மதியையும்
குளத்தையும் பெண்ணையும் காதலையும்
புலவர்கள் திரும்பத் திரும்பப்பாடி வந்தனர்
இந்நிலையிலேயே மேற்கு நாகரிகத்தின்
விளைபொருள்களான இயந்திரங்கள்.
ஆலைகள், கப்பல்கள் ஆகியவற்றை அழகுப்
பொருள்களாகக் கொண்டு நகரநாகரிகத்தைப்
பாடினார் எமில்.

எமிலை முன்னோடியாகக்கொண்டு பாரதியும்
இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
இயந்திரங்கள் வகுத்திடுவீரே"
என்றும்
"ஆயுதம் செய்வோம்
நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச் சாலைகள் வைப்போம்"
என்றும் பலவற்றைப்பாடி தமிழ்க் கவிதைக்கே
புதிய பொருள்களைப் புகுத்தி
புரட்சி செய்தார்.

**க.கைலாசபதி**

**ஒப்பியல் இலக்கியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் பெயர்ப்பும்

Cowards die manytimes before
Their death;
The valiant never taste of death
but once.
Of all the wonders that I yet
have heard,
It seems to me most strangc that
men should fear;
Secing that death, a necessary end,
Will come when it will come.

**From Julius Caesar**
**By: Shakespeare**

அஞ்சினர்க்கு சதமரணம் அஞ்சா நெஞ்சத்து
ஆடவனுக் கொருமரணம் அவனிமிசைப்
- பிறந்தார்
துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு
- நடுங்கும்
துன்மதி மூடரைக் கண்டால் புன்னகை
- புரிபவன் நான்

**சுவாமி விபுலானந்தர்**

குறிப்பு :

மொழிபெயர்ப்புக்கள் பல விதமானவை. அதற்குள்ளும் சிறந்த மொழிபெயர்ப்பு என்பதற்கு உதாரணமாக சேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசரிலிருந்து சுவாமி விபுலானந்தரால் தமிழாக்கப்பட்ட ஒரு கவிதை இங்கு தரப்பட்டுள்ளது.

விலை : 20/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - ஆனி 2007

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் - 01 எழுத்து - 2



தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்

விலை 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்களும் எழுதலாம்**
இருமாத கவிதை இதழ்
வைகாசி ஆனி 2007

**ஆசிரியர்**
**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**
தாமரைத்தீவான்
ஷெல்லிதாசன்
சம்பூர்.எம்.வதனரூபன்
க.அன்பழகன்
விஷ்வமித்திரன்
எம்.ரி.யூனூஸ்
மனோரஞ்சினி பத்மநாதன்
சி.ரி.சவுந்தி
சீ.என்.துரைராஜா
ஜே.மதிவதனி
ஆர்த்திகா விஜயலிங்கம்
வி.கௌரிசங்கர்
வே.ஜெயகாந்தன்
மனோபற்குணம்
எஸ்.சத்யதேவன்
வை.கமலநாதன்
ம.உதயகுமார்
வி.தமிழரசி
பிரம்மியா கிருபநாதன்
துஷாந்தி பரமநாதன்
பெ.மங்கை
து.குணகௌரி
க.வினுஷியா
க.லோகநாதன்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

**வடிவமைப்பு**
எஸ்.சத்யதேவன்

**அட்டைப்படம்**
கே. சிறீதரன்

**தொடர்புகளுக்கு**
"நீங்களும் எழுதலாம்"
103/1, திருமால்வீதி, திருகோணமலை.
தொ.பே: 026 2220398



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய முயற்சிகள் குறித்து...**

இரண்டாவது இதழில் உங்களைச் சந்திப்பதில் நீங்களும் எழுதலாம் மகிழ்ச்சியடைகிறது.
இளைய தலைமுறைப் படைப்பாளிகளை அறிமுகப்படுத்துவதுடன் களங்களை விரிப்பதும் தலைமுறை இடைவெளிகளை நீக்குவதும் கவிதை சம்பந்தமான விளக்கங்கள் விமர்சனங்கள் பரிசோதனைகள் என்பவற்றிக்கு இடம் கொடுப்பதுவும் கவிதையினூடாக சமூகப் பொறுப்புணர்வு பற்றிய கருத்துக்களை முன்வைப்பதும் ஆகிய நோக்கங்கள் இதழ் ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.
அந்தவகையில் முதலாவது இதழ் மூத்ததலைமுறைப் படைப் பாளிகளையும், இளைய தலைமுறைப் படைப்பாளிகளையும் ஒன்றிணைத்து தலைமுறை இடைவெளி யின்றி களங்கொடுத்திருந்தது. இரண்டாவது இதழும் இந்நோக்கை நிலை நிறுத்தியிருப்பதை நீங்கள் காணலாம்.
கவிதைக்கென தனியாக வெளிக் கொணரப்படும் இதழாக நீங்களும் எழுதலாம் அமைவதால் கவிதைப் படைப்புகளோடு மட்டும் நமது கடமை நின்றுவிடவில்லை. கவிதை சம்பந்தமான பரிசோதனை முயற்சிகள் மொழிபெயர்ப்பு முயற்சிகள், விமர்சனங்கள், கருத்தாடல்கள் போன்றனவும் படைப்பாளிகளிடமிருந்தும் ஆர்வலர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வெளிவரும் நீங்களும் எழுதலாம் செழுமை பெறுவதற்கும், நின்று நிலைப்பதற்கும் உங்களது புதிய முயற்சிகளை பெரிதும் வேண்டி நிற்கிறது

நீங்களும் எழுதலாம்....
அன்புடன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*— ஷெல்லிதாசன்*

உனது
சுயத்தை நீ இழக்காத வரை
உனது
சுதந்திரம் நிலைத்திருக்கும்

கோல் போடுபவனை விட
கோலிக்குத்தான் வேண்டியது
அதீத மனத்திடம்
அணியின் தலைவிதியை
தடுத்தாட் கொள்பவன் மட்டுமல்ல
நிர்ணயிப்பவனும் அவனே தான்

எத்தனை வார்த்தை ஜாலங்கள்
எத்தனை ஆர்ப்பாட்டங்கள்
அத்தனையும் திடமான
மௌனமான ஒரு செயற்பாட்டின் முன்
துகள்களாகி
ஒரு மலை சரிவதுபோல்

சாத்தான்களுக்குத்தான் வேதத்தின்
துணை அவசியமாகின்றது
ஆனால்
அந்த வேதத்தின் மூலவேர்கள்
வார்த்தைஜாலங்களை நிராகரித்த
அர்ப்பணிப்புள்ள சிலர்
நிஜமனிதர்களில்
கால் பதித்து நிற்கின்றனர்

**நிஜங்களின் நிழல்கள்**

*- மனோரஞ்சனி பத்மநாதன்*

கண்ணீரே! உனை
கண்ணுக்குள் அடக்கி வைக்கின்றேன்
கடலில் வீழ்ந்திடாமல் !
மீண்டும்
சுனாமியாக
வந்திடுவாய் என்று !

**சுனாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– விஷ்வமித்திரன்

சாதிப்பதும் சொல்லில்
வாதிப்பதும் நெஞ்சை
பாதிப்பதும் வெற்றி
வேட்கை

சோதிப்பதும் துன்பம்
நேர்விப்பதும் உண்மை
போதிப்பதும் இறைவன்
வேட்கை

நேசிப்பதும் பெண்ணை
பூசிப்பதும் அன்பை
யாசிப்பதும் இளைஞன்
வேட்கை

பூசிப்பதும் இறையை
நேசிப்பதும் அருளை
யாசிப்பதும் முதியோன்
வேட்கை

வாசிப்பதும் எழுத்தை
நேசிப்பதும் உணர்வை
சுவாசிப்பதும் கலைஞன்
வேட்கை

சிந்திப்பதும் துன்பம்
சந்திப்பதும் வாழ்வை
நிந்திப்பதும் மனிதன்
வேட்கை

**வேட்கை!**

**களங்களை விரித்துள்ளோம்**
**ஆக்கங்களை அனுப்புங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– எம்.ரி.எம். யூனுஸ், காத்தான்குடி

மெய்யிலுள வலுவினையே இழக்கச் செய்து
மெலிதாக்கும், மேன்மைகள் அற்று வாழ்வை
பொய்யாக்கும், பொல்லாத பிணிகள் தன்னை
புகுத்திடும், போதையது பேதை ஆக்கும் !
கைநீட்டித் திருட்டோடு ஒன்றிப் போகும்
கதியாக்கும், கண்ணான பெற்றோர் தன்னை
கைநீட்டி அடித்தற்கும் தூண்டும், மற்றோர்
கோபத்தை குவித்திடுமே போதை வேண்டாம்!

தனஞ்சேர்த்து வாழ்ந்திட்ட வாழ்க்கை எல்லாம்
தவிடாக்கும், பொடியாக்கும் பொறுமைக்கேதான்
இணங்காமல், எகிறுவதால் எல்லோரினதும்
இழி(வு)வார்த்தை எத்தனையோ எட்டித்திடுமே!
பெண்ணாசைகளும் பெருகும் பாவையர்களினை
பார்க்கின்ற பொழுதுகள் காமம் ஏறிடும், எண்ணாத
இழிவான செயல்கள் எல்லாம் இருப்பாகும்,
இழிவான போதை வேண்டாம் !

இளமைகள் பறிபோகும், என்றும் வாழ்வில்
இன்பங்கள் நிறையாது, மனதில் என்றும்
களவெண்ணம் கனத்திடுமே, காத்து வந்த
காசெல்லாம் கரைத்திடுமே, நாளும் எம்மை !
அழகோடும் அன்போடும் வளர்த்து வந்த
அன்னையவள் அகம்நோக பருவம் தளர்ந்திடுமே,
போதையால் வாழ்வே பாழாகும்!

மதிகெட்டு பதிகெட்டு விதியும் கெட்டு மாற்றாரின்
பார்வையில் இழிவைத் தாவி
கதியற்றவர் போலாக்கும், களிப்பை வாழ்வில்
கனவாக்கும் கஷ்டங்கள் கோடி கூடும் !
பதியாளின் பாசத்தில் நின்றும் விலகி
பரதேசி ஆக்கிவிடும் போதைவஸ்தை
விதியாக்கும் வேளை வையம் தன்னை
வெறுப்பாக்கும், ஒருநாளும் போதை வேண்டாம்!

வசந்தங்கள் வாழ்விற்கு குட்பை சொல்லி
விரைந்தோட வைத்து வாழ்க்கை எல்லாம்
கசப்பாகும், கண்ணியமாய்க் கழிந்த காலம்
கடந்தேகும், கண்களுமே கன்னிதேடும்!
பசியற்று நிதியற்று பாரின் கண்ணே
பரந்திடும் மகிழ்வான வாழ்க்கைதனிலே
அசிங்கங்கள் அரங்கேறும், சோதரர்கள் இழிவான
வாழ்வேகும் போதை வேண்டாம்!

**பேதையாக்கும் போதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- க. அர்ப்புகள்

செத்துப்போன வாழ்வுதனை
திரும்பிப் பார்க்கிறேன்
ரம்மியமும் ரட்சிப்பும்
ஒவ்வொரு முயற்சியிலும்
ஆதிக்கம் செலுத்த

எல்லாம் பச்சையாகவும்
ஆட்காட்டி கலாசாரம்
எதுவுமே தொக்காமல்
நீண்டு நெடிதுயர்ந்த
விண்மீன் மாளிகையில்
மனது சஞ்சரித்து உலாவி
சுற்றித் திரிந்து சுகித்தது

ஏங்கும் கோடானுகோடி
கொட்டிக்கிடக்கும் இன்பங்களாய்
எதிர்காலம் எதிர்வு கூறி
இருப்பைக் கைப்பிடிக்குள் பொத்த

கிராமத்துச் சத்தங்கள்
மார்கழி வெள்ளம்
திருவெம்பாவை ஊர்வலம்
ஓடைகளில் குளிப்பு
தூண்டிலெறிந்து மீன்பிடித்த
பசுமை உணர்வு
ஆலமர விழுதில் தொங்கி
குரங்காட்டம் போட்ட குறும்பு
புழுதி விளையாடி
சேற்றில் கால்பதித்த இளமை

போக்கடி அரட்டை
பிள்ளையார் கோயில் பூசை
இளநீர் குலைதிருடி
இன்பம் துய்த்த நாட்கள்
எதுவும் அறிவுக்குள் சிக்காத
சின்ன கிராமத்து
விவசாய வாழ்க்கை
அன்று
திமிறி வந்த யுத்த வீரனுக்குள்
அமிழ்ந்து அழிவுண்டுபோக
அகதிவாழ்வும் அவலமும்
நிதர்சன வலைவிரிக்க
இன்று ?
நெருப்பு வாழ்க்கையாய்
எனது கிராமம்
எரிந்து கிடக்கிறது
வசந்தகால எதிர்பார்ப்புடன்.

**எரிந்துபோன கிராமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– **பெ.மங்கை, திருமலை**

பத்துத் திங்கள் தாய்வயிற்றில்
பவ்வியமான உறக்கம்
பந்த பிணைப்புக்கள் மத்தியில் - அவள்
பவளமாய்ப் பிறந்தாலும்-பருவம் பன்னிரண்டு
வரை பட்டாம் பூச்சியாய்ப் பறந்து பருவம்
பதினாறில் பாதுகாப்பு சூழத்தான் பள்ளி
சென்று வருவாள். பாவம் அவள் தூய
கன்னியாய் வாழ்ந்தாலும்
பதியொருவன் கைப்பற்றி பள்ளியறையில்
பஞ்சணையைப் பகிர்ந்து அவன்
பரம்பரையைப் பக்குவமாய் பெற்றெடுக்க
பாவம் அவள் விளைநிலமாகி விதையை
பணம் கொடுத்துப் பயிராக்கி அவள்
பதராகின்றாள்.
பாரிலுள்ள படைப்புகளில் பகுத்தறிவை
மனிதனுக்கு படைப்பதற்குக் காரணம்
திருமண பந்தத்தில்
பாரியார் வீட்டாரிடம் பணத்தை
பந்தியிலிருந்து பங்கிட்டு வாங்கத்தானோ!
பந்தங்கள் மத்தியில் பல ஜோராக
பட்டியலிட்டு காட்டுவார்கள் பதி வீட்டார்
படித்த பட்டத்திற்கு, பண்ணும் வேலைக்கு
பந்தாவாக உங்கள் பெண்ணை வாழவிடு
பகட்டாக காட்ட பதிவிரதைக்கு
பல லகரங்களில் பவுண் நகை பட்டியல்
படித்து முடித்த நாள் பதமாக பானமும்
பலகாரமும் சுவைப்பார்!
பார்த்தாயா வேடிக்கையை!
பதியிடம் இருக்கும் அனைத்து தகுதியும்
பாவம் அவளிடமும் நிறையவே இருக்க
பணம் இருந்தும் பண்பிருந்தும்
அன்பிருந்தும் பகட்டின்றி நிற்கிறாள் ஏன்
தெரியுமா? -இவ் பந்தத்தில் இணையாமல்
பத்தினியாய் வாழ்ந்தாலும்
பார்ப்போர் பார்வையில் பல பெயர்களை
பாவை இவளுக்கு இலவசமாக
சூட்டுவார்கள்
பார்ப்போரின் பார்வையில் பெண்கள்
பாவைகள் தானே!

***பாவையே நீ பார்த்து பாவையா?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சி.ரி.சவுந்தி, அல்வாய்

கடலலை கரைமோதி
பனையோலை சரசரக்க
காற்றுக்காக காத்திருந்து
பட்டம் விட்ட

ஊரில் தெருக்களெல்லாம் - எம்
மிதி வாங்கிய வண்டி அதுவே
எம் மோட்டார் வண்டியென
ஆனந்தமாய் பறந்து

மாலை நேர மைதானத்தில்
கூடிக்குலாவிய நண்பர்களோடு
சாலையோரமாய் போனவளை
ஆடிக்கேலி செய்ததும் - அதை
பார்த்தவர்கள் கூறியதும்
அடித்தாரே ஓர் அடி அப்பா

இன்னும் நினைக்கிறேன் - அவ்
இன்பங்கள் நம்மூரில் தான்.

நினைவுகள்

– ஆர்த்திதா விஜயலிங்கம்

தொலைத்து விட்டுத்தேட
பணமல்ல
தொலைக்காட்சியில் ஒளிபரப்ப
விளம்பரமல்ல
காசுகொடுத்து வேண்டிட
மாளிகையல்ல
மலைத்துப் போய் நின்றிட
அதிசயமல்ல
ஒன்றுபட்டால்
வந்திடும் சமாதானம்.

ஐந்தெழுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சி.என்.துரைராஜா

மனிதன் இங்கேதடா
மண்டியிட்ட
மனிதர்களில்
சூடு இங்கேதடா
சுரணையற்ற
மனிதர்களில்
சொந்த மொழி இங்கேதடா
சோற்றுக்கு விற்ற
மனிதர்களில்
தமிழன் இங்கேதடா
தாழ்ச்சியுற்ற மனிதர்களில்
உண்மையிங்கேதடா
உருப்படாத
மனிதர்களில்
கட்சியிங்கேதடா
கருத்திழந்த
மனிதர்களில்
வீரனிங்கேதடா
வீழ்ச்சியுற்ற
மனிதர்களில்

## எங்கே வீரன்

- க.லோகநாதன், அக்கரைப்பற்று

நேரெதிரே பார்
உனது எதிர்காலம்
பாழாய்ப்போகிறது

காதல் மட்டுந்தானா
வாழ்க்கை இளைஞனே !
உன் பெற்றோரின் கனவினை
காலடியில் மிதித்துவிட்டு
எங்கே செல்கிறாய் !

## காதல்மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜே.மதிவதனி

இன்னமும் தேடுகின்றேன்...
நிசப்தமான இரவில்
கடலலையின் ஓசை
காலைத்தொடும்போது...
என் பெயர்சொல்லி
நீ அழைப்பது
எனக்குக் கேட்கிறது...
கடலின் அலை
காலைத் தொட்டாலே
துள்ளி ஓடுபவன் நீ.
எப்படி சங்கமமானாய்
கடலுடன்.?
எங்கோ ஓர் மூலையில்...
நினைவுகளைத்
தொலைத்துவிட்டு.
உயிருடன் இருப்பாய்
என்ற நம்பிக்கையில்
உன்னை
இன்னமும் தேடுகின்றேன்

**தேடுகின்றேன்**

- வி.கௌரிசங்கர்

ஊருக்குச் சென்று
ஊமையானேன்
தலைசாய்க்க இடமின்றி!
அத்திவாரக் கற்களில்
ஒரு பொழுது
நின்றபடி பார்த்தேன்
வெட்டவெளி !
ஒற்றைவழிப் பாதை தன்னில்
வழி முடிவில் !
அகதிமுகாம்
எங்கள் தலைவிதி !

**தலைவிதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– [illegible]

மல்லிகை வாசம் கலந்து
மணலது புழுதி சுமந்து
மெல்லென வீசிய காற்று
மேனி சிலிர்க்க வந்தது வசந்தமாய்

கல்லென்று மனங்கள் இறுகியதை
காலத்தின் இனிமை கரைக்கவில்லை
மல்லொன்று நடந்த சுவடுதனை மலைத்து
நின்று பார்த்தது காற்று

விடியல் தேடும் மனநிலை விலகி வெந்த
மனங்கள் சோரும் விழிகள் இடிபடத்
தாக்கிய துயருடை மக்கள் வசந்த காற்று
கண்டது இவற்றையே

உள்ளங்களை தொட முடியவில்லை
உணர்வுகள் துயின்று போனதால்
கள்ளமறியா காற்று ஒரு கணம் யோசித்தது
காலத்துயரை அறிந்தும்கூட கனன்றது

விருந்தென வந்த என்னை முகமலர்ந்து
எவர்தான் வரவேற்றார் உறுமியது காற்று
இருப்பென்ன இங்கெனக்கு வெகுண்டெழுந்து
அனற்காற்றாய் உருவெடுத்து
அனைவர்க்கும் அடித்தது

*காற்றுக்கு கதவடைப்பு*

◆

| | |
|---|---|
| **பயில் களம்** | |
| **காத்திரத்தின் களம்** | |
| **பரிசோதனைக் களம்** | **நீங்களும்** |
| **விமர்சனக் களம்** | **எழுதலாம்** |
| **விளக்கக் களம்** | |
| **கருத்தாடல் களம்** | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எஸ்.சத்யதேவன்

ஒவ்வொரு நாளும்
கேள்விப்படுகிறேன்
நண்பர்கள் உறவினர்களின் மரணங்களை!

எனக்குத் தெரியும்
"என்தோழர்களே"
நீங்கள் கொல்லப்பட்டது
என் நண்பனாக, உறவினனாக
இருந்ததற்காகவல்ல என்று

எனக்குத் தெரியும்
"என் நண்பர்களே" நீங்கள்
கொல்லப்பட்டதன்
காரணம் ஒன்று
ஒன்று மட்டுமே! என்று

நான் வெட்கப்படுகிறேன்
"என் நண்பர்களே"
உங்கள் மரணம் மீதான
பழிவாங்குதல்களை
நீங்கள் மௌனமாக்கப்பட்டதன்
அநீதியை எதிர்தலை
செய்யாமல் இருந்ததற்காக

நான் வெட்கப்படுகிறேன்
"என் நண்பர்களே"
உங்கள் சவங்களை எழுப்பி
பொய்ச்சாட்சியம் கூறியபோது
மௌனமாக இருந்ததற்காக

என்னிடமும் இருக்கிறது
இருத்தல் மீதான ஆசையும்
மரணம் பற்றிய பயமும்.
எனக்குத் தெரியும்
என் இருத்தலை நான்
தீர்மானிப்பதில்லை என்று

இப்போது
என்னால் முடிந்ததெல்லாம்
நீங்கள் இறந்துவிட்டீர்கள்
என்பதை பதிவு செய்ய மட்டுமே!

இருத்தல் மீதான ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வை.கமலநாதன், நித்தியபுரி

வாழ்ந்த நாட்கள் இன்னும் வறண்டு போகவில்லை
வீழ்ந்த எம்மவர் வீறுகொண்டெழுந்திடுவார்
சூழ்ந்த இருள்தேடி சுகவாழ்வை நிறைத்து
இன்னும் - தாழ்ந்த நெஞ்சமென்ன
சரித்திரம் சொன்னதென்ன

சிந்தை இன்னும் சிகரத்தில் சிக்கியிருந்தாலும்
விந்தை மனிதர் என்ற வீண்புகழ்ச்சி எமக்கில்லை
கந்தை கலையாத காவிய புருசர் நாம்
நிந்தை இனி எம்மை நெருங்குவதில்லையே

பற்றிய கயமாய் வறண்டு இருந்தாலும்
முற்றிய விதையாய் முகிழ்த்திட இருக்கிறது
பற்றிய கரங்களில் பாதை தெளிவாகும்
வெற்றிகள் வெளிவரும் வேளை இதுதானே

உள்ளத்து உணர்வு ஊமையாய் இருந்தாலும்
பள்ளத்து நீரல்ல நாம் பாயும் வெள்ளாறு
கள்ளத் தனங்களை கருவோடு
அறுத்தெறிந்து வெள்ளொளிக்கீற்றாக
விண்ணில் பறந்திடுவோம்

சாய்ந்துவிடவில்லை சாதிக்கும் வல்லவர்
ஓய்ந்து இருந்தாலும் உணர்வுகள் ஓடி
ஒதுங்காது பாய்ந்து வருவதிலே எம் பார்வை
நிலைத்திருக்க காய்ந்து கருகியதாய்
நீ கனவு காண்பதென்ன

எதிர்காலம் எம்மை ஏற்றிக்கொண்டாடும்
உதிர்காலமில்லை எம்முயிர் நீங்கவில்லை
சதிகாரரெல்லாம் சகதியில் செல்லவிட்டு
புதிதாக நாம் புனர்ஜென்மம் கொள்வோம்

***சாதிக்கப் பிறந்தவர்கள்***

◆


பவளவிழாக் காணும்
பேராசிரியர் **கா.சிவத்தம்பி**
அவர்களை நீடுழி வாழ்ந்து
நிறைந்த பணிசெய்ய
நீங்களும் எழுதலாம்
வாழ்த்துகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– வே.ஜெயகாந்தன்

தலைமைத்துவத்தில்
அஸ்தமமா நீ?
தலைகளில்லா பிணங்களை
தரணியிலே கண்டும்
சமாதானம் மலர்ந்திடும் என்றாவது என்று
சாந்தியாய் சிலர் இருப்பது
ஒரு ரகம்.

சமாதானப் போர்வையில்
வேட்டையாடப் பட்டும்
வேட்டுக்களால் வெறுமையாகியும்
வெண்புறா விடும் சிலர் ஒரு ரகம்...!

வெறுமனே வந்து
வெட்டியாய் வாழ்ந்து
வெற்றுடம்பாய் போகும் வரை
வெறுமையாய் போகும்வரை
வெறுமையாய் கிடக்கும் சிலர்
ஒரு ரகம்.

நசுக்கப்படும் பெண்ணினத்தை கண்டு
நாட்டுக்காய், நமக்காய் என்று
நியாயத்தை காக்க
பொங்கியெழும் சிலர்
ஒரு ரகம்...!

பொறுக்காத கொடுமைகளை
சாட்டுக்கொடியாய் ஏந்தி
கைதட்ட காவியமாகி
காலம் கலங்கும் போது
கலக்கமில்லா கள்வரோடு சிலர்
ஒரு ரகம்.

கண்ட கொடுமைகளை உரிய இடத்தில்
உரிய மகுடத்துக்கு உண்மையை
சொல்லிட மறுக்கும்
வெளி உறவுகள் இன்னும்
இம்மண்ணில் பணத்துக்காய்
பிணங்களின் கணக்கு சொல்லும்
சிலர் ஒரு ரகம்.

சத்தியம் செத்தாலென்ன,
சமாதானம் மாண்டாலென்ன
சந்ததி இருந்தாலென்ன
என்னாயுள் மட்டுமே
இவ்வுலகம் வாழும் எனும்
சிலர் ஒரு ரகம்.

பிணங்களின் கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ம.உதயகுமார்

ஏய் மனிதா!
பூமியில் ஏனடா பிரளயம்
நீயா முழுக்காரணம்
இன்னும் புரிவதற்கு
காலங்கள் தேவையா
அறியாவிட்டால் அறிந்து நீ
தெளிந்திடுவாய்
இல்லையேல் கேள் கூறுகிறேன்
உன் முன்னோரன்று
இயற்கைக்கு அஞ்சி கெஞ்சி
துதிபாடி துயர்தீர்த்தனரே
அதனால இன்பம் வாழ்வில் கண்டனரே!
இன்று விந்தைபுரியும்
தூபமிட்ட சமய நெறிதனை
நீயோ மறந்து இன்று
மதங்காட்டிய வழிதவறி
எளியோரை மதியாது
வஞ்சம் தீர்க்கின்றாய்
அதனால்தானோ
அணு குண்டை வீசுகிறாய்
வீண் பழிசுமக்கின்றாய்
சுனாமி அலைகூட
இயற்கையின் சீற்றமன்றோ!
அண்டவெளி ஆய்வு என்று
அரியபல சாகசங்கள் புரியும் நீயோ
இன்று தூமகேது எனும்
பால் வெள்ளிதனை உடைத்து
பொடிப்பொடியாக்கி
சூழலின் சமநிலையை
குலைத்து நீ விடுகின்றாய்
குளோனிங் முறை கண்டு
இறையோன் தொழில் தன்னை
மிஞ்சி நீ நடக்கலாமோ!
இல்லையேல் கலியுகத்தில்
அவன் ஊழிக்கூத்து
தாண்டவம் ஆடும் பிரளயமாய்
மதி நுட்பம் கொண்ட மானுடனே...!

## ஏன் இந்தப் பிரளயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *திருமதி வி.தமிழரசி*

கலாசார மோகத்தில்
கட்டுண்ட தமிழினமே!
நச்சென்று சொல்லிடுவேன்
நறுக்கிய செய்தியினை

நாமிருவர் நமக்கிருவர் என்றார்கள் நாமிருவர்
நாளைய உலகமென்கிறார்கள் நல்லதில்லை
இவையெல்லாம்
நாளைய சந்ததிக்கு

வீட்டுக்கொருவர் வாரீர்
விடுதலையைப் பெற்றிடவே இதில்
விலையெல்லாம் நம் தமிழரின் உயிரதுவே
நல்லதில்லை இவையெல்லாம்
நாளைய சந்ததிக்கு

நல்லறம் போற்றும் தமிழினத்தின்
நறுக்கிய பிரிவுகளும்
நாமே நமக்குப் போட்ட மரணப்பரிசில்களடா
நல்லதில்லை இவையெல்லாம்
நாளைய சந்ததிக்கு

நாளைய தமிழினம் நன்றாக வாழ ஓரிடம்
நாளெல்லாம் தேடினேன் உலக வரைபடத்தில்
நமக்கு கையளவேனும் பூமியில்லை கால்வைக்க
நல்லதில்லை என்ற செய்தியினை ஓயாது
உரைத்திட்டாலும் -ஏனோ நல்லதில்லை
தமிழனின் காதுகள் இன்னும்

**நல்லதில்லை**

◆

- *க.விஜுஷியா*

பூபாளம் பாடிய சோலையிலே
பிணமணம் வீசுதல் நியாயமா?
கவிக்குயில் பாடிய சாலையில் கதறல்சத்தம்
ஒலிப்பது நியாயமா?
இன்பம் தந்த உறவுகளுக்கு
இரங்கல் கூட்டம் நியாயமா?
எத்தனையோ உயிர்குடித்தும்
உன் தாகம் அடங்காமை நியாயமா?

**யுத்தமே பதில் சொல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**"கொழுந்து"** (மே - ஜூன்)
ஆசிரியர் - அந்தனி ஜீவா
விலை - ரூபா 10

தொடர்புகளுக்கு
கொழுந்து
ஆசிரியர் - அந்தனி ஜீவா
தபால் பெட்டி இல : 32
கண்டி.

◆

-து.குணகௌரி

எழுதடா தம்பி எழுது
எங்கள் உணர்வினை எழுது
அழுது புலம்பும் தமிழச்சாதி
அகதி வாழ்க்கை வேண்டாம்
அடிமை வாழ்வும் வேண்டாம்
உறுதியாய் சேர்ந்து நிற்போம்
உண்மை ஓர் நாள்
வெல்லும்!

*எழுதடா தம்பி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– எஸ்.அர்.தனபாலசிங்கம்

இங்கிருந்தே ஆரம்பிக்கும்
ஒவ்வொரு நகர்வும்
என்னைச் சுற்றியுள...

என் கால்கள்
வரையறைக்குள் வளைந்துவர
கட்டப்பட்டுள்ளதாய் உணர்கிறேன்
கைகளை அசைத்து
பறப்பது பற்றிய
கனவொன்றுளதாயினும்
கால்கள் பற்றிய பிரக்ஞை
என்னிடம் வலிதாகவேயுள

சிலரது உதடுகளிலிருந்து
உதிர்கின்ற தத்துவங்களும்
(வ)சதித் தத்துவங்களாக...

புதைந்த அத்திவாரக் கற்களில்
உயர்ந்து (சமூகத்தை) விட்டவர்களின்
உன்னத பிரமிப்புகள்
பற்றிய கேள்விகளும்
என்னிடமெழுகின்றன

பெருமைப்படவும், பொறாமைப்படவும்
யாதுளவாயினும் - ஒரு சிலர்
பெயர் பொறிப்பதற்காய்
பாமர மக்களை
பலிக்கடாக்களாக்கும்
பரிதாபங்களும் மனதை
பரிதவிக்க வைக்கின்றன

இங்கிருந்தே அனைத்தும்
எடுக்கப்பட்டன - அதிசயம்
ஒருசிலர்
தங்களுக்கு அடிக்கும் பொல்லை
தங்களுக்கடியில் வைத்திருப்பதுதான்

உண்டு - இல்லை
இவர்களுக்கிடையிலான போராட்டமே
உலக வரலாறாயிருக்கிறது

நான் தேடுகிறேன்
எழுதப்பட்டவர்களின்
எழுதப்படாதவைகளின்
வரலாற்றை

**இங்கிருந்தே...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– *பிரம்மியா கிருபநாயகம்*

அழகையும் அசிங்கத்தையும்
காட்டிக்கொடுத்திற்று
அந்த நிலைக்கண்ணாடி
ஒப்பனையின்போது அழகையும்
அல்லாதபோது
அசிங்கத்தையும்.

என் குறைகளை மறைக்க
முகமூடியுடன்
நானே என் முன்னால்
நிலைக்கண்ணாடியில்
சிரிக்கிறேன்
நிஜத்தை துடைத்துவிட்ட
திருப்தியுடன்.

இனங்காணப்படாத
இலக்குகளைத் தேடியலைகின்றோம்
இடையில் எம் பிடிக்குள்
சிக்காத சக்கரமாய் காலம்.

கடந்து வந்த பாதையில்
கிடைக்கப்பெற்றவை சில
இழைக்கப்பட்டவை பல
தாண்டி நோக்கும் போது

தூரத்திலோர் புள்ளியாய்
வெறுமை
அருகில் செல்ல
அதுவே பிரமாண்டமாய்
பின்
பிரபஞ்சமாய்.

***பிரபஞ்சத்தில் பிரமாண்டம்***

ஆக்கபூர்வமான
விமர்சனங்கள் கருத்துக்கள்
வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– துஷாந்தி பரமநாதன்

சொந்த உறவுகளையும்
சொத்து சுகங்ளையும்
பாதியிலே அதுவும் வீதியிலே

பரிதவிக்க விட்டுச்சென்று
பாவபூமி தாண்டிச்சென்று
மோட்சமின்றி பாசம்
ஒன்றால் துடிக்கும்

பாவப்பட்ட ஆத்மாவின்
பரிவு மிக்க அவலக்குரல்
நிசப்தமெல்லாம் நிலைகுலைய

நிலவின்கண்ணில் நீர் வடிய
மண்ணுக்குள் மறைந்த
இதயம் மறுபடியும்
துடிக்கிறது

இதயத்துடிப்பின் ஒலி
இன்னுமொரு யுத்தம் வேண்டாம்
பாவம் இளம் இதயங்கள்
பாசத்தால் நனையட்டும்

உதிரத்தால் உறைய வேண்டாம்
உறக்கத்தில் கூட
துடிக்கும் இதயங்கள் இன்று
உறைந்துள்ள இடமும் சுடுகாடு

சத்தம் போட்டுக் கூறவேண்டாம்
மண்ணில் மறைந்த உடலை
மறுபடியும் எழுப்பி எடுத்து
துடிக்கும் இதயம்

தமிழ் இதயமா அல்லது
தமிழனின் இதயமா எனப்
பார்க்கும் கலிகாலமிது.

***சுடுகாட்டில் துடிக்கும் இதயம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– *தாமரைத்தீவான்*

1 ஐயோ சமாதானம் - கிடந்தேன்
அல்லற்படுகின்றாய்?
பொய்யினிலே கிடந்தேன் - வீணாய்
புரண்டுருளுகிறாய்?

2 வாயினிலே கிடந்தும் - வீணான
வார்த்தையிலே கிடந்தும்,
நோயினில் வீழ்ந்துமல்லோ-பொய்யான
நோக்கில் நடந்துழல்வாய்?

3 அன்று வரவிருந்தாய் - ஆனாலும்
ஆட்களும் மாறிவிட்டார்!
இன்னும் வரவில்லையே - சந்துவே
எப்போதுதான் வருவாய்

4. உன்னை அடைவதற்கே - தானாமே
ஊனோடுறக்கமின்றி
அன்னையின் பேறதுபோல்-ஒரு பத்து
ஆண்டுகள் காத்திருப்போம் !

5 உள்ளத்திலேயிருந்தோ - அன்றி வாய்
உதட்டிலேயிருந்து
மெள்ளவருவாயோ - அன்றி மிகு
வேகமுடனாமோ ?

6 ஏமாற்றுவோராலே எம்மையும்
ஏமாற்றிடாதே !
போமாறு சொல்லுவதை - நம்பிநீ
போகாதே உண்மையின்றி!

7 உளத்தை மாற்றிவிடு - கத்திடும்
உதட்டை மூடிவிடு!
களத்தை நோக்காதே - போரினைக்
கண்ணிலும் காட்டாதே !

8 உலகப்பார்வை தன்னை - சிந்தாமல்
உன்னில் திருப்பிவிடு!
நலமேதந்திடுவாய் - போற்றுவோம்,
நாமுன்னைத் தெய்வம் என்றே!

***எப்போது?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***. சம்பூர் எம் வதனரூபன்***

செழுமையாக நுரைத்து அலைபரவும்
பெருநீர்ப்பரப்பில் அலையடிப்பில்
கரையொதுங்கும் கிளிஞ்சல்களாகி
நிச்சயமற்ற தருணங்கள் ஒதுங்கும்

இலைச்சுருட்டி மூடிக்கட்டியதான
கூட்டுப்புழுவின் ஒடுங்கிய ஒழிதலுடன்
வாழ்தலின் பெரும் பயணம் தொடரும்

ஒவ்வொரு உயிர்பிற்கும் நீருகுத்து
பின்னாக முலைவறண்டு போன
சுடுகாற்றாக கலம் சபிக்கப்பட்டதில்
மீதமாகி கசிவெடுத்து ஒடுங்கிய கடைசிச்
சொட்டுகளில்

காலம் பதித்த ஆழச்சுவடுகள்
மீந்து வழிய அவையும்
குடம்பிகள் தெறிக்கும் ஜீவநதியாகும்.

எங்கிருந்தோ ஏவப்படும் ஒளிச்செறிவில்
இருட்டுக்கள் ஓய்வெடுக்க
வைக்கோல் பழுப்பொளி பரவும் வெளியில்
எல்லா முளைகளும் மூச்சுவிடும்
உயிர்க்கும்

முக்கும் பறவைகள்
சிறகுகளை பழுதுபார்த்து
அகல விரித்து உயரப்பறக்கும்
ஒளிக்கீற்றின் திசைதேடி
மீண்டெழும் நாளொன்றில்

**மீண்டெழும் நாளில்**

◆

புனைபெயரில் எழுதுவோர்
தங்கள் சொந்தப் பெயரையும்
குறிப்பிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற

## மு.மேத்தாவிற்கு வாழ்த்துக்கள்

"போதுமையா போதும் !
போதும் . இனி
புதுக்கவிதை எழுதாதீர்
பாவம் –அதை விட்டுவிடும்
பழிவந்து சேருமுன்னே
.................................
பல்லக்குச் சுமந்து வந்த
பரம ரசிகர் எல்லாம்
தாமே பல்லக்கில்
தாவி அமர்ந்ததினால்
பல்லக்கும் உடைகிறது.
பல்லக்கில்வந்தவர்கள்
பல்லுமிங்கு உடைகிறது.
பரிதாபம் தெரிகிறது! :
.................................

தொடக்கி வைக்கிறார் மேத்தா. போராட்டம் தொடர்கிறது. தொடர்ந்து மேத்தாவின் வாக்குமூலம்.

புதுக்கவிதை என்பது இன்றைய இளைஞர்கள் நடத்த வேண்டிய போராட்டத்திற்கான ஆயுதம் என்று நான் நம்புகிறேன்.

ஒரு கவிதை தோல்வி அடைகின்ற போது, அந்தக் கவிதை சொல்ல வந்த கருத்துக்களும் தோல்வி அடைந்து விடுகின்றன.

நம்முடைய இயலாமையால் நமக்கு மட்டும் அல்லாமல் நம்முடைய உன்னதமான கொள்கைகளுக்கும் சேர்த்து குழிபறிப்பது அறிந்தே செய்கின்ற பாவமல்லவா.

'பல்லக்கு' என்று நாம் குறிப்பிடுவது புதுக்கவிதையை த்தான்! அதை எழுதுகின்றவர்களும் ரசிக்கின்றவர்களுமே அதை சுமப்பவர்கள் அப்படியானால் புதுக்கவிதையாகிய பல்லக்கில் பவனி போவது யார் இந்த சமூகத்திற்கு நாம் கொண்டு செல்கின்ற கருத்துக்களே.

எழுதுகின்றவர்களும் ரசிக்கின்றவர்களும் எல்லோருமாகச் சேர்ந்து புதுக்கவிதைப் பல்லக்கில் –தாமே பவனிவர ஆசைப்பட்டுவிட்ட காரணத்தால் பல்லக்கு உடைந்தது.

பல்லக்கில் ஏற்கனவே பவனி வந்து கொண்டிருந்த சமூகத்திற்கான செய்திகளும் சிதைந்தன. எழுதுகிறவர்கள் வாசிக்கிறவர்கள் எல்லாருடைய பற்களுமுடைந்தன.

இதுதான் இந்த உவமை உணர்த்தும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைபற்றியோ சமூகத்தைப்பற்றியோ
கவலைப்படாமல் தம்முடைய 'பவனி'யப்பற்றி மட்டுமே
கவலைப்படுகின்றவர்களால் வந்த ஆபத்து இது. அதைத்தான்
ஆதங்கத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

இது அக்கறையோடு சொல்லப்பட்டதேயல்லாமல்
ஆணவத்தோடு சொல்லப்பட்டது என்று கருதுகிறவர்களின்
அறியாமைக்காக நான் 'அன்புடன்' வருந்துகிறேன்.

என்கவிதையில் இடம்பெறும் சீற்றமும் கிண்டலும்
கேலியும் ஒரு நல்ல கவிஞன் மீதோ அல்லது நல் கவிஞனாக
காத்தித்திருக்கும் வீரியமிக்க விதையான இளைஞனின் மீதோ
வீசப்பட்டதல்ல.

என் கவிதையின் தொனியையும் இலக்கையும்
தவறாகச் சிலர் பிரசாரம் செய்யவே எனக்கு வேண்டியவர்களே
என்மீது தாக்குதல் நடத்தினார்கள்.

புதுக்கவிதை ஓர் இயக்கம் என்பது நிரூபிக்கட்டதில் நான்
பெருமிதம் கொள்கிறேன்.

'எங்களைத் தட்டிக்கொடுத்தவன் இனிமேலும்
தட்டிக் கொடுக்க வேண்டியவன் இப்போது எப்படித்
தட்டிவிடலாம்?' என்கிற ஆதங்கத்தால்தான் என் இனிய
நண்பர்களில் சிலரும் என்னை நோக்கிக்
கல்லெறிந்திருக்கிறார்கள் என்பதை நரன் கண்டு
கொள்கிறேன்.

என்மீது கொண்ட அன்பும் நம்பிக்கையும் தான்
அவர்களை இப்படி ஆவேசத்திற்கு ஆளாக்கியிருக்கிறது
என்பதை அறிந்து கொள்வதால் - என்னை எதிர்த்து
எழுதியவர்களின் வசவுகளுக்கெல்லாம் நான்
வாழ்த்துக்கூறுகிறேன்.

நியாயத்திற்கான இந்தப்போராட்டத்தில் எனக்கு
ஆதரவாக வாக்களித்த அனைவருக்கும் நான் வணக்கம்
செலுத்துகிறேன்.

ஆனால்
எனக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் -
உண்மையாகவே 'புதுக்கவிதையை ஒழித்துவிடவேண்டும்'
என்று கருதுகிறவர்கள் எவராவது இருந்தால் - அவர்கள்
எனக்குப் போட்ட ஒட்டுக்களை கள்ளவோட்டுக்களாக கருதி
நான் புறக்கணிக்கிறேன்.

இந்தப் போர்க்களத்திலிருந்து திரும்பி பிறகு
புதுக்கவிதை எழுதுகிறவர்களின் பொறுப்பு இன்னும்
அதிகமாகி இருக்கிறது என்பதை மீண்டும்
நினைவுபடுத்துகிறேன்."

அன்புடன்
மு.மேத்தா

'புதுக்கவிதைப் போராட்டம்" நூலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோபல் பரிசு பெற்ற மஹாகவி**

**பாப்லோ நேருடா**

**தென்னமெரிக்காவில் சிலி நாட்டில் 1904–07–12ல் பிறந்தவர். இடதுசாரி இயக்கங்களில் முக்கிய பங்காற்றிய இவர் பாசிச இராணுவ அதிகாரிகளால் 1979. 09. 23 இல் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடைய கவிதைகள் மனிதாபிமானம் என்னும் பலமிக்க அடித்தளத்தைக் கொண்டவை.**

"சில விஷயங்களைப் பற்றிய விளக்கங்கள்" என்ற கவிதையில் அவருடைய கோபத்தைப் பார்க்கலாம்.

**"மரணமடைந்த என் வீட்டைப் பாருங்கள்**
**துரோகிகளே, இராணுவ வெறியர்களே**
**சின்னா பின்னமாகும் என் ஸ்பெயினை**
**நன்றாக உற்றுப் பாருங்கள்**

**அதன் மரணமடைந்த வீடுகளிலிருந்து**
**பளபளப்பாக எட்டிப் பார்ப்பவை**
**மலர்களல்ல, துப்பாக்கி முனைகள்**
**அதன் பதுங்கு குழிகள் பிரசவிப்பது**
**போராட வரும் புதிய ஸ்பெயினை**

**கொலை செய்யப்பட்ட குழந்தைகளின்**
**ரத்தத்தில் நடனமாடும் உங்களை**
**ஓராயிரம் கண்கள் வெறித்து நோக்குகின்றன**
**துப்பாக்கிக் குழல்களின் பின்னாலிருந்து**
**நாளை உங்கள் இதயத்தை அலங்கரிக்க**
**உங்கள் மிருகத்தனங்களால் உருவாகின்றன**
**ஓராயிரம் கோடி துப்பாக்கி ரவைகள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தனிஜீவா**

கடுகு சிறதெனினும் காரம் பெரிது
இளைய பாரதிகளை வெளிச்சத்திற்கு
கொண்டுவரும் உங்கள் பணி
பாராட்டுதற்குரியது. வாழ்த்துக்கள்

◆

**கோவை அனிசார், கொழும்பு**

தங்கள் இதழ்கிடைத்தது. நன்றிகள் பல.
தரமான கவிதைகள் இதழின் வளர்ச்சிக்கு
உறுதுணையாகும். அதற்கு சான்று
தங்களின் கவிதை இதழ்.

◆

**சி.என்.துரைராஜா**

தங்களின் நீங்களும் எழுதலாம் கவிதை
இதழ்கண்டு மனம் மகிழ்கின்றேன்.
தற்காலகட்டத்தில் இப்படி ஒரு இதழ்
வெளிவருவது போற்றுதலுக்கும்
பாராட்டுதலுக்கும் உரியது. வளமுடன்
வாழ்ந்து பல புதிய கவிஞர்களை
உருவாக்க வேண்டுமென்று
வாழ்த்துகின்றேன்

◆

**செ.கணேசன், அல்வாய்.**

நீங்களும் எழுதலாம் பங்குனி சித்திரை
2007 இதழ் எழுத்தாளர் தெணியான்
அவர்களிடம் பார்த்தேன். தங்களின்
முயற்சி நோக்கம் உயிர்ப்பு
பெறவாழ்த்துக்கள்.

வாசகர் கடிதம்

◆

*** இதழைப் பெற விரும்புவோர் 5 ரூபா பெறுமதிகொண்ட முத்திரைகள் ஐந்தினை அனுப்பிவைக்கவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*– தருமு சிவராமு (பிரமிள்)*

இன்று வேலைநிறுத்தம்
“கடமையைச் செய்
பலனை எதிர்பாராதே”
என்று சொல்லிவிட்டு
காரில் நழுவப்பார்த்த கண்ணபிரானுக்குக்
கல்லடி !

சுவெரெங்கும்
பசி வேத சுலோகங்கள்!
அர்ச்சுனன் கிளைத்து
அரக்கனாய்
கார்த்தவீர யபார்ச்சுனனாய்
தலை ஆயிரம்,
கை இரண்டாயிரம் !

கண்ணபிரான் நெற்றியிலே
உதிரத்தின் நாமக்கோடுகள் விஷ்வரூபத்திற்கும்
முயற்சிக்க வலுவில்லை.

இருந்த கால்களில்
எழும்ப முயன்றான்
“கீதையைக் கேட்க
அர்ச்சுனன் இல்லையென்றால்
கூப்பிடு கௌரவரை யென்றான்

பறந்தது போன் செய்தி
போலீசுக்கு.

குருசேத்திரம் - ***Khrushetra***

Incident on striks day
Lord Kirshna Sings to Arjuna
At the War Front of Khrushetra “Renounce fighting to
Escape the guilt of killing, would you? But it's beyond your warrior
Kshatriya caste to renounce,
Your way, your dharma, is to fight
And kill or be killed.
Anotherword, take no reward,
Leave that part to my account.”

Lord Kirshna the manager
Sang as much of Bhagavad Gita
To the workers at the strike front,
Only to be struck fown by a stone
A warrier cast striker had thrown.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி - ஆவணி 2007

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் - 01 எழுத்து - 3



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்

விலை 20/= ISSN 1800 - 3311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்

## இருமாத கவிதை இதழ்

## ஆடி - ஆவணி 2007

**ஆசிரியர்**

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்


**படைப்பாளிகள்**

சம்பூர்.எம்.வதனரூபன்
இ.வினோதினி
திக்கவயல் தர்மு
வெல்லபதியான்
கலா விஸ்வநாதன்
எஸ்.சத்யதேவன்
திருமதி.வி.அருளானந்தி
திருமதி.ச.இராமநாதன்
ஆர்.கே.புஸ்பராஜ்
வே.விஜேந்திரன்
பிரியசகு
சூசைஎட்வேட்
சி.என்.துரைராஜா
சரஸ்வதி புத்திரன்
சுந்தரி சதாசிவம்
திருமதி.ஜெ.றெஜினா
க.ஸ்ரீகந்தவேள்
இ.றெக்ஸ்
சு.தர்ஷிகா
வி.புருஷோத்தமன்
கவித்தாநிஜாம்
ஜெ.மதிவதனி
தி.காயத்திரி
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்


**வடிவமைப்பு**

எஸ்.சத்யதேவன்

**அட்டைப்படம்**

ஓவியர்.கே.சிறிதரன்



**தொடர்புகளுக்கு**

"நீங்களும் எழுதலாம்"
103/1, திருமால்வீதி,
திருகோணமலை.
தொ.பே: 026 2220398




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காத்திரமான பங்களிப்புகளை வேண்டி ...**

முதிய, இளைய தலைமுறை இடைவெளியின்றி அனைத்து பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து தெளிவான நோக்குடன் பயணித்துக் கொண்டிருக்கும் 'நீங்களும் எழுதலாம்' மூன்றாவது இதழ் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

ஏனைய இலக்கிய வடிவங்களுடன் ஒப்பிடு மிடத்து கவிதை என்பது இன்று பலராலும் விரும்பி வாசிக்கப்படுவதோடு பலரும் தமது உணர்வுகளை வெளியிடக்கூடிய ஊடகமாகவும் அமைந்து விடுகிறது.

ஆயினும் தமிழ்க் கவிதைகள் பல - பரிணாமங்களைப் பெற வேண்டியிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. கவிதை பெருகுமளவிற்கு ஆரோக்கியமான கலந்துரையாடல்களும் விமர்சனங்களும் வளர வேண்டும். அந்த வகையில் பாரிய பங்களிப்பினை சிற்றேடுகள் வழங்க முடியும்.

வளரும் எழுத்தாளர்களுக்கு பயில்களமாக இருக்கும் அதே வேளை ஏனையோரின் காத்திரமான பங்களிப்புக்களும் அவசியப்படுகின்றன. கவிதையாக்கத்தில் பரிசோதனை முயற்சிகளை வேண்டி நிற்பதோடு கவிதை சார்ந்த விடயங்களை கவிதைத் துறை சார்ந்தவர்கள் வெளிக்கொணரின் அது இளைய தலைமுறையினர்க்கு வழிகாட்டுதலாக அமையும். அவ்வாறு பயன்பெறும் களமாக நீங்களும் எழுதலாம் அமைவது காலத்துக்கு பொருத்தமான பணியும் கூட.

**நீங்களும் எழுதலாம்**
**அன்புடன்**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனித்தானஉடன்பாடுகள்**

எனக்குன் மீதான எந்தவொரு
உடன்பாடுகளுமில்லை

உன்மொழி என்னில் சிறுமயிரைத்தானும்
உதிர்த்தாது உறுதியாக்காது
சிரைக்காது செப்பனிடாது

சிலவேளை....
உன்னிலும் அதுவாகவே!
உனக்கான தனித்துவமுண்டு -அது
எனக்கும் கூட... உனதான

முன்மொழிவுகளை முன்னிறுத்த
எனக்கும் உனக்கும் முன்னாகவொரு
பெருவெளி அனுமதிக்கப்பட்டிருக்கிறது
நம்மால்!

அதிலெதையும் விட்டுச்செல்ல
உனக்குரித்துண்டு - அது
எனக்கும் கூட.

அதிலெதையேனும்
மாற்றஞ்செய்யவும் மறுப்பேதுமில்லை
எவருக்கும் கூட ...
ஆனாலும்...
எனக்குன்மீதான எந்தவொரு
உடன்பாடுகளுமில்லை
தனித்தாக.

**சம்பூர்.எம்.வதனரூபன்**

◆

**வேண்டும்!**

தட்டுங்கள் கதவுகளை
திறவுங்கள் பூட்டுக்களை
கொட்டுங்கள் முரசுகளை
கூவுங்கள் சுதந்திரத்தை
விடியுமிந்த வேளையிலே
வேண்டும் சமாதானம்
பாருங்கள் வடிவாக
பட்டினியின் அவலத்தை
சிதறுண்ட எம் இனத்தை
சேர்த்து வைத்துப் பார்ப்பதற்கும்
ஒரு தாயின் பிள்ளைகளை
ஒரு தெய்வம் அறிவதற்கும்
வேண்டும் சமாதானம் !

**இ.வினோதினி, வவுனியா கல்விகல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவில் வைத்தா ?**

இராகவா என்றொரு குரல்
இராமனிடம் இருந்து : உடன்
புறப்படு என்றொரு ஒலி
சீதையிடம் இருந்து !

ஏகாமல் நீ இருந்தால் என்னை
அடையவா ஈங்குள்ளாய் ?
சீதை கேட்டாள் நாணமின்றி,
நளினமின்றிக் காப்பியத்தில் !

இராமனே என்னைக் கடிதெனக்
காதலி என்றொரு குரல்
சூர்ப்பனகை சொன்னாள், நாணமோ
வெட்கமோ, ஏதுமின்றி,

கண்ணகி எரித்தாள் மதுரையை:
அந்த நாள் கோபப்பட்டாள்:
எரித்தாள், மீண்டாள், எதற்கும்
நாணப்பட்டாளில்லை

பாலியல் வேகம் கணவனுக்கு கூடையில்
சுமந்தாள், கணவனை ஏட்டில் உள்ள
இக்கதைக்காய் நளாயினி
நாணப்படவில்லை

பொன்னுக்காக விலை போன மாதவி
என்றுமே நாணமடையவில்லை
கானல் வரிப்பாட்டை கன்னம் வைத்தால்
வருவது சந்தேகமே நாணமில்லை,

நாணம் என்றொரு நற்குணம்
பாணம் போன்று பிடித்ததே கோவலர்க்கு
சலம் புணர் கொள்கைச் சலதியொடு
ஆடிய காலை நாணப்படுவதாகக்
கோவலன் சொன்னது
நாணம் என்பதைப்
பொதுவில் வைத்தா?

**திக்கவயல் தர்மு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதல் ஊற்று ...!**

காதல் இப்படிச் சுடுமென்று
கடுகளவும் நான் நினைத்ததில்லை...
ஏனெனில் - காதல்
சுகமான கூதலைத்
தருமென்று தான்
பலரும் என்னிடம்
கூறி வந்திருக்கிறார்கள்...
நம்பினேன்
நானும் அதிலே இறங்கினேன்... இறங்கிய
எனக்கோ இதயப்பரப்பெல்லாம் எரிந்தது
கண்களில் இருந்தும்
கனல் நீரே வந்தது - ஓ...
கன்னியா வெந்நீரூற்றாய்
காதலூற்று சுட்டது
கொதிக்க வைத்த நீருக்குள்
விழுந்த சுண்டெலியாக
சூடுபட்ட நான்!
ஆனால் நான் எனக்குள்ளே உனக்காகத்
தோண்டிய
காதலூற்றோ குளிர்ச்சியாகவே
இன்று தன்னும் இருக்கிறது.
அதனால்தான் கூற வருகிறேன்...
வெப்ப வலயமாக உன்னை இன்னும்
விளம்பரப்படுத்த வேண்டாம்.
குளிர்ச்சியான காதல் ஊற்றை
உனக்குள்ளே தோண்டு எண்ணெய்க்குள்
விழுந்த
எலிக்குஞ்சாக
இன்னும் பலரை நீ
கொதி நீரிலே
கொண்டு விழுத்தாதே
காதலானது எப்போதும்
சுகமான கூதலாகவே
உலகமெங்கும் உயிர் வாழட்டும்...
ஆம் காதல் இப்படிச்
சுடுமென்று கடுகளவும் நான்
நினைத்ததில்லை.

**கன்னிமுத்து வெல்லபதியான் எருவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதம் மகிழ ...**

நித்தம் இந்த தேசத்தில்
இரத்தம் சிந்தும் கோரம்
சொத்திழந்து சுகமிழந்து
சித்தம் சுமக்கும் பாரம்

முத்தான ஈழவள நாட்டில்
முகிழ்த்த முறுவலின் ரோகம்
கத்தும் ஆழி அலைகளாய்
கரை சேராத சோகம்

வித்தான சமாதானம் விளைய
விரும்பும் மக்கள் மனம்
சத்தான சமரச பேச்சின்றி
சறுக்கும் இனவாதக் குணம்

யுத்தமே வாழ்வாகிக் போயின்
யோகமாகும் ஆயுத வியாபாரம்
பித்தராய் மனிதர் பிரிந்திட
பெருகும் வறுமை ராகம்

புத்தரைப் போசிக்கும் பூமியில்
புனிதம் புதைகுழி போகும்
சித்தர் செப்பும் மொழிகளை
சிந்தியாது பேயாட்சி நீளும்

மாணிக்கம் விளையும் மண்ணில்
மனிதம் மகிழ வாழ வேண்டும்
காணிக்கையாகும் உயிர்பலி நீங்கி
கவிதையாய் மக்கள் வாழ வேண்டும்

**கலா விஸ்வநாதன்**

**ஆக்கபூர்வமான கருத்துக்கள்,**
**விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடையாளங்கள்**

நீர்த்துப்போகும் உணர்வுகள் நித்தமும் சாகடிக்க
துலக்கமில்லாத எதிர்காலம்
அழுகி புழுத்து நிணம் வடியும் மூளைகளை
நித்தமும் நக்கிதக்கி தின்றதில்
நினைவுகளில் பிணப்புழுக்கள் நடனமாடுகின்றன
தோண்ட தோண்ட தாங்கவொணா மணத்துடன்
பேசும் வார்த்தையை
உதிர்க்கும் ஒழுகும் இருதயத்தை
சந்தேகித்தபடி மீண்டும் துயிலெழும்பும்
உண்ணிகள் அழகாக இருக்கும்
ஊற்றெடுக்கும் ஒவ்வோரு கணத்துளியிலும்
விஷம் கலந்திருக்கும் சந்தேகமாய்
விழித்திருக்கும் எந்நேரமும் சீழ்வடியும் சொறிநாய்
அழகாய்த்தெரியும் நாறியபிணம்
ஊனைத்தின்றபடி குழந்தைகள்
மலக்குழியின் நீரில் உதிர்க்கும்
அடையாளங்களாய்...

**எஸ்.சத்யதேவன்**

◆

**ஓர் அன்பான வேண்டுகோள்**

1950 களிலிருந்து இதுவரை திருமலை மாவட்டத்திலிருந்து வெளிவந்து நின்று போன பருவ இதழ்களின் (சஞ்சிகைகள், அச்சுருப்பெற்ற, தட்டச்சு செய்யப்பட்ட) பட்டியலொன்றை "நீங்களும் எழுதலாம்" தயார் செய்ய விரும்புகிறது.
சஞ்சிகையாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அறிஞர்கள், வாசகர்கள் ஆகிய உங்களிடமிருந்து சஞ்சிகையின் பெயர், அதன் ஆசிரியர், வெளிவந்த இதழ்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள் ஆதாரபூர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றன. தகவல்களை "நீங்களும் எழுதலாம்" முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரைகடலோரம்**

இயற்கையின் எழிலானது
எங்கும் நிறைந்திருக்கின்றது
திரிகோண வடிவிலுள்ள மலையின்
கண்ணே
எழில் தவழும் கடலோரமெங்கும்
ஒரே நிசப்தம்
கடலோரத்தில் காற்று வாங்கலாமென
கருதிக் கலந்து கொள்வார்
கணக்கற்றோர் அன்று
கடற்கரைக்குச் சென்று விட்டால்
காவலர்கள் குறிக்குத் தப்ப முடியாது
என்று ஒதுங்கி இருப்போர் இன்று
கடல் தரிசனத்திலோ
கற்பனை சிறகடிக்கும்
கவலைகள் மறந்துவிடும்,
கணக்கற்ற மகிழ்ச்சி
அலையானது மீண்டும் மீண்டும்
கரையைத் தேடுகின்றது
மனிதர்களோ மீண்டும் மீண்டும்
முடிவைத் தேடுகின்றனர்
கரையை மனிதர்களல்
காண முடியவில்லை
கடல்தாய் தன் மக்களைக்
காப்பாற்றி வந்தாள்
கடலின் மீன் பிடித்தனர்
இத்தொழிலே
கதியென எண்ணி
கணக்கற்ற மக்கள் இருந்தனர் அன்று
கடலுக்குச் செல்லவே கடுமையாகச்
சிந்திக்கின்றார் இன்று
மீனவத் தொழிலுக்கு மிகையான
கட்டுப்பாடுகள் இன்று
காலத்தின் அறுவடையில்லாமல்
கரையேற முயலுகின்ற மீன்கள்
எவை எவை எப்போது நடக்குமோ
அவை அவை அப்போது நடக்கவில்லை
காலச்சக்கரம் சுழலுகின்றது
மனித வாழ்வின் அவலம் மட்டும்
சுழலவில்லை ஏனோ?
என்று தீரும் இந்த அவல நிலைமை
இறைவா! பதில் தருவாயோ?

**திருமதி.சரோஜா இராமநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடைசியாக...!**

உன் நினைவுகளை
அனு தினமும் சுமக்கிறேன்
மறக்க முடியாமல்
தோற்றுப் போய்!
விழித்துக் கொண்டிருப்பது
என் விழிகள் மட்டுமல்ல
மனமும் தான்
உன் நினைவுகளை
மனதுக்குப் போர்வையிட்டு
உறங்கும் அந்த
ஆழ்ந்த உறக்கத்தையாவது
கற்றுத்தந்து விட்டுப் போ
கடைசியாக சொல்கிறேன்.

**ஆர்.கே.புஸ்பராஜ்-இறக்குவானை**

◆

**உண்மை**

கொட்டில் வாழ்க்கை
கொடியேறுகின்றது - இங்கு
இரண்டாம் உகண்டா
முடி சூடுகின்றது
பானையில் சோறு
பக்கத்தில் சாவு
இலங்கையில்
ஓ... ஓ...
தெருவெல்லாம் பிணங்கள்
சுடலைக் காடெல்லாம் சனங்கள்
வேட்டை நாய்களின் வெறியாட்டமும்
காட்டு நாய்களின் ஊளையும்
சிதைந்து கிடக்கும் ஊனத்துக்காக
கோரப்பற்களை
கொடுப்புக்குள் வைத்திருக்கும்
கோரமான உலகமிது
விழிப்பாக இரு
இல்லையெனில்
ஓரினமே அழிந்து விடும்

**வே.விஜேந்திரன் - ஈச்சந்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரவு செலவு**

பசி என்ற போது
உண்ண உணவில்லை
ஆசையாக அல்ல !
அவசியமாக உடுத்த
ஆடை இல்லை!
இத்தனைக்கும் அப்பால்

ஒவ்வோரு தடவையும்
மரணித்து மரணித்து
பெற்றெடுத்த இவ்விரண்டு மகன்கள்
பட்டணத்தில்
வர்த்தகப் பிரபலங்கள்
பெண்ணொருவர் வெளிநாட்டில்
சிற்றிசன்
எண்ணிப்பார்க்கா பிள்ளைகள்
பெற்றவள் பாவக்கணக்கில்
செலவு
பிள்ளைப்பாவக்கணக்கில்
வரவு

***பிரியசகு ~ கிண்ணியா***

◆

**தெருக்குறள்**

◆ கடவுள் ஒருவரெனில் எப்பெயரில்
உருவில் அழைப்பினும் அருள் கிட்டும்
◆ அழகு அழிந்து கொண்டே இருக்கும்
ஒழுக்கம் அழகுபடுத்திக் கொண்டே
இருக்கும்
◆ அழகிகள் ஒழுங்காக வாழார்
என்பதல்ல வாழவிடார் என்பதே சரி
◆ கண்ணைத்தான் உறுத்தும் உடலின்
ஊனம் மண்ணே வெறுக்கும்
உள்ளத்தூனம்
◆ பைத்தியக்காரனும் குடிகாரனும்
ஒன்றே, அவர்க்கு
வைத்தியசாலையும் ஒன்றாதல்
நன்றே
◆ அழகால் சோறு போட முடியாது
இன்பத்தால் புகழடைய முடியாது

***சூசைஎட்வேட் ~ அன்புவழிபுரம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நலம் படுமோ ?**

நேற்றைய பொழுது
இருண்டு கிடந்தது
நேற்றைவரை நடந்தவை
காற்றுடன் கரைந்தது
இன்றைக்கு அமைதியாய்
வானம் விடிந்தது - எனினும்
புனிதம் தொலைந்தது
மனிதம் செத்தது
கரகமாடியது துவேசம்
நரகமாகியது நகரம்
சுடலைநோக்கி பாடைகள்
நிறையவே களவேள்விகள்
இனபூதங்கள் ஆடிய கூத்தினை
அரசியல் பிழைத்தோர் நன்றாய்
அரங்கில் கண்டு களித்தனர்
அதிலும் இலாபம் தேடினர்
காமினி, அப்துல், கார்த்திகேசு
கோர்த்திருந்த கைகள் தனித்தன
நாளைய பொழுதும் இப்படித்தானோ?
களம் புகுமா?
இல்லை நலம் படுமோ?

**கந்தையா ஸ்ரீகந்தவேல்**
**வவுனியா**

**புனைபெயரில் எழுதுவோர் தங்கள்**
**சொந்தப் பெயரையும்**
**குறிப்பிடுதல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனிந்த மாற்றம்**

துணையிழந்து தவித்த போது
துயர்தனைத் துடைக்கவென்று
துணிவுடன் வந்தென்னை ஆட்கொண்டு
துணிந்து செயல்படுவீர்
துணையாய் நானிருக்க
துஞ்சுவதேனெனக் கேட்டு
இன்முகம் காட்டி கனிமொழி பேசி
அன்று நீ
அன்பால் அரவணைத்தாய் என்னை
நானும்
துணையிழந்த துயர் மறந்து
உன் நிழலே தஞ்சமென
நானிருந்த வேளையிலே
யார் கண்பட்டதோ?
எவர் செய்த மாயமோ?...
உன் திடீர் மாற்றம் கண்டு
உள்ளம் குமுறுதடி
நெஞ்சம் துடிக்குதடி
உன் நினைவால் மகிழ்ந்த உள்ளம்
உன் செயலால் சோர்வதேனோ?
யாரு மறியார்
நடந்தவை யாவும்
நமக்கிடையிலன்றோ
வஞ்சியவள் வஞ்சகியான பின்
விட்டு வைப்பதும் முறையாமோ?
உள்ளம் குமுறுதடி...
நெஞ்சம் துடிக்குதடி
சூறாவளியாய் வந்துன்னை
சூழ்ந்து கொள்ளவா...
அன்றேல்
சுனாமியாய் வந்துன்னை
வாரிக்கொண்டு செல்லவா?
நீயே சொல்...

**இ.றெக்ஸ் வெண்டர்கோன்**
**கனுவாஞ்சிக்குடி**

இதழைப்பெறவிரும்புவோர்
5 ரூபா பெறுமதிகொண்டமுத்திரைகள்
ஐந்தினை அனுப்பிவைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருந்தும்**

நம் இலக்குகளுக்காய்
தாவிய தாவல்களில் நின்று
தவறிப் போனோம் !
தவறியதால்
சிதறியும் போனோம் !
எம்மில் விழுந்தவைகள் எல்லாம்
பாசிகளாயிருக்க
எப்படியெழுவது?
நிமிரத் துடிக்கின்றன
நம்மிதயங்கள்
கைகூப்பி பின் வர
அடம்பிடிக்கும் குழந்தையாய்
விரட்டுகின்றன
உங்கள் ஆதிக்கங்கள்
மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்
வாயை மூடி
அலகு வீங்கிப் போனோம்
அதரங்களுக்குள்ளே
ஆயிரம் மௌன உச்சரிப்புக்கள்
நாங்களும் எங்கள்
கனவுகளுமாய்த்தான் இப்போது
பயணித்துக் கொண்டிருக்கிறோம்
எப்போது அறுந்து போகும்
எம் கனவுகள்?
அதற்கிடையில் அவசரமாய்
விடியல்கள் தேடுகின்றோம்
எழவேண்டும் என்ற
அவாவோடு
இப்போது நாம்
வீழ்ந்து கிடப்பது
இரவில் அல்ல
உங்கள் நிழல்கள் பட்ட இருளில்
இது எங்களுக்கு
புரியாமல் இல்லை
இருந்தும் ஏங்குகிறோம்
விடியலுக்காய் !

சு.தர்ஷினி
வவுனியா கல்வி. கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாவும் குரங்கு**

அதிகாலையிலே
மதி நிறத்தினிலே - ஒரு
ரதியைக் கண்டேன்
அவள்
அழகே உருவானவள்
பிரபஞ்சத்தில்
அழகுப் பஞ்சம் அழிப்பவள்
கண்ணழகு தனி
மௌன மொழி
இடை - மதுக்கடை
அவ்வேளை
அம்மா அழைத்தாள்
போய் வந்து பார்த்தேன்

பருவப் பெண்ணாக இருந்தவள்
பருத்துப் போன மாயமென்ன
எப்பவும் அப்படித்தான்
மனித மனமும் முகிற் சிலையும்

**வி.புருஷோத்தமன்**

**எதிர்காலம்வேண்டும்**

எண்ணங்கள் நிறைவேறிட வேண்டும்
சொந்தங்கள் சேர்ந்திட வேண்டும்
புதிய சுகம் பிறக்க வேண்டும்
ஆயுத கலாசாரம் நீங்கி
ஆனந்தமாய் வாழ வேண்டும்
ஏழைகள் இல்லாது
எல்லோரும் இன்பமாய்
இருந்திட வேண்டும்
மானிடர் யாவரும் ஒன்றென
பகை நீங்கிட வேண்டும்
ஏது இடர் ? எனும்
எதிர்காலம் வேண்டும்

**கவித்தா நிஜாம்**
**கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புனிதமடையும்**

சேதி ஒன்று கேட்பீரா
செக்கிழந்த தமிழினமே!
நாதியற்று ஊர் சுற்றும்
நல்குடி பெருமகனே
வீதி வழி சென்று நீ
விடுதலைக்கு வழிசமைப்பாய்
ஆதி முதல் அந்தம் வரை
அனல் தெறிக்க கொடிபிடிப்பாய்

உச்சிவெயில் தலையினிலே
உமை வாட்டும் வேளையிலே
கச்சை கட்டி முரசறையும்
கருநாக பெருநிதிகாள்
மிச்சமிது எம்மினத்தின்
மேன்மையுள்ள கௌரவத்தை
கொச்சை பண்ண நினைத்தால்
கொடும் பகைக்கே ஆளாவீர்

குறுக்கு வழியில் வாழ்வு தேடும்
குறும்புத்தி கொண்டவரே
நறுக்காக நாம்பேசி
நல்லவழி காண்போம் பார்
பெரும் பொறுமை காப்பதை
பேதமை என்றா முடிவெடுத்தாய்?
பொறுக்க பொறுக்க எம்மினம்
புனிதமடைவதைப் பார்.

*சி.என்.துரைராஜா*

◆

| |
|---|
| களங்களை விரித்துள்ளோம்<br>ஆக்கங்களை அனுப்புங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பிடமுடியவில்லை**

நகம் வெட்டிக் கொண்டிருந்தேன்
நீ வந்தாய்
நிமிர்ந்தேன்
சறுக்கியது பிளேற்
சீறியது இரத்தம்
ஐயோ பாவம் என்றாய்
அனுதாபப்பட்டாய்
சிணுங்கினாய்
துணித்துண்டொன்றைத்
தண்ணீரில் துவட்டி வந்து
என்விரலில் சற்று
இறுக்கமாய்ச் சுற்றி விட்டாய்
ஆயினும் உன்னைப்பற்றி
எதுவுமே என்னால்
மதிப்பிட முடியவில்லை
என் நகக் கண்ணிலிருந்து
உதிரம் கொட்டிய போது
உன் அகக் கண்ணிலிருந்தும்
உதிரம் கொட்டியிருக்க வேண்டும்

**சரஸ்வதி புத்திரன்**

◆



காற்றுவெளி
இதழ் - 08
ஜுன் - 2007.

தொடர்பு
R.Mahendran
34, Red Rifferd Plaistow,
London E 130JX, UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்றுபடு**

அரக்கத்தனம் அட்டகாசம் அடக்குமுறை
அட்டூழியம்
இறுமாப்பு இரக்கமின்மை
அறிவில்லாத அடாவடித்தனம்
நீதியின்றி ஏதிலர்களாகி
நாதியற்று வீதியில்!
தமிழனாய் பிறந்ததற்கு
தரப்பட்ட தண்டனை
ஷெல்லடி, பல்குழலடி
வான் தாக்குதல், கடல் தாக்குதல்
சித்தம் கலங்கி பித்தர்களாய் சத்தமின்றி
சாகும் கொடுமை உழைப்பில்லை
ஊதியமில்லை இடும்பிச்சை ஏற்கும்
துயரம்
வேண்டாம் இந்த வாழ்வு
ஒன்றுபடு உண்டு நல்வாழ்வு

**சுந்தரி சதாசிவம் – மிருகவில்**

◆

**அறிவாயா...!**

அஸ்தமனத்தில் விடியலை
தேடும் மாந்தரே
உதயத்தில் - நீங்கள்
முட்டாள்களாக்கப்பட்டதை
ஏமாற்றப்பட்டதை
அறியவில்லையோ
வெப்பத்தில் குளிர்காய
துடிக்கும் - நீங்கள்
கார் காலத்தில்
சிதைக்கப்படுவதை
ஏன் மறந்தீர்கள்!
விதியென்று
விட்ட வழி மறந்து
மதி கெட்டு - நீங்கள்
நிற்பதேன் ?
காலம் வருமென்று
காத்திருக்கும் நீங்கள்
காலத்தினால் வஞ்சிக்கப்பட்டதை
உணர மறுப்பதேன்?

**திருமதி.அருளானந்தி விஜயராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

ரோஜாவின் நிறத்தோடும்
ஜோரான அழகோடும்
மல்லிகையின் மணத்தோடும்
மழலையின் குணத்தோடும்
முல்லையின் சிரிப்போடும்
முத்தமிழ் மூச்சின் பேச்சோடும்
வாழையின் செழிப்போடும்
நம்பிக்கை எதிர்பார்ப்போடும்
தாழையின் தரத்தோடும்
தாமரையின் தனித்தன்மையோடும்
அதிகாலை விடியலோடும்
ஆலய மணியின் ஓசையோடும்
ஆண்டவனின் கீர்த்தனையோடும்
என் அன்னையவளின் விருப்பத்தோடும்
வாழ்ந்திருக்க வாஞ்சை கொள்ளும்
வஞ்சி மகள் தேவை! வந்தால்
விளம்பரம் கண்டு வந்தால்
சுயம்வரத்திற்கான வரதட்சணைகள்
பேசித்தீர்க்கப்படும்

**திருமதி.ஜெ.றெஜினா**

◆


படிகள்
மே - யூலை 2007
இருமாத இலக்கிய இதழ்

ஆசிரியர்
எல். வஸீம் அக்ரம்




வெளியீடு
அனுராதபுர நட்சத்திர
நற்பணி மன்றம்

தொடர்பு
The Editor
78B, Jeyanthi Mw,
Anuradhapura




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிலகியபோது
உந்தன் முதலாளித்துவத்திற்குள்
முடங்கிப் போய்
மூச்சுத் திணறுகிறது
எந்தன் சமதர்மம்.
என்னால் நிமிர முடியவில்லை
முரட்டுத்தனங்களும்
மூர்க்கத் தனங்களும்
உனக்கான விலாசங்கள்.
இதுவே உன் சுயம்.
நீ காட்டியதும்
நான் நம்பியதும்
போலி முகவரி
என்பதே நிஜம்.

ஆதிக்கம் செய்வதே
தகுதியென நம்புகிறாய்
உன் விதிப்புக்களே
என் விருப்பங்களாக வேண்டுமெனில்
ஏன் என் வெறுப்புக்கள்
உன் விருப்பங்களாக?

இணங்கிப் போக
இதுவொன்றும் நியதியல்ல
சமத்துவத்துக்கு சம்மதி
அன்றேல்
மறுமணத்தை பரிசீலி!

**தி.காயத்திரி**
**வவுனியா கல்வி கல்லூரி**

| | |
|---|---|
| பயில் களம்<br>காத்திரத்தின் களம்<br>பரிசோதனைக் களம்<br>விமர்சனக் களம்<br>விளக்கக் களம்<br>கருத்தாடல் களம் | நீங்களும்<br>எழுதலாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை ஊர்களை இழந்தோம்?

வார்த்தைகளில் மௌனம் உறையும்
ஆனால் மனம் மட்டும்
ஆயிரம் வார்த்தைகளை
தனக்குள்ளே பேசிக்கொள்ளும்
பரந்த வான் வெளியில்
பனிப் போர்வையில்
பிறை நிலா தூரத்தே நின்று
துயரம் விசாரிக்கின்றது
எத்தனை ஊர்களை இழந்தோம்
நேற்றைய நாள் என் பாதங்கள்
பதிந்த என் ஊர்
கோயில் திருவிழாவில்
குதூகலித்த என் ஊர்
இன்று ஏன் சுடுகாடாய்
நாளைய கற்பனைகள்
இன்று சிதறிப் போயின
ஊரை இழந்து அகதிகளானோம்
மிதி வெடிகளில் காலை இழந்து
முடவர்களானோம்
கணவரை இழந்து விதவைகளானோம்
யாரோ வந்தார்கள்
எதையோ பேசினார்கள்
இருப்பதையும் பறிப்பதற்காக
மந்திராலோசனைகள்
இதுவும் ஒரு கருக்கலைப்பு தான்
ஊர்களோடு ஊரின் பெயர்களையும்
தொலைத்திட
எத்தனை எத்தனை தலையங்கங்களில்

நெஞ்சு வலியில் நினைவுகள் புரண்டன
ஒவ்வோரு வினாடியும்
பெருகி வழிந்தன
எனது மூலமும் மறந்து போனது
என்னை மீட்காயோ! எனக்
கதறும் என் ஊர்
எனக்கு வேண்டும்.

**ஜெ.மதிவதனி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானிடம் நோக்கிய சுயம்**

இப்படியும் அப்படியுமாய்
அலைக்கழித்தல்கள்
ஒவ்வொரு செயற்பாட்டினூடும்
தூரதிருஷ்டியற்றோரின்
விவஸ்தையற்ற அடையாளப்படுத்தல்கள்!

நிறைகள் நிறுக்கும் தராசுகளில்
குறைகள் நிறுக்கப்பட்டு
இருப்புக்கள் சார்ந்து
வேகங்கொள்ளும் ஆர்ப்பரிப்புக்கள்!

தன் மூக்குப்போனாலும் மற்றோர்க்கு
சகுனம் பிழைக்குமென்று
அவஸ்தை கொடுக்கும்
அநாகரிகத்தனங்கள்!
பற்றுக்களை பற்றி எரியவைக்கும்
பாசாங்குப் பற்றாளர்களின்
வெறித்தனங்கள்!

விரும்பியபோது தற்காத்தலுக்காய்
சமுதாயச் சாக்கடையில் பிரசவிக்கப்படும்
பல்வகை முகமூடிகள்!
தட்டியெழுப்ப முடியாதபடிக்கு
உலக கிராமம் என்ற ஆதிபத்திய
இலக்கில்
கனவு காணக் கிடைத்திருக்கும்
கற்பனை வாய்ப்புக்கள்!

களமுனைக் கொடூரத்திலும்
எண்ணிக்கைக் கணக்கில்
காட்டப்படும் ஈடுபாடுகள்
வந்தேன் கண்டேன் வென்றேன் என
வெற்றிக்கம்ப இலக்கில்
அதிகார வர்க்கத்தின் சிருஷ்டிப்பாய்
எத்தனையோ பலி பீடங்கள்!

இவற்றிடையே
என்னுள் வீறாய் எழும்
மானிடம் நோக்கிய சுயம்!

**எஸ். ஆர்.தனபாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவை 75 கண்ட கவிஞர் தாமரைத்தீவான்

**-வெயலான்-**



மூத்த கவிஞர் தாமரைத்தீவான் அவர்களது 75 ஆண்டு நிறைவையொட்டி திருகோணமலை கலை இலக்கிய நண்பர்கள் 11.08.2007ல் நகரசபை மண்டபத்தில் ஒரு பாராட்டு நிகழ்வு ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தனர். கிழக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் எஸ்.சத்தியதேவன் வரவேற்புரையாற்றினார்.எழுத்தாளர்களான யதீந்திரா, கேணிப்பித்தன், தம்பி தில்லை முகிலன், சிறப்பு விருந்தினரான நகரசபைத் தலைவர் எஸ்.கௌரிமுகுந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

கலை இலக்கிய நண்பர்கள் சார்பில் எழுத்தாளர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் நிகழ்வை நெறிப்படுத்தியதோடு ஒழுங்கமைப்பாளர் உரையினையும் ஆற்றினார். நகரசபைத் தலைவரினால் தாமரைத்தீவான் மாலையிட்டு கௌரவிக்கப்பட்டதோடு மேலதிக கல்விப்பணிப்பாளர் பாராட்டுப் பத்திரத்தினை யம் வழங்கி வைத்தார்.

**தாமரைத்தீவான் ஒரு சுருக்கக் குறிப்பு**

**முழுப் பெயர் : சோமநாதர் இராசேந்திரம்**

**புனைபெயர்** : தாமரைத்தீவான்,
கோலேந்தி, எறிகோவன்,
சுதந்திரன்,அகதிக்கவிராயர்,
சாப்பாட்டுக்கவிராயர்,
மலைப்புலவர், பொடிப்புலவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில்** : ஆசிரியர், அதிபர்
**பிறந்த திகதி** : 24.07.1932
**பிறந்த ஊர்** : தி/கிண்ணியா/ தாமரைவில் (1942இன் பின் ஈச்சந்தீவு)
**எழுத்தின் தொடக்கம்** : 1952
**வெளிவந்த நூல்கள்** : பிள்ளைமொழி, கீறல்கள், கட்டுரைப்பத்து, போரும் பெயர்வும், ஐம்பாலைம்பது, வள்ளுவர் அந்தாதி, உணர்ந்தேன் உரைத்தேன், சிறுவர் விருந்து, சோமம், எண்பாநூறு, ஐந்தொகை, இணைப்பு (அச்சில்)

பரிசுகள் : கீறல்கள் (1992) கட்டுரைப்பத்து, போரும் பெயர்வும், ஐம்பாலைம்பது, வள்ளுவர் அந்தாதி, உணர்ந்தேன், சிறுவர் விருந்து, சோமம், எண்பாநூறு, ஐந்தொகை, இணைப்பு(அச்சில்)

**பரிசுகள்** : கீறல்கள் (1992)
வ.கி.மா.சாகித்திய மண்டலம்)
வ.கி.ஆளுனர் விருது (2001)
செல்வா
மணிப்பல்லவம்
கலாபூஷணம் (2005)

பாராட்டுக்கள்: குறளமுதம் (1974)
தாகம் (1991)
முத்.வள.க.மன்றம் (1992)
தி.இந்து.இ.பே(1999)
தி.இந்துக்கல்லூரி (1999)
கந்கெத (2003)
கலை இலக்கிய
நண்பர்கள் (11.08.2007)

கவி தந்த ஏடுகள் : சர்வதேச தமிழர், தமிழ் உலகம், சுதந்திரன், வீரகேசரி, தினகரன், சுடர் ஒளி, சிந்தாமணி, சூடாமணி, தினமுரசு, தினக்கதிர், நேயம், தாகம், சிவநெறி, இன்னும் பல

**அகவை 76ல் காலடி பதித்த**
**கவிஞர் தாமரைத்தீவான் அவர்கள்**
**பல்லாண்டு காலம் வாழ்ந்து**
**நிறைந்த பணி செய்ய**
**நீங்களும் எழுதலாம் வாழ்த்துகிறது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதைகளில் முரண்**

**எனும் இயங்கியல்**

***ஒரு பிறந்த நாள் அறிக்கை***

"மக்கள் நலம் பெரிது என்பது - உன்
லட்சியம் !
ஆட்சி தருகிற பதவியில் நானா
அமர்கிறேன்
என் வடிவில் எனது
தொண்டர்கள் அமர்கிறார்கள்"
அவர்களையும்
என்னையும் - இந்த
அகிலத்தில் எந்தச் சக்தியாலும்
பிரிக்க முடியாது ... இந்தச்
சாமானியன் உயருகையில்.
அந்தத்
தொண்டர் குலமே உயர்கிறது.
அவர்களுக்குப் பசித்தால்
நான் சாப்பிடுகிறேன்.
அவர்களுக்கு வேர்த்தால்
என் வீட்டில் விசிறிகள் பதறிச் சுழலும்
நிச்சயமாக - என் தொண்டர்களும்
நானும் வேறு வேறல்ல
நான் சாகிறேன் என்பதன்முன்
அவர்கள் புதைக்கப்படுவார்கள்.

~ **தமிழன்பன்** ~

இந்த அங்கதக் கவிதை முழுவதும் கவிதைக்குத் தேவையான ஈரம் படிந்திருப்பதனால் தமிழ்ச் சமூகத்தின் அவலமிகு நிலையினையும் பதிவு செய்து விடுகிறார் கவிஞர்.

பொதுவாக ஒரு சொல்லுக்கு அர்த்தம் வந்து கூடுவதே, அந்தச் செயல் இன்னொரு சொல்லோடு கொண்டிருக்கின்ற உறவின் அடிப்படையில் தான் என்பர் மொழியியல் அறிஞர்கள். இரவு என்ற சொல்லுக்கு அர்த்தம் பகல் என்ற சொல்லைச் சார்ந்துதான் அமைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கவிதைக்கான இயக்கமும்
அர்த்தமும் பல்வேறு தளங்களில்
இப்படித்தான் அமைகின்றன: அவற்றுள்
மிக முக்கியமான அமைப்பாக
விளங்குவது "முரண்" என்ற
அமைப்பாகும். இயங்கியல் மெய்யியலில்
இந்த "முரண்" கேட்பாட்டிற்கு பெரிய
இடமுண்டு ஒவ்வொரு
பொருளுக்குள்ளும் 'முரண்' அமைந்து
இயக்கம் மேற்கொள்கிறது முரண்
அமையாவிட்டால் அங்கே இயக்கம்
சாத்தியமில்லை என்கிறது இயங்கியல்
இந்த முரண் எந்த நேரமும்
ஒன்றையொன்று எதிர்நிலையில் தான்
இயங்கவேண்டும் என்பதுமில்லை
முரண்கள் ஒத்திசைவு கொண்டு இயங்கு
கிற தளங்களும் உ ண்டு. அதே
நேரத்தில் எவ்வளவுக்கெவ்வளவு
'முரண்' முற்றுகிறதோ
அவ்வளவுக்கவ்வளவு இயக்கமும்
வேகப்படுகிறது, எனவே முரண்தான்
எல்லாவற்றிற்கும் மூல
ஊற்றாகப்படுகிறது. இருப்பவன்X
இல்லாதவன் என்பது ஒரு முரண்
அமைப்பு. இதில் இருப்பவன் இல்லாமல்
ஆகலாம். இல்லாதவன் இருப்பவன்
ஆகலாம். ஆனால் இருப்பவன் X
இல்லாதவன் என்ற அமைப்பு இல்லாமல்
போய்விடாது. எனவே முரண்களை இடம்
மாற்றிப் போடலாமே ஒழிய, முரண்களே
இல்லாமல் செய்துவிட முடியாது.
கவிதைக்குள்ளும் இப்படிப் பல்வேறு
வகையில் முரண்களைக் கட்டுவதில்
ஒரு கவிஞனின் கவிதை ஆற்றல்
வெளிப் படுகிறது.

**பேரா.க.பஞ்சாங்கம்**
**புனைவுகளும் உண்மைகளும்**
**நூலிலிருந்து...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகர் கடிதம்**

நீங்களும் எழுதலாம் இதழைப் படித்தேன் கவிதையூடாக பொதுமை உணர்வுடன் புதுமை முயற்சியாக புறப்பட்டு வந்திருக்கிறது. முதிய இளைய என்ற தலைமுறை வித்தியாசம் கவிதைக்கு இருக்கக் கூடாது கவிதை என்றும் முதிர்ந்த இளமையாக புலர்வது தான் கவிதையின் இயல்பு

***கலா விஸ்வநாதன் – கொழும்பு***

நீங்களும் எழுதலாம் இதழைப் படித்தேன் மகிழ்ச்சி. காரணம் கைக்கடக்கமான கவிதை இதழாக இருப்பது. இன்றைய சூழ்நிலையில் தங்களது முயற்சி பாராட்டுக்குரியது. வடபுலத்தே பல கவிஞர்கள் எழுதுகிறார்கள் இவ்விதழ்கள் பற்றிய தகவல்களைத் தெரியப்படுத்துங்கள் படைப்பாளிகள் வளர வழி சமையுங்கள்.

***– கே. ஆர். திருத்துவராஜா அல்வாய்.***

தங்களின் நீங்களும் எழுதலாம் மாத இதழைக்கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டேன். இதழ் வடிவமைப்பு நன்றாக உள்ளது.

***– ஆர். கே. புஸ்பராஜ் – இறக்குவானையூர்.***

தங்களது கவிதை இதழைப் படித்தேன் மகிழ்ச்சியடைந்தேன். தங்களது பணி என்றென்றும் தொடரவும் மென்மேலும் சிறப்படையவும் என் இனிய வாழ்த்துக்கள்

***–எஸ். கணேசமூர்த்தி, பெரியபோரதீவு–***

| |
|---|
| தேசிய ஆவணக் காப்பகத்தில் நீங்களும் எழுதலாம் பதியப்பெற்றுள்ளது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(And if then the tyrants dare,
Let them ride among you there,
Slash, and stab, and maim, and hew-
What they like, that let them do.

With folded arms and steady eyes
And little fear, and less surprise,
Look upon them as they slay
Till their rage has died away.

Then they will return with shame
To the place drom which they came
And the blood thus shed will speak
In hot blushes on their cheek)

**செலி**

Mask of Anarchy

**அராஜகத்தின் முகமூடி**

பின்னர் கொடுங்கோலர்கள்
துணிவுள்ளவர்களானால்
உங்கள் மீது அவர்கள் ஏறிச் செல்லட்டும்
வெட்டட்டும் குத்தட்டும்!
துணிக்கட்டும்! துண்டாக்கட்டும்
தாங்கள் விரும்பியதெல்லாம் செய்யட்டும்
மடித்துக் கட்டிய கரங்களோடும்
நிலை குலையாத கண்களோடும்
பயமற்றும் வியப்பற்றும்
அவர்களது கோபா வேசமெல்லாம்
மாய்ந்து மடியுமட்டும்.
அவர்கள் வெட்டும் சமயம்
அவர்களையே உற்று நோக்குவோம்
பின்னர்
அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ
அங்கு வெட்கத்தோடு திரும்பிச்
செல்வார்கள்
அவ்வாறு சிந்திய ரத்தம்
அவர்களது கன்னங்களில்
வெட்கத்தால் கொதிப்பேறி
செம்மையாகப் பேசக் காண்பீர்.

*தொ. மு. சி. ரகுநாதன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி - ஐப்பசி 2007

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -01 எழுத்து - 4



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்

விலை 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-04

இருமாத கவிதை இதழ்
செப்ரம்பர் - ஒக்ரோபர் 2007

ஆசிரியர்
**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

படைப்பாளிகள்
செ.சுதர்சன் ச.ஷெல்லிதாசன்
இப்னு ஏக்கப் க.கோகிலவாணி
சம்பூர்.எம்.வதனரூபன்
இ.மு.முஜுப் வி.தமிழரசி
கன்னிமுத்து வெல்லபதியான்
கோவை அன்சார் இ.ஜெ.அமாலி
ஜெயா தமிழினி
சண்முகம் சிவகுமார்
கிண்ணியா பிரோஸ்கான்
கே.எஸ்.கணேசமூர்த்தி எஸ்.குயிலி
கே.ஆர்.திருத்துவராஜா எஸ்.வசந்தன்
விஷ்வமித்திரன் கோ.தர்சினி
அலெக்ஸ் பரந்தாமன்
கே.கே.றிபாய்ஸ் ஏ.நஸ்புள்ளாஹ்
எஸ்.சத்தியதேவன்
ஜெ.ஜெயகிறிஸ்ரோ
ச.மணிசேகரன்
கலைவாசன் ஜெ.ஜெறினா
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

வடிவமைப்பு
எஸ்.யசோதரன்

அட்டைப்படம்
ஓவியர்.கே.சிறீதரன்

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
"நீங்களும் எழுதலாம்"
103/1 திருமால்வீதி, திருகோணமலை.
தொ.பே: 026 2220398.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவை புதிது பொருள் புதிதாய்...

நீங்களும் எழுதலாம் நான்காவது இதழ் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறது. நாட்டின் பல பாகங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அனைவருக்கும் களம் அமைத்துக்கொடுத்து வெற்றிகரமாக தனது பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறது இவ்விதழ்.

மனிதனிடம் பொதிந்துள்ள செயலூக்கத் தன்மையை ஊக்குவித்து வெளிக்கொணரக்கூடிய தன்மை கவிதைக்கு உண்டு.அவ்வக்கால சமூக யதார்த்தங்களை பிரதிபலிப்பனவாக பிரச்சினைகளை எடுத்துரைப்பனவாக அவை அமைகின்றன. எனவேதான் பாரதி சொன்னார் "சுவை புதிது பொருள் புதிது சோதிமிக்க நவ கவிதை என்று" இவ்வாறு கால ஓட்டத்துக்கு ஏற்ப கவிதையின் பொருளும் வடிவமும் மாறிவருகின்றன. அந்த வகையில் புதிய முயற்சிகளை தமிழ்க் கவிதை வேண்டி நிற்கிறது எனலாம். ஆகையால் புதிய முயற்சிகளை படைப்பாளிகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கான உங்கள் பங்களிப்பை "நீங்களும் எழுதலாம்" பெரிதும் வேண்டி நிற்கிறது.

நீங்களும் எழுதலாம்...
அன்புடன்
ஆசிரியர்.

---

**ஆறாவது இதழ் ஆண்டு மலராக வெளிவரவுள்ளது**
**அதற்கான கவிதை ஆக்கங்களோடு,**
**கவிதை சம்பந்தமான விடயங்களும்**
**கட்டுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மூதாதையர் பாடலும் உன் வெற்றுச்சொல்லும்

மனக் குப்பைமேட்டின்
உள்நிறைந்த வெக்கையிலிருந்து
வெளிவருகிறது....
உனது ஒ...ப்...பா...ரி..?

நீ மட்டுமே
அதைப் பாடலாக்க முனைகின்றாய்

மூன்றுதலைமுறைக்கும் முற்பட்ட
என் பாட்டியிலிருந்து அம்மா வரை
ஒப்பாரி வைத்து
ஊரைக் கூட்டினார்கள்

மரணத்தில் துயின்றவர்களின் மனிதத்தை
அவர்கள்
சொல்லாலும் நீராலும் இழைத்து
காதுக்குள் சொருகியபோது
அது பாடலாகத்தான் இருந்தது

அதில்
வலுவும் நிமிர்வும் இருந்தது
சுமந்த காற்றும் சுவாசித்தது
காற்றுக்கு கிளைகள் முளைத்துப்
பூத்துக் குலுங்கின
காற்றின் கிளைகளில் அமர்ந்த பறவைகள்
பாடலிசைக்க மறந்ததை
நீ அறிவாயா?

பாடலைப்பற்றி எதுவுமேயறியாத
என் பாட்டிமாரும் அம்மாவும்
அதைப் பாடலென்றுகூடக்
கருதியதே இல்லை

நீயோ! உனதைப்
பாடலாக்க முனைகின்றாய்
மனிதத்தைக் கொன்று
உணர்வுகளுக்கு ஒப்பனை செய்து
சொற்களின் இடத்தில் சுருக்கிட்டு
காற்றுக்கு விஷத்தீனி பருக்கி
உன்னைக் கொலைசெய்து
நீ ஆக்கியதையா பாடலென்கிறாய்?

ஒன்றை நீ உணர்வாயா?
பாடல் இயல்பானது
ஒப்பாரி இயல்பானது
இரண்டும் இல்லாத நீயும்
இயல்பானவன்தான் என்பதை.

*செ. சுதர்சன்*
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தத்தின் முகவரிகள்

பூக்களே
உங்கள் புன்னகையின்
மோகனத்தில்
நான் லயித்திருக்கிறேன்

மனித புன்னகையின் மறுபக்கத்தில்
வஞ்சனையின் வாடை அடிப்பதனால்
விடியற்பொழுதில்
உங்கள் தூய புன்னகையில்
நான் கண்விழிக்கின்றேன்

ஆயிரம் எண்ணங்களில்
உங்களை நீங்கள் அலங்கரித்துக்கொண்டாலும்
இனிமை எனும் எண்ணத் தேன் மட்டுமே
உங்கள் உதடுகளில் சுரக்கின்றது!

மனிதனுக்குள்
இனத்துக்கு நூறு வண்ணங்கள்
இனத்துக்கு நூறு எண்ணங்கள்
அந்த எண்ணங்கள்
இயற்கையின் இனிமைகளை துண்டாடி
துவம்சம் செய்கின்றன.

மனித எண்ணங்களின் இணைப்புக்கள்
கூட்டணியாகி
தமக்குள் பதவிப் பங்கீடு செய்து
தாமே முடிசூடிக்கொண்டு
மக்களின் தலைகளில்
முட் கிரீடத்தை சூடி
சிலுவையில் அறைகின்றன

உங்கள் இதழ்கள் சிந்தும்
இயற்கை நறுமணம்
செயற்கைச் சீரழிவால் ரணமான
என் இதயத்துள் நுழைந்து
ஆறாத ரணத்தினை ஆற்றி
எழுந்து நிற்க வைக்கின்றன - அதனால்
மனிதத்தை நேசிப்பதற்கு ஈடாக
உங்கள் புனிதத்தையும்
எனது இதயம் நேசிக்கின்றது.

**ஷெல்லிதாசன்**

**களங்களை விரித்துள்ளோம்**
**ஆக்கங்களை அனுப்புங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்மைப்படும் வல்லமைகள்

சில வினாடிகள் போலிருக்கிறது
மாமிசப் பட்சிணி
மண்ணில்
வரலாறு புனைந்து
பாற்குடம் துரத்தி
பட்டினி உதிர்க்கும்
நாட்களை தேடுகையில்

தொலைந்து போன
தேடல்
மரணம் விட்டெறியும்
கனவுகளும்
கழுதை போல உதைக்கும்
நமது
சரித்திரம்
முரண்கள் பொறுக்க.

உயிரை வதைத்து
சில தருணங்களில்
உடலையும் அபிஷேகம் செய்தோம்.
இன்னும்
நம்மை நோக்கிய
நீண்ட இருள்கள்
விலகுவதாய் இல்லை

புதிய மொழியின்
கர்வமாக
பௌர்ணமிகள் கூட
மற்றொரு
முகவரியில்
முத்துக் குளிப்பதாய்

திண்ணைக் கடுப்பு
இனி
தாழிட்டுக் கொள்ளும்
குப்பி விளக்கும்

எங்கள்
கூட்டுக்கு கல்லெறியாதீர்கள்
அது
கண்ணீரால் கோர்க்கப்பட்டது
அதனைச் சுற்றிய
யுகங்களும்
புழுங்கி துடிதுடித்துப் போனது
அதனால்
தொடராய்
வன்மப்படுகிறது வல்லமைகள்!

**இப்னு ஏக்கப் - கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறுபாடான முகங்கள்

நிதர்சனங்களை கேள்விக்குள்ளாக்கியவாறு
முன்னுள்ள வெளி முழுவதும்
அகப்படும் வண்ணங்களை அப்பிக்கொண்டு
காலம் தன் முகத்தை அழித்தழித்து
புதிதாய் வரைந்தபடியே உளது

அவசரத்தில் இருளையும் ஒளியையும்
கிழித்து செல்வதாக வரையப்படும் கோடுகளூடு
பயணிக்கும் நத்தையின் நகர்வொன்று தூரத்தே
தூர்ந்து புள்ளியாகித் தொலையும்

பருவத்தை மறுதலித்துப் பெய்யும்
மேகத்தை எதிர்த்தவாறு வானம் வறள...
சூனியப்பொழுதொன்றில் குருத்துவனைப்
புசிக்கும் சைவக்கழுகுகளும்
பசுமுலையுறிஞ்சும் பாம்புகளுமென
தத்தம் உயிர்தேற பிரயத்தனம் செய்வதாயுள

தூரத்தெளியும் உயிர்த்தெழும்பும்
வண்ணத்திட்டுக்கள் இராட்சதங்களாகி
முன்னோக்கி விசையோடு பயணித்து
இமையடிப்பில்...
அப்பால் கடந்து போகின்றன
எதிர்ப்புகளற்றனவாக

பின்னும்...
காத்திருப்புகள் ஏதுமற்றனவாக
காலம் தன் முகத்தை அழித்தும்
உரித்தெறிந்தும்
வண்ணமப்பி வரைந்து கொண்டே போகிறது
சிக்கலான குறுக்குக்கோடுகளால்
போலிமுகங்களை விதவிதமாக.

***சம்பூர்- எம்.வதனரூபன்***

♦

## பரிமாறல்

தினமும் சந்திக்கலாம்...
பேச்சென்பதே வேண்டாம்...
ஊசித்துவாரத்துள் நூல் நுழைவது
போன்று...
பரிமாறல்களுக்குள் ஊடுருவிப் போகலாம்...
சலனம் சப்தமிழந்து கரைய...
காதலென்பதை எப்படியும் காட்டலாம்.

***திருமதி. சு. கோகிலவாணி, – உவர்மலை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிகள்

விழிகளை மூட முடியவில்லை
கண்ணினுள் காதலியல்லவோ

இமைகள் ஒன்றுடன் ஒன்று
தழுவாமல் இமைக்கின்றனவே
ஏனென்றால்
கண்ணினுள் உள்ளவளுக்கு
வியர்த்து விடுமே என்றுதான்
விசிறிக்கொண்டிருக்கின்றன

என் விழிகள் எனக்குத் தந்த பரிசு
உன்னைக் காட்டிக்கொடுத்து
இதுதான் உன் காதலி என்று
அறிமுகப்படுத்தியதுதான்
ஒரு வேளை...
உன்னைச் சந்திக்காமலிருந்திருந்தால்,
காதலின் சுகம் என்னவென்று
தெரியாமலே என் வாழ்க்கை
முடிந்து போயிருக்கும்.

*– இ. மு. முஜீப்*
*கிண்ணியா*

## எதிர்பார்ப்பு

நின்னையே நினைக்கின்றேனடி - உன்
நினைவிலே உறங்கினேனடி
நித்தமும் நான் உன் வசமே - பெண்ணே
நீயில்லா வாழ்வேது எனக்கும் இங்கே?

வாழ்வென்று ஒன்று உண்டென்றால்
வளமுடன் வாழ்வெய்தி இவ்வுலகில்
பார் போற்றி நான் வாழ - எனக்கு
வரமொன்று நீ தர வேண்டுகின்றேன்

என் மனத்தே நின் காதல் நிலைபெறவே
உன் விழிகாண வழியமைத்து நீ தரவே
வேறில்லை ஆசை என்னகத்தே
வெண்ணிலவே வாராயோ என்னருகே!

*திருமதி. வி. தமிழரசி*
*இலிங்கநகர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகையின் கரையில்...

செம்மனச்செல்வி சொல்கிறாள்
சிவனாக மண்ணைச் சுமக்கிறோம்
வைகை பெருகி வருகுதாம்
வாழ்க்கை நெருப்பாகி இருக்குதாம்

அணைகட்ட ஆருமே இல்லையாம்
துணையாக எம்மையே அழைக்கிறாள்
துயரத்தைச் சொல்லியே அழுகிறாள்
கரம் கூப்பிக் காலிலே விழுகிறாள்

பெற்ற தாயாகவும் தெரிகிறாள்
பிறந்த மண்ணாகவும் இருக்கிறாள்
பிட்டை அவித்தவள் தருகிறாள்
பிறந்தமண் நீரையும் பருக்கிறாள்

மறக்கவோ எங்களால் முடியாது
மறுத்தாலோ மந்தையாய் ஆவோம் நாம்
மண்வெட்டி கூடையை எடுக்கிறோம்
மண்ணை அவளுக்காய்ச் சுமக்கிறோம்

நடந்ததை அறியாத மன்னனோ
நடு முதுகில் வந்தல்லோ அடிக்கிறான்
அடேய் ஏனடா எங்களுக்கடிக்கிறாய்?
அநியாயம் என்னடா செய்கிறாய்?

பிரம்பாலே அடித்தாயே நீயடி
பின்னாலே விழுந்தது உனக்கடி
முதுகினைத் தடவுகிறாய் பார்த்தாயா?
இது தன்வினை என்பதை உணர்ந்தாயா?

அரசனே அடிக்காதே அன்பு செய்
அணை கட்ட அவளுக்காய் நன்மை செய்
மண்ணைச் சுமந்தே தீருவோம்
அணையை அடைத்தே ஆகுவோம்

செம்மனச்செல்வி சொல்கிறாள்
சிவனாக மண்ணைச் சுமக்கிறோம்
வைகை பெருகி வருகுதாம்
வாழ்க்கை நெருப்பாகி இருக்குதாம்

***கன்னிமுத்து வெல்லபதியான்.***
***எருவில்.***

ஆக்கபூர்வமான கருத்துக்கள்
விமர்சனங்கள்
எதிர்பார்க்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதம் பிடித்த மதம்

மிதமிஞ்சிப்போன மதவாதத்தால்
ஓர் ஊழிக் கூத்தின் அரங்கேற்றம்.
அறையில் ஆடி அம்பலமாகிய வன்முறை
தமிழனென்றால் புலி என ஒரு கிலி.

பூனைகளை புலிகளாக்கிய சுயநலக்
கும்பல்கள்
விற்பனையான யுத்தத்தினால்
விற்க முடியா சமாதானம்
இனவாத யுத்தத்தால் காணாமல் போன
சமாதானப் புறா!
தமிழுக்கு அமுதென்று பெயர்
அந்தத் தமிழ் இன்று... மயிரிழையில்
மதத்திற்கு மதம் பிடித்ததினால்

***கோவை அன்சார்***
***கொழும்பு***

## பரிசு

காதலெனும் பாச வலையில்
கற்பதை விடுத்து - நீ
காசுக்காய் விலை போனதில்
கண்டாய் நீ - எய்ட்ஸ்

பணத்திற்காய் உறவுகளை
பகடைக்காயாய் மாற்றி
பண்பற்ற மனிதனாகையில் - உன்
பரிசு - தனிமை

உற்ற நண்பனாய் - தன்
உயிரை தரத் துணிகையில்
ஊதாரியாய் கழித்த பின்
உணர்ந்தாய் - அருமை

நன்றி கெட்டவனாக இருந்த - நீ
நல்லவனாக எண்ணும் போது
நடை கெட்டு தடியுடன்
நாட்களை எண்ணினாய் - மரணத்திற்கு

***இ.ஜெ.அமாலி***
***மன்னார்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ் காலத்துப் பூக்கள்

நான் பிறந்த போதில்
முற்றத்துச் செடியில்
பூப் பூத்திருக்கக் கூடும்
நான் இறந்துவிட்ட போதிலும் கல்லறையில்
பூ பூக்கக் கூடும்
எனது வாழ்வின் நிகழ்காலத்தில்
ஏன் பூக்கவில்லை ஒரு பூ
எனக் கேட்டேன்
நான் விழிப்பெய்தும் முன்பாக யாரோ
பறித்துப் போய் விடுகிறார்கள் என்றார்கள்
எதை? பூவையா?
அல்லது வாழ்வின் நிகழ்காலத்தையா?
இனி நான் விழித்திருக்க வேண்டும்
நிகழ்காலத்து பூக்களை யாரும்
பறித்துப் போய்விடாமல் இருப்பதற்காக!

*ஜெயா தமிழினி*
*திருமலை*

## எங்கே...?

எங்கே...
சௌந்தரியம் மிகு
வாலிப அடர் வனம்...
சொப்பனங்கள் இரையும்
துயில் வண்டு...
இதழ்கள் பூத்த
உடல் விருட்சம்...
வர்ணங்களை சப்தித்த
வயலின் இழைகள்...
அடர்ந்த அன்பைக் கொணர்ந்த
கொலுசுகளின் காற்று...
எங்கே எல்லாம்
தொலைந்தது என்றறியா
எனை மீட்கும்
ஜீவ தருவே...
நீ எங்கே...?

*சண்முகம் சிவகுமார்*
*கொட்டகலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தத்தின் பிடியில்...!

வாசலில் புதைத்து விட்டு
வன்முறைகளை பூ மாலையாய்
தலைதனில் சூடி.....

எத்தனை உயிர்கள்...
எத்தனை உறவுகள்....
எம் முன்னே ஸ்தம்பிதமாயிருக்கும்
எம் விழிகளில் காணாமலேயே....
ஆம்...! எம்தாயகம் யுத்தத்தின் பிடியில்

இப்படி எத்தனைக்கு அகதி
வாழ்தலை கண்டுகொண்டு இருப்பது
யாரோ விதைத்த இரத்தங்களுடன்

சிறகு உடைக்கப்பட்ட பறவை போல்
கனவுகளில் மட்டுமே
புன்னகையான வாழ்தல்...
நெஞ்சத்தில் வேதனைச் சுமைகள்.

அவஸ்த்தைகள்
விழிகளுக்குள் கண்ணீராய்
முகாமிட்டுக் கொள்ள
வடியும் நீர்த்துளிகளோ கவலைகள் மறந்து...

மீண்டும் நிஜத்தின் நிழலோடு
இப்படியே வெறுமையான வாழ்தல்...
தசாப்தங்களாக
தடம்புரண்ட குருதிக் காலம் மறந்து...
எப்படி நிஜமான வாழ்தலைப் பற்றி
யோசிப்பது

கனவுகளே
முட்டையிட்டு முட்டையிட்டு குஞ்சாகின்றன
எப்போது யுத்த துகள்கள் துடைத்து
நம்புதல் வளர்ப்பது

இப்படி தாயகம்
யுத்தத்தின் பிடியில சிக்கி
அவஸ்த்தைகளின் சிறையில் துவண்டிருந்தால்
எப்படி?
எம் மானிடத்தை புதுச்சுவாசம் கொண்டு
பயம் தவிர்த்து
சிவப்பாய் அழுவதை நிறுத்திவிட்டு
வெள்ளையாய் சிரிக்க வைப்பது
எப்போது..??

**ஜே. பிரோஸ்கான்-கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனே புனிதனாக

மனிதனே புனிதனாக
பூமியையும் புனிதமாக்கு...
ஓ... உன்னாலே
ஆகவேண்டிய...

பூகோள உருண்டையிலே
புதிய படைப்பு நீயே
புதுமை படைக்க வந்துவிட்டு
புழுதியிலே உருளலாமா?

கண்ணைத்திறந்து காலத்தைப் பார்...
காலடியில் உன்னைக் காத்திருக்கிறது
குழியை தோண்டியே காலம் கழித்தால்
குளிக்குள்ளிருந்து புழுக்களே தோன்றும்

மனிதநேயத்தோடு மல்லுக்கட்டி
தொலைதூரம் சென்றுவிடாதே
அது இல்லையென்றால்...?
..........................................................

ஆம் மனிதனே புனிதனாகு
அப்போது நிச்சயம்
பூமியும் புனிதமாகும்

***கே. எஸ் கணேசமூர்த்தி (சரவணன்)***
***கோவில், போரதீவு.***

## தேடற் சுகம்

நீண்ட இடைவெளியின் பின்
காலாண்டிதழ் ஒன்றின் வெளியீடு
பிரதேச மண்டபம் ஒன்றில்
நண்பனின் தகவலது.
நானும் ஒருவனாய்!
மதிப்பீட்டுரை விரிவாய் விரிந்தது
கனதி இதயத்தில் பதிந்தது
எஞ்சிய பக்கம் ஏதுமின்றி
அவ்விடமே வாசித்து முடிந்தது
அவசர உலகில்
ஏதோ ஒன்றை தேடிய திருப்தி.

***அல்வையூர் கே. ஆர். திருத்துவராஜா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்சி தேடி

கால நீட்சியிலும்
நிசப்த அலறல்களிலும்
எங்கள் சுயங்கள்
கருகிப் போயிற்று!
சொல்லத் துடித்த
வார்த்தைகள் எல்லாம்
தூர்ந்து போயிற்று!
காலப் பெருவெளியில்
நாம் கண்டு கொண்டவைகளெல்லாம்
மங்கலாய் போயிற்று!
இது வரையும்
எங்கள் தாய்மார்
உடுத்திக் கொண்டவைகள்
வெள்ளைச் சேலைகள்தான்!
ஏமாற்றங்களைக் கூட
குறைப் பிரவசமாகவே
பெற்றெடுத்திருக்கிறோம்.
அது என்ன எஸ்.எல்.எஸ். முத்திரைகள்
எங்கள் தலைகளில் மட்டும்
பெறுமதியாய்
பெருமிடிகளை
பொறித்திருக்கின்றது!
அவலங்களையும் சேர்த்து
சுமந்து நடந்ததால் குழந்தைகள் கூட
வாதம் கண்டுதான் பிறக்கின்றன
வெற்றிடங்களும் வேதனைகளும்
வாழ்க்கையாகிப் போனது
மழை இரவுகளில்
தவளைகள் கத்துவது பற்றி
யார் சிந்திக்கின்றார்கள்!
மூச்சு முட்ட
வெளியேறத் துடிக்கும்
பலூன் காற்றாய் பங்கர்கள்
"மல்ரி பரல்கள்"
இவையெல்லாம் விலத்தி
வாழத்துடிக்கின்றோம் - தெரிந்தால்
வழிவிடுங்கள்.

***எஸ். குயிலி***
***கல். கல்லூரி, வவுனியா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது...?

இது....?
பிறக்குமா
அல்லது
கற்பனைக் கருக்கட்டலா?

தகப்பன் நான்தான் - ஆனால்
பிள்ளை வேண்டாம் - சில
தலைவர்கள்!
கருவிலே கலைத்துவிட வேணுமென
கவனமாக இருக்கும் - சில
காடையர் கூட்டம்
பிறந்துவிட்டால் ஆபத்து
தாயைக் காட்டிக்கொடுக்கும்
தாய்மாமன்மார்!

பிறந்த பிள்ளைக்கு
தொட்டில் கட்டத் துடிக்கும் - சில
வெட்டி அரசியல்வாதிகள்
ஊருக்கு மட்டும்
உபதேசிக்கத் தெரிந்த
போலிச் சாமியார்களாக - சில
வல்லரசுகள்
உயிருடன் பிறக்க வேண்டுமென
உறுதியாக இருக்கும் தூதுக்குழுக்கள்!

பிறக்கும் வரை
கற்பனைக் கருக்கட்டலா
இது....???

***எஸ். வசந்தன்***

***மட்டக்களப்பு***

| |
|---|
| தனி இதழைப் பெற விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஐந்தினை அனுப்பி வைக்கவும். |
| வருட சந்தா - 150 ரூபா<br>காசுக்கட்டளையாக அனுப்பலாம்.<br>அனுப்ப வேண்டிய தபாலகம்<br>திருகோணமலை<br>முகவரி:- எஸ்.ஆர்.தனபாலசிங்கம்<br>103/1, திருமால் வீதி,<br>திருகோணமலை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம்

நித்தம் நித்தம் சத்தம்
நிகழுது இங்கே யுத்தம்
பத்துக் குண்டு பாயும்
பதறி உயிர்கள் சாயும்...!

பத்துத் திங்கள் தாங்கி
பாசக் குழந்தை வாங்கி
முத்தமிடும் வேளை
முடிக்கும் வேட்டு வாழ்வை...!

புத்தன் புகழ் பாடும்
புனித அஹிம்சை நாடு...!
சத்தம் யுத்தம் ரத்தம்
சகிக்க முடியாக் கேடு...!

குட்டி மீன்கள் வாழ்வு
குளத்தில் கேள்விக்குறியே...!
நாட்டில் மனிதன் வாழ்வும்
நாயை விடக் கீழே...!

மற்றவர் மேல் குற்றம்
வலிந்து காணும் சித்தம்...!
வெற்றி நாடும் நித்தம்
வழிந்து ஓடும் ரத்தம்...!

***விஷ்வமித்திரன்***

♦

## எஞ்சிப் போய்

கடந்த காலத்தின்
கசப்பான நினைவுகளை எண்ணி
கண்ணீர் விடுவதை விட
இனிவரும் காலத்தில் வரப்போகும்
இனிமைக்காக இமைக்காமல்
காத்திருக்கின்றோம்
காலம் தான் எம்
கண்ணீருக்கு பதில் கூறவேண்டும்
காயங்கள் பலநூறு கண்ட போதும்
அவை ஆறிவிடவில்லை இன்னும்
ஆறாத வடுக்களின் ரணமாகக் குத்துகின்றன
கண்களில் கண்ணீர்த் துளிகளில்லை
இரத்தச் சொட்டுக்கள்
மட்டுமே எஞ்சிப் போய்.....

***கோ. தர்சினி – வரோதயநகர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையற்ற வாழ்வு

பிறந்த மனிதன் வாழ்வு
புவியில் நிலையில்லாதது - முடிவில்
போகும்போது வழித்துணைக்கு
யார் வருவது; ஆசை
துறந்தவர் இவ்வுலகில்
எங்கே வாழ்கிறார் - ஆடும்
தொட்டில் பழக்கம் துறக்காமலே
இறந்து போகிறார்

பட்ட மரங்கள் கடைசிவரை
துளிர்ப்பதுமில்லை - 'கட்டை'
பளிங்குக் கல்லுள் கிடப்பினுமோ
உயிர்ப்பதுமில்லை; துயர்
கிட்ட வரும் போதிலெல்லாம்
உறவு விலகிவிடும் - தூய்மை
கெட்டு வாழும் மனிதராலே
துன்பம் பெருகிவிடும்

தனித்து வாழும் உறவுகளை
யார் தேற்றுவார் - இத்
தரணியிலே பணம் பொருளை
பலர் நாடுவார்; நல்ல
கனிவு கொண்ட மனிதராலே
உலகமியங்குது - அந்தக்
கருணை ஒன்று இருப்பதாலே
நம் வாழ்வு நகருது

***அலெக்ஸ் பரந்தாமன்***
***புதுக்குடியிருப்பு (வன்னி)***

◆

## உபாதைப் பயணம்

உறங்கிடும் வேளை
விழிகளின் விம்பங்களின் நடுவே
இரவுகளின் விநோத அவஸ்தை!
கண்கள் மூடுகையில்
காதினுள்ளே வெடிச்சத்தம்!
கண்ணினிலே இரத்தவெள்ளம்!
பாதையில் சுதந்திரமாய்
பயணம் செய்த நாட்கள்
நினைவில் இல்லை
ஒவ்வொரு நொடியும்
உபாதையின் பயணம்

***கே. கே. றிபாய்ஸ்***
***கிண்ணியா--01***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூறு பாதரட்சை ஒற்றைத் தேவை**

உதிர்ந்து விழும் ஒட்டடைகள்
அலைந்து திரியும் அங்கீகாரங்களுக்காய்
மூலதனமான நெருப்பினை நிராகரித்தபடியே
சுயம்பு என்ற எண்ணத்தில்

அதிகாரங்களை நிலை நிறுத்தும்
குறுக்கீடுகளின் குதர்க்கங்கள்
கிளறும் வெப்பத்தில் ஏற்படும் அடக்கம்
மீண்டும் மீண்டும் மேலெழ

தடம்மாறும் தண்டவாளங்களின் பயணப்பாதை
பயணிகளின் விருப்பப்படியே மாறும்
மாற்றம்பற்றி
மார்க்ஸிடம் கேட்கவேண்டும்
பூக்கோவும் தெரிதாவும் காப்பாற்றலாம்
பாதரட்சைகள் மேலாடைகள்
எல்லாம் ஏறுவதும் கழல்வதும்
தேவைக்காகத்தான்
என் பாதரட்சைக்காக எல்லாவற்றையும்
மறுதலிக்கிறேன் - எனக்காக அல்ல

எல்லார் மயிரும் அறுபடத்தான் போகிறது
மொழியால் மட்டும்தானா?
கேள்விகள் கூட
உன் மயிரைச் சிரைக்காது
பொது உடன்பாடும்
சுய தேவைக்காகத்தான் - தனித்த என்ற
பம்மாத்துக்கள் இனி தேவையில்லை
எல்லாம் ஒன்றே, எல்லாவற்றிற்கும் ஒன்றே
மறுதலிக்கப்படும்.... நூறும் ...
யாருடைய மயிரிலும்
சிறு அசைவுகூட இல்லை..
மௌனம் என்பது செயலல்ல, நடுநிலை
அடுப்புக்கட்டில் அடுத்த ஒட்டடை
உருவாக்கிறது பாதரட்சையை
தனக்காக அல்ல...

***எஸ். சத்யதேவன்***

தேசிய ஆவணக் காப்பகத்தில்
நீங்களும் எழுதலாம்
பதியப்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதான்ம வெளியின் நிலவரம்

எல்லையற்று விரிகின்ற
எனது இழப்புக்கள் பற்றி
ஏகப்பட்ட
செவ்வரிவாளின் காயங்கள்

சடவாதத்தினை
வளைத்துப் போற்றுபவர்கள்
பல நாட்கள்
ஒப்பாரிகளையும்
சில நகர்தல்களில்
எனதான்மாவின் பெருக்கங்களை
குழிதோண்டிப் புதைத்தார்கள்

இதோ
நினைத்து நினைத்து
மிகவும் பரிதாபகரமான
இரு தசாப்த வரலாறு
யுத்த யுகங்களில்

கர்ப்பிணி கனவுகளாகிப்போன - எனது
துயரப்பாடல்களை இதுவரை - அவர்கள்
சிவப்புப் பக்கங்கள் கொண்டு
வன்மம் சமைத்து
பூத நாக்குத் தள்ளி
இன்னும்...இன்னும்....

விதிமுறைகளின் நெருக்குதல்கள்
விலங்கு வாழ்தல்
போராட்டங்களின் கடும் கோடை
எங்கும் எங்கும்
மானுடத்தின் மகுடாபிஷேகம்

பிளந்து வழிவிடுமா
காலம் விரித்த
குருதிக் கறைகள்

*ஏ. நஸ்புள்ளா – கிண்ணியா.*

| | |
|---|---|
| பயில் களம்<br>காத்திரத்தின் களம்<br>பரிசோதனைக் களம்<br>விமர்சனக் களம்<br>விளக்கக் களம்<br>கருத்தாடல் களம் | நீங்களும் எழுதலாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவுவழுத நாள்

மனமெங்கும் இருள் நிறைந்து
மௌன ஆட்சி செலுத்தும்
மன நிலையில்
புகை வண்டிப் பயணம்
சமாதானத்தின்
திறவு கோலாக

எம்மை நோக்கிய
நேசப் பார்வை
எம் மக்கள் மீதான
கருணை
தேசம் மீதான பற்று
அன்பின் உபசரிப்பு
நினைவுகளை மீட்டி
விடுகிறது.

அன்பு, வீரம், கருணை, பக்தி
இவைதான் தமிழ்
அதில் நீ செல்வம் தான்.

*ச.மணிசேகரன்* 02.11.2007

## நிகழ்வின் நிஜங்கள்

இலங்கை சோசலிசக் குடியரசின்
ஜனநாயக ஆட்சியில்
இரவுபகலாய் இருட்டறையில்
நிலையற்ற வாழ்வில்
நிஜம் காண நித்தம் போராட்டங்கள்!

சித்தார்த்தா
உன்னைப்போல் - நாம்
அரச போகத்தில் பிறக்கவில்லை
மாரி கோடை காக்க
மாளிகைகள் இல்லை
துறப்பதற்கு எம்மிடம்
துரும்பு கூட இல்லை!

முடிவொன்று காண்பதற்கு
முயன்றவர்கள் பாவம்
விடியுமென வீணானது காலம்
நிகழ்வின் நிஜங்கள்
விடியல் ஆகட்டும்!
புதிய அத்தியாயம் புவியில் மலரட்டும்!

***ஜே.ஜெயகிறிஸ்ரோ***
***வவுனியா கல்லூரி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப்பயணம்

தாகம் என்பார் வாழ்வின் மீது
தாரம் என்பார் தரணி மீது
ஈமம் செல்லும் வரை பிள்ளை என்பார் -ஆவி
கூடு விட்டுப் பிரிகையிலே கூடி வருவார்
யாருமில்லை!

வேடன் தாங்கிய யாக்கையிது
வேய்ந்தவன் பிரிப்பான் அன்றோ!
வெள்ளிக் குடம் போல் ஆன்மா -அங்கு
விண்ணோடு செல்லக் காண்பீரோ!

செல்லாக் காசாகி பாடையில் போவோமே
முன்னே சென்றாரைப் பார்க்க செல்வோமே!
விட்டில்களாய் பறந்தோமே பூமியிலே
வெள்ளிகளாய் நாளை ஆவோமே
விண்ணகத்திலே!

***கலைவாசன்***
***இலிங்கநகர்.***

♦

## விட்டுக்கொடுப்பு

வீடுகளில் இல்லை விட்டுக்கொடுப்பு
வீதிகளில் இல்லை விட்டுக்கொடுப்பு
வியாபாரத்திலும் இல்லை விட்டுக்கொடுப்பு
விளையாட்டிலும் இல்லை விட்டுக்கொடுப்பு

உறவுகளிடத்திலும் இல்லை விட்டுக்கொடுப்பு
உயிர்களிடத்திலும் இல்லை விட்டுக்கொடுப்பு
கற்றாரிடத்திலும் இல்லை விட்டுக்கொடுப்பு
மற்றாரிடத்திலும் இல்லை விட்டுக்கொடுப்பு

அரசியலிலும் இல்லை விட்டுக்கொடுப்பு
அதிகாரிகளிடமும் இல்லை விட்டுக்கொடுப்பு
பார்க்கப்போனால் இவ்வுலகில் மானிடர்
எவரிடத்திலும் இல்லை விட்டுக்கொடுப்பு

***ஜெ. ஜெஹினா***
***திருமலை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிக்குமா எம் தேசம்?

புதைகுழியை நோக்கும்
எம் தேசத்து ஆன்மா.

விழிக்குமா எம் தேசம்
இனி ஒன்றுமில்லை
என்பதற்கு முன்பாக!

ஆயிரங்காலத்து
மனித விழுமியங்கள்
அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்பாக!

பரிநிர்வாண மைந்தர்களின்
பிணநிர்வாண ஊர்வலம்
புதிய விழுமியமாக
மாறும் முன்பாக!

இவர்களின் மரணத்தில்
அவர்களும்
அவர்களின் மரணத்தில்
இவர்களும்
பட்டாசு கொளுத்தி மகிழ்ந்திடும்
புதிய கலாசாரம்
வேரூன்றி விடுவதற்கு முன்பாக!

தொலைந்து போனவர்கள்
என்றொரு தொகுதி
தோன்றி விடுவதற்கு முன்பாக
அகதி என்றொரு புது இனம்
அடையாளமிடப்படுவதற்கு முன்பாக!

தொலைந்து கொண்டிருக்கும்
நிகழ்காலத்துள்
எதிர்காலமும்
புதைந்துவிடுவதற்கு முன்பாக!


பொது நலனுக்காக
வாழ்வை அர்ப்பணித்த
தியாகிகளின் ஆத்மாக்கள்
சாந்தியிழந்து
தத்தளிப்பதற்கு முன்பாக!

தமிழ் முஸ்லீம் சிங்களம்
என்றொரு மாயை கலைந்து
விழிக்குமா எம் தேசம்?

*– எஸ். ஆர். தனபாலசிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டனில் மதுரத்தமிழ் இலக்கியப் பேரவை
நிகழ்வில் பிரமுகர்களுடன்
"நீங்களும் எழுதலாம்" ஆசிரியர்
படப்பிடிப்பு: எஸ்.ராமதாஸ்

அட்டன் நகரில் இயங்கும் மதுரத் தமிழ் இலக்கியப் பேரவை 25.10.2007 இல் பௌர்ணமி நிகழ்வாக சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் சிறுகதை அரங்கை நடாத்தியது இதில் புதுமைப்பித்தன் நூற்றாண்டு நினைவாக சிறுகதைப் போட்டியினை நடாத்திய எழுத்தாளரும் "கொழுந்து" சஞ்சிகை ஆசிரியருமான அந்தனி ஜீவா தொடக்க உரையினை ஆற்றினார். பேரவைத்தலைவர் பாலா சங்குப்பிள்ளையின் தலைமையில் கவிஞர் சு.முரளிதரன் நிகழ்வை நெறிப்படுத்தினார். எழுத்தாளர்களான மு.சிவலிங்கம், தி.இரா.கோபாலன், மொழிவரதன், திருமதி.ஏ.நஜீமா சித்திக், சாரல்நாடன் வெலிமடைமகாலிங்கம் திரு.பொன்னுத்துரை, திரு.ராமச்சந்திரன், மாரிமகேந்திரன் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் மற்றும் பல பிரமுகர்களும் இளம் எழுத்தாளர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் செயலாளர் மாரிமுத்து சிவகுமாரின் நன்றி உரையுடன் நிறைவுற்ற இந்நிகழ்வு ஆக்கபூர்வமானதாக அமைந்தது.

புனை பெயரில் எழுதுவோர் தங்கள் சொந்தப் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சுவைத்திரள் உலக நகைச்சுவை ஏடு**

28 வது பிரதி அப்போது வெளிவந்து விட்டது சிரித்திரனின் பின்பு வெளிவரும் தரமான நகைச்சுவை ஏடு. உலகமெங்கும் பவனி வருகின்றது இப்போது! இந்த இதழில்---- பாலா சங்குப்பிள்ளை எழுதிய சிரிகதை, நாட்டுக்கருடன் பதில்கள், மதுராஜன் போதனைகள், முகம் காட்டா முத்தம்மா, விஸ்கி அடிகள், குறைகூறிக் குசேலர், கலைவாணர் நகைச்சுவை, மூக்கண்ணா போதனைகள் என்பன இடம் பெறுகின்றன. தனிப்பிரதி தேவையானோர் ரூபா100 முத்திரை அனுப்புக.

ஆசிரியர்
திக்கவயல் தர்மு
28/5,அம்பாள் லேன், மட்டக்களப்பு



**வடம்**

**கவிதைக்கான**

**காலாண்டு இதழ்**

இரத்தினபுரி மாவட்டத்தின் காவத்தையிலிருந்து குயில்தோப்பு கலை இலக்கிய ஒன்றியத்தினால் வெளியிடப்படும் வடம் பா.மகேந்திரன், இரா.நெல்சன், வே.தினகரன் ஆகியோரை ஆசிரியர் குழுவாகக் கொண்டு சிறந்த முறையில் வெளிவருகிறது.
தொடர்பு: வடம், 04, பிரதான வீதி, காவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையும் தத்துவமும்

அரசியலையும் தத்துவத்தையும் இலக்கியத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டும் என்று கூறுபவர்கள் கூக்குரல் எழுப்புபவர்கள் உண்மையில் தமக்குப் பிடிக்காத தத்துவங்களையே தடுத்துநிறுத்த விரும்புகின்றனர். தமது வாதத்துக்கு வழித்துணையாகத் கலையழகின் முக்கியத்துவம் என்ற கருத்தை முன்கொண்டு செல்கின்றனர். உற்று நோக்கும் போது இவர்களது கூற்று வெறும் பாசாங்கு போலி நடிப்புமே என்பது தெளிவாகும். கலையின் பெயரால் கலைக்கே உலை வைப்பவர்கள் அவர்கள். ஆகவே கவிதைக்கு தத்துவம் பகை என்ற பசப்பு மொழி எம்மைத் தடுத்து நிறுத்தக் கூடாது. தத்துவத்தை தொடாப் பொருளாக்கி உணர்ச்சி நலன் என்ற மாயையை கவிதை தவிசில் ஏற்றி வைப்போர், இறுதியில் அர்த்தமற்ற சொப்பனாவஸ்த்தைப் புலம்பல்களையும் தமது சொந்த மனக் குமுறல்களையும் சொற்சிலம்பம் ஆடுவதிலேயே சுகம் காண்கின்றனர். கண்மூடித்தனமான கலை வாதம் யதார்த்தத்தில் கலையின் மறுதலிப்பு ஆகும்.

பேராசிரியர்.க.கைலாசபதி

**(கவிதையும் தத்துவமும்-கட்டுரையிலிருந்து)**

## கலை கலைக்காகவா?

பிற தொழில்களோ, சாதாரன மனிதனைப் பொறுத்தவரையில் (ஞானிகள் அல்ல) சமூகப் பொருளாதார சட்டங்களின் செல்வாக்கு உட்பட்டவையாக இருக்கின்றன. கலை மட்டும்தான் அந்த ஓட்டங்களுக்கு அப்பால் செல்ல முயல்கின்றது. சமயத்துக்கு அடுத்த படியாக கலையே அவற்றைத் தாண்டிச் செல்ல முயல்கின்றது அதனால்தான் சமயத்தை விரும்பாத சாதாரண மனிதனும் அறிவாளிகளும் கலையில் தங்களை மறந்துவிடுகின்றனர். சமயத்துக்கு அடுத்தபடியாக கலையே மனதை இழக்கவும் மனதைத் தாண்டவும் அதிகமாக உதவுகிறுது.

“கலை கலைக்காக” என்ற கோட்பாட்டின் அர்த்தத்தை இங்குதான் பார்க்க வேண்டும்

மு.தளையசிங்கம்

(போர்ப்பறை என்னும் நூலிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

"நீங்களும் எழுதலாம்" கவிதை இதழ் கண்டு மகிழ்ந்தேன் நல்ல முயற்சி. தொடரட்டும் உங்கள் இலக்கியப் பணி.

***பேராசிரியர். இரா. சிவசந்திரன்***
**யாழ். பல்கலைக்கழகம்**

தங்கள் மூன்றாவது இதழைப் பார்வையிட்டேன், படித்தேன், நல்ல முயற்சி. தமிழ்க் கவிதையின் வரலாற்றில் தங்கள் பணி நிச்சயம் பேசப்படும். எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

***க. சின்னராசா – அல்வாய்***

"நீங்களும் எழுதலாம்" நிறையப்பேரை தூண்டிக்கொண்டிருப்பதை உணரமுடிகிறது. இது காலத்துக்கேற்ற கவிதை இதழ். நாட்டின் நாற்றிசையிலிருந்தும் நாலாபேரும் எழுதட்டும். அதற்கு இவ்விதழ் வழி பல சமைக்கட்டும்.

***கன்னிமுத்து வெல்லபதியான் – கருவில்***

முதல் இரண்டு கவிதை இதழ்களைப் படித்தேன். தோற்றத்தில் வாமணன் போல இருந்தாலும் அடுத்த இதழ்களில் விஸ்வரூபம் எடுப்பதற்கான அடித்தளம் பலகள விரிவாக்கத்தின் மூலம் இடப்பட்டுள்ளது. பிரசுரமான கவிதை களைப் படித்தபோது நாளடைவில் நீங்களும் எழுதலாம் கவிதைத் துறையில் தவிர்க்க முடியாத இடத்தினை என்ற நம்பிக்கை உண்டாகிறது. அதிக படைப்பாளிகள் கைகோர்த்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது

***வதிரி. இரா. இராஜேஸ்கண்ணன்***

"நீங்களும் எழுதலாம்" இதழில்(1-5) தடம்பதித்தோரின் புகைப்படங்களை ஆண்டு மலரில் பிரசுரிக்கவுள்ளோம். படைப்பாளிகளே Passport அளவிலான புகைப்படங்களை அனுப்பி வையுங்கள்

-26-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் பெயர்ப்பும்

கவிதையின் பிரதான கூறுகளில் ஒன்று உருவாக அணியாகும். உருவகம் என்பது தூலமான யதார்த்தம் பற்றிய உயிரோட்டமுள்ள சித்திரிப்பாகும் ஒரு பொருளை அல்லது இயக்கத்தை வேறொரு பொருள் அல்லது இயக்கத்தின் அடிப்படையில் சித்திரிப்பதன் மூலம் உருவாக்கப்படும் படிமமாகும். இதனை விளக்கும் வகையிலும் மூலத்துடன் பெயர்ப்பை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய வகையிலும் மூலக் கவிதையும் மொழிபெயர்ப்பும் தரப்படுகின்றன.

When I do count the clock
that tells the time,
And I see the brave they sung
in hideous night:
When I behold the violet
past prime
And sable curls
all silver"d o"er with white:

நேரத்தைச்சொல்லும் கடிகார முள்ளின்
ஓட்டத்தைக் காண்கையில்
கவர்ச்சியான பகற்பொழுது
அருவருப்பான இரவுக்குள்
மூழ்கடிக்கப்படுவதை பார்க்கையில்
வயலெட் மலர் வாடி உதிர்வதை,
கன்னங்கரேலென்ற சுருள் முடியில்
வெள்ளி முலாம்
பூசப்படுவதைக் காண்கையில்

When lofty trees;
Isee barren of leaves,
Which erst from
heat did canopy the herd
And summer's green,
All girded up in sheaves,
Born on the bier
With white and bridtly beard;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யிலில் மந்தைகளுக்கு குடைபிடித்த
நெடுதுயர் மரங்கள் இலையுதிர்ந்து
மொட்டையாக நிற்பதை,
கோடைகால பசுந்தானியங்கள்
முதிர்ந்த தானியக்கதிர்களாய்
குத்தும் முடிகள் கொண்ட தாடியுடன்
பாடையில் தூக்கிச் செல்லப்படுவதை
காண்கையில்

Then of thy beauty
do I question make,
That thou among
the wastes of time must go,
Since sweet and
beauties do themself forsake,
And I as fast as
they see others grow,

அழகே! காலம் வேண்டாம் என
கழித்து தள்ளுபவற்றில்
நீயும் ஒன்றாகி விடுவாயோ எனும்
ஐயம் எழுகிறது ஏனெனில்
இனிமையானவையும் அன்பானவையும்
விட்டு விலகி மற்றவை வளரத்
தாம் மாய்கின்றனவே

And nothing, gainst Time's
sey the can make defence
Save breed, to brave him
when he takes thee hence

காலதேவனின் அரிவாளுக்கு எதிராகத்
தற்காப்பு ஏதுமில்லை
உன் வம்சத்தை தவிர- அதுவொன்றே
துணிவுடன் எதிர்த்து நிற்கும்
அவன் உன்னைக் கவ்வ வருகையில்

(கடிகாரம் மொட்டை மரம், வெள்ளி முலாம்,
அரிவாள் போன்ற உருவங்கள்
ஊடாக திருமணம் வம்சவிருத்தி பற்றிய
கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.)

*மூலம் :– ஷேக்ஸ்பியர்*
*மொழிபெயர்ப்பு : எஸ். வி. இராஜதுரை*

ISSN - 3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை – மார்கழி 2007

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -01 எழுத்து – 5



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்

விலை 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-05

**இருமாத கவிதை இதழ்**

நவம்பர்-டிசம்பர்-**2007**

**ஆசிரியர்**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

- எம்.ரி.எம்.யுஸீனுஸ்
- சி.என்.துரைராஜா
- கலா விஸ்வநாதன்
- கௌரி மோகன தர்சினி
- ச.மணிசேகரன்
- க.யோகானந்தன்
- திருமதி.அ.விஜயராஜ்
- என்.சந்திரசேகரன்
- கவிதாநிஜாம்
- இ.இராஜேஸ்கண்ணன்
- வி.ஜெயகாந்தன்
- க.அன்பழகன்
- தாமரைத்தீவான்
- சூசை எட்வேட்
- வி.ஸ்ரீகாந்
- எஸ்.சத்தியதேவன்
- ஞானா யோகேஸ்வரன்
- எம்.எச்.அகமட் ரூமி
- செ.சுதர்சன்
- சே.கணேசன்
- ப.துலாந்தி
- க.சின்னராஜன்
- அன்பரசி
- எம்.வதனரூபன்
- வே.சசிகலா
- தி.காயத்திரி
- சி.டிரோசினி
- சண்முகம் சிவகுமார்

**வடிவமைப்பு**

எஸ்.யசோதரன்

**அட்டைப்படம்**

ஓவியர்.கே.சிறிதரன்

**தொடர்புகளுக்கு**

"நீங்களும் எழுதலாம்"
103/1, திருமால்வீதி,
திருகோணமலை.
தொ.பே: 026 2220398



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித வர்க்கமும் படைப்பாற்றலும்

ஐந்தாவது இதழில் அடியெடுத்து வைத்திருக்கும் நீங்களும் எழுதலாம் அடுத்த இதழை ஓர் ஆண்டு நிறைவு குறித்து ஆண்டு சிறப்பிதழாக வெளியிடவுள்ளது என்பதை அறியத்தருவதில் பெருமிதமடைகிறது. வாசகர்களினதும், படைப்பாளிகளினதும், ஊடகங்களினதும் ஆதரவே இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும். ஈழத்தில் ஒரு பருவ இதழை வெளியிடுவதென்பது எத்துணை கடினமான காரியமென்பது அனைவரும் அறிந்ததே. எனவே, உங்கள் அனைவரினதும் ஆதரவு மென்மேலும் வேண்டப்படுகிறது.

நவீனத்தின் நன்மைகள் ஒரு புறம். மறுபுறம் மனிதனிடமுள்ள படைப்பாற்றலை ஒட்ட உறிஞ்சி அவனை வெறும் நுகர்வோனாக மட்டுமே ஆக்கிவிடுமளவிற்கு இன்றைய தொலைக்காட்சி - கணினியுகம் அமைந்து விட்டது. படைப்பாற்றலே மனிதனிடமுள்ள மாபெரும் சக்தி. எனவே அவனிடமுள்ள படைப்பாற்றலை வெளிக்கொணர களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையொன்று உண்டு.

அந்த வகையில் படைப்பாற்றலைத் தூண்டி மனித வாழ்வுபற்றிய புரிதலை ஏற்படுத்துவதில் இன, மத, பிரதேச எல்லைகளைத் தாண்டி தலைமுறை இடைவெளிகளை நீக்கி நீங்களும் எழுதலாம் தன் பணியினைத் தொடர்ந்து கொண்டிருக்கும்.

**நீங்களும் எழுதலாம்.........**

**அன்புடன்**

**ஆசிரியர்**

**ஆறாவது இதழ் ஓராண்டு சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. அதற்கான கவிதை ஆக்கங்களோடு கவிதை சம்பந்தமான விடயங்களும்(கட்டுரை)எதிர்பார்க்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதி 'எயிட்ஸ்'...!

எங்களின் தேச மண்ணில்
மனிதாபிமான மழலைகள்
மரித்துவிட்டன....!

சுதந்திர தேவதை
மானமிழந்ததால்
தொல்லைப் பிணிகளை
எல்லை மீறவைக்கும்
வில்லைகள் விற்பனையாகின்றன

இன்று எங்கள் தேசத்தில்
யதார்த்தங்கள்
யாசிக்கின்றன....!

சாதி "எயிட்ஸ்"
எங்கள் தேசத்திலும் பரவியதால்
சடலங்கள் அதிகரித்துவிட்டன.....!

வேதனைத் தாரகைகள்
எங்கள் விடிவானிலிருந்து
அக்கினிக் கட்டிகளாய் விழுகின்றன....!

இன்னலிசைகள்
எங்களின் இதயக் கஸட்டில்
இடை விடாது ஒலிப்பதால்
என்றும் இடுக்கனில்....!

எங்கள் உறவுகளெல்லாம்
உறவுகளை ஊனமாக்கியதால்
ஊற்றெடுக்கும் உணர்வுச்சுனைகள்
அவர்களால்
அணைபோடப்படுகின்றன...!

இரவுகளும் தனிமையிழந்து
விடிவிற்காய்
வேதனை இருளை
ஆகமமாய்
அணிந்து கொள்கின்றன....!

**எம்.ரி.எம். யூனுஸ்**
**காத்தான்குடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மை

மூடிய கதவு, மூடிய யன்னல்
இருண்ட அறைக்குள்
இருண்ட வரிகள் இணைந்ததில்
ஹைக்கூ கவிதையொன்று
என் கருவில் உருவெடுத்தது

மகளாய், சகோதரியாய்,
தோழியாய், காதலியாய்
காலங்களும் உறவுகளும்
பட்டங்கள் பல கொடுத்தாலும்
மனைவியாய் மலர்ந்த போது
அவள் எனக்குள் நுழைந்த போது
விட்டுச்சென்ற இரத்த துளிகள்
பாரினில் புதுக்கவிதையாய்
என்னை வரைந்தது!

நீ உதைத்ததைவிட
அவள் வேகமாய் உதைக்கிறாள்
தடவிப்பார்க்கிறேன்
உன்னைப்போல்
அவனும் உரசிப்பார்க்கிறான்
தாயின் அருமையை உணர்கிறேன்
தாயின் பெருமையை
அடைகிறேன்

***எம்.எச்.அகமட் நீமி***
***பேருவல.***

## எண்ணிப்பார்

இருள் சூழ்ந்த நாடு
இடர் அகலா நாடு
பஞ்சம் சூழும் நாடு
பாதகர் வாழும் நாடு
கஞ்சிக்கும் வழியில்லா நாடு
கானகமாய் போகும் நாட்கள்
குறைவில்லா இன்ப நாட்கள்
கொஞ்சி மகிழ்ந்த நாட்கள்
கெஞ்சினாலும் வருமா நாட்கள்
கேடுகெட்ட மனிதா எண்ணிப்பார்

***சி.என்.துரைராஜா***

களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலை தலைகுனிதல்

காற்று நிலத்தில் கால் பதிக்கும்
காலையின் வரவு எப்போதாவது நிகழும்

எல்லாக் காலைகள் போலவும்
அந்தக் காலை இருக்காது

நிலவுமுகம் சுமந்து
நட்சத்திரப் பூக்களோடும்
முகிற் பட்டுக்களோடும்
அந்தக் காலை பவனி வரும்

அதனை வரவேற்கக் காத்திருக்கும்
நிம்மதிக் கோடுகளால்
நிறங்கள் கலந்த கோலங்கள் கீறி
எனது தேசம்

வீரர்கள் விரைந்த வீதிகளில்
ஒளிவிரித்துச் செல்லும்
வாழ்வின் நெடிய வீதியில்
இருள் பதுங்கிய முடக்குகள் சிரிக்க
காலை ஒன்றின்
எல்லாச் சாத்தியங்களையும் சுமந்து
ஆக்குதலைச் செய்யும்
அழிவின் முகவரி அறியாது
அந்தக் காலை

ஆயினும் என்ன?
விதைக்கப்பட்டவர்களின் வளவுக்குள்
செல்லும் ஒவ்வொரு தடவையும்
மனிதன் வீரனாகி
வீரன் விதையான வரலாற்றை
வாசிக்கும்
கண்ணீர் வடிக்கும்,
ஒளி நிறைத்துச் சென்ற வரலாற்றின் முன்
ஒளி குன்றி,
அந்தக் காலையும்
வெட்கித் தலை குனியும்.

*செ. சுதர்சன்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

**புனைபெயரில் எழுதுவோர்**
**தங்கள் சொந்தப் பெயரையும்**
**குறிப்பிடுதல் வேண்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னொரு சொர்க்கம்

மேலான இன ஆளுமையின்
மிகையான உச்ச அடக்குமுறையால்
போர் சுனாமி
ஓயாது வீசும் தீவில்.

வாழ்தலில் அழிதலாய்
சிறுபான்மை இனக் கனவுகள்
நித்திரையில் யுத்தத் தொடராய்...

வாழும் வயதுகள் போராளிகளாய்
களமுனையில் வியூகமிடும்
சூழும் ஆக்கிரமிப்புப் படைகள்
மேலும் துன்பியல் நிகழ்வாய்

மொழிதலிலும் வணங்குதலிலும்
வேறான இன அடையாளம்
சக மனிதனைப் பிரிக்கும்....

"ஆசையை விடு அன்பாய் இரு"
கௌதம புத்தரின்
கனிவான போதனைகள்
அதிகார வர்க்கத்தின்
இதயத்தில் இடம் பிடியாது
ஆணவ இருளில்
ஆசைமிகுந்து போலி நடிப்பாகும்

அசோகனின் ஆட்சி நிழல்
மீட்சியுறும் போதே,
இன்னொரு சொர்க்கமாய்
இலங்கைத் தீவு
உலகப் பந்தில் உயிர் காக்கும்

*கலாவிஸ்வநாதன்*

## ஏக்கம்

நாங்கள்
கல்யாணச் சந்தையிலே மதிப்பிழந்து
விலை போகாத சரக்குகள்

ஆலயத்தில் அர்ச்சிக்கப்படாத
தாழம்பூக்கள்

தனமுள்ளவர்களின் கழுகுப் பார்வைக்குத்
தென்படும் அழகு தேவதைகள்

என்றோ ஒரு நாள்
"சீதனம்" என்ற விலங்கொடிந்தால்
எங்கள் கழுத்துகளும்
மணமாலை சுமக்கும்

*கௌரி மோகனதர்சினி*
*ஆலங்கேணி கிழக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதி நனைந்த அலரிகள்....

மரணங்களின் ஓலம்
திக்கெங்கிலும்....
மௌனமே....
கருணையாய் பெருக
ஆலமர்ந்த கடவுள்
பூஜைக்கு....
கொணர்ந்த அலரிகள்....
தமிழரின் குருதி நனைந்தவை....

வாழ்வின் வண்ணம்
வெளுத்த பின்....
அடையாளங்கள் தெரிவிக்க
ஏது மிச்சம் வைத்தனர்....
ஆலமர்ந்த கடவுளின் மகன்கள்...

வலிகள்....
நகரும் வெளியில்
நிறுத்தி....
ஆற்றுப்படுத்த முன்வரும்
சகோதரன்....இனந்தெரிந்து வீசப்பட்டிருக்கிறான்...
ஆலமர்ந்த கடவுளின் பீடமெங்கும்
பிண நாற்றம்....
ஓ.... ஆலமர்ந்தவரே
எம் இருப்பு முழுதும்
உம் பிள்ளைகளின்
அதிகாரம் கொலை புரிகின்றது....

ஓ.... என் கருணை கூர்ந்தவரே
எம் மல்லிகைகள்
வெடிக்கும் அவசியங்களையும்
ஏற்றுக் கொள்வீரா...
புத்தம்... ஓம்... சரணம்... நம...
கச்சாமி... சிவாய...
எம் நாடு சுடுகாடாய் மாற
அருள்வீர்களாக...

*சண்முகம் சிவகுமார்,*
*கொட்டகலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைந்து போன வாழ்வு

இயற்கையை அடக்கும்
வல்லமை படைத்தவர்கள்
தமது வாழ் நாளிலே
விடிவிற்காய்...
காத்திருக்கின்றார்கள்

விண்ணைக் கையால் தொடும்
வல்லமை கொண்ட தமிழர்
வதங்கி வாடிய படியே
இதயத்தைக் கூட தாங்கமுடியாது
அகதி முகாமிலே...
புழுதியோடு புழுதியாய்
முகவரி தொலைந்து கிடக்கிறார்கள்

பள்ளியிலும், பாதையிலும்
புள்ளி மான்களாய்த் துள்ளிய
மழலைக் கூட்டங்கள்
பசியின் கொடிய வக்கிரத்தால்
புழுவைப் போல
தெருவிலே நெளிகிறார்கள்

நம்பிக்கையைத் தொலைத்தபடி
ஒளியிழந்த குருட்டு விழிகள்
வறட்சி முகத்திலே
வெறும் புள்ளிகளாய்...
பாலைவனப் பார்வைகள்

வேலைக்கு சென்றவர்கள்
வேரறுந்த விருட்சங்களாய்
குடும்ப ஆணி வேர்களை
உசுப்பிய படியே...
உறங்கிப் போகிறார்கள்

தேசக் கொடிகள் பறக்கும் போது
தொப்பூழ்க் கொடிகள்
அறுந்து தொலைகின்றன
சமுதாயச் சந்தையிலே
இரப்பவர்கள் எல்லாம்
மண்ணைத் தொலைத்தவர்கள்

உதய காலத்திலே
இதயத்தை இறுக்கியபடியே
முழு நீளக் கனவுகள்
தொலைந்த வாழ்வை
தேடிய படியே மீண்டும் வரும்

***க. யோகானந்தன்***
***திருமலை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணறிய சொல்லிவிடு**

ஒவ்வொரு தடவையும்
நீயென்னைத் தாண்டிச் செல்ல
என்னுள்ளே ஏதோவொரு
பதகளிப்பு

உன் பார்வைகள் என்னை
ஆழ ஊடுருவி
வதைப்பதாய் உணர்கிறேன்
ஜீவனைத் தேடுகிறாயா?

உன் மீது எனக்கு உள்ளது
பாசமா? நட்பா? காதலா?
எதுவுமே தெரியவில்லை
காரணத்தைக் கண்டறிய
புத்தகங்களை புரட்டினேன்

ஓமோன்களின் சுரப்பு என்று
விஞ்ஞானம் விளக்கியது
எதிர்பாற் கவர்ச்சி என்று
தத்துவம் குத்தியது
அன்பின் இணைப்பு என்று
அடி மனசு சொல்லியது
குற்ற உணர்வு என்னை
வெகுவாக குழப்பியது

உனக்கேதும் தெரியுமென்றால்
உண்மையான காரணத்தை
என் கண்ணறிய சொல்லிவிடு
யுகங்கள் ஆகின்றன
என் நிமிடங்கள்.

*தி. காயத்திரி*
*வவுனியா தே. கல்லூரி*

**தெருக்குறள்**

மனைவிக்கு அணிகலன்கள் கொடுத்துக்
-கொண்டேயிருந்தால்
கணவனை வீடே வாழ்த்திக்கொண்டிருக்கும்.

---

தாய்க்கும் காட்டா நிர்வாணத்தை
-சீதனம் கேட்கும்
அறிமுகமில்லா நாய்க்கு காட்டுவதோ.

---

அறிவுக் குறைவை அவனே அறியா
-நிலையே
ஆபத்தான நிலையாகும்.

*சூசை எட்வேட்- அன்புவழிபுரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ கவிதைகள்

நாளைகளின் நாளைக்காய்
நப்பாசைகள்
மனித மனம்

அற்ப சீவனுள்ளும்
அழகிய சிற்பம்
புற்று

வரியில் மட்டுமா மொழி?
ஒலி இல்லாதும் மொழி
விழிகள்

நிதர்சனமில்லை
நேற்றைய தீர்ப்புகளுக்கு
'கட்சி தாவல்'

பூமித்தாயுக்கா பொறுமை
யார் சொன்னது?
'பூகம்பம்'

மற்றவர்களுக்காய்
மகுடம் சூடியது
'சாக்கடை'

புது பூமி புலர்வதாய்
ஓர் புளகாங்கிதம்
புது வருடம்

இன்னும் எங்களில்
ஸ்பரிசிக்கப்படாதது
எதிர்காலம்

மனித வியர்வை
மழையுடன் யுத்தம்
பாட்டாளி வியர்வை

நாம் யாவரும் வேறுபட்டவர்
மனிதரில்
கையில் இரேகைகள்

*என். சந்திரசேகரன்*
*இரத்தோட்டை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தத்தின் பிடியில்...!

கறுப்பு யூலை அன்றும் எம் மனதில்
நெருப்பாய் எரிய
சமாதானத் துணுக்கு
விடுகதையாய் நீள்கிறது

அன்று எரிந்த சாம்பலில் இருந்து
பீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுந்த
இனத்துவ விழிப்பு
இதயத்துடிப்பாய் தமிழரின் ஓலத்தை
முரசறைகிறது ஓயாது ஓசையாய்

கனன்று கொண்டு இருக்கும்
உணர்வுகள் மனிதாபிமானத்தால்
இன்னும் இறுகிப் போய் கிடக்க

மிலேச்சத் தனத்தின் வீரிய புருஷர்
அழிந்தொழிந்து போயினும்
விம்பப் பிரதியாய் நீண்டு நிலைக்கும்
அவலங்கள் கொடு முடியாய் நிற்க

அரசியல் சாணக்கிய வீராங்கனை
மன்னிப்புக் கேட்கும் மகுடசுந்தரி
சந்ததிப் புணர்ச்சியில் உருவான
வெஞ்சினப் பட்சி
ஏதோ சூழ்நிலை திருகுதாளம்
கொப்பளிக்க மன்னிப்புக் கேட்கும்
பசப்பு வார்த்தைகள்
இன்னொரு அழிப்புக்கு
ஒத்திகையா?
இது கொஞ்சம் உதைக்கிறது
மனதின் காயத்தைக் பிய்க்கிறது
சந்தேகம் நீண்டு உருக்கொள்ள

எப்படி மறப்பது என்ற விசும்பல்
ஒவ்வொரு உறவுக்குள்ளும் கேள்வி எழுப்ப
தொடர் சங்கிலியாய் இன்னும்
தமிழர் மனங்களில்
இறுகி நிற்கிறது கறுப்பு யூலை.

*க. அன்புழகன்*

## திருத்தம்

என் இதயத் தோட்டத்திலே
ரோஜாக்களை பயிரிட்டதற்கு பதிலாய்
கல்வியை பயிரிட்டிருந்தால்
உன்னை அறுவடைக்கு
அழைத்திருக்க தேவையுமில்லை
நீ அரிவாளுடன் வந்திருக்க தேவையுமில்லை
அறியாத வயதில் பிழையாக எழுதியதை
அறிந்த வயதில்
சரியாக எழுதுகிறேன்

*வே. சசிகலா -வரோதயநகர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலர்வுகள்

நகரும் முண்டங்களை விடவும்
நகராத பிண்டங்களே
பார்வையைத் திருப்புகின்றன
வழி முழுவதும்
நாய்கள் இழுத்துவரும்
அழுகல்களின் மீதிகளை
தேடிச் சுமக்கின்றனர்
மிஞ்சியவர்கள்

இமையடிக்கும் ஒவ்வொரு
இடை வெளியிலும்
சாவுக்காக நேரமொதுக்கி
எல்லா நடைப் பிணங்களும்
அதற்கான வரவேற்புகளுடன்
நகர்கின்றன

தனித்தவொன்றான
பிரக்ஞை ஏதுமற்ற
வன்மங்களின் சுடுதல்களை
வழிமொழிந்து ஆதரித்து
இன்னுமொரு நாளுக்கான
இருத்தல் உறுதி பெறுகின்றது

கவடுகளுக்கிடையே தலைசெருகி
வானை இகழ்ந்து
தம் பற்களை தாமே இடித்துச் சப்பி
வலிய நகங்களை
பிடுங்கி எறிந்து விட்டு
இறைச்சியாக மட்டுமேயான
விரல்களில் ரத்தம் கசிய

முன்னுள்ளவர்களின்
முதுகு சொறிந்து தடவ
முடிந்தோரின் வாழ்தலுக்கான
தகமைகளோடேயே புலர்கிறது
ஒவ்வொரு
சூரிய சந்திர புலர்வும்

*–சம்பூர் எம். வதனரூபன்–*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிப்பினை**

நிர்வாணம் விரும்பிய
புத்தன் சொன்னான்
"வாயில்லா ஜீவனை
வதைத்திடல் பாவம்
வையகத்தோரே
கொல்லாமை சீலம்"

மனிதன் வகுத்த
சட்டம் சொன்னது:
"ஆடொன்று பார்க்க
மற்றொன்றை வெட்டல்
சீலம் அதுவல்ல
சிறை படுவீர்!"
'இருப்பை' விரும்பிய
மனிதன் சொன்னான்:
"நாலு பேர் பார்க்க
நடுத்தெருவில் சுடு
படிப்பினையாகட்டும்
நெறியுடன் வாழட்டும்!!"

மனிதனைப் படைத்தவன்
மன்றாடிக் கேட்டான்:
"அறியாமல் செய்தேன் பாவி
ஆண்டவரே
மன்னிப்பீரா?"

*இ. இராஜேஸ்கண்ணன் – வதிரி*

**உன்னையே நீ உணர்ந்துகொள்**

துயரச்சிலுவை சுமப்பது உன் விதியல்ல
தூக்கியெறி அதை
பயம் வேண்டாம் பக்கத்தில் நடப்பதை
ஒரு கணம் பார்த்து நட

ஆளுமைகளை அடக்கி வைத்து...
வேதனைகளை தினம் சுமந்து...
விழிநீர் உகுப்பதை இனி விடு
பரந்துபட்ட பூமிப்பந்தில்
சமத்துவமாய் நீயிருக்க
உன் சந்ததி சீரோடு வாழ
உன்னையே நீ உணர்ந்துகொள்
அப்போ உன்னை
தரிசிக்கத் தொடங்கும் உலகம்

*அன்பரசி – புதுக்குடியிருப்பு (வன்னி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இழப்பதற்கு**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன் தோன்றிய மூத்த தமிழ்
முற்றமிழந்து முடி கவிழ்ந்து
அடிமையுற்று அல்லலுற்று
அவதிப்படுகிறது

யுத்த வரம்பில் நிம்மதிகளை
வாந்தியெடுத்துவிட்டு
கதியற்றவர்களாக தமிழர்கள்

பண்பாட்டு தமிழருக்கு
வாழ்வு கொடுத்த
பாமர மக்களிங்கு
கண்ணீரோடு நலன்புரி நிலையத்தில்

தந்தையும் தாயும்
தடவிக்கொடுத்த மண்
அண்ணனும் அக்காவும்
'அ' எழுத
இடம் கொடுத்த மண்
பாவம் மட்டும் விளையும் பூமியில்

ஊனமாக்கப்பட்ட உயிரோடு
இன்னல் இடுக்குகளில்
பரிதாப வாழ்வு
வாழும் மக்களுக்கு
இனியும் போர் என்றால்

***வி. ஜெயகாந்தன்***
***சம்பூர்***

தனி இதழைப் பெற விரும்புவோர் 5ரூபா பெறுமதியான முத்திரைகள் ஐந்தினை அனுப்பி வைக்கவும்.

வருட சந்தா -150 ரூபா
காசுக்கட்டளையாக அனுப்பலாம்
அனுப்ப வேண்டிய தபாலகம் ,
திருகோணமலை
முகவரி:எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
103/,திருமால் வீதி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோனத் தவம்

மாரியம்மன் கோயிலிலே
கொடியேற்றப் பெருவிழா
இனிப் பக்தியோடு பத்து நாளும்
பகலிரவுத் திருவிழா
தேவாரம் பாடுதற்கும்
தேர்தலில் நிற்க வேண்டும்
ஊஞ்சற் பாட்டு பாட
உபயகாரன் வரவேண்டும்
கழுதைக் குரலென்றாலும்
கற்கண்டாய் இனிக்குதென்று
கட்டியம் கூறவேண்டும்
அபிஷேகம் அலங்காரம்
ஆராதனை அத்தனையும்
அந்தமாதிரி நடைபெற
அர்ச்சகரை அனுதினமும்
பந்தம் பிடிக்க வேண்டும்
அவர் திருப்தி சொல்லும்வரை
தட்சணைகள் வழங்க வேண்டும்

தேர்த் திருவிழாவுற்கு
நாடறிந்த வித்துவான்கள்
நாலு கூட்டு மேளம் வரும்
தீர்த்தத்திருவிழாவுக்குத்
திக்கெட்டும் புகழ் பரப்பும்
ஐந்து கூட்டு மேளம்
ஆலயத்தில் வந்திறங்கும்
மங்கள வாத்தியங்கள்
இசை மழையில் மூழ்கடிக்கும்
உபயகாரர் மனங்களில்
போட்டி மனப்பான்மை
முரசடிக்கும்
வேதங்கள் ஆகமங்கள்
விதிமுறைகள் இருந்தாலும்
எஜமானின் மனங்களில்
ஊற்றெடுக்கும் புதிய வேதங்களே
ஆலயத்தில் அரங்கேறும்
ஆன்மீக உணர்வுகளோ
அடக்கமாக அமர்ந்திருக்கும்
ஆதிக்கம் அலங்காரம்
ஆட்சியிலே கொலுவிருக்கும்
ஆண்டவனோ நிஷ்டையிலே
மோனத் தவமிருக்கும்

*வட அல்வை, க. சின்னராஜன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமாதானம் மலருமென்றால்

விடிவான ஒரு விடியலை நோக்கி
வித்தியாசமான ஒரு வேள்விக்காக
வீரர்கள் போடும் வெற்றி நடை

அன்று இரக்க பூமி
இன்று இரத்த பூமியாகியது
மங்கல ஓசைகள் மனங்குமுறும்
அமங்கல ஒலிகளாயின
பணத்துக்காய் பிணம் எண்ணும்
மனிதப்புழுக்கள் மண்ணுக்கு உரமாக
ஆயிரம் விருட்சங்கள் புத்துயிர்ப்போடு
புது யுகம் நோக்கி எழ
புனிதப் பயணத்தின் இறுதிப்பாகம்

இன்றைய நூற்றாண்டா - அல்லது
இனிவரும் ஆண்டுகளா
விடியலற்ற இந்த இருட்டைக் கண்டு
மனித இனம் மார்தட்டி அழும் வேளை
உணவாக இவள்
சிவப்புப்பால் வடிக்கின்றாள்
ஒவ்வொரு தாயினதும்
இந்த வேண்டுகோளுக்கான

இறுதி விண்ணப்பம்
சமாதானம் மலர - நாங்கள்
செய்யும் இறுதித் தியாகம்
இதுவாக இருக்கட்டும்

மார்முலைகள் செம்பால் சுரக்கட்டும்
சமாதானம் மலருமென்றால்...........

***துஷாந்தி பரமநாதன் –திருமலை.***

### புதைத்துவிடு

சீ! சீ! வெட்கம் அழகிய மானிட
சீதனம் சீதனம் என்று நீ சீரழிவதேன்
பசுமை விட்டு எரிமலை அருகே
நெருங்குகிறாய் எதற்கு
நீ
குப்பைத்தொட்டியில் உறங்க நினைத்தால்
சாக்கடையில் குளிக்க விரும்பினால்
விஷக்கிருமியை சுவாசிக்க விரும்பினால்
யாருமென்ன செய்ய....
ஆறறிவுள்ளவன் என்பதுண்மையானால்
உன் அழுக்குப்புத்தியை
ஆழமான குழியில் புதைத்துவிடு

***கவித்தா நிஜாம் –கிண்ணியா.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழிந்தே போகும்

ஆண் வலுக்குறையவில்லை!
வீண் சடங்கோயவில்லை!
பூண் நகைபோகவில்லை!
தீண்டாமை நகரவில்லை!

அரிவை முன்னேறவில்லை!
வேள்விகள் நீங்கவில்லை!
புதுமைகள் பூக்கவில்லை!
சீதனம் ஒழியவில்லை!

சிந்தனைக்கல்வி இல்லை!
செந்தமிழ் வளரவில்லை!
வந்தனை ஒன்றில் இல்லை!
முந்தையோர் நினைவும் இல்லை!

சிறப்பு நூல் வாசிப்பில்லை!
திருமணக் காதல் இல்லை!
வாழ்விலே சைவம் இல்லை!
முயற்சியில் ஊக்கம் இல்லை!

சீர்திருத்தங்கள் இல்லை!
பார்-அதம், இராம காதை!
நேர் உரையாடல் இல்லை!
பேர் பெற வாழ்வதில்லை!

திருக்குறள் ஆய்வுமில்லை!
படிப்பதை விடவுமில்லை!
நெஞ்சிலே தூய்மை இல்லை!
பெண்மையை மதிப்பதில்லை!

ஆழமாய்ப் பார்ப்பதில்லை!
வீழுவோர் கண்டு மற்றோர்!
பாழு 'சாதிச்சா' வில்லை!
வாழுமா தமிழினந்தான்?

அகலமாய் நினைப்பதில்லை!
வேதனை கொள்வதில்லை!
பண்பாட்டுக் காப்புமில்லை!
வளருமா- அழிந்தே போகும்!

*'தாமரைத்தீவான்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணத்தின் பாடு

சிந்தனைகளின் சிற்பியாய்
சிறகடிக்கும் எண்ணத்தில்
உதித்த வார்த்தைகள்
கனவின் நிஜமாய்
நிழலுக்கே அர்ப்பணம்

வார்த்தை ஜாலங்கள்
வாதத்துக்கு ஆகுமே!
விதிவிட்ட வழியில்
தேயுமே எண்ணங்கள்

நாளை விடியலில்
வாசலில் மலருமென்ற
கற்பனையின் மலர்கள்
காற்றாய் கரையுமே
காலங் காலமாய்
உள்ளத்தின் உணர்வினை
மதித்தது யாரிங்கு?

புள்ளி வைத்த கோலத்தில்
கோடுகள் மட்டுமே
காட்சியின் பிரதிபலிப்பு

சிந்தனைகள் சிறகடித்து
சிகரத்தை தொட
முயன்றது யார்?
முயலாமையின் மூச்சடைத்து
புறங்கண்டதோ!

வண்ணக் கலவையில்
வர்ணத்தை பிரிக்கும்
முரண்பாடுகளின்
தோற்றம்தான் யாதோ?

மனத் தடாகத்தில்
மதவேழம் புகுந்து
மனக்கருத்தை
விரட்டியதோ!!

**திருமதி.அருளானந்தி விஜயராஜ்**
**அன்புவழிபுரம்**

| | |
|---|---|
| பயில்களம்<br>காத்திரத்தின் களம்<br>பரிசோதனைக்களம்<br>விமர்சனக்களம்<br>விளக்கக்களம்<br>கருத்தாடல்க்களம் | **நீங்களும் எழுதலாம்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்றும் இன்றும்

கூடிக்குலாவி
மகிழ்ந்திருந்தோம் அன்று
உறவுகளை இழந்து
தவிக்கின்றோம் இன்று
பட்டாசு வெடித்து
களித்தோம் அன்று
பட்டாசு வெடிக்கே
ஓடி ஒழித்தோம் இன்று!
உணவும் உறையுளும்
இருந்தது அன்று
ஆனால் பசியோ
பிணியோ உடலில்லை
பசியுமுண்டு பிணியுமுண்டு இன்று
ஆனால் உணவும்
உறையுளும் இல்லையின்று
தாய் நாடே தஞ்சம்
என்றோம் அன்று
தாய்நாட்டைவிட்டே
ஓடுகின்றோம் இன்று
உறவுடன் ஒட்டி
வாழ்ந்தோம் அன்று
சிதறி தவிக்க
வேண்டியுள்ளது இன்று.

*சி. டிரோசினி*
*திருமலை.*

### பாழ் பட்டு....

சாதி சாதி என்று
போர் முழக்கமிடும் இந்த மண்ணில்
பாதி பாதியாக உடல்கள்
அங்குமிங்கும சிதைந்தபடி.......
பறையறையும் பக்கங்கள்
தம்முள மக்களின்
அவல ஓலங்களையே
ஓதியபடி ஒலித்தோய்கிறது

சொத்துக்களை சூறையாடி சொந்தங்களை
விழுங்கிவிட்ட சுனாமியின் வடுக்கள்
மறைந்தாலும்...........
இந்தப் பாவம் நிறைந்த பூமியில்
செயற்கைக் கோலங்களால் அனைத்தும்
பாழ்பட்டுக்கிடக்கின்றன.

*சம்பூர் வி. ஸ்ரீகாந்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்களூர்**

**ஒன்று**

ஆடு குட்டி ஈனும்
மரம் குட்டி போடும்
மனிதன்.................

அவை இறக்கின்றன
நிலம் குட்டி போடா
ஆனாலும்...............
இறக்கின்றன
எங்களூர்

**இரண்டு**

நிலத்திற்காய்
அப்பப்போ
கிளர்ச்சி கொள்வர்
.........................
.........................
கணப்பொழுதில்
அது
மறைந்து போகும்
.........................
.........................
தொலைபேசிகள்
அலரும்
...........
கணக்கு வழக்கில்
நட்டம்தான்

*ச. மணிசேகரன் 2000 – 2007*

********************************

பெரும்பான்மையின் துக்கம்
சிறுபான்மையின் சமாதானம்
கொடி வெள்ளை
**

அர்ச்சகர் பிழைப்பு
அடியவர் உயிர்ப்பு
அர்ச்சனை
**

ஏழையின் நிர்ப்பந்தம்
பணமியின் சுரண்டல்
சீதனம்

***செல்லக்குட்டி கணேசன் –அல்வாய்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுமாறும் தலைகள்

கால ஓட்டத்தின் வேகம்
புரட்டுகின்றது கண நேர முடிவையும்
ஏதிலிகளாய் எல்லோரும்
இடம்பெயர்க்கப்படுகின்றனர்

உணர்வுகளின் ஒலி கூட
அர்த்த மாறுபாடுகளாய்.......
திசை தெரியாது பயணத்தில்
அவரவர் தமக்கு முன்னான
பாதையில்................

மாற்றம்...மாற்றம்...
மாற்றம்...மாற்றம் மட்டுமே
முடிவாக பயணங்கள்
நடக்கின்றன.

எதிர்ப்படும் எல்லாம்
இடைஞ்சல்களாக அவசரமாக
அகற்றப்படுகின்றன

கணநேர நிரந்தரமின்மையால்
மொத்தமானதாக கருதப்படும்
தலைகளும் தடுமாறுகின்றன
பயணம் மட்டும் முடிந்தபாடில்லை.

*எஸ். சத்யதேவன்*

## வெளிச்சம்

புத்தன் யேசு காந்திபிதா
சொன்னதென்ன
உயிர்க்கொலை வேண்டாம்
பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட பை
ஆட்டிவைப்பவன் வாயுபகவான்!
பகவானைத் தாக்குவதால்
மானிடரே நடமாடும் தெய்வங்கள்.
பகுத்தறிவிருந்தும் பாரபட்சம்
பல இனங்கள் வாழ்தலன்றோ
உலகச் சமநிலை
ஒரு மொழி தாழ
மறுமொழி உயரும் வழிகளால்
**இங்கே ஆனதென்ன?**
**இனியேனும் வருமோ வெளிச்சம்**

*ஞானா யோகேஸ்வரன் –திருமலை*

**தேசிய ஆவணக் காப்பகத்தில் நீங்களும் எழுதலாம் பதியப்பட்டுள்ளது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகக் குறிப்பு

### கலா விஸ்வநாதனின் 'மனித ஏணிகள்'

'தான் சார்ந்து இருக்கும் சமூகத்தைப்பற்றி தனக்கு வாய்த்த கலை இலக்கிய உருவத்தின் மூலம் ஆத்ம சுத்தத்துடன் தன்னை வெளிப்படுத்தும் எந்தவொரு படைப்பாளியும் வரவேற்கப்பட வேண்டியவனும், கணிக்கப்பட வேண்டியவனுமாவான்.' என தொகுப்பின் முன்னுரையில் மேமன்கவி குறிப்பிட்டது போல மனித ஏணிகள் மலையக மக்களின் துன்பதுயரங்களை அவலம் நிறைந்த வாழ்வை வெளிக்கொணர்கிறதெனலாம். 'முல்லோயா கோவிந்தன் முதல் பத்தனை சிவனு இலட்சுமணன் வரை உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்' என்ற கலாவிஸ்வநாதனின் வரிகள் மலையக மக்களின் போராட்டத்தின் குரலாக ஒலிக்கிறது. அந்த வகையில் மனித ஏணிகள் ஊடாக கலாவிஸ்வநாதன் மலையக இலக்கியத்துறையில் கால்பதித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

### மயில்வாகனம் திலகராஜனின் மல்லியப்பூ சந்தி

ஒரு சமூக செயற்பாட்டளராகவும் பத்தி எழுத்தாளராகவும் விளங்கும் திலகரின் மல்லியப்பூ சந்தி முற்றிலும் ஒரு வித்தியாசமான ஒரு கவிதைத் தொகுப்பு வித்தியாசமான வடிவமைப்பு. கவிதையோடு கவிதை தோன்றிய களச்சூழ்நிலைக்குறிப்பு இடம்பெறுவது சிறப்பு. ஆழமான பார்வை, வீரியமான வரிகள்.

'ஒன்றை நான் நிச்சயம் உணர்கிறேன் திலகராஜனின் கவிதைகள் கிளறி விடும் நம்பிக்கை வரண்டுபோன சோகம் இயலாமை ஆகியவற்றின் ஊடே தமிழ்க்கவிதையில் இன்னும் கொண்டு வரப்படாத மலையகத்தின் மானுடச் சோகங்களின் ஆழத்தை உணர்கிறேன்' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்னுரையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

தொகுப்பு: பாக்கியா பதிப்பகம்
05, 2வது ரோகிணி ஒழுங்கை
கொழும்பு-11

அறிமுகக்குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பி வையுங்கள்.2007ற்கு முன் வெளியானவை அறிமுகக் குறிப்பில் இடம்பெற மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயலகத் தமிழ் இலக்கியம்

அனபுள்ளம் கொண்டவர்களே. வணக்கம்

டிசம்பர் முதல் வாரம் தமிழகத்தில் திருச்சியில் தூயவளனார் கல்லூரியில் நடைபெற்ற "அயலகத் தமிழர் வாழ்வும் இலக்கியமும்" என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் நானும் நண்பர் ரா.நித்தியானந்தனும் கலந்துகொண்டோம். அதன் பின்னர் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சி.சுப்ரமணியம் அவர்களின் அழைப்பின் பேரில் அயல்நாட்டிலிருந்து வந்த அனைவரும் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்துக்கு சென்றிருந்தோம். அங்கு நடைபெற்ற இலக்கிய சந்திப்பின்போது அயலகத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை சேகரித்து வைக்கும்படியும் அது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டேன்.

அப்பொழுது பதிலளித்த துணைவேந்தர் தமிழ்ப்பல்கலைக்கழக நூலகத்தில் அயலக தமிழ் இலக்கிய பிரிவொன்றை அமைப்பதாக வாக்குறுதி அளித்ததுடன் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தமிழ் இலக்கிய நூல்களை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதிமொழி அளித்ததுடன் அங்கு இயங்கிவரும் வெளிநாட்டவரின் தமிழ்மொழிப்பிரிவை. தமிழ் இலக்கிய பிரிவாக மாற்றி அமைப்பதாகவும் அப்பிரிவிற்கு பொறுப்பான தலைவர் முனைவர் கார்த்திகேயன் அவர்களிடம் எங்கள் முன்னிலையில் அறிவித்தார். அத்துடன் வெளிநாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் தங்களின் நூல்களை அனுப்பிவைத்தால்தான் அயலகத்தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்யமுடியும் என்றார்.

அயல்நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் முனைவர் கார்த்திகேயன் அவர்களுக்கு தங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளை அனுப்பி வைக்க வேண்டும். அவர் அதனை தமிழ்ப்பல்கலைக்கழக நூலகரிடம் ஒப்படைப்பார்.

நூல்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

Dr.A.Karthikeyan, Pro & Head
Dept of Tamil Studies in Foreign Countries
Tamil University, Tanjauvr 613010
South India.

நூல்களை அனுப்பிவைக்கும் எழுத்தாளர்கள் அதுபற்றிய விபரங்களை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| ***இவ்வண்ணம்,*** | **த.பெ.இல.32,** |
| ***தோழமையுடன்,*** | **கண்டி,** |
| ***அந்தனி ஜீவா.*** | **ஸ்ரீலங்கா.** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகர் கடிதம்**

நெருக்கடி மிக்க வாழ்வும்,மன உழைச்சலும் அதிகரித்திருக்கும் காலமிது. அத்துடன் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு உடனடியாக சென்று திரும்பி வர முடியாத சூழலில் எமது வாழ்க்கைப்பயணம் தொடர்கிறது. இந்த நிலைமையில் எழுத்துக்களால் எழுத்தாளர்களை இணைப்பதும் அவர்களிடமிருந்து படைப்புக்களைப் பெற்று இதழ் ஒன்றை வெளியிடுவதும் இலகுவான காரியம் அன்று. இத்தகைய அரும்பணியை ஆற்றிவரும் ஆசிரியருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

*இ. நித்தியானந்தன்*
பண்பாட்டு அலுவலர் -வவுனியா

சின்னச் குழந்தையொன்று
என்னருகே வந்தது
புன்னகை பூத்தது
புதுமுகம் காட்டியது
கவிதை கொணர்ந்தேன்
கண்களால் சிரித்தனள்
குறும்புடன் கூறினள்
கவிதை மலரை கண்களில் ஒற்றினேன்
படித்தேன் பாராட்ட வார்த்தையில்லை.

*மிருகவில் சுந்தரி சதாசிவம் – கனடா*

"நீங்களும் எழுதலாம்"
தமிழ் பேசும் மக்களின்
இதயத்தில் கசிகின்ற
இரத்த துளிகளை
ஒற்றிக் காட்டும் வெள்ளைப் பஞ்சு
தமிழ் உள்ளங்களை பற்றிக் கொண்ட
அக்கினிக் குஞ்சு
காட்டுத் தீயாய்
உன் கவிதைகள் பரவ
என் வாழ்த்துக்கள்.

*எஸ். வசந்தன்* – மட்டக்களப்பு

"நீங்களும் எழுதலாம்" இதழில் (1-5)தடம் பதித்தோரின் புகைப்படங்களை ஆண்டு சிறப்பிதழில் (6வது இதழ்) பிரசுரிக்க உள்ளோம். படைப்பாளிகளே Passport அளவிலான புகைப்படங்களை அனுப்பிவையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JUST SOCIETY

You burned the buildings
and put me prison
You threw the infants into fire
and called me inhuman
You murderd in open day light
and blamed me for wanting blood
You turned my neighbour into a refugee
and said I am responsible
You looted his hard-earned property
and called me a thief
You imprisoned him and killed him
and named me a brute
You be friended thugs and I the victims
but you made me the accused.

I who was grieved
at my school mate
my neigbour, my friend,
my guru and fellow worker,
when he died, when he went into hiding,
when he fled to escape the mob,
suddenly departed to other lands
empty handed-I, who cried holding his hand
at the Harbour bidding him farewell,
am now to bear this insult.

You say it's peace
when you put the blame on the innocent
You say it's stabillity
when you protect culprits
You say it's honesty
when you hide the reports
and hush the inquiries.
spread falsehood among the nations
having a laugh at a restless nation.
divided and wounded.

ஆக்க பூர்வமான கருத்துக்கள்
விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You sleep well
but I cannot sleep
You eat well
I have lost all appetite
You have friends
I have lost mine.

You think you are successful
I know, wounds of defeat
will live with me long
and the memory
of this insult.

*நீதியான சமுதாயம்*

நீ கட்டடங்களை எரித்தாய்
ஆனால் என்னை சிறையுள் தள்ளினாய்
நீ அவர்களுடைய குழந்தகளை
நெருப்புக்குள் வீசினாய்
ஆனால் என்னை மனிதத் தன்மை
அற்றவன் என்றாய்
நீ பட்டப் பகலில் கொலை புரிந்தாய்
ஆனால் என்னை இரத்த வெறியன்
என்றாய்
நீ அயலவனை அகதியாக்கினாய்
ஆனால் அதற்கு நான் பொறுப்பு என்றாய்
நீ அவன் பாடுபட்டு சேர்த்த சொத்தைச்
சூறையாடினாய்
ஆனால் என்னைக் கள்ளன் என்றாய்
நீ அவனை சிறையிட்டுக் கொன்றாய்
ஆனால் எனக்கு மிருகம் எனறு
பட்டம் சூட்டினாய்
நீ காடையர்களுடன் உறவாடினாய்
நானோ பாதிக்கப்பட்டவர்களுடன்
நட்புப் பூண்டேன்
ஆனால் நீயென்னை குற்றவாளி
ஆக்கினாய்.
என் பள்ளித் தோழனும்
என் நண்பனும் அயலானும்
என் குருவும் சகபாடியும்
செத்த போதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்தும் கும்பலுக்குத்
தப்பியோடிய போதோ
வெறுங் கையோடு
நாட்டைவிட்டு ஓடிய போதோ
நானே துக்கித்தேன்
துறைமுகத்தில் அவர்கள்
கையைப்பற்றியபடி
நானே அழுதேன்
அப்பாவிகள் மீது
பழியைப் போட்டுக்கொண்டு
சமாதானம் என்கிறாய்
குற்றவாளிகளைப் பாதுகாத்துக்கொண்டு
ஸ்திரத்தன்மை என்கிறாய்
அறிக்கைகளை மறைத்துவிட்டு
நேர்மை என்கிறாய்
விசாரணைகளை மூடுமந்திரமாக்கிக்
கொண்டு
வெளிநாடுகளிடையே பொய்ப்பிரசாரம்
செய்தபடி
நீ எள்ளி நகையாடுகிறாய்

நீ அயர்ந்து தூங்கிறாய்
எனக்கு உறக்கம் வருகுதில்லை
உனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள்
நான் நண்பர்களை இழந்துவிட்டேன்
நீ வென்றுவிட்டதாக கருதுகிறாய்
ஆனால்
தோல்வியின் வடுக்களோடும்
அவமதிப்பின் ஞாபகங்களோடும்
நான் வாழ வேண்டியவன் என்பது
எனக்குத் தெரியும்.

*மூலம் (ஆங்கிலத்தில்):*

*பஸில் பெர்னான்டோ*

*மொழிபெயர்ப்பு - சே.பத்மநாதன் (சே.ப)*

பஸில் பெர்னான்டோ இலங்கைப்
பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றவர்
நான்கு கவிதைத் தொகுதிகள்
வெளியிட்டுள்ளார். சிங்களத்திலும்
ஆங்கிலத்திலும் எழுதுபவர் - நீதியான
சமுதாயம் 1984 இல் சிறந்த
கவிதையாக பரிசு பெற்றது.

ISBN 1800 - 3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்

## ஓராண்டுச் சிறப்பிதழ்

தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி

ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

2008
பங்குனி



கவிதை இதழ் - 06

விலை 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்

## ஓராண்டுச் சிறப்பிதழ்

தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி

ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

2008
பங்குனி



**கவிதை இதழ் - 06**

விலை 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்

**ஓராண்டுச் சிறப்பிதழ் - 2008 பங்குனி**

**ஆசிரியர்**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

| படைப்பாளிகள் | கவிதைகள் |
|---|---|
| சபா.ஜெயராசா | அ.கௌரிதாசன் |
| க.யோகானந்தன் | கன்னிமுத்து |
| சண்முகம் சிவகுமார் | - வெல்லபதியான் |
| இ.எல்.விமலராணி | ஏ.நஸ்புள்ளாஹ் |
| க.அன்பழகன் | ஜெயா தமிழினி |
| வி.கௌரிசங்கர் | சி.மார்க்கண்டு |
| என்.சந்திரசேகரன் | திக்கவயல் தர்மு |
| ஜே.பிரோஸ்கான் | தி.காயத்திரி |
| கே.ஆர்.திருத்துவராஜா | இ.ஜே.அமாலி |
| க.சின்னராஜன் | அலெக்ஸ் பரந்தாமன் |
| புசல்லாவை கணபதி | எம்.ரி.எம்.யூனுஸ் |
| ஷெல்லிதாசன் | ஏ.எம்.எம்.அலி |
| ந.விஜயலிங்கம் | எம்.வதனரூபன் |
| கலா.விஸ்வநாதன் | சி.என்.துரைராஜா |
| சிபான் மொஹமட் - | சூசை எட்வேட் |
| ஆசாத் | ச.மணிசேகரன் |
| பெரிய ஐங்கரன் | ஆர்த்திகா |
| ம.கம்ஷி | - விஜயலிங்கம் |
| எஸ்.சத்யதேவன் | சூ.யுவன் |
| எஸ்.ஆர்.தனபாலசிங்கம் | சோ.ப. (மொழி பெயர்ப்பு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை சம்பந்தமான**

பாரதி ஒரு பார்வைக் குறிப்பு
- திருவேணி சங்கமம்

கவிதையின் பணி - ந.பார்த்திபன்

"நீங்களும் எழுதலாம் சில குறிப்புக்கள்"
- கலாநிதி செ.யோகராசா

கருத்தாடற்களம்
கற்றால் வருமோ கவித்துவம்?
மலையகக் கவிதைகள்
- ஓர் அவசரக் குறிப்பு
- அந்தனி ஜீவா

கவிதை அன்றும் இன்றும்
- தாமரைத்தீவான்

அறிமுகக் குறிப்பு
வாசகர் கடிதம்
மூலமும் தமிழாக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்

**06**

**ஓராண்டுச் சிறப்பிதழ்**
**- 2008 பங்குனி -**

**ஆசிரியர்**
**எஸ்ஆர்.தனபாலசிங்கம்**

**அட்டைப்படம்**
**வி.பகலவன்**

**வடிவமைப்பு**
**சி.யசோதரன்**

**தொடர்பு :**
**ஆசிரியர்**
**'நீங்களும் எழுதலாம்'**
**103/1, திருமால் வீதி,**
**திருகோணமலை.**

**தொ.பே: 026 2220398**

**படைப்புக்களில் வரும்**
**கருத்துக்களுக்கு**
**படைப்பாளிகளே பொறுப்பாளிகள்.**
**படைப்பினை செவ்வைப்படுத்த**
**ஆசிரியருக்கு உரிமையுண்டு**

**இருமாத கவிதை இதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பயன்பாட்டை உச்சப்படுத்துவதை நோக்கி

என்றுமே கண்டிராத பணவீக்கத்தினால் (24%) நாடு சோர்ந்து போயுள்ளது. போர், மரணபயம் ஒருபுறம், விலைவாசி உயர்வு மறுபுறம் என பல்வேறு பிரச்சனைகளால் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நெருக்கடிகளுக்கிடையே 'நீங்களும் எழுதலாம்' கவிதையிதழ் ஓராண்டை பூர்த்தி செய்து ஆண்டுச் சிறப்பிதழாக வருகின்ற மகிழ்ச்சியை படைப்பாளிகள், வாசகர்கள் ஆகிய உங்களிடம் பகிர்ந்துகொள்கிறது.

கவிதை சம்பந்தமான பல களங்களை ஏற்படுத்தி கவிதையின் சமூகப்பயன்பாட்டினை உச்சப்படுத்துவதே 'நீங்களும் எழுதலாம்' கவிதையிதழின் நோக்கமாகும்.

இது ஒரு தனிமனித செயற்பாட்டினால் சாதிக்கக் கூடியதொன்றல்ல. இது ஒரு கூட்டுமுயற்சி. எனவேதான் 'நீங்களும் எழுதலாம்' படைப்பாளிகளினதும் வாசகர்களினதும் தீவிரமான பங்களிப்பையும் ஈடுபாட்டையும் வேண்டி நிற்கின்றது.

வாய்ச்சொல்லில் வீரராக இராது செயல் வீரராக இருப்போம் ஆம்.

**'நீங்களும் எழுதலாம்'**
***அன்புடன் ஆசிரியர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரறியாத் தேவதைகள்

பனை யென்னும்
குதிரை அரசர்கள்
வரிசையாய் நிற்கும்
கிராமத்து புல்வெளியில்-

காற்றும் மழையும்
சோளகமும் சுனாமியும்
நேற்று பிறந்த கதையன்று-

நிலம் விட்டு ஓடும்
வானத்துப் பழங்கள்
தெருவோரம் போகையில்-
ஊரறியாத் தேவதைகள்
தாலாட்டுப் பாடின.

## எறும்புகள் முடிசூடும்

இந்த மழை என்றும் தொடரும்
வானத்துச் சங்கிலி -
முந்தை இருப்பை
முனைப்புடன் மாற்றும்
சின்னஞ்சிறிய
சிற்றெறும்புக் கூட்டம்-

வெறும் கடதாசிப் பந்துகள்
அல்ல
எங்கள் கிராமத்து எறும்புகள்-

"எறும்புகள் முடிசூடும்
காலம் வரும்" என்றாள்
எங்களூர்ப் பாட்டி.

– சபா. ஜெயராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படையல் கண்டிலர்**

பசும் பனைகள்
கர்ப்பூரச் சட்டிகளாகும்
அக்கினி மோதகப் படையல்
எங்கள் கிராமத்து
மாந்தளிர்களுக்குக் கீழே
செந்தணல் வரையும்
தோரண வாயில் -
மாந்தளிர் வனப்பின்
சந்தனச் சிமிழ் கண்டார்
அக்கினி மோதகப் படையல்
கண்டிலர் - அங்கே
அனுபவப் பாத்திரங்கள்
வெறுமையாய் கிடந்தன

**சபா. ஜெயராசா**

**கவிதைக்கான**

பயில்களம்

பரிசோதனைக் களம்

காத்திரத்தின் களம்

கருத்தாடற் களம்

விளக்கக் களம்

விமர்சனக் களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளாய் நிறம் மாற...

நீ விரித்த வலையில் நான் விழுந்துவிட்டேன்
எப்போதோ....

கைகளில் ரோஜா மலரோடு
கண்களில் கண்ணீர் மல்க
நீயோ வடக்கிலிருக்கிறாய்

நானோ இணைய முடியாதபடி
கிழக்கில் இருக்கின்றேன்
உனக்கும் சேர்த்து நானே
அழுது வடிக்கின்றேன்

அர்த்தப் பார்வைகள்
நோக்கிக் கொள்ளலாம் கைகோர்த்தபடியே
நிலவிலும் பேசலாம்
நடந்தவைகள் யாவும்
கனவுகளாய் நிறம்மாற
உன் பிரிவோடே
நான் வாழ்கின்றேன்
குருதி ஊற்றிலே
பிசுபிசுக்கக் காலைவைத்துவிட்டு மயானப்
பேய்போல்
விரல் இடுக்குகளிலும்
உன்னைத் தேடுகின்றேன்
காதல் ஒரு சூறாவளி
மரங்களை அசைக்கும்
மலர்களையும் உதிர்க்கும்
நீயும் நானும் இணையும் போது
உலகம் பலவற்றை இழந்திருக்கும் ஆனால்
நாம் வரலாறு இழந்திருப்போம்

*க. யோகானந்தன்*
*திருகோணமலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீங்களும் எழுதலாம் குறித்து...*

இலண்டனில் இருந்து இயக்கும் ஐ.பீ.சீ அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்படும் வாராந்த நிகழ்ச்சியின் எழுத்துப் பிரதி இதுவாகும். 04.11.2007

புகலிடத்தின் கவிதைப்பிரியர்களுக்கு விருப்பமான நற்செய்தியொன்றினை இன்றைய காலைக்கலசத்தில் முதலாவதாக வெளியிட விருக்கிறேன். "நீங்களும் எழுதலாம்" என்ற தலைப்பில் கவிதை இதழ் ஒன்று அண்மையில் திருகோணமலையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்கள் வெளியிடும் இச்சஞ்சிகை இரு மாதக் கவிதையிதழாகும். இலங்கை ரூபாயில் 20 ரூபாயாக விலை குறிப்பிட்டுள்ள இவ்விதழில் உங்கள் ஆக்கங்களையும் பதிவு செய்து, தாயகத்தின் தமிழ் இலக்கிய வாதிகளுக்கு உங்கள் இருப்பினையும், விருப்பினையும் எடுத்துச் செல்ல ஏற்ற நல்லதொரு வாய்ப்பாக இக்கவிதையிதழை பார்க்க முடிகின்றது. இவ்விதழின் பிரதிகளைப் பெறவோ, ஆக்கங்களை வழங்கிடவோ விரும்பும் கவிதைப் பிரியர்கள் எஸ்.ஆர்.தனபாலசிங்கம், 103/1, திருமால் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். தொலைபேசியில் தொடர்புகொள்ள விரும்புவோர், 009426-2220398 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஆசிரியருடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதவு திறத்தல்

காலம் ஒரு நாள்
மலரும்
கதவினை நாம்
திறப்போம்

இப்போது இப்படித்தான்
அடைக்கப்பட்ட எமது
வீட்டுக்கு வெளியே அந்நியப்படுத்தப்பட்டு
நிற்கிறோம்

ஓ. பொக்கிஷங்கள்
நிறைந்த எமது வீடு
பூட்டப்பட்டுக் கிடக்கிறது
தட்டினோம் திறக்கவில்லை
தயவாய்க் கேட்டும்
கிடைக்கவில்லை
காலத்தின் ஓரத்தில்
கதவோரமாகக்
காத்து நிற்கிறோம்
முடிவிலிகளாகவே
முயற்சிகள் ஆனாலும் முண்டியடிக்கிறோம்
இன்னும் முயலுகிறோம்

திறந்து விட வேண்டும்
இல்லையெனில்
திறப்பைத் தரவேண்டும்

திறக்கவுமில்லை
திறப்பைத் தரவுமில்லை
என்றால்
திறப்பாகவே நாமாவோம்

ஓ...
காலம் ஒரு நாள்
மலரும்
கதவினை நாம்
திறப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏரும் எழுது கோலும்

அப்பா உழுகிறார்
நான் எழுதுகிறேன்
அப்பாவின்
கையிலிருப்பது ஏர்
எனது கையிலிருப்பது
எழுதுகோல்

அப்பா பண்படுத்துவதோ
நிலத்தை
நான் பண்படுத்துவதோ
மனித குலத்தை

எமது பரம்பரைத்
தொழில் – இது தான்
பண்படுத்துகிறோம்

ஏரும் எழுதுகோலும்
என் குடும்பத்தின் மட்டுமல்ல
இந்த உலகத்தினதும்
இரு கண்கள்

ஆம் அப்பர் உழுகிறார்
நான் எழுதுகிறேன்

கன்னிமுத்து வெல்லபதியான்
எருவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ன சொல்லும்?**

காலையின் வரவு தன்னை
கதிரவன் கிரணம் சொல்லும் வாலையின்
வயது தன்னை
வனப்புறு பருவம் சொல்லும்
காளையின் வாலிபத்தை
கருவெனும் மீசை சொல்லும்
ஏழையின் பசியைப் பற்றி
எவரது வயிறு சொல்லும்?

ஆம், மழை வரவு பற்றி
அணைந்திடும் விண்மீன் சொல்லும்
ஆம்பலின் மலர்வைப் பற்றி
அம்மதி வரவு சொல்லும்
காம்புண் உறுதி பற்றி
காற்றதன் சீற்றம் சொல்லும்
ஏழைகள் பசியைப் பற்றி
எவரது வயிறு சொல்லும்?

கட்சிகள் பெயரைப் பற்றி என்
கவினுறு நிறங்கள் சொல்லும்
பட்சிகள் வரவைப் பற்றி
பழஞ்செறி மரங்கள் சொல்லும்
திட்டமே இல்லார் வாழ்வை
தேசமே பழித்துச் சொல்லும்
பட்டினி கிடக்கும் ஏழை
பசியினை என்ன சொல்லும்?

நாட்டுநன் நடப்பு யாவும்
நாளிதழ் சூடாய்ச் சொல்லும்
தோட்டாவின் ஆற்றல் பற்றி
துளைபட்ட தேகம் சொல்லும்
ஆட்சியின் மகத்துவத்தை
அகதிகள் வீடுதி சொல்லும்
வாட்டிடும் வறுமை ஏழை
வாழ்வினை என்ன சொல்லும்?

**அ. கௌரிதாசன்**
**ஆலங்கேணி கிழக்கு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் உவர்ப்பில் காயும் மீன்கள்

வாழ்வின் உவர்ப்பில் காயும் மீன்கள்
பூனை துரத்தி திரியும் எலியிலும்
உயிர் சிந்தி விரித்த
விரலின் இலைகளில்
நகைத்து நீளும்
சுதந்திர உலகம்....

உருவி பரவ விடப்பட்டிருக்கும்
ஆன்மாவின் முனகல் கூர்
பிளந்தெறிந்த கூடைக்குள்
என் பிள்ளைகளின்
பாடப்புத்தகங்கள்
ரொட்டியாகியிருக்கிறது...
ஒப்புகிறதா?

நீ ஊன்றி எழுந்த
முள்ளந்தண்டு வனத்தின்
அதிகாரத்தின் தாகம் தீர்க்க
அறுவடை செய்கிறாய்.

உன் விதைப்புகள் பொய்க்க
நான் எதிர்பார்க்கும் போதும்
என்ன.
அதிஷ்ட திக்குகளில்
நீயே தலைவனாகிறாய்
காயும் மீன்களிலும்
துரத்தப்படும் எலியிலும்
சிந்தி விரிந்த கையிலும்
மீண்டும்....
மீண்டும்... எதிர்பார்ப்புகளோடு
அமர்ந்திருப்பது.
எனக்கானதான
குழந்தைக் கனவொன்றே.

**சண்முகம் சிவகுமார்**
**கொட்டகலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில மொழி பெயர்ப்பாளராக பாரதி
## -ஒரு பார்வைக் குறிப்பு

பாரதி ஒரு கவிஞராக, நாட்டுப்பற்றாளராக,
அரசியல்வாதியாக,
பத்திரிகையாளராக
சமூகசீர்திருத்தவாதியாக,
தத்துவவாதியாக, தீர்க்கதரிசியாக
பார்க்கப்பட்டிருக்கிறார்.
மேலும் சமஸ்கிருதத் திலிருந்தும்,
ஆங்கிலத்திலிருந்தும் பலவற்றை தமிழிற்கு
மொழி பெயர்த்தவராகவும்
அறியப்பட்டிருக்கிறார். ஆனால் பாரதி ஒரு
சிறந்த ஆங்கில மொழி பெயர்ப்பாளர்
என்பதும்கூட, உதாரணத்துக்காக அவர்
மொழிபெயர்த்த பாடல்களின் ஒரு பாடற்
பகுதியினை இங்கே நோக்கலாம்.

**திருவேணி சங்கமம்**

**கண்ணம்மா - என் காதலி**

பாயும் ஒளி நீ எனக்கு
பார்க்கும் விழி நானுனக்கு.
தோயு மது நீ யெனக்கு
தும்பியடி நானுனக்கு
வாயுரைக்க வருகுதில்லை,
வாழி நின்றன் மேன்மையெல்லாம்
தூய சுடர் வானொளியே
சூறை யமுதே! கண்ணம்மா

## in Each Other's Arms

Thou to me the flowing light
And to thee discerning sight
Honied blossom thou to me
Bee enchanted to thee:
O Heavenly Lamp with shining ray,
O Krishna. Love. O nectar - spray
With falt ring tongue and words that pant
Thy glories here I strive to chant


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு துயரத்தின்
## இரண்டாவது பாடல்

மூச்செறிந்த வேர்களின்
சுயம்
மரணம் மேயுவதாய்
பூஞ்சன பிம்பங்களில்
நான் வேகமாக
கிராமத்துக் கனவுகளையும்
தொலைத்தவனாக

வெற்றிடமாய் கிடக்கும்
எனது கட்டிலின்
ஒரு துயரத்தின்
இரண்டாவது பாடல்பற்றி
தனிமையின் பராயங்களில்
ஊஞ்சலும் அழும்

எனக்குள் கால் உதைக்கும்
சின்ன வயதின்
அப்பா, அம்மா
விளையாடிய ஞாபக தோழமைகள்
இன்று
பெரிய வயதின்
இரண்டாம் சாமம் தாண்டியும்
இந்தப் பறவையோடு சேர்ந்து
குருணல் கொத்த
எந்த பெண் பறவைக்கும்
அன்பு பிடித்துப் போகவில்லை
சுயம் வெந்து
கண்ணி கழல்கிறது
எனது சார்பான
சீரான வண்டி
என்னைத் தாண்டி
என்னைத் தண்டித்துச் செல்வதால்

மருதாணி மனசில்
மிளகாய் பூசிப்போகும்
சீதைகளுக்கு
அல்லது
மும்தாஜிகளுக்கு
தேவையில்லைதான்
இந்த கொட்டில்காரன்

**கிண்ணியா ஏ. நஸ்புள்ளாஹ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையின் பணி

ந.பார்த்திபன்,
ஆசிரிய மாணவ கல்வியியலாளர்,
வவு, கல்.கல்லூரி.

இன்றைய கவிதைச் சூழல் மௌன வாசிப்புச் சூழல், மேடையிலே ராக தாளத்தோடு கவிதை பாடிய காலமல்ல. வாசிகசாலையிலே மௌன வாசிப்பு மூலம் சுவைப்போன் உள்ளத்தைத் தொடும் உணர்வு வழிக் கவிதை, அப்பணி யினை எந்தக் கவிதை செய்யுமாயினும் அது ஒரு சிறந்த கவிதை எனலாம். இந்த சிந்தனை தெளிவு கவிஞனுக்கும் சுவைப்போனுக்கும் இருக்க வேண்டும்.

உள்ளத்தோடு தொடர்புபட்ட கவிதையே ஒரு மொழியினுடைய உச்சப்பயன்பாடு எனலாம். இத்தகைய உச்சப்பயன்பாடு பெற்ற கவிதை உணர்வை அடிப்படையாகக் கொண்டது.

மரபுக் கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதை, வசன கவிதை, உரைவீச்சு, ஹைக்கூ கவிதை... எனப் பலபெயர்கள் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டாலும் கவிதைக்குத் தேவை உணர்ச்சியே. கவிதையின் உயிர் உணர்ச்சிதான். அந்த உணர்ச்சியைக் காட்டாத, அது எந்த வடிவத்தில் இருந்தாலும், என்ன பெயர் கொண்டு அழைத்தாலும் அது கவிதை என்பது பொருத்தமில்லை. ஆக வடிவமும் பெயரும் முக்கியமல்ல.

கவிதைப் பிதாமகன் பாரதி தனது எல்லாக் கவிதைகளும் நவகவிதை என்றார். தனக்கு முன் இருந்த தமிழ்க் கவிதைகளில் இருந்து தனது கவிதை வேறுபட்டு இருப்பதை

"சுவை புதிது, பொருள் புதிது,
வளம் புதிது
சொல் புதிது, சோதி மிக்க
நவகவிதை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தன் கவிதைகளைப் பற்றிப் பெருமையோடு பேசி கவிதைக்கு புதிய வரைவிலக்கணம் படைத்தான் பாரதி.

எனவே உணர்ச்சி என்ற உயிரற்ற அந்த உடலத்தை வடிவத்தாலும் பெயராலும் குழப்பும் வழக்கம் ஒழியட்டும். "வெண்ணெயானது நெய்யாயுருகிடுங் கண்ணிலாதவனைக் குருடனெனலாம் அண்ணனானவன் தம்பிக்கு மூத்தவன் எண்ணியாப்பி சைத்தாற் கவியாகுமே" என்ற கோபமும் வேண்டாம், மாறாக

'வாழ்க சீர்தளை மோனை
வாழ்க காரிகை யெதுகை
ஆழ்க வசனக் கவிதை
சூழ்க இலக்கண இருளே' என்ற சாபமும் வேண்டாம்.

இன்னும் "அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
அப்பனும் நோக்கினான்
அடித்து நொருக்கினான்' போன்ற உப்பு சப்பற்ற உணர்ச்சியற்ற புதுக்கவிதையும் வேண்டவே வேண்டாம்.

"இரவிலே வாங்கினோம் இன்னும் விடியலை" எனச் "சுதந்திரம்" என்ற தலைப்பிலே சிந்தனையைத் தூண்டுகின்ற கவிதைகளை எழுதுங்கள். ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல உள்ளத்தைத் தொடும் உணர்வு வழிக் கவிதைகளை படையுங்கள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளாத சொற்சிலம்பங்களால் என்ன பயன்?

புதுக்கவிதை தாத்தா மு.மேத்தா என்பவர்
இலக்கணச் செங்கோல்
யாப்பு சிம்மாசனம்
எதுகை பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எதுவும் இல்லாத கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட

புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை என்றும் புதுக்கவிதை எங்கள் தேசத்தின் பொதுக்கவிதையாகி விட்டது என்றும் கூறுகின்றார்.

கவிப் பேரரசு வைரமுத்து கூட இலக்கண உறையிலிருந்து கழற்றப்பட்ட போர் வாள் தளைதட்டிய திருக்குறள் ஒப்பனையும் ஆடம்பரக் கற்பனையும் இல்லாதது ஆபரணங்களை அவிழ்த்து பொட்டு வைத்துக் கொண்டு ஒதுக்கப்பட்ட உண்மை கள். செதுக்கப்பட்ட வார்த்தை கள் கொண்டு சொல்வது புதுக்கவிதை என்றும் சுருக்கம். இறுக்கம், வார்த்தை களில் நெருக்கம், அர்த்தங்களின் பெருக்கம் பழமொழிகளின் மறுவடிவம் என்றெல்லாம் குறிப்பிடுகின்றார். ஆயினும் மரபுக் கவிதைகளில் ஊறித்திளைத்த பேராசிரியர் க. கைலாசபதி "ஒலி நயத்துக்கு அழுத்தம் கொடுத்து தம் கவிதைப் படைப்பின் தரத்தைக் குறைத்துக் கொள்வோர் ஒரு புறமிருக்க, ஒலி நயத்தின் அடிப்படை அம்சங்களைக் கூட விளங்கிக் கொள்ள முடியாத வசன கவிதைக் கூட்டம் ஒன்று மறுபுறம் உள்ளது என்று குறிப்பிடுவதை கவிஞர்கள் மனங்கொள்ள வேண்டும்.

மகாகவி பாரதியின் கவிதைகளைப் போற்றும் க.கைலாசபதி போன்றோர் (இரு மகாகவிகள் தாகூரும் பாரதியும் என்பது கைலாசபதியின் நூல்) வசன கவிதைகளையும் அதையொட்டி வந்த புதுக் கவிதைகளையும் குறை கூறுவது சிந்திக்க வேண்டிய விடயம்.

பண்டிதர்கள் பலர் புதுக்கவிதை என்று புதுக்க விதை போடுகின்றார்கள் இன்று எனச் சாடியது மனங்கொள்ள வேண்டிய தல்ல. அவர்கள் சிறுகதை இலக்கியத்தை சிறு கத்தை என்றும் இழிசனர் இலக்கியம் என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடியதை நினைக்கும் போது அவ்வளவாக அலட்டிக்கொள்ள தேவையில்லை அவர்கள் மாற்றத்தை விரும்பாத மரபுவாதிகள்.

ஆனால் கைலாசபதி போன்றோரின் கண்டனம் கவனத்திற்குரியது உண்மையில் இன்று பல புதுக்கவிதைகளைப் பார்க்கும் போது நான்கு வரி எழுதிவிட்டால் கவிதை என்றாகிவிடும் நாங்களும் கவிஞர்கள் என்று நாமம் சூட்டிக்கொள்ளலாமென நினைத்துக் கவிதைப் பிரியர்களின் ஆசைக்கு நாமம் போட்டு விடுகிறார்கள் என்றுதான் கூற வேண்டும். மகராஜ் என்பவர் "கவிஞனுக்கு விலங்கிடலாமா என்று கேட்கலாம். கவிஞனுடைய கற்பனா சக்திக்கும், வெற்றிக்கும் ஓரளவு சுதந்திரம் அவசியந்தான். ஆனால், கவிதையானது சப்பாத்திக்கள்ளி படர்ந்தது போல சட்டதிட்டங்களுக்கு உட்படாமல் திமிறிக் கொண்டு செல்லுமேயானால் வியர்த்த மாகிவிடும் திண்ணம்' என 1939 ஆம் ஆண்டில் சூறாவளிப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளமையை இப்போது நாம் நினைத்துப்பார்க்க வேண்டியுள்ளது. புதிதாக கவிதை படைப்பவர்கள் கட்டாயம் சிந்திக்க வேண்டிய விடயம் இது. புதிதாக கவிதை எழுத விரும்புகின்றவர்கள் சில விசயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் மரபுக் கவிதைக்குரிய பண்புகளை விதிகளைத் தெரிந்திருக்க வேண்டும் கவிதை எழுத வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்களுக்கு இஃதொன்றும் பெரிய விடயமல்ல. சொற்களைச் சேர்த்துவிட்டால் போதாது அவற்றின் அர்த்தம், தேவை என்பன கருதி அவற்றை பயன்படுத்த வேண்டும். கவிதையின் தர்க்கப் பாதை உணர்விலேயே செல்ல வேண்டும் அறிவு வழி, உணர்ச்சிவழி என்று இரு வழிகள் உண்டு.

வசனத்தின் வழி அறிவு நிலையைச் சார்ந்தது. அறிவின் வரம்பை மீறி வசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுமானால் அந்த நிமிடமே அது கவிதையாகிவிடும் என்று கூறலாம்.
பாரதி "தீ இனிது" என்று கூறுகிறார். இனிது என்ற சொல் ருசியைச் சார்ந்தது "தீ சுடும்' என்றால் அது வசனம் "தீ இனிது" என்றால் அது கவிதை. இதற்கான காரணம் என்ன? ஏன் ஒரு சொல் வசனத்தைக் கவிதையாக்கியது? வார்த்தை வெறும் விஷயத்தை மட்டும் சொல்லாமல் உவமையைப் போல் உணர்விடம் பேசுமானால் கவிதை பிறந்துவிடும். தீ சுடும் என்னும் பொழுது சுடும் என்ற பதம் தீயின் குணத்தை அறிவுக்குத் தெரியப்படுத்துகிறது. தீ இனிது என்று சொல்லும் பொழுது அறிவு அதை மறுக்கும். தீயாவது இனிமையாவது என்று கலவரப்படும். ஆனால் உணர்ச்சி எற்றுக் கொள்ளும், தீ இல்லையானால் உணவு ஏது? இங்கு தீ இனிது என்பதை உணர்ச்சி ஏற்றுக் கொள்கிறது. ஒப்புக் கொள்கிறது. எனவே தான் பாரதி கூறியது போல் சொல் புதிது, பொருள் புதிது. வளம் புதிது. சோதி மிகு நவகவிதை என்பதை வளரும் கவிஞர்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஆக்க இலக்கிய வடிவங்களில் குறுகியது கவிதை. ஒரு நாவலில் (ரோல்ஸ்ரோய் - புத்துயிர்ப்பு) ஒரு சொல்லை அகற்றவும் உடன்பட மாட்டேன். ஏனெனில் அது ஏழு தடவைகள் திரும்பத் திரும்ப பார்த்து எழுதியது என்றாராம். இந்நிலையில் நீங்கள் எழுதும் கவிதையை உற்று நோக்கி தேவையற் றதை நீக்கி நல்ல கவிதையை "நீங்களும் எழுதலாம்" என்ற கவிதைச் சஞ்சிகையினூடு தாருங்கள். நன்றிக்குரியவர்களாக நாமிருப்போம்.

**களங்களை விரித்துள்ளோம்**
**ஆக்கங்களை அனுப்புங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குருவே என் புதையலே**

வையக விளக்கே வைகறையின்
ஒளியே செய்கையின் சிறப்பே -
எம்மில் சேர்த்ததும் சிறப்பே - அதை
எண்ணி எண்ணிப் பார்க்கையிலே
நெஞ்சில் ஒரு கோடிப் பூக்களின்
உதிர்ப்பே

அடித்துச் சொன்னாய் அழித்தெழுது
குறி நெறி தவறின்றி
வரக்கூடாது வாக்கியப் பழுது
ஒவ்வொரு அழிப்பிலும் ஒவ்வொரு
உதயம்

விடிவென்று நினைத்தேன் - உம்மை
விழுதென்று கண்டு கொண்டேன்
ஏணியாய் ஏற்றிய என் குருவே
ஏற்றத்தையே கற்பித்து ஏன் சரிந்தாய்

உம் கல்லறை என் கல்வியறை
மட்டுமல்ல
பல கலையின் தலைநகரும் தான்
பரந்த அறிவிற்கும் சிதறிய
சிந்தனைக்கும்
அர்த்தங்கள் ஆயிரம் சொல்லும் - என்
கண்களின் அஞ்சலிகளோடு-தினம்
புதைந்த குழியினுள்ளே - என்
புதையலைத் தேடுகிறேன்.

**இ.எல்.விமலராணி**
**வவுனியா கல்.கல்லூரி**

ஆக்கபூர்வமான கருத்துக்கள்
விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த இனத்துப் பேனையால் எழுதுவது

உன்னிடத்தில் ஒரு பேனா இருக்கிறதா
மெய்யூற்றுப் பேனாவா
உண்மையை எழுத விளைகிறதா
எனின் அதனை உடனடியாக முறித்தெறி
இல்லையெனில் இந்த ஜனநாயக நாட்டில்
சவக்குழியில் வாழ மட்டும் இடமுண்டு
உன்னிடத்தில் ஒரு பேனா இருக்கிறதா
பொய்யூற்றுப் பேனாவா
பொய்மையாளரைப் புகழ் பாடுகிறதா
போலிமைக்கு துணை போகிறதா
எனின் கம்பீரமாக அதனைச்
சட்டைப் பையில் குத்திக்கலாம்

இயலுமை கண்டு பொங்க வேண்டியதில்லை
அதனை வியந்தபடி பத்திரிகை வலம் வந்தாலும்
உனது பேனா உயிர்வாழ்வதற்கான
உத்தரவாதம் உண்டு
உன்னிடத்தில் ஒரு பேனா இருக்கிறதா
இதன் கூர் பிளந்து இரட்டை நாவால் எழுதுகிறதா
உண்மையில் கொஞ்சம் தொட்டுக் கொண்டும்
பொய்மையை மேலும் புடம் போட்டு புது வேகம் தரித்து
ஒத்தூதப் பயில்கிறதா? எனின் அதற்கான ஊதியத்தை
இரு தரப்பிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்
ஆனாலும் ஒன்றைப் புரிந்து கொள்
உறுதிபட எழுதுவதற்குத்தான் வளையாத செங்கோல் என
பெயர் இடலாம் முதுகெலும்பு உடைதற்கே
உண்மை எழுத்தென்று பெயர்
பெயருக்கு எழுதுவதென்றாகிவிட்டால்
எழுத்தில் உயிர் இருப்பது இந்தப் புரிதலில்
பொய்மைக்கு அடங்கி சேவகம் புரிவதா
அல்லது
பொருதுவதா என்பதையும் தெரிவு செய்
அதுவும் முடியாதா? தூக்குத்தண்டனை விதித்த நீதிபதிபோல்
பேனா முனையைக் குத்தி முறித்துவிட்டு
முதுகெலும்பை கூர் தீட்டு

**ஜெயா தமிழினி**
**திருகோணமலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலையாதே

கரையைத் தேடும் அலையே
சொப்பனமாய் உன்னுடைய
ஆசைகள் மட்டும்
சுருங்கி விடுகின்றன
முயற்சி திருவினையாக்கும்
என்பது உன் வாழ்வில் மட்டும்
முடியாத ஒன்றாய்
நீண்டு எல்லையற்றிருக்கிறது

உனக்கோ கரையில் வந்து
கருக்கலைப்பு செய்யும் நிகழ்வு
கைங்கரியமாகி விட்டது
இத்துடன் உன் சாரார்
எத்தனையை இழந்திருப்பாய்
முற்றுப்பெறா உன் பயணத்தை
முடிப்பது எப்போ?

நீ கரை தேடி வரும் போது
உன்னுடைய அழகுப் பவனி
மானிடர்க்கு மகிழ்வையும்
கவிஞருக்கு கற்பனையையும்
தருகிறது
காற்றடிக்கும் போது
உன்னுடைய வெஞ்சினம்
மேகக் கூட்டத்தையும்
மிஞ்சிவிடும் அளவுக்கு
உயரத்தில் எழுந்து
ஓங்கி ஒலிக்கிறதே
என்ன கொடுமை
இன்னும் நீ எதனை
தேடுகின்றாய் - உன்
சந்ததியார் விட்டுச் சென்ற
எச்சத்தையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறா ஆசையால்
உன்னுடைய வாழ்வு
முடியாத ஒன்றுக்காய்
முயற்சி செய்கிறது
காலனை வெல்ல உன்னாலும்
முடியவில்லை
சாபமாய்ப் படைக்கப்பட்ட
உன் இருப்பின்
தத்துவத்தைப் புரிந்துகொள்
ஓய்வெடு....

ஆழ் கடலில் சென்று
அமைதி கொள்
ஊழித் தீயின் போது
கொடு முடியாய் உலகழிக்க
மேலெழும்பி வருவாயாமே?
அதுவரை பொறுக்காமல்
அடிக்கடி நீ பார்க்கும்
ஒத்திகையா? இது

**க. அன்பழகன்**

## வசன கவிதை

பாரதி, தான் எழுதிய "காட்சி எழுத்துக்களைக் குறித்து என்ன கருத்துக் கொண்டிருந்தாரோ தெரியவில்லை. ஆனால் அந்த எழுத்தை 1930 இல் பாரதி பிரசுராலயத்தார் பதிப்பித்தபோது 'வசன கவிதை' எனத் தலைப்பிட்டு பதிப்பித்துள்ள திலிருந்து ஓர் உண்மை தெரியவருகிறது. கவிதையை 'வசனத்திலும்' கண்டெடுத்துக்கொள்ள முடியும் என்பது.

**பேரா. க. பஞ்சாங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நகர்ந்தது நாமல்ல**

நீண்ட நாட்களின் பின்
உன்னைச் சந்தித்தேன்
வந்து கொண்டிருந்த
பேருந்தில் நீ....
சென்று கொண்டிருந்த
பேருந்தில் நான்.
பேசிக்கொள்ள முடியாத
இடைவெளியில்...
இரண்டும் தரித்தன
இரண்டே இரண்டு நிமிடம்
கண்கள் பேசிக் கொள்ளத்
துடித்தன
நானிருந்த பேருந்து
நகர்வது போல் இருந்தது
ஆனால்.
நகர்ந்து கொண்டது
நீயிருந்த பேருந்து தான்

சி.மார்க்கண்டு
மாவன்னா – தும்பளை

**மாமி யார் ?**

கோவலனின் மாமி யார்?
இளங்கோவால்
கூறப்படவேயில்லை
கண்ணகியின் மாமியார்?
இலக்கியத்தில்
இடம்பெறவேயில்லை

இராமனின் மாமியார் யாரோ?
கம்பராற் சொல்லப்படவில்லை
ஜனகன் மகள் சீதையல்லால்
அம்மாது தாய் கூறப்படவில்லை
மாமியார் புறக்கணிப்பு
இன்று மட்டும் இல்லை
இலக்கியம் தந்தது
இன்று மட்டும் உண்டு

–திக்கவயல் தர்மு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியுமா?

சிதறியிருக்கும்
சிறகுகளை - ஒன்றாக்கி
முகங்களில்
முட்களைப் பிடுங்கி
முடங்கிக் கிடந்த வேளை
எங்கோ ஓ! என்ற சத்தம்
எட்டிப் பார்த்தேன்
பக்கத்துவீட்டு அக்காவும்
பாட்டியும் துயின்று விட்டார்கள்
சாதி சனம் ஒன்றுகூடி
ஆனந்தமடைந்த - ஊரில்
அந்திப்பேய்களும் சாமத்துப்
பேய்களும்
ஒன்று கூடி குதித்தன
ஊர்சனங்களை - அடிமையாக்கி
உடைமைகளை தனிமையாக்கிய
அந்த நாட்கள் - என்றும்
மறக்குமா அவைகள்

**வி.கௌரிசங்கர்,**
**தி/சென் ஜோசப் கல்லூரி,**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் எழுதலாம் சில குறிப்புக்கள்

**கலாநிதி.செ.யோகராசா**

ஈழத்தின் கவிதைச் சஞ்சிகை வரலாறு ஏறத்தாழ 50 வருடங்கள் பூர்த்தி செய்கின்ற இவ்வேளையில், கடந்த ஓராண்டாக வெளிவந்து ஐந்து இதழ்களை பெற்றுள்ள 'நீங்களும் எழுதலாம்' இதழ் பற்றி அதன் சிறப்பிதழை ஒட்டி சிந்தித்துப் பார்ப்பது அவசியமானது.

இன்று வரை வெளிவந்துள்ள கவிதைச் சஞ்சிகைகள் பலவற்றையும் விட, நீங்களும் எழுதலாம் மிகக் குறுகிய காலப் பகுதியில் ஈழத்தின் பல பிரதேசத்து இளங் கவிஞர்களையும் தன் பால் ஈர்த்துள்ளமை பற்றி முதலில் குறிப்பிடத் தோன்றுகின்றது. இது இதழாசிரியரின் கடும் உழைப்பைக் காட்டுகின்றமை பாராட்டுதற்குரியது.

இவ் ஐந்து இதழ்களிலும் எழுதியோர்கள் (தாமரைத் தீவான், நந்தினிசேவியர் முதலான) ஓரிருவர் தவிர, பெரும்பாலானோர் இளைய -புதிய-தலைமுறையினர் என்பது கண்கூடு.

இச்சஞ்சிகை இவ்விதத்தில் தனது குறிக்கோள்களை நிறைவேற்றியிருக்கின்றது. இவ்வாறான இளைய -புதிய - தலைமுறையினர் பலரதும் கவிதைகளில் பல காரணங்களால் ஆரம்பகாலக் கவிஞர்களுக்குரிய பல்வேறு குறைபாடுகள் காணப்படுவது தவிர்க்க இயலாதது. அதுபற்றி விரிவாக எடுத்துரைக்க இது சந்தர்ப்பமன்று. இருந்தும் ஒவ்வொரு இதழிலும் ஓரிரு கவிஞர்கள் கவனத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்க்க முற்படுகின்றனர். இத்தகைய பத்துக் கவிஞர்களின் கவிதைகளை இவ்வேளை எடுத்துக் காட்டுவதே வசதியானது. இவ்வாறான கவிதைகளுள் முதலிற் குறிப்பிடத்தக்கது. கன்னிமுத்து வெல்லப்பதியான் (இவர் கவிதை உலகிற்கு புதியவரல்லர்) எழுதிய 'வைகையின் கரையில்' தமிழ் கவிதை எமது மரபுகளிலிருந்து உறிஞ்ச வேண்டிய முக்கிய விடயங்களில் ஒன்று. புராண, இதிகாசப் பயன்பாடு, இவ்விதத்தில்,

**"செம்மனச் செல்வி சொல்கிறாள் சிவனாக மண்ணைச் சுமக்கிறோம் வைகை பெருகி வருகுதாம் வாழ்க்கை நெருப்பாகி இருக்கிறதாம்**

எனத் தொடங்கும் இக்கவிதை பாராட்டுதற்குரியது. இக்கவிதையின் ஓசை நயமும் குறிப்பிடத்தக்கது. முற்றிலும் வித்தியாசமான வெளிப்பாட்டு முறையைக் கொண்ட செ. சுதர்சனின் "காலை தலை குனிதல்" என்ற கவிதை அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கது. மனோ பற்குணம் எழுதிய காற்றுக்குக் கதவடைப்பும் ஓரளவு இதேமுறையில் அமைந்துள்ளது. இவ்விருவர் கவிதைகளும் உத்தி காரணமாக ஒரு கணம் கவிஞர் வில்வரத்தினத்தை நினைவுபடுத்துகின்றன. கூறவரும் விடயத்தை மறைமுகமாகக் குறிப்பிடுவதும் சிறந்த கவிதைக் குரியதொரு பண்பே. மணி சேகரனின் கவிதைகள் இவ்விதத்தில் கவனத்துக் குரியன.

"நிலத்துக்காய் அப்பப்ப
கிளர்ச்சி கொள்வர்
..........................................
கணப்பொழுதில் அது
மறைந்து போகும்
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசிகள் அலறும்
................கணக்கு வழக்கில்
நட்டம் தான்"

**மன உணர்வுகள் வெகு இயல்பாகக் கூறும் நேர்த்தி காரணமாக குறிப்பிடத்தக்கது, கோகிலவாணி எழுதிய "பரிமாறல்"**

**"தினமும் சந்திக்கலாம்...**
**பேச்சென்பதேவேண்டாம்.**
**ஊசித்துவாரத்துள் நூல் நுழைவது**
**போன்று பரிமாறல்களுக்குள்**
**ஊடுருவிப் போகலாம்**
**சலனம் சப்தமிழந்து கரைய**
**காதலென்பதை எப்படியும்**
**காட்டலாம்."**

மென்மையான காதல் உணர்வுகள் மேலே நுண்மையான முறையில் செறிவோடு வெளிப்படுத் தப்பட்டுள்ளன! இவ்வாறே சமகால அவலம் மிக்க அன்றாட வாழ்க்கை நிலையை **குணபாலாவின் 'உயிர்ப்பிணம்'** சிறப்பாக வெளிப்படுத்து கின்றது.

இன்றைய சூழல் பற்றி, சற்று மாறுபாடான விதத்தில் புறநிலை நின்று படிமங்களோடு நாடகப் பாங்கில் தனது உணர்வுகளை வெளிப்படுத்த முனைந்துள்ளார் **கந்தையா ஸ்ரீ கந்தவேல்** (நலம் படுமோ?)

சம்பூர் வதனரூபனின், "ஆ! போதும் என்னை விட்டு விடச் சொல்லுங்கள்" என ஆரம்பிக்கும் (கழுத்துப் பட்டையும் சிவப்புப் பேனாவும்) கவிதையும் மன உணர்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப் படுத்துவதற்கேற்ற விதமான வெளிப்பாட்டு முறையைப் பெற்றுள்ளது. சத்திய தேவனின் "இருத்தல் மீதான ஆசையும் இத்தகையதே, இவ் இரு கவிதைகளும் நல்ல மொழிபெயர்ப்புக் கவிதைகளை நினைவுபடுத்துகின்றமை குறிப்பிடத் தக்கது!

இவ்வாறே வதன ரூபனின் "மாறுபாடான முகங்கள், எஸ்.ஆர்.தனபாலசிங்கததின் 'விழிக்குமா எம் தேசம்' என்பனவும் இக் கவிஞர்களது முதிர்ச்சி நிலையை வெளிப் படுத்துகின்றன.

ஆக "நீங்களும் எழுதலாம் திருப்தி தரக்கூடிய புதிய தலைமுறைக் கவிஞர்கள் சிலரை இனங்காட்டியுள்ளது.

எனது மறு வாசிப்பில் இன்னும் சில கவிஞர்கள் வெளிப்படக் கூடும். எதுவாயினும் இளந் தலைமுறைக் கவிஞர்கள் "நீங்களும் எழுதலாம்' என்றவுடன் எழுத ஆரம்பிக்கக் கூடாது. நமது மரபுகளை வாய் மொழிக் கவிதை மரபு, பழந் தமிழ்க் கவிதை மரபு தொன்மங்கள் பற்றிய அறிவு உள்வாங்க வேண்டும், பிற மொழிக் கவிதைகளோடு பரிச்சயங் கொள்ள வேண்டும் வாசிப்பதும் யோசிப்பதும் யாசிப்பதும் அவசியமான ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹைக்கூ கவிதைகள்**

1. நம்மைப் பார்த்து
வானமும் கல்லெறியும்
ஆகாயக் கற்கள்

2. பகலிலேயே இரவு
இரவிலேயே விடியல்
நேரமாற்றம்

3. வெட்டி எறிந்து
கிள்ளி வளர்க்கிறார்கள்
தேயிலை

4. என் இஷ்டப்படி
விட்டு விடுங்கள்
மூச்சுக் காற்று

5. வெவ்வேறு சப்தங்கள்
வேளா வேளைக்கு
பாத்திரங்கள்

6. இத்தனை வியாபகம்
உனக்குள் தானே
வேரும் விதையும்

7. மண்ணைச் சுட்டதால்
மனமுடைந்தது
செங்கல்

8. காற்றடைத்த பையாம்
யார் சொன்னது
வெளிச்சுவாசம்

9. தே(நி)ச எழுத்துக்கள்
திரித்து எழுதப்பட்டது
வரலாறு

**என்.சந்திரசேகரன்**
**இரத்தோட்டை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாய்ப் பிறப்பேன்

சினிமாத்தொடர்களிடையே
முகம் புதைத்து
மூச்சுத் திணறும் எனக்கு
சீனி, மாவின் விலை தெரியாது
ரிமோல்ட் கொன்றோலுக்கு
பழக்கப்பட்ட கை
அகப்பை பிடிக்க மறுக்கிறது
வடித்த கஞ்சியை தினமும்
வயிறு நிறைய குடித்த நான்
அப்பிள் யூஸ் குடிக்கிறேன்
கோயிலுக்குச் சென்று நான்
கோலங்கள் தொடர்பற்றிக்
கதைக்கிறேன்
பேப்பர் பார்க்கும் என் கண்களில்
நடுப்பக்கம் தெரிகிறது
பொய்யென்று தெரிந்தும்
போலிவாழ்க்கை வாழ்கின்றேன்
ஏனெனில்
இது நிர்வாண உலகம் - இங்கே
நான் மட்டும்
ஆடை கட்டி என்ன பயன்?

**தி. காயத்திரி (வவு க.கல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முத்தமிட்டு...முத்தமிட்டு...*

நம்புதல் கன்னத்தில் முத்தமிட
நாளை புன்னகை உலாதான்
கனவுதரித்த இராவொன்றில்
நாம்.....

நிஜமான வாழ்தல்
கருப்பையில்
பிரசவகாலம் இதோ சில
வாரங்களில்
மனிதத்தின் வதனம்
நம்பிக்கை சுடர் ஏற்றி
தடம் புரண்ட குருதிக்காலம்
மறந்து
புதுப்பாதைக்குப்
பெயர் சூட்டு விழா
இதுவும் பிந்திய இரவொன்றின்
கனவு ஒன்றில்தான்
பயங்கரத்தின்
ஆணிவேர் அறுத்து
அடங்கிப்போவது எப்போ?
புதுவிதை செய்து
தரைகளை பரபரப்பூட்டுவது
எப்போ..?

இது நிஜமான பொழுதொன்றில்
பிரசவித்த கேள்விக்கணைகள்
நீண்டநாளாகத்தான்.
பல அகராதிகளும்
புரட்டிவிட்டோம்
விடைகாணோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுங்கள் சித்திரம்
பேசட்டும்.
இரு தசாப்த காலத்திற்கு
முன்
நாங்கள் தொடுத்த
கேள்விகள்
அப்படியே இருக்க
நாங்கள்
வயதாகிப்போனோம்.

எப்போது விடியப்போகிறது
பதவீமான்களே
இப்போதாவது
நாட்களா.
மாதங்களா.
வருஷமா. தசாப்தமா.
தேதி குறித்திடு
விடிவு எப்போது..?

அதுவரையில் சிரித்துக்
கொள்கிறோம்
நம்புதலை முத்தமிட்டு.
முத்தமிட்டு.... கன்னத்தில்
சுமக்கிறோம்.

**கிண்ணியா ஜே.பீரோஸ்கான்**

**படைப்பாளிகள் தமது பெயர்
முகவரியை குறிப்பிடுதல்
வேண்டும். புனைபெயரில்
எழுதுவோர் தமது
சொந்தப்பெயரையும்
குறிப்பிடல் வேண்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணீர்**

என் கண்களில்
ஆறு பெருக்கெடுக்கின்றது
சொல்லுங்கள்
உங்கள் வயல்களிற்கு
நீர் தேவையெனில்
கன்னி மின்சாரம்
கண்டுபிடிக்க அனுமதி
கோரியுள்ளேன்
உங்கள் இருள் அகற்ற
உங்கள் கண் இமைகளின்
அணைகளை உடைத்துவிட்டு
ஒன்று சேருங்கள் – நாம்
மகாவலியுடன் கைகோர்ப்போம்
ஒரு நாள்
எம் துன்ப உவர்ப்பை
நாடெல்லாம் புசித்து
நன்கொடை வழங்கட்டும்
நம் துன்பம் அகல

**இ.ஜே. அமாலி**
**மன்னார்**

**தவிப்பு**

நித்திய கல்யாணியாய்
நாளும் எம்மிதயம் மலராதோ...
அதிஸ்டம்
இன்னும் ஒரு பொழுதின் தரிசனம்
நாளையும்
முற்றத்துமல்லிகை பூக்கும்
ஆனால்
மலர்களைப் பார்ப்போமா?
நிலையான கேள்வி அது
வாழ்க்கை சுமைகள்
தழைத்து கிளைபரப்பித்
தவிக்கிறது
அலுத்துப்போன மனங்கள்
இலுப்பை மர வௌவால்களாய்
அந்தரத்தில்

**அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொன்னாற் போல**

குறு மதிப்புரைகள் –04

– கே. எஸ். சிவகுமாரன் –

நீங்களும் எழுதலாம் –1/2/3

எஸ். ஆர். தனபாலசிங்கம்

திருகோணமலையிலிருந்து வெளிவரும் இருமாதக் கவிதை இதழில் இளையவர்களின் தரமான கவிதைகள் சில இடம்பெற்றுள்ளன. ஞாயிறு இதழ்களில் வெளிவரும் வசனங்களை (கவிதைகள் அல்ல அவை) விடச் சிறப்பான முறையில் தேர்ந்தெடுத்த கவிதைகள் இத் தொகுப்புகளில் இடம்பெறுவது பாராட்டத்தக்கது.

ஞாயிறு தினக்குரல் (11.11.2007)

## கருத்தாடற்களம் கற்றால் வருமோ கவித்துவம்

கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்ட இளைஞர் ஒருவர் ஒரு நாள் என்னைப் பார்க்க வந்தார் இளைஞராயினும் நுட்பமான எண்ணப் போக்குடையவர். கவிதை என்றால் என்ன என்பது பற்றி ஆழமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது சட்டென்று ஒரு கேள்வியைப் போட்டார், அந்த இளைய நண்பர். "கவிதை எழுதக் கற்றுக் கொள்ள முடியாதா?' என்பதே அவர் கேட்ட கேள்வி.

மேலோட்டமாகப் பார்த்தால் வெகு சாதாரணமாகப் பதில் சொல்லி விடக் கூடிய கேள்விபோல் இருந்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிதை என்றால் என்ன?' என்பது பற்றி அந்தச் சமயத்தில் நாம் வரையறை செய்துகொண்டு பேசிய பின்னணியில் வைத்து இக்கேள்வியை ஆராய்ந்த போது பதில் சொல்வது சிரமம் என்றே தென்பட்டது.

வெண்பா, அகவற்பா, கவிப்பா, வஞ்சிப்பா என்னும் பா வகைகளிலும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங் களினதும் சொற்களை அமைவுறக் கோத்து யாப்பதெல்லாம் கவிதை என்கிற அந்த வரையறையில் வைத்துப் பார்த்தால் கவிதை எழுதக் கற்றுக் கொள்ள முடியுமென்று சொல்லி விடலாம். ஆனால் அந்த நண்பர் கவிதை என்ற சொல்லாற் குறித்தது யாப்பிலக்கணத்தை அறக் கற்பதன் மூலம் வசப்படுத்தி விடக்கூடிய இந்தச் செய்யுள் உருவத்தையன்று. கவிதை என்ற சொல் அவர் உபயோகித்த அர்த்தத்தில், கவித்துவத்தையே குறித்தது. அதாவது, "கவித்துவத்தை கற்றுக் கொள்ள முடியாதா?' என்பதே அவருடைய கேள்வியாக இருந்தது. அதற்கும் அப்பாற் சென்று ஆழமாக நோக்கினால் எல்லாக் கலைகளுக்குமே ஆதாரமான அந்தக் கருத்தாக்க வன்மையை, படைப்பாற் றலை சிருஷ்டித் திறனை, சிந்தனை சக்தியை, கற்பனையாற்றலை இந்த வார்த்தைச் சேர்க்கைகளைக் கொண்டு நான் புலப்படுத்த முயன்றும் இவற்றுக்குள் வசப்பட்டு வராமல் எட்டி நிற்கின்ற அந்தப் பிரம்ம வித்தையை, கற்றுத் தேற முடியாதா என்பதே அவர் கேள்வியின் அர்த்தம். இந்த அர்த்தத்தில் கேள்வி அமையும்போது இதற்குப்பதில் சொல்வது இலகுவான காரியமன்று. பல நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாகப் படைப்பாற்றல் பற்றிப் பல்வேறு விநோதக் கோட்பாடுகளை இட்டுக் கட்டிச்சுமந்து கிழித்துக் கொண்டு இப்படிப்பட்ட கேள்விக்கு விடை காண்பது இன்னும் சிரமம்.

சராசரி மட்டத்தைத் தாண்டிக் கலையாற்றலைக் காண்பிக்கும் ஒருவனைக் கண்டுவிட்டாலே அவனைப் பிறவிக் கலைஞன் என்று பேசியார வாரித்து, அவன் திறமையைத் தெய்வாம் சமாக்கி விடுகிற மரபு எங்களுடையது. நல்ல நடிகனா அது அவனுக்கு அருட்கொடை, சிறந்த இசையாளனா — அவனுக்குக் கருவிலே அமைந்த திரு.பெருங்கவிஞனா நாவிலே காளியின் சூலம் பட்டோ, உமையின் உமிழ் நீர் பட்டோ, இறைவன் அடியெடுத்துக் கொடுத்தோ ஏற்பட்ட ஆற்றல் அது என்று பற்பலவாகக் கற்பிதம் செய்து கொண்டுவிடும் அற்புதமான சமூகம் நம்முடையது. இந்த நிலையில் மனித முயற்சியால் படைப்பாற்றலின் பெரும் பகுதி பக்குவமடைகிறதென்பதைக் கூட ஒப்புக் கொள்வது நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்.

கஷ்டமாயிருந்தாலும் கேள்விக்குப் பதில் காண ஒரளவேனும் முயல்வோம். வசதிக்காக, கலைத்துறை முழுவதுக்கும் பொதுவான படைப்பாற்றல் என்ற திறனை, இங்கே கவித்துவம் என்று, கவிதைத் துறைக்குள் வரையறுத்து ஆராய்வோம். கவிதையின் கூறுகள் எவை? பலர் பல விதமாகப் பகுப்பர். சொல்லமைதி, பொருளமைதி, யாப்பமைதி, கவித்துவத் தன்மை என்று நாம் பகுப்போம். கவித்துவம் என்னும் இந்த எழிலை பிரதிபை என்று வட நூலார் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். சொல்லமைதியைச் சுட்டிக் காட்டலாம் கற்கலாம் பொருளமைதியைச் சுட்டிக் காட்டலாம், கற்கலாம் யாப்பமைதியைச் சுட்டிக்காட்டலாம், கற்கலாம் ஆனால் கவித்துவத்தைக் கற்க முடியுமா என்பதே கேள்வி.

***அமரர் கவிஞர் சில்லையூர் செல்வராசனின் கட்டுரையின் ஒரு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. (நன்றி – தமிழமுது) இதுபற்றி உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம். சுருக்கமாக இருப்பின் பிரசுரத்திற்கு வசதியாகும் – ஆ.ர்***

---

முதலாளித்துவத்திற்கு முந்திய விவசாய அமைப்பில் கவிஞன் முதன்மை மிக்கவனாக விளங்கினான். கவிஞர்கள் விசேட ஆற்றல்களை பெற்றிருந்த போதும் சாதாரண மக்களது மொழிநடையும் கவிதையோடு ஒன்றியதாகவே இருந்தது. கவிஞர்களும் மக்களும் பிரிக்க முடியாதபடி ஒன்றாகவே இருந்தனர். கவிதைகளைப் பாதுகாத்தவர்கள் மக்களே அன்றி கவிஞர்கள் அல்லர்.

**ஜோர்ஜ் தாம்சன்**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகக் கவிதைகள்

### ஓர் அவசரக் குறிப்பு

நாங்கள் எப்போதும்
ஒதுக்கப்படுகிறோம்!
ஒடுக்கப்படுகிறோம்!
மலையகம், மலையகமக்கள்,
மலையக இலக்கியம் என்ற
அடையாளத்தை நிருபிப்பதற்காக
கடந்த அரை நூற்றாண்டுக்கு
மேலாக போராடி வருகிறோம்.
இதற்காக எமது முன்னோடிகளாக
மலையக மக்கள் கவிமணி
சி.வி.வேலுப்பிள்ளை
கல்வியியலாளர் இரா.சிவலிங்கம்,
நாவலர் ஏ.இளஞ்செழியன்
போன்றவர்கள் "மலையகம்" என்ற
அடையாளத்தை எடுத்துச்
சென்றவர்களாவர்.
மலையகம், மலையக மக்கள், மலையக
இலக்கியம் என்பதை
அயல் நாடெங்கும்
அடையாளப்படுத்தியவர்கள்
மலையக எழுத்தாளர்களே என்பது
யதார்த்த பூர்வமான
உண்மையாகும். ஆனால்
அதேவேளை பேராசிரியர்களான
க.கைலாசபதி, கா.சிவத்தம்பி
போன்றவர்கள் இதனை
அங்கீகரித்து குரல்
எழுப்பியுள்ளனர். இதே போன்றே
தமிழகத்தில் தமிழறிஞர்
பெ.சு.மணி, சுபமங்களா கோமல்
சுவாமிநாதன் "தாமரை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன், பேராசிரியர் வீ.அரசு,
எழுத்தாளர்களான பொன்னீலன்,
பா.ஜெயப்பிரகாசம் போன்றவர்கள்
மலையக இலக்கியத்திற்கு ஆதரவு
நல்கியவர்கள்.
"20ம் நூற்றாண்டில் 'ஈழத்து
தமிழ்க் கவிதைகள்" என்ற நூலில்
மலையக கவிஞர்கள்
ஒதுக்கப்பட்டமை பற்றி
'கொழுந்து' 'ஞானம்
சஞ்சிகைகளில் எழுதியபொழுது
நூலைத் தொகுத்த
தொகுப்பாசிரியரின் அறியாமையை
பலரும் தெரிந்து கொண்டார்கள்.
இது போன்ற தவறு 'காவ்யா'
வெளியீடாக வந்திருக்கும்
"ஈழத்தின் புதிய தமிழ் கவிதைகள்
என்ற தொகுப்பில் நிகழ்ந்துள்ளது.
ஈழத்து மலையக கவிஞர்களின்
ஒரு கவிதை கூட இடம்
பெறவில்லை. இதனை தமிழவன்
தொகுத்துள்ளார்.

இந்தத் தொகுதியை படித்த
பொழுது எனக்கு பிரக்ஷன்
கவிதைதான் ஞாபகத்திற்கு
வந்தது.
'இளம் அலக்சாந்தர்
இந்தியாவைக் கைப்பற்றியது
அவன் மட்டும் தனியாகவா?
சீசர் கோள்ஸ்களைத்
தோற்கடித்தான்
அவன் சேனையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமையற்காரன் கூட,
இருக்கவில்லையா?
ஈழத்து தமிழிலக்கியத்தின்
செழுமைக்கும், கவிதை
வளர்ச்சிக்கும் ஒரு மலையக
கவிஞன் கூட பங்களிப்புச்
செய்யவில்லையா?

ஆனால் தமிழவன் இந்தக்
கவிதைத் தொகுதியை
தொகுத்ததற்கு காரணம்
காலமெல்லாம் இலக்கிய
வியாபாரம் தான். தமிழகத்தில்
ஈழத்து தமிழிலக்கியத்தின் மீது
உள்ள அக்கறையை விட
புலம் பெயர்ந்தவர்களிடமிருந்து
எவ்வளவு பெறமுடியுமோ அதைப்
பெறுவதுதான். இதனை
நம்மவர்களும் நன்கு புரிந்து
வைத்துள்ளார்கள்.

ஆனால் தமிழகத்தில் உள்ள சிலர்
எரிகிற வீட்டிலே எவ்வளவு
பெறலாம் எனப் பார்க்கிறார்கள்.
இந்த உண்மையை புலம்
பெய்ந்தவர்களும் நன்கு புரிந்து
வைத்துள்ளார்கள்.

**அந்தனி ஜீவா**

இக்குறிப்புப் பற்றிய எதிர்வினைகளை
உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்
மிகச் சுருக்கமாக எழுதி அனுப்பவும்

— ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைகள் தாண்டும்
## எழுத்துக்கள்

என் வாழ்வின்
நிஜப் படிக்கட்டுக்களை
மறைந்தும் வெளியாயும்
காழ்ப்புணர்வு கொண்டு
நசுக்க முனையும்
உனது செயற்பாடுகளே
என்மூச்சை வீச்சாக்கியது
என் எழுத்தின் வீரியத்தைக் கண்டு
ஏன் இப்படி அச்சப்படுகிறாய்?
உச்சக் கொம்பனாய் – நீ
உலா வருமிவ்வுலகில் – நான்
பிச்சைக்காரன் என்பதை
பெருமையோடு ஒப்புக்
கொள்கிறேன்
ஆயினும்
என் அடங்கா வீரியம்
ஏதோ ஒரு வடிவம் பெற்று
எல்லைகள் தாண்டிப்
பரிணமிக்கையில்
என் ஆளுமையின் சூட்சுமத்தை
அறிவாய் நீ அப்போது

***அலெக்ஸ் பரந்தாமன்***
***புதுக்குடியிருப்பு (வன்னி)***
***காணாமல் போகும்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் வரிகள்.

எழில் கொஞ்சி
வளம் செழிக்கும்
எங்கள் கடற்கரையின்
ஏக்கங்கள்
இன்னும் ஓயவில்லை

ஆழிப் பேரலையின்
ஊழித் தாண்டவமாய்
சுனாமி வந்தபோது
எங்கள் மக்களைப்
பலிகொடுத்த கண்ணீரும்
வற்றிப் போகவில்லை

புத்தனின் பாதம்பட்ட
புனித தேசத்தில்
ஓயாத அலைகளாய்
உருக்கொண்டு ஆடுகின்ற
போர்ச் சுனாமியால்
கடலோர மக்களின்
துன்பங்கள் மாறவில்லை
வள்ளங்களும் தோணிகளும்
குருவிகளும் கொக்குகளும்
எழுப்புகின்ற ஓசைகளோ
இன்னும் கேட்கவில்லை
கட்டுமரம் கரைவலைகள்
கரையோர மணற் பரப்பின்
தடைதாண்டிப் போவதற்குத்
தவம் இன்னும் முடியவில்லை
மண்ணளந்து விண்ணளந்து
ஆழத்தின் நிலையளந்து
வலையளந்து மீனளக்கும்
வீரமிகு பரதவரின்
வீடுகளும் இன்று இல்லை
ஆழியிலே மீன்பிடிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிகள் ஏதுமில்லை
கரையோரம் வலைவீச
கனகாலம் விடவுமில்லை
தரைமீது துடிக்கின்ற
மீனாகிப் போனவாழ்க்கை
மீட்டெடுக்க முடியவில்லை
மீட்பாரும் யாருமில்லை

நீண்ட கருங்குழலில்
நெய்தல் பூச்சூடி
கொண்டைக் கயல் ஒத்த
விழிகளிலே மைதீட்டி
அந்தியை வரவேற்கும்
மகளிரும் இங்கில்லை
கொன்றைப்பூப்பறிக்கக்
குழந்தைக்கும் ஆசையில்லை
தூங்கும் பழம்பிடுங்கத்
திருவிழாக்கள் ஏதுமில்லை

ஊசல்வரி பாடி
ஊஞ்சலில் ஆடிய
மங்கையரின் மனசில்
மகிழ்ச்சியைக் காணவில்லை
கானல் சோலையிலே
கபடி விளையாடும்
காளையரைக் கூட காணவில்லை
காணமற் போவதும்
கடத்தப்படுவதுவும்
கரைகாண முடியாத
கலசமாய் அலைவதும்
கண்ணீர்த்துளிகளாய்
காலம் கரைகிறதே

***வடஅல்வை***
***க. சின்னராஜன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1–5வரை கவிவளம் சேர்த்தோர்

| இல | பெயர் | இடம் |
|---|---|---|
| 1 | நந்தினி சேவியர் | திருகோணமலை |
| 2 | தம்பி தில்லைமுகிலன் | திருகோணமலை |
| 03 | எஸ்.சத்யதேவன் | திருகோணமலை |
| 04 | பா.கபிலன் | திருகோணமலை |
| ()5 | கோவை அன்ஸார் | கொழும்பு |
| 06 | எம்.என்.முஹமட் சப்ரத் | கிண்ணியா |
| ()7 | ந.நவதர்சினி | கேகாலை |
| ()8 | கோ.செந்தூரன் | திருகோணமலை |
| 09. | திருமதி.வி.அருளானந்தி | அன்புவழிபுரம், திருகோணமலை |
| 10 | வி.குணபாலா | திருகோணமலை |
| 11 | செ.ஞானராசா | அன்புவழிபுரம், திருகோணமலை |
| 12 | தாமரைத்தீவான் | திருகோணமலை |
| 13 | கோதர்ஷினி | வரோதயநகர், திருகோணமலை |
| 14 | வே.சசிகலா | வரோதயநகள், திருகோணமலை |
| 15 | க.யோகானந்தன் | திருகோணமலை |
| 6 | ப.விமலரதி | திருகோணமலை |
| 7 | எஸ்.கமலகாந்தன் | திருகோணமலை |
| 8 | வீரா,வீரகுமார் | யாழ்ப்பாணம் |
| 19 | க.கிருஸ்ணவேணி | நிலாவெளி, திருகோணமலை |
| 20) | எம்.எச்.அகமட் ரூமி | பேருவலை |
| 2 | சம்பூர்,எம்.வதனரூபன் | திருகோணமலை |
| 22 | ஷெல்லிதாசன் | திருகோணமலை |
| 23 | க.அன்பழகன் | திருகோணமலை |
| 24, | ப.மனேரஞ்சனி | அலஸ்தோட்டம், திருகோணமலை |
| 25 | விஷ்வமித்திரன் | திருகோணமலை |
| 26 | எம்.ரி.எம்.யூனுஸ் | காத்தான்குடி |
| 27 | சி.ரி.சவுந்தி | அல்வாய் |
| 28 | சி.என்.துரைராஜா | திருகோணமலை |
| 29 | ஜே.மதிவதனி | திருகோணமலை |
| 30 | ஆர்த்திகா விஜயலிங்கம் | திருகோணமலை |
| 31 | வி.கௌரிசங்கர் | திருகோணமலை |
| 32 | வே.ஜெயகாந்தன் | திருகோணமலை |
| 33 | மனோபற்குணம் | திருகோணமலை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 34 | வை,கமலநாதன் | நித்தியபுரி, திருகோணமலை |
| 35 | ம.உதயகுமார் | திருகோணமலை |
| 36 | வி.தமிழரசி | திருகோணமலை |
| 37 | பிரம்மியா கிருபநாதன் | மட்டக்களப்பு |
| 38 | துஸாந்தி பரமநாதன் | திருகோணமலை |
| 39 | க.வினுசியா | வரோதயநகர், திருகோணமலை |
| 40 | க.லோகநாதன் | அக்கரைப்பற்று |
| 41 | இ.வினோதினி | வவு. கல்.கல்லூரி |
| 42 | திக்கவயல் தர்மு | மட்டக்களப்பு |
| 43 | கன்னிமுத்து வெல்லபதியான் | எருவில், மட்டக்களப்பு |
| 44 | த.சகுந்தலா | ஆலங்கேணி |
| 45 | சூசை எட்வேட் | அன்புவழிபுரம், திருகோணமலை |
| 46 | சுந்தரி சதாசிவம் | மிருசுவில |
| 47 | கலாவிஸ்வநாதன் | கொழும்பு |
| 48 | திருமதி.ச.இராமநாதன் | அன்பவழிபுரம், திருகோணமலை |
| 49 | ஆர்.கே.புஸ்பராஜ் | இறக்குவாணை |
| 50 | வே.விஜேந்திரன் | ஆலங்கேணி |
| 51 | திருமதி.ஜே.றெஜினா | திருகோணமலை |
| 52 | க.ஸ்ரீகந்தவேள் | வவுனியா |
| 53 | இ.றெக்ஸ் வெண்டர்கோன் | களுவாஞ்சிக்குடி |
| 54 | சுதர்ஷினி | வவு.கல்.கல்லூரி |
| 55 | வி.புருஷோத்தமன் | திருகோணமலை |
| 56 | தி.காயத்திரி | வவு.கல்.கல்லூரி |
| 57 | செ.சுதர்சன் | பேரா.பல்.கழகம் |
| 58 | இப்னு ஏக்கப் | கிண்ணியா |
| 59 | இ.மு.முஜீப் | வெள்ளைமணல், கிண்ணியா |
| 60 | திருமதி.சு.கோகிலவாணி | திருகோணமலை |
| 61 | இ.ஜே.அமாலி | மன்னார் |
| 62 | ஜெயா தமிழினி | திருகோணமலை |
| 63 | சண்முகம் சிவகுமார் | கொட்டகலை |
| 64 | ஜே.பிரோஸ்கான் | கிண்ணியா |
| 65 | கே.எஸ்.கணேசமூர்த்தி | பெரியபோரதீவு |
| 66 | எஸ்.குயிலி | வவு.கல்.கல்லூரி |
| 67 | கே.ஆர்.திருத்துவராஜா | அல்வாய் (யாழ்) |
| 68 | எஸ்.வசந்தன் | மட்டக்களப்பு |
| 69 | அலெக்ஸ் பரந்தாமன் | புதுக்குடியிருப்பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 ஏ.நஸ்புள்ளாஹ கிண்ணியா
7 ஜெ.ஜெயகிறிஸ்ரோ வவு.கல்.கல்லூரி
72 ச.மணிசேகரன் மட்டக்களப்பு
73 ம.விஷ்ணுகுமார் திருகோணமலை
74 கௌரி மோகன தர்சிணி ஆலங்கேணி கிழக்கு
75 செ.கணேசன் அல்வாய் (யாழ்)
76 க.சின்னராஜன் அல்வாய் வடக்கு (யாழ்)
77 இ.இராஜேஸ்கண்ணன் வதிரி (யாழ்)
78 வி.ஜெயகாந்தன் திருகோணமலை
79 சி.டிரோசினி திருகோணமலை
8() வி.ஸ்ரீகாந் திருகோணமலை
81 ஞானா யோகேஸ்வரன் திருகோணமலை
82 சோ.பத்மநாதன் (மொ.பெயர்ப்பு) யாழ்ப்பாணம்
83 எஸ்.ஆர்.தனபாலசிங்கம் (ஆசிரியர்) திருகோணமலை

## 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'

நூல் சேகரிப்பு

தற்பொழுது இலண்டனில் வசிக்கும் முல்லை அமுதன் அவர்கள் ஈழத்தில் வெளிவரும் நூல்களைச் சேகரிப்பவர் என்பதும், நூற்கண்காட்சியினை நடாத்தி வருபவர் என்பதும் யாவரும் அறிந்ததே. ஆகையால் உங்கள் நூல்களை நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். நூலின் பெறுமதி (அனுப்புதற் செலவு உட்பட) வழங்கப்படும்.

R. Mahendran
34, Redriffe Road, Plaistow
London El 3 OJX.
United Kingdom

படைப்பாளிகள் விரும்பும் பட்சத்தில் "நீங்களும் எழுதலாம் " ஊடாக அனுப்ப ஏற்பாடு மேற்கொள்ளப்படும். நூல்களை அனுப்பி வையுங்கள். நூலின் பெறுமதி வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வின் வசனங்களோடு**

எங்கள் தேசத்தின்
சுதந்திர தேவதையே
நீ சோகங்களோடு
சோர்ந்து விட்டாயென்று தான்
எண்ணியிருந்தோம் - ஆனால் நீ
சர்வாதிகாரத்திடம் கற்பிழந்ததை
கேள்வியுற்ற போதுதான்
எமது கண்களும் கற்பிழந்து
கண்ணீர் வடித்தன

நம் தேசத் தருவில்
வேஷங்கள் வேரூன்றிவிட்டதால்
எண்பத்து மூன்று யூலையின்
சுவாலைகள் மீளுமோ
எனும் அச்சங்கள்

கலவரங்களில்
எங்கள் தாய்மைகளின்
கற்புகள் தான் கதறின
கண்ணீர் வடித்தன என
எண்ணிவிடாதீர்கள்
இந்தத் தேசத்தின்
தாய்மையுந்தான்
ஆதலால் சோதரர்களே
சமாதான தேவதைக்கு
சாரி கட்டி
நிம்மதிகளுக்கு
நீண்ட ஆயுள் கொடுப்போம்
வாழ்வின் வசனங்களோடு

***–எம்.ரி.எம்.யூனூஸ்***
***காத்தான்குடி–***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒரு கைதியின் கதி

நினைவு தீப்பிழம்புகளை
கக்கிக் கொண்டிருக்கும்
என் சாத்தான் இரவுகள்...

கூப்பிய கரங்களுக்கு
விலங்கிட்டு
என் ஓலமிடலுக்கு
உத்தரவாதமில்லாமல்....

கழுத்தறுக்கப்பட்டு
குற்றுயிராய் கிடக்கும்
என் இலட்சியங்கள் எல்லாம்
கம்பிகளுக்குள்ளே...
கல்வி காதல்
எதிர்பார்ப்பு - முற்றுமுழுதாய்
அடைதலுக்கான
காலக் கதவு தாழ்ப்பாளிட்டு...

அய்... யோ...
கத்த நினைக்கின்ற
போதெல்லாம்
பூட்ஸ் கால்கள்
என் உதடுகளை
ஊமையாக்கி உட்கார
வைக்கிறது!

சொல்லி விடலாம்
நிரபராதியென்று
இந்த பூட்ஸ் கால்கள்
என் குரல் வளைக்கும்
கொஞ்சம்
அவகாசம் கொடுத்தால்...

*– புசல்லாவை கணபதி –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகவே**

எனக்கு முனக்கும் வழிகாட்டி
இறைவனென நா மேற்றாலும்
"கணக்கு" வீட்டுக் கொள்வதிலே
காலம் முழுதுங் கழிக்கின்றோம்

அற்புத னான ஆதியெமை
அற்புதமாகப் படைத்தாலும்
வெற்புயர் வேற்றுமை காட்டுகிறோம்
விரிசற் தீயினை மூட்டுகிறோம்।

விரிந்த வானி லுதிக்கின்ற
வெண்ணி லாவுஞ் செங்கதிரும்
பரந்த அளவில் வீசுவது
பாகு பாடு பார்த்தாமோ?

தெய்வீகத்தன்மை சூழ்ந்த
திருவுரு வேதான் மானிடர்கள்
வைய கத்தில் ஈசனது
வடிவே யான இம்மனிதர் –

இவ்வள விருந்தும் தமக்குள்ளே
ஏனோ இடுகின்றார் சண்டை?
எவ்வள வழகு இப்புவனம்।
இரசித்து மகிழ்வதே எம்கடமை

பரந்த விசும்பும் இப்புவியும்
படைப்பிற் சிறந்த நமக்கேதான்
நிறைந்த வல்லமை மிகுந்தவனால்
நிச்சயம் படைக்கப் பட்டது பார்।

ஆகவே நாளை எனும் நாளிலே
அதனைத் தொடர்ந்து வரும் நாளில்
வேகவே வைத்தபோர்த் தீநூர்த்து
வீடுதலே எமது பொறுப்பாகும்

**- கிண்ணியா ஏ.எம்.எம். அலி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் முருங்கையில்

இருள் இறுகப்பற்றிய
நடுநிசிதான் அது –
ஆனாலும்.

விடியல் வந்து விட்டதென
விளம்பரம் செய்ய
ஆங்காங்கே தீப்பந்தங்கள்!

குரல்வளையை நோக்கி நீளும்
சப்பாத்துக் கால்களைப் பார்த்த
"பெட்டைச் சேவல்கள்"
இறக்கையடித்தபடி பலமாக
கூவுகின்றன
விடிந்து விட்டதென்பதை
நியாயப்படுத்த!

தீப்பந்தங்கள் சொரியும்
அமிழ்தத்தை உண்டுவிட
முண்டியடித்தபடி விட்டிற்பூச்சிகள்

கொண்டாட்டம் களைகட்டிய
வேளை
ஆரவாரித்த விட்டிற் பூச்சிகளும்
கட்டியம் கூறிய "பெட்டைச்
சேவல்களும்"
தரையில் குற்றுயிராக
துடிதுடிக்க...
நிறைவேற்றப்பட்ட
சிந்தனைச் செருக்குடன்
தீப்பந்தங்களை ஏந்தியபடி
இருளாட்சியின் ஆக்கிரமிப்பு
மீண்டும்...
அந்த விடியாத நடுநிசியில்!

- ஷெல்லிதாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தின் வரைவு

முகத்திலறையும் காற்று
அழுகிய பிணங்களின்
அடையாளங்களைக்
கூவிச் செல்கிறது.
பல தடவை அது ஏக்கங்களின்
சுடுமூச்சையும்
காவி வருகிறது

அவ்வப் பொழுதுகளில்
மரணத்தின் அழைப்புகளையும்
அழுகைகளையும்
அருகிலும் தொலைவிலிருந்துமாக
கொணர்ந்து தொலைகிறது.

அடையாளப்படுத்தலற்ற
சாவுகளின் தரவுகளை
சேமக் காலைச் செய்திகளாக
வானொலிகள் உச்சரிக்கின்றன
நல்லிணக்கம் பற்றிய
பாடல்களின் இடையிடையே...
தினசரி தொலைக்காட்சி
திரைகளின் முகங்கள்
குருதிவடியும் சம்பவங்களையே
மீண்டும் மீண்டும்
மேலெழுப்புகின்றன.
காகித முகங்களையும்
விடுதலை வேண்டுதல்களையும்
கைகளால்
உயர்த்திப்பிடித்தபடியுள்ள
பெண்களதும் முதியவர்களதும்
கவலை தோய்ந்த முகங்களாக
அவை திரையிடப்படுகின்றன
பெரியவர்கள் தொலைவதும்
சிறியவர்கள் தேடுவதுமாக
நடைமுறை மாறிவிட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவில் நடக்கையிலும் – பலர்
அழைத்துப் போனவர்களாலும்
தொலைக்கப்பட்டதாக
வாக்களிக்கிறார்கள்
வாழ்வதற்கானவர்களையும் வாழ
வைக்கும் எல்லாவற்றையும் சிதைத்து
புதைவுகளின் மேடுகளில்
கோபுரங்களைக் கட்டியெழுப்புவதாக
உளது
தேசத்தின் வரைபு

**சம்பூர் எம். வதனரூபன்**

**தனிப்பிரதி விலை ரூபா.25**
**கடிதவழி இதழைப்பெற**
**விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான**
**7 முத்திரைகளை அனுப்பி**
**வைக்கவும்.**

**வருட சந்தா 200 ரூபா.**
**(தபாற்செலவு உட்பட) காசுக்**
**கட்டளைகளாக அனுப்பலாம்.**
**அனுப்ப வேண்டிய தபாலகம்:**
**திருகோணமலை**
**முகவரி: எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**
**103/1, திருமால் வீதி**
**திருகோணமலை**

**(07 வது இதழிலிருந்து இவ்விலை**
**அதிகரிப்பு நடைமுறைக்கு**
**வருகிறது என்பதை**
**வாசகர்களுக்கு**
**அறியத்தருகின்றோம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கை**

குதிரையின் வாலின் நுனியில்
தொங்கும் நான்
குதிரை ஓடிய வேகத்தில்
வால் மேலே எழுந்து
எனது பாரத்துக்கு சடக்கென
கீழே விழுந்து
நிலத்தில் அறையப்பட்டு
இழுபட்டு
இராணுவத்தின் 'ட்ரக்'
வண்டியொன்றில்
கட்டுண்டு இழுபடுவது போல்
இடையிடையே
குதிரைக்கு களைப்பு
ஏற்படுகையில்
சிறு ஓய்வு - அது
கட்டி இழுபட்டு உரோஞ்சப்பட்ட
உடலுக்கும் தான்.
இந்த இடைவெளியில்
தோன்றுவதுண்டு
இந்த வாலுக்கும் என் உடலுக்கும்
இடையிலான பிணைப்பு
என்ன விடுபட இயன்றதா
ஓ.... ஆ..... மீண்டும்
குதிரை பயணம் தொடங்கி
விட்டது
மீண்டும் மீண்டும்
அந்த அறைபடுதல்
இழுபடுதல்
உரோஞ்சப்படுதல்

**-ந. விஜயலிங்கம்**

**-திருமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைத் தமிழா போராடு

வல்லினம் மெல்லினம் இடையினம்
உண்மை உலகம் கண்டு
உயர்வு பெற்ற மனிதனாய்
உரிமையுடன் வாழ்ந்து
உலகெலாம் பெயர் சிறக்க
புதுமைத் தமிழா போராடு

பஞ்சம் தீர்ந்து மண்ணில்
பசிப்பிணி ஒழிந்து நாட்டில்
நெஞ்சம் நிறை மனிதனாய்
புதுமைத் தமிழா போராடு

சாதி சமயச் சண்டை அகன்று
சமத்துவம் காண சரிநிகர்
நீதிநெறி கண்டு மக்கள்
நிம்மதிப் பெருமூச்சு விட
புதுமைத் தமிழா போராடு

வாய்வீச்சு வணங்காத்தன்மை
கண்ணியம் இல்லா
காய் நகர்த்தும் விளையாட்டு
பொய்பேச்சு பொருளிற்கும்
போகத்திற்கும் அடிமையான
இழிநிலை அகல
பாரினில் தமிழன் சிறக்க
புதுமைத் தமிழா போராடு

**சி.என்.துரைராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லத்தரசியாய்**

நீ காதலிக்கும் போது
நானும் காதலிக்க வேண்டுமென்று
நீ நினைக்கிறாய்!

நீ கணவனாகும் போது
நான் மனைவியாக வேண்டுமென்று
நீ விரும்புகிறாய்!

நான் தாயாகும்போது
நீ தகப்பனென்று
உன் பெயரின் முதலெழுத்தை
குழந்தைப் பெயரின் முன்
முத்திரையிடுகிறாய்!

இரட்டை சுமைகளை
சுமக்கும் நான் மட்டும்
இல்லத்தரசியாய்!

**-கலா விஸ்வநாதன் - கொழும்பு.**

**தெருக்குறள்**

1. ஈனம் புரிந்தேனும் இன்பம் நுகர வேண்டுவார்க்கு
மானம் மரியாதையும் வேண்டுமாம்.

2. கட்டிய மனைவியிடம் நற்சான்று பெற்ற
கெட்டிக்கார மேதை எங்குமில.

3. அவதானம் நிதானம் மனிதாபிமானம் பிரதானமானால்
அவமானம் ஒருநாளும் இல.

4. கற்றதனால் ஆய பயனென் நோயுற்று
குற்றப்பட்டு வீழ்வா ரெனின்.

5. அதிகாலையில் கூவிய சேவல் மதியம்
கொதி சட்டியில் கிடந்து தீவதோ?

**சூசை எட்வேட் - அன்புவழிபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை அன்றும் + இன்றும்**

'தாமரைத் தீவான்'

இலக்கிய (கவிதை)ம் பற்றிய பழைய - புதியவற்றைத் தெரிந்தவரை பார்ப்போம்! கவிதை தமிழல்ல - செய்யுள் - பா - பாட்டு- பாடல் - யாப்பு - தூக்கு என்பனவே தமிழ் ஆதியில் மாந்தன் சைகை (நடிப்பு) மொழிமூலமே கருத்தை வெளியிட்டான். பின் ஓசை (இசை) ஒலிமூலம் வெளிப்படுத்தினான். ஓசை பாவாகி (செவிநுகர்கனி) நாட்டார்வாய் மொழிப்பாட்டாக இலக்கியம் பிறந்தது. இலக்கு 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே. யான் பெற்ற இன்பம்... பிறந்தாலும் பாட்டு : அன்னை அடித்தாளோ?. இறந்தாலும் பாட்டு : பத்தினியாள் போன இடம்... விளையாட்டிலும் பாட்டு: நாயும் நாயும் சண்டை பிடிக்க... வயல் வேலையிலும் பாட்டு: வட்டத்தலையர்களா?... காதலிக்கையிலும் பாட்டு: சந்தன மரத்தை மச்சான்... வாழ்வை இசை மயமாக்கி வேதனை குறைத்து வாழ்ந்தனர். இயற்கையைப் போற்றி அம்புலிமானே... மாயோன் முல்லை + சேயோன் குறிஞ்சி +வருணன் நெய்தல் + இந்திரன் (வேந்தன்) மருதம் + பாலை கொற்றவை (சூலி) + காதல், கண்ணொடு (1100) + வீரம்: விழித்தகண் (775) போற்றி - யாதும் ஊராய் (192பு) - ஒன்றே குலமாய் (2066தி) தனிவாழ்வு வாழ்ந்தனர். பிற இனக் (ஆரிய) கலப்பால் பக்தி இலக்கியம் (ஆறிரு தடந்தோள்) பரந்தது. அரப்பாப் பண்பாடு (திராவிட) ஆரிய எதிர்ப்பு இலக்கியமும் (தந்தைமார் பற்பலராய்) இந்து திராவிடம் கலந்த (சிவ + உருத்திர) தாய் - இப்போது மனிதமாய் (மானிடத்தன்மைக்கு வேறாய்) முயற்சியாய்: ஆள்வினை (1022) பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை இலக்கியம் பிடித்துள்ளது. 1) முதலில் வரிப்பாடல்: ஆசிரியப்பா - அகவலோசை (சீதக்களபச்) நேரிசை + இணைக்குறள் + நிலை மண்டில + அடிமறி மண்டில (பண்ணத்தி-பரிபாடல்) கடிவதுமற- அன்னையும் பிதாவும் (நூற்பா) ஆவே - பூத்த (செந்) வேங்கை . 2) வெண்பா : செப்பலோசை இடும்பைக் (623) குறள் / வாக்குண்டாம் (நேரிசை) / அட்டாலும் (இன்னிசை) / சுரையாழ அம்மி மிதப்ப (சிந்தியல்) / வையகமெல்லாம் கழனியா (ப.ஒறொடை) (3) கலிப்பர் துள்ளலோசை - வெற்றி கொட்டுக ! ஒத்தாழிசை - வெண் - கொச்சகம் (தா + து + விரு ) (4) வஞ்சிப்பா:தூங்கலோசை- ( பொன்னங்குன்றவன்) (5) மருட்பா வெண்பா ... அகவல் (திருநுதல் வேர்வரும்பும்) (கைக்கிளை + வாயுறை + செவியறிவுறுஉ) (6) நூற்பா : சூத் / அவ்வழி, ஆவியிடமை (75) (7) புதுக்கவிதை - கட்டற்றகவி / வால்ட் விட்மன் (1819 - 1892) அமெரிக்கா / விடுநிலைப்பா / குஸ்டாவ்கான் (1887) பிரஞ்சு எலியட் ஸ்ரீ இங்கிலாந்து / விலங்கில்லாக்கவி. அப்துல் றகுமான் + வயிர + மேத்தா + வாலி (மரபிலிருந்து)/ பா செய்யுளாகி கவியாகி உரையாகி (வேதநாயக) வசனகவியாகி பாரதி - கடல் இனிது - மலை இனிது (283) உரைப்பாவாகி : பசிநெருப்பு - பசிநீர் (சித்திரர்) உரைவீச்சாகி (காடதிரக்கர்ச். சாலை இளந்) சொற்கோலமாகி (எதிர்க்குரலார் நாமே. தாசன்) சொல்லாடலாகி (கலை என்றால் தாறுமாறாய் . மணி) சொல்லுடைப்பாகி (நான் கவிதை எழுத) இன்னும் பல வடிவங்களையும் தாண்டி வளர்ந்து புதுக்கவிதையாகி உள்ளது. (அவள் நெளிந்து.) (பேச்சுச்சந்தம் - அழுத்தம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுநிலை - கருத்துச்சொல் - ஆழப் பதிப்பு ..) சில வெறும் வசனம் சில இருண்மை : (செத்த சிங்கரத்ததத்தால் சுண்டெலி கர்ஜனை) யாப்பு வேலி நீக்கப்பட்டதால் கண்டவரெல்லாம் கவிக்குள் கவி எனச் சொல்ல ஏது மற்ற துண்டு வசனங்கள் - கலை வடிவற்ற கருத்துக்கள் - முறித்தடுக்கிய கட்டுரைகள் - வெற்றுக் கோசங்கள் - வார்த்தை வாந்திகள் - சுவர்க்கிறுக்கல்கள் - வாய்வெருவல்கள் புதுக்கவிப்பெயரில் வருகின்றன. இவற்றால் புதுக் கவிதைக்கு ஆபத்துண்டு - அப்துல் றகுமான் த.பி.மூர்த்தி - நா.சு.மணியம் - கு.ப.ரா.பாலன் - வல்.கண்ணன் - தருமு.சிவராமு - திரு.சோ.வே.பாலன் - எஸ்.வை.வரன் - சி.மணி - சுந்.ராமசாமி - டி.கே.துரைசாமி - நா.காமராசன் - மீரா - சிற்பி - புவியரசு - மேத்தா - கங்கொண் - அக்னிபுத் - இன்குலாப் - தமிழன்பன் ஆண்பாலரும், மீனாட்சி - தேவமகள் - திரிசடை - ரோகினி - விஜயலட்சுமி - பொன்மணி - சித்திரா - மணிமேகலை - கனிமொழி பிற பெண்பாலாரும் தமிழகத்தில் புதுக்கவிஞராயுளர் (ஆ.சிராஜ் (பரிசு) போன்றார் இங்குளர்) நல்ல புதிது வரட்டும் கூடாத பழசு (துப்புறச் சிவந்த வாயாள் ... 8) கைக்கூ : (3வரி - யப்) என் நிலத்தை விற்ற அந்த இரவில் யான் தூங்கவே இல்லை - தவளைகள் அழைப்பால்! தமிழிலும் உண்டு (இரு) வெந்தகறி மணப்பதேன்?. குறும்பா : பூங்குழலியாள் தலையில்... மதியும் மடந்தை... (1116) முன்பு : , காது இப்போது கண் (1) இசைப்பாக்காலம் போய் (தமிழோடிசை) மனதில் பதிக்கச் செய்யுள் (மருக்காரை சுக்கு) (2) பிறகு கவிதை . (கற்பனை - உணர்ச்சி - சொல்லாட்சி - பொருள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உவமை - உருவகம் - அணிகள் - படிமம் குறியீடு - அங்கதம் - வருணனை ) (3) வினா - விடை கவிதையால் மோனை முத்தமிழ்...? மூச்சு விடுமுன்னே...? (4) சிலகடுமை : ஒகாமாவீதோ. யாயும் ஞாயும் . பண்டிதமட்டம். பாமரர் தொலைவில் (5) பாரதி சுவைபுதிது. பொருள் புதிது - வளம் புதிது - சொற் புதிது சோதி மிக்க, நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை (248) ஒரு திருப்பம் : ஓடி விளை - சின்னஞ்சிறு (பாஞ் - கண் - குயில்) தொடர்ந்து பாவேந்தர் (கொல்லையிலே - ஓயாத ) / தே.வி.பிள்ளை (மங்கை - கல்லும்) நமது நவாலியூரார் (ஆடிப்பிறப்பு - வீமா) (6) புதியது நேரம் - வீண் பதம் ஓ மனிதம் - வரலாறு - விழிப்பு - பரப்பு / பார்த்தால் வசனம் பாய்ந்தால் கவிதை (பிச்) / (7) மரபு - அரைத்த மாவையே . உடைப்புள் இல்லை (புவி) / போதும் இனிப் பு.க. எழுதாதீர், ஜோக்குகள் கவியல்ல (மேத்தா)

நல்லவை யாவும் வளர்ச்சியே - புதியன புகுதல் வழு அல. மக்கள் தீர்மானிப்பர் - காலம் காட்டும் வழிகாட்டல் நலம் - மு.வ. வின் நற்பணிகள் எடுபடவில்லை. (விருந்துகள்+ செல்வங்கள்) / பாவேந்தரின் (பாண். பரிசு+ குடு விளக்கு) நூல்களைத் தேடுவாரில்லை. அகத்தில் - புறத்தில் நல்லவை பல் உள - "பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை யிகழ்தல தனிலுமிலமே! (192பு / க.பூ.குன்றன்) / நல்லது செய்தலாற்றீராயினும் அல்லது செய்தலோம்புமினதுதான்

எல்லாரு முவப்பதன்றியும், நல்லாற்றுப்படு உநெறியுமறதுவே ! (195 ந.வெ.தலையார்) / யானுயிர் என்பதறிகை வேண் மிகுதானை வேந்தர்க்குக் கடனே! (186 மோசிகீரனார்)/ நுண்ணியநூல்பல. (373) விவேக...) போகட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்துப் பேசலாம்

தாங்கும் கைகளைத்
தவிடு பொடி யாக்கிக் கொண்டே
உங்கள் நா உச்சரிக்கின்றது
இன்றைய இளைஞர்கள்
நாளைய தலைவர்களென
வளங்களை வாரிச் சுருட்டிக்
கொண்டே
வருங்காலம் பற்றிப் பேசுகின்றீர்
எல்லோரும் வாயை மூடுங்கள்!
சர்வதேசமும் தான்
ஆயுத விற் பனையை
முதலில் நிறுத்துங்கள்
அடுத்துப் பேசலாம்
சமாதானம் பற்றி

**-சிபான் மொஹமட் ஆசாத்**
**- திருமலை,**

## அடைக்கப்பட்ட வாய்

தேர்தல் சனநாயகமானது
.................................
சுயத்தை இழந்தோம்
முகத்தை இழந்தோம்
கௌரவத்தை இழந்தோம்
எங்களையே இழந்தோம்
துப்பாக்கிகளின் பெயரால்
.........................................
தேர்தல் நீதியானது
.........................................
முட்டாள்கள் என்பதை
நாங்கள் மீண்டும்
நிரூபித்துக் கொண்டோம்.

**ச.மணிசேகரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனிதன்

இறந்து போன அதை
இறக்காத எல்லோரும்
சுமந்தனர்
தடாகம் பாராட்டியது
தண்ணீர் பாராட்டியது
தாமரை பாராட்டியது
மனிதனின் வாய் மட்டும்
இறந்து போன அதை விட
இழிந்தே கிடந்தது
பாராட்ட மனம் இன்மையால்

**பெரிய ஐங்கரன்**
**புலோலி தெற்கு**

### கடவுளுக்காக

தவறு செய்தான் – கடவுள்
தண்டிப்பாரென தெரியாதவனாய்
பாவ மன்னிப்புக் கேட்டான் – கடவுள்
மன்னிப் பாரென நம்பியவனாய்
ஊரோடு தேர் இழுத்தான்
ஆயிரமாயிரமாய் பணத்தை
இறைத்தான்
கடவுளுக்குத் தொண்டு
செய்கிறேன்
என எண்ணியவனாய்
வெளியே பிச்சைக் காரனுக்கு
நூறு ரூபாய் நீட்டினான்
பரோப உபகாரி என்பதை
நிரூபிப்பதற்காக
ஆனால்
வீதியில் கடவுளிடம் செல்ல
காத்திருக்கும் ஒருவனைப் பார்த்து
பாராமல் சென்றான்

**- ஆர்த்திகா விஜயலிங்கம் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீதனத்தை நம்பி.

சீதேவியாய் இருந்த நான்
சீதனத்தின் வினையால்
சிறகிழந்த பறவையாய் மாறியதனை சிலை
வடிக்கிறேன் சிநேகிதர்களே உங்களுக்கு

பெண்விடுதலை பெண்விடுதலை
என்று
பேரவைகளில் பேசியவனைக் கண்டு
பெருமிதம் அடைந்ததென்னவோ
உண்மை தான்
பெண்புத்தி பின்புத்தி என்றார்கள்
அதுவும் உண்மை தான்

காதலிக்கும் போது காதல்மொழி
பேசி
கட்டிலிற்குக் கொண்டு சென்ற
போது
கணவனாய் போகின்றவன் தானே
என்று
கண்டு கொள்ளாமல் போனதும் என்
தப்புத்தான்!
கடைசியில் காலை வாரிவிடுவான்
என்று
கனவிலும் எதிர்பார்க்கவில்லை

பத்துலட்சம் பணமாம் பங்களா
வீடாம்
பயணத்திற்கு மாருதிக்காராம்
பணத்தைக் கண்டான்
குணத்தை மாற்றினான் – அவனது
விஷமத்தனமான பேச்சில்
விம்மியது எனதுள்ளம்!

நான் செய்த தவறுக்காய்
நாளும் பாடுபட்ட என்தாயை –
நயவஞ்சகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயாய் விரட்டியபோதே
கல்யாணம் பற்றி நான்கண்ட
கலர்கலரான கனவுகள் கலைந்து
போனது –என்
காதலும் கருவறையிலேயே
கற்பழிக்கப்பட்டது!

அவனுக்கும் ஒரு மகள் பிறக்கலாம்
அவளும் இப்படி
அவஸ்த்தைப்படலாம்
அனுபவம் தான் அவனுக்கும்
உணர்த்தும்
அவனை நம்பி நான் மோசம்
போனதை
சீதனத்தை நம்பி அவன் என்னை
நாசம் செய்ததை

**ம.கம்ஷி, குடியிருப்பு வவுனியா**

## மயான பூமி

செத்துப்போன பூமியில்
தினமும் செத்துக் கொண்டிருக்கும்
சுகவாசிகள் நாங்கள்
இங்கே. விடியலுக்கும் கூட பயம்
எங்கே.
நாம் மடிந்து விடுவோமோ என்று
நாம்...
எல்லோரும் வெட்டியான்களே
தினமும் புதைகுழிகள்
நாம் செல்லும் பாதையிலே
நமக்காய் தவமிருக்கின்றன
மயான பூமியில்
மனித நடமாட்டமே இல்லை
இருந்தும் நடக்கிறோம்
நாளை. நாம்
புதைபடாமல் இருப்பதற்காக

**சூ.யுவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடித்திரிதல்

அலைந்து திரிகிறேன்
தெரு நாயைப் போல
என்னை நோக்கிய
பார்வைகளை
உதறித்தள்ளிவிட்டு

அலைந்து திரிகிறேன்
உறவுகள் அற்ற
உறவுகளுடனும்
சம்பந்தமில்லாத
சம்பந்திகளுடனும்

அலைந்து திரிகிறேன்
பறவையைப் போல
விதைக்காமல்
அறுவடை செய்யாமல்
உயிர் வாழ்ந்த படி

அவமானங்களும்
ஆக்கிரமிப்புக்களும்
என்னை வதைத்தாலும்
வெறுக்கப்படும் தெருச்
சொறிநாயைப் போலத்தானும்
அலைந்து திரிவேன்

எனக்கான ஒரு இடம்
என்னிடம்
இல்லாதபோதும்
எனக்கான ஆதரவு
அறுந்தபோதும்
அயராது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைந்து திரிகிறேன்
ஒதுக்கப்பட்ட
இடங்களிலும்
வெறுக்கப்பட்ட
மனிதர்களிடமும்
அருவருக்கத் தக்க
செயல்களினூடும்

அலைந்து திரிகிறேன்
தத்துவங்களின்
வறட்சியினூடும்
செயற்பாடுகளின்
தோல்விகளினூடும்

அலைந்து திரிகிறேன்
வேஷம் போடாத
முகங்களையும்
மறைந்து போன
மனிதத்தையும் தேடி
எல்லா இடங்களிலும்

**எஸ். சத்யதேவன்**

***ஷெல்லியும் பிரஞ்சுப்புரட்சியும்***

ஆண் பெண் சமத்துவம், சுதந்திர வாழ்வு, சமதர்ம சமுதாயம் ஆகிய கனவுகளை வெளிப்படுத்தும் அவரது "இஸ்லாமின் புரட்சி" எனும் கவிதை நூல் மனிதகுலத்தின் மீதும், அதன் முன்னேற்றத்தின் மீதும் நம்பிக்கை இழக்காத ஷெல்லியின் மனோ உறுதியில்தான் உருவாயிற்று. பிரஞ்சுப் புரட்சியிலிருந்து புதிய ஆதர்சம் பெற்ற ஷெல்லி அதனை மேலும் வளர்த்துச் சென்றார்.

**தொ.மு.சி.ரகுநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறுக்கர்களும் கிறுக்கல்களும்

வீரியம் மிக்க
கனவுகள் நிறைந்த
உலகமே கைப்பிடிக்குள்
இருப்பதான
உணர்வுப் பருவங்களில்

அழுக்குப் படியாத
வெற்றுக் காகிதங்கள் கிறுக்கர்களுக்கும்
பொதுவானது

உணர்வுகளை
உணர்ச்சிகளை
கொள்கைகளை
கோட்பாடுகளை
வேரூன்றச் செய்துவிட்டதான
வெற்றுப்பிதற்றல்களுக்கும்
வீறாப்புகளுக்குமிடையே
நிறம் மாறிப் போவதும்
திசை மாறிப் போவதும்
தெளிவற்ற நரைப்பீடங்களின் தொடராகிப்
போவன

உடன்படாது
உறுதியாயிருக்கையில்
வளர்த்தகடா மார்பிலெனும்
மேதமைச் சரடுகளினூடு
மறைந்து போவதான
வேலியே பயிரை மேய்வதான உண்மைகள்

தொடர் இழப்புகளினூடு
தக்க வைத்துக்கொள்ளும்
சூட்சுமங்களோடு
வருங்காலத்தை
கேள்விக்குள்ளாக்கி
இருளுக்குள் தள்ளுவதான
உயிரின் தத்துவம் உயிரெனும் உயிரியல்
தத்துவம்
பிழைப்பதான
மலட்டுத்தன்மைமிகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த மானமும்
விழுந்த பாடுமாய்
கதையளக்கும்
வாய்வீச்சு கைங்கரியங்கள்

கிறுக்கர்களே
நோக்கத்தோடும்
மார்க்கத்தோடும்
இணைந்திடுங்கள்
நீங்களும்
வரலாறு எழுத

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

## தொல்மம

ஒரு புறம் ஊமைக் கடல்
மறுபுறம் ஆரவாரிக்கும் தமிழர்
இரு ஒலிகளாலும்
அச்சுறுத்தப்படும்
குழந்தை கெமுனு

எழுந்து வந்து
தன் பிறந்த நாட்டிலிருந்து
புரியாத மொழிபேசும் அந்நியனை
ஓட்டும்படி ஆணையிடும்
குரல்களைக்
கேட்கிறான் அவன்
படுக்கையில் சுருண்டபடி

ஒரு பிள்ளையின் அச்சமாகிய
அந்த காரத்தில்
பளபளக்கும்
வாள்கள் தந்த
அழிவு எவ்வளவு
ஆறாய் ஓடிய குருதி எவ்வளவு

**ஆங்கில மூலம் : டெறிக் த சில்வா**
**தமிழில் : சோ.பத்மநாதன் நன்றி :**
**தென்னிலங்கைக் கவிதைகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகக் குறிப்பு

♦ **ஸ்ரீ பிரசாந்தனின்**

**"அந்தரத்து உலவுகிற சேதி"**

பிரசாந்தன் மரபு இலக்கியச் செல்வங்களுள் திளைத்து நவீன இலக்கியப் பாதையை நோக்கி நகருகின்றவர்.

பிரசாந்தனின் கவிதைகளும் எங்கள் பலரது கவிதைகளைப் போலவே இயற்கையையும் சமகால மனித வாழ்வையும், வீரத்தையும், விட்டு விடுதலையாகி தம் காலத்து நாயகிகளையும், காதலையும், மக்கள் எழுச்சியையும் அவர்தம் கனவுகளையும் பற்றிப் படர்ந்து நிமிர்கின்றன. எனும் வ.ஐ.ச.ஜெயபாலன் அவர்களின் கனதியான அணிந்துரையுடன் வெளிவந்திருக்கிறது 'அந்தரத்து உலவுகிற சேதி", அவலம் மிகுந்த வாழ்வின் வலியினை "சுத்தியலை எடுத்தார்கள், அது கண்டு பயந்து. சுண்டங்காய் அளவான ஆதார சுருதிச், சத்தை நசித்தார்கள். சந்ததியை மறித்த சந்தோசம்தான்" என்னும் வரிகள் சிறப்புற எடுத்துக்காட்டுகின்றன. முப்பத்து மூன்று கவிதைகளை உள்ளடக்கிய 'அந்தரத்து உலவுகிற சேதி" கவிதைத் தொகுதி பிரசாந்தனின் இரண்டாவது கவிதை நூலாகும். இந்திய விலை 35 ரூபா தொடர்பு: பூபாலசிங்கம் புத்தக நிலையம், 202, 340, செட்டிதெரு
கொழும்பு-11

♦ **இராஜேஸ் கண்ணனின்**

**"போர்வைக்குள் வாழ்வு"**

"எல்லாக் கவிதைகளிலும் அடிநாதமாக ஒரு கவிதைச்சரடு கவிதைகளின் ஊடே ஓடிக் கொண்டிருக்கின்றது. போரும் அது ஏற்படுத்திய வடுக்களும் மக்களின் வாழ்வை எவ்வாறு சிதைத்துவிட்டது என்பதும், அந்த இழந்துவிட்ட வாழ்வினூடே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்திருத்தலுக்கான தேடலும் அது மானிடத்தை நோக்கியதாகவும் அமைந்து விடுவதனை இத் தொகுதியின் கவிதைகள் சுட்டி நிற்கின்றன என சு.குணேஸ்வரன் அணிந்துரையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மானிட தன்மையின் தற்கால நிலைமையினை "மேலொருவன் தந்துவிட்ட, மோப்பக் குணமதனால், மேதினியில் மோந்தலைந்து, மானுடத்தை தேடிக்காண்" என்னும் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

'முதுசொமாக' என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதி மூலம் அடையாளம் பதித்த இராஜேஸ்கண்ணனின் "போர்வைக்குள் வாழ்வு" கவிதைத் தொகுதி சமூகத்தின் இயல்பான வாழ்வு பறிக்கப்பட்ட வேதனையை வெளிப்படுத்தி நிற்கிறது.

வெளியீடு - சாத்வீக சுருதி, இமையாணன், உடுப்பிட்டி

### ♦ சி.வி.வேலுப்பிள்ளையின் 'இலங்கை தேயிலைத் தோட்டத்தினிலே' இரண்டாம் பதிப்பு

சக்தி பால - ஐயாவின் தமிழாக்கமும், சி.வி.வேலுப்பிள்ளையின் ஆங்கில மூலமும் ஒரே நூலில் இடம் பெற்றிருக்கின்றது. "சக்தி பால ஐயாவின் தமிழ் மொழிபெயர்ப்பு உண்மையான சி.வியின் உணர்வீச்சை வெளிக்கொணரவில்லை என ஒரு விமர்சனம் பலராலும் முன்வைக்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாகவே இந்த இரண்டாம் பதிப்பினை படிப்பவருக்கு வசதியாக ஆங்கில மூலக் கவிதையுடன் இணைந்தே பதிப்பிக்கின்றேன்' எனும் மயில் வாகனம் திலகராசாவின் முயற்சி பாராட்டத்தக்கது.

விலை 350 ரூபா

தொடர்பு மயில்வாகனம் திலகராஜா,

இல.05 முதலாம்மாடி

உவது ரோகினி ஒழுங்கை, கொழும்பு 1.

♦ **பெரிய ஐங்கரனின் "ஞானக்கண்"** "உலக இலக்கியங்களிலெல்லாம் சிறப்பித்துப் பேசப்படும் குறியீடு படிமம்" என்பவற்றையும் புதுக்கவிதையின் நுட்பங்கள் "உத்திகள்' ஆகியவற்றையும் இச்சிறு நூலின் கண்ணே இயன்றவரை பரிசோதித்துப் பார்த்திருக்கின்றேன் எனக் கூறும் பெரிய ஐங்கரன் தொகுப்பில் 26 கவிதைகள் உள்ளடக்கியுள்ளன. மானிட வன்முறை வழக்கமாகிவிட்ட நிலைமையினை, "சீ., மூளைகெட்ட பிணம், ஒரு, துப்பாக்கியையாவது, தூக்கி வந்திருந்தால், இந்த இழிநிலைக்கு ஆளாகியிருக்குமா என்ன..!" எனும் வரிகள் வெளிப்படுத்துவதோடு, 'உடும்புக்கு நோய் வந்தால், என் உடம்புக்கும். மருந்து தேவைப்படுகிறது' எனும் வரிகள் தத்துவார்த்த நிலையினை வெளிப்படுத்து கின்றன.

இயற்கை நிகழ்வுகளினூடாகவும் சமகாலப் பிரச்சனைகளினூடாகவும் வாழ்வு பற்றிய தத்துவார்த்தத்தை தேடுவனவாக இவரது கவிதைகள் உள்ளன.

விலை: 150 ரூபா

தொடர்பு:பெரிய ஐங்கரன், புலோலி தெற்கு, புலோலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வஸிம் அக்ரமின்**

**'மண்ணில் துழாவும் மனது'**

சராசரி மானிட வாழ்வு பற்றிய ஏக்கம் தான் இத் தொகுதி முழுக்க விரவியுள்ளது. அவனது வாழ்வுக்கு மிக அண்மித்துள்ள மரணத்தின் செய்திதான் ஆங்காங்கு பேசப்படுகிறது. வாழ்வின் மிகப்பெரும் சுமையை இத் தொகுதியின் ஒவ்வொரு கவிதையும் உணர்த்துகிறது. என விரிவுரையாளர் றமீஸ் அப்துல்லாஹ் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. 'விடியலைத்தேடும் விழிகள்' எனும் கவிதையில் 'விடியல் யார் யாராலோ, விடிவிக்கப் பட்டிருக்கிறது. ஆதலால், நிஜ விடியலை, தரிசிக்கும் வாய்ப்பை இழந்திருக்கின்றேன்' எனும் வரிகள் அனுபவபூர்வமாக போர்ச்சூழலை வெளிப்படுத்துகின்றன. இத்தொகுதியின் மூலம் ஈழத்துக் கவிதையுலகில் வஸிம் அக்ரம் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

விலை 90 ரூபா

தொடர்புஹ வஸிம் அக்ரம்,

78B, Jeyanthi Mawatha, Anuradhapura.

**அறிமுகக் குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பி வையுங்கள். 2007 ற்கு முன் வெளியானவை அறிமுகக் குறிப்பில் இடம்பெறமாட்டாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

உங்களது முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள். நீங்களும் எழுதலாம் கவிதை இதழின் மூலம் புதிய பல எழுத்தாளர்களை, கவிஞர்களை அறிமுகம் செய்யும் பணி, தமிழ் இலக்கியத் துறைக்கு வளம் சேர்த்து வருவது கண்டு மகிழ்கிறேன். கவிதைகளில் காணும் புதிய ஆழமான கருத்துக்கள் சிந்தையைத் தூண்ட வல்லன. இதழின் வடிவத்தில் சில மாற்றங்களை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது

**கலாநிதி மா. கருணாநிதி கொழும்பு**
**பல்கலைக் கழகம்**

## வெல்க!

"நீங்களும் எழுதலாம் "ஓராண்டு சிறப்பிதழாய்
நிலைத்த புகழ் கொண்டு
தான் வர வுள்ளதெனத் தகவல் அறிந்ததனால்
தாசன் யானும்
மன மகிழ்ந்தேன்!
கவிதையிதழ் மண்ணின் புலர்வுக்கோர்
மகுடம் ஆகித்
தனபால சிங்கத்தின் தளராத தமிழ்முயற்சி
தனித்தே வெல்க!

**- அ.கௌரிதாசன்**
**- ஆலங்கேணி கிழக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைகள் புறமொதுக்கப்பட்டு,
அகமனதால் ஆத்திரப்பட்டுத்
தவிக்கும் ஆக்கவாதிகளின்
படைப்புக்களை இனங்கண்டு
வெளியுலகிற்கு 'வெளிச்சம் போட்டுக்
காட்ட வேண்டுமென்பதே
என் விருப்பம்
நீங்களும் எழுதலாம்" சஞ்சிகை அதை
நிச்சயம் நிறைவு செய்யும்
என்றே நம்பலாம்.

**- அம்மான் -**

**கைவேலி புதுக்குடியிருப்பு**

**ஆண்டுச்சிறப்பிதழை கணினி மயப்படுத்து வதில் உதவிய ஆர்.நித்தியா** (Edge Net Cafe- **உவர்மலை) அவர்களுக்கும் 'நீங்களும் எழுதலாம் இதழை தொடர்ந்து அழகுற அச்சிட்டு உதவும் 'அஸ்ரா பிரின்ரர்ஸ்' பதிப்பகத்தினருக்கும் நன்றிகளை 'நீங்களும்எழுதலாம்" தெரிவித்துக்கொள்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் தமிழாக்கமும்

My men!
They lie dust under dust
Beneath the tea,
No wild weed flowers
Or memories token
Tributes raise
Over the fathers' biers!
O Shame what man
Ever gave them a grave?
Only god in His Grace
Covered them with His grass.

### புழுதிப் படுக்கையில்

புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகழ் மொழி இல்லை
பழுதிலா அவர்க் கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை.

ஊனையும் உடலையும்
ஊட்டி இம் மண்ணை
உயிர்த்தவர்க்(கு) இங்கே
உளங் கசிந்தன்பும்
பூணுவாரில்லை - அவர்
புதைமேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்.

என்னே மனிதர்
இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்
தன்னை மறைக்கத் தானோ
அவ்விறைவனும்
தளிர் பசும் புல்லால்
தரை மறைத்தனனோ

**மூலம்: கவிமணி**
**சி. வி. வேலுப்பிள்ளை**
**(தேயிலைத் தோட்டத்திலே**
**என்ற கவிதை தொடரிலிருந்து)**

**தமிழாக்கம் (தழுவல்)**
**சக்தி அ. பால-ஐயா**

**ISSN 1800-3311**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைகாசி - ஆனி 2008**

# நீங்களும்

# எழுதலாம்

நீங்கள் -02 எழுத்து -07



**தடைகளைத் தகர்த்து**

**தகவுகளைத்தேடி**

**இருமாத கவிதை இதழ்**

**விலை 25/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-07

**இருமாத கவிதை இதழ்**

*மே – யூன்* **2008**

**ஆசிரியர்**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

□அஸ்ரபா நூர்டீன் □சபா ஜெயராசா
□சண்முகம் சிவகுமார் □ ஷெல்லிதாசன்
□சி.மார்க்கண்டு □நற்சத்திரபிட்டியான்
□ஏ.ஆர்.நாகூர் □சூசை எட்வேர்ட்
□பாவேல் □கோவை அன்சார்
□சி.குமாரலிங்கம் □தயானந்தரூபி
□செ.ஞானராசா □தாமரை
□மனித ஞானி □கௌரி மோகனதர்சினி
□வி.புருசோத்தமன் □மகேந்திரா மயூரதன்
□சயந்தன் □யோ.தேனுசா
□வி.ஆர்த்திகா □கவிக்கள்வன்
□தி.காயத்திரி □தாமரைத்தீவான்
□சரோஜா ராமநாதன் □செ.கணேசன்
□எம்.என்.எம்.ஸப்ரத் □பரா.ரமேஸ்
□என.சந்திரசேகரன் □வாகரை வாணன்
□எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

**கருத்தாடற் களம்- கலாவிஸ்வநாதன்**
**கவிதையில் முரண்- பெரிய ஐங்கரன்**
**மன்று- அறிமுகக்குறிப்பு- வாசகர் கடிதம்**
**மூலமும் பெயர்ப்பும்**

**வடிவமைப்பு**

**எஸ்.யசோதரன்**

**அட்டைப்படம்**

**ஓவியர்.கே.சிறீதரன்**

**தொடர்புகளுக்கு,**

'நீங்களும் எழுதலாம்'

**108/1, திருமால்வீதி, திருகோணமலை.**

**தொ.பே: 026 2220398.**

e-mail - neenkal@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரிவுப்படுத்தப்படவேண்டிய பார்வை – பாடுபொருள்**

நீங்களும் எழுதலாம் கவிதையிதழ் படைப்பாளிகள். வாசகர்கள் பங்களிப்புடனும் ஊடகங்களினதும் ஆதரவுடனும் ஓராண்டைப் பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

நாடு (இலங்கை) பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது. இன முரண்பாடுகளுக்கு தீர்வு காணக்கூடிய அரசியல் அணுகுமுறைகள் எதுவும் தென்படவில்லை. உலக அரங்கிலும் நன்மதிப்பை இழந்து கொண்டிருக்கின்றது. அண்மையில் ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் உறுப்புரிமைப் பெறுவதற்கான தேர்தலில் அடைந்த தோல்வி இதனையே எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான அவலம் மிக்க சமூக நிலைமையில் பாரதி கூறியது போன்று 'பிறர் ஈன நிலை கண்டு துள்ளும் ஆயுதமாக' கவிதைப் பயன்படுத்துவதோடு பேசாப் பொருளை பேசக் கூடிய அகன்ற பார்வையுடையதாக அதன் பாடு பொருள்களும் விரிவு படுத்தப்படவேண்டும். வெறுமனே குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுகின்ற விதமாக அதன் பாடு பொருள் தேங்கிவிடக் கூடாது. பேசப்படாத பல விடயங்கள் பேசப்பட வேண்டும் பார்க்கப்படாத விடயங்கள் பார்க்கப்பட வேண்டும். எழுத்தில் வடிக்கப்படல் வேண்டும்.

ஆம் நீங்களும் எழுதலாம்

அன்புடன்
ஆசிரியர்

களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்களும் எழுதலாம் ஓராண்டுச் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வில் முறையே சிரேஸ்ட சட்டத்தரணி .ஆ.ஜெகசோதி, இதழாசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம், ஊடகவியலாளர் குருநாதன், கவிஞர் தில்லைமுகிலன், எழுத்தாளர் டாக்டர்.ராஜதர்மராஜா, கவிஞர் ஷெல்லிதாசன், வல்வை.ந.அனந்தராஜ், திருவேணி சங்கமம் எம்.வதனரூபன், ஏஅசனார்-J.P.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஷ்ரபா நூர்டீன்**

நானும் நீயும்
அருகருகிருந்து பயணம் செய்கின்றோம்.
கறுப்பு பர்தாவுக்குள்
முகம் மறைந்தவளாய் நான்!
எனினும் எனக்கு
இவற்றின் மீது வெறுப்பில்லை!
பால் அருந்தும் என் சிறு குழந்தை
மடியில் இருந்து வதைக்கிறது
பக்கத்தே மூத்தவனும்
அதற்கு மூத்தவளும்!
காற்றுப்புகா நெரிசல்!
நீ சுதந்திரமானவன்! ஆண்!
சிறகில்லையெனினும் நீ
வான்வெளி மிதப்பாய்! அக்கணம்
உனக்கு
மனைவியும் சிறுகுழந்தைகளும்
இருக்கவில்லை!

படகின் மேல்தளம் செல்வாய்!
காற்றை முகர்வாய்! களிப்புறுவாய்!
சற்றே அலுக்கையில்
இருக்கையில் அமர்வாய்!
என்னருகில் ஓர் அந்நியனைப் போல!
சிலவேளை
எதிர்த்திசைப் பெண்களைக்கூட
நீ ரசித்தவண்ணம் பயணிக்கலாம்!
அழகான நீலக்கடலும்
அதனைத் தொட்டுக்கொண்டு
தெரிகின்ற வெண்நீலவானும்
அதற்குள் முகம் காட்டும்
சிறிய மலைக்குன்றுகளும்
துள்ளுகின்ற மீன்களும்
பார்ப்பதற்கு அழகாய்இருக்கும்!

எனினும்-
நான் முகத்திரை அகற்றிடில்
அந்நிய ஆடவன் பார்த்திடல்
கூடும்!
அது *ஹறாமானதென
எனது கணவனாகிய நீ
தண்டிப்பாய்!

**நானும் நீயும்**

*ஹறாம் - விலக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபா. ஜெயராஜா**

கனவுகள் பனை மரங்களின்
பயணப்பொதிகளாய் நின்றன.
சோளகம் சுமந்த
மயிலை வெளிப்புனற்காற்று
புத்தகங்களைப் புரட்டின.-

பூவிழிகளைப் புன்னகையாக்கி
சிறு தேர் உருட்டும்
செவ்வந்திச் சிறுசுகள்
அகதி முகாம் விளிம்பில்
அமர்ந்தாட -
புத்தகங்கள் புனிதமிழந்தன.

**புனிதமிழந்த புத்தகங்கள்**

**சண்முகம் சிவகுமார் கொட்டகலை**

என் விளக்கு திரி
வழியெங்கும்
உன் முகம் பூத்த
காலடி தடங்கள் ...
என் நதிமுழுதும்
உன் ஆடுகளின்
தாக எச்சங்கள் ...
பத்திரமாய் இருக்கிறது
உன்முதல் முத்தத்தின்
நகத்தடம் மனதெங்கும் ...
என் அப்பிள்கள் ஏடன் தோட்டத்தின்
வழிநோக்கியே ...
என் சிற்றெறும்புகளின்
'ம்' முன்
என் சிம்பெனி வீண் ...

என் முகத்தின் மடியில்
முட்கள் காடாகியிருக்கிறது ...
நேற்றைய பகிர்வுகள்
என் இதயங்களின் தண்ணீர் கேட்டலைகிறது
...
ஆயினும் ...
நீ மீட்டெடுப்பாயென
நீயில்லா அறைகளில் வழிகிறேன்
வெறுமைகள் விற்கும்
பாத்திர வியாபாரியின் தலையுறையோடு ...!

**என் தலையுறையின் தேவதைக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷெல்லிதாசன்

மாதுளம்பூ மாதுளம்பூ
மனங் கவர்ந்த மாதுளம்பூ
நல்ல சில மனிதரது
மனசு போல அழகிய பூ

செக்கச் செவேல் என்று நல்ல
சிவந்த இதழ் விரிந்திருக்கும்
பச்சையிளம் பாலகரின்
கன்னத்தில் அது சிரிக்கும்

எந்த இன மனிதரதும்
இரத்தமெல்லாம் செந்நிறத்தான் - என
சொல்லாமற் சொல்லி நித்தம்
பூக்குது பார் மாதுளம்பூ

பாட்டாளிக் கொடிக்கும், அந்த
பூவுக்கும் உறவுமுண்டோ – அவன்
போராடிப் பெற்ற வண்ணம், மாதுளம்
பூவுக்கும் சொந்தமடி

**செம்மாதுளம்பூ**

சி.மார்க்கண்டு புலோலி

உன்னைத் தொட்டுத்
தாலி கட்டிய அன்று ...
கால்மாறிப் போக இருக்கையில்
கண்ணீரில் குளித்தாய்-
உறவுகள் உன்னைச்சூழ
உருகி உருகி அழுதாய்
நானும் கூடத்தான் ...
மனதுக்குள் .... உனக்காக
நீ அழுது வடிந்தது
ஏனென்று
உனக்குத் தெரிந்ததோ இல்லையோ ....
என்னிடம் வந்த பின்
நீ ஒரு இடமும்
செல்ல மாட்டாய் என்பது.

**என்னவன் நீ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**-நட்சத்திரப் பிட்டியான்-**

உன் நாக்கு அழுகுக!
எழுதுகோல் சபித்தது.

நீர் வாளியான உன்நாக்கில்
பல் முளைத்தது பற்றியும்,
அது வாந்தி எடுத்தது பற்றியும்,
அந்த வாந்தியின் வதை பற்றியும்
கடவுளுக்கு வருத்தம் தெரிவித்து
அழுகுக ... அழுகுக... அழுகுக நாக்கே!
என்று
எழுதுகோல் சபித்தது.

கடவுளும் தலையசைத்தார்
உன் நாக்கு நிறங்களைப் பேசி
பேதங்களைக் கொண்டாடியது.
விஷங்களைக் கொண்டு
பிரிவினை பேணியது
அழுகுக ... அழுகுக... அழுகுக நாக்கே!

உனக்குத் தெரியுமா?
காற்றினைக் காயம் செய்ய முடியாது.
காற்றின் சுவடுகள் கண்ணில் தெரியாது.
காற்று திசையின் கரங்களை உடையது.
காற்றை உன்னால் சிறையிட முடியாது.
காற்றைப் பழித்தால் உண்டான சாபம்
உன் சந்ததி இனிமேல் தழைக்காது
போகவும்
சரிந்து சாம்பலாய் மண்ணில் ஆகவும்
சரிவே உனக்கு வாழ்வென ஆகவும்
என்றெல்லாம் உண்மை எழுதுகோல்
சபித்தது
உனக்குத் தெரியுமா?
"அழுகுக ... அழுகுக... அழுகுக நாக்கே!
எங்கே ஒரு தரம் நாக்கை நீட்டு
நீண்ட புழுக்கள் நெளிவதைக் காண்பாய்.

**எழுதுகோல் சபித்தது**


கவிதைக்கான
பயில் களம்
பரிசோதனைக் களம்
காத்திரத்தின் களம்
கருத்தாடற் களம்
விளக்கக் களம்
விமர்சனக் களம்
} நீங்களும் எழுதலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமலை ஏ.ஆர்.நாகூர்**

மரகத மணி கொள்ளையில்
மயக்க வண்டுகளுக்கு
பூக்களின்
புலம்பல்கள் புரிவதே இல்லை!
மதுகுடித்த மாராப்பால்
இந்த வண்டுகள்
மாரடைத்து தொலைவது நிஜம்!

இதயத் தந்திகளில் ஏனோ..!
மனிதனுக்கு
மறதிகள் ஜாஸ்தி!
மரண வாசல்களை அவர்கள்
மறக்காமல் திறக்கும்வரை!

பூகம்பங்களினால்
உடைந்துபோகும் - இந்த
பூமியின் முதுகுகளுக்கு
இயற்கை அனர்த்தங்களை
இழுத்துநிறுத்த முடிவதில்லை
ஏன் தெரியுமா.........?
குண்டுகளின் நச்சுக்களில்
குளிர்காய்வதால் - அதன்
விழிப்பார்வைகளில் எல்லாம்
எறிகணைகளின் எச்சங்கள்!

முகில்களின் முரண்டுகளையும்
மின்னல்களின்
வன்முறைகள் பற்றியும்!
வாதாட மறுக்கிறது இந்த மழைத்துளிகள்!
பூமியில் விழுந்து
புதைந்து போனாலும்
மறுபிறப்பு ஒன்றால்
மறுபடியும் உயிர்ப்பதாக – அதன்
மனசுக்குள் ஒரு மாராப்பு !

தம் இறக்கை பற்றிய
மதிப்புரைகளை
தமக்குள் எழுதிக்கொள்ளாது
இந்தப் பறவைகள்
வான ஊர்வலத்தில் அப்படி ஒரு
வரவேற்பு ! ஆனால் .....?
வசமாகாத காற்றின்
காந்த சக்திகளுக்குள் பதிவாகிறது
பறவைகளின் விபத்துகள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ எரியும் சூரியனுக்கு
அந்தியின் பிரசன்னம் பற்றி
எந்த ஆட்சேபனைகளும் இல்லை
அதன் அனல்களை எல்லாம்
இரவின் மூச்சுகள் சேர்ந்து
இமைக்காமல் வாங்குவதால்
அஸ்த்தமனத்திலே இதன் ஆத்மா
மெல்ல அடங்கிவிடுகிறது!

உலகப் பந்தை
காலத்தின் கைகள்
உருட்டிப் பார்ப்பதால் ..
மறுமையின் மனசாட்சியில் மட்டும்
மாற்றம் நிகழ்வதில்லை !
விதைத்த வினைகளுக்கு ஏற்ற
விலைகளே ....
தீர்ப்புகளில் தீட்டப்பட்டிருக்கும்
**திருத்தப்படாத தீர்ப்புகள்**

**சூசை எட்வேட் - அன்புவழிபுரம்**

பலமாகத்தட்டி கூப்பாடு போட்டால்த்தான்
கடவுளும் கதவைத்திறப்பார்.

---

துப்பாக்கி தூக்கிய இலட்சியவாதிகளை
முத்தமிட முடியா
துர்ப்பாக்கிய வாழ்வென்ன வாழ்வோ.

---

அறிவுக் குறைவை அவனே அறியா
நிலையே
ஆபத்தான நிலை ஆகும்.

---

தீய எண்ணம் வராமல் காக்கின் போதும்
தீயவை தீண்டாமல் வாழலாம்.

---

புனிதமான ஆசை மனப்பூர்வமாக இருந்தால்
தானே நிறைவேறும் தானே.

**தெருக்குரல்**

ஆக்கபூர்வமான கருத்துக்கள்,
விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோவை அன்சஸார்- கொழும்பு**

அவர்களுக்கு பதவிப் போராட்டம்
எங்களுக்கு வாழ்க்கைப் போராட்டம்
அரிமா வேங்கை மோதலில்
அவதியுறுகின்றன மான்கள்!
அப்பாவிகள் அல்லலுற
அப் - பாவிகளின் வெறியாட்டம்
மனிதர் மனிதரை
பழிவாங்கச் சொன்ன மதம்
தர்மம் போதித்த பௌத்தமா
அன்பு வழி சொன்ன இந்துமதமா
கருணைக்கு பேர் பெற்ற கிறிஸ்தவமா
ஒற்றுமைக்கு வித்திட்ட இஸ்லாமா?

***சொன்னது யார் இதுவா அவர்களா?***

**பாவெல்**

எத்தனைச் சோதனைச் சாவடிகள் ....?
இருக்கட்டுமே.
நாம் சலிப்பதுண்டு
வாகனத்திலிருந்து
இறங்கி -நடந்து
நம்மை அங்கமெல்லாம் தொட்டுத்தடவி
அனுமதித்து
அட்டைகளில்
நம் அடையாளத்தை நிருபித்து
கடந்து -தொடர்ந்து ...... ம் ம்
நமக்கு கோபம் வருவதுண்டு.
ஆனாலும் என்ன ....?
படித்த (?)
நம் இயல்பு
அடங்கிப் போவதை
நியாயப்படுத்தும்
அவமானம் இதெல்லாம் என்பது
நம் உணர்வில்
உறைப்பதில்லையோ?
இதெல்லாம்
எம் பிரச்சனை அல்ல.
என் வீடு-- என் உறவுகள்
எமது தொழிலிடம்
அங்கெல்லாம் தான்
அவற்றுக்குள் தான்
எமக்கு ரோசம் பொத்துக்கொண்டு
வருவதுண்டு.

***ஏன்?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகக் குறிப்பு**

**எஸ்.புஸ்பானந்தனின்**

**'இரண்டு கார்த்திகைப் பறவைகள்'**

"................. இதுவரை எடுத்துரைத்த இவரது கவிதைகளின் பரவலாகக் காணப்படுகின்ற 'சுவை புதிது' ஆன தன்மை ஒரு புறமாக ஆழ்ந்து நோக்கும் போது, புதிய தலைமுறையினரில் இக்கவிஞர் போன்று வேறு எக்கவிஞரும் எமது கிராமத்தில் அல்லது மண்டூரில் அழகுக் கோலங்களையும் அவலக் கோலங்களையும் திறம்படக் கூறியிருக்கவில்லை. என்ற விடயம் இத்தொகுப்பினூடாக வெளிப்படு கின்றமை புலப்படுகின்றது" எனும் கலாநிதி செ.யோகராசாவின் கூற்று நோக்கத்தக்கது.

'என் இதய ஊரை
தீ மூட்டிய பறவையே......
...... கலப்பை மனிதரின்
இரைப்பையில் அல்லவா..
நீ..... நெருப்பு முட்டையிட்டாய்'

எனும்வரிகள் இனப்பிரச்சனையின் ஆழத்தையும்

'இரைப்பைக்குள் புல்லை நிரப்பிய
கன்றுத் தாச்சியை
தட்டிச் சென்று
அடிமாடாய் ஆக்கியவனும்
பத்துமாதம் தாயின் கருவில் கிடந்த
மனிதப் பூச்சியா'

எனும் வரிகள் மிருகங்களின் மீதான இரக்க உணர்வையும் அழகாக வெளிப்படுத்துகின்றன

அரசியல், காதல், இயற்கை, கிராமத்து மனிதர்கள் என்று பல விடயங்களையும் அழகுறத் தொட்டுச் செல்லும் எஸ்.புஸ்பானந்தனின் தொகுப்பில் 35 கவிதைகள் உள்ளன.

---

**இ.தயானந்தரூபி**

பகற்பொழுது இரவுக்காய்....
உன் நினைவுகளால்
பகல் என்னில் வெறுப்படைகிறது
இரவு வரும்வேளை - நான்
பகலிற்கண்ட கனவுகள் நினைவுகள்
மிதந்து செல்லும்
இரவு எம் இணைவிற்கு
பூ மேடையிட்டுக் காத்திருக்க
சேரவும், சேர்ந்தே மலரவும்
நிலவொளிக்கு முன்
ஆயுத ஒளியும் அனலும்
ஊர் நிலவரமாதலால்
நீ .............. நான்

## உதிரும் நினைவும் கனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ.ஞானராசா, அன்புவழிபுரம்**

உலகைப் படைத்து
உயிர்களைப் படைத்தேன்
மனிதனை மட்டும்
அவன் மனமறியாமல்
படைத்து விட்டேன்!

சுருக்கமாய்ச் சொன்னால்
பெருக்கத்தை விரும்பினான்
காட்டை அழித்து
கடலை கலக்கினான்
மேட்டு நிலத்தை
சேற்றுக்குள் புதைத்தான்

மாட்டுப் பட்டான்
முறையாக கறைபடிந்து
மாட்டுப் பட்டான்

கண்டு பிடிப்பென்று
குண்டு வீசினான்
விருந்தை அதிகரிக்க
மருந்து தெளித்தான்

மண் மதிப்பிழந்தது
விண் கொதிப்படைந்தது

வெள்ளப் பெருக்கு
நில நடுக்கம்! கடல் சீற்றம்!
நான் கொடுத்த தல்ல
அவனாகத் தேடிய சீதனம்

நகைத்தான்! நகைதான்
சேர்த்தான் பகைத்தான்!
மிகத்தான் பாடுபட்டான்
ஆனாலும் பாவம்
ஆசையால் அழிந்தான்

என்னை ஏசினான்
இயற்கையையும் சபித்தான்
தன்னைக் காப்பாற்ற வேண்டினான்
முடியாதப்பா! – நீ
முயலாதது எம் தப்பா?

## இறைவனும் இயற்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாமரை, ஆரையம்பதி**

போர்த்தீயின் தணல்
கண்ணில்பட்டதாய்
கார்மேகம் கதறிஅழ
இயற்கை அழிவோ - இல்லை
செயற்கை அழிவோ
இலங்கைக்கு எனப்
பட்டிமன்றம் நடாத்தும்
பஞ்சாங்கங்கள்!
வீட்டுக்கு வீடு
வாசற்படி பழமொழி
அகதி முகாமுக்கு அகதிமுகாம்
ஆலமரத்தடி புதுமொழி! - இதில்
வரவிருக்கும் சித்திரை
வருடப் புத்தாண்டுக்காய்
பட்டாசும் பட்டமும்
பட்டாடையம் பட்சணமும்
கேட்கும் குழந்தைகளின்
மூக்குச் சிணுங்கல்கள்!
விலைவாசிகளின் ஏற்றத்தால் - அவர்கள்
ஆசைகளை நிறைவேற்றமுடியாமல்
விழிபிதுங்கும் தகப்பன் முதலைகள்!
எரிகின்ற வயிற்றுக்காக
எரியாத அடுப்புக்கு
விறகு தேடி — தென்னம்
பாளைகள் பொறுக்கும்
ஏழை மனைவிகள்
இவர்கள்!
நேற்றைய பணக்காரர்கள்
கொஞ்சம் கூட
வஞ்சகம் பேதம் பார்க்காமல்
வறுமைக் கோட்டுக்குக் கீழ்
வீழ்த்தி விட்ட அரசாங்கம்!
வெளுக்காத கிழக்கில் - அடித்து
வெளுத்து வாங்கிய வேட்டுக்களின்
வெற்றியில் ஆட்சிகளின் அதிகாரம்
சுற்றியுள்ள பன்னீர்க்குடத்தில்
குழந்தையில்லாக் கருப்பைத்தீவாய்
உழைப்பு இல்லா இலங்கைத்தீவு-இதில்
இளவேனில் இசைக்காது
இசைத்தாலும் இனிக்காது
சித்திரைவருடப் புத்தாண்டும்
சித்திரவதைப் புத்தாண்டே

**கருப்பைத்தீவுப் புத்தாண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மனித ஞானி -

பூச்சி தன் முதுகில்
புத்தகத்தை ஏற்றிச்
சுமந்து சென்றதறிவீரோ?
பூச்சி தன் கையில் புத்தகங்கள் காவி
நடந்து சென்றதறிவீரோ?
பூச்சி தன் பையில்
புத்தகங்கள் நிரப்பிப்
பவனி வந்ததறிவீரோ?

'வாசிப்பு மணம் வீசி
வாழ்கின்ற பூச்சி ' எனத்
தன்னைப் பிறர் என்னும்
யோசனையில் தினந்தோறும்
மலரை இதழை இன்னும் ...
மணம் புரியா மொழியில் உள்ள
புத்தகங்கள் எத்தனையோ
அத்தனையும்...
நாளுக்கு நாள் சுமந்து
நடைபயிலும் பூச்சி இது.

வாசித்து விட்டது போல்
வா(ய்) சிக்கா வாய் வீச்சில்
பேசிச் சில கதைகள்
பெய்யும் இப் பூச்சி
பேச்சின் இடைக்கிடையே
மூச்சுத் திணறிப்
புரியா மொழிகக்கித்
தன் முட்டொழியும்

கேட்டவர் திகைப்புறுவார்
பார்த்தவர் பதைபதைப்பார்
' வேட்டொன்று வைத்தார்
வார்த்தையினால் ... ' என்று
வேறு சிலர் கூறிடுவார்.
' பூச்சி கையில்
புத்தகந்தான் தினந்தோறும்'
' ஆங்கிலத்தில் பூச்சி
அலுக்காமல் வாசிக்கும்
' மலங்கழிக்கும் போதும்
மலர் ஒன்று படிக்கும் '
பூச்சிக்குப் புகழ் மாலை
ஒவ்வொன்றாய் விழ விழவே
பூச்சிதன் முதுகில்
புத்தகத்தை ஏற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சி தன் கையில்
புத்தகங்கள் காவும்
பூச்சி தன் பையில்
புத்தகங்கள் நிரப்பும்

முதுகு கை பையிலெல்லாம்
புத்தகங்கள் விளங்கும்
விரியாது ... ???
தன் தலையின் பின் புறத்தே
வாசிப்பு ஒளி வட்டம்
வானவில்லாய்ப் பூச்சி விடும்.
இது பெருமை.
மிகப் பெருமை எதுவென்றால்
புத்தகத்தை ஒரு நாளும்
பூச்சி விரிக்காததுதான்.
அதை விடவும் பெருமை
" அரிக்காது " இருந்தால்
அதுக்கு வரும்.

**பூச்சி சுமக்கும் புத்தகங்கள்**

**தி.காயத்திரி வவு.கல்.கல்.**

காரணம் அறிந்திடாத
கவலையின் முடிவிலியில் நின்று
அடிக்கடி பயணிக்கிறேன்
இறக்கைகள் முளைக்கின்றன.

வானமும் விரிகிறது ....
நிஜ உலக வாழ்க்கைக்கு
நிர்ப்பந்தத்தால் திரும்பும் போது
சூனியமாய் என் பயணம்
பாரமாக என் இதயம்

மனிதம் மரித்து விட்ட இடத்தில்
மனச்சாட்சியைத் தேடுகின்ற
ஒரு குருட்டுக் கவிஞனின்
கற்பனை போல
ஒவ்வொரு நாட்களும்
ஒவ்வொரு தேடலில்

**கவலையின் முடிவிலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயில் களம்**
**மாணவர்களுக்கானது**

**மகேந்திரா - மயூரதன்**
**தி/இந்துக்கல்லூரி**

படிப்பே உயிர்தான்
ஆனால்
படிப்படியாய் என்னுயிரோ....
எப்படித்தான் உரைத்திடுவேன்
புலமைப் பரிசில் பரீட்சைப் படிப்பாம்
அப்பப்பா இப்படிப்பு....
அதிகாலை ரியூசன் அடுத்துப் பள்ளி
பின்னேர வகுப்பு பிறகும் ரியூசன்
அந்தப் பிள்ளையிலும் என்ரபிள்ளை
அந்தப் பள்ளியிலும் இந்தப்பள்ளி
அனைத்து சக்தியின் ஆவலும்
புள்ளியில் மட்டும்
அரைக்கப்படுவதோ பிஞ்சுத்தலை
சக்கைப்போட்டு சக்கைவாங்கி
செக்காக்கும் படிப்போ
எப்பிறப்பிலும் வேண்டாம்!

## எப் பிறப்பிலும் வேண்டாம்

**வி.புருஷோத்தமன்**
**தி/சென்ஜோசப் கல்லூரி**

தலையிழந்த மரங்கள்
குருதிக் கறை படிந்த
தரைகள்!
பொட்டிழந்த பெண்கள்!
பொலிவிழந்த முகங்கள்!
கலையிழந்த மனங்கள்!
மெட்டிழந்த துப்பாக்கி
நுனிக் கவிதைகள்!
படிப்பிழந்த பாலர்!
துப்பாக்கி ஏந்திய சிறுவர்!
ஷெல் துளைத்த வீடுகள்!
முழத்துக்கு முழம்
சோதனைச் சாவடிகள்!
வேட்டொலிகள்!
மரண ஓலங்கள்!
இவைகள் தான் இன்று
இலங்கைத் தீவின் தடயங்கள்!

## தடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோ.தேனுஷா**
**தி/செல்வநாயகபுரம் இ.ம.வி**

மழையாய் பெய்தது விரோதம்
பயிராய் விளைந்தது யுத்தம்
வெள்ளமாய் ஓடுகிறது இரத்தம்
வேண்டுமோ இந்த யுத்தம்

அகிம்சை வழியில் அரசாள
தேவையில்லை ஆயுதமே
இம்மை உலகம் இனிதாக
எமக்கு வேண்டும் விடுதலை!

**விடுதலை**

**ஆர்த்திகா விஜயலிங்கம்**
**தி/சண்முகா இ.ம.கல்லூரி**

காலை தழுவிய அலைகளை
அன்று மகிழ்வுடன் ஏற்றபோது
எனக்குத் தெரியவில்லை - இவை
நாளை எம்மினத்தின்
காலை வாரித் தள்ளும்
சுனாமி அலையின்
குழந்தைகளென

**சுனாமி**

**சயந்தன்,**
**தி/சென்ஜோசப் கல்.**

பெண்ணே நீ நிலவென்றால்
பகலில் வரமாட்டாய்
சூரியன் என்றால்
இரவில் வரமாட்டாய்
வானவில் என்றால்
நினைத்தவுடன் வரமாட்டாய்
நிழல் என்பேன்
நித்தமும் நீ கூட இருப்பதனால்

**நிழல்**

**மாணவர்களே உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிக்கள்வன்-கொழும்பு

மைதானமே !
நீ
இனம் அறியாய், மதம் அறியாய்
உன்மீது பதியும் கால்களை
நீ
உனது புகழின்
வெற்றிப்படிகளாய் காண்கின்றாய்
ஆனால் ....
உன்மீது கால்பதித்து
பின் தலைநிமிரும் அணிகள்
வெறும் வறட்டு கௌரவத்திற்காய்
இடம்கொடுத்தால் உன்னில்
குருஷேத்திரத்தையும் படைப்பார்கள்
எத்தனை கொடுமை .......
இனம் அறியா மதம் அறியா
உன்னை இன்று ...
தலைவேறு கால்வேறாகல்லவா
பிரித்து விட்டார்கள்
தம்மையும் கூட இன்று
இருவேறு அணிகளுக்குள் முடக்கிவிட்டார்கள்
வெறிகொண்டு உன்மீது
விளையாட்டு ஒன்று தொடங்கிவிட்டது
விளையாட்டின் நடுவர்கள் கூட
"வெற்றி" கூற மட்டுமே .........

## கால்பந்து மைதானம்

**சி.குமாரலிங்கம்**

சட்டங்களைக் காட்ட வேண்டா
மட்டமான முறையதுவே
திட்டமாய் மறுவழி
சட்டத்திலே உண்டு

உதவிடுக உள்ளத்தால்
உத்தமமாகிவிடும் வாழ்வு
பதவிகளைக் கிரீடமாய்
பாரினிலே கொள்ளாதீர்

மாற்று வழி காண்க
போற்றிடும் வாழ்க்கை பெறுக
சேற்றினிலே செந்தாமரை
போற்றிட மலருதல் போல்

- சிகப்புநாடா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தாடற் களம்

சென்ற இதழில் வெளிவந்த அமரர் கவிஞர் சில்லையூர் செல்வராசனின் கற்றால் வருமோ கவித்துவம்? என்ற கட்டுரை தொடர்பானது......

## கற்றால் வரும் கருத்துவம்

**கலா விஸ்வநாதன்**

கவிதை ஒரு சுகானுபவம் கவிதையை இயற்றி, எழுதி பிரசவிக்கும் போது, ஏற்படுவது சுகமான சுகம்.
கவிஞனின் அனுபவத்தை, பார்வையின் கூர்மையை, கற்பனை கலந்து உற்பத்தி செய்யும் அற்புதமான களம் கவிதை.

கவிஞனும் மனிதனைப் போலவே பிறக்கிறான். கசடறக் கற்பதினால் கவிஞனாக உருவாகின்றான்.

'மொழி மனிதனின் நாகரிகம் மொழியின் நாகரிகம் கவிதை" என்கிறார் தீபம் நா.பார்தசாரதி. இன்றோ கவிதையின் நாகரிகம் புதுக் கவிதையாக பூத்திருக்கின்றது. பூரித்தும் இருக்கின்றது.

இத்தருணத்தில் கவிதைப் பற்றிய முழுமையான கற்றறிவு இன்றி கவிதையாக்கும் கவிஞர்கள் தொகை பெருகியிருக்கின்றது.
யாப்பிலக்கணம் தெரியாது புதுக்கவிதை புனைந்து விட முடியும்.

எனினும் கவிதைபற்றிய வரலாறு, சங்க காலந்தொட்டு, சமகாலம் வரை எழுதிய கவிஞர்களின் படைப்புகளின் பரிச்சயம் இன்றி முழுமையான கவிஞனாக முடியாது.

உணர்ச்சியின் ஓர் உச்ச வெளிப்பாடு கவிதையாகலாம். ஆனால் கவிஞனுக்கு தன்னைப்பற்றியும், தன் சூழல் பற்றியும் பூரண உணர்வு தேடல், தேடலால் ஏற்படும் தெளிவு திருத்தமாக தேவைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதினால் கருத்தாழமிக்க கருத்தழகுமிக்க, கவிதைகளை படைப்பாக்கம் செய்ய முடியும்.

பல கவிதையாக்கங்களை கற்பதன் மூலம் கருத்துவமிக்க கவிதைகளை கவித்துவமாக எழுதிவிட முடியும்.

மௌனமாய் வாசித்து, யோசிக்கும் சூழலில் கவிதையாக்கமும் காலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கும் பட்சம் நிச்சயம் காலத்தை வெல்லும் கவித்துவம் கடவுளைப் போல உணர மட்டுமே முடியும். ஆம், கவிதை ஒரு சுகானுபவம் கவிதை எழுதுவது சுகமான சுகம்.

| |
|---|
| உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம் (ஆ-ர்) |

**கௌரி மோகனதர்சினி**
**ஆலங்கேணி கிழக்கு**

உப்பும் சோறுமே எங்கள்
ஊட்டமுள்ள உணவு
ஓலைப் பாயே எங்கள்
ஒப்பற்ற பஞ்சனை
பருத்திசேர் கதருடையே எங்கள
பட்டாடை
ஏங்கிப் பெருமூச்சு விடுவதே
எங்கள் அனுபவிப்பு
ஓட்டுப் போடுவதே எங்கள்
உரிமை
இதனாற்றான்
எங்களை உறிஞ்சி ஏப்பமிடும் முதலாளிகள்
ஏழைகள் என்று 'முத்திரை' பொறித்தனரோ

**முத்திரை**

| |
|---|
| **அறிமுகக் குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பி வையுங்கள். 2007 இற்கு முன் வெளியானவை அறிமுகக்குறிப்பில் இடம்பெறமாட்டாது** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் சூனியம் கற்போம் - உள்ள
மற்றைய நூல்களைப் பார்க்கவும் மாட்டோம்!
இந்தப் படிப்புக்கள் போதும் - வேறு
எந்தப் படிப்பும் இதற்கிணை இல்லை!
சாமியை ஆடவும் வைப்போம் - ஒரு
சாட்டையில்லாமல் விழுத்தவும் செய்வோம்!
சாமியைப் பொய்யென்று சொல்வோர் - வந்து
சாட்டையடிகளைத் தாங்கிடுவாரோ?
பேயைத் துரத்தவும் செய்வோம் - பெரும்
பேரரவத்துடன் காடேற வைப்போம்!
நோயையும் மாற்றியமைப்போம் - சில
நூறாயிரத்தில் மடைபோடவைப்போம்!
எங்களைக்கேலி செய்தாரேல் - செம்பில்
இணையற்ற சூனியத்தகடு புதைப்போம்!
தங்கமாய் மின்னும் தகட்டில் - கூடு
சரிசெய்து நூலினில் கட்டவும் செய்வோம்!
சூலமே எங்களின் ஏ.கே – கண்டால்
சொல்லாமல் ஓடிடும் பேய் பிசாசெல்லாம்!
காலமோ மந்திரக் காலம் - இந்தக்
காலத்தில் விஞ்ஞானம் கண்டிடும் தோல்வி!
குண்டு வெடிப் பறியாமல் - செய்யும்
கோதாரி மந்திரம் சூனியம் கூட
உண்டு நாம் கற்பதற்குண்டு – கற்றால்
ஒரு குண்டும் பாயாது துப்பாக்கியாலே!
புளியங்காய் மாங்காயுமாகும் - ஓதப்
பொல்லாக் கருங்கல்லும் நீரில் மிதக்கும்!
அழியாத மந்திரக் கல்வி – தன்னை
அனைவரும்படியுங்கள் அதில் உழைப்புண்டு!
கொசுவுக்கும் மந்திரம் உண்டு - இனிக்
'கொயில்' வாங்கும் தேவையும்
வாராதெவர்க்கும்!
பிசுபிசுக்கும் பட்டக்கல்வி - இதைப்
பேசுமுன் 'றொக்கட்டும் செவ்வாயில் நிற்கும்!
(மந்திரம்)

**மந்திரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- நல்லையா சந்திரசேகரன்.**
**இறத்தோட்டை**

நாங்களும் சுதந்திரம் பெற்றவர்கள்
சுதந்திரத்தைப் பெற்று
அறுபது ஆண்டுகள்-இன்னும்
அடிமைச் சங்கிலியுடன் அடிமைச்
சங்கிலியாய்
அர்த்தமற்று வாழ்கின்றோம்.

எழுந்து நின்று உரக்கக் குரல் கொடுத்து
எம்மை உயர்த்திக் கொள்ள-நித்தம்
நினைக்கும் போதெல்லாம் .......
கூட்டொப்பந்தங்களால் கூடவே
குழி தோண்டி புதைக்கப்படுகின்றோம்.

இந்த தேசத்திற்கும் தேநீருக்கும்
நிறையவே இரத்தச் சம்பந்தம் -ஏன்
எம் சுகம் காணா சோகங்களுக்கும்
சோபை இழந்த சொந்தங்களுக்கும்
சங்கங்களே சதி செய்தன.

உழைப்பால் உயர்ந்து
புன்னகைக்க வேண்டியவர்கள்
தொழிலால் நூற்றாண்டுகள் கொண்டாடியும்
இன்னும் நூறுக்காய் - நூறு போடும் வெறும்
சோறுக்காய்
கொடிபிடித்து கோஷமெழுப்புகிறோம்.
பிறப்பு அத்தாட்சி பிரசாவுரிமை –
ஏன்
ஆளடையாள அட்டைக்காய்
அலைந்து திரிகின்றோம் -
இதற்காய்
அள்ளியும் கொடுக்கின்றோம்
ஆனதுவோ அப்படித்தான்.
சுதந்திரக் காற்று – எம்மை
சொர்கத்திலாவது ஒரு தடவை
சுகம் காணச் செய்யுமா?. இல்லை
சுகம் காண அங்கும்
கூட்டொப்பந்தம் கூட வருமா?.

**கூட்டொப்பந்தம்**
**கூட வருமா?.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லக்குட்டி கணேசன், அல்வாய்

பல இலட்சக் கட்டடம்
படிப்பதற்கு இரண்டு நாளிதழ்
படிப்பகம்

பாதை ஒன்று
திறப்பு விழா இரண்டு
புரிந்துணர்வு

ஆமை வழியில்
அடிக்கடி குறுக்கீடு
முயல்கள்

துறவைத் துறந்தான்
புத்தன் கையில் A.K.47
மனிதன்

ஆசி வழங்கிய கை
அரிவாள் தூக்கியது
துறவு

அர்ச்சகர் கை
ஆசி வழங்கியது
தாய்மை

**ஹைக்கூ**

எம்.என்.எம்.சப்ரத்- கிண்ணியா

ஆ....... நச்சு வாசனை
விடியும்போது சமாதானக் கரங்களால்
என்னை அணைத்துக் கொள்
அவ் அழகிய பொன் விடியலுக்காய்
மூச்சுக்கள் உஷ்ணத்தோடு
விழித்திருக்கின்றன
சமாதான முழக்கம் ஒரு புறமாய்
இன மதம் என மறு புறமாய்
ஆசிய வரைபடத்தில்
அழிந்துவிடுமோ இத் தீவு
பொருள் பொதிந்த பொன்னான காலங்களை
அணுவணுவாய் சேகரித்து
செத்துப் போவதுதான் மிச்சமா?

**மிச்சம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரா. ரமேஸ்- தென்புலோலியூர்**

கூண்டுக் கிளியெனினும்
கொஞ்சம் கூண்டைப் பெரிதாக்கி
குலாவித்திரியும் பண்பு
நீண்ட நிலாவெறிப்பும்
நீள் மடியாய் வயல்வெளியும்
சூழ்ந்திருக்கும் பனை மரமும்
சொர்க்கமென கொடுக்கும் சுகம்
நீண்டொலிக்கும் மணியோசை
ஒளிக்கீற்று
நேற்றுப் போல் நாளை
மலரும் என்ற நம்பிக்கை
வேண்டாதவற்றை விலக்கி
வேண்டியதைப் பெருக்கும் உறுதி
விடியலுக்காய் இரவை
வேண்டிப் பிரார்த்திக்கும் நேர்த்தி
படிகளைத் தாண்டும் போது
ஏறிய படிகளை மீட்டல்
இருபதில் எழுபதின் பக்குவம் அடுத்த
குருதிக்குள் பேதத்தைக்
கொட்டாத கொள்கை
உருகி உருக்குலைந்து ஓடும் உறவுக்காய்
ஒரு நொடியில் தன்னை உருக்கும் உள்ளம்
உண்மையிலே அவன் மனிதன்

காரிருளைக் கிழித்து
கடுகதியில் வந்தவொரு
பேருருவம் அழைத்திவனின்
பெயரை உறுதி செய்து
குருதிதனைத் தின்று
குதூகலம் செய்தது
அகிலத்தின் அசைவு
அரைநொடி குழம்பியது
இப்போ இவன் புனிதன்

## மனிதன் புனிதனாய்......

கடிதவழி தனி இதழைப் பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகளை அனுப்பி வைக்கவும். வருட சந்தா 200 (தபாற்செலவு உட்) முகவரி எஸ்.ஆர்.தனபாலசிங்கம் 103/2, திருமால் வீதி, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோஜா இராமநாதன்
அன்புவழிபுரம்

மானிடனே! ஏன்?
திரைக்குள் நின்று பேசுகிறாய்?
வா! வெளியே வந்து பார்.
நிஜங்கள் உண்மைகளைத்
தெரியவில்லையா?
கவலைப்படாதே! ஆனால்
தெரிந்து கொள்ள
முயற்சி செய்
ஏன் ? தெரிந்தது போன்று
பொய்முகம் காட்டுகின்றாய்?
சாதிக்க நினைத்துச்
சந்தர்ப்பவாதியாகி விடாதே
காரியத்தில் கண்ணாயிரு.
ஆனால்,
சாதிக்கப்பிறந்தவர்களைச் சோதித்துப்
பார்க்காதே.
பொய் முகம் காட்ட முயலாதே
உலகம் உன்னைத் தூற்றும் உன்
உண்மையான முகத்தைக்
காட்டு! உலகம்
உன்னைப் போற்றும்
மானிடனே!
உண்மைகள் உறங்குவதில்லை
தெரிந்து கொள்வாய்
வல்லவனாக மட்டும்
இருந்து விடாதே மானிடா!
நல்லவனாகவும் வாழ
முயற்சி செய் இல்லையேல்
காலச்சக்கரத்தில் சிக்குப்பட்டு
காணாமல் போய் விடுவாய்
தர்மத்தின் வழியில் நட
அதர்மத்தை விட்டுவிடு உன்
உண்மையான முகத்தை
உலகுக்குக் காட்டு
அமைதி பெறுவாய்
தர்மம் ஜெயிக்கும்.

## பொய் முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையில் முரண் கோட்பாடு

பெரிய ஐங்கரன்

'அவளது கரத்தை
எனது கரத்தில்
சேர்த்துக் கொண்டு எண்ணினேன்
உலகம்
இந்தக் கரத்தைப் போல
இதமாகவும் அழகாகவும்
இருக்கவேண்டும்

இந்தியிலிருந்து ராதிகாராணி மொழி பெயர்த்த கவிதை இது. உலகம் இதமாகவும் அழகாகவும் இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு உலகம் இல்லை. இவ்வாறு இருவேறுபட்ட முரணை சித்தரித்து, ஒரு உத்தி கவிதையில் கையாளப்படுகிறது. தமிழ் இலக்கணம் இதனை முரண் அணி எனப்பேசும். இந்த முரண்அணி வார்த்தைகளால் விபரிக்கமுடியாத விளக்கங்க ளையெல்லாம் மிக எளிமையாக மனதில் பதிய வைத்துவிடும்" இதில் உள்ள விபரீதத்தன்மை, கேலி, பரிகாசம், பழிப்பு தூஷணை முதலியவற்றுக்கும் மேலாக, ஓர் ஆழ் கருத்து தொனிப் பொருள் உணர்த்தப்படுவதாகும். அதில் சோகரசம், துன்பியல் சம்பந்தம் கொண்டதாகத்தான் அது பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அதில்தான் இந்த அணியின் நயம் சோபிக்கும்" என்பர் சி.சு.செல்லப்பா.

புதுக்கவிதைகளில் சொல் முரணைக் காட்டிலும் பொருள் முரணுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சிந்தனையின் மூலந்தான் இரு பொருள்களுக்கிடையேயுள்ள முரண்பாட்டை கண்டுபிடிக்க முடியும் புதுக்கவிதைக்கு சிந்தனைதான் அடிப்படை என்பதால் புதுக்கவிஞர்கள் இதையும் ஓர் உத்தியாக தம் கவிதைகளில் கையாளத் தொடங்கினர். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது ஒரு முரண் அணியாகும் இங்கு சொல்லுகின்ற பொருளில் முரண் இடம் பெற்றிருக்கின்றது. சாதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் மேலோட்டமான முரண்களை அவதானிப்பார்கள் நல்ல கவிஞர்கள் ஆழ்ந்த முரண்களை அனுபவிப்பார்கள்.

'அல்லிக்குளம் அழகு
என்றென்றும் அழகு
தலையற்ற உடல் மிதந்த
நேற்றை முன் தினத்தை தவிர''

இது பிரேம் நஸீரின் கவிதை அல்லிக்குளம் அழகாக இருக்கிறது. ஆனால் என்ன விபரீதம்? பூ மிதந்த அல்லிக்குளத்தில் தலையற்ற உடல் மிதக்கிறது. அழகாக இருக்கும் குளத்தை பாழாக்கியது தலையற்ற உடல். இவ்வாறு குளத்தின் அழகு மறைந்து அசிங்கமே நிறைந்துவிடுகிறது. அழகுக்கு இருப்பிடமாக இருக்கவேண்டிய குளம் அவலத்தில் இருப்பதாகக் காட்சியளிக்கிறது. ஆயிரம் கவிதைகள் எழுதி உலகத்தின் வன்முறையை உரைப்பதைவிட இவ்வாறான ஒரு முரனை பயன்படுத்தி அதைவிட அதிகமாக உள்ளத்தில் உரைக்கச் செய்யலாம் என்பதற்கு அக்கவிதை ஒன்றே அத்தாட்சி.

'அங்கே வருகிறேன்' என்று
அவர் சொன்ன இடத்தில்
காத்திருந்தார் இவர்....
வரவில்லை அவர்
'இங்கே வருகிறேன்' என்று
இவர் சொன்ன இடத்தில்
காத்திருந்தார் அவர்
வரவில்லை இவர்
'எதிர்பாராமல் சந்திக்கலாம் என்று
காத்துக் கொண்டேயிருக்கிறார்கள்
அவரும் இவரும்
அவரவர் இடத்தில்'

இது சுகுமாரனின் கவிதை. இருவருக்கும் இடையிலான முரண்பாட்டை கேலியோடு சித்தரிக்கின்றது. இக்கவிதை அவர் - இவர், அங்கே - இங்கே என்பன பொருள் பொதிந்த முரண்கள் இருவரும் அவரவர் இடத்தில் காத்துக் கொண்டு நிற்கிறார்கள் எதிர்பாராமல் சந்திக்கலாம் என்று. மேம்போக்காக பார்த்தால் இது கேலியாகவும் ஆழ்ந்து நோக்கின் ஆழமான சோகம் இதற்குள் உறைந்து கிடப்பதை உணரமுடியும்

'நான் இரவின் ஆழத்தில் இருந்து பேசுகிறேன்
இருளின் ஆழத்தில் இருந்து
இரவின் ஆழத்தில் இருந்து பேசுகிறேன் நான்
நண்பா, நீ என் வீட்டுக்கு வருவதானால் ஒரு விளக்கைக்
கொண்டு வா மகிழ்ச்சியின் இடைவழியில் நிற்கும்
கூட்டத்தை நான் பார்க்கும் படியான ஒரு ஜன்னலையும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சுகுமாரன் மொழிபெயர்ப்பு ஃபரூர்தின் கவிதை. இது இருண்டவெளி இரண்டிற்கும் இடையிலான முரண்நிலையை தத்துவச்சார்போடு விபரிக்கிறது. எந்தக் கருத்தையும் முரணுக்கு ஊடாகச் சொல்லுவதுதான் சிறப்பாக இருக்கும். கவிஞன் சொல்ல வந்த கருத்தை விட அதிகமான கருத்துநிலையை உருவாக்கக் கூடிய வல்லமை முரணுக்கு உண்டு.

நாம் வாழ்க்கையில் நாள்தோறும் எத்தனையோ முரண்நிலைகளை பார்க்கிறோம். இரவு – பகல், காலை – மாலை, வெள்ளை – கறுப்பு, மௌனம் - பேச்சு, கலக்கம் - தெளிவு, அழுகை – சிரிப்பு, ஏற்றம் - இறக்கம், உயர்ச்சி – வீழ்ச்சி என்று கோடிக்கணக்கான முரண்களைத் தினந்தோறும் நாம் காண்கின்றோம். ஆனால் அவையெல்லாம் உணரப்படுவதில்லை, உரசுவதில்லை கவிஞன் ஒருவன் கவிதையைத் தரும்போது தான் எம்மனதை அவை தொடுகின்றன. தொட்டு உலுப்புகின்றன.

‘காத்தவராயன்
ஒரு சனிக்கிழமை சாயங்காலம்
வீடு தேடி வந்து
நலம் விசாரித்து
கள் குடிக்கப் போகலாம்’ என
கனிவுடன் கூப்பிட்டான்
ஆரிய மாலா
சத்தம் போடுவாள்
போய்வா ராசா என்று
கழன்று கொண்டேன்’

என்பன போன்ற முரண்கள் விக்ரமாதித்யன் கவிதைகளில் அதிகம் காணலாம். அவருடைய அனுபவமும், ஆளுமை முதிர்வும் அவருடைய கவிதையின் சொத்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோயில்
தூரத்தில்
பிராந்திக் கடை
பக்கத்தில்
இவன்
பழக்கமில்லாதவன்

இவ்வாறு எத்தனையோ முரண்களை விக்ரமாதித்யன் நகைச்சுவையோடு தந்திருக்கிறார். அவருடைய கவிதைகள் எளிமையாகவும் பொருள் ஆழம் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.

' ஒரு தடவை நினைத்தேன்
தந்தைக்கும் தாய்க்கும்
கணவனுக்கும் சோதரருக்கும்
உரிமையானவள் நானென்று
பின்னர் நினைத்தேன் நான்
எனது காதலனுக்கென்று
வளர்ந்த பிறகு
நிச்சயமாய் அறிந்தேன்
என் வாசகருக்கு மட்டுமே
வேண்டுப்படுவதால்
இன்று எல்லாம் இழக்கப்பட்டுவிட்டது
யாருக்காகவும் முழுமையாக
நான் வேண்டப்படுவது சந்தேகம்

இது அ.யேசுராசா மொழிபெயர்த்த கவிதை இது வாழ்க்கையின் முரணை வடித்தெடுத்து இரத்தினச் சுருக்கமாகத் தந்திருக்கிறது.

ஜீவாலையின் வெப்பத்திற்குப் பயந்து
குகைக்குள் சிதறி மூடிய இருள்
போக்கிடமின்றிக் கற்சுவரில் மோதி
நெருப்பில் விழுந்து மடிந்தது

பரவசத்தில் களிநடனம் புரிந்தார் ரிஷி
துளியும் மிச்சமின்றி
அந்தகாரத்தை உண்டு மகிழ்" என்று
ஆர்ப்பரித்தார்.
ஜீவாலை ரிஷியின் மீது கவிந்தது"

இது சுந்தர ராமசாமியின் கவிதை. ரிஷியின் ஆர்ப்பரிப்பினையும் அவலத்தையும் முரண்களாகச் சித்தரிக்கின்றது இக்கவிதை ஆழ்ந்து நோக்கினால் பல அர்த்தங்கள் தரும்.

'மழை பொய்த்த வானம்'
நிலம் போல வரண்டு கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லெனத் துளிர்க்கும் நட்சத்திரங்கள்
உஷ்ணம் மிகுந்து இலைகளாகக் கருகும்
கடலாய் ஆறாய் அருவியாய்
நானிலம் நிறைந்து பூரிக்கும்
இந் நாட்களில்
வானம் வெடித்துச் சுருள்வதற்குள்
மழை பெய்ய வேண்டும்
நிலத்திலிருந்து வானத்திற்கு"

இது அலறியின் கவிதை ' நிலத்தில் இருந்து வானத்திற்கு மழை பெய்யவேண்டும் என்று அவர் கூறுவது முரணாக அமைந்து சிந்திக்க வைக்கிறது. முரணைக் கையாள்வதில் கவிதை சிறப்பும் செழுமையும், அழுத்தமும், ஆளுமையும் பெறுவதை மேற்கண்ட உதாரணங்களிலிருந்து நன்கு தெளியலாம். இதனை இன்றைய கவிஞர்கள் பலரும் தங்கள் தலை சிறந்த உத்திகளில் ஒன்றாக வைத்திருப்பது கவனிக்க த்தக்கது. ஒரு கவிஞனின் ஆளுமையினையும் அறிவுப் புலத்தையும் அவன் கையாளும் முரணைக் கொண்டு அளந்துவிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-வாகரைவாணன் -

சூழ்ச்சியின்
சுத்தமான வடிவம்
சகுனி!
அதனால்
ஆட்சியாளர்கள்
ஐவரும்
அகதியாகின்றனர்.

காடுதான்
இவர்களுக்கும்
கை கொடுக்கின்றது!
நாடு
நாகத்தின் வசம்
பன்னிரண்டாண்டுகள்
பாண்டவர்கள்....
என்ன பாவம்
செய்தார்கள்?
ஓராண்டு
அஞ்ஞாத வாசமும்
ஓடிப் போகின்றது!

காண்டீபம் ஒலிக்கிறது!
கண்ணன்
மூண்ட யுத்தத்தின்
மூலாதாராமாகின்றான்!
அரவக் கொடியோனின்
பாவக் கணக்கு
அவசரமாக
எண்ணப்படுகின்றது.

பதினெட்டாவது நாள்
வீமனுக்கும் துரியோதனனுக்கும்
பலப் பரீட்சை!
குருஷேத்திரத்தில்
தர்மம்
வெற்றிக்கொடி
நாட்டுகின்றது!

சோதனையின் பின்புதான்
சாதனை!
வேதனைப்படும் தமிழா
விளங்கிக் கொள்க!

**சோதனையும் சாதனையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

பதவிகள் பெரிதில்லை
என்பாய் - ஆயினும்
கதிரையை விட்டுக்
கணமேனும் கிளம்புகிறாயில்லை
நிலையாமை பற்றி
நித்தமும் ஓதிக்கொண்டே
உன் நிலையை
உறுதி செய்து கொள்கிறாய்
அரட்டை அடிக்கையில்
அடிக்கடி உதிர்ப்பாய்
மனப்பாங்கு பற்றி
ஆயினும்
கணக்குப் பார்க்கிறாய்
மனிதாபிமானப் பணியில் ஒரு
மணி செலவிட
வருங்காலங் குறித்த
எதிர்காலவியலிலும்
ஆர்வங் கொண்ட
தீர்க்க தரிசியுமாவாய் இடையிடை
ஆயினும்
உன் அனுபவிப்புக்களில்
சற்றும் தளர்ச்சியில்லை
அனைத்து அதிகாரங்களையும்
கேள்விக்குள்ளாக்க வேண்டுமென்பாய்
சிலவேளை! – ஆயினும் உன்
அதிகாரத்தைச் சுகித்துக் கொள்வதில்
ஆனந்தமடைவாய்!
உனக்கு முன்முகம் தெரிவதும்
பின் மனந்தெரிவதும்
வழக்கமானதொன்று
நீ தட்டும் பின் கதவுகள்
ஒன்றா.....? இரண்டா.....?
கேட்கும் போதெல்லம்
தந்திரோபாயம் என்கிறாய்
இத்தனை இத்தனை....
சுட்டிய பின்பும்
என்ன வேடிக்கை
நீ கூறுகிறாய்
உனக்கோர் அடையாளம்
இருப்பதாய்...!
மீண்டும் மீண்டும்
காற்றடிக்கும் திசையில்
பயணித்தவாறே...

## உனக்கான அடையாளம்?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகர் கடிதம்**

நீங்கள் அனுப்பி வைத்த 'நீங்களும் எழுதலாம்' ஓராண்டுச் சிறப்பிதழும், புரட்டாதி - ஐப்பசி (2007) இதழும் கிடைக்கப்பெற்றேன் கவிதைக்கென்றோர் இதழ் நடாத்துவது அவ்வளவு எளிதான செயலல்ல உங்கள் துணிவை வாழ்த்துகின்றேன், பணியைப் பாராட்டுகின்றேன். இளம் தலைமுறையினரின் கவி படைக்கும் ஆற்றலுக்குப் களம் அமைக்கும் உங்கள் முயற்சி போற்றத் தக்கது கடந்த ஐந்து இதழ்களிலே 83 பேர் கவிதைகளை எழுதியிருக்கிறார்கள் என்பதை அறிந்த போது அடடா! கவிதைக்கு இந்த இதழ் ஒன்று போதுமா என்று கேட்கத் தோன்றுகின்றது.

அதே வேளை முகஸ்துதிக்காகவோ, நட்புக்காகவோ, சந்தாதாராரைச் சேர்ப்பதற்காகவோ மற்றவர் மனம் நோகக் கூடாதே என்பதற்காகவோ கவிதையல்லாதனவற்றையெல்லாம் கவிதையென்று பிரசுரம் செய்யும் நிலைக்கு ஆளாகி விடாதீர்கள். அதற்காக வேறு பத்திரிகைகள் சிற்றிதழ்கள் இருக்கின்றன. கவிதைக்கென்று வெளிவரும் இதழில் வருவதெல்லாம் கவிதையாக இருக்க வேண்டும் 'ஞாயிறு இதழ்களில் வெளிவரும் வசனங்களை (கவிதைகள் அல்ல அவை) விடச் சிறப்பான முறையில் தேர்ந்தெடுத்த கவிதைகள் இத் தொகுப்புக்களில் இடம்பெறுவது பாராட்டத் தக்கது' என்று மூத்த எழுத்தாளர் கே.எஸ் சிவகுமாரன் அவர்கள் கூறியிருப்பது முற்றிலும் சரியானது. அவர் 'வசனங்களை' என்று குறிப்பிட்டார். உண்மையில் அவற்றில் பல வசனங் களும் அல்ல வசனங்களாக கொள்வதற்கு கூடத் தகுதியற்றவையும் கவிதைகள் என்று வருகின்றன. அந்த வகையில் கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் பாராட்டியுள்ளதைப் போல உங்கள் இதழில் வருபவை தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளாக தென்படுவதை நானும் உணர்கின்றேன்.

ஆண்டுச் சிறப்பிதழில் பெரும்பாலான கவிதைகள் சிறப்பாக உள்ளன. கவிதைக்கான இதழில் கவிதைப் பற்றிய பல விடயங்களையும் பிரசுரிக்கும் உங்கள் போக்கு பயன்தரக் கூடியதே. தாமரைத்தீவான், அமரர் சில்லையூர் செல்வராசன், கலாநிதி செ.யோகராசா, ந.பார்த்தீபன், ஆகியோரின் ஆக்கங்கள் இதழுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் இளையோருக்கு வழிகாட்டுகின்றன. எழுத்தாளர் அந்தனி ஜீவா அவர்களது உள்ளக் குமுறல் மிகவும் நியாயமானதே. கேள்வி எழுப்பும் உரிமை அவருக்கு உண்டு. இந்தக் கவிதையிதழ், தமிழ்க்கவிதை இலக்கியத்தின் தரத்தை மேம்படுத்தும் பணியில் தளராது நடைபோட எனது வாழ்த்துக்கள்.

**செந்தமிழ்ச் செல்வர் சு.ஸ்ரீகந்தராசா (பாடும்மீன்)**
**அவுஸ்ரேலியா**

'நீங்களும் எழுதலாம்' கவி ஏட்டை கரம் பெற்றேன் நல்ல முயற்சி பாராட்டுக்கள் கவிச்சரம் தொடுத்த கவிஞர்களின் வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள் காத்திரமான கவியிதழாக பிரகாசிக்க நீங்களும் எழுதலாம்' மலர் மணம் பரப்ப வேண்டி நேயமான வாழ்த்துக்களை நெஞ்சார தெரிவிக்கிறேன்.

**உடப்பூர் வீரசொக்கன்**

கவிதைகள் காத்திரமாக அமைந்துள்ளன ஆனால் அளவு பாதியாக உள்ளதே. ஓராண்டுச் சிறப்பிதழ் அளவில் மாதமொரு முறை இச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. எனவே மேலும் தொடரவேண்டும்

**அன்புமணி (இரா.நாகலிங்கம்)**

நீங்களும் எழுதலாம் வாசித்தேன்
நேர்த்தியாக எழுத்துப் பிழை ஏதும் வராது
தந்துள்ளார் கைக்குள் அடங்கும்
கவிதை இதழ் அதனை சட்டைப்
பைக்குள் வைத்து பத்திரப்படுத்தலாம்.

**கிண்ணியா ஏ.எம்.எம் அலி**

வங்கிமூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank**
**Trincomalee.**

என வைப்பிட்டு பற்றுச்சீட்டை அனுப்பிவைக்கவும்
வெளிநாடு US$ 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Awaken!

Awaken, Awaken! Awaken!
The slave and the tyrant are
twin born foes
Be the hold chains shaken
To the dust where
Your kinded repose, repose;
Their bones in the grave
will start and move
when they here
The voice of those
They love, most love
In the holy combat above

**மூலம் ஷெல்லி**

## விழித்தெழுங்கள்!

விழித்தெழுங்கள்! விழித்தெழுங்கள்!
அடிமையும் கொடுங்கோலனும்
இரட்டைப் பிறவிகளான எதிரிகள்
உங்களது உறவினர்கள் துஞ்சி மறைந்த
அதே மண்ணில்
குளிரும் விலங்குகளெல்லம்
அறுந்து விழட்டும்!
நாம் நேசிப்பவர்களான மக்களின் உரத்த
குரல்கள்
புனிதப் போராட்டத்தில்
பூமிக்கு மேலிருந்து ஒலிப்பதை
அவர்கள் கேட்கும் போது
சமாதிக் குழியிலுள்ள எலும்புகளெல்லாம்
துடித்தெழுந்து அசையும்

**பெயர்ப்பு தொ.மு.சி.ரகுநாதன்**

கணனி வடிவமைப்பில் உதவிய
கே.எம்.சிறிராம் அவர்களுக்கும் அழகுற
அச்சிட்டு உதவிய அஸ்ரா பிறின்ரேர்ஸ்
நிறுவனத்தினர்க்கும் எமது நன்றிகள்(ஆ,ர்)
ISBN 1800 - 3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி-ஆவணி 2008

# நீங்களும் எழுதலாம்

| நீங்கள் -02 | எழுத்து -08 |
|---|---|



## தடைகளைத் தகர்த்து தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

விலை 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-08

**இருமாத கவிதை இதழ்**

**யூலை-ஆகஸ்ட்-2008**

**ஆசிரியர்**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

| | |
|---|---|
| தீபச்செல்வன் | தீபன் |
| ஏ.எம்.எம்.அலி | பாரதிபுத்திரன் |
| திக்கவயல் தர்மு | நா.விஸ்வா |
| சைலஜா | எம்.பீ.அன்வர் |
| கணகிருஷ்ணராஜன் | சூசை எட்வேட் |
| தாமரைத் தீவான் | ந.வினோதரன் |
| பெரியஜங்கரன் | க.அன்பழகன் |
| ம.கம்ஷி | ஜெ.யதுகுலன் |
| வி.கௌரிசங்கர் | யு.சப்ரியா |
| கணேசமூர்த்திவினு | லோ.ஜெயப்பிரதா |
| ச.சிவகுமார் | த.ஜெயசீலன் |
| சூ.யுவன் | ஜெயா தமிழினி |
| சீனா.உதயகுமார் | சு.தர்ஷிகா |
| எஸ்.ஆர்.தனபாலசிங்கம் | த.ஜீவராஜ் |


கவிதை இதழ்கள் மரித்து விடுகின்றனவே-
கலைவாதி கலீல்
அறிமுகக்கக்குறிப்பு
கவிதை பற்றிய சில கருத்தாடல்கள்-நாச்சியாதீவு
பர்வீன்
கவிப்பூ ஒன்றின் மரணம் - முல்லை அமுதன்
சுபத்திரன் கவிதை
வாசகர் கடிதம்
சஞ்சிகை அறிமுகம்
மூலமும் பெயர்ப்பும்


**வடிவமைப்பு**

**எஸ்.யசோதரன்**

**கே.எம்.சிறிராம்.**

**அட்டைப்படம்**

**ஓவியர்.கே.சிறீதரன்**


**தொடர்புகளுக்கு,**

**'நீங்களும் எழுதலாம்'**

**103/1,திருமால்வீதி, திருகோணமலை.**

**தொ.பே: 026 2220398.**

**E-mail:-neenkal@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்பத்தி உறவும்**
**கவிதைப்பயன் பாடும்**

"உலக உணவுப் பொருட்களின் விலை 2012ம் ஆண்டுவரை தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் என உலக வங்கித்தலைவர் ரோபேட் சோலேலிக் எச்சரித்துள்ள நிலையில் உலக நாடுகள் பலவும் அதனை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இலங்கை எதுவித திட்டமுமற்று போர்செய்வதிலேயே நாட்டமாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

பாட்டு, கவிதை போன்ற கலைகள் மனிதனின் உணவு உற்பத்தியோடும் சமூக உறவோடும் நெருங்கிய தொடர்புடையவை. 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது' என்ற பாடலடி இதற்கோர் எடுத்துக்காட்டு.

மக்களை இயந்திரத்தனத்திலிருந்து விடுவிக்க கவிதை நல்லதொரு சாதனமாகும். அத்தோடு சிந்தையினை ஒரு வழிப்படுத்தவும், செம்மைப்படுத்தவும் வல்லது. அதே வேளை மொழியின் வளர்ச்சிக்கேற்ப அதன் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ளதாக கழிக்கவேண்டுமென மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் மாற்றங்களை சரிவரப்புரிந்து கொண்டு படைக்கும் படைப்புக்களே மக்களை சென்றடையக்கூடியதாக இருக்கும். 'கூறியது கூறல்' போன்ற தவறுகளை தவிர்த்து பயன்மிக்கவையாக நமது படைப்புக்கள் அமையவேண்டும் அத்தோடு கவிதையில் புதிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்ளும் களமாக "நீங்களும் எழுதலாம்" அமைவதற்கு படைபாளிகளினதும், வாசகர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

**ஆம் நீங்களும் எழுதலாம்**

**அன்புடன்**
**ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துண்டாடப்பட்ட சொற்கள்

01. தோல்வியின் வர்ணிப்பு
நிரம்பிய
உனது குரல்
எனக்கு கேட்க வேண்டாம்

துண்டிக்கப்பட்ட
தொலைபேசிகளிலிருந்து
எனது நகரத்தின்
கண்ணீர் வடிகிறது

கம்பிகளின் ஊடாய்
புறப்பட முயன்ற
எனது சொற்கள்
தவறி விழுகின்றன

மேலும்
தோல்வி வருணிக்கப்பட்டு வரும்
உனது குரல்
எனக்கு கேட்க வேண்டாம்

02. உனது கடிதம்
வந்து
சேராமலிருந்திருக்கலாம்
நீ
எந்தக் கடிதத்தையுமே
எழுதாமல் விட்டிருக்கலாம்

தபாலுறை
நாலாய் கிழிந்திருந்தது
முகவரிகளில்
இராணுவம் முன்னேறிய
குறியீடுகள் இருந்தன

நான் தேடி அலைந்தேன்
கடிதம் எங்கும்
வெட்டி மறைக்கப்பட்டிருந்த
உன்னையும்
உனது சொற்களையும்

மறைக்கப்பட்டிருந்த
உனது சொற்களுக்கு
கீழாய்
உனது முகம் நசிந்து கிடக்க
தோல்வி வருணிக்கப்பட்டிருந்தது

**தீபச்செல்வன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிமைகள் நகரத்தின் தீபாவளி**

இந்த அடிமைகளும்
ஒரு தீபாவளி கொண்டாடினர்

வாகனங்கள் வீதியில்
இறங்க நடுங்கிக் கொண்டிருந்தன
ஒரு இராணுவ வண்டியின்
நீளத்தினுள்
முழு வீதியும் அடங்கி
நசிந்து கிடந்தது

நேற்றிரவு வெட்டி
கொலை செய்யப்பட்டவர்களின்
துண்டு துண்டு உடல்களும்
சனங்களோடு வீதியில்
ஒதுங்கி இருந்தன

அடிக்கடி அடிமைகள்
நகரத்தினுள்
கடல் நுழைந்து திரும்பியது

வீட்டிலிருந்து சனங்களை
திறந்து
வெளியில் விடுகிற
சாவிக் காலை
கறுப்பாகிக் கிடந்தது
துண்டு துண்டாய்
வெட்டி எறியப்பட்டு
வீதியில் கிடந்தன
குழந்தைகளின்
தீபாவளி உடைகள்

அடிமைகள் நகரத்தில்
தீபாவளி ஒன்று நடந்தது தான்

வெடிகள் தீர்க்கப்பட்டன
ரவைகள் நிரம்பிய
நகரத்தின் நடுவே
குருதிப்புள்ளியிடப்பட்ட
உடைகளை வாங்கி
திரும்பினர் சனங்கள்
அடிவாங்கிப் போகிற
சனங்களின் முதுகில்
கிடக்கின்றன பலகாரங்கள்

வளைந்த சனங்களின்
முதுகில் பீரங்கியைப்
பூட்டி விடுகிறான் படையினன்
இந்த அடிமைகள்
குனிந்த படி
தீபாவளி கொண்டாட
அனுமதிக்கப்பட்டனர்.

**தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதல் மெய்ப்படும்**

பரிவோ பசப்போ
பகர்ந்த சொற்குட்
தெரிவ தெதுவோ
திண்ணமோ நொய்மையோ?
அன்பி லூற்றோ
அன்றேற் பாலையோ
என்ப தறியா
திருத்தலி லுள்ளேன்

ஊட்டம் மிகுந்த
உனதிளஞ் சொற்களின்
கூட்டம் என்னைக்
கொஞ்சிய துண்மைதான்
சிந்தை சிறப்பச்
செப்பிய பதங்களில்
உங்கள் கபடம்
ஒளிந்துள தறிந்தனோ?

உன்னை நம்பிய
ஒருத்திக் கேனோ
பின்னை இந்தப்
பெருந்துயர் தந்தாய்
புழுவாய்த் துடிக்கும்
பொழுதினை எனக்கு
முழுதாய்த் தரமனம்
முடிவெடுத் திட்டதேன்?

தேமாத் தமிழில்
தினமும் சொன்னவை
வேணாம் என இனி
விளம்புதல் ஞாயமோ?
ஏ!நாயே! என்
இதயம் கடித்த நீ
ஆணா? அலியா?
அதுவும் இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத் துடிப்பினை
ஒவ்வொரு கணமும்
சொல்லித் துடித்தெனை
சூழ்ந்தாட் கொண்டனை
கள்ள முடைய
"கடையன்" என உனை
எள்ளள வும்யான்
எண்ணிய துண்டோ?

இக்கரும் புக்கு
எக்கரும் பொக்கும்
சொற்கரும் பூட்டிக்
சுவையைத் தருகுதல்
தற்கா லிகமா
சதிபதி யாகுதல்
எக்காலத்திலும்
இன்பமாய் வாழ்தலே

கதியே நீயெனக்
காலடி கிடந்தென்
பதியே எனவுனைப்
பணிந்து பயந்து
நிதியே நின்றுன்
நிழலில் தமக்கும்
சதியே யானெனச்
சந்ததம் நினைந்தேன்

ஒப்பிலா வாழ்வை
உள்ளன் போடு
தப்பா தமைந்திடும்
தலைவ னாயிடின்
சாவரை இருவரும்
சந்தோஷ வாழ்வில்
மேவிடும் காதலை
மெய்ப்பிக் கலாமே!

**கிண்ணியா**
**ஏ.எம்.எம்.அலி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்கினிக் குஞ்சுகளாய்.....?**

அமைதிப் புறாக்கள்
நாங்கள்...
அதற்காகவே பிறந்தவர்கள்
நாங்கள்....
ஆதி மூலப் பறவைகளாய்
உருவெடுத்தோம்..
அன்னை தமிழ் நிலத்திலேயே
குச்சிகள் பொறுக்கி வந்து
முற்றத்து மரங்களில்
வசதிகள் பல பார்த்து
வசந்த காலத்தில்
உச்சிக் கிளைகளில்
கூடுகள் பல கட்டினோம்..
குந்தி இருந்தோம்...
கூடிக் குலவினோம்...
கலவி இன்பத்தால்
கனமுட்டைகள் இட்டோம்....
மிகவும் மெதுவாக
முட்டைகள் மேலிருந்து
இரவு பகலாக அமர்ந்திருந்து
அருமையாக
அடை காத்தோம்....
குஞ்சுகள் பல பொரித்தோம்...
குஞ்சுகளையும் கூட்டிக்
கொண்டு - பின்பு
எமது நிலப்பரப்பெங்கும்
எழுந்து சுதந்திரமாய்ப்
பறந்து திரிந்தோம்.....
அமைதியை
அடிப்படையாகக் கொண்ட
எங்கள் மேல்
கழுகுகளும் பருந்துகளும்
கறைகளையும்
கனல்களையும் கக்கின......
கக்கப்படும் நெருப்புக்கும்
சூறையாடப்படும்
சுதந்திரங்களுக்கும்
எதிராக நாங்களினி
பாரதியின்
அக்கினிக் குஞ்சுகளாய்
ஆவேசம் கொண்டெழும்புவோம்.

**-பாரதிபுத்திரன் -பாண்டிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசித்திரம்**

இரண்டாவது உலக யுத்தம்
இரண்டுபட்டது உலகின் பக்கம்
முரண்டு பிடித்த ஹிட்லரின்
கொலைகளால் அதிர்ந்தது உலகம்!

ஆனாலும் அணுகுண்டு ஜேர்மனி மீது
போடப்படவே இல்லை!
போனால் போகட்டும் என்று
போட்டார்கள் ஜப்பான் மீது!

ஐரோப்பா மீது அணுகுண்டு போட்டால்
வெள்ளைத் தோல்கள் கறுப்பாகக் கூடும்
ஆதலின் போட்டனர் குண்டு
ஆசியநாடொன்றின் தலைநகர் மீது!

ஆசியா வேறு ஐரோப்பா வேறு
இருவேறு கொள்கை உலகினில் உண்டு
இனிவரும் காலமும் இதையே சொல்லும்
உலகம் என்பது இருவேறு என்று!

**-திக்கவயல் தர்மு-**

**அழுவதற்கு நேரமில்லை**

தூக்கணாங் குருவிக் கூட்டை
துவம்சம் செய்து
தூக்கியெறிந்த குரங்கு போல்
என்மனதில்
காதல் விதை தூவி
கட்டிய கோட்டையை
உடைத்தாய்
பணமெனும் பேயால்!
அழுவதற்கு நேரமில்லை
அலைகின்றேன் வேலை தேடி

**நா.விஸ்வா, கொம்மாந்துறை**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
வருட சந்தா 200/=
**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank, Trincomalee**
என வைப்பிட்டு பற்றுச்சீட்டை
அனுப்பிவைக்கவும்
வெளிநாடு US $ 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழு,எழு அல்லது என்றுமே விழுந்து கிட**

துரத்தி வந்த துயரங்களுக்கு
துடுப்பாய் எதிர்த்து ஈடுகொடாது
அடைக்கோழி போல் - நீ
நடைப்பிணமாய் விழுந்து விட்டாய் !

அது வானவில் துண்டுகள் உதிர்த்து விடும்
வண்ணக்கனவுகள் அல்ல-
துன்பத்தின் போர்வைக்குள் பதுங்கிக் கிடக்கும்
எரிமலைகளின் பிரளயம் !

பளிங்கு மாளிகையில் நடக்கும்
பாதங்களுக்கு இல்லை பெருமை
பளிங்குகளுக்கு மட்டும்தான்
நிலவுகளுக்கும் தேய்பிறைகள்
இருப்பதனால்தான்
பௌர்ணமிகள் பெருமைப்படுத்தப்படுகின்றன !

எல்லோரும் பூமாலைகள் அணிய
யேசு முட்கள் அணிந்து கொண்டார்
அதனால் தான் அவர் கடவுளாக
மற்றவர் மனிதராகவே இருக்கின்றனர் !

கவலைகளுக்காய் நான்
கண்ணீர் வடிப்பதில்லை
ஒரு வகையில் இதுவும்
ஒரு சுயநலம் தான்
வேறு சில இரவல் கண்களில்
வாடகை கண்ணீரை
நான் வரவேற்பதில்லை !

ஆறறிவு இல்லாத தாவரங்கள் கூட
நினைவுச்சருகுகளை
தினமும் உதிர்க்கப் பழகியிருக்க
ஆறறிவு படைத்த நீ மட்டுமேன்
சறுக்கி விழுப்புண்களையும்
நினைவுச்சாக்கடைகளையும் சேமிக்கிறாய் ?
தினமும் சூரியன் கூட
புதிதாக ஆசைப்படுகின்றது
என் தங்கை நிலவே
உனக்குமட்டுமேன் பழைய அமாவாசை ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகப் பெருங்கடலில் தத்தளித்த நீ
உதவிக்கை நீட்டி அழைத்தாய்
அதுவோ கை காட்டி விடை பெற்றது-ஆனால்
உன்னைக் கை கூப்பி வரவேற்க
இன்று ஆயிரம் இதயங்கள்
காத்திருக்கின்றது !

புதிதாய் எதிர் நீச்சல்போட்டு-வெற்றிக் கம்பம்
உன் கைக்கெட்டும் தூரத்தில்.........

விழுந்து விட்டேன் என்று
ஒதுங்கிவிட்டால் -உலகம் உன்னை
நசுக்கி நாசப்படுத்தி விடும்
எழுந்து விடு அல்லது
என்றுமே விழுந்து கிட!

**ஷைலஜா. மகாதேவன் (அனு)**
**வவுனியா (அவுஸ்திரேலியா)**

## மரணம்

இதயம் இறுகியும்....
உடல் உறங்கியும்..
கண் பிதுங்கியும்.
எட்டுக் கால்களில்
சப்பாணியாக
ஆறடி நிலத்தில் - நீ
அநாதையாகும் பொழுதுகளில்...!

இதய வாழ்வுகளில்
இதமாக உறங்கியே
இடுப்பும்
காத்துக் கிடக்க...
கால்களும் வலியெடுத்து விட

மின்னலென வீறுகொண்டு
வினாடிகளெல்லாம்
விடைபகர
"வீட்டோ பவர்" கொண்ட
வேங்கையாக
உன் நாடித் துடிப்பு
உறைகிறதே....

**எம்.பீ.அன்வர்- காத்தான்குடி -03**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூத்திரதாரியாக இருந்தாய்

உன்னை மனதார நேசித்தேன்
உதட்டினிலே வைத்து பூஜித்தேன்
உள்ளத்திற்கு புதுவகையான
உணர்வைத் தந்தாய்
தனிமைக்குத் துணையாய் வந்து
தவிப்பைப் போக்கினாய்
நடுங்கிடும் குளிருக்கு இதமாய்
நற்றுணை புரிந்தாய்
கருத்தாழமிக்கவை படைக்க
கற்பனைக்குத் தூண்டியானாய்
கன்னியரின் பார்வை என்மீது பட
கவர்ச்சிப் பொருளானாய்
தீர்க்கப்படாத பிணக்கினை
தீர்த்திடும் வழிக்கு உதவினாய்
புண்பட்ட மனம் திடப்பட
புகை விட்டு ஆற்றினாய்
சுவாசிப்பதில் சொர்க்கமே காண
சூத்திர தாரியாக இருந்தாய்
இத்தனை சுகத்திற்கும் பிரதி உபகாரமாய்
இன்னுயிரை பறிக்க எண்ணியது ஏனோ?

**-கண-கிருஷ்ணராஜன் -**

## தெருக்குரல்

அழகு ரசிக்க உணவு புசிக்க
வாழ்க்கை முயற்சியோடிருக்க.

முட்டாள் மனைவியே ஆனாலும் யோசனைக்கு
கட்டுப்படாதவன் பாடு திண்டாட்டமே.

வாயாலே கட்டுப்பாடில்லாது உண்ணும் உணவு
நோயாலே வருந்த வைக்கும்.

காதலி காதலாயிருப்பாள் சிலகாலம் தாயானவள்
பாசமாய் இருப்பதோ ஆயுள் பரியந்தம்.

கொலையும் செய்வாள் பத்தினி எப்போ
விலைமாதை கணவன் வேண்டுங்கால்.

**-சூசை எட்வேட்- அன்புவழிபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பராசக்தி**

காணிநிலம் போச்சே! - பராசக்தி
காணிநிலம் போச்சே
நாணிக்கிடப்பதல்லால் - பராசக்தி
நம்மாலெது முடியும்?

வீணில் அறம்நடத்தி - தோற்றுமே
வீரமறம் நடத்தி
ஆணிலும் பெண்ணிலுமாய் -போனதே
ஆயிரம் ஆயிரமே!

கோணிய ஆட்சியினால் -குடும்பம்
குலைந் தலைந்ததுவே!
பாணிப்பலா, வாழை - தேமா
பனைகள், தென்னையெல்லாம்,

கேணியுடன் பறந்ததே - குண்டுகள்
கிண்டிய பள்ளமலால்
தோணியுடன் இல்லையடி - பராசக்தி
தொழிலும் இல்லையடி!

சம்பூர் குடும்பிமலை - வாகரை
தமிழர் தாயகங்கள்,
வம்பர் செயல்களினால் - பழையநம்
வாழ்வு பறந்ததடி!

அம்புவி தேடவில்லை - மட்டுமோ,
அயலான் நாடவில்லை!
நம்மில் இளையவர்கள் - நடையால்
நமக்கு முந்திவிட்டார்!

கும்பி கொதிக்குதடி - பராசக்தி
கொஞ்சம் இரங்காயோ?
தம்பியர்க் கூட்டமளி! - இல்லையேல்
சமதைத் தீர்வினைத்தா!

தும்பிலும் உள்ளாய் நீ! - பராசக்தி
தூணிலும் உள்ளாய் நீ!
நம்பிக் கிடப்போரை - பராசக்தி
நட்டாற்றிலோ விடுவாய்?

**தாமரைத்தீவான்-**

**களங்களை விரித்துள்ளோம்**
**ஆக்கங்களை அனுப்புங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூனியம்**

யாரால்........?
யாராலும்
யாருக்கு............?
யாருக்கும்
எச்சந்தர்ப்பத்தில்.........?
அது அவசியமில்லை
பெயர்...........?
வாயில் வரும் பெயர்
அல்லது ஏதாவது தமிழ் பெயராக............
முகவரி.............
பெயருக்கு ஏற்றதாக..........
வயது.........?
கைக் கணக்கில் போடும்
நேரம்........?
நரசிங்கர்களா நேரம்பார்க்க
எந்த நேரமெண்டாலென்ன
நேரில் கண்டவர்கள்......
மனிதர்கள் முன்வரவில்லை
மிருகங்கள் பேசமாட்டார்கள்
யாவர்.........?
சத்தியமா மனிதர்கள்
கடைசி வார்த்தை...........?
ஐயா! நானென்ன செய்தன்
சொல்லிப்போட்டு செய்யுங்கோ
முடிவு........?
முடிவு தான்.

**ந.வினோதரன்-**
**யாழ்.பல்கலைக்கழகம்**

**பிரேதம்**

"செல்" கூவிச் செல்லும் சத்தம்
கேட்க வில்லையா
மௌனம்
"செல்" வெடித்த சத்தம்
கேட்க வில்லையா?
மௌனம்
"செல்" பட்டு காயப்படும் மனிதனின்
மரண ஓலம்
கேட்க வில்லையா?
மௌனம்
கண்களையும் வாயையும் இதயத்தையும்
கறுப்புத் துணியால் மூடிக்கொண்டு
மீண்டும் கல்லானது பிரேதம்

**-பெரிய ஐங்கரன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெட்டுப்போன வாழ்வு

கெட்டும் பட்டணம் வந்து
பட்டது கொஞ்சமல்ல
உறவுகளை மறக்கடித்தும்
பொறாமை தீயிற்கு தீனி போட்டதும்
தனிமை உணர்வை வளர்த்துக் கொண்டதும்
தாற்பரியங்களாகின

ஏக்கர் காணி எல்லாம்
பேர்ச் ஆனதும்
எதிர் வீட்டாரை
எதிரியாக நினைப்பதும்
பக்கத்து வளவுக்காரனை
பகைவனாகப் பார்ப்பதும்
பட்டணம் எமக்கு
கற்றுத் தந்த பாடங்கள்

சொந்த பந்தங்கள் தூரமாயின
மந்த கதியிலே மனது கெட்டது
உதவி செய்வது குறைந்து போனது
பணத்தை சேமிக்கும் பக்குவம் வந்தது
கணக்குப் பார்க்கின்ற
காரியம் மட்டுமே
குறுக்கு மூளையில்
குறைவின்றி வளர்ந்தது

மனசு என்ற சொல் மறந்து போனது
கிராமத்து மண்ணின் வாசனை
குமட்டலைத் தந்தது
எதையும் தாக்கிக்கும்
இதயம் வளர்ந்தது

எப்படி இக்கேட்டை
இல்லா தொழிப்பது?

**க.அன்பழகன்**

| | |
|---|---|
| கவிதைக்கான<br>பயில்களம்<br>பரிசோதனைக்களம்<br>காத்திரத்தின்களம்<br>கருத்தாடற்களம்<br>விளக்கக்களம்<br>விமர்சனக்களம் | நீங்களும் எழுதலாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை ஏடுகள் மரித்துப் போகின்றனவே!

கவிதைச் சஞ்சிகைகள் பல வந்திருக்கின்றன இந்த நாட்டில். சில வந்த சுவடே தெரியாமல் மறைந்திருக்கின்றன. வேறுசில ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் தாக்குப்பிடித்திருக்கின்றன. அந்தவகையில் அக்னி, கவிதை, பூபாளம் போன்ற ஏடுகளைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் இந்நாட்டின் புகழ்பெற்ற கவிஞர்களால் நடாத்தப்பட்டவை. தங்குதடையின்றி வெளிவந்து கொண்டிருந்த காத்திரமான கவிதைக்கான சஞ்சிகையான "யாத்ரா" இரண்டொரு மாதங்களாக யாத்திரை புரியவில்லை. என்ன நடந்ததோ. யாமறியோம்!

இப்படியொரு சூழலில் **"நீங்களும் எழுதலாம்"** என்ற மகுடத்தில், கிழக்கிலிருந்து ஒரு கவிதை ஏடு தனது **ஓராண்டுச் சிறப்பிதழை** வெளியிட்டிருக்கின்றது. அதன் தோற்றமும் அமைப்பும் பரவாயில்லை. திருகோணமலையிலிருந்து இவ்வேடு வந்து கொண்டிருக்கிறது. இருமாத இதழாக வந்து கொண்டிருக்கும் **"நீங்களும் எழுதலாம்", கவிதைக்கான பயில்களம், பரிசோதனைக்களம், காத்திரத்தின் களம், கருத்தாடற்களம், விளக்கக்களம், விமர்சனக்களம்** என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வெற்றிகரமாகத் தனது முதலாண்டு சிறப்புமலரையும் வெளியிட்டுள்ளது.

**சபா.ஜெயராஜா, அ.கௌரிதாசன், நந்தினிசேவியர், தாமரைத்தீவான், ஷெல்லிதாசன், திக்கவயல் தர்மு, கலாவிஸ்வநாதன், கிண்ணியா ஏ.நஸ்புல்லாஹ்** போன்ற பிரபல கவிஞர்களோடு ஏராளமான இளம் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி இவ்வேடு வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதுவரை சுமார் நூறு கவிஞர்களின் ஆக்கங்களை இவ்வேடு பிரசுரித்திருக்கின்றது. அல்லது அறிமுகப்படுத்தியிருக்கின்றது என்று கூறலாம். நல்ல முயற்சி. கவிதைகளை - கவிஞர்களை வளர்த்துவிட, வளர்த்தெடுக்க இம்முயற்சி வழிவகுக்கும் என்று திடமாக நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாமரைத்தீவானின் "கவிதை அன்றும் இன்றும்" என்ற சிறிய ஆய்வுக்கட்டுரை (? ) ஒன்று பிரசுரமாகி இருக்கின்றது. இதனைப்படித்தபோது பெரிய கட்டுரைக்கான ஆய்வு அல்லது மேடைப்பேச்சு ஒன்றுக்குக் குறிப்பெடுத்தது போலவே அமைந்திருந்ததைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். இத்தகைய கட்டுரைகள், வாசகர்கள், எளிதில் (ஓரளவு) புரிந்து கொள்ளத்தக்க வகையில் வடிவமைக்கப்படவேண்டும். மொத்தத்தில் தனி மனிதனாக நின்று செயல்படும் இதன் ஆசிரியர் எஸ்.ஆர் தனபாலசிங்கம் பாராட்டப்பட வேண்டியவரே.

"நீங்களும் எழுதலாம்" தொடர்ந்து வெளிவரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**- கலைவாதி கலீல் -**

**நவமணி வாரப்பத்திரிகை 08.06.2008**

**நீங்களும் எழுதலாம் கவிதை இதழ் பற்றிய குறிப்புக்களை பிரசுரித்து இதழின் வளர்ச்சிக்கு உதவி வரும் தினக்குரல், வீரகேசரி, சுடர் ஒளி, ஆகிய பத்திரிகைளுக்கும், ஒலிபரப்புச் செய்யும் லண்டன் ஐ.பீ.சீ வானொலிக்கும் (காலைக் கலச நிகழ்ச்சி தொகுப்பாளர் என்.செல்வராஜா, நூலகவியலாளர் அவர்களுக்கும்) "நீங்களும் எழுதலாம்" தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயில் களம்
### மாணவர்களுக்கானது

### புதுமைப் பெண்ணாகு

அடுப்படி அடுப்படி என
அடைந்து கிடக்கும் பெண்னே
அடிமையாய் அடிபட்டு
அடைபட்டு வாழ்ந்தது போதும்!
பண்பு இலா பாவியரிடம் சிக்கி
பாடாய்ப் பட்டதும் போதும்!
அரிசியில் கல்லைத் தேடும் நீ
அரசியலை கொஞ்சம் ஏன்
அலசிப் பார்க்கக் கூடாது
மேற்குப் பெண்ணின் சாதனை
சோதனைகளைத் தாண்டியது தான்.
வெட்கித் தலை குனிவதை விட்டு
வெளியுலகை எட்டிப்பார்.
தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி வா.
அடுத்த சாதனை
உன்னுடையதாகத்தானிருக்கும்.
அதற்காய்
பெண்ணெனும் பண்பை
விட்டுவிடச் சொல்லவில்லை.
பயத்தையும் பத்தாம் பசலித் தனத்தையும்
விரட்டி விடச் சொல்லுகிறேன்.
இன்றுடனாவது
புலம்பித் திரிவதை விட்டு விட்டு
பதுமைப் பெண் அல்ல
பாரதி கண்ட
புதுமைப் பெண் என்றாகு

*- ம.கம்ஷி வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி,வவுனியா.*

### அதனால்

தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
வீராப்பு வார்த்தைகளுக்கும்
பஞ்சமில்லைத் தமிழா
நிலவை ரசித்தாய்
கால் பதிக்க முடிந்ததா?
வானூர்தி என்றாய்
சமைக்கும் வல்லமை உள்ளதா?
கங்கை கொண்டாய்
கடாரம் வென்றாய் என்கிறாய்
கதியற்றிருக்கின்றாய் இன்றோ
ஏன்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
என்பதை மறந்தாய் அதனால்

**ஜெ.யதுகுலன் தி/கோணேஸ்வரா.இ.க.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் ஆழம்

சாதனைகளுக்கும் அதிசயங்களுக்கும்
மத்தியில் நீ
நாட்களின் உதிர்வுகளில்
தவிப்புகளும் தான்
மரணிக்கும் இடத்திலும்
மறக்க முடியா வேதனை.
நீ
மௌனம் சாதிப்பினும்
உன் கண்கள்
என்னோடு பேசுவதுண்மைதான்
ஊமைப்பாஷையில்
தேர்வெழுதும் போது
நெருங்கும் நம்பிரிவும்........
அன்று உணர்வாய்
அன்பின் ஆழம்

வி. கௌரிசங்கர்
தி/புனித.ஜோசப் கல்லூரி

## விஷ விருட்சம்

விஷ விருட்சத்தின் கீழேயே
வருஷம் பூராவும்
வாழ்க்கை நகர்கின்றது
விருட்சம் இதனை
வேரோடு வெட்டி வீழ்த்தவும்
விஷத்தினை முற்றாக
வெட்டிப்புதைக்கவும்
வேளை இன்னும் வரவில்லை..
சேவல்கள் கூவியும்
எங்களின் "செகம்" இன்னும்
விடியவில்லை
இருட்டுக்குள்ளேயே
இன்னுமின்னும்....
ஓ.......உரத்துச்சொல்கிறேன்
ஓடி வாருங்கள் எல்லோரும்
ஒற்றுமை எனும் உய(யி)ர்
விருட்சத்தை வளர்ப்போம்

கணேசமூர்த்தி வினு,
வின்சன் தேசிய பாடசாலை மட்டக்களப்பு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுத்தத்தின் பிடியில்**

உறவுகளை இழந்து
உயிர்களைத் துறந்து
உரிமையற்ற அகதியானோம்
நாம் இருந்ததோ பூந்தோட்டம்
இப்போதிருப்பதோ கண்ணீர்க் கோட்டம்
எமது அழுகையின் ஓசை
யுத்த விரும்பிகளுக்கு
ஒரு மெல்லிசைப் பாடல்தான்
பிணங்கள் வாங்கும்
நாடுகள் இருந்தால்
எமது நாடும் கூட
செல்வந்த நாடுதான்
இறைவனே
வருகை தருவாயா?
எம்மை காப்பவன்
நீ மட்டும் தான்

**யு. சப்ரியா**
**தி/அல்-ஹம்ரா முஸ்லிம் ம. வி.இறக்ககண்டி**

**மாணவர்களே உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன**

**மமதை**

மானிடனே
உன் இரத்த தாகம் தீர
உடன் பிறந்தவர்களையல்லவா
பதம் பார்க்க விளைகின்றாய்
முரண்பாட்டிற்கு மரணமே
தீர்வென்றால் இத்தீவில் ஏது..?

மனிதனுக்கு மனிதன்
வார்த்தைகளால் பேசிய
வரலாற்றுக்கு சவக்கிடங்கு
வெட்டிவிட்டு
ஆயுதங்கள் பேசும் காலத்தை
மாலையிட்டு வரவேற்கின்றாயா?
வேற்று நாட்டவர் யாவரும்
வேற்றுக்கிரகம் செல்வதற்காய்
சாவி தேடி அமர்க்களப்படுகையில்
சோதரனே
பற்றுவை மானிடத்தின் மீது
அற்றுப் போகும் உன்
மமதைக்குணம்

**லோ. ஜெயம்பிரதா, வரோதயநகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணங்கைக் கூத்து

உன்னதம் மிகு மனிதம்
உருவியெறிந்து
வெளிமுழுதும்
உதறிப் போடப்பட்டிருக்கும்
வாழ்வு குறித்து சரிகமபதநி
நிறுத்திய...
நுணங்கை கூத்தின் அரங்கேற்றம்
இங்கிப்போது...

ஜெயித்த தோரணையில்
அதிகாரம் பல்லிளிக்கும்
தீர்வுப் பொதிக்குள்
வாழ்வு சூன்யம் அடரும்...

நீட்சிபெறும் நுணங்கை கூத்தின்
தாளக் கட்டுக்கு
தலையசைப்பது
உயிர்வாழ்தலின் உறுதிப்பத்திரம்

குருதி வழியும்
அதிகாரத்தின் பாடலில்
வாழ்வின்
இயல்பு மறக்கப்பட்டிருக்கிறது

ஓ...... என் கடவுளரே
உங்கள் ஆனந்த தாண்டவத்தின்
இடைவேளையில்
அதிகாரத்தின் .
நுணங்கைக் கூத்தை
அரங்கேற்ற யார் அனுமதித்தது?
நீ இல்லையெனில்
அந்தச் சாத்தான்
எனக்கும் கடவுளாகட்டும்......!

**-சண்முகம் சிவகுமார் -கொட்டகல**

*கடிதவழி தனிஇதழைப்பெற விரும்புவோர் 5/= பெறுமதியான ஏழுமுத்திரைகளை அனுப்பவும் வருட சந்தா ருபா.200/=(தபாற்செலவு உட்பட) அனுப்ப வேண்டிய தபாலகம்-திருகோணமலை*
முகவரி:எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
103/1 திருமால் வீதி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பனைச்சுகம்**

நனவுகளைப் பார்க்கக்
கனவுகளே சுகம் பலர்க்கு
நாளும் வதக்கிவிட
கனவுகளில் குளிரைத் தென்றலினைக்
கண்டு மகிழும் மனங்கள்
வீதிக்கு வீதியுண்டு
யதார்த்தக் கொடுமையினை மறைக்க
அதீதக் கற்பனை மது மயக்கில்
கணமும் தெம்படைந்தெழுந்து
நிற்பவர்கள் சொல்லும்
நியாயத்தில் வலுவிருக்கு
நடைமுறை வாழ்க்கையில்
முடியாஅனைத்தினையும்
கற்பனையில் அடைந்தமெனக் - குதூகலித்து
தன்மனதுக்கேற்ற தலைவனுடன்
நாயகனும்
தன்விருப்பு வெறுப்புகளைப்
பிரதிபலித்திடையில்
தன்பாரம் குறைந்து
தான் வெற்றி கண்டதுவாய்
எண்ணிமகிழ்தல்
எட்டுக்கு ஏழுபேரின்
உள்மனதில் ஒளிந்திருக்கு
போலியான கற்பனையில்
அள்ளக் குறையா ஆசைக்கனவுகளில்
தன்னை மறக்கத்..... தருணம்
சுலபமாக
எங்கே கிடைத்தாலும் எடுத்து
அவற்றினது போதைச் சுகங்களிலே
பொழுதைச் செலவழிப்போர் வீதந்தான்
இந்த வியனுலகில் அதிகமாச்சு

**- த.ஜெயசீலன்**

படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பினை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகக் குறிப்பு**

**துவாரகனின் (சு.குணேஸ்வரன்)**

**'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்'**

**- கவிதைத் தொகுப்பு**

"ஓடிய சைக்கிளில் இருந்து
இறங்கி நடந்து.........................
எல்லாம் சரிபார்த்து மூடப்பட்ட
கைப்பை
மீளவும் திறந்து திறந்து."

கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற 'மீளவும் மரங்களில் தொங்கி விளையாடலாம்.' என்ற கவிதையின் வரிகள் தமிழ் மக்களது இன்றைய அவல நிலையை அழகுறச் சித்திரிக்கின்றன. அழகுற வடிவமைக்கப்பட்ட இத் தொகுப்பில் குறியீட்டுத் தன்மையான உத்தி முறைகள் கையாளப்படுவதும் பல விடயங்களை பேச முற்பட்டிருப்பதும் சிறப்பம்சங்களாகும்.

"சமூக இயல்பை அதன் இருப்பை ஏற்ற இறக்கங்களை அழகுறச் சுமந்து கவிதைகளைப் பிரசவித்துள்ள அவரது கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடயத்தைப் பேசுகின்றன.சில வெளிப்படையாக சில குறியீடாகப் பேசுவதை இக்கவிதையைப் படிப்பவர் உணர்வோர் குணேஸ்வரன் கவிதை என்ற வாகனத்திலே பவனி வருவது நல்லது என்று நான் கருதுகிறேன்".என்று பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அணிந்துரையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

**தொடர்பு-புத்தகக்கூடம் இல:172,இராமநாதன் வீதி,திருநெல்வேலி,யாழ்ப்பாணம்**

---

**கடவுள் எழுதிய கவிதை**

கண்களை மூடி கைகளைக்
கூப்பியிருந்தான் அவன்
இதயம் மட்டும் திறந்திருந்தது
எதிரே நிற்கும் எழிலின் இமைகள்
திறக்கும் எப்போதென்று
தன்னைத் தியானிப்பவன் கொஞ்சம்
தவமும் செய்யட்டுமே என்று
எல்லாம் தெரிந்திருந்தும்
இறுக்கி மூடியிருந்தாள்
இமைகளை அவள்
எதுவுமே தெரியாத சிலையாக

**த.ஜீவராஜ், தம்பலகாமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தாடற் களம்

**கவிதை பற்றிய சில கருத்தாடல்கள்**

**-நாச்சியாதீவு பர்வீன்-**

கவிதை என்பது ஒரு சிக்கலான பின்னமாகும். தமிழ்க்கவிதை வரலாறு மிக நீண்டதாகும். அது தமிழ் மொழியின் வரலாற்றுடன் தொடர்புபட்ட ஒன்றாகவும், மொழியியல் வளர்ச்சியில் இன்றியமையாத ஒரு கூறாகவும் கருதப்படுகின்றது.

சங்ககாலம், சங்கமருவியகாலம். என்று வரலாறு தொட்டுக்காட்டுகின்ற எல்லாக் காலங்களிலும் தமிழ் இலக்கியம் இருந்திருக்கின்றது. இந்த இலக்கியப் பரப்பில் ஒரு தவிர்க்க முடியாத தொகுதியாக கவிதையும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

திருவள்ளுவர், இளங்கோ, கம்பன் என்று அவ்வவ் காலங்களில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் ஏதோ ஒருவடிவத்தில் இந்த கவிதையினை ஊடுகடத்திவந்துள்ளனர். ஆனால் அவர்களின் கவிதைகள் மதம் சார்ந்த, இனம்சார்ந்த, குலம்சார்ந்த உள்ளீடுகளுடன் தாம் வாழ்ந்த காலத்தில் அரசனை துதிபாடி அவனது சரித்திரத்தை கவிதையாக்கி அல்லது அவனைப் புகழ்ந்து பரிசுபெற்றுக் கொள்ளும் ஒரு நிலையே அனேகமாக அவதானிக்க முடிகின்றது.இதற்கு விதிவிலக்குகளும் இல்லாமலில்லை.

ஒரே மரபில் வேகமாக ஊடுகடத்தப்பட்டு வந்து கொண்டிருந்த கவிதை இலக்கியத்திற்கு ஒரு கல்லை வைத்து புதிய பாதையை வகுத்தவன் பாரதி என்கின்றனர் ஆய்வாளர்கள். பாரதியின் கவிதை மிக எளிமையானது. அரசசபைகளிலும், ஆளும் அரங்குகளிலும், ராஜபட்டையை சுமந்து பயணித்த கவிதையின் வரலாற்று மரபைத் தகர்த்து, ஏழைகளும், பாமரர்களும் பட்டிக்காட்டுமக்களும் உணர்ந்து ரசித்து புரிந்து கொள்ளக்கூடிய ஒரு புதிய பாதையை கவிதை உலகில் உருவாக்கியவன் பாரதி என்றால் அது மிகையாகாதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் கவிதையில் புதுமையிருந்தது. எளிமையிருந்தது, சுவையிருந்தது. இதனால் மக்கள் மனங்களை இலகுவில் சென்றடையக்கூடிய மிகக் காத்திரமான நடத்தைக்கோலத்தை அது கொண்டிருந்தது. பாரதியின் தடம் ஓட்டியவர்களாக பலநூறு கவிஞர்களை பிற்காலத்தில் கவியுலகம் கண்டது.

மரபு நிலைக் கொள்கை மெல்ல மெல்ல காலாவதியாக புதுக்கவிதை எனும் புதுவடிவம் பூத்துக்குலுங்கத் தொடங்கியது. படித்தவர்களும், பண்டிதர்களும் மட்டுமே கவிதை எழுத முடியும் என்ற மரபுப் பாலத்தை உடைத்து புற்றீசல்களாக புதுக்கவிஞர்கள் புறப்படத்தொடங்கினார்கள். நிறையப்பேர் புதுக்கவிதைத் தடத்தில் பயணப்படத் துணிந்தாலும் ஒரு சிலர் மாத்திரமே நிறைவான கவிதைகளைத் தந்தவர்கள். கவிதை உலகத்தில் நிலைத்து நிற்பவர்கள். தான் சார்ந்த சமூகத்தில் தான் கண்டதை, கேட்டதை உள்வாங்கி உணர்ந்ததைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் இலகுவழிப்பாதையாக இந்தக் கவிதை இலக்கியத்தைக் கொள்ளலாம் அந்த வகையில் உணர்ச்சியே இல்லாத வெறும் சொல்லடுக்குகளை கவிதைகள் என்று கூறுகின்ற சிலருக்கு மத்தியில் கால ஓட்டத்தை கருத்திற் கொண்டு வளமான கவிதைகளை படைக்கின்ற நிறையப் பேரை அடையாளம் காணமுடிகின்றது.

ஒரு நல்ல கவிதை வாசித்த மாத்திரத்தில் மனதின் மர்மப் பிரதேசத்தில் "நச்" சென்று தைத்துவிடும் அந்த வகையிலான கவிதைகள் மூலந்தான் சமூகத்தின் சாளரம் வாசகனுக்கு திறக்கப்படுகின்றது. கவிஞனின் புதிய அணுகுமுறையில் வாசகன் ஆனந்தப்படுகின்றான்.

**"அவள் அழகாயில்லை**
**எனக்கு தங்கையாகிவிட்டாள்"** - என்ற ஹைக்கூ வகையிலான இந்தக் கவிதையில் மெய்யுணர்ச்சியை இரசிக்க முடிகின்றது. இவ்வாறே**"நள்ளிரவில் வாங்கினோம்**
**இன்னும் விடியவில்லை"** என்ற ஒரு இந்தியக் கவிஞனின் ஆதங்கமும், வலியும், கிண்டலும், நன்மையும் மெல்லமாய் நகைக்க வைக்கின்றது. இந்திய சுதந்திரத்தை இத்தனை இலாவகமாய் மொழியை வைத்து விளையாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் இருக்கின்றனர். அவர்களில் அப்துல் ரஹ்மானும் குறிப்பிட்டுக் கூறக்கடியவர். இதோ இன்னொரு கவிதையும் இப்படிச் சொல்கிறது.

**எங்களது சாவிகள் தான்**
**கைமாறியுள்ளன**
**பூட்டுக்கள் இன்னும் திறக்கப்படவில்லை"**

சுதந்திரம் வெறும் வார்த்தைகளில் மட்டும் தான் ஆராதிக்கப்படுகின்றன என்கிற அவலத்தை இது உணர்த்துகின்றது. ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்றுவிட்ட இந்தியா இன்னும் மெய்யான சுதந்திரத்தை நுகரவில்லை என்பதைப் புலப்படுத்துகிறது இது.

வெற்றுச் சொல்லடுக்களால் கவிதை பேசப்படுவதில்லை, கவிதை ஓர் அழகியல் போக்குக் கொண்ட சொற் சித்திரமாகும். நல்ல கவிதை எழுத நிறைய வாசிக்க வேண்டும் வெறும் ஒருசில வரிகளில் கவிதை பற்றிய கருத்தாடல்களை புரியப்படுத்துவது, அல்லது விவாதிப்பது இயலாத காரியமாகும். ஆனால் கவிதை இனிமையான அனுபவப் பகிர்வாகும். புரிந்துணர்வையும் சமாதானத்தையும் யாசிக்கின்ற கவிதைகளே இன்றைய காலத்தின் தேவையாகும்.

**கருத்தாடற் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.**

**புனை பெயரில் எழுதுவோர் தங்கள் சொந்தப்பெயர் முகவரியினையும் குறிப்பிடுதல் வேண்டும்.**

வாசகர்களே,
**"நீங்களும் எழுதலாம்"** இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கிறோம். சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மென்மைத் தளைகள்**

மென்மைத் தளைகளில் இருந்து
விடுபட நினைக்கின்றேன்
முடியவில்லை
என்னைச்சுற்றிலும்
வன்முறையின் விலங்குகள்

மௌனமாய் இருக்கின்றேன்
ஆனால் விடுகிறார்களில்லை
இரைச்சலை அதிகமாக்கி
மௌனம் கெடுக்கிறார்கள்

பூ வரைய
கை நீட்டுகிறேன்
கை தட்டிவிட்டு
ஆயுதம் தருகிறார்கள்

இயற்கையை ரசிக்கிறேன்
இடையூறு செய்கிறார்கள்
இன்பம் உனக்கு வேண்டாம்
இரத்தச் சகதியில் குளி என்றார்கள்

மென்மை இங்கே
வெறும் பேச்சுதான்
நானும் நிமிர்கிறேன்
வன்முறையாளனாய்

**-சூ.யுவன்-**

**தூள்களுக்குள் துகள்களாகும்...**

ஓயாப் போர் முழக்கத்தின்
எதிரொலியாய் கேட்கும்
மரண ஓலங்கள்
கண்ணுக்கெட்டிய தூரம் வரை
காணாமல் போனோர் பட்டியல்
புழுதி பறக்க வைக்கும்
பொருளாதார விஷச் சக்கரம்
கலைந்து போன
கருக் குடும்பங்கள்
காசுக்கூடமாய்
கல்விக்கூடங்கள்
சிதறிப்போகும்
சமூகமயமாதல் படிக்கட்டுக்கள் - இதனால்
தூள்களுக்குள் துகள்களாகும்
இளம் சிட்டுக்கள்.

**ஜெயா தமிழினி - திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்க் கோபம்**

அவள் கோபித்துக் கொண்டாள்
மனித குலத்தில் எவராவது தும்மின்
நீண்டகாலம் வாழ்கவென
வாழ்த்துவது மரபு
என் நாயகியின் வாழ்த்து
கிடைக்கும் என்ற நப்பாசை எனக்கு
நான் தும்மினேன்
எவளோ ஒருத்தி
உங்களை நினைக்கிறாள்
நான் இருக்க இன்னொருத்தி எப்படி?
மூக்கு வீங்கும் கோபத்துடன்
கேட்டாள் அவள்
அன்பே ஆருயிரே
என்ன சொல்கிறாய் நீ
யாரையும் விட உன்மீதே
காதல் அதிகமெனக்கு
என்றேன் நான்
யாரையும் விட.....
இதன் அர்த்தம்....?
ஓ........ அப்படியென்றால்
மொத்தமெத்தனை?
உருளும் விழிகளை
உருட்டி உருட்டி கேட்டாள்
சற்று அமைதியாக
நிதானித்து சொன்னேன்
என் இதயக் கனியே
இப்பிறவியில் பிரிவில்லை
நமக்கு என்பதை நம்பு
என்றேன் கெஞ்சலாக
அடுத்த பிறவியில் பிரிந்து விடுவோம்
அப்படித்தானே
அதட்டினாள் .......அழுதாள்
ஒருமுகம் இராணுவ அதிகாரி!
மறுமுகம் காவிய நாயகி!
அவள் ஒருத்தியே
இருவேடம் கொண்டு உலுப்பினாள்
அடிபாவி உன்னை மட்டும்தானே
நினைத்தேன் என்றேன்
என்னை மறந்தும்.....
கேட்டாள் வலுவேகமாக
அடபாவமே
உன்னோடு நான் படும்பாடு
இப்படி என்னை நானே
எரித்தேன்
அடுத்த கணத்தில் குளிர்ந்தேன்
குளிர்ச்சியில் கெஞ்சினேன்
என்னே அதிசயம்
இத்தனை நேரமும்
இமயமலையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயத்தில் சுமத்தியவளா....
இப்படி என்று அதிசயித்தேன்
கொஞ்சல் வேண்டுமென்றால்
என்னிடம் நேரடியாக..........
"ஊடல் கொண்டு
காமம் கொள்வதே
பேரின்பம் தரும் நல்ல
சிற்றின்பம்" என்றாள்
இனி வேறென்ன நான் சொல்ல

**சீனா உதயகுமார், சமரபாகு**

---

**அன்புடன் அரசிற்கு...**

நலம் பெற ஆவல் - நிற்க
நம் நலமுடன்
சில வேண்டுதல்களும் வழமைபோல்
எரிய மாட்டோம் என்று
அடம்பிடிக்கும்
சுட்ட எலும்புக்கூடுகள் நாம்
எமக்கென்னவோ
செங்கட்டிகள் என்றுதான் நினைப்பு
ஒன்று யோசியுங்கள்
எம்மை - நீங்கள்
எப்போதும் போல்
மண்ணாய் மட்டும் தான்
பார்க்கிறீர்களா? இல்லை
மனிதர்களாயும் தானா?
உரசிப்போட்டு விட்டீர்களா?
கருகிக் கொண்டிருக்கிறோம்
எப்பொழுது எமக்கு தலைப்பிரசவம்
வேதனை கடக்கப் பயந்ததில்
வீணாகிப் போனோம்
உயர் நீதிமன்றம் என்றீர்கள்
அண்ணாந்து பார்த்ததில்
எங்கள் பரிணாமம் ஒட்டகமாயிற்று
இனியென்ன - எமக்கு
சொந்த ஊர் பாலைவனம் தானே
தெரிந்தும் ஒரு நப்பாசை
நாம் நாமாய் வாழ்ந்து
நம் மண்ணில் மரித்துப் போக
ஆவன செய்யுங்கள் - அரசே!
ஆவலுடன் இருக்கிறோம்.
இப்படிக்கு - பழகிப்போனவர்கள்

**சு.தர்ஷிகா, வவுனியா கல்.கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்ணின் பூத்த கவிப்பூ ஒன்றின் மரணம்**

சாவகச்சேரியிலுள்ள கல்வயல் எனும் கிராமத்தில் 16.08.1933ல் அமரர் தாமோதரம்பிள்ளை அமரர் சின்னப்பிள்ளை ஆகியோருக்கு மகனாகப் பிறந்த கவிஞர் தா.இராமலிங்கம் அவர்களின் கவிஆளுமை எம்மை எல்லாம் வியப்புற செய்தது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் படித்த கவிஞர் தன் பட்டப்படிப்பை கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்களில் முடித்துள்ளார். இலங்கையில் இரத்தினபுரி சென்லூக்ஸ் கல்லூரியிலும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் தன் ஆசிரியத்தொழிலைத் தொடர்ந்தார். பின்னர் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். இவர் மீசாலையைச் சேர்ந்த மகேஸ்வரியை தன் வாழ்க்கை துணைவியாக்கிக் கொண்டார். இவர்களுக்கு அமரர் கலைச்செல்வன், வைத்தியகலாநிதி அருட்செல்வன், பொறியியலாளர் தமிழ்ச்செல்வன், திருமதி இசைச்செல்வி குகரூபன் (B.A), வைத்தியகலாநிதி கதிர்ச்செல்வன் ஆகியோரை மக்கட் செல்வங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

இவரின் கவிதைகள் எளிமையானவை.

இவரின் கவிதையின் தெளிவை சிறப்புற நமது வாசிப்புக்கு **'புதுமெய்க் கவிதைகள்'** (1964) **'காணிக்கை'** (1965) நூல்கள் மூலம் கிடைக்கிறது. 1960ல் இருந்து கவிதைகள் எழுதத் தொடங்கிய கவிஞர் அலை, சமர் போன்ற சிற்றிதழ்களில் எழுதிய கவிதைகளில் சில திரு. அ. யேசுராசா, திரு. பத்மநாபஐயர், உ. சேரன், மயிலங்கூடலூர் பி. நடராஜன் போன்றோர் தொகுத்த "மரணத்துள் வாழ்வோம்" (1985/1996) தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

நீண்டநாட்களாகவே இறந்துவிட்ட கவிஞர்பற்றி நண்பர் யேசுராஜாவிடமும், ராதையனிடமும் கேட்டிருந்தும் அப்போது பதில் கிடைக்கவில்லை. கவிஞரின் ஆழ்ந்த மௌனம் எமக்கு அதிர்ச்சியைத் தந்ததில் வியப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அதிபராக இருந்த இவரின் சமூக நோக்கு, ஆழ்ந்த புலமை, மனித நேயம் இவற்றிக்கும் மேலாக தமிழ்த் தேசியம் மேலான அதித அக்கறை இவரின் கவிதைகளில் தெரிந்தாலும் நிறைய இன்னும் எழுதியிருக்கலாமே என்ற ஏக்கம் எம்மிடம் உண்டு. தனக்கான கவிவாரிசை உருவாக்கியிருக்கலாம் தான்.

"ஞாபகமறதி" நோயினால் தன்னை மறந்த நிலையில் வாழ்திருக்கிறார் என்பதை அவரது மகன் மூலம் அறிந்த போது வேதனையாக இருந்தது. இன்றைய இளைய கவி ஆர்வலர்கள் கவிஞரின் கவிதைகளை தேடிப் படித்தல் வேண்டும்.

25.08.2008ல் அமரத்துவமடைந்த கவிஞரின் உடலம் கிளிநொச்சி மண்ணில் 26.08.2008 தகுந்த மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டுள்ளது.

மரணம் நிஜம் எனினும் வாழ்தலுக்கான உறுதிப்பாடு இல்லாத சூழலில் அவரின் மரணம் பல செய்திகளை சொல்லிச் செல்கிறது. அவர் எழுதிய முழுக் கவிதைகளையும் தொகுத்து வெளியிடுவது தான் இலக்கிய உலகம் அவருக்குச்செய்யும் சமர்ப்பணமாகும்.

**முல்லை அமுதன் - லண்டன்**

***கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழி பெயர்ப்புக் கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.***

அறிமுகக்குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெறவேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பிவையுங்கள். 2007 ற்கு முன் வெளியானவை அறிமுகக்குறிப்பில் இடம்பெறமாட்டாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆடுகளும் ஓநாய்களும்**

ஆடுகள் நனைகின்றனவென்று
அழுவதுண்டாம் ஓநாய்கள்
சில இடங்களில்
ஆடுகள் தம் காவலுக்கு
ஓநாய்களை
நியமித்து விடுவதுமுண்டு
அந்தளவுக்கு இந்த ஓநாய்கள்
அலங்கரித்துக் கொண்டும்
அதிநவீன விஞ்ஞானச் செழிப்பால்
பூரித்தும் உள்ளன

நனையும் ஆடுகளுக்கு
இந்த ஓநாய்கள்
அவ்வப்போது
ஆடுகளின் தோல்களையே
குடைகளாக்கி
அன்பளிப்பதுண்டு
இறுதியாக கொடுத்திருக்கும்
உலகமயமாதல் பெருங்குடை
ஐம்பொறிகளுக்கு தீனிபோட்டு
ஐக்கியப்படுத்தி விடுகின்றது

தினமும் ஓநாய்களின்
உபதேசங்களைக் கேட்டுக் கேட்டு
ஆடுகளும் ஓநாய்கள் போலாக
ஆசைப்படுகின்றன
வழிகாட்டிகளும்
வழங்கப்பட்ட குறிப்புகளும்
வரப்பிரசாதங்களாக........
சேவகம் செய்வதன்
மேன்மை குறித்த
பிரமிப்புகளும் புளகாங்கிதங்களும்

ஆடுகள் வகைப்படுத்தப்பட்டு
வண்ணங்கள்
அப்பப்படுகின்றன
வண்ணங்களுக்கேற்ற கூடுகளும்

இப்போது
ஆடுகள் தமக்குள்
அடிபட்டுச் சாகின்றன

ஓநாய்கள் புனிதர்களாக......
ஆடுகள் ஆடுகளையே
படையலிடுகின்றன

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னிப்பு ... இல்லை?**

ஏரெடுத்து நாம் வயலில் எழுதும் போது
ஏடெடுத்து நீயுந்தா னெழுதுகிறாய்
வேரெடுத்து கல்லெடுத்து எறியும்போது
விடிவிளக்கு நீயெடுத்துப் பயிலுகின்றாய்
போரெடுத்து நாம் சூடு போடும் போது
பரீட்சையிலே நீ குனிந்து எழுதுகின்றாய்
காரெடுத்து அப்பால் நீ ஓடும் போது
கையெடுத்து நாம் வணங்க வேண்டுமடா?

நாலடுக்கு மாளிகையில் நீ புகுந்தாய்
நான்தானே உனக்கு அதைக் கட்டித்தந்தேன்
ஈழத்தாய் பெற்றெடுத்த கல்லும் மண்ணும்
எடுத்துத்தான் நானதனை எழுப்பித் தந்தேன்
மூளையினால் நீ உண்ட அனைத்து மெங்கள்
முழு உழைப்பால் உருவான எங்கள் சொத்து
மூளைகளே நாமுனக்குச் சோறு போட்டு
உடையுடுத்திப் படிப்பித்து விட்ட சீலர்

சர்வகலா சாலையிலே நீ அரிந்த
சவங் கூட எம்முடைய சவந்தான் இங்கே
கர்வமுடன் நீ சுமக்கும் கோட்டும் சூட்டும்
சட்டமென நீயெழுதி வைத்ததாளும்
பர்வதமாய் நாம் குவித்த உழைப்பு ..ரத்தம்
பட்டதை நீயெடுக்க வெட்கப்பட்டு
சர்வ கறுப் பாய்போர்த்திச் செல்லுமந்தச்
சட்டைகளும் எம்முடைய உழைப்பின் பிள்ளை

பெரும்பதவி பெற்றதனாற் பெரிய சொத்தும்
பெட்டையுடன் பொக்ஸ் வகனும் இலட்சம்
காசும்
தருமுனது மாமாக்கு இவற்றையள்ளித்
தந்துதவும் அழுக்கற்ற முரட்டுக் கைகள்
எருமைகளே இத்தனைக்கு மப் பாலின்னும்
திருடுதற்கும் நிர்வாண ஓட்டம் பார்த்து
வருவதற்கும் இங்கிலாந்து பறந்து செல்லும்
வம்பர்களே உங்களுக்கு மன்னிப்பு இல்லை.

**சுபத்திரன்**

குறிப்பு: 1979 இல் அகால மரணமடைந்த க.தங்கவடிவேல் என்ற இயற்பெயர் உடைய கவிஞர் சுபத்திரன் மாக்சிய சார்புடன் கவிதை படைத்து வந்தவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதம்

"நீங்களும் எழுதலாம்" கவிதை ஏடு கிடைத்தது. படித்து மகிழ்ந்தேன், தங்களது முயற்சி பாராட்டுக்குரியது. கவிதை என்பது சந்தமும் கற்பனையும் இணைந்தது. கவிதைத் தெரிவில் கூடிய கவனம் செலுத்துக. மரபுக் கவிதைகள் குறைவாகவுள்ளன.

-கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்)

"நீங்களும் எழுதலாம்" கவிதை இதழ் கவித்தேன் சுவையோடு, என் நண்பன் இளையநிலா யூனூசின் மூலமாக என்கரம் கிட்டியது. இன்றைய அவசர கால உலகில், இவ்வாறான சிற்றேடுகள் மூலமாக கவிதைகளைப் பிரசுரித்து, யதார்த்த உணர்வுகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதோடு மாத்திரமன்று, கவிஞர்களை நாடறியச் செய்து கொண்டிருக்கும் இவ் அரிய சேவைக்கும் அயராது உழைக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்.

-எம். பீ. அன்வர் (பிரகாசக் கவி)
காத்தான்குடி - 03

"நீங்களும் எழதலாம்" கவிதைச் சஞ்சிகைப் பிரதிகள் கிடைத்தன. ஏலவே பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களிடமிருந்த பெற்றுப்படித்துள்ளேன். இளங்கவிஞர்களுக்கான ஆரோக்கியமான களத்தை "நீங்களும் எழுதலாம்" தருவது மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. பல பிரதேசங்களிருந்தும் ஆர்வத்தோடு கவிஞர்கள் கவிதைகளை எழுதியுள்ளனர். அவர்களது சமூகப் பிரச்சினைகள், மனமுரண்பாடுகள், அக மனவுணர்ச்சிப் போராட்டங்கள் யாவும் சுவையாக இக்கவிதைகளில் பதிவாகியுள்ளன. தங்களது பணி சிறப்புற வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

ஈ. குமரன். தமிழ்த்துறை விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

சாதாரன ஒரு சூழ்நிலையில் ஒன்றைச்செய்வது பெரிய விடயமல்ல. பிரச்சினைகள், நெருக்கடிகள் நிறைந்த சூழ்நிலையில் "நீங்களும் எழுதலாம்" வெளிவருவது சாதனைக்குரிய ஒரு விடயமே. வாழ்த்துக்கள்.

**கோவை அன்சார் -கொழும்பு-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருமலை மண்ணிலிருந்து எங்கள் கவிதையை ஆரோக்கியமான திசையில் இட்டுச்செல்லல்" என்பதை சாத்தியப்படுத்த முனைகின்ற தங்களுக்கு எனது பாராட்டுக்கள். எழுத்துச் சூழல் எம்மிடையே ஆபத்தாகிக் கொண்டிருக்கின்ற பொழுதுகளில் நாங்கள் எல்லோரும் ஒன்றாகக் கைகோர்த்து எமது இருப்புக்காகக் கவிதை செய்வோம்.

-ந. வினோதரன் (யாழ். பல். மாணவன்)
மிருசுவில்

---

சஞ்சிகை:- **இனிய நந்தவனம்** (உலகத் தமிழர்களிடையே உலாவரும் மக்கள் மேம்பாட்டு இதழ்)

**ஆசிரியர்: த. சந்திரசேகரன்**
இந்திய விலை:5.00

தொடர்பு: INIYA NANDAVANAM
05, New Street, OPP.CSI Hospital
Woraiyur, Trichy
Tamil Nadu, South India




இலங்கையை (வவுனியா) பிறப்பிடமாகக் கொண்ட த.சந்திரசேகரன் அவர்களை ஆசிரியராக கொண்டு வெளிவரும் "இனிய நந்தவனம்" மாத இதழ் பல்சுவை அம்சங்களோடு வெளிவந்து கொண்டிருக்கிறது **அந்தனி ஜீவா** (இலங்கை), **ஸ்ரீகந்தராசா** (அவுஸ்திரேலியா) போன்ற பல நாடுகளைச்சேர்ந்த ஆலோசகர்களை கொண்டு வெளிவரும்"இனியநந்தவனம்" உலகத்தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் மேம்பாட்டு இதழாக கடந்த பத்துவருடங்களாக வெளிவந்து கொண்டிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் பெயர்ப்பும்

**"A book of Verses underneath the Bough**
**A Jug Wine, a loaf of Bread-And Thou**
**Beside me singing in the Wildernees**
**Oh,Wildness were Paradise enow!"**

**மூலம்: ஃபிட்ஸ் ஜெரால்டின்**

வெய்யிற்கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றற்காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறையமதுவுண்டு
தெய்வகீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு

பெயர்ப்பு-1
**கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை**

மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக் கவிதை நூலொன்றும்
தீதறு செந்தேன் மதுவும்
தீங்கனியும்- பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்து
கனிவோடு கூடுவையேல்
ஏதுமினிக் கவலையில்லை
இதுவன்றோ பரமபதம்!

பெயர்ப்பு-2
**சு.து.க.யோகி**

"நீங்களும் எழுதலாம்" இதழை கணனி மயப்படுத்த உதவிய ஆர்.நித்தியா (EDGE NET Cafe உவர்மலை), அவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய அஸ்ரா பதிப்பகத்தினருக்கும், "நீங்களும் எழுதலாம்" தனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது.

ISBN 1800 - 3311




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை-மார்கழி

# நீங்களும் எழுதலாம்

2008

நீங்கள் -02 எழுத்து -09



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

விலை 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-09

**இருமாத கவிதை இதழ்**
நவம்பர்-டிசம்பர்-**2008**

**ஆசிரியர்**
**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

ஷெல்லிதாசன்
தீபச்செல்வன்
த.ஜெயசீலன்
ஏ.எம்.எம்.அலி
செ.ஜே.பபியான்
என்.சந்திரசேகரன்
சூசை எட்வேட்
கௌரி மோகனதர்சினி
ம.கம்ஷி
க.யோகானந்தன்
க.வெல்லபதியான்
திருமதி.டி.சுதாகினி
சி.ரவீந்திரன்
அஸ்ரபா நூர்டீன்
பாவெல்
பெரிய ஐங்கரன்
வாகரை வாணன்
செ.கணேசன்
ம.ராஜ்குமார்
எம்.வதனரூபன்
கணேசமூர்த்தி வினு
ரிம்ஸா முஹம்மத்
தில்லைமுகிலன்
எச்.எப் ரிஸ்னா

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

உங்கள் கண்ணோட்டம்
அறிமுகக்குறிப்பு
கருத்தாடல் - வானம்பாடி
கவிதைக்கான சிறு சஞ்சிகை - மேமன்கவி
இரசனைக்குறிப்பு - கலா விஸ்வநாதன்
பசுபதி கவிதை - வாசகர் கடிதம்
மூலமும் பெயர்ப்பும்

**வடிவமைப்பு**
**எஸ்.யசோதரன்**
**கே.மாக்ஸ்சிறிராம்**
**அட்டைப்படம்**
**ஓவியர்.கே.சிறீதரன்**

**தொடர்புகளுக்கு,**
**'நீங்களும் எழுதலாம்'**
**103/1,திருமால்வீதி, திருகோணமலை.**
**தொ.பே: 026 2220398.**
**E-mail:-neenkal@yahoo.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையும் மனித உணர்வும்

உலக சனத்தொகையில் வறிய மக்களின் பங்கு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. மிலேனியம் இலக்காகக் கொள்ளப்பட்ட **2015ம் ஆண்டில் வறுமையை முற்றாக ஒழித்தல்** என்னும் இலக்கிற்கு மாறாக ஆண்டுகள் ஒன்பதை கடந்துவிட்ட நிலையில் 2000ல் இருந்ததைவிடவும் வறுமை வீதம் அதிகரித்து வருவதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. உலக நாடுகளின் கவனம் வேறு வேறு திசைகளில் திரும்பிக் கொண்டிருக்கிறது என்பதே இதன் அர்த்தம்.

மனித உணர்வுகள் சார்ந்த சிந்தனை பலரிடத்தும் குறைந்து வருவதே இதற்குக் காரணமாகும்.

" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (புறநானூறு-18)என்று பாடிய சங்கப் புலவர்களிலிருந்து "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதி வரை வறுமையைப்பற்றி பேசுபவர்களும், வறுமைக்கு எதிராக குரல் கொடுப்பவர்களும் கவிஞர்கள். அன்று தொட்டு இன்று வரை தடுமாறும் ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டு பவர்களாகவும், சாதாரண மக்களை விழிப்பூட்டுபவர்களாகவும், திகழ்பவர்களில் கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அவ்வாறான ஒரு பயணத்தில் நீங்களும் எழுதலாம் இணைந்து நடைபயின்று கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அப்பயணத்தில் நீங்களும் இணைந்து கொள்ள **நீங்களும் எழுதலாம்.**

**அன்புடன்**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவர்களை நிராகரிக்கும்**

**சுதந்திரங்கள்...!**

வெள்ளைப் புறாக்களில்
எத்தனை பரிவு தான்
இந்த -
வல்லூறுக் கூட்டங்களுக்கு!
தினந்தினம் -
வானத்தில் வட்டமிட்டு வட்டமிட்டு
தங்கள்
பருந்துக் கண்கொண்டு
கண்துஞ்சாத கண்காணிப்பு
பாவம் புறாக்களாம்!

வன வேடனின் அம்பு வீச்சு
அவன் விரிக்கும்
வலை வீச்சிலெல்லாம்
வீழ்ந்து விடாமல் சுதந்திரமாய்
புறாக்கள்
சிறகடித்து சிறகடித்து
இன்ப உலாவருவதை
கண்கொண்டு பார்த்து
களிகூர ஆவலாம்
இந்த -
கழுகுக்கூட்டத்தின்
நெருங்கிய உறவுகளுக்கு !

இவற்றின் -
கண்துஞ்சாத இத்தனை
"அறங்"காவலிலும்
தினந்தினம் பகலிரவாய்
மாயமாய் மறைகின்றன
புறாக்கள் - கரையொதுங்குகின்றன
முடிவில் - விழித்துக் கொண்ட
புறாக்கள் தமது உரத்த குரலில்
**"எங்கள் சுதந்திரத்தில்**
**எங்களின் விடுதலையில்**
**கண்ணும் கருத்துமாய்**
**கரிசனை காட்டும்**
**கருணாமூர்த்தியின் மறு அவதாரங்களே**
**எம்மை -**
**வட்டமிட்டு வட்டமிட்டு**
**திட்டமிட்டு திட்டமிட்டு**
**காவல் காக்கும் கைங்கரியத்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்
தானாக கைவிட்டாற் போதும்
எமது
இழந்த சுதந்திரம்
இல்லாமற் போன விடுதலையெல்லாம்
தானாக கைகூடும்
சிறகடித்து வானில்
இன்பமாய் உலாவருவோம் நாம்"

-ஷெல்லிதாசன்-

## மக்களோடு பேசு

நீ என்ன மௌனிக்கிறாய்
உனது மௌனம்
எனக்கு பலதை புரியவைக்கிறது
நான் அவளோடு பேசுவது
நட்போடுதான் !
அவளும் நானும்
நீண்ட நாள் நண்பிகள்
உன்னை அறிவதற்கு முதல்
அவளை நான் நன்கறிவேன்
நீ அன்றும் மௌனி
இன்றும் மௌனி
ஆனால் - மற்றவர்கள்
என்னோடு பழகுவதை
நீ விரும்பியதில்லையே - ஏன்?
நான் அவளுக்கு வழிகாட்டுவது
அவளை அறிமுகப்படுத்துவது - ஏன்
சந்திப்பது கூட:
உன் மனதை பாதிக்கிறது
அவள் வெளியுலகை பார்க்க
விரும்புகிறாள்
உனக்கு வெளியுலகு
களனிக்குள் தெரிகிறது
அவளோ வெளியுலகு வந்து
புதிதாய் சொல்லத்துடிக்கிறாள்
நீ என்றும் வாய்பேசாமடந்தையாக.......
மௌனம் காக்கிறாய் - ஆனால்
மனதாலும் கொதிக்கிறாயே......
நீயும் வெளியே வந்து........

-வதிரி - சி. ரவீந்திரன் -

களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரவு மரம்**

இரவு முழுவதும் நிலவு
புதைந்து கிடந்தது
நெடுஞ்சாலையின் அருகிலிருக்கும்
எங்கள் கிராமமே
மண்ணுக்குள்
பதுங்கிக் கிடந்தது
வானம்
எல்லோரும் வெளியேறிய
வீட்டின்
சுவரில் ஒட்டியிருந்தது.

நேற்று இறந்தவர்களின்
குருதியில்
விழுந்து வெடித்தன
குண்டுகள்
நாயும் நடுங்கியபடி
பதுங்குகுழியின்
இரண்டாவது படியிலிருக்கிறது

ஒவ்வொரு குண்டுகளும்
விழும் பொழுதும்
நாங்கள் சிதறிப் போயிருந்தோம்
தொங்கு விளக்குகளை
எங்கும்
எறிந்து எரியவிட்டு
விமானங்கள்
குண்டுகளை கொட்டின.

எங்கள் விளக்குகள்
பதுங்கு குழியில்
அணைந்து போனது
இரவு துண்டு துண்டாய் கிடந்தது
பதுங்கு குழியும் சிதறிப் போகிறது
எங்கள் சின்ன நகரமும்
சூழ இருந்த கிராமங்களும்
தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தன.

மெதுவாய் வெளியில்
அழுதபடி வந்த
நிலவை
கொடூரப்பறவை
வேகமாய் விழுங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு முழுக்க விமானம்
இரைந்து கிடந்தது
அகோர ஒலியை எங்கும்
நிரப்பிவிட
காற்று அறைந்து விடுகிறது.
தாக்குதலை முடித்த
விமானங்கள்
தளத்திற்கு திரும்பு கின்றன
இரவும் தீப்பிடித்து
எரிந்துகொண்டிருந்தது
மரங்களும் எரிந்து கொண்டிருந்தன
சிதறிய பதுங்கு குழியின்
ஒரு துண்டு
இருளை பருகிய படி
எனது தீபமாய் எரிகிறது
மரமாய் வளருகிறது.

உடைந்த வானத்தின் கீழாக
நிலவு
தொங்கிக்கொண்டிருந்தது
நட்சத்திரங்கள்
பேரிரைச்சலோடு
புழுதியில் விழுந்து கிடந்தன.

**தீபச்செல்வன்.**

**புதிய ஆத்திசூடி**

அரசியலில் நுழை!
ஆயுதம் ஏந்து!
இம்சை செய்!
ஈழத்தைத் தகர்!
உண்மையைக் கூறும்
ஊடகத்தை கொளுத்து!
எதிர் வீட்டு சண்டைக்கும்
ஏ. கே. யைத் தூக்கு!
ஐக்கிய இலங்கை
ஒரு பகற் கனவாக்கு!
ஓர்மை தவிர்!
ஔவியம் பேசு!

**- அஷ்ரபா நூர்தீன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேரில் விழும் அனல்

உலாவுகின்ற தென்றலும்
உலர்ந்து வீசுதேனடா?
உசாவுகின்ற பூங்குயில்
உடன் திரும்பி போகுதா?
நிலாவிலென்ன நேர்ந்ததோ,
நிலைகுலைந்து தேய்ந்தது!
நியாயமில்லை....... பூக்களும்
நெருப்பிலூர்ந்து வீழ்ந்தது

கனாக்கள் நூறு வந்து
கணத்திலே மறந்தது
வினாக்கள் கோடி......... நீளுது
விடைக்கு ஏங்கி வாடுது
அநாகரிகம் ஆயிரம்
அயல்கள் மீது ஆடுது
அதோ எம் வாழ்வின் வேரிலும்
அனல் படர்ந்தெழும்புது

இடம் பெயர்ந்த வாழ்க்கையே
இடி............ விழுந்து சாகுதே!
இதம் தொலைந்த மானிடம்
இழந்தழிந்து ஓடுதே!
தடம் அழிந்து போகுதே!
தலை குனிந்து வீழுதே!
கடந்து போகும் காலமே
கரம் கொடு நாம் வாழவே

- த. ஜெயசீலன் -

## முடியுமா?

என்னால்
விரும்பப்படுகின்ற
ஒரு மனிதனாக
ஆகுவதற்கே
என்னால்
முடியவில்லை
நீ
விரும்புகிற
ஒருவனாக
எப்படி
என்னை மாற்றிக்கொள்ள இயலும்?

- பாவெல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளைக்குள்ளே நுழைதற்குத் துடிப்பு

ஆணி உடைந்து போய் அந்த
அச்சாணி உடைந்து போய்
அதிக நாள் ஆயின

ஆகவே
வண்டி ஓடாது பத்து
வற்சரங்களுக்கு மேற் போயின

ஓடாது போனாலும்
ஒழுங்காகக் கிடந்தது வண்டி!
அங்கங்கே
உருளாது கிடந்தது வண்டி!

ஓராணி அச்சாணி
ஆகவுரு வாகியது
அவ்வாணி அவசரத்தில்
அச்சின் துளை தேடியது

துளைக்குள்ளே நுழைதற்குத்
துடிக்கின்ற ஆணிக்கு
வண்டி ஓடினாலென்ன?
ஓடாவிட்டாலென்ன?
உருண்டா லென்ன? கவிழ்ந்தா லென்ன?

துளைக்குள்ளே நுழைகின்ற
துடிப்போடு மட்டும் துடிக்கிறது!
அது
அச்சாணி ஆவதற்கு எவ்விதத்
திராணியும் அற்று துடிக்கிறது!

**- கிண்ணியா ஏ.எம்.எம். அலி -**

கவிதைக்கான.......
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின்களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்
} நீங்களும் எழுதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிலையாதல்**

முகத்தில் இறுக்கம் இருக்கக் கூடாது
சுருக்கம் விழக்கூடாது
பற்கள் அனைத்தும்
பளிச்சென்று இருக்க வேண்டும்
புன்னகை தவழாத பொழுதுகள்
உதடுகளில் உதிக்கவே கூடாது.
முக்கியமாக
தலைகுனியக் கூடாது
இவ்வளவும் போதும்
இப்பொழுதே
என் சிலையை செதுக்கி விடுங்கள்
கொடிய வெயில்
கொடிய மழை
இல்லாத இடமாய் பார்த்து.

- பெரிய ஐங்கரன் -

**தொட்டிச்செடி**

அதிகார குலைவுக்குள்
விடுதலை எனும்
நுகர்ச்சி
அடைபட்டுக்கிடக்கிறது!
காலடித் தடங்களில்
கலையாமல் சிறைக்குள்
இடம்பெயரும்
பட்சி!
பற்றியெரியும் மனசு - தொட்டிச்செடியாய்
தளம் மாறும்!
மறு உற்பத்தி சுழற்சி
தொழிற்சாலையாய்
யதார்த்தத்தின் அழுத்தம்!
ஒட்டிச்சுருட்டிய
சல்லடை சருகாய்,
உன் எரிகைக்குள்
ஆட்பட்டு,
சிலிர்க்கும்.....?
உறுதிகலையா
கட்டமைவு நீ.......?

- செ.ஜெ.பபியான் - சாமிமலை பத்தனை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழுக்காக**

பேசுக தமிழில் மட்டும்
பிற மொழி தன்னை அள்ளி
வீசுக தெருவின் ஓரம்
விளங்குக தமிழனாக
தூசது தட்ட வேண்டும்
துடைப்பதை எடுத்துக் கொள்க
மாசது நீங்கிப் போகும்
மறை மலை அடிகளாவோம் !

மொழியினில் பற்று வேண்டும்.
முண்டங்கள் உணர மாட்டா!
விழியதை இழந்து விட்டால்
வீணென ஆகும் வாழ்க்கை
பழியது நேராவண்ணம்
பைந்தமிழ் மொழியைக் காத்தல்
தொழிலெனக் கொள்ள வேண்டும்.
தொண்டிதற் கிணையே இல்லை!

அந்நிய மொழியில் ஆசை
அடியோடு சாய்த்துப் போடும்
முன்னைய வரலாறெல்லாம்
மூளையில் பதிக்க வேண்டும்.
அன்னையாம் தமிழைக் காக்க
அணியது திரள வேண்டும்
பின்னிய சதிகள் எல்லாம்
பிய்த்து நாம் எறிதல் வேண்டும்.

பாரதி சொன்னான் அன்று
பைந்தமிழ் மொழியைப் போல
ஓர் மொழி இனிப்பதில்லை
உண்மையே அவனும் சொன்னான்
பேர், புகழ் சிறப்பினோடு
பெருமைகள் பலவும் பெற்ற
சீர் மொழி தமிழே எங்கள்
சிந்தையில் வாழ வேண்டும்.!

**-வாகரை வாணன் -**

**வாசகர்களே,**
நீங்களும் எழுதலாம் இதழின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள். அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நியாயம் கண்ட மனசு**

கண்கள் கண்டவை
நெஞ்சம் நெகிழ்ந்தவை
நெஞ்சம் நிறைந்தவை
நெஞ்சுருக நெருடியவை
நெஞ்சமதில் நெருப்பாய்
உணர்வுகளின் உந்துதலாய்
உருவம் பெறுகிறது
கவிதையாய்
ஒன்றைக் கண்ட போது
உருக்கொண்ட தீப்பொறி
இல்லை....
இனி ஒன்றையும்
காணவே கூடாதென
கண்ணை மூடிக்கொண்டாலும்
மனசு கண்டவைகள்...........
நெருடலாய் ஒரு
நெருப்புச் சுவாலையாய்
எழுகிறது கவிதையாய்
நேற்றைகளில்...........
நேரில்....... நிஜமாய்.......
கண்டபோது கரைபுரண்டவை
இப்போ.........
காணாத போது
நிதர்சனத்தை
நியாயப்படுத்தி
நீதி கேட்கிறது........

**என். சந்திரசேகரன்- இரத்தோட்டை**

**துளிப்பா**

புலலாங்குழல் இசை
மயங்கியது மூங்கில்
எட்டப்பன்.

கொத்தடிமை வியர்வைத்துளி
அதிசய அழகானது
தாஜ்மகால்

ஒற்றைக்கால் தவம்
உலக சமாதானம்
வெள்ளைக்கொக்கு

**செல்லக்குட்டி கணேசன்., அல்வாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெருக்குரல்**

இல்லையென ஏங்குவன எல்லாம், வைத்திருப்பார்
தொல்லையென தேம்புவன வற்றைத்தான்.

கடனையும் நோயையும் உடன் தீர்த்தல்
திடமான வாழ்க்கைக்குத் தீர்வாகும்.

புண்ணியம் புரிந்தால் கண்ணிய வாழ்நாளின்
எண்ணிக்கையில் ஒன்று கூடுமே.

தாய்மை பெண்மை சேவை அழகின்மையால்
இல்லாமை ஆகிடுமா என்ன.

-சூசைஎட்வேட், அன்புவழிபுரம்-

---

**விடியா இரவு**

ஈழத்தமிழர் இரத்தத்திலே - இப்போது
ஈமோக்குளோயின் தெரியவில்லை
ஈனம் தெரிகிறது - உள்ளத்தின்
ஊனம் தெரிகிறது.
எரிகிறது - தமிழன்னையின் பெற்ற வயிறு
சுற்றி அடிக்கின்ற விமானங்கள்
எற்றி உதைக்கின்ற விலைவாசி
முற்றி வளர்ந்துவிட்ட "குடும்பப்" பிரச்சனை.....
தட்டிக்கேட்கலாம்
கேட்பவன் நாளை பிணமாய்
அதிகாலையில் பத்திரிகை படிப்பவன்
அதிசயமாய் கேட்கிறான்...
அடடே....! இன்றைக்குக் கொலை செய்தி
ஒன்றுமே இல்லை...?
ஓ...! இறைவா...! எம்மை நீ
ஓடிவந்த சுனாமியில் ஒரேயடியாய்
அழித்திருந்தால்....
ஒற்றையாய் எம்மை விட்டுவிட்டு
ஒளிந்திருந்து இரசிக்கின்றாயோ...?
இல்லையென்றால்...?
ஒற்றுமையைத் தொலைத்து விட்ட நாங்கள்
ஒருவருமே உன்னைக்
கவனிக்கவில்லையோ...?

-ம. ராஜ்குமார், வவு. கல். கல்லூரி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உங்கள் கண்ணோட்டம்"**

**இதழ் 8 ஒரு பார்வை**

**-கன்னிமுத்து வெல்லபதியான் எருவில-**

கவிதை என்பது காலத்தின் கண்ணாடி அதனால் காலத்தின் தேவைகளைக் கருத்திலே கொண்டு தான் கவிதைகளோ, கவிதை இதழ்களோ உருவாக்கம் பெற வேண்டியது இன்றியமையாததாக இருக்கின்றது. இது ஒரு சாதாரண பணியல்ல. **"நீங்களும் எழுதலாம்"** இதழுக்கு இதழ் இது மெருகேறி வருவது இதனை ஆழமாகப் படித்துணரும் போது தெரிய வருகின்றது. "உலக உணவுப் பிரச்சினையை எதிர்வுகொள்வதில் உலக நாடுகளின் நடவடிக்கையும் நம் நாட்டின் நிலைப்பாடும்" என்னும் தொனிப்பொருளிலான ஆசிரியர் தலையங்கம் அருமை. அதனைத் தொடர்ந்து தீபச்செல்வன் - தீபன் எழுதிய "துண்டாடப்பட்ட சொற்கள்" , "அடிமைகள் நகரத்தின் தீபாவளி" முதலான கவிதைகள் "நவீன கவிதைகள்" என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. ஆழமான அற்புதமான - நடப்பியல் அம்சங்களை தத்ரூபமாக அவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

கவிஞர் கிண்ணியா ஏ.எம்.எம்.அலி.அவர்கள் எழுதிய "காதல் மெய்ப்படும்" என்னும் கவிதையோ சங்கத்தமிழ்ப் பாடல்களின் சாயல்களைப் பெற்றிருந்தது. பிரபல கவிஞரான "திக்கவயல் தர்மு" வின் " விசித்திரம்" என்னும் கவிதையில் வரும் "ஐரோப்பா மீது அணுகுண்டு போட்டால் வெள்ளைத் தோல்கள் கறுப்பாகக் கூடும்." என்ற அடிகளும், கொம்மாதுறை நா.விஸ்வாவின் "அழுவதற்கு நேரமில்லை" என்னும் கவிதையில் வரும் "தூக்கணாங் குருவிக் கூட்டைத்துவம்சம் செய்து தூக்கி எறிந்த குரங்கு போல....." என்ற அடிகளும் சிறந்த கற்பனைத் திறனை எடுத்தக் காட்டுகின்றன. தாமரைத் தீவ்ான் அவர்கள் பல சிறப்பம்சங்களைக் கொண்ட கவிதைகளைப் படைத்து வருகின்ற ஒருவர். இவர் "பராசக்தி" என்னும் தலைப்பில் " காணி நிலம் போச்சே "- பராசக்தி காணிநிலம் போச்சே....." என எழுதிய ,கவிதை பாரதியாரின் "காணி நிலம் வேண்டும்" என்னும் கவிதையை ஞாபகப்படுத்து வதோடு இப்போதைய நிலைப்பாட்டை உள்ளவாறே புலப்படுத்தி நிற்கின்றன. மாணவர்களுக்கான பயில்களத்திலே "புதுமைப்பெண்ணாகு" "அதனால்", "அன்பின் ஆழம்",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விஷ விருட்சம்", "யுத்தத்தின் பிடியில்", ஆகிய ஐந்து (05) கவிதைகள் இடம் பெறுகின்றன. அவற்றை எழுதிய ஐந்து மாணவர்களும் பாராட்டப்படவேண்டியவர்களே.

இவற்றினைத் தவிர இதழாசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கத்தின் "ஆடுகளும் ஓநாய்களும்" என்னும் கவிதையானது தற்போதைய நிலைமையைக் கூம்பகமாக எடுத்துக் காட்டுகின்றது. அதன் உச்சியில் வரும் "ஓநாய்கள் புனிதர்களாக ஆடுகள் ஆடுகளையே படையலிடுகின்றன." என்னும் வரிகள் அற்புதமானவை. வவுனியா கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த சு.தர்ஷிகாவின் "அன்புடன் அரசிற்கு" என்னும் கவிதை நசுக்கப்பட்ட குரல்களின் ஆத்ம ஒலியாக முழங்குகின்றது. மேலும் தூள்களுக்குள் துகள்களாகும்....." (ஜெயா தமிழினி - திருக்கோணமலை), "நுணங்கைக்கூத்து" (சண்முகம் - சிவகுமார் - கொட்டகல), "பொய்க்கோபம்" (சீனா உதயகுமார் - சமரபாகு) ஆகிய கவிதைகளும் அருமை. நாச்சியா தீவு பர்வீனின் கவிதை பற்றிய கருத்தாடலும் இதழுக்கு மேலும் செழுமை சேர்ப்பதாகத் தெரிகின்றது. இறுதியாக முல்லை அமுதனின் தா.இராமலிங்கம் பற்றிய குறிப்பும். "இனிய நந்தவனம்" உலகத் தமிழர் மேம்பாட்டிதழ் பற்றியகுறிப்பும், "மூலமும் பெயர்ப்பும் பகுதியும் இதழுக்கு மெருகூட்டுகின்றன. சைலைஜா மகாதேவன் எம்.பீ.அன்வர், கண.கிருஷ்ணராஜன் கூசை எட்வேட், த.வினோதரன், பெரிய ஐங்கரன் க.அன்பழகன், த.ஜெயசீலன், த.ஜீவராஜ், கூ.யுவன். லோ.ஜெயபிரதா, பாரதிபுத்திரன் ஆகியோரது கவிதைகளும் இதழுக்கு வளமூட்டுகின்றன.

| |
|---|
| கருத்தாடற் களத்திற்கு உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. |

| |
|---|
| கடிதவழி தனி இதழை பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும். வருட சந்தா 200/= (தபாற்செலவு உட்பட) அனுப்பவேண்டிய தபாலகம் திருகோணமலை முகவரி எஸ்.ஆர்.தனபாலசிங்கம் 103/1 திருமால் வீதி,திருகோணமலை. |

| |
|---|
| படைப்புகளில் வரும் கருத்துகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பினை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடிவெள்ளி**

உழுதுமே நெல் விதைத்து
உலகுக்கு உணவு தரும்
பழுதில் "விவ சாயி" யவன்
பாருக்கோர் "விடிவெள்ளி"

காசினியில் நித்தமே
கண்ணான கல்வியினை
ஆசையுடன் கற்பிக்கும்
ஆசிரியர் "விடிவெள்ளி"

பூவினிலே மனிதம் தான்
புதைபட்டுப் போனதை
பாவினிலே வடிகின்ற
பாவலனோர் "விடிவெள்ளி"

கடமையிலே தவறாமல்
கண்ணியமாய் வாழ்வேற்று
மடமைகளை மாய்க்கின்ற
மனிதனுமோர் "விடிவெள்ளி"

**கௌரி மோகன தர்சினி ஆலங்கேணி கிழக்கு.**

---

**அறிமுகக்குறிப்பு : ரகுமான் ஏ.ஜமிலின் "தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள்"** கவிதைத்தொகுப்பு

"என் ஆசைகளைச் சொதப்பி
கனவுகள் கலைத்த
அம்மா நீ மகா கொடூரிதான்"
"எரிமலைபோல் செல்வேன்
கசங்கிய சேலையைச் சரிசெய்து"
"எனது நிலத்தின் கணப்பொழுதானது
பிணங்களைச் சுமந்தபடியும்..."

தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளின் சில வரிகள். "பொதுவாக இந்தத் தொகுப்பிலுள்ள ஜமிலின் கவிதைகள் சிறுவர், பெண்களது பிரச்சினைகளையும், பொதுவான வாழ்வின் நெருக்குவாரங்களையும், இனப்பிரச்சினை தோற்றுவித்த வன்முறைகளையும் சுற்றுப்புறச் சூழ்ந்த பிரச்சினைகளையும் பேசுகின்றன" என்று முன்னுரையில் "அம்ரிதா ஏயெம்" குறிப்பிடுவதை இவ்வரிகள் ஞாபகமூட்டுகின்றன.

இத்தொகுப்பு அமரர். கவிஞர் ஐயாத்துரை நினைவாக யாழ் இலக்கிய வட்டம் நடாத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்பு : **124ஏ, ஸ்டார்வீதி, பெரிய நீலாவணை, கல்முனை**

விலை:120/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தாடற் களம்

**கவிதை என்பது ஒரு சிக்கலான பின்னமல்ல.**

**- வானம்பாடி -**

கவிதை என்பது ஒரு சிக்கலான பின்னமல்ல. கவிதை என்பது மரபு சார்ந்தது. ஓசை நயத்தோடு எழுதப்பட்டது. தமிழோடு கலந்து சிறப்பியல்பு பெற்றது. கவிதையென்றால் மக்களுக்கு புரியக் கூடியதாக இருக்க வேண்டும். சங்ககாலக் கவிதைகள் கூட ஓசை நயமோடு இருந்தாலும் அதைப்புரிந்து கொள்ள பண்டிதர்களை நாட வேண்டிய நிலை இருந்தது.

பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகள் எப்படிப்புரிந்தன. இதன்பின் வந்த கவிஞர்களின் மரபுக் கவிதைகள் எவ்வாறு புரியவைத்தன. ஏன் இன்றும் கூட நல்ல கவிஞர்கள் மரபோடு எழுதிவருகின்றனர். கவிதை என்பது புரிதலை ஏற்படுத்த வேண்டும். இன்று புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் வெளி வருகின்றன. புதுக்கவிதையில் பிச்சமூர்த்தி, மு.மேத்தா, அப்துல் ரகுமான் போன்றவர்கள் பிரபல்யம் பெற்றவர்களாக இருந்தனர். அந்தக்கவிதைகளில் தெளிவும் ஒரு ஓசைப்பாங்கும் இருந்தது, நமது கவிஞர்களான திக்குவல்லைக்கமால், அன்பு ஜவகர்ஷா போன்றவர்களே ஆரம்பத்தில் புதுக்கவிதை உலகில் பேசப்பட்டவர்கள். திக்குவல்லைக் கமால், "எலிக்கூடு" என்ற புதுக்கவிதைத்தொகுதியை வெளியிட்டு தனது பெயரைப் பதித்துக்கொண்டவர். கடுகு சிறிதானாலும் அதில் காரம் கூடவே இருந்தது. இவரைப்போன்றே அன்பு ஜவகர்ஷாவும் பொறிகள் என்ற கவிதைத்தொகுப்பை வெளியிட்டு பல கவிஞர்களை அறிமுகம் செய்த பெருமைக்குரியவராவார். இந்தக் கவிதைகள் அனைத்தும் புரியக்கூடியவையாக உள்ளன. சிலவற்றில் ஓசை வெளிப்பட்டது. இதன்பின் புதுக்கவிதை எழுதுவோம் என வந்த பலர் கண்டதையும் எழுதி ஒருபுரியாத நிலைக்கு கொண்டுவந்தனர். மேமன்கவி, சோலைக்கிளி ஆகியோரின் சில கவிதைகள் புரியும்படியாக படுவதில்லைத்தான். ஆனாலும பல உச்சமான கவிதைகளும் இவற்றில் உள்ளன. மரபுக்கவிஞர்கள் கவியரங்குகளில் கவிதைபாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பார்வையாளர்களுக்கு உற்சாகம் குன்றிவிடுகிறது. மேமன்கவி கவியரங்குகளில் தனது கவிதைகளை வரிக்குவரி புரியவைத்து பாராட்டைப் பெற்றுக்கொள்கிறார். கவிதை வாசித்தலிலும் ஒருசெழுமை இருக்க வேண்டும்.

கவிதையென்பது புரியப்படவேண்டும். மரபுக்கவிஞரான காசிஆனந்தன் "தெருப்புலவர் சுவர்க்கவிதைகள்" என்ற தொகுதியினூடாக புதுக்கவிஞர்களை திணற வைத்தவர். சந்தம்மிக்க சொற்சிலம்பம் இல்லாத நக்கல் கவிதைகளாக இருந்தது. இது அரசியல் சார்ந்ததாக இருந்தாலும் ஏதோ ஒரு விடயத்தை மக்களுக்கு புரிய வைத்தது.

மஹா கவியின் குறும்பாக்கள் பிரசித்தமானது யாப்பமைதியோடு பாடப்பட்டதாகும். இதே போன்று சில்லையூரார் நீலாவணன் ஆகியோரும் சந்தமோடு பாக்கள் தந்தவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இப்படியே பளீல் காரியப்பர், ஜின்னாஷெரிப்புதீன், காத்தான்குடி அஸ்ரப்கான் போன்றோரும் மரபோடு நிற்கும் கவிஞர்களாவர்.

புதுக்கவிதைகள் சொல்சிக்கனத்தோடு வெளிவந்து, பின்பு ஏதேதோ வசனங்களைப்போட்டு கவிதையின் கருவோடு தொடர்புபடாமல் போவது உண்மைதான், நாச்சியாதீவு பர்வீன் கூறியசொல்லடுக்குகள் என்பது இன்றைய புதுக்கவிதைகளில் தான் அதிகம் வந்து மோதுகின்றன. தாங்கள் எழுதிய கவிதைகள் சில தமக்கே புரியாத நிலையில் கவிஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

புரியக்கூடிய கவிதைக்கு உதாரணமாக 1965 காலப்பகுதிகளில் வெளிவந்த "இரவில் வாங்கினோம் இன்னும் விடியவில்லை" என்னும் கவிதையை கொள்ளலாம். மேலும்

"எனது ஊரில்
இரண்டு சமாதானநீதிவான்கள்
எனது ஊர் இப்போ
இரண்டு". இது நமது நாட்டு கவிஞர் (72ல் வெளிவந்த) ஒருவரின் கவிதை. நிறையக்கூறலாம். மரபோ - புதுக்கவிதையோ வாசித்துப்புரியும்படி இருக்கவேண்டும். சந்தமும் சேர்ந்தால் இவை இன்னும் வலுப்பெறும் என்பது எனது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பாவிகளின் சார்பாக**

எல்லோருக்கும் தெரியும்.
இங்கு இருப்பவைகளையும்
இன்னும் நடப்பவைகளையும்
அவர்களும் இவர்களுமே உருவாக்கினர்.

எங்கள்
சுவடுகளை அழிக்க முடியாதவர்கள்
இப்போது கால்களையே
வெட்டியெறிய அலைகிறார்கள்
முற்றத்து மணலில்
மல்லாந்து உறங்கியே பழகிப்போனவர்களை
வீட்டிற்குள்ளும் வெளியிலும்
ஊர் முழுவதிலும் காடெங்கிலும்
தேடுகின்றார்கள்.

ஏமாந்து
புணர்வு மயக்கத்திலிருக்கும்
ஒரு சோடிச் சுவர்ப்பல்லிகளை
வெட்டி வீழ்த்துவதில் தணிகிறது
அவர்களின் வீரம்

மண்ணை நேசிக்கின்ற
எல்லோராலும் எல்லா நேரத்திலும்
நாங்களும்
மண் புழுக்களைப் போல
நிராகரிக்க முடியாமல்........
மண்ணிற்கு உள்ளேயும் வெளியிலுமாக
சேமிக்கப்படுகிறோம்
ஆர்ப்பரிப்புகளின் எல்லை கடக்க
கண்ணீரின் பாசனத்திலும்
இரத்த உரப்பிலும்
விளைகிறது தேசம்

சிலர் சொல்லிக்கொண்டார்கள்
ஒடியல் கூழினுள்
இறால்களைப் போலவும், மீன்
நண்டுத் தசைகளைப் போலவும்
கலந்து மிதந்தோம் என்று

இப்போது
மலத்தியோன் தூவப்பட்ட
கடியான் எறும்புகளைப் போல
மயங்கிப் போனார்கள்

அப்பாவிகளின் பகல்களின்மீது
கரியள்ளிப் பூசுகிறவர்கள்
இன்னும் வென்றுவிடவில்லை

-சம்பூர் எம். வதனரூபன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக்கான ஒரு சிறு சஞ்சிகை

**-மேமன்கவி-**

தமிழ் சஞ்சிகைத்துறையில் ஒவ்வொரு துறைக்கென பல சஞ்சிகைகள் பெரும் சஞ்சிகைகளின் சந்தையிலும், சிறு சஞ்சிகைச் சூழலிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பெரும் சஞ்சிகைகளின் சந்தையில் வெளிவரும் அத்தகைய சஞ்சிகைகளை விட சிறு சஞ்சிகைச் சூழலில் வெளிவரும் ஒவ்வொரு துறைக்கான சஞ்சிகைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன. இந்த வகையில் கவிதை, சங்கீதம், ஓவியம் போன்ற துறைகளுக்கென தமிழகத்திலும் ஈழத்திலும் வெளிவரும் சிறு சஞ்சிகைகளைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில், கவிதைக்கென தமிழகத்திலும், ஈழத்திலும் சிறு சஞ்சிகைச் சூழலில் தோன்றிய சஞ்சிகைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திச் சென்று இருக்கின்றன.

பாவேந்தர் பாரதிதாசன் நடத்திய "குயில்", கண்ணதாசன் நடத்திய "தென்றல்" எனத் தொடங்கி "வானம்பாடி" வரை தமிழகத்தில் கவிதைக்கென தோன்றிய சஞ்சிகைகள் பல நல்ல கவிஞர்களை தமிழுக்கு அடையாளம் காட்டிச்சென்றுள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரை கவிஞன், நோக்கு எனத்தொடங்கி அக்னி, விடிவெள்ளி பூபாளம், வகவம், கவிதை, யாத்ரா என பல சஞ்சிகைகள் கவிதைக்கென (இது பூரண பட்டியல் அல்ல) தோன்றிய சஞ்சிகைகள் ஈழத்து கவிதை வளர்ச்சியில் கணிசமான பங்காற்றிச் சென்றுள்ளன. பங்காற்றி வருகின்றன. அந்த வரிசையில் திருகோணமலையிலிருந்து **எஸ்.ஆர்.தனபால சிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "நீங்களும் எழுதலாம்"** எனும் கவிதைக்கான சஞ்சிகையும் தன்னை இணைத்துள்ளது. ஓராண்டை பூர்த்தி செய்திருக்கும் **"நீங்களும் எழுதலாம்"** பல புதிய கவிஞர்களை இந்த ஓராண்டு காலப்பகுதியில் ஈழத்து கவிதை உலகுக்கு அடையாளப்படுத்தியிருக்கிறது. அத்தோடு, பல முன்னோடிக் கவிஞர்களின் படைப்புகளை பிரசுரித்தும், மீள் பிரசுரம் செய்தும் புதிய கவிதைப் படைப்பாளிகளுக்கு வழிகாட்டியாக செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஓராண்டு சிறப்பு இதழை நாம் நோக்கும் பொழுது, கடந்த ஓராண்டில் அச்சஞ்சிகையில் எழுதிய கவிதைப் படைப்பாளிகளினது பெயர் பட்டியல் ஒன்றினை வெளியிட்டு இருப்பதன் மூலம், அச்சஞ்சிகை பல புதிய கவிதைப் படைப்பாளிகளை ஈழத்து கவிதை உலகின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. " நீங்களும் எழுதலாம்" தனது ஓராண்டு இதழில் வெளியிட்டிருக்கும் இப்பட்டியலைக் காணும் பொழுது, எனக்கு 70களில் தமிழகத்திலிருந்து தமிழகக் கவிஞர்களான உமாபதி, ராஜரிஷி' போன்றோர் இணைந்து வெளியிட்ட "ஏன்" என்னும் கவிதைச் சஞ்சிகையில் ஈழத்து புதுக் கவிதைச் சிறப்பிதழ் ஒன்றினை வெளியிட்டதும், அவ்விதழில் அன்று ஈழத்தில் எழுதிக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான புதுக் கவிதையாளர்களின் பெயர் பட்டியல் ஒன்றினை வெளியிட்டு இருந்தமையையும் எனக்கு ஞாபகப்படுத்தியது.

"நீங்களும் எழுதலாம்" இதழில் எழுதிய எழுதிக்கொண்டிருக்கும் புதிய கவிதைப் படைப்பாளிகளின் படைப்புகளை நோக்குமிடத்து, 70களிலும், இன்றைய சூழலில் சில பத்திரிகைகளிலும் எழுதிய - எழுதும் புதிய கவிதை படைப்பாளிகளின் படைப்புகள் போல் வெறுமனே துணுக்குகளாய் அமையாது, எழுதுவோர் புதிய படைப்பாளிகளாக இருப்பினும் அவர் தம் அனுபவங்களை கவிதைகள் மூலம் முன்வைக்கும் பாங்கும், உள்ளடக்கங்களின் வீச்சும் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் அமைந்திருக்கின்றன. இதற்கு இன்றைய வாழ்வு அவர்களுக்கு தரும் அனுபவங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது தெரிகிறது. அத்தோடு, "நீங்களும் எழுதலாம்" சஞ்சிகையில் முன்னோடிக் கவிதைப்படைப்பாளிகளின் படைப்புகளை மட்டும் மீள் பிரசுரம் செய்யாது, அவ்வாறான முன்னோடிக் கவிஞர்களின் கவிதை பற்றி, அன்று அவர்கள் முன்வைத்த கருத்துக்களையும் வெளியிட்டு, புதிய கவிதைப் படைப்பாளிகளைச் சிந்திக்கத் தூண்டுகிறது. அந்த வகையில், **"நீங்களும் எழுதலாம்"** தனது ஓராண்டு இதழில் மீள் பிரசுரம் செய்து இருக்கும் பல்கலை வேந்தர் சில்லையூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வராசன் அவர்கள் அன்று சொன்ன ஒரு கருத்தை வெளியிட்டுள்ளது.

"கற்றால் வருமோ கவித்துவம்?" எனும் தலைப்பிலான அக்குறிப்பில் சொல்லப்பட்டு இருக்கும் கருத்துக்கள் இன்றும் பொருத்தக்கூடிய கருத்துக்களாக இருக்கின்றன.

செய்நேர்த்தி திறன் மட்டுமே ஒரு படைப்பை உருவாக்கி விடுவதில்லை. அதற்கு மேலாக, சிருஷ்டி திறன் என்பதும் தேவையான ஒன்று என்னும் தொனியில் அமைந்திருக்கும் சில்லையூர் செல்வராசன் அவர்களின் கருத்துகள் "கவிதை"என்பது தமக்கே சொந்தமானது எனும் மயக்கத்தில் இருக்கும் அறிவுஜீவிகளுக்கும் கவிதை என்பது வெறும் சொற்களின் குவியல் என மயங்கிக் கிடக்கும் கவிதை தயாரிப்பாளர்களுக்கும் "கவிதை" மட்டுமல்ல,. ஒரு சிருஷ்டிக்கு படைப்பாற்றல் அதி முக்கியமான ஒன்று என்பதை அழுத்திச் சொல்வதாகவே எனக்குப்படுகிறது.

**"நீங்களும் எழுதலாம்"** போன்ற சஞ்சிகைகள் இத்தகைய கருத்துக்களைத் தொடர்ந்து மீள் பிரசுரம் செய்யும் பணியினைத் தொடர வேண்டும். இன்றைய ஈழத்து சூழலில் ஒரு சிறு சஞ்சிகை நடத்துதல் என்பது மிகுந்த சிரமமான பணி. அத்தகைய சிரமமான பணியினை சோர்வில்லாமல் மேற்கொண்டு வரும் **எஸ்.ஆர்.தனபாலசிங்கம்** அவர்களின் பணியினை நாம் பாராட்டுதல் வேண்டும்.

**"நீங்களும் எழுதலாம்"** கவிதைச் சஞ்சிகை ஈழத்து கவிதைச் சஞ்சிகைகளின் வரிசையில் கவனிக்க வேண்டிய ஒரு சஞ்சிகை என்பது மறுப்பதற்கில்லை.

**நன்றி- மல்லிகை (ஒக்டோபர் - 2008)**

இதழ் 07 இல் கருத்தாடல் களத்தில் கலாவிஸ்வநாதனின் "கற்றால் வரும் கருத்துவம்" என்பது "கற்றால் வரும் கவித்துவம்" என தவறுதலாக இடம்பெற்றுள்ளது

ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயில்களம்

### மாணவர்களுக்கானது

### வெண்புறா வெளிச்சம்

கம்பிக் கூட்டுக்குள் நீ
சிக்குண்டு போனதால்
எலும்புக் கூடாகிப் போனது
எமது வீடான இலங்கை!
வீடிது வெளிச்சம் பெறுவதற்கும்
வெளியே நாம் வருவதற்கும்
வெளியே நீயினி வரவேண்டும்

**- கணேசமூர்த்தி வினு -**
(வின்சன் உயர்தர தேசிய பாடசாலை மட்டக்களப்பு)

### சுதந்திரத்திற்காக

தொலைந்து போன நிம்மதியும்
இழந்து போன சந்தோஷமும்
தொடர்ந்து வந்த துயரங்களில்
பங்கேற்கும் தமிழராய் நாம்!
தாயகம் ஒன்றின் சுதந்திரத்தை
தேடியழித்த பாவியர்களை
எண்ணுகையில் மனதில் வருவதோ
தீ நெருப்புத்தான்!
நம் இனிய தேசத்தில் நடைபெறும்
படுகொலைகளையும் ஆட்கடத்தல்களையும்
நினைக்கையில் நெஞ்சம் குமுறுகிறது!
நாட்களை நகர்த்தியபடி - நாம்
சிறையினில் சிதைந்து போனாலும்
மகிழ்ச்சிகரமான வாழ்வினை
மறந்து மரணிக்க நேரிட்டாலும்
நாளைய சந்ததியினருக்கு
போராடிக்கொண்டிருக்கும்
புதிய எழுச்சியை வழங்குவோம்
திடமான கொள்கைகளைப் பரப்புவோம்!
ஆயிரமாயிரம் கரங்கள்
ஒன்றிணைந்து அணிவகுக்கச் செய்வோம்!
இழப்பின் சுவடுகளை
இல்லாமற் செய்யவைப்போம்!
கொடிய அரக்கர்களின் - எிப்புக்
கரங்களை அழித்தொழிக்கவும்
புதிய வரலாற்றை உருவாக்கவும் - ஒரு
புதிய சந்ததியினரை தட்டிஎழுப்புவோம்!

**ம. கம்ஷி - (வவு. சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதைந்து போன மானுடம்**

இரவின் வேதனைகள்
அசையாத காயங்கள்
வதைபடு முகாம்களில்
கல்லாய்ப் போன துன்பங்கள்
குருதி மணக்கும் பூமியில்
புதைந்து போன மானுடம்
விழுதிலிருந்து விழும் விதைகளே
என் வழிகாட்டிப் பறவைகளே
குறுகிப் போன இதயத்தை மன்னியுங்கள்
நெருப்பைத் தொடுகின்றேன்.
தென்றலாய் நினைக்கின்றேன்.
கரடு முரடான பாதைப் பயணங்கள்
கண்ணுக்கெட்டும் தூரத்தே
விடியல் கண்முன்னே தெரிகிறதே
பச்சையமற்ற உடற்குழந்தைகள்
பார்வையிழந்து போன பூமித்தாய்
நிச்சயமில்லாத வாழ்க்கை ஓடுபாதைகள்
இறுதிவரை வாழ்ந்திருப்போம்.
உறுதியிலே திளைத்தவர்களாய்.

**க. யோகானந்தன் -திருகோணமலை-**

**காத்திருப்பு!**


காலம் விதியின்
கைகளில் வரையறுக்கப்பட்டிருக்கிறது...
காலச்சக்கரம்
வெகுவாய் சுழன்று கொண்டிருக்கிறது....
பகல்களும் இரவுகளும்
நாளுக்கு நாள் கடக்கின்றன!
எனது நிமிடங்களை
எண்ணிப் பார்க்க இங்கு
எவருமில்லை.....
எனது சுவாசக் காற்றின்
கனத்தையளக்க இங்கு
யாருமில்லை!
யுகங்கள் மலர்களைப்போல்
மலர்ந்தும் உதிர்ந்தும் போகின்றன!
நான் உனக்காக
எத்துணை காலம்
காத்திருப்பதென்பது
எனக்கே தெரியாமல் போகின்றன....!!

**- வெலிகம ரிம்ஸா முஹம்மத் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படக் கவிதை -இதழ் 8-



தொலை தூரப் பயணத்தில்
தொடுவானத் தூரத்தில்
இருக்கிறது எங்களின்
இனிய பழத் தோப்பு.......!

மா பலா வாழைகளும்
மற்றும் பல கனிவகையும்
முத்தமிழ் வாசனையும்
கொண்டதோப்பு எங்கள் தோப்பு!

பழத் தோப்பதனை நோக்கிப்
பாதந்தேய நடக்கிறோம்
பனந்தோப்பின் இடையாலே
பனையுறுதியுடனே நடக்கிறோம்!

பனைகளின் தலைகள் கூடப்
பறந்து சிதறும் காலத்தில்
பனைகளிலும் மேலாய் எங்களின்
பேனைகளும் நிமிர்ந்துவிட்டன!
நிமிரும் பேனாக்களால்
நாங்களும் நிமிர்வோம்......
நடையைத் தொடர்வோம்
நாளைய உலகினை வெல்வோம்.

-சரஸ்வதிபுத்திரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரசனைக்குறிப்பு**

மாரிமுத்து சிவக்குமாரின் **"மலைச்சுவடுகள்"**

**-கலா விஸ்வநாதன்-**

மாரிமுத்து சிவக்குமார் சஞ்சிகைகள் பத்திரிகைகளில் எழுதிய கவிதைகளை தொகுப்பாக்கி தரும் உத்வேகத்துடன் "மலைச்சவடுகள்" கவிதைத்தொகுப்பினை தந்திருக்கிறார்.

இளம் கவிஞரான மாரிமுத்து சிவக்குமார் தாம்வாழும், தாம் காணும், தாம் அனுபவிக்கும் மலையகத்தை அப்படியே வாசகர் முன் நிறுத்துவதற்குத் தமது கவிதைகள் தோறும் முனைந்துள்ளார். மலையகம் எதிர் காலத்தில் புதுமைகள், மாற்றங்களை காண வேண்டும். என்ற தணியாத தாகத்தையும் கவிதைகள் மூலம் வெளிப்படுத்துகிறார். என்று முன்னுரையில் கலாநிதி துரை மனோகரன் குறிப்பிடுகிறார்

"எமது நாட்டிலும், அப்பாலும் தான் பிறந்த மண்ணிலும் இடம் பெற்று வந்துள்ள நிகழ்வுகளின் ஒரு வெட்டு முகத்தோற்றமாக இந்நூலிலுள்ள கவிதைகள் விளங்குகின்றன" என்று மதிப்புரையில் கலைமகள் ஹிதயாரிஸ்வி குறிப்பிட்டுள்ளார்

"சந்தோஷங்களையும்
சங்கடங்களையும்
ஒரே மேடையில்
உயர்த்திவைத்து
பின்
கவிதை எழுதிப்பார்"

என்று கூறும் கவிஞர் மலையக சமூகத்தின் மீது அவரின் பார்வையை, பார்வையினூடாக நேர்மையான நெஞ்சத்தின் சிந்தனையை கவிதையாக தருவதற்கு எளிமையாகவே முயற்சித்திருக்கிறார் சந்தக் கவிதை பாணியிலும் புதுக்கவிதை உருவத்திலும் கவிதைகளை படைப்பாக்கம் செய்துள்ள கவிஞர் வளரும் பருவத்திலும் வாசிப்பவரை யோசிக்கவைக்கும் வரிகளை கையாண்டும் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை தேர்ந்த கவிஞராக உருவெடுப்பார் என்பதற்கு "மலைச்சுவடுகள்" நூலில் வெளி வந்துள்ள கவிதைகள் முன் முயற்சியாக பயிற்சியாக மலர்ந்துள்ளன.

"தேயிலையின் வேர்கள் போல் எங்கள்
தேகங்களின் நரம்புகள் இம்மண்ணுள்
புதைக்கப்பட்டுக்கொண்டிருப்பதும் கேள்விகள்
எழுப்பாத கேலிகளாய்...... இன்னும் கூலிகளாய்
வாழ்வதும் இம்மண்ணில் தான்"
"காணிநிலம் வேண்டுமென்று பாட்டுக்கொரு
புலவன்
பாடிச்செல்ல,
இங்கே "லயக்" கூட்டைக்கூட
சொந்தம் சொல்ல
இல்லையொரு சாசனமும்"......

என்ற வரிகள் ஊடாக மலையக மக்களின் அதிமுக்கிய ஜீவதார பிரச்சினையைப்பற்றி பிரஸ்தாபிக்கின்றார்.

"காலமெல்லாம் வேண்டுவது
காணிநிலம் மாத்திரம் தான்
காதல் செய்ய
நந்தவனமா வேண்டுகிறோம்!"
"உழைப்பின் ஏணிகள் தான்
எங்களது
கருவறைகள்
அந்த ஏணியே
ஊனமாகும் போது
எங்கள் உருவங்கள்
எப்படி முழுமைபெறும்?.."

இவ்வரிகள் மலைச்சுவடுகள் கவிதையில் வரும் உயிர்ப்பு வரிகள்
உழைப்பின் பிறப்பிடமான கருவறையே ஊனமாகிப் போனால் உழைக்கும் சமூகம் ஏனைய சமூகத்திலிருந்து பிரித்தறியப்படும் ஊனச் சமூகமாக தோற்றமளிப்பதை யதார்த்தமாய் கவிஞர்
"எங்கள் உருவங்கள்
எப்படி முழுமைபெறும்? "என்று வினாவுகிறார்.
கவிஞர் மாரிமுத்து சிவக்குமார்
கூறுவது போன்று
"இந்த மலையக மண்பரப்பின்
மேலிருந்த பாசமும், பணிவும் பற்றும்" இவரை கவிதையாக சிந்திக்க வைத்து "மலைச்சுவடுகள்" எனும் கவிதைத் தொகுப்பை தமிழ் உலகுக்கு தரச் செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்க காக்க எந்தவேல் காக்க**

பழையபோர்வைக்குள் சிக்குண்டிருக்கும்
மானிடமே
உன்னை மீட்டெடுக்கப்போவது யார்?
புதிய பார்வைக்குள் இருப்போர் மாத்திரமே
மானிடமே
அவர்கள் மட்டுமே உன்னைப் பார்க்க முடியும்.
அவர்கள் மட்டுமே
உனது ஓலத்தைக் கேட்க முடியும்.
எல்லாம் இழந்தவர்கள் தான்
உன்னை மீட்க முடியும்

மானிடமே
உன் மேனிக்கு
மதத் தூரிகைகளுமல்லவா
வர்ணம் தீட்டுகின்றது
மனத்தூய்மை நூலின்
வரிகளில் மட்டுமே
பேதங்கள் மாற மந்திரமான நீ
இன வேள்விக்குள் அல்லவா இரையாகிப்
போகின்றாய்
மொழிகளில் எல்லாம் பெருமையான வார்த்தை
நீ
பழி பாவத்தில் நிலை குலைந்து அழிகின்றாய்
சாந்தம் சாத்வீகம் சமாதானம் சமதர்ம வடிவம்
நீ
சாதிச் சகதிக்குள்ளும் மூழ்கித் திணறுகின்றாய்
தேசங்களின் நேச மூலம் நீ
பாசிச நாசிசப் பொறிக்குள் அகப்பட்டு
நெரிபடுகின்றாய்
உலக வாழ்வின் உன்னதத்தின் சக்தி நீ
அகிலப் பேரரசு மயமாக்கலில்
அடிமையாகின்றாய்

மானிடமே
பாரிடம் இப்போ நீ இருக்க வேண்டிய
மன இருப்பிடம் இல்லாமல் போய் விட்டதே
எப்படியும் இப்போ உன்னை மீட்க வேண்டும்
இல்லையேல் உலகப் பேரரசு வாதம்
முழு உலகையும் விழுங்கி விடும், அதனால்
உன்னை மீட்க நாம் படை திரட்டுகின்றோம்.

**-தம்பி தில்லை முகிலன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுடலை ஞானம்**

எனது பெற்றோரை...
எனது சகோதரிகளை...
எனது அயலவர்களை
உள்வாங்கிக்கொண்ட
சுடலையைப் பார்க்கிறேன்
கண்கள் பனித்தன...
அதரங்கள் துடித்தன...
அவர்கள் பாக்கியசாலிகள்...!?
கௌரவமாய் அடக்கம்
செய்யப்பட்டார்கள்
ஆனால்... நாங்கள்?
நாளை எங்களின் உயிரற்ற உடல்கள்
எந்தெந்த மூலைகளில்
எப்படிக்கிடக்குமோ? ... என்ற கிலி
எனக்குள் படர்கிறது
சவக்களை தொனிக்க
நகர்கிறது நமது பயணங்கள்...
ஓ!...... நாங்கள் மனிதர்கள்... அதிலும்
தமிழர்கள்.

**-திருமதி. டி. சுதாகினி, செங்கலடி-**

---

**இடியாகும் வானமும் புயலாகும் பூமியும்!**

ஆக்ரோஷமாய் பாறையில்
ஆவேசத்துடன் பலமுறை மோதியும்...
தோல்வியை சுமந்தே திரும்புகிறது
கடல் அலைகள்!
எஞ்சியிருக்கும் மீதி நாட்களும்
அப்படியே ஆகிடுமோ என்றே
இடியும் புயலும் மனதில்
நர்த்தனம் செய்கிறது!
என் எண்ணங்கள் மாத்திரம்
எப்போதும் வண்ணம் பெற்று
சிறப்பானதேயில்லை!
கற்பனைக் கடலில் மிதக்கிறேன்
எனினும் ஒன்றாவது விற்பனையாகி
ஈடேறாத கானல் நீர்தான்
நஞ்சுச் செடியைச்சுற்றி
வேலியிட்டு என்ன பயன்?
முட்டைக்குள்ளே....
அழகிய முத்தொன்றை
எதிர்பார்த்தல் அறிவாகிடுமோ!
பிடிக்கவில்லை
எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை
மலர் ஒன்று முட்களில் வாழ்வதும்...
சிலர் சொற்களில்
உயிர்கள் வீழ்வதும்....!!

**-தியத்தலாவ எச். எ (f) ப். ரிஸ்னா-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள்**

எங்கள் நிலமும்
எங்கள் நீரும்
எங்கள் காற்றும்
எங்கள் ஒலியும் ஒளியும் கூட
கலப்படமாக..........

அந்திப்பொழுதில்
பயிர் விளைவிக்கும்
பருவம் தப்பியவர்களாய்..........

அத்திவாரங்கள் மீதான பிரக்ஞை
சற்றுமற்று
கோபுரங்கள் மீதான கனவில்
லயித்துப் போகிறவர்களாய்.........

இரத்தத்தில் ஊறிப்போன
எஜமான விசுவாசத்தில்
சற்றேனும் சளைத்தவரல்லர்
என்பதை
பொறுத்த தருணங்களில்
காட்டிவிடுகின்றவர்களாய்..........

போதனைகள் யாவும்
தாரக மந்திர உச்சாடனங்களாய் .........

எங்களுக்கான அனைத்தும்
பரிந்துரைகளின் மீதே
கட்டியெழுப்பப்படுவனவாய்...........

ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும்
உள்ளாக்கப்பட்டு
அங்கலாய்த்துத் திரியும்
அற்பக் கூட்டங்களாயின பின்
விற்பனையாகின்றன!
தீர்மானிக்கப்பட்ட பிரகடனங்கள்!!

தனித்தேனும்
பலர் கூடியேனும்
மீண்டெழாத படிக்கு!!!

- எஸ். ஆர். தனபாலசிங்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டாளி துயரம்

-பசுபதி-

பாட்டாளி வர்க்கமொன்று உழைப்ப தாலே
பாருண்டு பலனுண்டு பாரீர் இங்கே!
கூட்டாளி அவர் நமக்குக் குறையாச் செல்வம்
குவலயத்தில் அவர் பெருமை குன்று போலாம்!
நாட்டிற்கு முதுகெலும்பு போல்வா ரென்றும்
நல்லதொரு வாழ்வமைத்தார் மக்கட் கானால்
வீட்டிலே வெந்துயரப் படுவ ரன்றோ!
வேதனையே அவர் துயரம் சொல்லப் போமோ?

பாரதிலே பற்பலவாய்ப் புதுமை கண்டார்
பசும்பொன் வரைதனிலே எடுத்துத் தந்தார்:
காரதிலே கடல்தனிலே கடமை செய்தார்
கல்லிலே மண்ணிலே குடைந்து ழைத்தார்:
நேரதிலே பார்த்திருப்பின் நெஞ்சம் வேகும்!
நீரருவி தாரையாய்ச் சொரியும் கண்ணில்:
ஊரதிலே உழைத்தவர்க்கு உணவு இல்லை
உள்ளத்தின் வெந்துயரம் சொல்லப் போமோ?

காலையிலே எழுந்து சென்று காடு வெட்டி
கழனியிலே விளைவுதர உழைத்த பேர்கள்,
சாலையிலே சந்தையிலே சாக்க டையில்
சலியாது உழைத்துழைத் தலுத்த பேர்கள்,
மாலையிலே மனைநோக்கி மக்கள் நோக்கி
மாற்றின்பம் சிலவேனும் அடைய வந்தால்
வேலையிலே அலையுறுத்தும் கப்பல்போல
வேகுமே அவர் துயரம்! சொல்லப் போமோ?

பஞ்சுபடும் பாடுபடும் அவர்தம் உள்ளம்!
பாடுபட்டுப் பலனிழந்து நிற்கும் போது
நஞ்சனையார் அவருள்ளம் காண்ப தில்லை!
நலன் தனது சுயநலத்தை நாடி நிற்கும்
வஞ்சனையார் வாழுகின்றார் வாய்ப்ப வர்க்கு!
வளமூட்டும் வினைஞர்க்கு வாழ்வு இல்லை:
வெஞ்சினமே கொள்ளுதடா! வீணர் கூட்டம்
விளங்கவில்லை! அவர் துயரம் சொல்லப் போமா?

*1965 இல் தனது 40வது வயதில் காலமான (யாழ்.பருத்தித்துறையைச் சேர்ந்த யாழ்ப்பாணக் கவிராயர் என்ற புனைபெயர் கொண்ட) கவிஞர் பசுபதி 1956 இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் ஓர் அங்கத்தவராக இணைந்து ஒடுக்கப்பட்ட மக்கள், உழைப்பாளிமக்களின் விடுதலைக்காக உழைத்தவராவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருபடைப்பாளியின் கருத்து**

"நீங்களும் எழுதலாம்" ஆடி - ஆவணி 2008 இதழ் கிடைத்தது. நன்றி ஆர் இந்தத் தனபாலசிங்கம்? என்றிந்தப் பார் கேட்குமளவுக்கு உங்கள் தமிழ்ப்பணி உயர்ந்து செல்வதை **"நீங்களும் எழுதலாம்"** நிருபித்துக் கொண்டிருக்கின்றது நிற்க, நான் நம்தமிழை வழுவிலா தெழுத வேண்டுமென்னும் வாஞ்சை கொண்டவன். ஆனால் அச்சுக் கோத்தவர் எனது கவிதையைக் கொச்சைப் படுத்தியுள்ளதைக் கண்டு கோபித்தேன். அக்கோபம் எனது தாய்மொழி மீதெழுந்த தாபத்தால் வந்த கோபம்! கவிதையின் முதற் சீரே பிழையாக அச்சிடப்பட்டுள்ளது. "பரிவோ" எனவரவேண்டியசீர "பரியோ" எனவாயிற்று. இவ்வாறு சீர்கள் சிலவற்றில் எழுத்துப் பிழைகள் இடம்பெற்றுள்ளன. இன்னென்ன இடங்களில் இன்னென்ன எழுத்துக்கள் தாம் வரவேண்டுமெனும் நியதியை "நீங்களும் எழுதலாம்" மீறக்கூடாது. மீறிவிட்டால் மரபோ புதிதோ எந்தக் கவிதையானாலும் பொருளும் குலையும்! கவித்துவமும் கலையும்! மாற்றாந் தாய் மனப்பாங்கில் மரபைப் பார்க்கக் கூடாது. யாத்தவருக்கும் கோத்தவருக்கும் இடையிலேயுள்ள தமிழ்ப்பச்சமும் தமிழிற் பரிச்சயமும் எக்கணமும் மாறாதிருக்க வேண்டும். தமிழிலிருந்து இன்னொரு புதிய மொழியை உண்டாக்கும் முயற்சி வேண்டாம். அவ்வாறு ஒரு மொழி உருவானால் அது இவ்வாறு தான் இருக்கும். "வாலைப் பளம் அலுகி ஒளுகி நிலத்தில் வீல்ந்தது" என்பதாக

பேதையொருவன் இங்ஙனம் பிழைவிட்டாலும், அந்தப் பிழை. இனி மேலும் வராது பேணுதல் உன்றன் பொறுப்புத் தம்பி. பேணுங்கால் **"நீங்களும் எழுதலாம்"** உருவிற் சிறிதானாலும் எடை எப்போதும் குறையாமல் இருக்கும்!

**அன்புடன்**

**சகோதரர் ஏ.எம். எம். அலி**

கவிதைசம்பந்தமான
குறிப்புக்கள்,கட்டுரைகள்,விமர்சனங்கள்
போன்ற பல்வேறு விடயங்களோடு
மொழிபெயர்ப்புக்கவிதைகளும்
உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகர் கடிதம்**

"நீங்களும் எழுதலாம்" இலங்கையில் கவிதைக்காகவே வெளிவரும் இதழ்களில் நீங்காத இடத்தைப் பிடிக்க வேண்டும். புதியவர்கள் பழையவர்கள் என்ற தரம் பிரித்துப் பார்க்காமல் தகுதிக்கேற்ப அனைவருக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளீர்கள். இன்றைய மாணவ சமுதாயத்தையும் கவிதைத்துறையில் அதிகமாக ஈடுபடச் செய்தல் நல்லது. எதிர்காலத்தில் இதழின் வடிவத்தை ஓராண்டுச் சிறப்பிதழ் அளவில் வெளியிட முயற்சி செய்யுங்கள்.

**எஸ்.கே இராஜரெட்ணம் - பண்டாரவளை**

"நீங்களும் எழுதலாம்" - இதழை சாரல் நாடன் ஐயா அவர்களிடமிருந்து பெற்றேன்.
மாணவர்களுக்கு தனியான களம் தந்திருப்பது ஆரோக்கியமானது. முன்னட்டை வடிவமைப்பு, கவிதைகளைப் பிரசுரிக்கும் முறை என்பன சிறப்பாக உள்ளன. இன்னுமின்னும் பல கவிஞர்கள் உங்களுடன் இணைவார்கள் என நம்புகின்றேன்.

**சிகரம் பாரதி - கொட்டகல**

"நீங்களும் எழுதலாம்" கவிதை கோவை அன்சார் அவர்கள் எனக்கு அறிமுகப்படுத்திவைத்தார். படித்தேன் நல்ல கவிதைகள். வாழ்த்துக்கள்.

**A.S.M.நவாஸ் கொழும்பு - 14**

"நீங்களும் எழுதலாம்" கவிதை ஏடுகள் கையில் கிடைத்தன. வாசித்து மகிழ்ந்தேன். புதியவர்கள் மட்டுமல்லாது பிரபல்யங்கள் கூட எழுதுகிறார்கள் எழுத்துலகை மறந்து இருந்தவர்களையும் (ஷெல்லிதாசன்) ஆசிரியர் மீண்டும் கொண்டு வந்திருக்கிறார். "அக்னி" என்ற கவிதை ஏட்டை வெளியிட்ட ஈழவாணன் அவர்களையும் கலைவாதி கலீல் அவர்களின் "நவமணி"வாரப்பத்திரிகையின் குறிப்பு மனதுள் ஞாபகப்படுத்தியது. ஆசிரியர் முயற்சிக்கு பாராட்டுக்கள், தொடர கைகொடுப்போம்.

**- வதிரி. சி. ரவீந்திரன், கொழும்பு -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான் எழுதுவது கவிதையல்ல!**

காணி நிலத்தோடு - ஓர்
அழகிய உலகத்தை
பராசக்தியிடம் கேட்ட - தன்
நெஞ்சிலும் முதுகிலும்
என்றாவது ஓர் நாள்
தாமரைத் தீவான்
என்ற கவிஞன்
ஒட்டாண்டியாக வந்து,

ஓங்கிக்குத்துவான்.....!

என்று
பாரதி
கனவிலுங் கூட..... ஏன்
தமாஷாகக் கூட
நினைத்திருக்க
மாட்டான்.......!
தாமரைத்தீவானின்
இக்கவிதை
ஆத்மா குமுறிய
அனல் மூச்சு.....!
வாழ்த்துக்கள்.....
கையடக்கச்
சிற்றேட்டில்
களமமைக்கும்
தனபால
சிங்கத்துக்கு......!

"நீங்களும் எழுதலாம்" இதழ் மிகத் தரமாக உள்ளது.100 கவிஞர்களுக்கு மேல் அறிமுகஞ் செய்துள்ளமை பாராட்டுக்குரியது, கூடுமானவரை பெண்களை நினைக்கும் சராசரிக் கவிதைகளைக் குறைத்து, இன்றைய சூழலில் தமிழ் இனத்துக்கு நல்ல சேதி சொல்லும் படைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள். உங்களது **ஆடுகளும், ஓநாய்களும்** கவிதை மலையகத்தை அப்படியே பிரதிபலிக்கின்றது.

**-மு. சிவலிங்கம் - கொட்டகல-**

***புனைபெயரில் எழுதுவோர் தங்களது சொந்தப்பெயர் முகவரியினையும் குறிப்பிடுதல் வேண்டும்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Father

When here
The rain Slicks city cheeks,
Lit glass, spat- on asphalt,
Drumming on steel roofs
With mechanical noises,
We shut our eyes and see
Him in his chosen loneliness,
Sitting my his door, between the hills,
Watch the same rain sparkle
On the avocados in his hands
Down the white flanks of saplings
Grown now in to lively giants who chatter
Away the gloom of overcast afternoons.

He is alone, to remember
What we are without time to recall,
Having watched us grow and grapple,
The world take us,
Leaving in its swirl no time for memories3,

Wisely he has planted other seedlings,
He can see them
Unfurl their branches to the wind at his door.
They will not leave him as we did.

ஆங்கில மூலம் : உபாநந்த கருணதிலக

**அப்பா**

மழை
நகரத்தின் கன்னங்களிலும்
ஒளி உமிழும் கண்ணாடிகளிலும்
வழியும் போதும்
தார்ச்சாலையின் மீது துப்பும் போதும்
கடினமான கூரைகள் மீது
முரசறையும் போதும்
நாம்
கண்களை மூடுவோம்
அவரைக் காண்போம்
மலையில்
தனிமையில்
தம் வாசற்படியில் இருப்பார்
தன் கைகளால் நட்டு
இன்று ஓங்கி வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப் பொழுதின் நிசப்தத்தைப் போக்க
தன்னோடு உரையாடும்
ஆனைக் கொய்யா மரங்கள்மீது
இதே மழை பொழிவதைப் பார்ப்பார்.

அவர் தனித்துப் போனார்
நாம் வளர்வதையும்
இழுபறிப்படுவதையும்
நினைவுகளுக்கே இடமில்லாதபடி
உலகின் சுழற்சி
எம்மை வாரிச் செல்வதையும்
அவர் கண்டிருக்கிறார்.

**அவர் புத்திசாலி**
**வேறு நாற்றுக்களும் நட்டிருக்கிறார்**
**அவை**
**அவர் வாசலில்**
**கிளைகளை ஓச்சி நிழல் தருகின்றன.**
**எம்மைப் போல்**
**அவை அவரைக் கைவிடா!**

**பெயர்ப்பு: சோ. ப**

அறிமுகக்குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒருபிரதியை அனுப்பிவையுங்கள் 2007ற்கு முன் வெளியானவை அறிமுகக்குறிப்பில் இடம்பெறமாட்டாது

**வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்**
**வருட சந்தா 200/=**
**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank, Trincomalee**
**என வைப்பிட்டு பற்றுச்சீட்டை**
**அனுப்பிவைக்கவும்**
**வெளிநாடு US $ 10**

**"நீங்களும் எழுதலாம்" இதழை கணனி மயப்படுத்த உதவிய ஆர்.நித்தியா (EDGE NET Cafe உவர்மலை),** அவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய **அஸ்ரா பதிப்பகத்தினருக்கும் "நீங்களும் எழுதலாம்"** தனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது.

**ISSN 1800 - 3311**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை - மாசி 2009

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -02 எழுத்து -10



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

**இருமாத கவிதை இதழ்**

NEENKALUM EZHUTHALAM
(Poetry Magazine)

விலை 25/=

நீங்களும் எழுதலாம் -10-2009 (ஜன -பெப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-10

**இருமாத கவிதை இதழ்**
ஜனவரி-பெப்ரவரி-**2009**

**ஆசிரியர்**
**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

துவாரகன்
தமிழ் நேசன்
ஷெல்லிதாசன்
ஏ.நஸ்புள்ளாஹ்
சண்முகம் சிவகுமார்
செ.ஜே.பபியான்
க.சுதர்சன்
வனஜா நடராசா
ஆனந்தன்
ச.சுஜி
சி.சிவசேகரம்
ஜெனிதா மோகன்
எச்.எப். ரிஸ்னா
ஏ.ஆர்.நவாஸ்
அ.விஜயராஜ்
எம்.ரீ.எம்.யூனூஸ்
ரா.பிரேம் சுரேஷ்
கலைமகள்
சி.ரவீந்திரன்
ஏழாலைவாணி
சரவணன்
கவின்மகள்
தாமரைத்தீவான்
வே.சசிகலா
ந.டயாழினி
என். சந்திரசேகரன்
உ.நிசார்
சூசை எட்வேட்
ச.ஜெயபாலன்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

பதிவுகள், அறிமுகக் குறிப்பு
கருத்தாடற்களம்
*நுனிப்புல்லரிப்பு-**தீரன் ஆர்.எம்.நௌஸாத்**
*பாரதி ஒரு சர்ச்சை
ஒரு குறு விமர்சனம் - ஒற்றைச்சிலம்பு
**பெரிய ஐங்கரன்**
நீங்களும் எழுதலாம் - ஓர் அறிமுகம்
**பேனாமனோகரன்**
வாசகர் கடிதம், மூலமும் பெயர்ப்பும்

**வடிவமைப்பு**
**எஸ்.யசோதரன்**
**கே.மாக்ஸ்சிறிராம்**

**அட்டைப்படம்**
**ஓவியர்.கே.சிறீதரன்**

**தொடர்புகளுக்கு,**
**'நீங்களும் எழுதலாம்'**
**103/1,திருமால்வீதி, திருகோணமலை.**
**தொ.பே: 026 2220398.**
**E-mail:-neenkal@yahoo.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெளிவுற அறிந்திட, தெளிவுற மொழிந்திட

நெருக்கடி மிகுந்த நாட்கள் இவை. கொக்கரிப்புக்களுக்கும் வீம்புத்தனங்களுக்கும் உரிய தருணம் இதுவல்ல. பொய்யான படிமங்களும் புனையப்பட்ட வரலாறுகளும் சின்னஞ்சிறு இலங்கைத் தேசத்தவராகிய நம்மை ஆட்கொண்டதன் விளைவுகள் இவை எனலாம்.

நல்ல எண்ணங்களையும் செயற்பாடுகளையும் ஊன்றக்கூடிய பருவம் இளமைப்பருவமாகும். சிறந்த செய்யுட்கள், கவிதைகள் பாடல்கள் என்பன இலட்சிய வாழ்வுக்கு வழிகாட்டக்கூடியவை.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனின் புறநானூற்றுப் பாடலின் வரிகள் "தொழிலாளி வர்க்கத்துக்கு தேசிய எல்லைகள் கிடையாது" என்ற லெனினின் கூற்றோடு ஒப்பிடக்கூடியவை.

குழப்பகரமான சூழலில் எதையும் தெளிவுற அறிந்திடுதலும் தெளிவுற மொழிந்திடலும் அவசியமானது.

கவிதை என்னும் வடிவில் உங்கள் எண்ணங்களை தெளிவுற வெளிப்படுத்த நீங்களும் எழுதலாம். இளைய முதிய தலைமுறை இடைவெளியின்றி பிரதேச தேச எல்லைகளைக் கடந்து **"நீங்களும் எழுதலாம்"** களம் கொடுக்கும்.

**அன்புடன் ஆசிரியர்**
**நீங்களும் எழுதலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுகள்

**நினைவுகளில் கவிஞர்.சு.வில்வரத்தினம் நிகழ்வு** சு.வி.மறைந்த இரண்டாவது தினமான 09.12.2008 ல் நடைபெற்ற போது எழுத்தாளர் நந்தினி சேவியர் தலைமையுரை ஆற்றுவதையும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.செ.யோகராசா **"சு.வியின் பாடுபொருள்"** என்னும் தலைப்பில் உரையாற்றுவதையும் **"நீங்களும் எழுதலாம்"** ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் வரவேற்புரையினை நிகழ்த்துவதையும் எஸ்.சத்யதேவன் நன்றியுரை கூறுவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் கீழே உள்ள படங்களில் முறையே காணலாம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீதமாயிருந்த**

**கொஞ்ச நம்பிக்கையும்...**

**துவாரகன்**

மீதமாயிருந்த கொஞ்ச நம்பிக்கையும்
நம் கைவிட்டு நழுவிப் போகிறது

உடைந்த கூரைகளும்
விழுந்த மரங்களும்
சிதைந்த உடல்களும்
எம் கண் முன்னால்
பிதுங்கிய விழிகளோடு அலைகிறோம்
இப்போ எங்கள் கண்களுக்கு சப்பாத்தி முட்களோ
நாகதாளிப் பற்றைகளோ பெரிதில்லைத்தான்
மருதமரங்களையும்
மலைவேம்புகளையும் கைவிட்டு
பற்றைகளிலும் பாம்பு புதர்களிலும்
படுத்துறங்குகிறோம்.

வானம் கூரையாக
முட்கள் படுக்கையாக
வெறும் மனிதர்கள் மட்டும் இருக்கிறோம்
இன்னும் கொஞ்ச நேரத்தில்
எங்கள் உடல்களும் செத்துப் போகும்.

பனிமலையேறிகள் மரத்துப்போன
உடல்களைக் கண்டு கொள்வது போல்.
நாளை வரும் ஒருவன்
இந்த பாம்புப் புதரிலோ
கூரைப்பற்றைகளுக்குள் இருந்தோ
சிதைந்து போன எங்கள் உடல்களைக்
கண்டு கொள்வான்
அப்போது அவனும் கூட
கொஞ்சம் கொஞ்சமாக
செத்துக் கொண்டிருப்பான்.

களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதிவரைந்த கோலங்கள்**

எம்.ரீ.எம். யூனுஸ், காத்தான்குடி

முகவரிகள் முடக்கப்பட்டதனால்
முகாரிகளும் முறுவலிழந்து
முட்டிமோதி முணங்குகின்றன!

அகிம்சை வழி
அடக்கப்பட்டதனால்
ஊதாரியின் உரசல்கள்
ஊமையாகவே உலாவுகின்றன!

தேடல்களின் தேட்டம்
தொலைந்து போனதால்
தொந்தரவே
தொலைதூரம் பயணிக்கிறது!

எண்ணப் பகிர்வோ
ஏற்றமிழந்து
வசைபாடும் வாஞ்சையுடன்
நிர்க்கதியில் செல்கிறது

பகிடிவதை பலமானதால்
பீதிக்குள் என் வாழ்வு
புடை சூழவே.......
பாத்திரத்தின் பேருவகை
பெயரதனின் சுட்டலுடன்
சுமையாகவே சிணுங்குகிறது!

தீண்டல்கள் தெம்பிழந்து
சுருதியை சுட்டிநிற்க
ஆவேசத்தின் ஆரம்பத்தில்
முழுமுகவரியும்
முடக்கப்படுகிறது
பல்கலையில் பயிலும் காலம்
முடிந்து போக

முண்டங்களின் மூர்க்கத்தனத்தால்
முழுவாழ்வும் மடிந்து போகிறது
எதிர்பார்ப்புக்கள் நிறைந்த
எதிர்நீச்சலுடன்

புனைபெயரில் எழுதுவோர் தமது
சொந்தப்பெயர் முகவரியினையும்
குறிப்பிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூவா தீயா**

**தமிழ்நேசன் - மன்னார்**

உன் சொற்கள்
அடுத்தவர் நெஞ்சில்
பூ வைக்கிறதா?
இல்லைத்
தீ வைக்கிறதா?

உள்ளத்தில் ஒன்று
உதட்டில் ஒன்றா?

உள்ளத்தில் நலிந்தோரும்
உடலில் மெலிந்தோரும்
உன்னால் வாழ்வு பெறட்டும்

புதையுண்ட விதை
மண்ணில் மீண்டும்
சிதைவுண்டு சிலிர்க்கிறது!

மூங்கில்கள் எல்லாமே
புல்லாங்குழல் ஆவதில்லை
பூக்கள் எல்லாமே
சந்நிதிகள் சேர்வதில்லை!

---

**கேள்விக்குறிகளாய்?**

**-ரா. பிரேம் சுரேஷ், நீலகிரி மாவட்டம்**
**தமிழ்நாடு**

இராவணனின் நாட்டினிலே
ஈவிரக்கமற்றவர்களின் களியாட்டம்
இடியென வெடியோசை தினமும்
இடரினிலே உழல்கிறதே நம் உறவு

இலங்கையின் இதயமாயிருந்து
நலம் சேர்த்த இனமன்றோ
அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது
அராஜகவாதிகளால்! அந்தோ!

இருண்டு கிடந்த தீவுக்கு
இன்னொளி தந்தவர்கள் உழைப்பால்!
இனவாத அனல் மூச்சில் அன்றோ
அகப்பட்டு கருகுகின்றார் ஆதரவேதுமின்றி

தாய் மண்ணாம் தமிழகமாம் இங்கே
தம் தொப்புள் கொடியை உதறிவிட்டு
மூவர்ணக் கொடியின் நிழலில்
அயர்ந்து கேள்விக் குறிகளாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மனிதனை" தேடுகிறேன்! "**

**-ஷெல்லிதாசன்-**

நீதி ஏங்குகிறது
நிலையாய் தனக்கென்றொரு
நிலம் - இந்த
தரணியிலே இல்லாமல்
எல்லாம் -
தறி கெட்டுப் போனதென்று!

சாதிக்கொன்றாய்
சமயத்திற்கு வேறொன்றாய்
இனத்திற்கு இன்னொன்றாய்
நிறத்திற்கு வெவ்வேறாய்
நீதியை பங்கீடு செய்ய
நினைக்கும் -
"தாராள மனசு" பஞ்சாயத்துப்
பண்ணையார்களால் -
நீதி ஏங்குகிறது
நிலையாய் தனக்கொரு
நிலம் இல்லாமற் போனதென்று!

செங்கோல் இன்று
"செங்குரங்குகள்" கைகளிலும்
செங்கம்பள வரவேற்புக்கள்
இன்று - மனித
அங்கங்களை அசலாக
சப்பித் துப்பும்
"உத்தமர்" களுக்குமாக
உருமாறிப் போனதால்
நீதி ஏங்குகிறது
நிலையாய் தனக்கென்றொரு
நிலம் இல்லாமற் போனதென்று!

நீதியே.....நீ......கேளாய்!
என்றோ ஒருநாள்......
கோடியில் ஒரு "மனிதன்"
ஒரு -
கோடியிலிருந்து உன்
குறை தீர்க்க
"வீறுடன் எழுவான்
என்றும் -
வீழாத செங்கதிராய்"
அன்று நீதியே உனக்கு
அரியணை கிடைக்கும்
அமைதியாய் உனது
ஆட்சியும் மேலோங்க
விடியும் உலகம்
முடியும் அவலங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளின் மீதி...

**கலைமகள் ஹிதாயா றிஸ்வி -நாவற்குடா.**

நேசத்தின் அருகாமையுடன்
உன்வாசல் வரை வந்து
திரும்பியவள்

உன் மௌனத்தின் முன்
என் வார்த்தைகள் - வெறும்
அர்த்தமற்ற ஒலிகள் தான்:

பூக்களின் மேல் ஏறி நிற்கும்
வண்ணாத்தியின்
கனவுகளுடன்

உன்னை இழுத்து நிறுத்த
முடியாமல்
தோற்றுக் கொண்டிருக்கிறேன்

போய் வா - நாம் சுதந்திரமாய்
சுற்றிய பொழுதுகள்
குறைவுதான்

என்னை எடுத்த இடத்திலே விட்டுச்செல்
உன் இயலாமையுடன் என் நட்பையும்
தூர எறிந்து விடு

நமக்கான பொழுதுகள்
வாய்க்கும் போது - மட்டும்
அமர்ந்து பேசிக்கொள்வோம்:

கவிதைக்கான.......
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின்களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்
நீங்களும் எழுதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடற் கொண்டைத் தேசம்**

**கிண்ணியா ஏ.நஸ்புள்ளாஹ்**

வெள்ளை மண்
மெல்லிய காற்று
உசுப்பிய நிகழ்வு
அரசியல் நாவுறுத்த
யுத்த ஒப்பாரிகளையும்
சுனாமி வெறுமையும்
காத்திருப்பின்
ஆற்றலாம்
கடற் கொண்டைத் தேசம்
கிண்ணியா மண்

ஆதிச் சொற்களும்
கலாசாரமும்
ஒவ்வொன்றாய் கபனிடல் கண்டு
எங்ஙனம்
சீனடி
புலவர் பாட்டு
எனவே/எனவோ/எனினும்
எனுமாறு/எவ்வாறும்
நாளையும்
தூக்கிச் செல்லப்படலாமெனின்
கிழிந்த களிசனோடு
நான் மற்றும்
நாம் பிடித்த தும்பிகள்
காகங்கள் பூக்கும் தென்னைகள்
விடுதலையின் குரலில்
போர் வெளியின் விசர்ப்பற்களில்
தேடுவர்
வெள்ளை நிலா
பனம் பழம் விழுந்து
பொறுக்கிய காலங்கள்.

இன்று
அவன் கக்குகின்ற வார்த்தைகளில்
மொழி இருக்கும்
ஆனால்/அப்படியே/அது
அதுவா/அதுவாக
சுவாசம் இருக்காது
வேர்களை
பாட்டனை
பாட்டனின் பாட்டனை
செதுக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற் கொண்டைத் தேசம்
பிறகு
கடற் கொண்டது தேசம்
சொல்ல நினைத்ததும்
மெல்ல மறைத்துக் கொண்டதும்
சவப் பெட்டிக் கதை
மனசுகள் இருந்த விலங்கு
இன்னும்
இதுதான் இருபத்தோராம்
நூற்றாண்டு கலாசாரம்.

அட
இதுவும்
கவிதைக் கதையிங்கலா
இது... இது...
கழுதைக் கதையிங்கலா?

**புலம்பல்கள்**

**-வதிரி - சி. ரவீந்திரன்**

எங்களையே நாங்கள் புகழ்ந்து
எமக்குள் பேசிக்கொள்கிறோம்
அண்ணனை தம்பி புகழ்தல்
அப்பனை மகன் புகழ்தல்
இப்படியே புகழ்ச்சிகள்.........
எங்கே நாம் இன்றும்
நிற்கின்றோம்?
எங்கள் வீட்டுக்குள்ளேயே
நின்று புகழ்பாடுகிறோம்
வீட்டை விட்டு வெளியே
எட்டிப் பார்த்தால்
பலபேர் முன்னே செல்வது
எமக்குப்புரியும்
நாங்கள் வீட்டுக்குள்ளிருந்து
விடியும் வரை பேசுவதால்
நாட்டு நடப்புகள்
நமக்குத் தெரிவதில்லை
வீட்டைக் கடந்து
வெளியே வருவோம்
வெளிச்சத்தில் பயணிப்போம்
நாங்கள் நமக்குள்ளே பேசுவது
புகழாரங்களல்ல - புலம்பல்கள் தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயக்காரனின் புதைகுழி

-சண்முகம் சிவகுமார், கொட்டகல-

மாயக்காரனின்
புதைகுழி நிரம்பப் போவதில்லை
ஒவ்வொரு இரவும் மனித
வேட்டையாடுபவன்
அதிக மதுவருந்திவிட்டு
கூர்வாளினைச் சுழற்றி
பயிர்களை வேரறுக்கிறான்
தீய்ந்த வருகை தரும்
சித்தார்த்தன்.....
என் சடலக் காற்றில்
அலைகின்றான்
யாருடைய பொம்மைகளை
இன்று.........
புணர்வானோ?

கால காலமாய்
தலைக்குள் எழும் விருட்சங்களின்
கீழ்
அவன் புத்தனான செய்தியை
காலத்தின் பிணநாற்றம்
உறுதிப்படுத்திற்று.........
வெறுப்பின் நிரந்தர நாற்காலியில்
அமர்கிறேன்......
பிணம் நாறும்
மண்ணின் தோளுக்கடியில்
நமது வாழ்வு
எப்படி தொடர முடியும்?

கடிதவழி தனி இதழை பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும். வருட சந்தா 200/= (தபாற்செலவு உட்பட) அனுப்பவேண்டிய தபாலகம் திருகோணமலை முகவரி எஸ்.ஆர்.தனபாலசிங்கம் 103/1 திருமால் வீதி,திருகோணமலை.

அறிமுகக்குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒருபிரதியை அனுப்பிவையுங்கள் 2007ற்கு முன் வெளியானவை அறிமுகக்குறிப்பில் இடம்பெறமாட்டாது

மாணவர்களே பயில்களத்திற்கு உங்களது ஆக்கங்களை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பனைக் காகிதம்

ஏழாலை வாணி

உனக்குள்ளும்
சின்னத் தன்மானம்
தரைமுட்டிப் பார்க்கட்டும்
ஆனால்........
எச்சரிக்கை விடுத்தபடியே
இருந்து கொள்!
மனதுக்குள்ளே
மனிதப்பேய்கள்
நல்லவராய் வேடமிடுவதற்குள்
மனதிற்குள் - ஒரு
தைரிய தீக்குச்சியை
கிழித்துப்போடு
ஆம்
வேஷம் கட்டியவர்
நெஞ்சில் தந்த காயத்தை
நாளை தேற்றிக்கொள்ள
உன்னைத் தவிர
யாருமில்லை ஆகையால்
எச்சரிக்கை விடுத்தபடியே
உன் சின்னச் சின்ன
கிளைகளை மெல்லப் பரப்பிக்கொள்
அதில்
கற்பனைக் காகிதத்தை
கண்டபடி
தொங்கவிடாதே

---

## பயணம்!

செ. ஜெ. பபியான் - சாமிமலை

குருட்டு பூமியின்
கூக்குரல்!
தீக்குளித்தே
விழுங்கிக்கொண்டு,
முக்குளித்த
பகற் பொழுதின்
வெளிக்கடந்து,
மயான வழிப்பயணம்!
நீரூற்றி வரண்டு போன
என் கண்களில்
பாவக்கணக்கு!
தொலைந்த
சுவடைத் தேட
விழைந்த குரல்
விரக்தியுடன்.........!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊத்தை உலகத்தை மாற்றியமைப்போம்**

சரவணன், கோவில்போரதீவு

ஊத்தை பிடித்துக்
கிடக்கிறது உலகம்
ஊமையாகிக் கிடக்கிறது
உலக மக்களின் இதயம்

கண்ணீரிலும் செந்நீரிலும்
கறைபட்டுக் கிடக்கிறது காசினி
கவனிக்காமலே இதை விட்டால்
நிலைமை என்னவாகும் இங்கினி?

சிற்பியின் கரங்களும்
செந்நீரில் சிதறிக் கிடக்கிறது
கற்பிதம் செய்த கண்களும்
கண்ணீர் சிந்திக் கிடக்கிறது

காலம் இப்படியே தொடர்ந்தால்
கவனியாமலே நாம் வாழ்ந்தால்
ஞாலம் இது ஞானம் பெறுமா?
நல்லதோர் உலகாகுமா?

"உள்ளம் இல்லம் உலகம்" - மூன்றும்
ஊத்தை நீங்கச் சுத்தம் செய்வோம்
ஊத்தைகளுக்குள் உருளும் உலகத்தை
ஒன்றாய் நின்று நாம் ஒளிவீசச் செய்வோம்.

---

**நான் ஆம்பிளைப் பிள்ளை**

க. சுதர்சன், தும்பளை

"பணம் மட்டும் வாழ்க்கையாகாது
பணமின்றி வாழ்க்கை ஓடாது" எனும்
பரிபக்குவத்தோடு பகல் முழுக்க
பம்பரமாய் சுழல்பவன் நான்!
"உணர்ச்சிகளுக்கு வடிகால் அழுகை" என
உளவியல் உரைக்கிறது.
இதயத்தின் இலட்சிய நெருப்பால் - என்
கண்ணீரும் ஆவியாய் போனது.
ஆம்பிளை அம்பலத்தில் அழுதால்
அசிங்கமாமே!
அழுவது என்றால் இருட்டிலே தான்..
தாயிற் சிறந்த தயவானதத்துவன்
தாயுமானவன் எனும் பதவிகளுக்கு
சேவைநீடிப்பு கேட்கிறேன்!!
மனமெனும் பாறை இறுகி இறுகி
ஈற்றிலே வெடித்து பிரவகிக்கும் கண்ணீர்
"நான் இன்னமும் மனிதன்தான்" என
சங்கீதமாய் சலசலத்து ஓட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையாமை

**கவின்மகள் செங்கலடி**

இத்தரை மீதினிலே
நித்திய வாழ்வெது?
நித்தமும் தேடி நின்றேன்:- வாழ்வில்
கத்தும் கடலலை
எத்தும் துரும்பாக
நித்தம் கலங்கி நின்றேன்.

வித்தை பலகற்றும்
புற்றின் குணம் பெற்றும்.
செத்தொழிதலே முடிவு - இங்கு
கத்தி எடுத்தாலும்
யுத்தம் புரிந்தாலும்
காண்பதென்ன இனிது?

சேரும் பணமெல்லாம்
வீசும் காற்றென - அன்று
உற்ற உறவெனக்
கூடும் மனிதரும்
ஒடும் நிலை தோன்றும்!

## புரிகிறது

**வனஜா நடராசா கொழும்பு**

எனக்குப் புரிகிறது
எல்லாம் எனக்குப் புரிகிறது
பூக்களின் பாஷை
இலைகளின் மொழி
காற்றின் செய்தி
நதியின் கீதம்
எல்லாமே என்னைத் தொடுகிறது
மெல்ல மெல்ல
உண்மைகள்
புரிய புரிய
ஆத்மாவின் இரகசியம்
அன்பு அன்பு!
நான் காற்றாகி
காற்றினை தழுவி
சுகந்தமாகி
இலைகளை ஸ்பரித்து
மலர்களுடன் பேசி
என்னுள் ஆனந்தம் கண்டேன்
காற்றின் பாஷை ஆனந்தம்
இலைகளின் மொழி பூரணம்
பூக்களின் பாஷை அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளம்?

**தாமரைத்தீவான்**

ஈருடல் சேரத் தோன்றி
ஈரைந்து மாதம் போக
ஓருடல் கொண்டு வந்தான்,
உலகினைப் பார்க்கலானான்!
சீருரு வான பின்னர்
சிந்தனைக் கலைகள் கற்றே
பேருரு வாகி நின்றான்,
பேரவாக் கொள்ள லானான்!

பட்டங்கள் - பதவி பெற்றான்
பணமதைத்தேட லானான்!
திட்டங்கள் இட்டான்,பெண்ணைத்
திருமணம் செய்யலானான்!
கட்டுப்பா டின்றி வாழ்ந்து
கனபேரைப் பெற் றெடுத்தான்!
விட்டானா,காசுக் காக
வெளிநாடு போயும் வந்தான்!

நூற்றிலே பாதி வாழ்ந்தான்
நோய் நொடிக் காளு மானான்1
காற்றுமே புயல் ஆயிற்று,
கடலதும் காய்வாயிற்று!
ஊற்றதும்குறைவாயிற்று!
உண்மையும் பொய் ஆயிற்று!
மாற்றதும் புரியவில்லை,
மருந்துக்கும் வழியே இல்லை!

சென்றனன் சுடுகாட்டிற்கே
திரும்பியா வருவான்? இல்லை!
"நன்" றவன் வாழ்ந்தா போனான்?
நல் லடையாளம் உண்டா?
என்றுமே மனித வாழ்வு
இவ்வித முடிவே தானா?
இன்றுள நிலைமை நாளை
ஏற்றங்கள் பெறவும் கூடும்?

**வாசகர்களே,**
நீங்களும் எழுதலாம் இதழின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர் பார்க்கின்றோம்.சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள். அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகக்குறிப்பு

**"காதோடு வாய் புதைத்து"** (கவிதைத் தொகுப்பு)

**பொலிகை ச. திருப்பதி. (அமரர்)**

தொடர்பு : " பிள்ளை நிலா" கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை விலை **150/=**

'அடிப்படையான யாப்பிலக்கண அறிவு, மொழிப் பாண்டித்தியம், ஆழமான சமூகநோக்கு, கலாரசனை உடைய ஒருவரே "மரபு வழிக் கவிதை" ஆக்கும் வல்லமை பெற்றவராக விளங்கலாம். அருந்தலாக இன்று காணக்கூடிய அத்தகைய ஆற்றலுள்ள கவிஞர்களுள் ஒருவர் ச.திருப்பதி - தெணியான். "சமூகக் கொடுமைகளைச் சாடும் குரல் வீரியமாக ஒலிக்காமைக்கும், சமூகப்பார்வையை தீர்க்க தரிசனமாக முன்வைக்க முடியாமற் போனமைக்கும் அக்காலக் கவிதைச் செல்நெறியே காரணமாகக் கொள்ள வேண்டும்.- கலாநிதி த.கலாமணி. மேற்கண்டவாறு அணிந்துரையில் தெணியானும், முன்னுரையில் த.கலாமணியும் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. கொற்றை பி.கிருஷ்ணானந்தன் முயற்சியில் வெளிவந்திருக்கும் இத் தொகுதி மரபுக்கவிதையின் இருப்பை நிலைநிறுத்து மெனலாம்.

---

**"பொழியும் மழை"** (கவிதைத் தொகுப்பு)

**தி. காயத்திரி**

தொடர்பு : தமிழ் மன்றம், வவு/தே.கல்வியியற் கல்லூரி விலை : **70/=**

தொகுப்பில் ஆரம்ப எழுத்தாளர்களுக்குரிய குறைகள் காணப்பட்ட போதும் "பொழியும் மழை" தொகுதியினூடாக கவிதை உலகிற்கு தன்னை இனங்காட்டியுள்ளார் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவி தி.காயத்திரி. "இது ஒரு நிர்வாண உலகம் - இங்கேநான் மட்டும் ஆடைகட்டி என்ன பயன்? "உன் அதிகாரத்திற்குள் / அடங்கிப்போகிறது/என் சுதந்திரக்காற்று போன்ற அவரது கவிதையிற் காணப்படும் வரிகள் பல கேள்விகளை எழுப்புகின்றன."காயத்திரியின் கவிதைகள் தன்னுணர்வுப் பாடல்கள் இவை பல வகைப் பொருள்களைப் பாடுகின்றன" என்று ஆசிரிய மாணவ விரிவுரையாளர் ந.பார்த்தீபன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லாய்க் கிடக்கின்றாள் அகலிகை**

**ஆனந்தன்-தும்பளை,பருத்தித்துறை**

கல்லாய்க் கிடக்கின்றாள் அகலிகை
தன் கணவனின் பொல்லா சாபத்தை
ஏற்றிங்கு
சூதறியாள் வாதறியாள்
கணவனின் சுகமேதுமறியாள்
தொட்டுத் தாலி கட்டியவன்
தொட்டுக் கூடப் பார்க்காதவன்
விசா முடிந்ததென்று
வெளிநாடு சென்ற பின்பு
ஒருவருடம் இருவருடம் என
ஓடியது பல வருடம்
கடிதமும் கையடக்கத் தொலைபேசியுமாய்!

காலம் கனிந்தது
கையடக்க தொலைபேசி
கனிவாகக்கூறியது அவன் வரவை
துள்ளிக்குதித்தாள் தன் கணவனை
எண்ணிக் களித்தாள்.

வாசலிலே தேவதை
வழிபார்த்து விழி மலர
இத்தனை அழகா என
பிரமித்துப் போனவனின் சந்தேகமொழி
எப்படி இருந்தாய்
இது நாள்வரை?
இடி இறங்கியது அவள் தலையில்!
பிறந்திங்கு இராமன்
பின் ஒருக்கால் வந்துமென்ன
கற்பின் கனலை
அந் நெருப்பில் அமுக்கியே
அணைத்தான் என்றால்
பிறந்திங்கு இராமன்
பின் ஒருக்கால் வந்துமென்ன?

***கவிதை சம்பந்தமான குறிப்புக்கள்***
***கட்டுரைகள் விமர்சனங்கள்***
***போன்ற பல்வேறு விடயங்களோடு***
***மொழிபெயர்ப்புக் கவிதைகளும்***
***உங்களிடமிருந்து***
***எதிர்பார்க்கப்படுகின்றன.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயில்களம்

### நீ

**வே. சசிகலா - தி/செல்வநாயகபுரம் இ. ம. வி**

நினைவுகளை
நீக்க வைத்தாய்
நிஜங்கள் அனைத்தையும்
நிழல்களாக்கி விட்டாய்!
சிந்தனைகளையெல்லாம்
சிதைத்துவிட்டாய்!
இன்பங்களையும் துன்பங்களாக்கி
நினைவுகளை
சிந்தித்தவளாய் நான்
ஆனால் நீயோ...........

### சமாதானமே வா

**ந. டயாழினி, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு. ம. வி**

அமைதி வாழ்வை புயலாக்கி
அழிக்கின்ற யுத்தம் ஓய்ந்து
நான்கு பேரும் நட்புடன்
நலமாய் உண்டு மகிழ்ந்திட
சத்தியம் வாழ
சகோதரத்துவம் மலர
சரித்திரம் படைக்க
சமாதானமே வா

இலங்கைத் தீவின் இனிய பிள்ளைகள்
இனிதாய் வாழ
பள்ளியில் இருந்து விடுக்கும்
பணிவான கட்டளை
சந்ததிவாழ
சமாதானமே வா

### தாய் முகம்

**ச. சுஜி-தி/செல்வநாயகபுரம், இ. ம. வி**

பிறந்தவுடன் பார்த்தேன்
பல முகம்!
வளர்ந்தவுடன் பார்த்தேன்
சில முகம்!
இன்று வரை பார்க்கின்றேன்
ஒரு முகம்!
என்றும் எனக்குப் பிடித்த முகம்
தாய் முகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்ப்புக் கவிதை

*தபாற்காரர்*

புலன்ட் அல்-ஹைடாரி
**(Buland Al-Haidari)**

**தமிழில் - சி. சிவசேகரம்**

***தபாற்காரரே***
*உமக்கென்ன வேண்டும்?*
*நான் இந்த உலகிலிருந்து*
*ஒதுங்கியிருக்கிறேன்.*
*நீர் ஏதோ பிழை விட்டிருக்கிறீர்........*
*நிச்சயமாக என்போல ஒரு*
*கதியற்றவனுக்கு*
*இப்பூமியில் புதிதாக எதுவும்*
*இராது*
*கடந்த காலம்*
*தொடர்ந்து வாழுகின்றது;*
*கனாக் கண்டபடி,*
*வாங்கிய படி,*
*பழையதை நினைவுகூர்ந்தபடி*
*சாவீட்டு இடைவேளைகளுடன்*
*மனிதர் விருந்துண்டபடி உள்ளனர்*
*புதியதொரு பசிக்கு உணவூட்ட ஒரு*
*எலும்புக்காக*
*அவர்களது கண்கள் அவர்களது*
*மனங்களை அகழ்கின்றன.*
*சீனப்பெருமதில் இன்னமும் தன்*
*கதையை உரைக்கிறது,*
*பூமிக்கு இன்னமும் அதன்*
*ஸிஸிபஸ் * உள்ளான்-*
*எனினும் தனக்கென்ன வேண்டுமெனப்*
*பாறை அறியாது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தபாற்காரரே*
*நீர் ஏதோ பிழைவிட்டிருக்கிறீர்*
*நிச்சயமாக ஒன்றுமே மாறவில்லை*
*திரும்பிப்போம்*
*உமக்கென்ன வேண்டும்.....*

*1951ம்ஆண்டு எழுதப்பட்டது. முதலாவது ஆங்கில வடிவம் அப்துல்லா அல்- உதாரி 1986. அல் ஹைடாரி ஓர் ஈராக்கியர்.*

*ஸிஸிபஸ் *(sisy Phus) கிரேக்க இதிகாச மரபில் தனது வஞ்சகமான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டு முடிவின்றி ஒரு பாறையை உச்சிக்கு உருட்டிச் செல்லவும் பாறை கீழே உருண்டு வர மறுபடி மேலே உருட்டிச் செல்லுமாறும் பணிக்கப்பட்ட ஓர் அரசன்.*

---

**ஹைக்கூ**

**என். சந்திரசேகரன், இரத்தோட்டை**

ஆற்றைக் கடக்கவே
அல்லல் படுகின்றோம்
நகரில் மேம்பாலம்

பூர்வீகத்தை புரிந்திருக்கிறார்கள்
வால் பிடிக்கிறார்கள்
மனிதர்கள்

யார் சொன்னது?
விலை'வாசி' என்று
விற்போனுக்கா......?

செவ்வாய் எப்படி
இனி சிவந்திருக்கும்
மனிதனின் காலடி

புள்ளடியிட்டு
புரியாதோரின் புன்னகைகள்
தேர்தல் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தாடற்களம்

### *நுனிப்புல்லரிப்பு*

**தீரன். ஆர்.எம். நௌஸாத்**

"நீங்களும் எழுதலாம் 9ம் இதழில் 'வானம்பாடி' எழுதிய பந்தியில், "....இப்படியே, பஸீல் காரியப்பர், ஜின்னா ஷெரிப்புத்தீன், காத்தான்குடி அஸ்ரப்கான் போன்றோரும் மரபோடும் நிற்கும் கவிஞர்களாவர்....." என்று குறிப்பிட்டுள்ளதைக் கண்டு புல்லரித்துப் போனேன்.

* "தமிழ் கூறும் நல்லுலகிலேயே ஆறு தமிழ்க் காப்பியங்களை எழுதி சாதனை புரிந்தமைக்காக உலகத்தமிழிலக்கிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் புலவர்களாலேயே கௌரவம் பெற்ற தமிழ்ப்பெருந்தகையாளரான ஜின்னாஷெரீப்புத்தீன் ஐயா அவர்களை ஒரு சாதாராண மரபுக் கவிஞர் வரிசையில் வைத்ததும்,

* "புலவர் மணி பெரியதம்பி பிள்ளை ஐயா அவர்களால், "பாவலர்" என்று பட்டமளிக்கப்பட்ட பாவலர் பஸீல் காரியப்பர் அவர்களை மரபுக் கவிஞர் என்ற தர வரிசையில் குறிப்பிட்டிருந்ததும்,

* "தமிழ்க் கவிதையுலகில் பேர் குறிப்பிடமுடியாத அஸ்ரப்கான் என்னும் மின்மினியை மேற்படி சூரியசந்திரர்கள் வரிசையில் சேர்ந்திருந்தும் கண்டு இந்த ஆய்வுக்கட்டுரையை (?) எழுதிய வானம்பாடியின் அறிவுத்திறனை எண்ணித்தான் இப்படிப் புல்லரித்துப் போனேன். காத்தான்குடியில் ஆயிரம் புலவர்களும், மரபுக் கவிஞர்களுமிருக்க, அஸ்ரப்கான் என்பவரை மட்டும் இவ்வரிசையில் பட்டியலிடக் காரணம் என்னவோ... இவர் யார்...? இவர் தமிழ்யாப்பிலக்கணம் பயின்ற ஒரு மரபுக் கவிஞரா...?

* "மேற்படி மூன்று வித்தியாசமான வார்ப்புகளையும், ஒரே பாத்திரத்திலிட்டு இவர்கள் மூவரும் மரபோடு நின்றவர்கள் என்றால்... இதன் அர்த்தம்தான் என்ன...? எவ்வளவு பெரிய அறியாமை இது...! ஆக்கங்களை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு என இதழில் குறிப்பிட்டிருக்கும், ஆசிரியர், எஸ்.ஆர்.தனபாலசிங்கம் இதனைச் செவ்வைப்படுத்தவில்லையே ஏன்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

""வானம்பாடி" ஏதாகிலும், கட்டுரைகள் எழுதும் முன்னர் தனது பார்வையை மேலும், கூர்மையாக்கி கொள்ளுதல் வேண்டும்.

"தமிழறிஞர் திரு அருளையா அவர்களால், "எழுக புலவனே...!" என விளிக்கப்பட்டவரும், கலாநிதி எம்.ஏ.நு.்.மான் அவர்களால், "அரும்பு மீசைத் தத்துவஞானி...! என சிலாகிக்கப்பட்டவரும், கல்முனை அபாபீல்களினால், "தென்கிழக்கின் உமர்கையாம்!" என வர்ணிக்ககப்பட்டவருமான பாவலர் பஸீல் காரியப்பர் அவர்களின், இனநல்லுறவுக் கவிதை ஒன்றினை "நீங்களும் எழுதலாம்" வாசகர்களுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

## துளசி

துறைநீலாவணையிலிருந்து ஒரு
துளசிச் செடி கொண்டு வந்தேன்.
வேர் நொந்து போகாமல் நீர் வார்த்து
ஓரமாய்க் கெல்லி ஈர மண்ணோடு
உசுப்பாமல் கொண்டு வந்து
எங்கள் இல்லம் இருக்கும்
கல்முனைக்குடி மண்ணைக் கெல்லி
அதன் உள் வைத்தேன்.
அம்மண்கள் கலந்தன
மனிதரைப் பழித்தன.
துளசியின் இலைகள் என்னைப் பார்த்து
மெல்லச் சிரிக்கின்றன.

\- பாவலர் பஸீல் காரியப்பர்.

(நன்றி:- ஆத்மாவின் அலைகள்.(1994)

*** கருத்தாடற்களம் கருத்தாடல் மூலம் தெளிவுறுவதற்கே. ஆகையால் செவ்வை செய்தல் - இயன்றவரை தவிர்க்கப்படுகின்றது கருத்தாடல் வரவேற்கப்படுகின்றது.**

**ஆ-ர்**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
வருட சந்தா 200/=
**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank, Trincomalee**
என வைப்பிட்டு பற்றுச்சீட்டை
அனுப்பிவைக்கவும்
வெளிநாடு **US $ 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி - ஒரு சர்ச்சை

### பாரதியின் குழப்பங்கள், முரண்பாடுகள்

க.சி.அகமுடைநம்பி-

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகியவன் மகாகவி பாரதி. சொல் ஒன்று செயல் வேறு என்று வாழ்ந்தவன் அல்லன்.** ஆனால் அவனிடம் சில குழப்பங்கள் முரண்பாடுகள், தடுமாற்றங்களை காண்கின்றோம். இந்துமதத்தின் மீது அவனுக்கிருந்த அளவற்ற பற்றுதல், நான்கு வருணங்களில் நிலவுகின்ற உயர்வு - தாழ்வு நடைமுறைகளுக்கிடையிலும் அவற்றைக் கட்டுக்குலையாமல் பாதுகாத்து நிலைப்படுத்த வேண்டும் என்பதில் அவனுக்கிருந்த வேட்கை, சமுதாயத்தில் சமத்துவத்தை எப்படிக் கொண்டுவரலாம் என்பதில் அவனிடம் இருந்த தெளிவின்மை போன்ற பல கூறுபாடுகளில் பாரதி குழம்புகிறான். தடுமாறுகிறான். தனக்குத் தானே முரண்படுகிறான்.

**இந்து மதப்பற்று**

இந்தியாவின் சீர்குலைவுக்கும் பேரழிவுக்கும் காரணம் இந்துமத தர்மம் சரியான முறையில் போற்றப்படாததுதான் என்று பாரதி கருதினான். காரைக்குடி இந்து அபிமான சங்கத்தை வாழ்த்தி அவன் பாடிய பாடலின் ஒரு பகுதி இதனை உறுதிப்படுத்துகிறது:

"அருமையுறு பொருளில் எலாம் மிக
அரிதாய்த் தனைச் சாரும் அன்பர்க்கு இங்கு
பெருமையுறு வாழ்வளிக்கும் நற்றுணையாம்
ஹிந்துமதப் பெற்றி தன்னைக் கருதி அதன்
சொற்படி இங்கு ஒழுகாத மக்களெலாம் கவலை
எனும் ஒருநரகக் குழியதனில் வீழ்ந்து தவித்து
அழிகின்றார் ஓய்விலாமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கருத்தையே "இந்துக்களின் கூட்டம்" என்ற கட்டுரையில் (பாரதியார் கட்டுரைகள்) அவன் வலியுறுத்தி எழுதுகிறான்.

இந்துக்களுக்குள்ளே இன்னும் சாதி வகுப்புகள் மிகுதிப்பட்டாலும் பெரிதில்லை. அதனால் நாம் தொல்லைப்படுவோமேயன்றி அழிந்து போய்விட மாட்டோம். ஹிந்துக்களுக்குள்ளே இன்னும் வறுமை மிகுதிப்பட்டாலும் பெரிதில்லை. அதனால் தர்மதேவதையின் கண்கள் புண்படும். இருந்தாலும் நமக்கு சர்வ நாசம் ஏற்படாது. ஹிந்து தர்மத்தை கவனியாமல் அசிரத்தையாக இருப்போமேயானால் நமது கூட்டம் நிச்சயமாக அழிந்து போகும்."

"இத்தகைய துயர் நீக்கிக் கிருதயுகம்
தனை உலகில் இசைக்கவல்ல
புத்தமுதாம் ஹிந்துமதப் பெருமை தனை"
என்றும் அவன் பாடுகின்றான்.

கிருதயுகம் என்ற பாரதியின் கனவுலகத்தை ஹிந்து மதத்தால் மட்டும்தான் கொண்டுவர முடியுமா? மானுடத்தை உயர்த்தும் நோக்கம்தானே உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் உள்ளது. அத்வைதம் பேசுகின்ற பாரதி ஏன் இதைக் கண்டுகொள்வதில்லை?

கட்டமைப்பு என்று எதுவும் இல்லாமல் சிதறலாகவுள்ள இந்து மதத்தைச் சார்ந்த மக்களை ஒருங்கிணைத்து ஒரே கூட்டமாகக் காண வேண்டுமென்று பாரதி ஆசைப்படுகிறான். மதிப்பு என்ற கட்டுரையில் (சமூகம்) பாரதி எழுதுகிறான்:

"இருபது கோடி இந்துக்களையும் ஒரே குடும்பம் போலே செய்துவிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. இந்த ஆசையினாலே ஒருவன் கைக் கொள்ளப்பட்டால் அவன் ராஜாங்கம் முதலிய சகல காரியங்களைக் காட்டிலும் இதனை மேலாகக் கருதுவான் என்பது என்னுடைய நம்பிக்கை" முப்பது கோடி ஜனங்களின் சங்கம் என்று பாடிய பாரதி இங்கு இருபது கோடி இந்துக்களை மட்டுமே ஒரே குடும்பம் என்று பிரித்துப்பார்ப்பது இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிரானதாகாதா? இந்திய ஒருமைப்பாட்டை விட இந்துக்களின் கூட்டமைப்பே பாரதிக்கு முக்கியமானதாக படுகிறது இதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை - வாழ்க" என்ற புகழ் பெற்ற வரிகள் பொருள் இழந்து நிற்பதை நாம் காணவேண்டியுள்ளதே!

இந்தியா எனும் போது பாரதிக்கு இந்துக்கள் மட்டுமே ஏற்புடைய மனிதக் கூட்டமாகப் படுகிறது. பூணூல் போடுவதா வேண்டாமா என்பதிலும் பாரதிக்கு உறுதியான நிலைப்பாடு இருந்ததில்லை.

**நாலு வருணப் பாகுபாடுகள்**

இந்துமதத்தின் அடிப்படை வருணாசிரம தர்மந்தான். படித்தவன் பிராமணண், வீரன் சத்திரியன், தந்திரசாலி வைசியன் என்ற மனுதர்மம் கூறும் குணப்பாகுபாடுகளைப் பாரதி ஏற்றுக் கொள்கிறான். ஆனால் சூத்திரனைத் தொழிலாளி என்று குறிப்பிடுகிறான். ஆனால் மனு தர்மமோ சூத்திர தர்மத்தை "ஏவலரான மக்கள் மேலே சொன்ன மூவர்க்கும் பொறாமையின்றிப் பணிபுரிதல் ஒன்றையே முதன்மையாகக் கொள்ளக் கடவர் என்றும், ஈதல் முதலிய சத்கருமங்களும் அவர்களுக்கு உண்டென்றும் பணித்தார்" என்று வரையறுக்கிறது.

ஏவல் தொழில் அல்லது தொண்டுத் தொழிலுக்கு மாற்றாக வெறுமனே தொழிலாளி என்று சூத்திரனை மடைமாற்றம் செய்கிறான் பாரதி. மனு தர்மப்படி சூத்திர தர்மத்தை விளக்கப் புகுந்தால், மூவர்ணத்தாருக்கும் அடிமைத்தொழில் புரிதல் என்பதை சொல்லித்தானாக வேண்டும் என்பதால் பாரதி இங்கு தடுமாறுகிறான்.

"வேத மறிந்தவன் பார்ப்பான்-பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவறாமல் தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்
பண்டங்கள் செய்பவன் செட்டி
தொண்ட ரென்றோர் வகுப்பு இல்லை
சோம்பலைப் போல இழிவில்லை" தொழில்

தொண்ட ரென்போர் இல்லை என்றால் மனுதர்மம் வகுத்துள்ள நான்கு வருணங்களில் சூத்திரன் என்ற நான்காவது வருணம் இல்லை என்று தானே பாரதி சொல்ல வேண்டும்? சொல்லவில்லை. அப்போதும் அவன் நான்கு வருணங்களை விடுவதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாலு வகுப்பும் இங்கு ஒன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே - செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி"

என்கிறான். நான்கு வர்ணங்களையும் கட்டுக் குலையாமல் நிலைப்படுத்திக் கொள்ளவே பாரதி விரும்புகிறான். இந்து மதத்தினர்க்கு மட்டும் என்பதில்லாமல் மானிட சாதிக்கே நான்கைத் திணிக்கப் பார்க்கிறான்.

தொழில்களின் அடிப்படையில் உருவான பல்வேறு சாதிப்பிரிவுகளை வருணாசிரம சட்டத்திற்குள் பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் என்றவாறு நான்கு வருணங்களாக வகைப்படுத்திக் கட்டமைத்து விட்டார்கள் மனுவின் வழிபட்ட வேத நெறியாளர்கள்.

நான்கு வருணங்கள் என்று வகைப்படுத்தியதும், பஞ்சமர் என்று பாட்டாளி மக்களைத் தீண்டத்தகாதவர்கள் என்றாக்கியதும், மானுடத்திற்கு மனுதர்மம் செய்திட்ட மாபெருந் தவறாகும். இதனை உணர மறுக்கிறானே பாரதி பின்னர் ஏன் அவன்

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள் எனப்
பாட வேண்டும்?

இந்து மதக் கட்டமைப்பை வலிமையுடையதாக்க வேண்டும் என்பதே பாரதியின் தலையான நோக்கம் இதற்குக் குலத்தாழ்ச்சி என்பது தடையாக இருந்து விடக்கூடாது என்பதால் அதனை நேர் செய்துவிடலாமே என்று பார்க்கிறான்.

இதன் காரணமாகத்தான் பிராமணர் என்ற சாதியைப் பிராமணத்துவம் என்ற தத்துவ நோக்கிலே பார்த்து, பிராமணத்துவம் என்பது பிராமணர் என்ற சாதிக்குள்ளே மட்டும் அடைபட்ட ஒன்றல்ல, அது எல்லா சாதிகளுக்குள்ளும் பரந்து விரிந்த ஒன்று என்று பாரதி விளக்கம் தர முற்படுகிறான். ஆக நான்கு வருணங்களும் அதனதன் குணநலன்கள் மாறாமல், நெகிழ்ச்சியுடனாவது பாதுகாக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே பாரதியின் விருப்பமாகும். இதன் மூலம் உச்ச நிலையில் உள்ள பிராமண வருணம், தனது உயர்வு நிலைக்கு எந்தப் பங்கமும் வந்து விடாமல் ஓர் உறுதிச் சமநிலையில் என்றென்றும் நீடித்திருக்க வேண்டும் என்ற தனது உள்ளார்ந்த வேட்கையை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பாரதி எழுதிச் செல்கிறான். பாரதியின் மெய்மை நிலை இவ்வாறிருக்க,

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்று பாடியதில் என்ன சிறப்பிருக்க முடியும்?

நன்றி - **"உயிர் எழுத்து"**

கட்டுரையின் ஒரு பகுதி சுருக்கமாக தரப்பட்டுள்ளது மிகுதி அடுத்த இதழில் வெளிவரும். கட்டுரை சம்பந்தமான உங்கள் கருத்தாடலை எதிர்பார்க்கின்றோம்.

---

## ரோஜா

**செல்வி. ஜெனிதா மோகன்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

நீயோ! மரபுக்கவிதையின் தலைவி
புதுக்கவிதைக்கு எதிரியல்ல
நீயோ! பூவுலகிற்கு கவியொளி
மலர்களின் அழகும் நீதான்

கவிதைக்கு முதல்வன் பாரதி
மலர்களின் முதல்வன் ரோஜா
பக்தனுக்கு இன்பம் பதியை சந்திப்பது
கவிஞருக்கு இன்பம் அழகு மலர் உன்னைக் காண்பது

உன் அழகில் மயங்காத பெண்கள் தான்
உண்டா? பாரினிலே
எத்தனை மலர்கள் வந்தாலும்
உன் அழகு தனி ரகம் தான்

உன் பெயரில் கவி புனைவது
இன்பமோ! பேரின்பம்!
தமிழ் அன்னைக்கு - ஆரம்
சூடுவோர்களில் நீயும் கூட விதிவிலக்கல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ

**உ. நிசார். மாவனல்ல**

வெற்றுப் பதர் சலசலக்க
தலை குனிகிறது
நெற்கதிர்
***
புல்லாங்குழலா
கைத்தடியா
முடிவு செய்வது மூங்கிலல்ல
***
சன்னலோடு உரசும்
திரைச்சீலைக்கு
காற்றோடு தான் காதல்
***
வெண்புறா கைகளில்
ஏலம் விடுகிறார்கள்
கழுகுகளை
***
அடிக்கத் தூக்கிய கையிலேயே
வந்தமர்கிறது
நுளம்பு
***
மரத்தைச் சுற்றிக்கொடிகள்
மூச்சுத் திணறுகிறது மரம்
பலதாரம்
***
தாமரை இலையில் நிற்க
தயங்குகிறது
தண்ணீர்த் துளி
***
பற்றிய மரம்
பட்டுப்போக
பரவசத்துடன் குருவிச்சை
***
முட்களோடுதான் வாழ்க்கை
முகங்கோணவில்லை ரோஜா
இசைவாக்கம்
***

**படைப்புகளில் வரும் கருத்துகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பினை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலும்புக் கூடுகளும்
## இரத்தம் நிரம்பிய குவளைகளும்!

தியத்தலாவ எச். எப். ரிஸ்னா

அடிக்கடி நான் மரணித்துப் போகிறேன்
இந்த உலகம் விசாலமானதாம்
ஆனால் விசேஷமாக எதையும்
நான் காண்பதில்லை!

ஒரு அமானுஷ்ய சக்தி எனக்குள்
ஊடுருவி விட்டதாகத்தான் உணர்கிறேன்!

ஊரடங்கு நேர வீதிபோல
வெறிச்சோடிக்கிடக்கிறது இதயம்!

கடலைப் பிளந்த நெருப்புக்குண்டமாக
மனசுக்குள்ளே ஒரு வித உருட்டுதல் சதாவும்,
என் ஆகாயத்திற்கு மட்டும் அஸ்தமனம் மீது
அப்படி என்னதான் காதலோ....?

பகலில் சூரியன் தன் அகோரப்பற்களைக் காட்டி
என்னைப் பயமுறுத்த
நான் நேசித்தவைகளெல்லாம்
வளர்த்த கையை - என்
குரல் வளையை நோக்கி நீட்டியதாகவே...!

மண்ணைத் தகர்த்துக்கொண்டு வெளிவந்த
எலும்புக் கூடுகள் இரத்தம் நிரம்பிய
குவளைகளுடன் உல்லாசமாக....!

எல்லோருடைய குப்பைகளும்
என் இதயத் தொட்டியில்
இடப்பட்டதாய் மாறுகிறது....
ஐயோ ...! ராட்சத கழுகொன்று
இதயத்தை கொத்திக் குதறி
ரணமாக்கிய வண்ணம்.

விஷ ஜந்துகளெல்லாம் என் மேனியை
முத்தமிட்டு, செந்நீர் பருகி
காமம் தீர்த்துச் செல்கின்றன!

ஓர் ஒளிக்கீற்றைக் கூட கண்டிராத
கானகமொன்றின்
நடுவில் சிக்கிய
கோழிக்குஞ்சாய் இப்போது நான்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்குறள்**

**சூசை எட்வேட், அன்புவழிபுரம்**

அறிவு மிகவிருந்தும் பயனற்றுப் போம்
மறதி மிகவிருந்து விடின்.

ααα

கருநாகமாய் மனையாள் உருவானால் புருடன்
கருடனாய் மாறுவதே இயல்.

ααα

பருவத்து உணர்வுகளை மதிக்காப் பெற்றோர்
உருவத்தில் மட்டுமே உற்றார்.

ααα

பெரிதுபடுத்தார் பணக்காரர் கப்பற் கொள்ளை
பரிகசிப்பார் ஏழைத் திருட்டை.

ααα

தாய்மையில் தூய்மைதான் சந்தேகமில
காதற்கற்பில்
நேர்மை உண்டோ பெண்மையில்.

---

## அவசரமில்லை ஆறுதலாக சொல்

**ஏ.ஆர். நவாஸ்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

உறவைக் கேள் - என்
ஊரைக் கேள்
உற்றுப் பார் - ஏன்
அந்த ஆண்டவனையாவது
கேட்டுப்பார்

நடந்த பாதையைக் கேள்
நான் ரசித்த - அந்த
வான் மேகத்தைக் கேள்
தேன் சிந்தும் பூவைக் கேள்
பூவில் மொய்க்கும் - கரு
வண்டைக் கேள்

உன்னைப் பார்த்ததும் பிடித்தது
ஆனால் - உன்
பதில் மட்டும் தான்
அடம் பிடித்தது

நன்றாக யோசி
நாணமின்றி யோசி
அவசரமில்லை
ஆறுதலாய் யோசி........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு போன கனவு

ச.ஜெயபாலன், நெடுந்தீவு

வறுமையே மல்லுக்கட்டி
தோற்றுப் போனது
உன் அழகைக் கண்டு
என் நினைவுகள் உனக்கென
உயில் எழுதப்பட்டவையா
கடிகார முட்களாய்
உன்னைச் சுற்றியே

கனவுகளில் நீ
புன்னகைக்க மறுக்கும் போதெல்லாம்
என் விழிகள்
அழுது வியர்த்திருக்கிறது

என் வெற்றிகளுக்கு
பின்னணி வர்ணமாய் நீ
தோல்விகள் மட்டும்
வெள்ளைத் தாள்களில்!
உன்னிடம் இதயத்தை
இழந்ததற்காய் வருத்தப்படவில்லை
ஏனெனில் என்னிடமிருப்பது
உனது இதயம்

## இனி ஒரு விதிசெய....

அருளானந்தி விஜயராஜ்
அன்புவழிபுரம்

தாவித்திரியும் மனமது
தவியாய் ஏங்கித் திகைக்குது
திரும்ப நினைக்கும்திசையெலாம்
சேதம் தானே தெரியுது
வாங்கி வகையாய் உண்டது
வசைக்கு என்று தெரியுமோ
நேசம் என்று நினைக்கையில்
துவேசம் கண்ணில் தெரியுது

நடந்து வந்த பாதையில்
தடயம் ஏதும் உள்ளதா?
மாரடிக்கும் நெஞ்சங்களின்
பாவச்சுமை குறையுதா?
கூறிடும் கொள்கைகள் இதுவரை
கொண்டு வந்ததென்ன கூறுமே
நாறிடும் உலகத்தை மாற்றியே
நாங்களும் ஒருவிதிசெய எழுவமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு குறு விமர்சனம்

**மாதுமையின் "ஒற்றைச்சிலம்பு"**
**(கவிதைத்தொகுப்பு)**

**பெரியஐங்கரன்**

"திறந்திருந்தது
என் புத்தகம்
தாண்டிச் சென்றவர்கள்
நின்று வாசித்தார்கள்"
.........................
எங்கிருந்தோ தாழப்பறந்து
வந்த பறவை
எச்சம் போட்டுப் பறந்தது
பறவையைத் துரத்தி வந்த
நாயொன்று
புத்தகத்தை கௌவிச்சென்றது"

தமிழ் இலக்கியபாட நூலில் இடம்பெற்றுள்ள மாதுமையின் இக்கவிதை படிமங்களும் குறியீடுகளும் கலந்து விளங்கி கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. புத்தகம் அசிங்கப்படுவதையும், பின்னர் கௌவிச்செல்லப்படுவதையும் இக் கவிதை வேதனையோடு சொல்கின்றது. இங்கு புத்தகம் என்பது படிமம். பலரது வாழ்க்கை அழிக்கப்படுவதையும் , அவஸ்தைப்படுத்தப்படுவதையும் இப்படிமம் குறிக்கிறது. இங்கு பறவை நாய் என்பன குறியீடுகள்.

இக்கவிதை இடம்பெற்ற "ஒற்றைச் சிலம்பு" இவரது முதலாவது கவிதைத் தொகுதியாகும். இவரது சிறுகதைத் தொகுதி ஒன்றும் ஏற்கனவே வெளிவந்துள்ளது. 35 கவிதைகள் அடங்கியுள்ள இக்கவிதைத் தொகுதி "உயிர்மை" பதிப்பக வெளியீடாக வந்துள்ளது.

**புலம்பெயர்ந்த ஈழத்தமிழ்ப்பெண் கவிஞர்களில் முக்கியமான ஒருவர் மாதுமை.** இவர் அதிகமான கவிதைகள் எழுதாவிட்டாலும் எழுதிய கவிதைகள் அனைத்தும் காத்திரமானவை கனதியானவை தமிழ் பெண் கவிதை மொழிக்கு ஒரு புதிய பங்களிப்பை கொண்டு வருபவை. இவரது கவிதைகள் பெண்ணின் அவலம் சுதந்திரம், காமம், தனிமை ஆணின் அடக்குமுறை, காமப்பசி ஆகியவற்றைப் பெரும்பாலும் பாடுபொருட்களாகக் கொண்டுள்ளன. தாய்நாட்டு யதார்த்தத்தை ஓரிரு கவிதைகள் பிரதிபலிக்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாக்கள் மட்டும்
ஒற்றுமையாய் இருந்தனர்
உலகத் துயரங்களைச் சுமக்க"

என்று முடிகிறது "இப்படிக்கு அம்மா" என்ற கவிதை ஈழத்திலும் போர் நடக்கும் ஏனைய நாடுகளிலும் தாய்மார்கள் படும் சோகத்தையும் தாகத்தையும் இக்கவிதை வரிக்குவரி படம்பிடிக்கிறது.

"கற்பழிப்புகளின்
எண்ணிக்கைக்குள்
வராமல்
கற்பழிக்க
கணவன் என்ற
அனுமதிப்பத்திரம்
உனக்கு மட்டும்
தந்தது யார்"




நேரடியாகவே கணவன் மாரைச் சாடுகிறது

"உன்னுள் இருந்த
மது போதை ஒருபுறம்
காமப்பசி மறுபுறம்
இரண்டின் வெளிப்பாட்டினில்
நீ புணரும் மிருகமானாய்"

என்ற கவிதை வரிகள் காமவெறியர்களுக்கு பெண் பலிக்கடா ஆக்கப்படுவதை அவமதிக்கிறது.

இவ்வாறு மாலதிமைத்ரி, குட்டிரேவதி, சல்மா, சுகிர்தராணி போன்ற தமிழகப்பெண் கவிஞர்களோடு ஒப்பிடக்கூடிய ஆற்றலும் கவித்துவமும் மாதுமைக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனாலும் பெண்களது காமத்தைப் பேசுவதும், ஆண்களது அத்து மீறலை அடக்குவதும் தான் பெண்கவிஞர்களது வேலையோ என்ற மனச்சங்கடத்தையும் மறைக்க முடியவில்லை.

தமிழக கவிஞர்களைவிட ஈழத்துக் கவிஞர்களுக்குப் பாடுபொருள் அதிகம். ஈழத்து வாசகர்களுக்கு தமிழகக் கவிஞர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளின் போதாமை அல்லது அதிருப்தி ஏற்படுவதற்குக் காரணம் இதுதான். இதைப்புரிந்து கொண்டு ஈழத்துக்கவிஞர்களும் புலம்பெயர் கவிஞர்களும் செயற்பட வேண்டும். தமிழகத்துப் பெண் கவிஞர்கள் போலல்லாது ஈழத்துப்பெண் கவிஞர்கள் தம்பார்வையை அகலவிரித்து பாடுபொருள் பரப்பை இன்னும் பலப்படுத்த வேண்டும். மாதுமை செய்ய வேண்டியதும் அதுதான்

தொடர்பு: த.சிவசுப்பிரமணியம்.
இல:9 2/3, நெல்சன் பிளேஸ்-கொழும்பு-06
பதிப்பகம் உயிர்மை இந்திய விலை **40/=**

---

## நீங்களும் எழுதலாம்...

(இருமாத கவிதையிதழ் (இலங்கை) ஓர் அறிமுகம்)

**பேனா.மனோகரன்.மதுரை**

இனமோதல்களால் சின்னாபின்னப் பட்டுக் கொண்டிருக்கும் என் அருமை இலங்கைத் தீவினின் கிழக்கு மாகாணத் தலைநகரமான திருகோணமலையில் இருந்து" **நீங்களும் எழுதலாம்"(தடைகளைத் தகர்த்து - தகவுகளைத் தேடி)** - இருமாத கவிதையிதழ் வைகாசி -ஆனி 2008 வாசிக்கக் கிடைத்தது. என்வாலிப வசீகரங்களை மறுபடியும் வாலாயப்படுத்தும் வாய்ப்பாக அமைந்தது.சுமார் 34 ஆண்டுகளுக்கு முன்பாக 1972இல் திருகோணமலை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற எழுத்தாளர் - கலைஞர் மாநாட்டில் நானும் பங்கேற்பாளனாக இருந்தேன்.

இந்த இதழின் படைப்பாளிகளான சபா.ஜெயராசா, ஷெல்லிதாசன் ஆகியோருடன் கவிஞர் சில்லையூர் செல்வராசன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் புதுவை இரத்தினதுரையின் கவிதையை விமர்சிக்கும் நிகழ்வில் நானும் கலந்து கொண்டது இன்னமும் பசுமையாகவே இருக்கிறது. கவிஞர் சில்லையூர் செல்வராசன் அமரரான தகவலுடன் கருத்தாடற் களத்தில் அவருடைய **"கற்றால் வருமோ கவித்துவம்"** என்ற கட்டுரைக்கான கலாவிஸ்வநாதனின் கட்டுரையை கண்ணீர் மல்கும் கண்களுடன் தான் வாசித்தேன். இதழின் இன்னொரு கவிஞரான சி.குமாரலிங்கம், இலங்கை வங்கியின் அனுராதபுரக் கிளையில் பணி ஆற்றியவர். என் சமகாலப் படைப்பாளி. இந்த இதழில் சுமார் 30 படைப்பாளிகளின் கவிதைகள், மரபுக் கவிதைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் என ஒருகவிதைக் கதம்பமாக மணம் கமழ்கிறது. இதழின் வடிவமைப்பு, புதுக்கவிதையின் எழுச்சிக் காலமான எழுபதுகளின் புற்றீசல்கள் போல் புறப்பட்ட கவிதையிதழ்களின் கட்டமைப்பை ஞாபகப்படுத்தியது. **கைக்கு அடக்கமாக, கச்சிதமாக இருக்கிறது.** ஓராண்டு முடிந்து, இரண்டாம் ஆண்டில் காலடி வைத்திருக்கும் "நீங்களும் எழுதலாம்"இருமாத கவிதை இதழ், கவிஞர்கள் விரிவுபடுத்த வேண்டிய பார்வை, பாடுபொருள் பற்றிய பிரகடனத்தை முன்வைத்து இருப்பது பொருத்தமானதாகும். "பயில்களம்" பகுதியில் மாணவக் கண்மணிகளின் கவிதைகளில் இரண்டு கவிதைகள் இப்போதும் நடந்து கொண்டிருக்கும் இனப்போரின் அவலத்தையும், வலியையும் கவித்துவத்தோடு வெளிப்படுத்துகிறது

பெரிய ஐங்கரனின் "கவிதையில் முரண் கோட்பாடு" கட்டுரை, தமிழக சீரியஸ் சிற்றிதழ்களின் கட்டுரைத் தரத்திற்கு வந்திருக்கிறது.கவிஞர்கள் சுந்தரராமசாமி, விக்ரமாதித்யன், சுகுமாரன் ஆகியோரின் கவிதைகளை மேற்கோள் காட்டி இருப்பது கட்டுரையின் களத்திற்கு உரம் சேர்த்திருக்கிறது.ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைப் போல "நீங்களும் எழுதலாம்"இருமாத கவிதை இதழ் கவிதைக்கான பயில்களம்,பரிசோதனைக் களம், காத்திரத்தின் களம், விளக்கக்களம், விமர்சனக் களம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே

தமிழக இதழ்களில் இலங்கைப் படைப்பாளிகள் தம் படைப்பனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதைப் போல, தமிழக இளம் படைப்பாளிகளும் இதுபோன்ற இலங்கை இதழ்களில் பங்கு கொள்வது பரஸ்பரம் இலக்கிய, கலாசார, சமூகப் பரிவர்த்தனையை முன்னெடுக்கும். தொடர்பு முகவரி: நீங்களும் எழுதலாம், 103/1, திருமால் வீதி, திருகோணமலை, இலங்கை, மின்னஞ்சல்: neenkal@yahoo.com. இதழாசிரியர்: எஸ்.ஆர்.தனபாலசிங்கத்திற்கு என் வாழ்த்தும் பாராட்டும்.

**நன்றி- "இனிய நந்தவனம்"**

-36-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பின் பெயரால்

எஸ். ஆர். தனபாலசிங்கம்

உறுதியான உடலிருந்தும்
உயிர் ஒரு நொடியில்
காவு கொள்ளப்படலாம்!
அன்றேல்............
கால்கள் கழற்றுப்படலாம்!
கைகள் அகற்றப்படலாம்!
ஏன்
கைகளும் கால்களும்
துண்டற அற்றுப்போகலாம்!
நிறைமாதக் கர்ப்பிணியின்
இரு கால்களையும் வெட்டியெறியலாம்!
புண்களில் தசைகள் அழுகுண்டு
புழுக்கள் விளையலாம்!
பச்சிளம் பிஞ்சுகளும்
படுகாயத்திற்குள்ளாகி
ஆதரவற்றுத் தவிக்கலாம்!
உடலெங்கும் எரிந்து எவரும்
அடையாளமிழந்து போகலாம்!
உறவுகள் தொலைந்தும் வேலியிடப்பட்டும்
உருக்குலையலாம்!

மரங்களை வெட்டிவீழ்த்தும்
மனப்பூரிப்பில்
கங்கணங் கட்டிக்கொண்டு
வேர்களை ஆகாயத்திலும்
தேடி அலையலாம்!

முகாம்களைப்பெருக்கி
முகவரிகளை அழிக்கலாம்!
நச்சுவாயுக்களின் நாற்றத்தில்
நாடு பாலைவனமாகலாம்!
எச்சங்கள் ஊனமுறுவது
என்றென்றும் தொடரலாம்!

ஒவ்வொரு கிளர்விலும்
இடப்படும் புள்ளிகளை
முற்றுக்கள் என்று
எடுப்பார் கைப்பிள்ளைகள்
குதூகலிக்கலாம்!

மீட்பர்களே!
நாம் சுமக்கும் சிலுவைகளால்
உங்களுக்கு
கதிமோட்சம் கிடைக்கட்டும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

எந்த நம்பிக்கையுமற்று கரைகின்ற நெருக்கடியான வாழ்வு. எனினும் இந்தக் காலத்தை பதிவு செய்ய வேண்டியதும் நம் பணியே. தாங்கள் இப்பணியாற்றுவதும் நமக்கு செயலாற்றத் துணிவைத் தருகிறது. அருமையான முயற்சி. இன்னும், இனிவரும் காலமும் தொடரவேண்டும்.

**அருளானந்தம் சத்தியானந்தம்**
**அரங்காலயா , வவுனியா**

"நீங்களும் எழுதலாம்" ஈழத்து இலக்கியப் பரப்பில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுவருவதையிட்டு பெருமிதமடைகிறேன்.

**கொற்றை பி.கிருஷ்ணானந்தன்.**

நீங்கள் அனுப்பிவரும் கவிதை இதழ்கள். கிடைக்கப்பெறுகின்றன நன்றி!
**"தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி"** உங்கள் இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறீர்கள். வாழ்த்துக்கள்! இலங்கையின் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் கவிதைக்காகவே அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிற்றிதழைத் தாங்கள் தொடர்ந்தும் வெளிக்கொணர்வது பாராட்டுக்குரியது. பழைய மற்றும் புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைக்கும் வகையில் உங்கள் சஞ்சிகை அமைந்திருக்கின்றது. நிச்சயமாக இச்சஞ்சிகை ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் என்று நம்பலாம். கவிதை பற்றிய ஆழமான கட்டுரைகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**அருட்பணியாளர் தமிழ்நேசன்**
**பதிப்பாசிரியர் "மன்னா" பத்திரிகை**

உங்களது இருமாத கவிதைஏடு இரண்டு பெற்றேன். பல மாதங்கள் தமிழகத்தில் இருந்ததால் உடன்தொடர்பு கொள்ளமுடியாமல் போனேன். இயல்பிலேயே நான் கவிஞன் அல்லன், இருந்த போதிலும் உங்களது முயற்சியை ஊக்கப்படுத்த வேண்டும். வாழ்த்த வேண்டும் அந்தவகையில் இனிய பாராட்டுகள்.

**மானாமக்கீன் கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் எழுதலாம்" 9ம் இதழில் எழுதியிருப்பவர்களை நோக்கினால் இதழின் விலாசம் பரந்துபட்டு வருகிறது என்பதை உணரமுடிகிறது.

9ம் இதழில், அஷ்ரபா நூர்டீன் எழுதிய "புதிய ஆத்திசூடி"கவிதைத் துறையில் புதிய நெத்தியடி! தீபச் செல்வனின் "இரவு மரம்" வித்தியாசமான பார்வை. ஏ.எம்.எம். அலியின் "துளைக்குள்ளே நுழைதற்குத் துடிப்பு" என்ற அங்கதக் கவிதைக்கு "அச்சாணி" என்று நச்சென்று தலைப்பு இட்டிருந்தால் நன்று. வாகரை வாணனின் "தமிழுக்காக" - கவிதை ஓட்டமும், மொழி அழகும் அருமை! அன்புவழிபுரம் சூசை எட்வேட்டின் "தெருக்குரல்" புதினமான சிரிக்குறள்! கவிஞர் அலியின் "உக்கிரப்பார்வை" உண்மையில் ஒரு அக்கறைப் பார்வைதான்.

இது ஒரு கவிதைசார் ஏடு என்பதால், ஆசிரியர் கருத்து, வாசகர் கடிதம் கருத்தாடல் போன்ற தலைப்புகளை விடுத்து புதுமையான நவீன தமிழ்ச்சொற்களை இடலாம். ஆசிரியர் கருத்தை கவிதைநடையில் எழுதலாம். ஆங்கிலத்தில் கவிதை பிரசுரிப்பதை தவிர்க்கலாம் தள அழகு கருதி தலைப்பு மற்றும் விடயங்களுக்கு எழுத்துருக்களை மாற்றலாம். "இருமாத கவிதை இதழ்" என்பதற்கு வேறு ஒரு கருத்தும் உண்டு. எனவே "துவி மாதக் கவிஇதழ்" என்று குறிப்பிடலாம்.

சில பக்கங்களின் அடியில் சிறிய இடம் மிஞ்சி விடுகிறதே என்பதால் அந்த இடங்களிலெல்லாம் ஆசிரியர் மூக்கை நுழைத்து ஏதோவெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க தேவையில்லை. எல்லா விசயத்தையும், தான் ஒரே பக்கத்தில் சொல்லி விடலாம். இடம் மிஞ்சும் பிரச்சினை கணனியில் இல்லைதானே!

10 வது இதழையும் கொணர்ந்து விட்ட ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கத்திற்கு நமது மனமார்ந்த பாராட்டுக்கள். அவரது தமிழ் உள்ளத்திற்காகவும், தமிழியல் முயற்சிக்காகவும்.

**தீரன்.ஆர்.எம்.நௌஸாத்-கல்முனை**

"நீங்களும் எழுதலாம்" கவிதை இதழின் இரண்டு வெளியீடுகள் கிடைத்தன. கவிதை தொடர்பான ஆக்கங்களும் தகவல்களும் உள்ளன. அவை ஆய்வுக்கு உபயோகமாக இருக்கும்.

**அன்பு ஜவஹர்ஷா-அனுராதபுரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் பெயர்ப்பும்

## THE SHEPHERD

How sweet is the Shepherd's sweet lot!
From the morn to the evening he strays;
He shall follow his sheep all the day,
And his tongue shall be filled with Praise.

For he hears the lamb's innocent call,
And he hears the ewe's tender reply;
He is watchful while they are in Pease,
for they know when their Shepherd is nigh.

**ஆங்கிலத்தில்: வில்லியம் பிளேக்**

## மேய்ப்பன்

மேய்ப்பனின் புல்வெளி எவ்வளவு அழகானது
உதயம் முதல் அந்திவரை
அவன் அலைகிறான்
நாள் பூராக அவன் மந்தைகளை
பின் தொடர்கிறான்
அவன் நாவில் நிரம்பி உள்ளதெல்லாம்
மந்தைகள் பற்றிய புகழுரைகளே
ஆட்டுக்குட்டியின் வஞ்சகமில்லா அழைப்பை
அவன் செவிமடுக்கிறான்.
தாய் மந்தையின் மென்மையான பதில் குரலை
அவன் கேட்கிறான்
**தன் மேய்ப்பன்**
**அருகில் இருப்பதை அறிந்து**
**அவை அமைதியாக உள்ளபோதும்**
**அவன் காவலில் அக்கறை குறையவில்லை.**

**பெயர்ப்பு : வைரமுத்து சுந்தரேசன்**
நன்றி பிளேக் கவிதைகள்

"நீங்களும் எழுதலாம்" இதழை கணினி மயப்படுத்த உதவிய ஆர்.நித்தியா (EDGE NET Cafe உவர்மலை), அவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய அஸ்ரா பதிப்பகத்தினருக்கும் "நீங்களும் எழுதலாம்" தனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது.

ISSN 1800 - 3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி - சித்திரை
2009

# நீங்களும்
# எழுதலாம்

நீங்கள் -02 எழுத்து -11



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

**இருமாத கவிதை இதழ்**

NEENKALUM EZHUTHALAM
( Poetry Magazine)

விலை 25/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-11

**இருமாத கவிதை இதழ்**

மார்ச்-ஏப்ரல்-2009

**ஆசிரியர்**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

**படைப்பாளிகள்**

எஸ்.பாயிஸா அலி
தமிழேந்திரன்
புவி லக்ஷி
உமா துரைராஜரட்ணம்
சீனா உதயகுமார்
புசல்லாவை கணபதி
ஜெயா தமிழினி
எஸ்ஹும்சா
வி.கௌரிசங்கர்
கவித்தா நிஷாம்
வி.முகிலன்
ஷெல்லிதாசன்
உ.நிசார்
ஜின்னா ஷரிபுத்தீன்
வேல் நந்தன்
எஸ்.புஸ்பானந்தன்
சுஸானா முனாஸ்
கண.கிருஸ்ணராஜன்
எல்.வஸீம் அக்ரம்
கலா.விஸ்வநாதன்
ஆ.றோபர்ட் யூட்
ர.ஜோயல் ஜைரஸ்
பாரதி புத்திரன்
ஏ.எம்..எம்.அலி
எம்.எஸ்.பாஹிரா
சூசை எட்வேட்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

கருத்தாடற்களம்
* தீரன் மூட்டிய தீ -ஏ.எம.எம்.அலி
* பாரதி ஒரு சர்ச்சை

அறிமுகக் குறிப்பு : நமது இதழ்கள் சில
IBC வானொலிக் குறிப்பு
வாசகர் கடிதம்.

மூலமும் பெயர்ப்பும் - சோ.பத்மநாதன்
கே.எஸ்.சிவகுமாரன்

**வடிவமைப்பு**

**எஸ்.யசோதரன்**

**கே.மாக்ஸ்சிறிராம்**

**அட்டைப்படம்**

**ஓவியர்.கே.சிறீதரன்**

**தொடர்புகளுக்கு,**
**'நீங்களும் எழுதலாம்'**
**103/1,திருமால்வீதி, திருகோணமலை.**
**தொ.பே: 026 2220898/0778812912**
**E-mail:-neenkal@yahoo.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தை வென்றிட

தாம் வாழும் காலத்து சமுதாய ஒழுங்கினை விமர்சன ரீதியாகப் பார்த்து காலத்தைக் கடந்து எதிர்கால நோக்கில் சிந்தித்த பெரியோர்களின் பட்டியல் கவிஞர்கள், சித்தனாவாதிகள், கண்டுபிடிப்பாளர்கள், நாட்டுத்தலைவர்கள்... என நீளும்.

அந்த வகையில் ஒரு நாட்டில் தலைவர்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் சமூக அமைப்பு முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லன. ஒரு சில தலைவர்களைத் தவிர எமது நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான தலைவர்களும், தலைமைப்பீடத்தில் இருப்பவர்களும் தீர்க்கதரிசனமாக சிந்தித்தவர்கள் - சிந்திக்கின்றவர்கள் எனக் கூறமுடியாது. **குறிப்பாக ஏகாதிபத்திய, மேலாதிக்க முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான தெளிவான நிலைப்பாடின்மை** அல்லது அற்ப நலன்களுக்காக அடிபணிந்து போகின்றமை போன்றவை மோசமான விளைவுகளுக்கு காரணமாயின எனலாம்.

மேலும் இவை பற்றிய (இவற்றின் தாக்கம்) புரிதலின்மை காரணமாக இலங்கையின் வரலாற்றில் நியாயமான பல போராட்டங்களும், தியாகங்களும் மழுங்கடிக்கப்படுகின்ற ஒரு நிலைமை தொடர்கிறது. சாராம்சம் என்னவெனில் இலங்கையராகிய நாம் அனைவரும் பல்வேறு வழிகளிலும் பலவீனமடைந்து கொண்டிருக்கிறோம் என்பதே.

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவன் வள்ளுவன். இராம இராச்சியத்தைக் கனவு கண்டவன் கம்பன். குடிமக்கள் இராச்சியத்தை ஆராய்ந்தவன் இளங்கோ. கட்டிய தழையெலாம் சிதறுக என்றவன் பாரதி. அந்தவகையில் மானுடம் வென்றிட
நீங்களும் எழுதலாம்

**அன்புடன் ஆசிரியர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மொழியும் என்மொழியும்

நிலவில்முகிழ்த்தமணித்துளியாய் என்
முதற்பேரன் மண்ணுக்கு
முகங்காட்டிய திருநாள்!
நுரையீரலையே புரட்டிப்போடும்
டெற்றோல்நெடி,மருந்துமாத்திரைமணம்.
கூடவே....
வெள்ளைத்தேவதைகளின் விரட்டல்கள்.
எவற்யைுமே பொருட்படுத்தாது
அந்தப்பிரசவஅறை
கதவோரம் சாய்ந்திருக்கிறேன்
கைகளில் வெந்நீர்ப் போத்தலும்
கண்களில் கண்ணீருமாய் நான்
.புனர்ஜென்மம் பெற்று வந்த
பூரணத்தோடு மரு(று)மகள்.....எனினுமவள்
மறுகட்டிலில் அவளின் அகவையொத்த
இன்னுமொருசின்னப்பூ!
பாதி வியர்வையிலும் மீதி
குருதியிலும் குளித்த உடலோடு
போராடிக்கிடக்கிறது இந்தப்
பொல்லாத பூமியிலே தன்னைப்படைத்தவன்
இப்பரிதாப வேதனைத் தனக்காய்க்
கொடுத்தவன் - அந்த
நாயகனவன் நாமங்கள் மொழிந்தபடி.
முழங்கால் மடக்கி மூச்சுப் பிடிப்பதும்
பின் சோர்ந்து வீழ்ந்து முனகுவதுமாய்....
முக்கால் மணிநேரபோராட்டத்தின் இறுதியிலே
செவிப்பறையை நனைத்து நிறைக்கிறது
அறையையந்த குட்டிக்குரல்
"அல்ஹம்துலில்லாஹ்"....!
அத்தனை இதயங்களினதும்
ஆறுதல் பெருமூச்சுக்களினூாடே..
அவளழகில், அவள் கலரில்
அழகியதோர் குட்டிரோஜா
கட்டிலில் காலடித்தபடி!
அறைவாசலிலோர்
ஆணுருவம் நிழலாட நிமிர்கிறேன்.
கையிலோ சிறுபொதி, பார்வையோ
உள்ளே பரம்பியபடி.....

அவள்பெற்றதன்
முதலெழுத்துக்குச் சொந்தக்காரன்போலும்.
கட்டியவள் கஷ்டம் வேதனை ,விசும்பல்...
எதனையுமே எண்ண மறந்தவனாய்
"என்னபிள்ளை?என்னபிள்ளை?"என்கின்றான்.!
அவன் வாரிசு வளரத் தன்னுடலையே
நிலமாக்கி ,உதிரத்தையே உரமாக்கியவள்
தன்தசையிலே இழைதிரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையைத்தறியாக்கி, அவன்பேருக்குத்தன்
உயிரிலேயே உயிராடை நெய்தவள்....
தன் சாக்கணத்து சாதனையுணர்ந்தே
தலைகோதித் தாங்கிடுவான்
முகமேந்தியே முறுவலிப்பான்
ஆறுதலாய் அன்பு மழைபொழிவான்
என்றெல்லாம் எண்ணியிருந்தாளோ
என்னவோ..... ! "என்னபிள்ளை" என்ற
விறைப்பான வினாவுக்குள்ளே
விக்கித்துத்தான் போனாள்.
பதில்காணாது, தங்கத்தோள்
போர்த்திருந்த போர்வை மெல்ல விலக்கியவன்
தேள் கொட்டியவன் போலானான்
விஷமேறித் தானுமே தேளானான்
"ச்சீ..இதுவுமா...?"உதடுகள் மொத்த வெறுப்பையுமே
காறியுமிழ.....
கோபமாயுதறுகிறான் விரல்களை!
பொதியாகிக் கிடந்த ஆப்பிளும் ஹோர்லிக்ஸும்
நொருங்கிச்சிதறின
அந்தக் கண்மணியின்
கண்ணாடி மனசுபோலே.
யுகம்யுகமாய்......
பெண்மையின் தேசியமொழியாகிப்போன
கண்ணீர் மட்டுமேயவள்
குனிந்த கண்களுக்குள்!
வாய்திறக்க, அவளோ....
உறைநிலை மௌனச்சிலையாய்....!
நானோ கொதித்துப்போகிறேன்.
உணர்ச்சிகள் கொப்பளித்தென்
சர்வ நாடிநரம்புகளுமே
புடைத்துப்போக -
"அட முட்டாளே உனக்குப் பிறக்கப்போவது
ஆணா பெண்ணா என்பதனை
உனதானதே தீர்மானமிட
அப்பாவியாம் அவளைச்சாடுவதில்
லாபமென்ன கண்டாய்?" என
உரக்கக் குரலிடுகிறேன்.
எனினுமென்
குரல்வளை பிறப்பித்த அந்த ரீங்காரம்
குரல்நாணைக்கூட
அதிர்த்தும் ஓர்மமின்றியே
மெல்லத் தணிந்தடங்கிற்று - என்
தொண்டைக்குழிக்குள்ளேயே....!

**கிண்ணியா எஸ் பாயிஸா அலி.**

ஆக்கபூர்வமான விமர்சனங்கள்
கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் நானும் இரண்டல்ல

விழிகள் இரண்டாகிடிலும்
பார்வை ஒன்றே - அவ்வாறேதான்
இந்து முஸ்லிம் வேறெனிலும்
இயல்பு ஒன்றே.
இதைத்தானே எங்கள்
இலக்கியப் பேராசான்
பெரியதம்பிப் புலவர்மணி

"இருதயத்தின் ஈரிதழ்கள்
இந்துமுஸ்லிம்" என்றார்.
ஏன்மறந்தோம் நாமதனை
இன்றுதுயர்ப் படுகின்றோம்

பேரளவில் நீ தமிழன்
நான் முஸ்லிம்.
பேசுமொழி பண்பாடு
கலாசார ஒற்றுமையால்
நான்வேறு நீவேறா
நமக்குள்ளே ஏன் பிளவு!

ஒன்றாக உண்டு
ஒன்றாகத் தமிழ்கற்று
ஒன்றாகச் சேர்ந்து
ஓடிவிளை யாடி
வாழ்ந்தவர்கள் நாங்கள்
வரலாறு பேசுவது.

இல்லையென்று சொல்லு
இயன்றால் மறுத்துப்பார்
உன்
இதயமே அதற்கு
ஏற்ற பதில் சொல்லும்.

ஏனடா அண்ணே!
இரண்டானோம்
"காக்கா"என்றென்னை நீ
கூப்பிட்டாய்
பொருளென்ன?
அண்ணேதான் காக்கா
காக்கா தான் அண்ணன்
இல்லையென்று சொல்லு
இயன்றால் மறுத்துப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் இதுதொடர
வா நாங்கள் ஒன்றாவோம்
ஒன்றாக உண்டு
ஒன்றாகக் கற்றுணர்ந்து
ஒன்றாகச் சேர்ந்து
ஓடிவிளை யாடி
முன்போல வாழ்வோம்

-ஜின்னாஹ் ஷரிபுத்தீன்-

**காலனே கவனமாயிரு..!**

காலனே கவனமாயிரு..
குருதி குடிக்கின்ற உனது
குருட்டு தனத்தை உடனே நிறுத்து...
ஓ.... ஊழை பிடித்த
மூளையில்லாத கோழை உனக்கு
நாங்கள் விடுகின்ற
இறுதி எச்சரிக்கை இது
"காலனே கவனமாயிரு..!

உனது கண்மூடித் தனங்களை
மண்மூடி மறையவை
மண்ணிலே இன்னும்
காவாலித் தனங்களையும்
கழுதைக் குணங்களையும்
காட்ட வராதே
கட்டறுத்துப் பாயாதே
கட்டளையை மீறாதே..?

எங்களது இருப்பிடங்களுக்குள்
அத்து மீறி நுழையவும்
அடாவடித் தனங்களைக் காட்டவும்
ஆர் ஆணையிட்டது?
எங்களின் சுதந்திரத்தை
உன்னை யார் சுரண்டச் சொன்னது?
உனது கையிலே இருக்கும் கயிற்றை
உனது கழுத்துக்கே எறி...?

-தமிழேந்திரன் -

*கவிதை சம்பந்தமான குறிப்புக்கள் கட்டுரைகள் விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழிபெயர்ப்புக் கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன சொல்லிப் பாடுவது

என்ன சொல்லிப்பாடுவது
ஏது சொல்லிப்பாடுவது
சொற்கள் கூடசோபை இழந்து
சொந்தம் கொண்டாடமுடியாத
மௌன வெளியில் நின்றபடி
என்ன சொல்லிப் பாடுவது
ஏது சொல்லிப்பாடுவது

நாளும் பிணக்குவியலாகும்
வாழ்வுக்குள் நின்றபடி
உருகி வழியும் உணர்விலும்
உச்சரிக்க முடியா வலியிலும் நின்றபடி
என்ன சொல்லிப் பாடுவது
ஏது சொல்லிப்பாடுவது

காதலின் புனிதமும் வீரத்தின் வீரியமும்
பாடியது ஒரு காலப் பற்று!
பைந்தமிழின் பொற்காலம்
அறநெறியும் போதனையும் பக்தியும்
ஆண்டது எம்மை ஒரு காலம்
அது அன்புநெறிக்காலம்
காப்பியங்களாகி (எம் வாழ்வு)
கர்வமுற்றிருந்தது ஒரு காலம் பின்
சிற்றிலக்கியமாகி சிறுகதை நாவலாகி
சிறந்தது ஒரு காலம்
புதுக்கவிதையாய் கனன்றது ஒரு காலம்
அன்றெல்லாம் பூக்களைப் பாடினோம்
புதுமைகள் தேடினோம் இன்றோ
கண்ணுக்கு முன்னே ஈரமில்லாக்காட்சி
மண்ணுக்குள் அகதிகளாய் அலைந்தபடி
கண்டதே காட்சியெனப் போய்விட்ட
எம் வாழ்வில் காணாத காட்சிகளின்
(மரண) அரங்கேற்றம்
என்ன சொல்லிப் பாடுவது
ஏது சொல்லிப்பாடுவது

இயற்கை கூட இரக்கம் இழந்தபடி
உலகம் கூட உறக்கத்தில்
அறிக்கைகள் மட்டும் விட்டபடி
நாளும் உயிர்வாழும்
மரண வெளியில் நின்றபடி
என்ன சொல்லிப்பாடுவது
ஏது சொல்லிப்பாடுவது

**புலோலியூர் வேல்நந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதறல்

உன்னை
சிந்திக்கத் தொடங்கியதும்
என் எண்ணங்கள்
சிதறிவிட்டன

உன் ஓவியத்தை
வரையத் தொடங்கியதும்,
வண்ணங்கள் மாறிவிட்டன
எத்தனை தடவைகள் - அதில்
எத்தனை சிதறல்கள்

என்னுள் ஆயிரம் ஆயிரம்
வெப்பக் கனல்கள்
வெளிப்பட்டுத் தெறிக்கின்றன.
உன் இம்சைகளால்
என் இதயம்,
சல்லடையாகின்றது
ஆயினும்
உன்பார்வைச் சிதறல்
பட்டுத் தெறிப்பதால்
என் நெஞ்சம்
அழகாய் வலிக்கின்றது

**- புவிலக்ஷி , பெரிய நீலாவணை**


களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்

கவிதைக்கான.......
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின்களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்
நீங்களும் எழுதலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கும் இருளாய்...

சுழலும் கோளப்போலியில்
சுருங்கிப் போனது சுந்தரக்காலம்

சோபன ஜீவிதக் கனவுகள் கருக்கி
தூஷனம் செய்தது துயரத் தேசம்-
நெஞ்செலாம் கூட கடுந்தணல் மூண்ட
83 ஆடித் திங்களிலிருந்து.
சிரிப்புக்கு அழுதோம்
அழுகைக்கு சிரித்தோம்
கால் கை கட்டி வாயைப் பூட்டி
கவலைத்தடத்தில் சீவியம் ஓட்டினோம்.

பீதி இருளில் சுயங்கள் தொலைத்தோம்!
இல்லைக்கு ஆம் என விடைகள் மொழிந்தோம்!

பிரிந்தோம் பிரிந்தோம்
பிரிந்து சிதைந்தோம்!

வீதிக்குழிகளை நிறைக்கும் குருதி
நேற்றாய் இன்றாய்
நாளையும் தொடரலாம்.

எங்கும் இருளாய்......
எல்லாம் துயராய்.....

எஸ்.புஸ்பானந்தன்-மண்டூர்

## நாங்கள்

முகம் இருந்தும்
மறுக்கப்பட்டவர்கள்
முகவரி இருந்தும்
தொலைக்கப்பட்டவர்கள்
உறவுகள் இருந்தும்
பறிக்கப்பட்டவர்கள்
உறுப்புக்கள் இருந்தும்
இழக்கப்பட்டவர்கள்
சந்ததி விருத்திக்கும்
சதி செய்யப்பட்டவர்கள்
உணர்வுகள் இருந்தும்
ஒடுக்கப்பட்டவர்கள்
சவச்சாலையிலும்
சிறைவைக்கப்பட்டவர்கள்
ஏனெனில் நாங்கள்........?

உமா துரைராஜரட்ணம். திருமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமைக்காய்

வார்த்தைகள் என்னில்
வரமறுத்துக் கொண்டன
எழுதுகோல் ஒழுங்கின்றி
எகிறிக் கொண்டன
உடல் உறுப்புக்கள் தளர்ந்தன
உதிரம் உலர்ந்தது
சிந்தனைகள் ஒருமுகப்படா
சிதறடிக்கப்பட்டன
கண்கள் விழிக்க முடியாதவாறு
கண்ணயர்ந்தன
சொந்த பந்தங்களின்
சொள்ளல் கதைகள் பல
சொந்தமாக விருந்தவர்
சொத்துச் சுகமில்லாததால்
சொந்தத்தில் இல்லையென
சொல்லக் கேட்டவனாய்
இவ்வுலகில் என்னைப் படைத்த
இறைவனை நொந்தேன்
இத்தனைக்கும் எஜமானாகிய
இல்லாத நிலைகொண்ட
வறுமைக்காய்

**கணகிருஷ்ணராஜன்**

## இருட்டு வாழ்வு

சொல்லால் வடிக்க வொண்ணாத் துயரம் -
அங்கே
சொல்லால் தெறிக்கின்ற உதிரம்
பொல்லாப் போர் மேகம் சூழும் - இந்தத்
தொல்லை எப்போதிங்கே போகும்.

கண்கள் வடிக்கின்ற கண்ணீர் - நெஞ்சைப்
புண்ணாய்ப் பிளக்கின்ற செந்நீர்
மண்ணாய்ப் போகின்ற வாழ்வு - இதை
எண்ணிப் பார்ப்போர்தான் யாரோ....

கதியற்றோர் வாழ்வைச் சுருட்டும் - இந்த
மதிகெட்ட போரின் பொருட்டும்
எதிர்காலம் மனதை வெருட்டும் - இது
விதியென்றே நெஞ்சம் இருட்டும்

**-மூதூர் சுஸானா முனாஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓளிக்கும் ஒளி........!

மேசை மின் விளக்கும்
என் மகனும்!

மின் குமிழும்
என் அம்மாவும்!

வர்ணத்தொலைக்காட்சியும்
என் மனைவியும்!

நாளாந்தம்
அவர்..!அவர்..!
கடமைகள்
அவர்களுடன் படியவைக்கும்.

ஒளிரும் ஒளியும்
சலன ஓட்டமும்
இடையிடை அணையும்
இடையிடை நிற்கும்....!

பரீட்சைக் காலம்
நெருங்க
கேள்வியாகிறது எதிர்காலம்
வெறுத்து ஒதுங்குகிறான்
என் மகன்!

இரவு உணவு
அம்மாவின் கைகளில்
பிள்ளையின் பசியுணர்ந்து
துடித்திருந்தாள் என் அம்மா!

தொடரும்!
பெண்களின் வக்கிரங்கள்
தொடர்களில் தொடர்கின்றன
இன்னும்
எதைவேண்டி
பார்த்திருக்கிறாள்
என் மனைவி

இப்படியேதான்
நாளையும் தொடரும்
என் வீட்டு அவலங்கள்.!

**சீனா. உதயகுமார் "சமரபாகு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீயும் நானும் அல்லது நாம்**

மிக முக்கியமான ஒரு பொழுது
சாளரத்தின் திரைச்சேலை அசைகிறது

கிளர்ச்சியின் வேட்கையில்
கலவியின் தூவானம் வீச
ஈரம் சேர்ந்து உலாவுகிறது

எச்சம் மச்சமாகி மிச்சமாகியது

இரத்தம் பிசுபிசுத்தது

வியர்வையின் துர்வாடை
கட்டிலில்
கழிவறையில்

**எனக்கு சொந்தமான உறவு**

பெரும் பீதியின் நடுவே
ஒரு இடைவெளி
மௌனத்தில் நடக்கிறேன்

நேற்றுவரை
எனது உணர்வுகள்
எந்த அடைப்புகளுக்குள்ளும் நில்லாது
நடந்தன.

மாயைகளை விழுங்கியபடி
காற்றும் நட்சத்திரமும்
வானமும் காதலில்
நனைந்தன

எனக்கு சொந்தமான
உறவு வந்துகொண்டிருக்க
எனது பார்வைகள் தாழ்ந்து
மயங்கின

**-எல்.வஸிம் அக்ரம்**

அறிமுகக் குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பிவையுங்கள். 2007ற்கு முன் வெளியானவை அறிமுகக் குறிப்பில் இடம்பெற மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வதற்கான அழைப்பு

எங்கள் புலம்பல்கள்
வாசிக்கப்படாத
கவிதையாய்

மனித மாமிசம்
கொத்தித் தின்னும்
காக்கைகள் போல்
சாக்கடை தலைமைகள்
சலவைக்கு போய்வரும்
கட்சிக் கொடிகள் - எம்
கண்ணீர் துடைக்கும்
கைக்குட்டைகளா?

பொய்த்துப்போன
வாக்குறுதிகளுக்கு மட்டும்
புள்ளடி போட
அவசியமாகிபோன
எழுத்தறிவு வீதம்!

கூடைதூக்கியே
கூன்விழுந்த மலையக
குமரிக்கிழவிகள்!

வாழும் உரிமைக்காய்
கௌரவமாய் கைமாறும்
லஞ்சப்பணமாய்
மாதாந்த சந்தா!

வா! இனியும் வேண்டாம்
இருளை விரட்ட ஒரு தீக்குச்சியாய்
இணைவோம் நாம்!

-புசல்லாவை கணபதி-

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்.
வருட சந்தா 200/=
**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank, Trincomalee**
என வைப்பிட்டு பற்றுச்சீட்டை
அனுப்பிவைக்கவும்
வெளிநாடு US $ 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்ன சுவாசம்

ஊர்
கெட்டுப் போய்
கிடக்கிறது!

நல்ல மனிதர்களை
தேட வேண்டியிருக்கிறது.
வல்ல மனிதர்கள்
ஆளையாள்
அடித்துக் கொண்டு
அழிகிறார்கள்!

பொது நலப்பணி
போர்வையாளர்கள்
மனதெல்லாம்
சுயநலநெருப்பு

ஆட்சியை பிடிக்க
அடிபடல் ஓயவில்லை
ஜனநாயகத்திலும்
போர்க்குணம்

மனித மனங்களில்
ஆசை அமைதியை
தின்று விடுகின்றது.

நடுநிழல் ஞானிகள்
நிம்மதியாய்
மூச்சு சுவாசம்
செய்கிறார்கள்!

நச்சுக்காற்றை விலக்கி,
அமிர்தக்காற்றை மூடி,
அன்ன சுவாசம்
அமைதியாய் நிகழ்கின்றது.

-கலா விஸ்வநாதன் -

கடிதவழி தனி இதழை பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும். வருட சந்தா 200/= (தபாற்செலவு உட்பட) அனுப்பவேண்டிய தபாலகம் திருகோணமலை முகவரி எஸ்.ஆர்.தனபாலசிங்கம் 103/1 திருமால் வீதி,திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணியம் மலரட்டும்

உழைப்புக்கேற்ற ஊதியத்தில்
தகுதிக்கான பதவியில் - உள்ள
உணர்வுகளை மதித்தலில்
பெண்ணியம் மலரட்டும்

சட்டங்கள் ஆக்கவும்
திட்டங்கள் தீட்டவும்
பட்டங்கள் பல பெருக்கிடவும்
பெண்ணியம் மலரட்டும்

சிவனும் சக்தியும் இணைந்திட்ட
சரிபாதி வடிவமது போல்
வாழ்வின் இன்ப துன்பங்களில்
பொருளாதார நெளிவு சுழிவுகளில்
குழந்தை செல்ல வளர்ப்பினில்
பெண்ணியம் மலரட்டும்

அரைகுறை ஆடையிலுள்ள
விளம்பரக் காட்சிகள் ஒழித்தலில்
அகராதியில்லா அர்த்தமற்ற
பெயர்களை அழித்தலில் - போர்த்
தாக்கத்தின் கோரப் பிடியகலலில்
பெண்ணியம் மலரட்டும்.

வாலிபமெனும் வாழ்வின் வாசற்படிதனில்
வழுக்கி விழும் புத்தம்புதிய
பண்பாட்டுச் சீரழிவை பறைசாற்றும்
ஆண் பெண் நட்புக்கலாசாரத்தை
அடியோடு வெட்டிச் சாய்ப்பதில்
உறவுகளை வளர்ப்பதில்
உயர் குடும்ப அலகை காப்பதில்
எமதான பெண்ணியம் மலரட்டும்

**ஜெயாதமிழினி - திருகோணமலை**

**வாசகர்களே,**
நீங்களும் எழுதலாம் இதழின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள்.அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயில்களம்

### நல்வாழ்வு

பிறரன்பில் நீ வாழ்வாய்
அக்கணம் உன்னை சமுகம்
பால் என்னும், தேன் என்னும்
தெவிட்டாத சுவை என்னும்

ஊரெல்லாம் உலகெல்லாம்
பாரெல்லாம் படைப்பெல்லாம்
உன்நாமம் பாடும்

மாறாய் தவறுகள் புரிந்தால்
தவறிப் போவாய் - பிளவுகள்
கொண்டால் பிளவுண்டு போவாய்
நட்பினை விடுத்தால் நலந்தனை
இழப்பாயே!

ஆசைகள் அதிகம் கொண்டால்
அன்பினை இழப்பாய்
நீதியை நீ மறந்தாய்
நிஷ்டூரமாவாய் - ஒளிதனை
வெறுத்தால் இருள்தனில் வாழ்வாய்

**அ.றோபட்யூட் - கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை கல்முனை**

---

### வெண்கட்டி

வெண்ணிற உடை உடையவளே - உயிர்
வேட்கை தணித்தவளே
வானவில்லின் வண்ணங்களை - தன்
வதனத்தில் தீட்டியவளே.

பள்ளிக்கு வந்தவளே - பல
பாடங்கள் கற்பித்தவளே
வகுப்பறையில் உனை மிதிக்கும் -
மாணவரை
வாடாமுகத்தோடு வரவேற்பவளே.

வள்ளல் எனக்கூறவா? பல
வாசமிகு மலர் தூவி வாழ்த்தவா?
கள்ளமில்லா நெஞ்சோடு - எமை
காலமெல்லாம் நினைப்பவளே.

**எஸ்.ஹம்சா - தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் மாற விரும்பா பள்ளிப்பருவம்

அன்றொரு தினம்
ஒரே கணம் விழிதிறந்து
பார்க்கையில்
அன்னையின் மடியில்
தவழும் சில நொடியில்
கண்டேன் ஒரு புது விடியல்

ஆசான் சொல் வேதமென
புதுயுகம் படைத்திடவே
ஒன்று திரண்டோம்
சாதனைகள் படைத்தோம்
பருவங்கள் மாறினாலும்
தொடர்கின்றன பள்ளிப்பருவத்தில்
சாதனைகள்

காலங்கள் கடந்தோட
கல்வியும் எம் மனதில்
ஊற்றெடுத்தோடவே
மனம் ஏங்குகிறது
என்றும் நிலைநிற்க
மாற விரும்பா பள்ளிப்பருவத்தில்

**ர.ஜோயல் ஜைரஸ் - கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை கல்முனை**

## கொடுமை அது (வா)

ஐயோ அம்மா
என் குடையில் கூட
கறுத்த சீலை வேண்டாம்
அது நீதிபதியிடமும்
சட்டத்தரணியிடமும் தான்
சாட்சியுள்ள விடியல் வரை
இருக்க வேண்டும்.
தண்ணீரில் கிடக்கும் பாம்பை
மனிதன் உடலுக்கென்றே
உரிமை கொள்வான்
ம்...ம்... நாகத்தை உலவவிட்டவன்
பைத்தியக்காரன் தான்
நிச்சயம் ஒரு நாள்
அதன்வாய் மௌனமாக்கப்படும்
பின்நாளில் - தண்ணீப்பாம்புகள்
தமது வால்களை நிமிர்த்தி-
மின்மினிப்பூச்சிகளை தோற்கடித்து
எல்லா வீதிகளிலும் வீடுகளிலும்
இருட்டிலும் உலவித்திரியும்

**வி.கௌரிசங்கர் தி/செண்ஜோசப் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 9இல் பெரிய ஐங்கரனின் சிலையாதல்
கவிதைக்குப் பதில் கவிதை

**சிலை செய்ய நான் வருவேன்.**

உறவாடும் உயர் தோழா...
உற்ற நண்பா.....
"உயிர்வாழ்தல்" ஐ வெறுத்து
"சிலையாதல்" ஐ
விரும்பி நின்ற உந்தன் செய்தி
விழிநீரைச் சுண்டி
வெந்த மண்ணில் விட்டதடா..
நொந்த மனத்தை இன்னும்
நோக்காடு அடைய வைத்ததடா...
கவலையைக் கைவிடு
கண்களைத் திற....
இடியும் முழக்கமும்
கொடிய மழையும் வெய்யிலும்
முதலிலே நிற்கட்டும்...
தடை தாண்டி நடைபோடு
தலைநிமிர்ந்தே என்றும் நில் .....
உன் சிலையைச்
செதுக்குதற்கு
ஓடோடி வருவேன் நான்....
என் உளிக்கரத்தால்
உன் உருவம் முழுவதையும்
உள்ளபடியே செதுக்குவேன் நான்....
அதனால் நாளை நீயும்
உயர்ந்ததோர் சிலையாக
உருவாக்கம் பெறுவாய்.

**பாரதி புத்திரன் -பாண்டிருப்பு**

## வாழ்வின் கடமை

காலத்தின் கையில்
வாழ்க்கைக் குட்டிக் குழந்தை
தவழ்ந்து கொண்டு இருக்கின்றது
அர்த்தமுடைய மானிட வாழ்க்கையில்
பக்குவப்படுத்தலுக்கான
பயணமோ நடந்து போகிறது.
இந்த வனாந்தரத்தில்
புண்பட்ட நெஞ்சங்கள்
வஞ்சனையுடன்
செத்து மடிகின்றன
வாழ்க்கைப் பயணம்
நெடு தூரம் செல்ல வேண்டி இருப்பதால்
தூசியை தட்டி விட்டு
தடைகளை தாண்டி
புறப்படு
முட்கள் நிறைந்த
பாதை என்று பயணத்தை
நிறுத்தி விடாதே!

**கவித்தா நிஜாம் - கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள்ளே...

நீ....
எதற்காகப் படைக்கப் பட்டாய்.
என்பது உனக்குத் தெரியுமா?
ஆதிமனிதன்
ஆதத்தின் விலா எலும்பிலிருந்து
முதற் பெண்ணாக நீ....!
சிருஷ்டிக்கப் பட்டதை
மூடி மறைக்கத்தான் முடியுமா?
உலகின் முதல் மனிதன்
படைக்கப் பட்ட நாளிலிருந்தே
வடிகாலாக வனிதையர் குலம்!

ஆகவே
ஆண் உன்னை
அத்துமீறுவதாகக் கத்தாதே!
தூண் இல்லாமல்
வான் நிற்பது போல்
ஆண் இல்லாமல்
நான் நிற்பேன் என்று நொட்டாதே!

கணவன் என்ற அனுமதிப்பத்திரம்
சட்டபூர்வமாகக்
கற்பழிக்க மட்டுமல்ல
பெண் என்ற உன்னினத்திற்குப்
பொற்பளிக்கவுந்தான்!

விளக்கின் அடிப்பாகத்திற்குள்
எண்ணெய்
இருக்கத்தான் வேண்டும்
வெற்றடிப் பாகத்துடன்
விளக்கிருந்தால்
வெளிச்சம் எப்படி வரும்?

அங்கே பார்!
ஆதர்ஷக் காதலர்களை
அலகால் வருடி
அணைத்தெடுக்கின்றது
தன் துணையை
அந்தக் காகம்!

முக்காரம் இட்டு
முழக்கும் எருது
முகர்ந்து முகம் நக்கி
மோகித்துச் சல்லாபிக்குது பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ ராசிகளில்தான்
எத்தனை ரகக் காதல்
ஆம் நீ!
அஜீவ ராசியா?
நீ ஏன்! ஆண்கள் மீது
புணரும் மிருகமெனப்
பொய்க் குற்றக் சுமத்துகிறாய்?
உனக்குள்ளே!
கருப்பையும்
காமநீர் வழிந்தோடும்
வடிகாலையும்
வைத்துக் கொண்டே!

**ஏ.எம்.எம்.அலி கிண்ணியா.**

## ஆத்துமாவின் ராகம்

........ஆடை களையப்பட்டு
நிர்வாணமான
நிமிஷங்கள் தான்-என்
வாழ்நாளிலே அதிகமானவை!

ஒருவனின் நகம் கிழித்து
என் தேகம் காயமானால் - அதில்
இன்னொருவனின் உதடு ஊர்ந்து
தழும்பு கூட காணாமல் போகும்!

அரிசிக்கும்...பருப்புக்கும்....
உப்புக்கும்...புளிக்கும்......நான்
அம்மணமான இராத்திரிகள்
அந்தரங்கமானவை!

பாழடைந்த வீடுகளுக்கும்......
மதுபானச் சாலைகளுக்கும்......
கசாப்புக் கடை ஓரங்களுக்கும்......
என்னை எப்போதுமே - நிறையவே
ஞாபகம் இருக்கும்!

தியாகிகள் பட்டியலில் -நானும்
சேர்க்கப்பட வேண்டியவள் ஏனெனில்
எத்தனையோ பேரை
நானும் வாழவைத்திருக்கிறேன்!

என் மேல் இரக்கப்பட்டு
யாராவது ஒரு நேர உணவு
கொடுங்கள்! - என்னிடம்
வந்து போபவர்களில்
இருவராவது குறையட்டும்!

**வி.முகிலன்-நெடுந்தீவு-13.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தாடற்களம்

## தீரன் மூட்டிய தீ

**- கிண்ணியா ஏ.எம்.எம்.அலி**

மரபோடு உறவாடும் மயில்கள் இரண்டோடு வான்கோழியொன்றை ஏன் இணைத்துக் கொண்டீர்கள்? இந்தக் கவலை கவிஞர் தீரன் ஆர்.ஆர்.எம்.நௌஸாத்திற்கு எழுந்தது பற்றி "நீங்களும் எழுதலாம்" 10ம் ஆம் இதழ் இயம்பிற்று.

தீரனின் "நுனிப்புல்லரிப்புச் செய்தியில் எதார்த்தமிருக்கலாம் "இல்லை" என்று இயம்புதற்கில்லை என்றாலும் ஆரத்தில் கோர்க்கப் பட்ட புட்பம் அஸ்ரப்கான். எடுத்தெறிதல் நலமா? புல்லரிப்புச் சேதி புதிய தூமகேதாகி அஸ்ரப்கானைச் சுடுதற்குக் காரணியாகிவிட்டது! வானம் பாடியின் வாய்!

காவியப் புலவர் ஜின்னாஷரிபுத்தீன், பாவலர் பஸில்காரியப்பர் ஆகிய இவ்விரு தமிழ்ப் பெருந்தகையாளர்கள் பயணித்துக் கொண்டிருக்கும் மரபுச் சாலையிலே கவிதை வாகனமோட்டப் பழகும் "L" போர்டுச் சாரதியாக அஸ்ரப்கான்"

"வால் வண்டியாலே" வந்து கொண்டிருந்தவரை வா! வந்தமர்க! நடுவண் என்று வானம்படி பிடித்திழுத்து அமர்த்தியது பிழைதான் என்கின்றார் தீரன் மரபுப் பற்றாக்குறை மலிந்துள்ள குறுநில மன்னனைச் சக்கரவர்த்திகளுடன் அரியாசனத்தில் அமர்த்திப் புகழந்ததைத்தான் சகிக்க முடியவில்லை எனச் சாற்றுகின்ற தீரனின் கூற்றுத் தீ(வா)யை அஸ்ரப்கானின் பதிற்புனலே அணைக்கட்டும் அல்லது அடைக்கட்டும்.
கானை, கனதி மிகுந்த கவிஞர்களின் வரிசையிலே பட்டியலிடக் காரணம் எனக்குத் தோன்றுமாப் போல

"Some times his greasy hands would have touched the palm of "Vaanam Paadi" in order to archive such a high standard dignity in his literary works" இந்த அணுகுமுறை இப்போது இல்லாத இடமே இல்லை அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி - ஒரு சர்ச்சை

# பாரதியின் குழப்பங்கள், முரண்பாடுகள்

க.சி.அகமுடைநம்பி

சென்ற இதழ் தொடர்ச்சி

உள்ளத்தால் பொய்யாகாது ஒழுகியவன் மகாகவி பாரதி. சொல் ஒன்று செயல்வேறு என்று வாழ்ந்தவன் அல்லன். ஆனால் அவனிடம் சில குழப்பங்கள், முரண்பாடுகள், தடுமாற்றங்களைக் காண்கிறோம்.

## ஆரியம் என்ற கருத்தாக்கம்

இந்திய தேசத்து மக்கள் அனைவரையும் பாரதி ஆரிய இனமாகக் கொள்கிறான் அவர்களின் உயர்வையும், வேத உபநிடதங்களின் சிறப்பையும் இந்து மதத்தின் மேன்மையையும் பலபடப் புகழ்ந்து போற்றுகிறான். "நாம் பாரத புத்திரர்கள் ஆரியர்கள், ஹிந்துக்களும் மஹமதியார்களும் கலந்த மஹா ஜாதி நம்மில் இந்து தர்மம் என்று வழங்கப்படும் ஸனாதன தர்மத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பகுதியர். ஒரு சிறுபகுதி மகமதியார் ஆவர். இவர்களும் மதக்கொள்கை மட்டில் அரபி தேசத்தில் பிறந்த மஹமதின் மார்க்கத்தை அனுசரிப்பவர் களாயினும் ஜாதியில் நம்மவர்களே" என்றெழுதுகிறான் பாரதி இத்துடன் நில்லாமல், இந்தியாவிலுள்ள அனைத்துப் படைப்புகளும் "ஆரிய சம்பத்து" என்று உரிமை கொண்டாடிப் பெருமிதம் கொள்கிறான்.

ரேமிலா தாப்பர் என்ற அறிஞர் கூறுகிறார் "ஆய்வாளர்களின் கருத்துக்களைச் சேர்த்துப்பார்த்தால் ஆரிய இனம் என்றோர் இனம் தனியாகத் தோன்றியிருந்ததா, இல்லை அது தொடர்புடைய ஒரே மாதிரியான மொழிகளைப் பேசும் மக்களின் தொகுப்பா என்றே ஐயமாக இருக்கிறது" என்றார்.

இது ஒரு புறம் இருக்க சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஆசியாவிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து குடியேறினார்கள் என்றும் அதற்கு முன்பாக இந்தியா முழுவதிலும் தமிழர்களே வாழ்ந்து வந்தார்கள் என்றும் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்ற மொழியியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

கன்னியாகுமரிக்குத் தெற்கே குமரிக்கண்டம் அல்லது இலெமூரியாக் கண்டம் என்ற பெயரில் இருந்து வந்த ஒரு பெரும் நிலப்பரப்பு சுனாமி போன்ற இயற்கை நிகழ்வுகளால் கடலில் மூழ்கிவிட்டதென்றும். அந்த நிலப்பரப்பில் தான் உலகின் முதல் மனிதக் கூட்டம் தோன்றியது என்றும் அவர்கள் தமிழர்களே என்றும், அந்த நிலப்பரப்பு பகுதி பகுதியாகக் கடலில் மூழ்கிய போது தமிழ் மக்கள் அங்கிருந்த இன்றைய இந்தியத் துணைக்கண்டத்திலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவி வாழத் தலைப்பட்டனர் என்றும் அண்மைக் காலமாக பல்வேறு அறிவியல், மொழியியல் அறிஞர்கள் முன்மொழியத் தொடங்கியுள்ளனர். முறையான கடல் அகழ்வாய்வுகள் மூலம் இதன் மெய்ம்மை நிலை கண்டறியப்பட வேண்டும். இதில் இந்திய அரசு சிறிதும் அக்கறையின்றி இருந்து வருவது வியப்புக்குரியது.

இந்தச் செய்திகளெல்லாம் பாரதி அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் எந்த ஓர் அறிவியல் அடிப்படையும் இல்லாமல் இந்தியா முழுமையும் ஆரிய சம்பத்து என்று அவன் கூற முற்பட்டதை அவனுடைய அறியாத்தனம் என்பதா, ஆரியத்தின் மீது அவனுக்கிருந்த அதி மிகு ஆர்வத்தின் (Over enthusiasm) வெளிப்பாடு என்பதா?

இவ்விதச் சறுக்கல், மொழியைப் பொறுத்தும் பாரதிக்கு ஏற்படுகிறது தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடிய அதே பாரதி, சமஸ்கிருதத்தை தேவபாஷையாக உயர்த்திப் பிடிக்கிறான். தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சி பற்றிப் பாடும்போது

ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர் வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான் என்று உண்மையுடன் சிறிதும் பொருந்தாத கற்பனைப் புனைவை ஓர் வரலாற்று உண்மையைப் போல் கூறத் துணிகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் தமிழ்த்தாய் பாடல்களில் ஒன்று:

மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்டநல்லன்பொடுநித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளினுள்ளே - "உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்."

என்ற பாடலில் "உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்" என்ற வரி உணர்த்தும் பொருள் யாது?

மிகுதி அடுத்த இதழில்

நன்றி உயிர் எழுத்து (இந்தியா)

(உங்கள் கருத்தாடலை எதிர்பார்க்கின்றோம்.)

---

## வலிகள்

வலியின் போது
வலிக்காமல் பிறந்ததினால்
வழியெங்கும்
வலிகளின் வலிமை
விழிகளின் மொழியை
அழித்து விட்டது

விழுந்தெழும்பும்
தடவைகளெல்லாம்
கொழுந்து விட்டெரியும் தீக்குள்
தள்ளி விடப்படுகின்றேன்
இரத்தக்கண்ணீர் வடிக்கும்
பொழுதுகளில் எனதான பிரார்த்தனைகள்
தொடர்ந்தபடி

ஏறிச் சென்று, வாரியெடுக்க
விருப்பங்களில் விரைதல்
கொடுப்புத்தேள் கொட்டி
உயிரணுக்கள் சலனமற்றுப் போகின்றன
மறுகணம்

தலையெழுத்தான
நிலையான நிஷ்டூரத்தால்
துளையிடப்பட்ட மனசின்
ரணங்கள்
அறைந்து வீழ்த்தும்
ஊழ் வினைக்குள்
பந்தாக உருட்டப்படுகிறேன்.

எம்.எஸ்.பாஹிரா - பதுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகக்குறிப்பு

**திராட்சை ரசம் (ஹைக்கூ கவிதைகள்)**
**உ.நிசார் மாவனல்ல**

"மூங்கிலொன்று
சூடுவாங்குகிறது
புல்லாங்குழல்"

போன்ற சிந்திக்கவைக்கும் ஹைக்கூ கவிதைகள் கொண்டுள்ளது. திராட்சை ரசம்

கலாநிதி துரை மனோகரன்
....பெரும்பாலும் ஹைக்கூ வின் உள்ளார்ந்த இயல்பை விளங்கிக்கொள்ளாமல் மூன்று வரிக்கவிதைகளை ஹைக்கூ என்று தவறான விளக்கத்தைக் கவிஞர்கள் கொண்டுள்ளனர்.

"கவிஞனுக்கு இருக்கவேண்டிய சொற்செட்டு, கருத்தாழம் சமூகநோக்கு சமூக விமர்சனம் போன்றவை இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் படிந்துள்ளன. அழகான ஓவியங்களும் இணைந்து கவிதைகளுக்கு மேலும் மெருகேற்றுகின்றன.. காலப்போக்கில் ஹைக்கூவின் கவிதை வளம் கவிஞர்.உ.நிசாரின் கைகளுக்கு ஒத்திசைந்து வரும் என எதிர்பார்க்கலாம்."என அணிந்துரையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

தொடர்பு : 70/3,புதிய கண்டி வீதி, மாவனல்ல
விலை : 125.00

---

## மௌனமே வாழ்வாக (கவிதைத் தொகுப்பு) க.சுதர்சன்

"நான்
சேற்றினருகே நின்றாலும் செந்தாமரை மலராதா
கிழக்கில் ஒரு ஒளி சுடராதா என
காத்திருக்கிறேன்."

தொகுப்பில் இடம்பெற்ற கவிதையொன்றின் வரிகள் இவை. க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதிய கையோடு வெளியிட்டிருக்கும் இந்நூலில் குறுங்கவிதைகள் உள்ளடங்கலாக மொத்தம் 22 கவிதைகள் உள்ளன.

"இளம் பராயத்தவராய் இருப்பினும் சுதர்சனின் இள நெஞ்சில் சமூக அநீதிகள், அடக்கு முறைகள், இழி நிலைகள் தொடர்பில் ஆவேச உணர்வு மேலோங்கி நிற்பதும் வாசகர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் கையாளப்பட்டிருப்பதும் அவரின் அசாதாரண ஆளுகைக்கு ஆதாரமாகின்றன." என யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.சுந்தரேசன் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது

**தொடர்பு: அம்பிகை வாசம் பிராமண தெரு**
**தும்பளை மேற்கு. விலை 100.00**

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை - பெருவெளி (காலாண்டிதழ்)



"...முஸ்லிம் சிவில் சமூகம் விழித்துக்கொள்ளும் நிலையிலும் இல்லை..... விரிந்த தளத்தில் உறுதியான வரலாறுகளுடனோ தர்க்க நியாயங்களுடனோ முஸ்லிம் சமூகத்தின் இருப்பியல் பலத்தினை விளக்குவதற்கான அறிவும் நெஞ்சுரமும் இல்லாத அரசியல்வாதிகளைத் தான் முஸ்லிம் சமூகம் தலையில் வைத்து ஆடுகிறது என்பது வெளிப்படையாகி வெகுநாட்களாகி விட்டது."என்று முடிகிறது ஆசிரியர். உரை

காத்திரமான பல விடயங்களைத் தாங்கி வெளிவந்திருக்கிறது பெருவெளி.

விலை - 120.00

தொடர்பு - பெருவெளி
இல, 31/C, உபதபாலக வீதி, பதுர்நகர்,
அக்கரைப்பற்று -01

## நமது இதழ்களில் சில

சஞ்சிகை - செங்கதிர்



சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு வெளிவந்திருக்கும் மார்ச் மாத இதழில் ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவும் பெண் ஒடுக்குமுறைக்கு எதிரானதுமான செயற்பாடுகளை ஆண், பெண், இருபாலாரும் இணைந்து மேற்கொள்ளவேண்டும். என ஆசிரியர் தன் உரையில் குறிப்பிடுகிறார்.

"இலட்சியமில்லாமல் இலக்கியம் இல்லை" என பிரகடனப்படுத்திக்கொண்டு மாதாமாதம் கிரணங்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறது செங்கதிர்.

விலை - 50.00

தொடர்பு : த.கோபாலகிருஷ்ணன்
ஆசிரியர் - செங்கதிர்
இல, 19 மேல்மாடித்தெரு மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்தே கிடக்கும் கதவுகள்!

கேளுங்கள் தரப்படும்
தட்டுங்கள் திறக்கப்படும்
எங்கிருந்தோ எழுந்து வருகிறது
அசரீரி வாக்கொன்று

இழப்பதற்கு ஏதுமற்ற
உழைத்தே உருக்குலைந்து போன
எங்கள் இதயங்களில்
ஒரு புதியதெம்பு

நம்பிக்கையுடன் சென்ற நாம்
மூடிய கதவுகளை
முடிந்தவரை தட்டினோம்
தட்டப்பட்ட கதவுகளோ
மேலும் இறுக மூடிக்கொள்ள
தட்டிய எமது கைகள்
தட்டி முறிக்கப்பட்டன

கேட்டால் நிச்சயம்
கிடைக்கலாமென்ற நப்பாசையில்
கெஞ்சாத குறையாக
யாசித்தும் பார்த்தோம்
கேட்க அசைந்த எமது உதடுகள் தான்
கிழித்தெறியப்பட்டன அவர்களால்
இரத்தம் சொட்டச் சொட்ட!

தூக்கி எறியவரும்
மதயானை முன்னாலே
துதிபாடி நிற்கவோ
தாக்கவரும் குளுவனிடம்
தயவுதாட்சணியம் பார்ப்பதோ
பிரயோகிக்க முடியாத
கணிதவாய்ப்பாடு

முடிவில்
எமது மூச்சுக்காற்று
ஒரு எரிமலையாகி
வெடித்துச் சிவக்க
அந்த அசரீரி வாக்கும்
எங்களுடன் இணைந்து
கைகோர்த்து........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக மூடிய கதவுகளை
எட்டி உதைத்தன கால்கள்
ஒரு உருக்குத்தூணின் உத்வேகத்தில்.
கதவுகளோ திறக்கப்படவில்லை
தகர்ந்து தலைசாய்ந்தன தரையில்

கேட்டதற்கு மேலாகவே
கேட்கப்படாமலேயே எம்மால்
வேண்டியவையெல்லாம்
வென்றெடுக்கப்பட
இப்போதெல்லாம்.......
எல்லோர்க்கும் எல்லாமாகி
இல்லாமை இல்லாதாகி
தட்டாமல் என்றும்
கதவுகள் திறந்தே கிடக்கின்றன.

**ஷெல்லிதாசன்**

---

## தெருக்குரல்

மீண்டும் உன்னையே மணப்பேனென்று
வேண்டுவார்
உண்டோ எங்கும் சொல்லும்.
************

அடுத்தவர்க்கு துன்பம் கொடுப்பார்க்கு நிம்மதி
இடுகாடு போனாலும் வரா.
************

பணத்தை கடன் வாங்கிக்கொண்டே
இருப்போனின்
மானம்தான் போகும் மண்ணில்
************

நயந்து இல்லால் தரும் சுகமே சலிக்கும்போது
பயந்து அயலாள் சுகம் நயக்குமா
************

தூரத்தே பார்த்தால் பால்நிலா மிதித்தால்
வரண்டே போன பாழ் நிலம்.
************

வீட்டைக்கட்டி ஆடம்பரத்தைக்காட்டி
ஆனந்தித்திருப்பதாய்
நாட்டை நம்பப்பண்ணுவார் வீணர்.
************

அழகோவியத்தில் சிலந்திக் கூடுபோல்
கவலைகள்
ஆளைத் தின்று விடும்.
************

மறதியெனப் புலம்புவார் பிறர்புரிந்த தீமைகளை
மறவாமற் காப்பது எங்ஙனம்.

**-சூசை எட்வேட்-அன்புவழிபுரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூரிலும் இருந்தது ஒரு குளம்

தாம ரைகள் பூத்த குளம்
தண்ணீ ரும் நிறைந்த குளம்
மாம ரங்கள் சூழ்ந்து நிற்க
மன தெல்லாம் கவர்ந்த குளம்

மழை பெய்ய நிறைந்த குளம்
வடி கால்கள் இருந்த குளம்
அலை யெழுந்து சல சலக்க
ஆர்ப் பாட்டம் செய்த குளம்

நிரை நிரையாய் மீனோட
நீர்த் துளிகள் துள்ளி எழ
இரை பிடிக்கக் கொக்கு களும்
இங் கங்கே நின்ற குளம்

வனி தையர் வந்திறங்கி
வனப் பாக அமர்ந் தங்கு
துணி துவைக்கும் போதி னிலே
துரை தொட்டு மகிழ்ந்த குளம்

பறவை களை விலங்கு களை
பாதை யிலே போ வோரை
உறவாகக் கொண்டதனால்
உயிர் கொண்டு இருந்த குளம்

நிலை கொண்ட மரமெல்லாம்
நிழல் கொடுத்து நின் றதனால்
வலை வீசி மீன் பிடிக்க
வள மாக இருந்த குளம்

அரை குறை உடை யணிந்த
ஆண்களையும் பெண்க ளையும்
கரை யோரப் பற்றை களால்
திரை கட்டி மறைத்த குளம்

பல் லாண்டு இருந்த குளம்
பாங் காக இருந்த குளம்
பொல் லாத மனிதர் களால்
போக் கற்றுப் போன குளம்

மீன் கொக்கு இன் றில்லை
மீத மாக ஒன்று மில்லை
ஏன் இந்த அநி யாயம்
என்று கேட்க யாரு மில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யன்று கவர்ந்த குளம்
ஏற்ற முடன் இருந்த குளம்
இன்று எனது கண்ணிரண்டும்
ஏக்கத் துடன் நனைக்கும் குளம்

**உ.நிசார் - மாவனல்ல**


தொடர்புகளுக்கு:
S.R. Thanabalasingam
The Editor
'Neengalum Ezhuthalam'
103/1, Thirumal Street,
TRINCOMALEE
SRI LANKA.



July - December 2005
VOL VIII Nº3
30
நிறுவனர் : கலைச்செல்வன்

தொடர்புகளுக்கு:
Exil
27, Rue Jean Moulin
92400 Courbevoie
France
e-mail: exilpub@gmail.com
இணையத்தில் உயிர்நிழல்
www.uyirnizhal.com


✱ 'நீங்களும் எழுதலாம்' – இருமாத கவிதை இதழ்

பிறர் ஈனநிலை கண்டு துள்ளும் ஆயுதமாக, பேசாப் பொருளைப் பேசுவதாக, விரிந்தபார்வை கொண்டதாக, கவிதைகள் வளம் கொள்ள வேண்டும் என்கின்ற முனைப்பின் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற இருமாதக் கவிதை இதழ் 'நீங்களும் எழுதலாம்'
'நன்றி – உயிர் நிழல்' (பிரான்ஸ்)

படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பினை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மாணவர்கள் பயன்பெறுவதற்கு உகந்த
ஆக்கங்களை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I.B.C யில் நீங்களும் எழுதலாம்

இலண்டனில் இருந்து இயங்கும் ஐ.பீ.சீ. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பில் 5.5.2002 முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரித்தானிய நேரம் காலை 07.00 முதல் 10.00 வரை ஒலிபரப்பப்படும் "காலைக்கலசம்" நிகழ்ச்சியில், "இலக்கியத் தகவல் திரட்டு" என்ற பகுதி காலை 7.15 முதல் 8.00மணி வரை சுமார் 15-20 நிமிடங்கள் ஒலிபரப்பாகின்றது. (இதனை ibctamil.co.uk என்ற இணையத்தளத்திலும் நேரடியாகச் செவிமடுக்கலாம்) நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்படும் இந்த வாராந்த நிகழ்ச்சியின் எழுத்துப் பிரதி இதுவாகும்.

**ஒலியலை: 29.03.2009**

புகலிடத்தின் கவிதைப் பிரியர்களுக்கு விருப்பமான நற்செய்தியொன்றினை இன்றைய காலைக் கலசத்தில் அடுத்ததாகப் பகிர்ந்து கொள்கின்றேன். **நீங்களும் எழுதலாம்** என்ற தலைப்பில் கவிதை இதழ் ஒன்று கடந்த 2007ம் ஆண்டிலிருந்து திருக்கோணமலை மண்ணிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்கள் வெளியிடும் இச்சஞ்சிகை இருமாதக் கவிதையிதழாகும். தமிழகத்திலிருந்து கவிதைக்கென்றே ஏராளமான இதழ்கள் இதுவரை மலர்ந்து மணம்பரப்பிவந்துள்ளன. பாவேந்தர் பாரதிதாசனின் குயில், கவியரசு கண்ணதாசன் நடத்திய தென்றல் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை பின்னாளில் ஈழத்தமிழரிடமும் கவிதைக்கான தனித்துவமான இதழ்களை மலர்விக்கும் எண்ணத்தை வளர்த்தன. கவிஞன், நோக்கு, அக்னி, விடிவெள்ளி, பூபாளம், வகவம், கவிதை, யாத்ரா, மற்றும் புகலிடத்தில் ஜேர்மனியில் கலைவிளக்கு எனத் தொடர்ந்தன கவிதை இதழ்கள். அவ்வகையில் இன்றைய நீங்களும் எழுதலாம் என்ற கவிதை இலக்கியச் சிற்றிதழையும் சேர்த்துக்கொள்ளலாம்.

என்றுமே கண்டிராத பணவீக்கத்தாலும் அரசியல் நெருக்கடிகளாலும் சூழப்பட்டு இலங்கை திண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், போர் மேகம் சூழ்ந்ததும், அரசியல் களேபரங்களுக்கு மத்தியில் அல்லல் படுவதுமான சமகாலத்துக் கிழக்கிலங்கையிலிருந்து இலக்கிய தாகத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சஞ்சிகை பிடிவாதமாகத் தொடர்ந்து இரண்டாவது ஆண்டில் பயணித்து வருகின்றது என்பதே ஆச்சரியத்துக்குரிய விடயமாகின்றது. **பயில் களம், பரிசோதனைக் களம், காத்திரத்தின் களம், கருத்தாடற் களம், விளக்கக் களம், விமர்சனக் களம்** என கவிதை சம்பந்தமான பல களங்களை ஏற்படுத்தி, கவிதையின் சமூகப்பயன்பாட்டினை உச்சப்படுத்தும் ஆரோக்கியமான நல்ல நோக்கத்துடன் வெளிவரும் நீங்களும் எழுதலாம் கவிதையிதழின் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் பாராட்டுக்குரியவர். கார்த்திகை-மார்கழி 2008ம் ஆண்டுக்குரியதும், தை-மாசி 2009 ம் ஆண்டுக்குரியதுமான இரண்டு இதழ்கள் தற்போது வெளிவந்த நிலையில் தன் கவித்துறைப் பாதையில் துணிச்சலுடன் பயணிக்கிறது நீங்களும் எழுதலாம்.

வானம்பாடியின்- கவிதை என்பது ஒரு சிக்கலான பின்னமல்ல என்ற கட்டுரை, மேமன்கவியின் மல்லிகையில் முன்னதாக அறிமுகமான-கவிதைக்கான ஒரு சிறுசஞ்சிகை என்ற அறிமுகக் கட்டுரை, மாரிமுத்து சிவகுமாரனின் மலைச்சுவடுகள் கவிதை நூல் பற்றிய விமர்சனம், என்பன மார்கழி 2008 இதழில் பரவித்தெளித்திருக்கும் கவிதைகளுக்கிடையில் காணப்பட்ட சில குறுங்கட்டுரைகளாகும். தை-மாசி இதழிலும், ஏராளமான அறிமுகக் கவிஞர்களின் நறுக்குத் தெறிக்கும் மரபுக் கவிதை, மற்றும் புதுக்கவிதை வரிகளுக்கிடையில் சில குறுங் கட்டுரைகளும் கவிதை அறிவை வளர்க்கத் துணைசெய்கின்றன. பாரதியின் குழப்பங்கள், முரண்பாடுகள் என்ற தலைப்பில் க.சி.அகமுடை நம்பியின் கட்டுரை சிந்தனைக்குரியது. இளம் படைப்பிலக்கிய வாதிகளும், அனுபவம் மிக்க இலக்கியவாதிகளும் தத்தமது இலக்கியத் தரத்திற்கு அப்பால் நின்று நீங்களும் எழுதலாம் என்ற இதழில் - கவிதை யாத்தல் என்ற ஒரு தனித்துவமான இலக்கியத்தால் மட்டும் இங்கு ஒன்றுசேர்கிறார்கள். இது ஒரு ஆரோக்கியமான இலக்கியச் சூழலை அங்கு நிச்சயம் உருவாக்கும் என்று நம்பமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ரூபாவில் 25 ரூபாயாக விலை குறிப்பிடப்பட்டுள்ள இவ்விதழில் உங்கள் ஆக்கங்களையும் பதிவுசெய்து, தாயகத்தின் தமிழ் இலக்கியவாதிகளுக்கு உங்கள் இருப்பினையும், விருப்பினையும் எடுத்துச்செல்ல ஏற்ற நல்லதொரு வாய்ப்பாக இக்கவிதையிதழை பார்க்கமுடிகின்றது. இவ்விதழின் பிரதிகளைப் பெறவோ, ஆக்கங்களை வழங்கிடவோ விரும்பும் கவிதைப்பிரியர்கள், எஸ். ஆர்.தனபாலசிங்கம், 103/1 திருமால் வீதி, திருக்கோணமலை என்ற முகவரிக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். தொலைபேசியில் தொடர்புகொள்ள விரும்புவோர், 0094 26 222 0398 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஆசிரியருடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

---

## விரைவில் இலண்டனில் ஈழத்து தமிழ் நூற் கண்காட்சி - 2009

ஈழத்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும். அரசியல், அழகியல்,ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச்சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப்பதிவுகள், சிறு சஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு..என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புகளுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம். அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புக்களையும் அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்கு தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு

R.Mahendran (முல்லை அமுதன்)
34 RED RIFFE ROAD
PLAISTOW,LONDON,E13 0JX
E13 OJXTEL : 0044-208 5867783
Email : mullaiamuthan_03@hotmail.co.uk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கியப்பூக்கள்**
**ஆசிரியர் - முல்லைஅமுதன்-**




காற்றுவெளி வெளியீடாக வெளிவந்திருக்கும் இந்நூலில் ஆசிரியர் தன் உரையில் "இருட்டடிப்பு, புறக்கணிப்பு, இன்னோரன்ன பிற சங்கடங்களினால் இந்நூலைக் காலந் தாழ்த்தியே வெளியிடமுடிந்தது. எதிர்பார்த்த கட்டுரைகள் பாகுபாடின்றிக் கிடைக்க வாசல் திறந்திருந்தோம். அதுவும் தாமதமாயிற்று எனினும் பாகம் இரண்டில் அவர்களின் கட்டுரைகள் வரும் என்கிற நம்பிக்கையுடன் பாகம் ஒன்று வெளிவருகிறது". என்று குறிப்பிடுகிறார்.

44 இலக்கியவாதிகளை ஆவணப்படுத்தியுள்ளமை மெச்சத்தக்க பெருமைப்படத்தக்க விடயமாகும்.

**இந்திய விலை: 200/=**
**இலங்கையில் கிடைக்குமிடம்: சேமமடு பொத்தகசாலை, கொழும்பு - 11**

---




**அ.ந.க. ஒரு சகாப்தம்**
**ஆசிரியர் அந்தனி ஜீவா**

மறுமலர்ச்சிக் கால எழுத்தாளரான அ.ந. கந்தசாமியை ஆவணப்படுத்தும் நோக்கில் அவர் பற்றிய குறிப்புக்களுடன் அவரது படைப்புக்கள் சிலவற்றையும் உள்ளடக்கி நூலை வெளியிட்டிருக்கிறார் ஆசிரியர். அ.ந.க. வின் படைப்புக்கள் எதுவும் ஒரு தொகுப்பாக வராத ஒரு நிலையில் இது நல்லதோர் முயற்சி எனலாம்.

தொடர்பு : மலையக வெளியீட்டகம்
த.பெ.எண் : 32, கண்டி. விலை : 100/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கோலமாய்

விடுதலை வாசல்
துகிலுரிந்து
வரவேற்கிறது

ஒவ்வொரு உபசரிப்பும்
உடல் புகுந்து
துழாவியெடுக்கிறது
தன் மானத்தை

ஒப்பாரி ஓலம்
உலுப்பிவிட்டதான பாவனையில்
வரங்கொடுக்க
சந்நிதிகளை விட்டு
சந்திக்கு வந்திருக்கின்றன
சில சாமிகள்

பூசாரிகள்
பூக்களைச் சொரிந்து கொண்டு
அடிவருடி அடிவருடி
ஆருடம் சொல்கிறார்கள்

ஏதோ பார்த்து நாலுவார்த்தை
அளந்து விட்டுப்போனால் கூட
அந்தச்சாமிகள்
அந்தஸ்த்தில்
உயர்ந்து விடலாம் என
எண்ணுகின்றன.

துடுப்பில்லாப் படகுகளும்
கரைசேர்வதுண்டு
நல்லது நடக்க
நல்லோர் நினைப்பதுண்டு

கண்ணை மூடுகின்ற
ஒவ்வொரு நொடியிலும்
தன் மானத்தை
இழந்து... இழந்து....
குறுகிப் போகிற மனிதர்களின்
அந்தப் பொழுதுகளில்
நானும் கரைந்து போகிறேன்.

**-எஸ்.ஆர். தனபாலசிங்கம்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

### சக்தீ பால - ஐயா

தங்களது கடிதமும் ஆண்டு மலரும் கிடைத்தன. 30.10.2008 இல் எழுதியுள்ளீர்கள் மாதங்கள் ஐந்தின் பின் இந்தப்பதில், எழுதத்தொடங்கும் போதெல்லாம் தடைகள் குவிந்தன. தமிழ் இனம் படும் கொடுமைகளை எண்ணுவதாலுள்ள துக்கமும் தான். ஒருவாறு பதில் எழுத இன்றுதான் முடிந்துள்ளது.

மலையகத்தில் வாழும் எமது தமிழ் மக்களின் துன்ப வாழ்வை சித்தரிக்கும் சி.வி.யின்ஆங்கிலப் பாக்களில் நான் தமிழாக்கம் செய்த ஒருபாகம் தங்களின் கவிதை நூல் ஆண்டு மலர் பின்புற அட்டையில் இருப்பதைக் **கூர்ந்தேன். திறன் வியந்தேன்.**

தங்களின் முயற்சி மென்மேலும் சிறந்து விளங்கிட எனது நல்லாசிகள்.

---

### கலா விஸ்வநாதன்

10 இதழ்கள் பாரிய சாதனை கவிதைக்கான சஞ்சிகை, திருக்குறளின் வரிவடிவ எளிமையாக - திரும்பும் பக்கங்களில் புதுக்குறளின் வரவாக - புதுக்குரலாக உரத்து ஒலிக்கட்டும். நிறுத்தாது நீண்டநாள் நெடிய பயணம் தொடர இதயத்தின் இனிய வாழ்த்துக்கள். எழுதுவதை நிறுத்தியிருந்த என்போன்றவர்களை "நீங்களும் எழுதலாம்" என்று எழுப்பிவிட்டமைக்கு நன்றி.

---

### ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

தங்களால் அனுப்பப்பெற்ற "நீங்களும் எழுதலாம்" சஞ்சிகைகள் கிடைத்தன. நல்ல முயற்சி தொடருங்கள், வெண்பாவுக்கும், கட்டளைக் கலித்துறைக்கும், ஏன் எண்சீர் விருத்தத்துக்கும் ஏற்காத உருவம் ஆதனிலாலென்ன நவீன கவிதைக்கு நன்கு பொருந்துவது. நல்ல கருத்துக்கள் நவீனத்தில் நலம் பெறட்டும். சந்தர்ப்பம் அளித்துக் கை தூக்கிவிடுங்கள்.

எல்லாமே கவிதையல்ல. இனங்கண்டு அரங்கேற்றுங்கள் வாழ்த்துக்கள்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -தில்லையடிச் செல்வன்- உடப்பு

தாங்கள் அனுப்பிய "நீங்களும் எழுதலாம்" கிடைத்தது. நன்றி. ஏற்கனவே நண்பர் திக்காயல்தர்மு நீங்களும் எழுதலாம் உட்பட பல சஞ்சிகைகளை அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார். பத்திரிகை அறிமுகம் கண்டு ஏராளமான பழைய எழுத்தாளர்களும், புதிய எழுத்தாளர்களும் நினைவுகளை மீட்டி எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்திலிருந்து வெளிவந்த வானம்பாடி , விடியல் போன்ற கவி சஞ்சிகைகள் விமர்சனங்கள் என்பவற்றையும் வெளியிட்டு கவிதையினை ஆரோக்கியமான திசைக்கு வழிகாட்டினர். அதுபோன்று தாங்களும் முயல்வது வரவேற்கத்தக்கது.
தொடரட்டும் உங்கள் பணி

நாளைய விடிவிற் காய்
இன்றே ஆகுதியாகும் ஆத்மாக்கள்
சோலையாகும் வரலாற்றின்
தோற்றுவாய் ஆவார் நிச்சயம்!

---

**ஆராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**
உங்கள் கவிதை இதழ் சிறப்பாக இருக்கிறது. தொடர வாழ்த்துக்கள்.

---

## ஜெயா தமிழினி

"நீங்களும் எழுதலாம்" இதழுக்கு இதழ் புதுமெருகுபெற்று வருகிறது. உருவிற் சிறிதெனினும் உள்ளடக்கம் பெரிதென இதழ் 10 இல் முப்பதுக்கும் மேற்பட்ட கவிதைப் படைப்புகளோடு கருத்தாடல்களையும் விசேடமாக குறுவிமர்சனத்தையும் (மாதுமையின் "ஒற்றைச்சிலம்பு" தாங்கி வந்திருக்கிறது. கவிதைகளுக்கு சிகரம் வைத்தாற்போல பேரா.சி.சிவசேகரத்தின் **"தபாற்காரர்"** எனும் மொழிபெயர்ப்புக் கவிதை அமைகிறது.

**"பூமிக்கு இன்னமும் அதன்**
**ஸிஸி பஸ் உள்ளான்**
**எனினும் தனக்கென்ன வேண்டுமெனப்**
**பாறை அறியாது"** என்னும் வரிகள் இடையில் அகப்பட்டு அல்லலுறும் அப்பாவி மக்களைச் சித்தரிக்கிறது.

தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி நடைபயிலட்டும் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் பெயர்ப்பும்

### செத்த பாம்பு

கறுத்த மலைப்பாம்பாக
செத்துக் கிடக்கிறது
என் தெரு

ஆவணி வெய்யில்
கொளுத்துகிறது
ஒரே அமைதி
இலை கூட
அசையவில்லை
செத்துக் கிடக்கிறது
என் தெரு

அஞ்சலி செலுத்துவோர்
அஞ்சி அஞ்சி
தூரநிற்க
அஞ்சாறு படைவீரர்
அணிவகுத்து
மரியாதை செய்ய
செத்துக் கிடக்கிறது
என் தெரு

**சோ.பத்மநாதன்**

### THE DEAD ROAD

The road is dead
It lies
Like a black snake
In the August heat
Quiet
No leaf stirs
Afraid to peep
People watch
From a safe distance
Soldiers in fatigues
Guard the carcass
My road is dead
Killed
In broad daylight

கணினி மயப்படுத்த உதவிய ஆர்.நிதியா
(Edgent Cafe உவர்மலை) அவர்களுக்கும்
அழகுற அச்சிட்டு உதவிய அஸ்ரா
பதிப்பகத்தினருக்கும் நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# World! Why do you hound me?

World! Why do you hound me like this?
Do annoy you? Really? When all I want
is to put Beauty in my Understanding?
and not my Understanding in Beauty?

I have no interest in Money and luxury;
it gives me more satisfaction
to put Wealth in my Understanding
than my Understanding in Wealth

A Pretty Face is soon gone:
how can I value the daily loot to Time?
or the forget crown of Luxury?

For as long as I look for Truth, I believe
it is better to unmake the vanities of Life
than to unmake my life with vanities.

மூலம் : ஸ்பானிய மொழி
எழுதியவர் : ஹுவானா ஜனெஸ் டி லா க்ருஸ்
ஆங்கிலம் வழியாக தமிழில் :
கே.எஸ்.சிவகுமாரன்

**என்னையேன் வேட்டையாய்
வதைக்கிறாய் உலகமே!**

உலகே! என்னையேன் இவ்வாறு
வேட்டையாடுகிறாய்?
உனக்குத் தொந்தரவு தருகிறேனா?
உண்மையாகவா?
எனது புரிதலில் அழகைக் காண்பதையே
நான் வேண்டுகிறேன்
அழகில் எனது புரிதலையல்ல

செல்வத்திலோ சொகுசிலோ
எனக்கக்கறையில்லை
செல்வத்தில் எனது புரிதலைப் பார்க்கிலும்
எனது புரிதலைச் செல்வத்தில் காண்பதே
எனக்கதிக திருப்தியைத் தருகிறது

அழகிய வதனம் விரைவில் மறைந்திடும்
காலத்தின் நாளாந்த கொள்கையை
எவ்விதம் நான் மதிப்பிட முடியும்?
அல்லது
**போலிச் சொகுசுக் கிரீடத்தை?**
**உண்மையை** நான் தேடும்வரை
பகட்டுடன் கூடிய எந்தன் வாழ்க்கையை
குலைப்பதிலும் பார்க்க
**வாழ்கையின்** பகட்டைக் குலைப்பது
சிறந்ததெனயான் நம்புகிறேன்.


ISSN 1800 - 3311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - ஆனி
2009

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -02 எழுத்து -12



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
( Poetry Magazine)

விலை 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்-12

## இருமாத கவிதை இதழ்

மே-ஜுன்-2009

ஆசிரியர்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**


வல்லான் சரஸ்வதி புத்திரன்
தாமரைத் தீவான் எஸ் பாயிஸா அலி
மேரி ஜென்சி பிரான்சிஸ் ஏ.நஸ்புல்லாஹ்
ம.புவிலக்ஷி மன்னார் அமுதன்
அஸ்ரபா நூர்டீன் ஜெ.யாழினி
லோ. ஜெயப்பிரதா எம்.எஸ்.பாஹிரா
ரி.புனிதா நீலா பாலன்
அ.நோபட் யூட் ந.டயாழினி
ர. ஜோயல் ஜைரஸ் ம.கம்ஷி
ஜே. பிரோஸ்கான் ஷெல்லிதாசன்
ஆர். பாலகிருஷ்ணன் க.சுவர்ணராஜா
சூசை எட்வேட் சீ.என்.துரைராஜா
ஜெயா தமிழினி செ.ஜே. பபியான்
வ. இனியன் ஏ.ஸி.இஸ்மா லெவ்வை
கி.கலைமகள் என்.சந்திரசேகரன்.
முருகையன் நினைவுக் குறிப்பு
* பேராசிரியர் - சி.சிவசேகரம்
* பெரிய ஐங்கரன்
கருத்தாடற்களம்
புதுசா புராதனமா? ந. பார்த்திபன்
அறிமுகக் குறிப்பு
வாசகர் கடிதம்
மூலமும் பெயர்ப்பும்



**வடிவமைப்பு : கே.மாக்ஸ் சிறிராம்.**
**எஸ்.யசோதரன்.**
**அட்டைப்படம்: ஓவியர் கே.சிறிதரன்**



தொடர்புகளுக்கு,
'நீங்களும் எழுதலாம்'
103/1,திருமால்வீதி, திருகோணமலை
தொ.பே: 0778812912
026 2220398
**E-mail:-neenkal@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறுகளிலிருந்து கற்றுக் கொள்வது

அவலங்கள் அழுத்தங்கள் உளைச்சல்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் 'நீங்களும் எழுதலாம்' 12வது இதழையும் வெளிக்கொணர்ந்து ஈராண்டை நிறைவு செய்யும் மகிழ்வை உங்களோடு பகிர்ந்து கொள்கிறது.

பல ஆயிரக்கணக்கான மக்கள் பலியாக் கப்பட்டு, படுகாயங்களுக் குள்ளாக்கப்பட்டு, அங்கவீனர் களாக்கப்பட்டு, மூன்று இலட்சம் மக்கள் (சனத்தொகையில் 1.5%) அகதிகளாக்கப்பட்டு ஓர் ஆயுதப் போராட்டம் எந்தவித முடிவுகளுமின்றி *ஓய்வுக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை* மானிடத்தின் மீது கரிசனை கொண்ட அனைவர் மீதும் பாரிய பொறுப்புக்களைச் சுமத்தியுள்ளது என்பதை 'நீங்களும் எழுதலாம்' சுட்டிக் காட்ட விரும்புகிறது.

இவ் விளைவுகளுக்கான காரணங்கள் யாவை? கடந்த காலத் தவறுகள் எவை? இவற்றை சரிவர விளங்கிக் கொள்ளாத முன்னெடுப்புக்கள் எவையும் அர்த்தமுள்ளதாக அமையப் போவதில்லை.

பழைய பல்லவியை பாடிக்கொண்டு ஒரு தரப்பு. சம்பந்தமேயில்லை என்பது போல இன்னொருதரப்பு வெற்றிபெற்றவன் (தற்காலிகமாகவேனும்) மேலானவன் என சர்வாதிகாரி ஹிட்லர் பாணியிலான தரப்பு மறுபுறம். **(Victor will be never asked if he told truth -Adulf Hitler)**

வேடிக்கை மனிதர் போலில்லாது பாரதி சொன்ன சமூகப் பொறுப்புள்ள மனிதர்களாக இருப்போம் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்வோம்.

நீங்களும் எழுதலாம்
அன்புடன்
ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஜனநாயகமே

சேவைகள் இங்கே
கைநீட்டிப் பழகி
சேவகம் செய்கின்றன!

முறைப்பாடுகள் விண்ணப்பங்கள்
காரியாலயங்களில்
முடங்கிக் கொள்கின்றன!
திட்டங்கள்
திண்டாடுகின்றன!
சமத்துவம் கூறும் சட்டங்களில்
ஓட்டைகள்
சமைக்கப்படுகின்றன!

கதிரை இலக்குகள்
கண்டதையும் பேசவைக்கின்றன!
மீட்சியில்லா கருத்தியல்கள்
மீண்டெழுகின்றன!

மொழிப்பற்றில்
இனப்பற்றில்
மதப்பற்றில்
ஊர்ப்பற்றில்! என....
பற்றுக்களிலெல்லாம் திட்டமிட்டே
பற்றாக்குறைகள்
பற்றவைக்கப்படுகின்றன!

பற்றியதெல்லாம்
வெறியாகி... வெறியாகி....
கடும் புயலுக்குள் சிக்குண்ட
திரியின் ஒளியாய்
எமது வாழ்க்கை!

விரும்பியதை செய்யலாம் என
விதந்தோதப்படுகின்ற
இந்த ஜனநாயகம்
வேண்டாம் தோழனே
புறப்படுவாய்
"புதிய ஜனநாயகம்" சமைக்கவென

வல்லான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளியேற்றல்

இருள் கவிகிறது
எனது குட்டிப் பேனையை
மெதுவாக வைத்துவிட்டு
குசினிப் பக்கமாகச் சென்று
எட்டிப் பார்க்கின்றேன்........
குப்பி விளக்கும் கையுமாய்
ஆங்கே எனது தாய்
ஆம்...... எண்ணெய் விட்டு
திரியும் இட்டு
எரிவதற்கு வசதி செய்து
விளக்கேற்றிக்
கொண்டிருக்கிறார் அம்மா
இதனையே பார்த்துக் கொண்டு
நிற்கிறேன் நான்......
வீடு வந்த இருளோ
விளக்கைக் கண்டு விலகி
வெளியே நிற்கிறது தள்ளி.....
இதனால் குப்பி விளக்கினை
ஏற்றிய அன்னையோ
குல விளக்காகிறாள்....
எனக்குள்ளும் ஒரு குதூகலம்
இடையிடையே ஒரு ஏக்கம்
விளக்கேற்ற எனக்கும்
எவ்வளவோ ஆசையிருந்தும்
இதற்கான பழக்கமும்
பரிச்சயமும் எனக்கின்னும்
ஏற்படவில்லையே......
"என்ன செய்யலாம்.....?
என்னைக் குடைந்தேன்
விளக்கேற்றும் விதம் ஒன்றை
உணர்ந்தேன்.......
எழுதுகோல் மையையே
எண்ணெய்யாக்கினேன்
அதனது முனையையே
எரியும் திரியாக்கினேன்....
ஓ எனது கையினில்
இப்போது இருப்பது
குட்டிப் பேனையல்ல
ஒரு குப்பி விளக்கு
இதனைக் கொண்டு நான்
இந்த உலகினை
ஒளிர்விப்பேன்.

**சரஸ்வதி புத்திரன், எருவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரம்

அப்பனாரோடு பேச
அம்மையார்க் கேது நேரம்
எப்பொழுதும் வேலை யேதான்.
இருவரிடம் ஈரிடம் தான்!
அப்போதும் பிள்ளை மட்டும்
ஆண்டொன்றாய் வந்து சேரும்!
முப்போதும் எதையோ தின்னும்,
முற்றிடும் - பழுத்தும் போகும்!

அம்மையார் வெளிநா டென்றால்
அடுக்களை அப்பனார்க்கே!
இம்மையில் பொருளே வாழ்வு
இன்பமோ மறுமை யில்தான்!
"எம்மை யார்? என்னும் பிள்ளை,
இருந்திடும் யப்பான் நாட்டுப்
பொம்மையாய்! அதுவும் நாளை
பொருள் பெறப் போகும் தானே?

பொருளிலார் வாழ்ந்து பார்த்தால்
பொருள் மதிப் புணருவார்கள்!
பொருளினால் கல்வி உண்டு,
பொருளுளார்க் குண்டு வீரம்!
அருள்வெளித் தெய்வம் நல்கும்!
ஆகவே அம்மை அப்பன்
பொருள் எனும் பிள்ளை கூடப்
போகவே முயலுவார்கள்!

என்பு-தோல் போர்த்த யாக்கை
இருந்திடின் "பசித்தீ அல்லால்
அன்பு-பண் பெங்கே வாழும்?
அறம்-நெறி எங்கே வாழும்?
நன்கு "தீப்பசி" யை மாற்ற
நல்லுண வளிப்ப தானால்
பொன்-பொருள் தேடலில் தான்
போக்கிட வேண்டும் நேரம்!

**தாமரைத் தீவான்**

---

கடிதவழி தனி இதழை பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும். வருட சந்தா 200/= (தபாற்செலவு உட்பட) அனுப்பவேண்டிய தபாலகம் திருகோணமலை முகவரி எஸ்.ஆர்.தனபாலசிங்கம் 103/1 திருமால் வீதி,திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உனக்குப் புரியவா போகிறது?**

உனக்குப் புரியவா போகிறது.......?
என் மனசுகூட வெள்ளை மணல்தான்
சீாகல்விதந்த இக்கரைக்கே
செஞ்சோறிட வேண்டாமோ?
சடுதிப்பயணமிதுவல்ல என்றே
இப்போதுங்கூட உனக்குப்புரியவா போகிறது?
அதிபாரமிக்க என் அதிகாரியே
உன்
முறைத்த பார்வையும்
விறைத்த சிவப்புக்கீறலும்
தினமும் நீயென் இதயந்துளைக்கும்
இரட்டைக்குழல் சுடுகலனோ.......?
மெய்ப்பேனா செம்மை சிந்துமந்த
அவஸ்தைப்பொழுதுகளில் கூட
நொடிந்துபோன பாதங்களோடும்
வடிந்து போன உற்சாகங்களோடும்
இடைவெளியின்றி ஏகினேனேயென்
கைப்பை முழுதுமான கற்பித்தல்
உத்திகளோடு!
உழல் நாற்காலியிலே
உட்கார்ந்து கொண்டே
ஊக நிர்வாகம் நடாத்துகின்ற
உனக்கெங்கே புரியப்போகிறது?
ஹராமென நீ பத்வா முழக்கிய
அக்கணங்களிலே
நான் கடல் கிழித்து விரையும் இயந்திரப்
படகின்
நெரிசலிலோ, அன்றேல்
அவஸ்தைகளோடு நசுங்கிக்
கொண்டிருந்ததனை......
குன்றுங்குழியுமான உன்
கிறவல் பாதையின் அசிங்கப்பார்வைகளிலோ
சிக்குண்டு-

**கிண்ணியா எஸ்.பாயிஸா அலி**

---

**வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்**
**வருட சந்தா 200/=**
**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank, Trincomalee**
**என வைப்பிட்டு பற்றுச்சீட்டை**
**அனுப்பிவைக்கவும்**
**வெளிநாடு US $ 10**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லறை அற்ற செம்மணி

அண்ணா அடங்காத ஆசைகளுடன்
ஆறடிக்குள் ஆழ்ந்து கிடக்கின்றேன்
அண்ணா ஒரு வித்தாக வீழ்ந்திருந்தால்
பெருமை கொண்டு இருப்பேன்
சருகாய் சாக்கடைக்குள் சாய்ந்து விட்டேனடா

வெள்ளை உடையுடுத்தி சிட்டாகவாழ்ந்திருந்தேன்
என் ஆடைகள் உரியப்படும் வரை
அண்ணா என் ஆடைகளை கிழித்தார்கள்
கண்ணா என்று கூப்பிட்டேன் கண்ணன்வரவில்லை
அண்ணா என்றிருந்தால் உடனே நீ வந்திருப்பாய்

என் கால்களை கட்டினார்கள் கைகளையும்
கட்டினார்கள் எத்தனை மிருகங்கள் என்
இறைச்சியை தின்றன
என் இரத்தம் மட்டுமே உடல் போர்வையாய்
இருந்தது

துடிக்கத் துடிக்க என்னை உயிரோடு புதைத்தார்கள்
அண்ணா அடங்காத ஆசைகளுடன்
நான் புதைக்கப்பட்டு விட்டேனடா.

போனது போகட்டும் அண்ணா
என்றோ ஒருநாள் எங்கள் மண் மேல்
சூரியன் வருவது நிச்சயம் அண்ணா நிச்சயம்

- **மேரி ஜென்சி பிரான்சிஸ் (வவுனியா)**

---

## கிழிந்த மனசோடு

கிழிந்த மனசோடு காற்றில்
கவலை பூண்ட யாத்திரை
கலக்க மடையும் வாழ்தலிது
கஷ்டமுங்க இல்லங்க நித்திரை
கலந்திருக்கும் நண்பர் கூட்டம்
கவலையறியா திரை
விலக்கும் இருள் சூழ்ந்து
இதயம் தந்தது கண்ணீரை

எண்ணங்க ளாயிரம் உள்ளங்கையில்
எரியும் சிறகு தினம்
தினங்கள் வேக்காட்டு நிழலில்
உனக்குப் பாதையில் மனம்
தனித்தனியே சுழன்று வாழ்தல்
தரையில் நண்பர்கள் எங்ஙனம்
பின்னியும் கோத்தும் திரிந்தோம்
பிணைப்பு காலாவதி இன்று

பணமும் உறவும் நகமும் சதையும்
பாட்டில் சொன்னான் நண்பன்
எனது தலையில் சூரியனை
எவனோ ஏன் வைத்தான்
தன்னையும் மீறி துக்கம்
தலையைக் கொத்திக் கொத்தி
கண்டதும் கதைத்ததும் நட்பா
கவிப்பா சொல்லடா நண்பா.

- **கிண்ணியா ஏ.நஸ்புள்ளாஹ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத் தாள் ஒன்று
விதவையானது.......?

அறிவுத் தேடல்
அரசியற் களங்கள்
சிந்தனையைத் தூண்டும்
சின்னஞ்சிறு தகவல்கள்
உன் பேனா சிந்திய துளிகள்!

ஒத்துப்போன
தாளுக்கு,
ஒவ்வாமையாகியது
மை!
சிதறிய எழுத்துக்கள்
திரட்சியாக்கப் பட்டபோது
வரட்சியாய் போனது
பேனா.

பத்திரிகையாளன்
பக்கஞ்சாராமல் எழுத
"பயங்கரவாதி" என்ற
முத்திரையுடன்
கொலைக்களத்தில்
கயிறறுத்த கழுத்துடன்....

உயிர் குடிக்கும்
உலோகமாய்ப் போனது
உன் பேனா!
அன்றிலிருந்து விதவையாகிப் போனது
அந்த வெள்ளைத்தாள்!

ம.புவிலக்ஷி
பெரிய நீலாவணை

---

கவிதைக்கான.......
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின்களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்

நீங்களும் எழுதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கிராமம்

இதோ,
என் கிராமம்
உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும்
பாதுகாப்பின்றி

விரட்டியடிக்கப்பட்ட நாங்கள்
இன்றும் கிராமத்திற்குள்
விருந்தாளிகளாகவே பிரவேசிக்கிறோம்

சாலையோரம் நடப்பட்ட
மரங்களைப் போல்
மைல்கற்களுக்குப் பதிலாக
ஊன்றப்பட்ட மனிதர்கள்

இரும்புத் தொப்பிகளுக்குள்
முகத்தை மறைத்தபடி
கறுப்புத் துவக்குகளோடும்
பச்சை உடைகளோடும்......

இவர்களின் கால்களின்
வழியே தான்
என் கிராமத்தில்
ஜனநாயகம் நடைபோடுகிறது.

ஆங்காங்கே பெருவெடிப்புகளோடும்
கார்கில் வீரனைப் போல்
நெஞ்சை நிமிர்த்தி நிற்கும்
செல்லடி பட்ட வீடுகள்

அம்மா வைத்த
தென்னம் பிள்ளைகள்
பீரங்கிகளுக்கு முட்டுக்
கொடுக்கப்பட்ட வண்ணமாய்

வயல் வெளிகள் மட்டும்
செயற்கைப் பசுமையோடு
பச்சைக் கூடாரங்களின்
ஆக்கிரமிப்பால்

நான் உருண்டு விளையாடிய மண்
பதுங்கு குழிகளுக்குள்
அடுக்கப்பட்ட மூட்டைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ....
நான் வளர்த்த நாயின்
கடைசிச் சந்ததிகள்
அதே முகச் சாயலோடு
பச்சையுடைகளுக்கு வாலாட்டிக்கொண்டு
என்னைப் பார்த்துக் குரைக்கின்றன.
அடிக்கத் தோன்றாமல் - நான்
வீசிய ரொட்டித்துண்டுகளை
தின்றுவிட்டு
எனக்கும் வாலாட்டுகிறது
சர்வதேசத்தைப் போல

சிதறிய எலும்புகளாய்
கண்ணி வெடிகளில் சிக்கிய
கால் நடைகள்

தலையில்லா முண்டங்களான
பனை மரங்களை
மோதிவரும் காற்று
"போய்விடு" "போய்விடு"
என்றதும் போகின்றேன்

சோதனை என்ற பெயரில்
கிராமத்துப் புழுதியும் தட்டிவிடப்பட
பச்சைக் கூடாரங்களின் ஊடாக
இதோ,
என் கிராமம்....
உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும்
பாதுகாப்பின்றி.

மன்னார் அமுதன்

அஞ்சலி

## திரு.த சிதம்பரப்பிள்ளை

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி அதனூடாக "கலாசார கூட்டுறவுப் பெருமன்றம்" ஒன்றை நிறுவி, ஈழத்து நூல்களை வெளியிட்டும், நூல்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை கொள்ளவனவு செய்தும் விற்பனை செய்தும் இலக்கியப்பணி ஆற்றிவந்த திரு.த.சிதம்பரப்பிள்ளை 23.06.2009 இல் அமரரானார். அன்னாருக்கு "நீங்களும் எழுதலாம்" ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நண்பர்களும்
# சில உறவினர்களும்
# இன்னும் சில மனிதர்களும்

உனது
துன்பங்களின் வலிபோக்கும்
வார்த்தை மருந்துடன்
உன் வீட்டில் நுழைவர்
மனித முகம் கொண்ட
சில வெறி நாய்கள்!

பெண்ணே
உள்ளொன்றை வைத்துப்
புறமொன்றைப் பேசும்
இவர்களின்
அகங்களின் கொடூரத்தை
முகங்களில் படிக்கத் தெரியாப்
பாவியாய் வாழாதே!

உன் சிறு பெண்ணுக்கும்
அரிச்சுவடி
ஆரம்பிக்கும் போதே
இவர்களைப் பற்றிய
அறிவையும் புகட்டு!

மூலை முகடெங்கும்
நீலத் திரைக்குள்
மூழ்கிக் கிடக்கும்
வாலிபமும் வயோதிபமும்
தன் வெறி தீர்க்க
குறி நிமிர்த்தி அலைகிறது.

வீடுகளில்
பாடசாலைகளில்
பயணத்தில்
யாருமற்ற அனாதையாகி
ஆசிரமத்தில் இருக்கையிலும்
பச்சைக் குருத்துக்கள்
இச்சையுடன் தடவப்படுகின்றன!
ஆகவே பெண்ணே:
வெட்கம் மறந்து
உன் சின்னப் பெண்ணுக்கும்
இந்த விசர்நாய்களின்
வெறித்தனம் பற்றிய
விளக்கத்தைச் சொல்!

அஷ்ரபா நூர்டீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வினைப் புனிதப்படுத்தும் பவித்திரமான வழியொன்று

உள்ளத்தை தொலைவில்
தூக்கியெறிந்து விட்டு
தூர நின்று பார்த்தேன்.

பாதி உடையுடன்
பற்றியெரியும் வயிறுடன்
உறவுகள் தொலைக்கப்பட்டு
எண்ணற்ற என்புகள்
முட்களாய் குத்திவிட
முடவராய், குருடராய், செவிடராய்
குருதி வெள்ளத்தில்
மிதந்து வந்த அந்த
மனிதப் பேரவலங்களின் பேரொலியால்
மரணித்து விட்ட கவித்துவம்
வேதனையால் வெந்துமுனகுவதை
தூர நின்று பார்த்தேன்.

ஓ! கவிஞனே
நிர்வாணமாகிப் போன ஐக்கியம்
நிர்க்கதியாகி நிவாரணத்திற்காய்
நிலைகுலைந்து கையேந்தும் போது
உள்ள உணர்வுகளையும்
பிரார்த்திக்கும் உதடுகளையும்
சேவை செய்யும் கரங்களிடம்
அடைவு வைத்து விடு!
வாழ்வினை புனிதப்படுத்தும்
பவித்திரமான வழியொன்று அதுவேயாம்

**ஜெ. யாழினி - உப்புவெளி**

## புதுமைப் பெண்ணாக ..........

பெண்ணே பெண்ணே பாரதி கண்ட
புதுமைப் பெண்ணே - என்றும் நீ
புதுமைகள் பல செய்து இப்பாரினில்
புகழ்மாலை சூடிட வேண்டுவையே

விறகு வைத்து விதியை எண்ணி
அடுக்களை அடைந்து கிடந்ததும் நீயே
விதியை நொந்து அதைவென்று
விண்வெளி சென்றதும் நீயே

ஆதலினாற் பெண்ணே கனவுகள் கருக்கும்
பேதமையை பெயர்த்து அப்பால் வை
ஆசைகளை மண்ணாக்கும் அநியாயங்களை
எதிர்த்து நில் : பாரதி கண்ட புதுமைப்
பெண்ணாக

**- லோ.ஜெயப்பிரதா, வரோதயநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடிக் கனவுகள்.

மரணத்தின் அறிவிப்பு அண்மித்தும்
கரணம் போட்ட கணங்களையே
மனம் அசை போடும் ஏகாந்தத்தில்
தூரத்தப்படும் வியாதிகளுக்குள்ளும்
நிறுத்துப் பார்க்கிறது
தொலைந்த இளமையை.......!

விசும்பியழும் உயிர்சுவாசங்கள்
விட்டுக்கொடுக்காத மீட்டலுக்காக
வசமிழந்து நிஜத்தைத் தொலைக்கும்
தடுமாறும் அகவையோ எனைசாடும்.

பருவ வாசனைக்குள்,
மனம் சுவைத்த வசீகரங்கள்
புனர் ஜென்மமெடுத்து புன்னகைக்கும்
மண் வெளிச்சம் மறையுமட்டும்.
மயக்கங்களின் துளிகளும் முடியாத படி!

கொட்டிடும் மழையிலே
கொத்து கொத்தாக
வசந்தங்கள் அடுக்கினோம்
நித்தமும் நிலைக்குமென
கண்ணாடிக் கனவுகளில்
தினம் தினம் சேமித்தோம்
வண்ணங்கள் சிதைந்த போது
எண்ணங்களில்
எஞ்சி நிற்கும் நிழல்களாக

**எம்.எஸ்.பாஹிரா - பதுளை**

## என் வேர்கள்

பெற்றவள் இங்கிருக்க
உடன் பிறப்புக்கள்
உடனிருக்க
நான் ஓடித்திரிந்த வீடும்,
நான் வளர்த்த பூஞ்செடிகளும்
ஏக்கப்பட்டு எழுதிய கவிதைகளும்
கைவிட்டுப் போக
வேறு நாடொன்று செல்வேனோ?
மரத்தின் கிளைகள்
வளைந்து சென்றாலும்
வேர்களின் இடம் மாறுமா?

**ரி,புனிதா நாவலப்பிட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலாசத்தை விசாரிக்கும் வரை.......

நான் எப்போதும்
எதற்குமே அவசரமானவன்.

இந்த அவசரத்தினாலேயே......
ஆசைப்பட்டவைகளைப் பெற்றுக்கொண்டவன்.
அதிகமானவற்றைப் பறிகொடுத்தவன்,

எதற்கும் ஆசைப்படவேண்டுமென்பது
எனது சித்தாந்தம்.
ஆசைப்படாமல் எதையும் சாதிக்க முடியாது,

சாதிப்பது என்பது.....
சாயம்போன பழைய "மல்" வேஷ்டியை
வைத்துக்கொண்டு
வெற்றிச் சமர்த்துகள் பேசுவோர்களுக்கு
விளங்கித் தொலையாது,
ஏனெனில்...... அவர்களுக்கு எல்லாமே
சும்மா கிடைத்தவை.
சுரண்டிச் சேர்த்தவை.

சாதிப்பவன் சேர்த்ததெல்லாம்...... அனுபவங்கள்,
அந்த அனுபவங்களே வெற்றியின் படிக்கற்கள்.

சாதிக்க வேண்டுமென்றால்.......
ஆசை வெறியாக அர்ச்சிக்கப்படவேண்டும்.
ஆசை என்பது, ..........
"அண்ணலும் நோக்கி ..... அவளும்
நோக்கும்......."
தோல் ஆசையல்ல நண்பனே

சாதிக்க வேண்டுமென்ற "போர் ஆசை",
சாதிப்பவன் போராளிதான்,
அவன்தான் இழப்புகளைப் பற்றி எண்ணாதவன்,
......
அந்த இழப்புகளையே விதைப்புகளென்று
நினைக்கும்
பக்குவப் பட்டவன்.

இனியென்ன... நட!
வெற்றி உன் விலாசத்தை விசாரித்துக்கொண்டு
வரும் வரை நட....
அது அவ்வளவு தூரத்தில் இல்லை.

-நீலா பாலன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகையன் நினைவுக் குறிப்பு-01
## -மரபுக் கவிதை – புதுக்கவிதை

மூத்த கவிஞர் முருகையன் அவர்களை நினைவுகூர்வது என்பது தமிழ்க்கவிதையின் ஒரு கொடுமுடியை நோக்குவது போலாகும். இலங்கையின் தலைசிறந்த கவிஞர் எனப் பலரும் கருதக்கூடிய முருகையன் ஒரு மக்கள் கவிஞருங்கூட. பேராசிரியர் கைலாசபதி முருகையனைக் கவிஞருக்கும் கவிஞர் என்றும் நாற்பதாண்டுகட்கு முன் குறிப்பிட்டார். பேராசிரியர் கைலாசபதியின் கூற்றை முருகையன் வழங்கிய ஒவ்வொரு படைப்புமே உறுதி செய்து வந்துள்ளதை நாம் காணலாம்.

முருகையன் மரபுச்செய்யுட்களிலே தனது கவிதைகளை படைத்தார். மரபின் விதிகள் அவரது கவித்துவத்திற்கு ஒரு தடையாக இருக்கவில்லை. மாறாக அவை அவரது கவிதைக்கு வலுவூட்டி நின்றன. புதுக்கவிதைக்கு தமது சொந்த இயலாமை காரணமாக சார்ந்து நிற்கின்ற சிலர் புதுக்கவிதை வழங்குகின்ற சுதந்திரம் பற்றி பேசினாலும் அச்சுதந்திரங்கள் எவை என்றோ அவற்றை எவ்வாறு பயன்படுத்த இயலும் என்றோ சரியாக அறியாதவர்களாகவே இருந்தனர்.

### பேராசிரியர் சி.சிவசேகரம்

முருகையன் தரமான புதுக்கவிதைகள் வருகின்ற வரையும் புதுக்கவிதை என்ற வடிவத்தை முற்றாகவே நிராகரித்தார். அவ்விடயத்தில் மகாகவி, நீலாவணன் போன்றோருக்கும் அவருடன் உடன்பாடு இருந்தது. எனினும் தரமான புதுக்கவிதைகள் உருவான சூழ்நிலையில் அவர் அவற்றின் கவித்துவத்தை ஏற்கத்தயங்கவில்லை. எனினும் தனக்குப் பழக்கப்பட்ட செய்யுள் வடிவங்களிலேயே தொடர்ந்தும் எழுதிவந்தார்.

இவ்விடத்து மாசேதுங் சீன நவீன கவிதைகள் தொடர்பாக கூறிய கருத்துடன் முருகையனுடைய அணுகுமுறை உடன்பாடாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மாறாக நவீன கவிதை வடிவங்களை ஏற்ற போதும் தனக்கு பழக்கப்பட்ட செய்யுள் வடிவங்களிலேயே எப்போதும் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார் என்பதை அவரது நூலின் முன்னுரை கூறுகிறது. முருகையன் யாப்பிலக்கண விதிகளை பேணுவதற்காக பொருந்தாத சொற்களை வலிந்து புகுத்தியவரும் அல்ல சொற்களை சிதைத்த வருமல்ல. மரபுக்கவிதையும் அவ்வாறு செய்ய வற்புறுத்துமாயின் அவ்வற்புறுத்தலுக்கு பணிபவர் நல்ல கவிஞரும் அல்ல. முருகையன் மட்டுமன்றித் தமிழ் கவிதை மரபில் வெண்பா தோன்றிய காலம் தொட்டு இறுக்கமான யாப்பு விதிகளுக்குட்பட்டு கவிதை படைத்த பெரும் கவிஞர்கள் இருந்துள்ளனர். அந்த வரிசையில் வந்த எவரும் கவிதையின் பொருளையும் சொற்செம்மையையும் .விட இயந்திரப்பாங்காக யாப்பிலக்கண விதிகளை பேண முயன்றோரல்ல. எனவேதான் மரபுக் கவிஞர்கள் பற்றிய முற்கூறப்பட்ட விதமான குற்றச்சாட்டு உண்மைக்குப் பொருந்தாதது.



புதுக்கவிதை சிறப்பாக அமையவேண்டுமாயின் அது மரபை உதறுவது போதாது. புதுக்கவிதை பேச்சு மொழியின் சந்தத்தை எவ்வளவு சிறப்பாக உள்வாங்குகிறது என்பது அதன் ஓசை நயத்தை முடிவுசெய்கிறது. மற்றபடி புதுக்கவிதைக்குரி யனவாக கொள்ளக்கூடிய கவித்துவமான எச்சிறப்பும் மரபுக்கவிதைக்குட்பேண இயலாததல்ல. புதுக்கவிதை வாசகர்களை எளிதாக சென்றடையக் காரணங்கள் பலவுள்ளன. மரபுக்கவிதையின் சந்தங்களுடன் மட்டுமன்றி பாடல்களின் சந்தங்களுடனுமான பரிச்சயங் குறைந்து போய்க் கொண்டிருக்கின்றமையும் இன்று உரைநடையே இலக்கியத்ததின் பெருவழக்காகியுள்ளதுடன் அன்றாடப் பேச்சுமொழி செல்வாக்குப் பெற்றுவருகின்றமையும் முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையனுடைய கவிதைகள் பேச்சு மொழியை உள்வாங்கின. அதனாலும் முருகையனுடைய கவிதைகள் எளிதாகவே வாசகனை சென்றடைய வல்லனவாயின. எனினும் அவற்றின் ஆழம் மிகுதி. எனவே அவற்றை மீண்டும் மீண்டும் வாசிப்பதன் மூலம் முற்றாக சுவைக்கலாம். இப்பண்பு அவரது தனிப்பாடல்களில் மிகுதியாக உள்ளது முருகையனை அறிவதன் மூலம் நமது கவிஞர்கள் மேம்படுவர் என்பது என் எண்ணம். இறுதியாக முருகையனை பற்றி அறியாமல் ஈழத்துக் கவிதை பற்றி மட்டுமல்லத் தமிழ்க்கவிதை பற்றிக்கூடப் பேச முற்படுவது அபத்தம் எனுமளவிற்கு முருகையனுடைய பங்களிப்பு உள்ளது என்பது இச் சிறுகுறிப்பை முடித்து வைக்கப் போதுமானது.

---

**பயில்களம்**

**நவநாகரிகம்**

**கட்டை உடையணிந்து**
**எட்டி நடக்க முடியாது**
**அட்டை நடை நடந்து**
**பஸ் ஏற முடியாமல்**
**கண்டக்டர் கைகொடுக்கும்**
**பரிதாபம் தான் ஐயோ!**

**அரத்தாளால் முகத்திலுரஞ்சி**
**சட்டக்கரியை கண்ணில்தேய்த்து**
**கறிமஞ்சளை முகத்திலப்பி**
**அம்மையின் அழகைக் கெடுத்து**
**இரண்டு இலட்சம் கூட்டிக் கொடுக்கும்**
**பரிதாபம் தான் ஐயோ!**

**ஆட்டுவால் தலையில் தொங்க**
**அதைப்பிடிக்க நாலுபேர் அலைய**
**சமூக கிளர்ச்சியை தூண்டிவரும்**
**நாகரிகமே......!**
**இன்றே அடங்கிவிடு**
**அன்றேல் .......**
**ஊரடங்கு போட்டு விடுவேன்.**

**த.யாழினி, - யா/ கொடிகாமம்**
**திருநாவுக்கரசு ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது உனக்காக

கவலைகளை
கானல் நீராக்கு!
கனவுகளை நித்தம்
புனிதமாக்கு!
கடந்ததை
கடந்து (கடக்க) விடு!
கடக்க இருப்பதில்
கவனமாயிரு!
இன்பமோ துன்பமோ
துணிந்து எதிர்கொள்!
ஏனெனில்
இது (வாழ்கை) உனக்காக!

- ர. ஜோயல் ஜைரஸ்
கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை - கல்முனை.

## அகதி வாழ்வு

அனல் கக்கிய கனல் தீயில் - எத்தனை
உயிர்கள் இறந்து போயின?
எட்டுச் சதுர அடிக்குள்
எத்தனை பேர் தான்
வாழ்க்கைச் சரிதம் வாசிப்பது?
இருபதும் எழுபதும்
வேறின்றிக் கிடந்தன!
தாச்சி விளையாட்டு விளையாடிய
ஆச்சி வீட்டு முற்றம் மறந்து
ஐந்தடியில் முள்ளு வேலிதான்
முல்லை மக்களுக்கு சொச்சமாயின!

சீரழிந்து போன மனங்களுக்கும்
கற்சிலையாய் போன சனங்களுக்கும்
கூடாரங்களில் அகதி வாழ்க்கை தான்
மிச்சமாகின!

ம.கம்ஷி, - வவுனியா / சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

## அன்னையே

பாரினில் பதம் பதிக்க
தனயனவன் என்னை ஈன்றாள் தாய்
காரிருள் தனியே வாழ்ந்தேன்
ஒளிதனை ஈந்த அண்ணல் அவள்.

காலங்கள் கோலங்கள் மாறலாம்
காற்றோடு கடலசைய மறக்கலாம்
குயில் பாட மயிலாட மறுக்கலாம்
என் அன்பு உன்னை மறக்குமோ

தளராது வாழ்வேன் - அன்பு
அணையாது காப்பேன்
என்றும் உந்தன் ஆசி கொண்டு
நல்வாழ்வை நாடுவேன் அன்னையே

அ. நோபட்யூட்

கமு/ கார்மேல் பற்றிமா
-தேசிய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகையன் நினைவுக் குறிப்பு-02

**பெரியஐங்கரன்**

சூரியன் தலைக்கு மேல் நின்றான். நீா வேலி கந்தசாமி கோயிலில் இருந்து சற்றுத்தூரம் நடந்து, இரண்டொரு முடக்குகள் தாண்டினால் முருகையனின் வீடு வந்துவிடும். அகில இலங்கை இளங்கோ கழகச் செயலாளர் நந்தகுமார், பரா. ரதீஸ் ஆகியோருடன் நானும் முருகையனைக் காணும் ஆவலுடன் நடக்கிறோம்.

ஒருவாறு சூரியனைப் பொருட்படுத்தாது நடந்து, சென்று முருகையனின் வீட்டுக்குள் நுழைந்து வழமை போலவே மகிழ்ச்சியுடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் எதிர் எதிரே அமர்ந்திருந்தோம். (மூவரும் முருகையன் உடல்நிலை பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்). முருகையனை அவர்வீட்டில் சந்திப்பது முதற்தடவை அல்ல. ஆனாலும் அவரைச் சந்திக்கின்ற ஒவ்வொரு முறையும் எமக்குள் புதியதோர் உலகம் பிறப்பதை உணர்ந்திருக்கின்றோம்.

பரா. ரதீஸ் அவர்களின் "அவனொரு மெழுகுவர்த்தி" என்ற நூலுக்கு அணிந்துரை பெறுவதற்காகவே வந்திருந்தாலும் அதுபற்றி பேச்சு எடுக்க எமக்கு தயக்கமாக இருந்தது. காரணம் முருகையனின் உடல்நிலை பற்றி ரஜீவன் முன்னரே அறியத் தந்தது தான்.

நான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன் முருகையனைக் கேட்க வேண்டுமென்று எனக்குள் நீண்ட நாட்களாகவே பதுங்கி இருந்த கேள்விகளைக் கேட்கத் தொடங்கினேன். அடிக்கடி இருமியவாறு தன்நோய் பற்றி சொல்லிக்கொண்டு நான் கேட்ட கேள்விகளுக்கு மெல்லிய குரலில் அமைதியோடும் அன்போடும் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

உங்களது எந்த நூலுக்காவது பரிசு கிடைத்திருக்கிறதா? இல்லை" "காரணம்" "என்னுடைய நூலை நான் எந்தப்போட்டிக்கும் அனுப்புவதில்லை". "ஏன்"

"போட்டி நடத்துபவர்கள் தரமானவர்கள் அல்லா" (வழமை போலவே தாடியைத் தடவிக் கொண்டே குழந்தைச்சிரிப்பு)

மஹாகவியின் தாக்கம் உங்களுக்கு இருக்கா? "மகாகவியின் தாக்கம் எனக்கு இருப்பதை நான் மறுக்கவில்லை. எனது தாக்கமும் மகாகவியிடம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது"எல்லோரும் தேநீர் பருகிக் கொண்டிருந்தோம். தனது இதயத்தில் பதிந்த பல விடயங்களை முருகையன் சொல்லிக் கொண்டிருந்தார் (இடையிடையே நெஞ்சைத் தடவிக் கொண்டு மௌனம் காத்தார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்திற்கு முன்னர் பத்திரிகைகளில் வரும் கவிதைகளை சேகரிக்கும் வழக்கம் எனக்கு இருக்கவில்லை. ஆனால் பத்திரிகைகளில் வந்த கவிதைகளை ஒன்றும் விடாமல் சேகரித்து வைத்திருந்து எனக்கு தந்தவர் என் மனைவி தான் என்று சொல்லி இளமையின் சில நினைவுகளை மீட்டினார்.

எல்லோரும் மெய் மறந்து பேசிக்கொண்டிருந்தோம். வந்த நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. நூலை வாசித்து அணிந்துரை தரக்கூடிய நிலையில் அவர் இல்லை என்று எமக்குத் தெரியாமல் இல்லை.

நு∴.மானிடம் வாழ்த்துரையையும், முருகையனிடம் அணிந்துரையையும் வேண்டுவது தான் பரா.ரதீஸின் பெரு விருப்பு. பேராசிரியர் நு∴.மானிடம் வாழ்த்துரை வேண்டும் போது எமக்கு சிக்கலாக இருக்கவில்லை. ஆனால் இவரிடம் அணிந்துரை வாங்குவது சிக்கலாக இருக்கப்போவது உண்மை. (நூல் முழுமையையும் வாசித்து அணிந்துரை எழுதக்கூடிய தேக ஆரோக்கியம் இப்போதைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

பரா. ரதீஸ் மெதுவாகத் தொடங்குகிறார். சற்று நேரம் நிசப்தம்
முருகையன் சொன்னார்.
"நான் மறுக்கவில்லை ஆனால் உடல்நிலை ஒத்துவருமோ தெரியவில்லை"
போன உயிர் மீண்டும் எமக்குள் வந்து குடியேறியது.

"நூல் பிரதியைத் தந்துவிட்டுப் போகிறோம். முயற்சித்துப் பாருங்கள். உங்கள் அணிந்துரை அவசியம் தேவை". எதிர்பார்ப்போடும் ஏக்கத்தோடும் பரா. ரதீஸ் சொன்னார்.

புறப்பட்டோம்.இப்போது மேகங்கள் சூழ்ந்திருந்ததால் சூரியன் கொடுமை குறைந்திருந்தது. "மாடுகளும் கயிறு அறுக்கும்" "நாங்கள் மனிதர்" முதலான முருகையனின் நூல்கள் என் கையில் இருந்தன.

"ஆதிபகவன்" "சங்கடங்கள்" என்பன பரா.ரதீஸ் அவர்களிடம் இருந்தன. ஆதிபகவன் என்ற நெடும் பாடலை ஏற்கனவே நான் வாசித்திருக்கிறேன். ஐந்து நாடகங்கள் சேர்ந்த நூல் சங்கடங்கள். நாடகநூல் ஆதலால் அதில் எனக்கு அக்கறை இல்லை. முருகையனின் நூல்களைப் பற்றியும் அவை பற்றிய விமர்சனங்களைப் பற்றியும் பேசிக்கொண்டு வந்தோம்.

"முருகையன் ஒரு கவிஞனே அல்ல" என்று நட்சத்திரன் செவ்விந்தியன் எழுதியதைப் பற்றியும் "கவிஞர்களுக்கெல்லாம் கவிஞன் முருகையன்" என்று கைலாசபதி எழுதியதையும் அவை இரண்டுமே தவறு என நு∴.மான் எழுதியதைப் பற்றியும் மூவரும் பேசினோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்நந்தனின் கையில் "ஈழத்தில் தமிழ் இலக்கியம்" என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நூலும் கைலாசபதியும் முருகையனும் இணைந்து எழுதிய "கவிதை நயம்" என்ற நூலும் இருந்தன. ஈழத்தில் தமிழ் இலக்கியம் என்ற நூலில் 192ம் பக்கத்தில் கா.சிவத்தம்பி எழுதியதை நந்தகுமார் எங்களுக்குக் காட்டினார்.

"தமது அரசியல் சித்தாந்தத்தினை (உலக நோக்கினை) பண்பாட்டுடன் நன்கிணைந்து விளங்கிக்கொண்டு அந்த விளக்கத்தெளிவுடனும் தமிழ் யாப்பு மரபினை கவிஞன் என்ற வகையில் அறிவுத்தொழிற்பாட்டாலும் உள்ளுணர்வுத் தொழிற்பாட்டாலும் வந்த மரபுத் தெளிவுடனும் அதே வேளை அடிநிலை மக்கள் பால் கொண்ட கொள்கை நிலைப்பட்ட நேசத்தால் வரும் கொள்கைக் கட்டுப்பாட்டுடனும், அகண்ட உலகப்பின்னணியில் தமிழையும், தமிழர் பிரச்சினைகளையும் வைத்து நோக்கும் திறனுடனும் கவிதை இயற்றுபவர்கள் இன்று தமிழில் மிக மிகச் சிலரே. முருகையன் ஒருவரைத் தான் இப்பண்புகளுக்கு முற்றுமுழுதான பிரதிநிதியாகக் கொள்ளலாம்.

முருகையன் கவிதைகள் பற்றி எல்லோரும் சொல்லியாகிவிட்டது. இனிகாலம்தான் தன்பதிலைச் சொல்லவேண்டும்.

## காலத்தின் தேவையை பூர்த்தி செய்த கவிஞர் முருகையன்

அரை நூற்றாண்டுக்கும் மேலாக சமுதாயப் பிரக்ஞை கொண்ட இலக்கியப்பணிபுரிந்த கவிஞர் முருகையன் கவிதையுடன் தன்னை மட்டுப்படுத்தாமல் கட்டுரை, திறனாய்வு எனப் பல்வேறு தடங்களிலும் கால் பதித்துக் கொண்டார். 1960 களில் தமிழ் மரபுவாதிகள் எனப் பட்டோருடன் ஏற்பட்ட விவாதங்களில் முன்னணியில் நின்றதோடு பல்புல ஆளுமை காரணமாக கல்விப்புல ஆளுமைகளான பேரா க.கைலாசபதி, பேரா.கா.சிவத்தம்பி பேரா.சி.தில்லைநாதன் பேரா.சி.சிவசேகரம், ஆகியோருடன் இணைந்து மக்கள் இலக்கியத்துக்காக பணியாற்றினார்.

மாக்சியத்தை தனது கோட்பாடாக வரித்து கொண்ட இவர் "தேசிய கலை இலக்கிய பேரவையின்" தலைவராக இருந்து சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் அரசியல் இலக்கிய அணுகுமுறையை நெறிப்படுத்திய பெருமைக்குரிய கவிஞர் ஆவார்.

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்தாடற் களம்**

## புதுசா? புராதனமா?

இன்றைய இயந்திர யுகத்தில் எதற்கும் நேரமில்லாது காலில் சில்லுப் பூட்டியபடி சுயத்தை இழந்து சுற்றித்திரியும் மனிதனுக்கு ஒரு செய்தியை உறைக்கச் சொல்லும் தன்மையை கவிதை பெற வேண்டும். அது மரபில் இருந்தாலென்ன, நவீனத்தில் இருந்தாலென்ன, புதுசா புராதனமா என்ற விசாரணை வேண்டாம். புரட்சியானதாக அமைதல் வேண்டும்

ந.பார்த்தீபன்
விரிவுரையாளர். வவு.தே.க.கல்லூரி

இன்றைய உலகில் நம் எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளிக்காட்டும் அரிய சாதனங்களாகப் பல இலக்கிய வடிவங்கள் காணப்பட்டாலும் கவிதையே யதார்த்தமான ஊடகமாகப் பரிணமிக்கிறது. தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தச் சிறந்த கருவி கவிதையே. கவிதை என்பது கவிஞனின் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியின் வெளிப்பாடு தானே. மேலும் உணர்ச்சி வெளிப்பாட்டு வடிவங்களான சிறுகதை, நாவல், நாடகம், குறுநாவல் போன்றன கவிதை அளவிற்கு உணர்ச்சியை காட்டுவதில்லை என்றே கூறவேண்டும்.

அடுத்து, மேற்கூறிய இலக்கிய வடிவங்கள் 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தோடு தமிழில் தோற்றம் பெற்றன. ஆனால் கவிதையோ சங்ககாலத்திலிருந்து தோற்றம் பெற்றது என்ற நிலையில் காலத்தால் முந்தியது எனக் கூறலாம். இக்கவிதையானது உள்ளத்தோடு தொடர்புபட்ட, ஒரு மொழியினுடைய உச்சப்பயன்பாடாகக் கொள்ள முடியும். இந்த உச்சப்பயன்பாடு முழுக்க முழுக்க உணர்ச்சியோடு தொடர்புபட்டது. இந்த உணர்வை வெளிப்படுத்துவதில் தான் கவிஞனின் திறமை தங்கியுள்ளது.

இன்று மரபுக் கவிதை, நவீன கவிதை, வசன கவிதை, உரை வீச்சு, மணிக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை... எனப் பல பெயர்கள் கொண்டு கவிதை அழைக்கப்படுகிறது. பெயரைத் தான், வடிவத்தைத் தான் கருத்தில் கொள்கிறார்களே தவிர கவிதையின் அடிநாதமாக விளங்குகின்ற உணர்ச்சியை யாரும் பார்ப்பதில்லை. உணர்ச்சியை வெளிப்படுத்தாத, அது எந்த வடிவத்தில் இருந்தாலும் அது கவிதை என்பதில் பொருத்தமில்லை. ஆக வடிவம் முக்கியமில்லை. அதற்குப் பெயர் சூட்டிக் குழப்புவதும் அவசியமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரவிலே வாங்கினோம்
இன்னும் "விடியவில்லை" என்பது மிகச் சிறிய நல்ல கவிதை. "சுதந்திரம்" என்னும் இதன் தலைப்பையும் இணைத்துப் பார்க்கும் போது இதன் அர்த்தம், உணர்ச்சிச் செறிவு, பொருள் வீச்சு என்பன வாசகருக்குப்புரியும். இந்த வீரியம் மிக்க கவிதை வாசகர் அளவில் சிறியதாய் இருந்த போதும் தாக்க முழுமை பெறுகின்றதல்லவா? இந்தத் தாக்க முழுமை கவிதைக்கு முக்கியம் இதுவே இதன் உணர்ச்சிச் சிறப்பு.

"கல்லிலே செதுக்கிய கடவுளை விட
கருவிலே சுமந்த தாயின் சிறப்பு மேல்" என்பது போல் உணர்ச்சியற்ற சொற் சித்திரங்கள், இல்லையில்லை சொற் சிலம்பங்களைவிட
உணர்ச்சியான ஒரு சொல் போதுமன்றோ.

"அண்ணா அக்கா
தம்பி தங்கை
நான் அம்மா
பீடி சுற்றுகிறோம்
.....
அப்பா
ஊர் சுற்றுவதால்......"

மேற்கூறிய கவிதையில், வாசித்ததும் ஏதோ ஓர் உதைப்பு, மனதில் ஒரு நெருடல், பதைபதைப்பு ஏற்படுகின்றதல்லவா? இந்நிலையில் புதைந்திருக்கும் உணர்ச்சியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

"பசியாற பார்வை போதும்
பசியாற வார்த்தை போதும்" என்பது போல் வாசித்ததும் மனநிறைவைத் தரவேண்டும். நெற்றிப்பொட்டில் அடித்தது போல் திகைப்பைத் தரவேண்டும்.

"அவள்
நிர்வாணத்தை விற்றாள்
ஆடை வாங்குவதற்காக....."

இக்கவிதையை வாசித்ததும் கவிஞர் சொல்ல வந்த செய்தி வாசகனுக்கு நெற்றிப்பொட்டில் இடித்தது போல் ஓர் ஆன்ம திகைப்பு ஏற்படுத்துகின்றதல்லவா? இதுவே கவிதையின் சிறப்பு இன்றைய இயந்திர யுகத்தில் எதற்கும் நேரமில்லாது காலில் சில்லுப் பூட்டியபடி சுயத்தை இழந்து சுற்றித்திரியும் மனிதனுக்கு ஒரு செய்தியை உறைக்கச் சொல்லும் தன்மையை கவிதை பெறவேண்டும்.

அது மரபில் இருந்தாலென்ன, நவீனத்தில் இருந்தாலென்ன புதுசா, புராதனமா என்ற விசாரணை வேண்டாம். புரட்சியானதாய் அமைதல் வேண்டும்.

ஓர் அக்கடமியின் ஆதங்கம் என்ற தலைப்பில் புகலிடக் கவிதை ஒன்று பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தட்டில் கிடப்பதைத் தட்டிவிடும் போதெல்லாம்
பட்டப்படிப்பின் சான்றிதழ்களாய்த் தெரியும்"

எதுகை, மோனை, சந்தம், தளை, யாப்பு..எனப் பட்டியல் சிறப்புகளை இலக்கணங்களைக் கொண்டமைவது தான் நல்ல கவிதை என்று சொல்வதை விட வாசகனைச் சிந்திக்க வைப்பனவாக, வாசகனது உணர்ச்சியைத் தூண்டி விடுவனவாக, கவிஞன் பெற்ற உணர்வினை வாசகனையும் பெற வைப்பனவாக கவிதை அமைய வேண்டும்.

"கவிதைக்குப் பொய் அழகு" என்று சொல்வதெல்லாம் கவிதையை விளக்கும் வார்த்தைகளல்ல. கவிதை உண்மையைப் பேச வேண்டும். அதையும் உணர்வுடன் பேச வேண்டும்.

எங்கள் அடுப்பில் எரியா நெருப்பு
எங்கள் வயிற்றில்
எரிந்து கொண்டிருப்பதை
நீ அறிவாயா
நிதமும் நிதமும்
எங்கள் வயிற்றில் எரியும் நெருப்புத் தணலில்
நாங்கள்
சாம்பலாவதை அறிவாயா?
ஆயினும் ஏன் நீ
அமைதி கொண்டுள்ளாய்?"

சிலர் வாழப் பலர் பலியாவதை எடுத்துச் சொல்லக் கவிஞனின் சொற்கள் வாசகனை எரிய வைக்கின்றன. இது உண்மையின் வெளிப்பாடு உணர்ச்சியின் வடிகால்.

"என் இனிய தோழிகளே
இன்னுமா தலைவாரக் கண்ணாடி
சேலைகளை சரிப்படுத்தியே வேளைகள் கழிகின்றன.
வேண்டாம் தோழிகளே
ஆடையின் மடிப்புகள்
அழகாக இல்லை என்பதற்காக
கண்ணீர் விட்ட நாட்களை மறப்போம்.
வெட்கம் கெட்ட அந்த நாட்களை மறந்தே விடுவோம்.

புதுக்கவிதையிலும் சரி, புராதன கவிதையிலும் சரி, உணர்ச்சிபொங்க, உள்ளத்தை உலுப்ப கவிதைகளாகப் படையுங்கள். நல்ல கவிதைகளைத் தேடிப்பிடித்து நலமான கவிதைகளை நாளும் படைத்திடுங்கள்.

கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம். "பாரதி ஒரு சர்ச்சை" கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் இடம்பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகக் குறிப்பு**

**சீனா உதயகுமாரின் இரண்டு கவிதைத் தொகுதிகள்.**

**வெற்றியுடன்.**

வெளியீடு: கண்ணன் பதிப்பகம், பிள்ளை நிலா, கொற்றாவத்தை வல்வெட்டித்துறை.

" நாய் குரைத்தது
திரும்பிப் பார்த்தேன்
மனிதன் நின்றான்
நரி ஊளையிட்டது
திரும்பிப் பார்த்தேன்
மனிதன் நின்றான்.

மனிதப்பண்பு குன்றிவருவதை எடுத்துக்காட்டும் "மாற்றம்" போன்ற ஒரு சில கவிதைகள் தவிர பெரும்பாலான கவிதைகள் காதலொழுக்கம் சார்ந்ததாதகவும், அறிவுரை புகட்டுவனவாகவும் காணப்படுகின்றன.
குறள் கூறும் காதலொழுக்கம் இவரது கவிதைகளில் சிறப்பாக வெளிப்படுகின்றன.

அறிவுரைக் கவிதைகளைப் பொறுத்தவரை "அறிவுரைகள் கவிதைகள் ஆகா. இத்தொனிப் பொருளில் முன்பு தமிழ் வாணனும், பின்பு எம்.எஸ் உதயமூர்த்தியும் எழுதிவிட்டனர் என்பதை வளர்ந்து வரும் இளங் கவிஞர் சீனா. உதயகுமாருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்" என அணிந்துரை வழங்கிய கவிஞர் சோ. பத்மநாதன் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.

**உடைந்த நினைவுகள் :**

காதலைப் பொருளாகக் கொண்டஇரு நீண்ட கவிதைகளின் தொகுப்பாக "உடைந்த நினைவுகள்" அமைகிறது.

"காதல் இது மனிதன் தோன்றிய காலத்திலேயே முகிழ்த்துவிட்ட மனிதவுணர்வுகளிலொன்று. சீனா, உதயகுமாரின் இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் காதல் சிறகுகள் பல்வேறு கோணங்களில் விரிக்கப்பட்டுள்ளன.

"நீ எனக்கும் /நான் உனக்கும்
நீதிபதிகளாவோம்" என்பன போன்ற கவி வரிகள் உயிரோட்டமானவை. "சிந்திக்கத்தூண்டுபவை" என அணிந்துரையில் கி.நவநீதன் அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

காதல் என்ற கருவினூடாக
எங்களுக்கென்ற சிரிப்பு!
எங்களுக்கென்ற மகிழ்ச்சி!
எங்களுக்கென்ற சுதந்திரம்

**விலை:-200/-**

என்ற ஆழ்ந்த கருத்தையும் முன்வைக்கும் சீனா. உதயகுமார் அதற்கு சாதனமாக அயலக மெகா தொடர் பாத்திரங்களினது பெயர்களையும் நடிக நடிகையர்களின் படங்களையும் பயன்படுத்துவதை தவிர்த்திருக்கலாம்.
**மதுரா, அல்வாய் வடமேற்கு, அல்வாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதுவும் பிந்திய இரவொன்றின் கனவுதான்..........**(கவிதைத்தொகுப்பு)

**கிண்ணியா ஜே.பிரோஸ்கான்**

"எப்போது விடியப்போகிறது
பதவி மான்களே
இப்போதாவது
நாட்களா............மாதங்களா.......
வருடங்களா..........தசாப்தங்களா....
தேதி குறித்திடு
விடிவு எப்போது............

தொகுப்பில் இடம்பெறும் கவிதையின் ஒரு சில அடிகள் இவை. நம்பிக்கை இழந்து அவலங்களுக்குள்ளான மக்களின் சார்பாக உரத்து ஒலிக்கும்குரல் இது.கவிதைகள் குறுங்கவிதைகள் என மொத்தமாகஅறுபதுக்கும் மேற்பட்ட கவிதைகளைக் கொண்டுள்ள தொகுப்பில் உள்ள கவிதைகளின் பாடுபொருள் வறுமை போர் காதல் ஊழல் போன்ற பல்வேறு வகையினதாக அமைந்துள்ளன.

"தனக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆர்வத்தை ஆற்றலை நன்கு வெளிப்படுத்தக்கூடிய சிறந்த ஊடகமாக புதுக்கவிதையை தேர்ந்தெடுத்துக்கொண்டு அதனூடாக தன்னை அடையாளப்படுத்தி உள்ளார்" என அணிந்துரையில் கவிஞர் ஏ. எம். எம் அலி கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

விலை:- 200/=
தொடர்பு:- ம.்.ருப்நகர் கிண்ணியா-03.

---

**நதிகளைத் தேடும்**
**சூரிய சவுக்காரம்(கவிதைத் தொகுதி)**
**கிண்ணியா ஏ.நஸ்புள்ளாஹ்**

"அவர்களிடம்
புதிய சிந்தனை நடும்
எந்த நகர்வும் இல்லை
அவர்களுக்கு தெரிந்ததெல்லாம்
சிறகுகள் உடைப்பது
மிருக நகங்களாக
மார்பகங்கள் அறுப்பதுமே!"

"தொகுப்பில் இடம்பெற்ற விண்ணப்பம் உணர்மூலம்" என்ற கவிதையில் வரும் அடிகள் இவை. புதிய சிந்தனைகளை வேண்டி நிற்பனவாக, அங்கீகரிப்பனவாக இவரது கவிதைகள் அமைகின்றன என்பதற்கு மேற்போன்ற வரிகளே நல்ல உதாரணம். தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் பின்நவீனத்துவ பாணியிலான ஒட்டம் சற்று தெரிகிறது எனலாம். கால் நூற்றாண்டுக்கு மேலாக தொடரும் இன பிரச்சினையினால் மக்கள் அனுபவிக்கும் போர்ப் பயங்கரம், அவலம், துயரம் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக இவரது கவிதைகள் அமைகின்றமை சிறப்பம்சமாகும்.

**விலை:- 200/=**
**வெளியீடு:- புன்னகை இலக்கிய வட்டம் கிண்ணியா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைந்த தேனீக்கள் (கவிதைத்தொகுப்பு)**

**சு.வரதன்**

"செத்தது மூளை
உயிர்த்தது ஏமாற்றம்
வயிற்றுக்குப் பிழைப்பு
மகிழ்வில்லை மைந்தா"

தொகுப்பில் இடம்பெறும் கவிதையொன்றின் வரிகள் இவை. கல்விக்கும் தொழிலுக்கும் சம்பந்தமில்லாத நடைமுறை வாழ்வை சித்திரிக்கும் தன்னுணர்வுப் பாங்கான வரிகள் இவை.

"வரதனுடைய கவிதைகளை அடிப்படையில் இரண்டாக வகுக்க முடியும். சமூக விமர்சனங் களாக அமைந்திருக்கின்ற கவிதைகள், தன்னுணர்ச்சிப் பாங்காக அமைந்திருக்கின்ற கவிதைகள்" என அணிந்துரையில் தென் புலோலியூர் பரா.ரதீஸ் குறிப்பிடுவது அவதானத்திற்குரியது.

மூத்த எழுத்தாளர் நந்தினிசேவியர் அவர்களுக்கு சமர்ப்பணமாக்கப்பட்டிருக்கும் இத்தொகுப்பில் எல்லாமாக 42 கவிதைகள் அடங்கியுள்ளன.

**விலை 200/=**
**வெளியீடு வவுனியா தமிழ்ச்சங்கம்**

---

## சந்ததிக்கு இனியும்..................

சமபள உயர்வுக்கு
சதா சம்பாசனை செய்யும்
சர்வ கட்சிகள்
சந்தா கொடுத்த
சந்ததிகள் இப்போ நடுச்
சந்தியில்
சங்கச் சந்(க)தியில்
சங்கங்களே பெருக்கம்
சந்ததிகளே மன இறுக்கம்
சங்கச் சண்டைகள்
சரித்திரம் படைக்க
சந்தாகாரர் தரித்திர
சங்கமத்துள்.....
சரித்திரம் படைக்கிறோம்
சம்பளத்திற்காய்....
சத்தியாக்கிரகம் இருந்தால்
சதி செய்யப்படுவோம்
சந்தியில் சதிராடப்படுவோம்
சந்ததிக்கு இனியும் ஒரு
சங்கம் வேண்டாம்
சத்தியம் செய்வோம் - இனியொரு
சரித்திரம் படைப்போம்

**நல்லையா சந்திரசேகரன், இரத்தோட்டை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசப்பின் ஆழத்தை பொத்தி வைத்தபடி...!

இருள் சூழ்ந்த பொழுதொன்றில்
கண்கள் பேசிக்கொண்டன
புயலின் வீரியத்துடன்
தரணிதனை நெருங்கி கொள்ள
நாதியற்ற தேசத்தின் கதை
கண்டங்கள் தாண்டி.........

கடைக் கண்பார்வையில்
கைத்தாளம் பற்றிக் கொண்ட
துவேச பேரின வாதத்தின்
எல்லை கடந்த நகர்தல்.

கடுகென சில்லிட்ட காற்று
துளையிட்டு துயில் கலைத்தன
செவிப்பறைகள் கண்ணீர் பிரவாகத்தீனூடே

நாளைய
கீறல் விழுந்த வாழ்தலை
இடைவிடா நிரப்பி
இன்னல் துடைத்து
சரணாகெதியில் சொந்த ஊருக்கே......
விரைவாக.......

வாள் கொண்டு
முறிதல் பண்ண வேண்டும்
அரக்கனின் சூசக மாயைகளை!

இதுதான்
என் கனவு
விழிகள் ஏளனம் செய்கின்றன.
தாங்க முடியாத அருவருப்பு
அடைகிறது - என்
உள்ளம்

துண்டிக்கப்படாத மனிதத்தை
அண்டம் புகந்தாழ்ந்து போக
வேண்டும்.

இப்படி
யோசிக்கையில் கனவு கூட
சரசித்தல் செய்கின்றன.

அசப்பின் ஆழத்தை
பொத்தி வைத்தபடி
இப்போ தூங்கிக் கொள்கின்றேன்
தலைகாணிக் கடியில் என்
தேசம் பற்றிய நாளைய
புதிய வார்ப்புடன்.....!!

**-கிண்ணியா ஜே.பிரோஸ்கான்**

படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்புக்களை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்து உங்கள் பக்கம்..........

வழி தவறிய மந்தைகளை
புதிய
மேய்ப்பர்கள் அழைக்கிறார்கள்

அடிமைத்தனத்தில் மூழ்கி
ஆண்டுகள் முப்பதை
நீங்கள்
அறியாமல் இழந்துவிட்டீர்

சுதந்திரக் காற்றின்
சுகமான அனுபவங்களை
சுகித்து வாழ மறந்து
அந்தகார இருளில் இதுவரை
முக்குளித்தது போதும்
எழுந்து வாருங்கள்

மூடிய பாதைகள்
புதிதாய் மீண்டும்
திறந்தன உங்களுக்காய்
நீங்கள்-
தேடிய சுதந்திரம்
இனி -
தேடியே வருகுது
சந்தேகம் தேவையில்லை!

அவலை நினைத்து
உமியை இடித்த
அந்த
கனவுக் கதை மறப்பீர்
என
வழிதவறிய மந்தைகளை
புதிய
மேய்ப்பர்கள் அழைக்கிறார்கள்

ஆனாலும் நாட்டின்
அறுபது ஆண்டு கால
சுதந்திர வரலாற்றில்
ஆனகதை உலகறியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மைகளின்
உரிமைகளின் உத்தரவாதத்தை
கிழித்தெறிந்து
பாதயாத்திரைப் பயணம் செய்து
'ஆடி' முடித்த அவலங்களின்
பெருமைப் பிதாமகர்களின்
வழித்தோன்றல்களுக்கு
இப்படி ஒரு ஞானம்.......?

மின்னல் கீற்றுக்களாய் இவர்களிடம்
மேலெழுந்த தயாள சிந்தை
கல்லுக்குள் கசியும் ஈரமா
இல்லை
காலத்தின் தேவைக்காக
போடும் புதுக்கோலமா ........!

புதிய பாதையின் ஆதார புருஷர்களாய்
உங்களை வரித்துக்கொண்டு
வழி நடத்த வந்த மேய்ப்பர்களே
உங்கள் வழிநடத்தலில் நாளை
சமத்துவ பூமியாய் நாடு மலருமா
இல்லை இனபேத
சகதியில் மீண்டும் வீழ்ந்து
"சமரசம் உலாவும் பூமியாய்"
அது தடம்புரண்டு மாயுமா.......
ஆமாம்....
புதிய மேய்ப்பர்களே இப்போ
பந்து உங்கள் பக்கம்!

— ஷெல்லிதாசன்

அறிமுகக்குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பிவையுங்கள். 2007ற்கு முன் வெளியானவை அறிமுகக் குறிப்பில் இடம்பெறமாட்டாது

வாசகர்களே,
நீங்களும் எழுதலாம் இதழின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள். அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்பார்க்கலாமா!**

புத்த மத பிக்குகள்
போர்ப்பரணி பாடும் நாட்டில்
சமாதானத்தை எதிர்பார்க்கலாமா?
நாடாளுமன்றத்தை
நகைச்சுவை மன்றமாக்கி
சிரிப்பாய் சிரிக்கும் நாட்டில்
நல்லாட்சியை எதிர்பார்க்கலாமா?
வெள்ளை வானை ஏவி
கண்ட இடத்தில் கடத்த
கட்டளையிட்டு விட்டு
நீலிக்கண்ணீர் வடிப்போர்
வாழும் நாட்டில்
நீதியை எதிர்பார்க்கலாமா?
ஊடகவியலாளர்களின்
உயிரைக்குடிக்கும்
குள்ள நரிகள் வாழும் நாட்டில்
பாதுகாப்பை எதிர்பார்க்கலாமா?
மழை வெள்ளம் பாயாத
கோடைக்காலத்திலும்
குருதியாறு ஓடும் நாட்டில்
பாலாற்றை எதிர்பார்க்கலாமா?
கோயில்களை
குண்டு வைத்து தகர்க்கும்
கொடியவர்கள் வாழும் நாட்டில்
கருணையை எதிர்பார்க்கலாமா?
வாய்மைக்கு விலங்கிட்டு
பொய்மைக்குப் பொட்டிட்டு
பொய்யாட்சி நடக்கும் நாட்டில்
சத்தியத்தை எதிர்பார்க்கலாமா?
இரவில் இமை மூடிய உலகம்
காலையில் கண் விழிப்பது நிச்சயம்!
ஆனால்... இரவில் இமை மூடிய
இந்நாட்டுக் குடிமகன் காலையில்
கண்விழிப்பான் நிச்சயம் என
எதிர்பார்க்கலாமா?

- மாத்தளை ஆர்.பாலகிருஸ்ணன்

**உணர்வுச் சுதந்திரம்**

நெடுவானில் தோன்றுமா - இந்த
பிள்ளைகளின் உருவகம்
நட்சத்திரங்கள், சந்திரன்கள்
சூரியன்கள், இவர்களுக்கு
நாம் சூட்டிய நாமங்கள்
சொல்ல நினைப்பதை - சொல்ல
விடாது நசுக்கப்பட்ட நட்சத்திரங்கள்
பிரகாசிக்கத் துடித்த
ஒளியை மறைத்த மேகங்கள்
இதமாய் மகிழ்ச்சியை வெளிப்படுத்த துடித்த
குளிர்நிலவை வெறுத்த மனங்கள்
வகுப்பறையின் நுண்ணறிவுக் களங்கள்
வெறுமனே சோம்பல் கதைகளாய்
ஆகிடும்போது
நட்சத்திரங்களும், சந்திரன்களும்
சூரியன்களும்
எங்கே தம்மை வெளிப்படுத்தும்

**க.சுவர்ணராஜா, வ.தே.கல்விக்கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெருக்குரல்

வானத்தில் சொர்க்கம் காட்டுவார் மதவாதிகள்.
புவனத்திலதைத் தேடுகிறார் மக்கள்.

..................................

வாக்குச் சீட்டினால் ஆட்சியை மாற்றலாம்
தாலி கட்டினால்
வாழ்க்கையை மாற்ற முடியுமா?

..................................

நல்ல குடும்பம் உள்ள இல்லத்திலும்
நல்லாட்சி
இல்லாயின் நல்வாழ்வே இல்லை.

..................................

பெண்ணுரிமை ஆணுடை பூணுவதாலே வரா
பெண்மை பேணுவதே பெருமை

..................................

அன்பால் ஒற்றுமையால் மகிழ்வால் கட்டுண்டார்
ஒன்றுபட்ட இடமே சொர்க்கம்

உடுப்பால் எடுப்பால் மனிதவேடம் போடலாம்
துடிப்பான செயலாற்றான் மனிதனாகலாம்

..................................

அழகிக்கு விளங்கும் விழிகள் மொய்க்குமென
அதனால் நோக்கார் யாரையும்.

**-சூசை எட்வேட், அன்புவழிபுரம்**

## "ஒற்றுமை யென்ற ஒன்று"

"எங்கெங்கு தேடுவது
என்னருமை சொந்தங்களை
அங்கொன்று இங்கொன்றாய்
அலைந்தே பிரிந்து விட்டோம்"
"அடுக்கடுக்காய் துன்பங்கள்
அனைவர்க்கும் சோதனைகள்
ஒடுக்கவென்றுதான் இன
ஓடுகாலிகள் வந்துவிட்டார்
படுக்க கூட இடம் தராமல்
பரிதவிக்க விடுகின்ற
படுபாதகர்களின் செயல்
பார்ப்பதற்கோ வேதனைகள்"
அகதிகளாய் வந்தவரை
அரவணைப்பார் உலகில் யாருமில்லை
ஊரைவிட்டு சென்றீரே
புது உலகம் காணவென்று நீ
போரைவிட்டு சென்றாலும்
புது உலகம் காண்பதரிது
ஒற்றுமையென்ற ஒன்று
உனக்குள் இல்லையென்றால்
செத்தழிவதை தவிர
சிறப்பேதும் கிடையாது"

**சீ.என்.துரைராஜா (திருகோணமலை)**

களங்களை விரித்துள்ளோம் ஆக்கங்களை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்நியத்திற்குள் அந்நியமாய்!!!

உள்ளுக்குள் செல்வதெல்லாம்
இரைப்பையில் ஜீரணமாகி
நடமாடும் இடமாக
உலா வருவதென்பது
உலகறிந்த உண்மைதான்
உணர்வுகள் மட்டும்
அயலில் அந்தரத்திலுள்ள
உறவுகளின் உரிமைக்காய்
ஒரு துளி உதிரந்தன்னும்
ஈய முடியாது
அலைந்து திரிகிறது.
அந்நியத்திற்குள் அந்நியமாய்!

- ஜெயா தமிழினி

## ஒரு பிடி சாம்பல்

தீப்பிடிக்கும்
ரத்தப்பெருக்கு!
தோண்டப்படாமலே
முடங்கிக் கிடக்கும்
சவக்கிடங்கு!
ஒட்டிச் சுருட்டிய
சல்லடை சருகுகள்!
அகருபமாய் புளுகு
நிறைந்து குறிஞ்சிப் புனல்!
மனசின் முயற்சி
நெருஞ்சி முள்ளாய்
தைத்தும்
பூக்களுடன் கரந்துறைந்து,
எச்சில் முத்திரை பதித்த
சதைகள்!
மலிந்தபடி...
சேற்றிலே உள்முரண்
எழுந்து
கூர்நாவு
துப்பிய பிரளயத்தின்
ஜீவ மரணப் போராட்டம்!!
செத்துப் பிழைக்கும் புவனம் மீதெனது
ஒரு கைபிடிச் சாம்பல்

- செ.ஜெ.பபியான் - சாமிமலை

## சத்தியத்தின் செயலுக்காய்

தாய்க்கோழியின் சிறகுக்குள்ளிருந்து
சிதறியவைகளின்
வேதனையின் முனகல்கள்
வலியின் துடிப்புக்கள்
அலறலின் ஒலிகள்
தாகத்தின் ஏக்கங்கள்
பசியின் பரிதவிப்புக்கள்
முழுவதுமாய் முடிவதற்குள்
இன்னமும் சத்தம் மட்டும்
இட்டுக்கொண்டிருக்கும்
சமாதானப் புறாக்கள்
சத்தியத்தின் செயலுக்காய்
வருவதெப்போ?

- வ.இனியன், உப்புவெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறு செய்யச் சலுகைகள்

பகுத்தறிவு, பட்டறிவு,
பட்டறிவு, தொட்டறிவு
எல்லா அறிவுகளும்,
இணையற்றிருந்தாலும்
தகாத கொடுமைகளை
தயங்காது செய்கின்றான்.
எத்தனையோ செய்துவிட்டு
இருக்கின்ற கொடியவனை,
பாவியாய்க் கணிக்காமல்
பரிதாபம் காட்டுதற்கு
வேதவிதிபோல் பலதை
மேற்கோளாய்க் காட்டுகின்றோம்.
"அவனும் மனிதன்தான்",
"அவனுக்கும் ஆசையுண்டு",
"இவனைப்போல் உலகத்தில்
எத்தனைபேர் இருக்கின்றார்",
"தவறு செய்யாதவனை
சரித்திரமும் சொல்லவில்லை",
"மனிதன் தவறு செய்தல்
மனிதனேற்ற உண்மையிது",
"ஆனைக்கும் அடிசறுக்கும்
அந்த உண்மை மெய்ப்பதுபோல்
உயர்ந்த மனிதர்களும்
இழிவுகளைச் செய்கின்றார்",
"சட்டிபானை இருப்பிடத்தில
சத்தம் வருவதுதான்"
,"இன்னார் இன்னாரெல்லாம்
எத்தனையோ செய்தவர்கள்
அத்தனையும் உலகத்தில்
அவமாய் விளங்கியதா?"
இத்தகைய கருத்துக்களில்
இருக்கும் நிழலுக்குள்
ஒதுங்கித் தவறுகளை
உக்கிரமாய்ச் செய்கின்ற
கூட்டம் அதிகரித்துக்
கொடுமைகளும் மிஞ்சியது.
சமூகம் கொடுத்துள்ள இச்
சலுகைகள் மட்டுமன்றி
மேன்முறையீடு செய்தல்,
மன்னிப்புக் கோரி நிற்றல்,

அரச பழிவாங்கல்,
அவன் மனித உரிமைபெறல்
இப்படியும் ஆதரவு
இவனுக்குக் கிடைப்பதனால்
நன்மைகள் செய்கின்ற
நாட்டமே இல்லாமல்
தீமையிலே மூழ்கித்தான்
சீவியத்தைக் கழிக்கின்றான்!
செய்யத் தெரியாதவனோர்
சிறியதையே செய்துவிட்டு
கால் வால் தலையிறுகி
கண்பிதுங்கி நிற்கின்றான்!....

**ஏ.ஸீ. இஸ்மாலெவ்வை,சம்மாந்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு

மெதுவாய் மிதித்துச் செல்
பூட்ஸ் அழுத்தத்தில்
அமிழ்ந்துவிடும் - எங்கள்
நீள் காவியங்கள்
நாங்கள் விதைக்கப்பட்டுள்ளோம்.

காற்றை அளவாய் உள்ளிழுத்து
வெளியிடு : எதிலும் அசுரத்தனங்கள்
வேண்டாம் : மீளெழும்ப முடியாதுயிலை
கலைத்துவிடும் : சின்னச் சின்ன
சலசலப்பும் :

பலதசாப்தங்கள் விதைக்கப்பட்டவை
வெற்றி இறுமாப்புக்கள் கலைக்காமல்
பார்த்துக் கொள் : நாளை
மீண்டுமொரு உயிர்ப்பு நடவாமல்
போய்விடும் :

எங்கள் மணல்மேடுகளும் திண்ணைகளும்
பறைமுழங்கும் மாரியம்மன் கோயிலும்
தேரோடும் வீதியும் : கொஞ்சம்
அப்படியே இருக்கட்டும் :

வெள்ளரசுக்கிளையோடு உண்மையையும்
சேர்த்து நடுங்கள் - சிலைகளோடு
அன்பையும் சேர்த்து பிரதிஸ்டை
செய்யுங்கள்:
எங்கள் இருப்புக்காய்!

**கி.கலைமகள் நாவற்குடா**

---


## தயாராகிறது! எழுதுங்கள்!!

## "இலக்கியப் பூக்கள் -II"

(ஈழத்து அமர எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகளின் தொகுதி)

- ❖ யாரும் எழுதலாம்
- ❖ கட்டுரைகள் முழுத்தகவல்களுடன் 4/5 பக்கங்களுக்கு குறையாமல், புகைப்படங்களுடன் இருத்தல் வேண்டும்
- ❖ கட்டுரைகள் புதிதாய், எங்கும் பிரசுரமாகாமல், எழுத்துக்கள் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்
- ❖ கட்டுரைகளுக்கு ஆக்கதாரரே பொறுப்பு
- ❖ கட்டுரையாளர்கள் தங்கள் புகைப்படத்துடன் தங்களின் தகவல்களையும் தருதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**R.Mahendran,34, Red Riffe Road, Plaistow, London E13 OJX.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைக்கூ ஒரு சர்ச்சை**

**நீங்களும் எழுதலாம்" ஆசிரியர் அவர்களுக்கு,**

"நீங்களும் எழுதலாம்" இருமாத கவிதை இதழின் வாசகன் மன்னார் அமுதனின் வணக்கங்கள்,
ஆலவிருட்சம் போல் வளர்ந்து நிற்கும் பல இலக்கிய இதழ்கள், சில எழுத்தாளர்களால் நிரந்தரமாகக் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிய படைப்பாளிகளை "நீங்களும் எழுதலாம்" ஊக்குவிப்பதும், இளம் தலைமுறைப் படைப்பாளிகளின் ஆற்றலை வளர்க்கக் களம் அமைத்துக் கொடுப்பதும் மன மகிழ்ச்சிக்குரிய விடயம்.

சில மாசிகைகள், தங்களை வைத்து பல எழுத்தாளர்கள் வாழ்ந்து வருவதாகவும், புகழ் பெறுவதாகவும் திரும்பத், திரும்பக் கூறிவரும் நிலையில், தாங்கள், நீங்களும் எழுதலாமின் ஆசிரியர் பகுதியை சிறப்பான கருத்தாழமிக்க செய்திகளுடன் பகிர்ந்து கொள்வது பயனளிக்கிறது.

இருப்பினும் ஒரு சிறு நெருடலான விடயத்தைத் தங்கள் கவனத்திற்கு முன்வைக்கின்றேன். புதுக்கவிதை என்பது மரபுகளைச் சுயமாக உருவாக்கிக் கொண்டவை. "ஹைக்கூ" என்பது புதுக்கவிதை அல்ல. மரபுக்கவிதை. புதுக்கவிதை, போன்றே "ஹைக்கூ" என்பது ஒரு கவிதை வடிவமாகும். ஹைக்கூ, அசை பிரித்து எழுதப்பட வேண்டியது. மூவடிகளைக் கொண்டதெல்லாம் ஹைக்கூ அல்ல. முதலடி 7 அசைகளும், இரண்டாம் அடி 5 அசைகளும், மூன்றாம் அடி 7 அசைகளும், கொண்டமைந்து, (7,5,7) ஒரு கருத்தை வெளிப்படுத்துவதே "ஹைக்கூ" எனப்படும்.

இதை ஏன் குறிப்பிடுகிறேனென்றால், 2009 ஜனவரி - பெப்ரவரி இதழில் (பக்கம்- 29) மாவனல்ல உ.நிசாரின் கவிதைகள் ஹைக்கூ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. அது போன்ற கவிதைகளை "குறுங்கவிதைகள்" என்றே கூறலாம். அவை ஹைக்கூ அல்ல. இதனை **"திராட்சைரசம்"** தொகுப்பில் **கலாநிதி.துரைமனோகரன்** அவர்கள் குறிப்பிட்டுள்ளதை ("நீங்களும் எழுதலாம் : மார்ச் - ஏப்ரல் 2009,பக். 26" இதழில் அறிமுகக் குறிப்பு) மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்றே நினைக்கிறேன்.

ஹைக்கூ எழுதுவதற்கான விதிகள் தெரிந்தால் நம் படைப்பாளிகள் சிறப்பான கருத்தை 7,5,7 அசைகளுக்குள் சிறைப்பிடிப்பார்கள் என்பது நாமறிந்ததே. எனவே அசை பிரிக்கும் முறையை ஓர் அறிமுகம் செய்வது சாலச் சிறந்தது.
இதனைத் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேனே தவிர பிழை கண்டுபிடிக்கும் முயற்சியல்ல என்பது எனது தாழ்மையான கருத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தொழிற்பாடுகளுக்கும், பணிப்பளுவிற்கும் மத்தியில் "நீங்களும் எழுதலாம்" இதழை இடைவிடாது வெளிக்கொணர்வது பாராட்டப் படக்கூடிய விடயம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மாவனல்ல உ. நிசாரின் "எங்களூரிலும் இருந்தது ஒரு குளம்", தங்களுடைய "அலங்கோலம்", ஷெல்லிதாசனின் கவிதைகள் ...... மற்றும் பலரின் கவிதைகள் அனைத்தும் சிறப்பான சமூகக் கண்ணோட்டத்தோடும், எதிர்கால ஏக்கங்களோடும் எழுதப்பட்டிருப்பது சிறப்பு.

சுருக்கமாக சொல்வதென்றால் "நீங்களும் எழுதலாம்" படைப்பாளிகளுக்கு (மாணவர் உட்பட) களம் அமைக்கும் உயர்தளம். கருத்துக்களை மோதவிடும் சமர்க்களம். இலக்கியங்களின் ராணியான கவிதாவுலகில் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**மன்னார் அமுதன்**

பழமொழிகளும், புதிர்களும் கைக்கூ என கருதப்படுகிற ஒரு நிலை தமிழில் நிலவுகிறது.இவை பற்றிய உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.(ஆ.ர்)

**வாசகர் கடிதம்**

**பங்குனி - சித்திரை 2009 இதழ் கிடைத்தது. நன்றி**

காலத்திற்கேற்ப இதழை வடிவமைத்துள்ள திறமையை முதலிலே மெச்சினேன். ஒரு நீண்ட கடித உறைக்குள் அழகாக அமர்ந்து வந்து சேர்ந்து விட்டதே! இன்று சஞ்சிகை வெளியீட்டாளர்களைப் பயமுறுத்துவது தபாற் செலவுதானே. வாசகர்களாகிய நாம் சந்தாதாரராகும் போது எம்மைப் பாதிப்பதும் அதுதான். அந்தச் சவாலைத் திறமையாகச் சமாளித்திருக்கிறீர்கள்.

சிறு இதழாக கைக்குக்கிடைத்த அது உள்ளடக்கத்தில் திருக்குறள் போன்று திருப்தி தருகிறது. பல்வகை, பல்சுவை, பல்தரக்க விதைகள் கலந்து நல்விருந்தளித்தன. பாராட்டுக்கள்.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய்

11வது இதழ் கிடைத்தது நன்றி
tastefull நிறைந்ததான ஒரு கவிதை இதழை உங்களால் வெளிக்கொணர முடியும் என்பதைத் தெரிந்து கொண்டுதான் நமது தமிழ் மொழி இனிமையான இந்த Task ஐ உங்கள் மீது சுமத்தியுள்ளது. இது சுமையான Task

ஆயினும் சுவையான Task. "பாப்பசி கொண்டவர்களுக்குப் பந்தி போடும் Task. அளவில் சிறிய பாத்திரங்கள் தான் உங்களிடமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் பசியோடிருப்பவர்களுக்குப் பந்தி இடத்தானே வேண்டும்!ஆகவே எல்லோர்க்கும் - இடுங்கள் பந்தி எவ்வளவு காலமானாலும் பிந்தி! பந்தி சிறக்கவும் அது தொடர்பிலான பணி சிறக்கவும் எனதன்பான வாழ்த்துக்கள்.

**ஏ.எம்.எம். அலி. கிண்ணியா** -

---

தங்கள் இனிய மடலும் கவிதை நூலின் இரு பிரதிகளும் கிடைத்தன. உளம் நிறைந்த நன்றி. கவிதை துறையில் நீங்கள் காட்டும் ஆர்வம் கண்டு மிக மகிழ்ச்சி. கவிஞர்களுக்குக் களம அமைத்துக் கொடுக்கும் தன் நலம் கருதா அக்கறை தங்கள் இயல்பு என்பது கண்கூடு.

தங்கள் கவிதை நூலின் வளர்ச்சிக்கும் தங்களின் நல்வாழ்விற்கும் என் ஆத்மார்த்தமான வாழ்த்துக்கள். விரைவில் மீண்டும் தொடர்பு கொள்வேன்.

**வை. சுந்தரேசன். புலோலி வடக்கு,**

---

**அன்புடையீர் வணக்கம்**

பொருள் : "நீங்களும் எழுதலாம்" கவிதை இதழ்.

அண்மையில் தாங்கள் முத்தமிழ்ப் படிப்பகத்திற்கு அனுப்பிவைத்த "நீங்களும் எழதலாம்"எனும் கவிதை இதழ் கிடைக்கப் பெற்றோம். மிக்க நன்றி.தங்களின் இதழை படிப்பகத்தில் உறுப்பினர்களுக்காக வைத்துள்ளோம். பயனுள்ளதாக பலர் தெரிவித்துள்ளனர். இந்நாட்டிலும் ஆங்காங்கே உள்ள தமிழ் ஆர்வலர்கள் இம்மாதிரியான இதழ்களை வெளியிட்டு வருகின்றனர். தங்களின்

முயற்சி வெற்றியடைய படிப்பகத்தின் மனம் உவந்த பாராட்டுகள்.

முத்தமிழ் வணக்கம்

அன்புடன்

**பொன்.முனியாண்டி,செயலாளர், முத்தமிழ் படிப்பகம் செந்நூல், மலேசியா.**

---

தங்களது "நீங்களும் எழுதலாம்" எனும் பங்குனி – சித்திரை மாத இதழ் கிடைக்கப் பெற்றேன். மிகவும் அருமையாக இருந்தது. தங்களின் இம் முயற்சிக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களின் இப்பணி மென்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

**இ.இளங்கோவன், செயலாளர்,கல்விப்பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம் திருகோணமலை.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

## NURSE'S SONG

**When the Voices of children are heard on the green**
**And whisp'rings are in the dale,**
**The days of my youth rice fresh in my mind,**
**My face turns green and pale.**

**Then come home, My children, the sun is gone down,**
**And the dews of night arise;**
**Your spring & Your day are wasted in play,**
**And your winter and night in disguise.**

**மூலம்: வில்லியம் பிளேக்**

**ஆயாவின் பாடல்**

பிள்ளைகளின் குரல்கள் புல்வெளியில் ஒலித்தபோது
பள்ளத்தாக்கில் அவர்கள் இரகசியமாய் பேசியபோது
என் இளமைக்கால நினைவுகள்
மனதில் பசுமையாய் எழுகின்றன
என் முகம் வெளுக்கின்றது
என் பிள்ளைகளே வீடு திரும்புங்கள்
அந்தி சாய்ந்து விட்டது
மாலைப்பனி தொடங்கிவிட்டது
உங்கள் வசந்தமும் உங்கள் நாட்களும்
விளையாட்டில் விரயமாகின்றன
உங்கள் குளிர்காலமும் இரவும் மறைவில் உள்ளன.

**பெயர்ப்பு:- வைரமுத்து சுந்தரேசன்**

நன்றி: பிளேக் கவிதைகள் (மொழி பெயர்ப்பு)

கணினி மயப்படுத்த உதவிய ஆர்.நித்தியா, (Edgenet Cafe உடவர்மலை) அவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய அஸ்ரா பதிப்பகத்தினருக்கும் நன்றிகள்

ISSN 1800 - 3311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்சேர்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் - 13
இருமாதகவிதை இதழ்
ஜூலை- ஆகஸ்ட் - 2009
ஆசிரியர்
எஸ். ஆர். தனபாலசிங்கம்
**படைப்பாளிகள்**

| | |
|---|---|
| எஸ். முத்துமீரான் | மண்டூர் தேசிகன் |
| வேல் நந்தன் | எஸ். பாயிஸா அலி |
| ஷெல்லிதாசன் | றிம்ஷா முஹமத் |
| எச். எப். றிஸ்னா | ம. புவிலஷ்சி |
| சீனா, உதயகுமார் | பாவெல் |
| க. சுதர்சன் | உதயாமேரி |
| சூசைஎட்வேட் | தி. சிவதர்சினி |
| மு. ஆ. சுமன் | மன்னார் அமுதன் |
| வனஜா நடராஜா | வாயாடி |
| | ம. கம்ஷி |
| நீலாபாலன் | சி. விமலகாந்தன் |
| ஏ. நஸ்புள்ளா | ரி. புனிதா |
| கோமகள் | செ. ஜே. பபியான் |
| அகியோபி | பெரியஐங்கரன் |
| கவின் மகள் | ஜெனிதாமோகன் |
| க. தீபகாந்தன் | கஜினிமுஹம்மத் |
| எஸ். ஆர். தனபாலசிங்கம் | |

**அறிமுகக் குறிப்பு**
கருத்தாடற்களம் - கிண்ணியா ஏ. எம். எம். அலி
இரசனைக் குறிப்பு - கலாவிஸ்வநாதன்
வாசகர் கடிதம்
மூலமும் பெயர்ப்பும்

---

நீங்களும் எழுதலாம் - 14
இருமாதகவிதை இதழ்
நவம்பர்-டிசம்பர் 2009
ஆசிரியர்
எஸ். ஆர். தனபாலசிங்கம்
**படைப்பாளிகள்**

| | |
|---|---|
| ஷெல்லிதாசன் | நல்லைஅமிழ்தன் |
| ஏ. எம். எம். அலி | பி. கிருஸ்ணானந்தன் |
| கு. றஜீபன் | கே. ஆர். திருத்துவராஜா |
| எம். எஸ். பாஹிரா | பெரியஐங்கரன் |
| ம. புவிலக்ஷி | |
| க. யோகானந்தன் | |
| இனியவன் | செ. ஞானராசா |
| ஜே. பிரோஸ்கான் | ஜெயா தமிழினி |
| வீரசொக்கன் | என். றஷ்மி |
| கணைதிர்வீரசிங்கம் | என். சந்திரசேகரன் |
| நீலாபாலன் | ம. கம்ஷி |
| வி. கௌரிசங்கர் | ர. ஜோயல் ஜைரஸ் |
| ந. டயாழினி | என். சர்மிலன் |
| தி. பவித்ரன் | ஜெ. சரண்யா |
| ந. சசிகுமார் | கன்னிமுத்துவெல்லபதியான் |
| ம. ஜெயமதிவதனி | சூசைஎட்வேட் |
| இளையநிலா | செ. ஜே. பபியான் |
| ஜே. யாழினி | கோபிரமணன் |
| சரோஜா இராமனாதன் | எஸ். யுவன் |

**அறிமுகக் குறிப்பு**
நீங்களும் எழுதலாம் முகவரிகள்
ம. கம்ஷி, வி. கௌரிசங்கர்
இவரைப்பற்றி -
கன்னிமுத்துசெல்லபதியான்
எம். ரி. எம். யூனுஸ்
வாசகர் கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் - 15
இருமாதகவிதை இதழ்
ஜனவரி - பெப்ரவரி 2010
ஆசிரியர்
எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

வை. சாரங்கன்
ஆரையூர்த்தாமரை
கு. ரஜீபன்
நல்லைஅமிழ்தன்
வேல் நந்தன்
அலெக்ஸ் பரந்தாமன்
புலேந்திதிலீப்காந்
பாவெல்
செ. மகேஸ்
சூசைஎட்வேட்
பாமதி
தி. சிவதர்சினி
கே. எஸ். சந்திரஷேகர்
ஷெல்லிதாசன்
ந. சசிகுமார்
என். ஷர்மிலன்
க. வினுஷியா
அன்புநிலா
ஏ. இக்பால்
அஸ்ரபா நூர்டீன்
மலேசியாஏ. எஸ். குணா
எஸ்பாயிஸா அலி
நாச்சிக்குடாசகி
ஞானகுமாரன்
தாமரைத்தீவான்
ம. புவிலக்ஷி
என். றஷ்மி
சி. என். துரைராஜா
வீரசொக்கன்
வனஜா நடராஜா
செ. ஜே. பபியான்
சண்முகம் சிவகுமார்
ஜெ. சரண்ஜா
எஸ். மதிவதனி
ர. ஜோயல் ஜைரஸ்
எஸ். ஆர். தனபாலசிங்கம்

இவரைப்பற்றி - ஷெல்லிதாசன்
சண்முகம் சிவகுமார்

அறிமுகக் குறிப்பு
கருத்தாடற்களம் - கற்றால் வருமோ கவித்துவம்
வாசகர் கடிதம் - மூலமும் பெயர்ப்பும்

---

நீங்களும் எழுதலாம் - 16
இருமாதகவிதை இதழ்
மார்ச் -ஏப்ரல் 2010
ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

நீ. பி. அருளானந்தம்
ஏ. இக்பால்
ச. சிவகுமார்
நல்லைஅமிழ்தன்
வை. சாரங்கன்
ஜெயா தமிழினி
அன்புநிலா
எம். எஸ். பாஹிறா
வே. சசிகலா
மூதூர் கலைமேகம்
ந. சந்திரசேகரன்
ஆர். ஜோயல்ஜைரஸ்
என். சர்மிலன்
ஏஸ். ஆர். தனபாலசிங்கம்
ஏறாவூர் அலைக்தர்
பொன் சுகந்தன்
கலாவிஸ்வநாதன்
செ. ஞானராசா
பாவெல்
நீலாபாலன்
எம். எம். அலிஅக்பர்
அலெக்ஸ் பரந்தாமன்
ஷெல்லிதாசன்
வி. கௌரிசங்கர்
அஷ்ரபா நூர்தீன்
க. வினுஷியா
கு. கார்த்தீபன்

**அறிமுகக் குறிப்பு**
இவரைப்பற்றி : ந. சந்திரசேகரன்
அஷ்ரபா நூர்தீன்
நீங்களும் எழுதலாம் முகவரிகள் -ஆர். ஜோயல் ஜைரஸ்

கருத்தாடற்களம் :
ந. பார்த்தீபன், ஆசிரியமாணவ விரிவுரையாளர்.
வாசகர் கடிதம் மூலமும் பெயர்ப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் - 17
இருமாதகவிதை இதழ்
ஜூலை-ஓகஸ்ட் 2010
ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

எஸ். புஸ்பானந்தன் | ஏ. இக்பால்
எம். எஸ். பாஷிரா | எஸ். முத்துமீரான்
ஞானகுமாரன் | நல்லைஅமிழ்தன்
அபிசெகன் | சோ. சிவகலை
தாமரைத்தீவான் | றிம்ஸா முஹமத்
வி. முகிலன் | சி. சிவசேகரம்
ராஜேந்திரன் | நீலாபாலன்
அ. கௌரிதாசன் | ஆ. அசனார்
ஷெல்லிதாசன் | பிரான்ஸ் நிம்மி
திக்கவயல் தர்மன் | சூசைஎட்வேட்
ர. ஜோயல் ஜைரஸ் | ஏ. நிரோசா
எஸ்கே. விமலன் | எஸ்பாயிஸா அலி
எஸ். பிரியங்கா | ரி. மேகராஜ்
ஏ. எம். எம். அலி | எஸ். ஆர். தனபாலசிங்கம்

செம்மாதுளம்பூ வெளியீட்டுநிகழ்வுப் படங்கள்
கருத்தாடற் களம் : மு. பொன்னம்பலம்
அறிமுகக் குறிப்பு
வாசகர் கடிதம்
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

---

நீங்களும் எழுதலாம் - 18
இருமாதகவிதை இதழ்
நவம்பர் - டிசம்பர் 2010
ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

சபா ஜெயராசா | மண்டூர் அசோகா
அஷ்ரபா நூர்தீன் | அபிசெகன்
செம்பியின் செல்வி | ஞானகுமாரன்
ஷெல்லிதாசன் | அ. அச்சுதன்
நிவித்துறைதர்ஷி | ஏறாவூர் தாஹிர்
ச. சசிதரன் | அத்தாஸ்
திருமதி. அ. ஹெலனா | க. அன்பழகன்
ஜே. பிரோஸ்கான் | எச். எப். ரிஸ்னா
சூசைஎட்வேட் | பாவெல்
அ. பாத்திமாபாஹிரா | எஸ்பி. பாலமுருகன்
நிலாதமிழின் தாசன் | ஜெகதர்மா
அ. அசனார் | கமலசுதர்சன்
சி. சிவனேசன் | கா. தவபாலன்
எஸ்ஆர். தனபாலசிங்கம்

கருத்தாடற்களம் - பார்த்திபன்
இரசனைக்குறிப்பு - ஷெல்லிதாசன்
வாசகர் கடிதம் -
மூலமும் பெயர்ப்பும் - சி. சிவசேகரம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் - 19
இருமாதகவிதை இதழ்
மார்ச் – ஏப்ரல் 2011
ஆசிரியர்
எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

சபா ஜெயராசா
ஏறாவூர் தாஹிர்
க. வெல்லபதியான்
தாட்சாயணி
திவித்துறைதர்ஷி
தி. பவித்ரன்
சண்முகம் சிவகுமார்
நல்லைஅமிழ்தன்
பாவெல்
அபிசெகன்
ஏ. ரவீந்திரன்
பெ. பத்மபிரஷன்
நீலாபாலன்
ஷெல்லிதாசன்
அ. அச்சுதன்
ந. நவசஞ்சிதா
சூசைஎட்வேட்

நிழற்படங்கள்

- வாசகர் வட்டம்
- மட்கம்பித்தீவுவெளியீட்டுவிழா
- கவிதையும் கவிஞனும் - செம்மாதுளம்பூ யாழில் வெளியீடும் அறிமுகமும்
- கவிதைப் போட்டியும் பரிசளிப்பும் கவிதையும் கவிஞனும் அறிமுகமும்-குறிப்பு-கலைமுகம் (சஞ்சிகை)
- கவிதையும் கவிஞனும்
- உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்

வாசகர் கடிதம் : நீ. பி. அருளானந்தம்

- மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

---

நீங்களும் எழுதலாம் - 20
இருமாதகவிதை இதழ்
மே - யூன் 2011
ஆசிரியர் - எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

எஸ். முத்துமீரான்
கலாவிஸ்வநாதன்
சத்தியமலரவன்
ஷெல்லிதாசன்
திவித்துறைதர்ஷி
எம். ரொக்ஷா
ச. மணிசேகரன்
ஜ. சாரங்கன்
நா. ஆன்கியூரின்
பே. பத்மபிரஷன்
எஸ். ஆர்தனபாலசிங்கம்
வேல்நந்தன்
ஏ. இக்பால்
என். சந்திரசேகரன்
ஏறாவூர் தாஹிர்
ஜெ. சரண்யா
சூசைஎட்வேட்
எஸ். எம். இர்பான்
தி. நிரோஷன்
இஸ்மாயில்லெவ்வை
தி. பவித்ரன்

- பேராசிரியர் கா. சிவத்தம்பிஅஞ்சலிநிகழ்வுநிழற்படங்கள்.
- கருத்தாடற்களம் - தாமரைத்தீவான்
- நூல் அறிமுகக் குறிப்புக்கள் - ஒருவாசகனின் பிரதிகள் ஈழத்துக்ககலை இலக்கியஉலகு கருத்துக்கலசம்
- சிற்றிதழ் சேகரிப்பாளர் - க. பட்டாபிரான்
- வாசகர் கடிதம்
- மூலமும் பெயர்ப்பும் - சி. சிவசேகரம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் - 21
இருமாதகவிதை இதழ்
செம்டெம்பர் –ஒக்டோபர் 2011
ஆசிரியர் - எஸ். ஆர். தனபாலசிங்கம்

படைப்பாளிகள்

| | |
|---|---|
| எம். எஸ். பாஹிரா | அலெக்ஸ் பரந்தாமன் |
| தம்பிலுவில் ஜெகா | தி. பவித்ரன் |
| எஸ் முத்துமீரான் | ச. சிவகுமார் |
| நீலாபாலன் | ச. திருச்செந்தூரன் |
| ஏ. எம். எம். அலி | கே. ஆர். திருத்துவராஜா |
| து. நந்தா | ப. கஸ்தூரி |
| ஜனகன்கிஷா | சூசைஎட்வேட் |
| சத்தியமலரவன் | திவித்துறைதர்ஷி |
| ஆஷிகா | மருதூர் ஜமால்தீன் |
| ஏம். றொக்ஷா | வி. . ஆர்த்திகா |
| க. காஞ்சனா | எஸ். ரக்ஷனா |
| எம். ஐ. எம். அஷ்ரப் | பா. மதனரூபி |
| தீரன். ஆர். எம். நௌஷாத் | ச. சுகர்னன் |
| ப. துஷாந்தி | எஸ். சிங்காரவேல் |
| க. வெல்லபதியான் | தமிழ்மாறன் |
| எஸ். ஆர். தனபாலசிங்கம் | ஏ. இக்பால் |

நிழற்படங்கள் :
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

---

நீங்களும் எழுதலாம் - 22
இருமாதகவிதை இதழ்
மே - யூன் 2012
ஆசிரியர்
எஸ். ஆர். தனபாலசிங்கம்

படைப்பாளிகள்

| | |
|---|---|
| எஸ். புஸ்பானந்தன் | நீ. பி. அருளானந்தம் |
| செ. குணரத்தினம் | பா. தவபாலன் |
| என். ரேணுகா | நீலாபாலன் |
| ஆ. அசனார் | அ. அச்சுதன் |
| மானந்தன் | |
| சீ. என். துரைராஜா | |
| எஸ். மௌலானா | பா. ரிசாந்தன் |
| சூசைஎட்வேட் | பா. மதனரூபி |
| தி. பவித்ரன் | ஆன்கியூரின் |
| ந. வினோரூபன் | க. தீபிகா |
| வி. ஆர்த்திகா | வேல்நந்தன் |
| தீரன். நௌசாத் | மாணிக்கவாசகம் |

பதிவுகள், நிழற்படங்கள்
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் - 23
இருமாதகவிதை இதழ்
செப்டெம்பர் - ஒக்டோபர் 2012
ஆசிரியர்
எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

| | |
|---|---|
| எஸ். முத்துமீரான் | ஜெனிதாமோகன் |
| நீ. பி. அருளானந்தம் | மருதூர் ஜமால்தீன் |
| தி. பவித்ரன் | நீலாபாலன் |
| மாணிக்கவாசகம் | ஜெகதர்மா |
| அஷ்ரபா நூர்தீன் | விஷ்வமித்ரன் |
| திருமலையானந்தலிங்கம் | ஜெகதீஸ்வரிநாதன் |
| எஸ்தர்விஜித் நந்தகுமார் | சௌ. சந்திரகலா |
| வி. ஆர்த்திகா | தீபிகா |
| பெ. பத்மபிரஷன் | க. யோகானந்தன் |
| வீரபதிவிநோதன் | சூசைஎட்வேட் |
| தீரன்நௌசாத் | வேல்நந்தன் |
| எஸ். ஆர். தனபாலசிங்கம் | சுகர்ணன் |

பதிவுகள், நிழற்படங்கள்
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

---

நீங்களும் எழுதலாம் - 24
இருமாதகவிதை இதழ்
மார்ச் - ஏப்ரல் 2014
ஆசிரியர்எஸ். ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

| | |
|---|---|
| வேல்நந்தன் | அஷ்ரபா நூர்தீன் |
| கலாவிஷ்வநாதன் | க. யோகானந்தன் |
| ஏறாவூர் தாஹிர் | மருதூர் ஜமால்தீன் |
| விஷ்வமித்ரன் | பா. மதனரூபி |
| எஸ்தர் விஜித் | சூசைஎட்வேட் |
| கே. ஆர். திருத்துவராஜா | அத்தாஸ் |
| தம்பிலுவில்ஜெகா | தாமரைத்தீவான் |
| எஸ் திலகவதி | எஸ். பி. பாலமுருகன் |
| ஷெல்லிதாசன் | ச. நிருஜன் |
| க. பஸ்லினா | குமார் கார்த்திபன் |
| ச. திருச்செந்தூரன் | கவியன்னை |
| எஸ்ஆர் தனபாலசிங்கம் | கே. எம். இக்பால் |

கருத்தாடற்களம் : ஏ. எம். எம். அலி
பார்வைக் குறிப்பு : வெல்லபதியான்
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலையில் நீங்களும் எழுதலாம் இலக்கியச் செயற்பாடுகள் ஒரு குறிப்பு**

**ஓர் ஊடகவியலாளனாக, ஓர் இலக்கிய வாதியாக,**

**ஒரு பார்வையாளனாக, ஒரு பங்களிப்பாளனாக**

***சேனையூர் அ. அச்சுதன்***
சிரேஷ்ட ஊடகவியலாளர்

திருமலை மண்ணில் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்களின் இதழும் இலக்கியச் செயற்பாடுகளும் ஆரம்பித்த வேளையிலேயே அவரோடு நெருக்கமாக இருந்தவன் என்ற வகையில் இச்சிறு குறிப்பை பதிவு செய்வதில் பெருமையடைகின்றேன்.

இலக்கியம் என்பது சமூகத்தின் அடையாளம். ஊடகம் என்பது ஜனநாயகத்தின் குரல். இரண்டும் உலக நாடுகளில் வரலாற்று ரீதியான பதிவுகளை அடையாளங்களை இலக்கியவாதிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் ஏற்படுத்தியிருக்கிறது.

2007 ஏப்ரல் மாதம் திருகோணமலை மண்ணிலிருந்து நீங்களும் எழுதலாம் கவிதை இதழ் தனித்துவமான பாணியில் வெளிவர ஆரம்பித்தது. அதன் முகம், அதன் பார்வை, அதன் அடையாளம் ஏனைய சஞ்சிகைகளின் முகத்திலிருந்து மாறுபட்டதாகக் காணப்பட்டது. அதுவே அதன் தனித்துவமாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீங்களும் எழுதலாம்' சஞ்சிகையுடன் மட்டும் நின்றுவிடாது மாதாந்த இலக்கியச்செயற்பாடுகள், எழுத்தாளர்களின் நூல்களை வெளியீடு செய்தல், மாணவர்களுக்கிடையே கவிதைப் போட்டிகளை நடாத்துதல் மண்ணின் அடையாளங்களாகத் திகழ்ந்தவர்களின் நினைவுகளை நிகழ்வுகளாக சிறப்பிக்கின்றமை எனப் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை திருகோணமலை மண்ணின் பதிவுகளாகக் காணப்படுகிறது

இச்செயற்பாடுகளைச் செய்வதற்கு திறமையும், கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் துணிச்சலும் தேவை. இவை எஸ்.ஆர்.தனபாலசிங்கத்திடம் நிறையவே உண்டு

இவருடைய மொழிப்பற்றும், இலக்கியச் செயற்பாடுகளும் காலத்தை வென்று நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

பின்னிணைப்பில் இலக்கியச் செயற்பாடுகளாக நீங்களும் எழுதலாம் ஏற்பாட்டுடன் தலைமை தாங்கிய நிகழ்வுகளோடு ஏனைய சில அமைப்பு சார்ந்த, சாராத நிகழ்வுகளும் (தலைமை தாங்கிய) எதிர்கால நலன் கருதி இயன்றவரை மிகச்சுருக்கமாக ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

– *ஆசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் எழுதலாம், வாசகர் வட்ட இலக்கியச் செயற்பாடுகள்

2020.02.15 : நீங்களும் எழுதலாம் இதழ் - 27 அறிமுகமும் இலக்கிய உரையாடலும்
T.D.D.A மண்டபம்
தலைமை : எஸ். ஆர்.தனபாலசிங்கம்
சிறப்பு விருந்தினர்: சமூக வைத்திய நிபுணர் எஸ்.அருள்குமரன்
(பணிப்பாளர், சுகாதார அமைச்சு, கிழ.மா)
எஸ்.லக்ஸ்மணன் (தலைவர்,T.D.D.A)

இதழ் ஆய்வுரை : கவிஞர் தி.பவித்ரன்

உரை : ஈழத்து நாவல் இலக்கியம் - கவிஞர் க. யோகானந்தன் (அதிபர்)

2020.01.11 : டாக்டர் இராஜதர்மராஜா, கலாபூஷணம் சித்தி அமரசிங்கம் நினைவேந்தல்
யதீந்திரா (அரசியல் விமர்சகர்,
மு.மயூரன் (இலக்கிய ஆய்வாளர்)
வி.என்.சந்திரகாந்தி, எழுத்தாளர்)
T.D.D.A மண்டபம்

2019.11.12
கலாநிதி க. சரவணபவனின் 12நூல்கள் அறிமுகம் - ஜனாப் M.S.M. நியாஸ் (நீதிமன்றப் பதிவாளர்)

உரை : உடல் நலமும் உடற்பயிற்சியும் - டாக்டர் அ.ஸதீஸ்குமார்
T.D.D.A. மண்டபம்

2019.10.20 கவியரங்கு
: மாநிலம் பயனுற வாழ்வதற்கே
கவிச்சுடர் சிவரமணி (தலைமையில்)
உரையாடல் : சமகால நிலைமைகள் - யதீந்திரா. T.D.D.A.

2019.10.12 சமூகக் கற்கை வளநிலையத்தின் ஏற்பாட்டில் கேணிப்பித்தனின் "ஈழத்தின் சிறுவர் இலக்கியம்" நூல் வெளியீடு.
தலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019.09.21 : நீ.எ.இதழ் 26 அறிமுகம்
சிறப்பு விருந்தினர் - எஸ் லக்ஸ்மணன்
ஆய்வுரை சம்பூர் எம்.வதனரூபன்
T.D.D.A. மண்டபம்
கவியரங்கு - காற்றோடு போகாமல்
(கெஜதர்மா தலைமையில்)

2019.09.01
சிரேஷ்ட ஊடகவியலாளர் சி.குருநாதன்
2வது நினைவேந்தல் நிகழ்வு
ஊடகத் துறையில் குருநாதன் பணிகள் -
பொன்.சற்சிவானந்தம்
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)
சி.குருநாதனும் இன்றைய ஊடகங்களும் ஒரு
பார்வை — ஒ.குலேந்திரன் (ஓய்வு நிலை
உதவிக்கல்விப் பணிப்பாளர்)

ஊடகங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் -
கனகசபை தேவகடாட்சம்
(எழுத்தாளர்) T.D.D.A.

2019.07.16 :
உரையரங்கு
'இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களது
உண்மையான எதிர்பார்ப்புக்கள் எவை?
எஸ்.லக்ஸ்மணன், திருமலை நவம்
(சிரேஷ்ட ஊடகவியலாளர்), யதீந்திரா
கவியரங்கு : கேட்பார் இல்லையோ?
(செ.ஞானராசா தலைமையில்)
T.D.D.A. மண்டபம்

2019.04.07:
நீ.எ. இதழ் 25 அறிமுகமும் ராணி சீதரனின்
'புறங்கைச்சுமை' கட்டுரை நூல் அறிமுகமும்
தலைமை : திருமலை நவம்,
தமிழ்மணி அகளங்கன், ஜனாப். M.S.Mநியாஸ்,
சி.பிரகாஷ் (ஆசிரியர்) சௌ.சந்திரகலா (ஆசிரியை),
இ.மகாதேவன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்,தமிழ்)
ஆய்வுரை— நீங்களும் எழுதலாம் கவிதைஇதழ்கள்,
ஒரு மறுவாசிப்பு
புலோலியூர் வேல்நந்தகுமார்
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியகலாசாலை)

ஷெல்லிதாசன் கௌரவிப்பு.
நகரசபை மண்டபம், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019.02.03
: டாக்டர் இராஜதர்மராஜா நினைவேந்தல்
யதீந்திரா, திருமலை நவம்,
கலாநிதி க. சரவணபவன்
அஞ்சலிக்கவிதை – கவிஞர் மு. யாழவன்,
T.D.D.A. மண்டபம்

2019.02.02
Easy Learning English Grammar, English book Publication Ceremony –
By R.N. Pratheepan
Venue – T/Vivekananda College – Orr's Hill

2018.12.18 இலக்கியச் சந்திப்பு
– எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன்,
தலைமை – திருமலை நவம்
- நூலக மண்டபம்

2018.11.18 : கரவை மு. தயாளனின் இரு நூல்கள் அறிமுகம்:- புளியமரம் - சிறுகதை, குறும்பா,
சிறப்பு விருந்தினர் திருமதி. வளர்மதி ரவீந்திரன்
(பணிப்பாளர் கி.மா.பண். திணைக்களம்)
வி.குணபாலா கலாசார உத்தியோகத்தர்,
வி.மைக்கல் கொலின் (ஆசிரியர் - மகுடம்),
நந்தினிசேவியர், ஓ.குலேந்திரன், ஜனாப் ஏ.எஸ்.உபைத்துல்லா(எழுத்தாளர்),
க.யோகானந்தன், த. சரண்யா, மு. தயாளன்.
நகரசபை மண்டபம்.

2018.09.02 :
கவியரங்கு 'மானிடமே சோர்ந்திடலாமோ'
நிலாவெளியூர் ஜெகதர்மா தலைமையில்)
சி.குருநாதன் முதலாம் ஆண்டு நினைவேந்தல்
- பொ.சற்சிவானந்தம் தி/இந்துக்கல்லூரி

2018.08.25 தலைமை. சேனையூர்
வி.நவரெட்ணராஜாவின் 'பூத்தது தமிழ்'
கவிதை நூல் வெளியீடு
– குளக்கோட்டன் மண்டபம்.

2018.08.04 : விவாத அரங்கு
– சரியான சிறந்த தலைமைத்துவம் எது?

- கொள்கை அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வது.
- சூழ்நிலை அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. பவித்ரன் (ந.ச.உ), திருமதி.
காயத்திரி நளினகாந்தன் (ஆசிரியை)
ஆர்.ஜெரோம் (அதிபர்)
க.ஜெயப்பிரகாஷ் (ந.ச.உ)
குளக்கோட்டன்,மண்டபம்,

2018.07.01 பேராசிரியர் கா.சிவத்தம்பி நினைவும் தமிழ்ச்சூழலின் இன்றைய புலமைத்துவ நிலையும் - யதீந்திரா

கவியரங்கு : இழிநிலை எய்திடலாமோ
T.D.D.A. மண்டபம்

2018.04.28: தா.பி. சுப்பிரமணியம், தம்பி தில்லை முகிலன் நினைவேந்தல்
. செ. ஞானராசர் (அதிபர்)
கனகசபை தேவகடாட்சம், தி.பவித்ரன்

கவியரங்கு : விதியே விதியே என் செய்ய நினைக்கின்றாய் என் அழகிய தீவை
- இந்துக்கல்லூரி

2017.12.17
இசையமைப்பாளர் திருமலை தா. பத்மநாதன் நினைவேந்தல் -
சி. காண்டீபன் (ஆசிரியர்)
கவியரங்கு – எமக்குத் துணை

உரை – உள்ளூராட்சி மன்றங்களின் கடந்தகால நிகழ்கால நிலைமைகள் - பொன் சற்சிவானந்தம்

உள்ளூராட்சி கட்டமைப்பும் அதிகார எல்லையும் ச. பாலசுப்பிரமணியம் (ஓய்வு நிலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
T.D.D.A. மண்டபம்

2017.10.15 மாபெரும் ஒக்டோபர் புரட்சியின் (ரஸ்யா) ஒரு நூற்றாண்டை முன்னிட்டு – கருத்தரங்கு
'ஒக்டோபர் புரட்சியும் மனிதகுல விடுதலையும்'
பேராசிரியர் சி.சிவசேகரம்
- குளக்கோட்டன் மண்டபம்

2017.09.23 சி.குருநாதன் நினைவேந்தல் நிகழ்வு பொன்சற்சிவானந்தம் ,Dr. இராஜதர்மராஜா
இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017.09.09 ஒக்டோபர் புரட்சியை முன்னிட்டு
1917 – 2017 இலக்கிய ஆய்வரங்கு
மார்க்சிம் கார்க்கியின் தாய் உள்ளிட்ட
முன்னணிப் படைப்புக்கள் மீதான ஆய்வு
எழுத்தாளர் ஐ. சாந்தன்
எழுத்தாளர் க. தணிகாசலம் (தாயகம் ஆசிரியர்)

சிறப்பு விருந்தினர் :
தே.ஜெயவிஷ்ணு (செயலாளர் நகரசபை)
ஆ.ஜெகசோதி (சிரேஷ்ட சட்டத்தரணி)
ச.பாலசுப்பிரமணியம் (ஓய்வு உ.உ.ஆ)
வி.ரி.நவரெத்தினம் (சமூக ஆர்வலர்)
குளக்கோட்டம் மண்டபம்

2017.07.15:
சிரேஷ்ட ஊடகவியலாளர்
பொன் சற்சிவானந்தம் பாராட்டு நிகழ்வு.
சேனையூர் அ.அச்சுதன் (ஊடகவியலாளர், எழுத்தாளர்) ஒ.குலேந்திரன்

கவியரங்கு : சொந்தச் சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும்'
தி.பவித்ரன் தலைமையில்)
தலைமைக் கவிஞர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
கிருஷ்ணதாசன் மண்டபம் (உட்துறைமுக வீதி)

2017.06.11 – கவிக்கோ அப்துல் ரகுமான்
நினைவேந்தல். ந.பார்த்தீபன் (ஆசிரிய மாணவ விரிவுரையாளர் வவு.க.கல்லூரி.
கவியரங்கு - 'பொய்யாய் பழங்கதையாய்'
வி.குணபாலா, ந.நித்தியா(மெ.ம.கல்லூரி),
வி.துளசிகா(மெ.ம.கல்லூரி),
-தி/இ.கல்லூரி

2017.04.11 செல்வி நவரெத்தினராஜா நவஜீவனா

SLAS பரீட்சை சித்தி : பாராட்டு நிகழ்வு
சிறப்பு விருந்தினர் : எஸ்.பத்மசீலன்(அதிபர்)
திருமதி.ஜெ.சுலோசனா (அதிபர்)
சித்தி பத்மநாதன் (ஓய்வு.ஆ.ஆ)
'ஆதலினால் தமிழ் மேல் காதல் கொள்வீர்'
கவியரங்கக் கவிதை நூல் வெளியீடு
– கனகசபை தேவகடாட்சம்
கவியரங்கு – வாழ்க்கை எனும் ஓடம்
தி/ இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017.03.05 - காந்தி ஐயா நினைவேந்தல்
கவியரங்கு - மண்ணும் மனிதனும் T.D.D.A

2017.02.26 தலைமை.
தேவி அருணாசலத்தின் "வரும் வசந்தகாலம்" சிறுகதைத்தொகுதி வெளியீடு
இந்துக்கல்லூரி

2016.12.18 கரவை மு.தயாளனின் (இலண்டன்)
இரு நூல்கள் அறிமுக நிகழ்வு
சில மனிதர்களும் சில நியாயங்களும் (நாவல்)
எனது பேனாவிலிருந்து (பல்துறை)
K.வரதகுமார் (நூலகர்) ஷெல்லிதாசன்,
யூலியன் புஸ்பராசா, ஆ.ஜெகசோதி, த.சரண்யா,
எஸ். கருணாகரன் (ஓய்வு நிலை அதிபர்)
நகரசபை மண்டபம்

2016.12.13
பிடல்காஸ்ரோ (கியூபா) நினைவேந்தல்
யதீந்திரா
கவியரங்கு : பாட்டுக்கொரு புலவன் -பாரதி
T.D.D.A பாரதி மண்டபம் -

2016.11.14 மூதூர் மொகமட் ராபியின்
'முயல்களும் மோப்பநாய்களும்' சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு.
கே.வரதகுமார் (நூலகர்), ஷெல்லிதாசன்,
ஆ.ஜெகசோதி, எம்.எஸ்.எம்.நியாஸ்,
எம்.சீ.சபருள்ளாஹ் (சட்டத்தரணி எழுத்தாளர்),
திருமதிசௌ.சந்திரகலா, வி.ரி.நவரெத்தினம்
- நூலக மண்டபம்

2016.10.23 : வி.கௌரிபாலனின்
"காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்"
சிறுகதைத் தொகுதி
அறிமுகமும் கருத்துப் பகிர்வும் -
-இந்துக்கல்லூரி

2016.07.30 : கருத்தரங்கு - எங்கிருந்து எங்கே?
தமிழ் மக்களின் சமகாலப் பிரச்சினைகள் பற்றியதான உரையாடல்

மனித உரிமை, குடியேற்றம், மீள்குடியேற்றம், காணாமற் போனோர், தலைமைகளிடையே ஒற்றுமையின்மை, இராஜ தந்திர நகர்வு, தமிழ் மேட்டிமை வாதம், சிங்கள முற்போக்கு சக்திகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றெடுத்தல், தமிழ் மென்சக்தி நகர்வு என்பன உரையாடலுக்கான புள்ளிகள்
கவியரங்கு : யாரொடு நோவோம்?

யேசுவிட் ஆங்கில கலாசாலை,
உட்துறைமுக வீதி.

2016.06.12 தலைமை. கவிச்சுடர் சிவரமணியின் 'அவள் ஒரு தனித்தீவு' கதையும் கவிதையும், நூல் வெளியீடு, தி/இந்துக்கல்லூரி

2016.05.01 : மே தினச் சிறப்பு நிகழ்வு
உரை : திருமலை நவம்,Dr. இராஜதர்மராஜா
கவியரங்கு – மானிட விடுதலை
தி/இந்துக்கல்லூரி

2016.02.28 : அ.வா.முஹ்சினின் 'பாடசாலை உளவியல்' ஓர் ஊடுகதிர் அறிக்கை கட்டுரை நூல் வெளியீடு.
பிரதம விருந்தினர். கௌரவ அமைச்சர் (கி.மா) சி. தண்டாயுதபாணி
மதிப்பீட்டுரை : வண பிதா. ஏஸ்.ஏ.பொன்சியன் OMI (அதிபர்) – தி / இந்துக்கல்லூரி

2016.01.31 " வேதநாயகம் தபேந்திரனின்' யாழ்ப்பாண நினைவுகள்' நூல் அறிமுக நிகழ்வு ப.மதிபாலசிங்கம் (அதிபர்), நந்தினி சேவியர், வி.குணபாலா, ஷெல்லிதாசன், திருமதி. பிரகலா சுதர்சன், ஜனாப் A.C.M.முஸ்இல் (உதவித்திட்டப் பணிப்பாளர்)
முதற்பிரதி திருமதி. விமலாதேவி பரஞ்சோதி
(ஓய்வு நிலை அதிபர்)
யேசுவிட் ஆங்கில கலாசாலை
- உட்துறைமுகவீதி

2015.11.21 கவியரங்கு –'ஆதலினால் தமிழ்மேல் காதல் கொள்வீர்'
பாராட்டு நிகழ்வு – எழுத்தாளர் சூசை எட்வேட்
அஞ்சலி : வண.மாதுலுவாவே தேரர்
யேசுவிட் ஆங்கில கலாசாலை,
உட்துறைமுக வீதி.

2015.10.28 : தலைமை. இருகவிதை நூல்கள்
சேனையூர் அ.அச்சுதன் - பேச்சும் செயலும்
சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் - ஏக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம விருந்தினர் கௌரவ பா.உ.
க.துரைரெட்ணசிங்கம்
நூலக மண்டபம்

2015.09.20 : மகுடம் காலாண்டிதழ் (பிரமிள் சிறப்பிதழ்) வெளியீடு. திருமலை நவம், அ.ஸதீஸ்குமார், கேணிப்பித்தன், சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன், மைக்கல் கொலின்.
யேசுவிட் ஆங்கில கலாசாலை.

2015.06.02 :
கவியரங்கு - இப்போதைக்கு என்ன வழி? ஜெயகாந்தன், கமலினி செல்வராசன், நாகூர் கனிபா நினைவுரைகள் - Dr.தர்மராஜா, M.S.M.நியாஸ் பெண்களும் சமூக வன்முன்முறையும் - எஸ்தர்
தி/இந்துக்கல்லூரி

2015.06.30 பின்யுத்த இலக்கியப் போக்கும் அதன் விமர்சன உள்ளடக்கமும் - யதீந்திரா
கவியரங்கு : எத்தனை காலம் தான்
தி.இந்துக் கல்லூரி

2015.05.24 : தலைமை -
மிஷாந்தி செல்வராஜாவின் 'மூன்றாம் முத்தம்' குறுநாவல் வெளியீடு
நாவலர் மண்டபம் யாழ்ப்பாணம்

2015.04.25 : தலைமை,
டாக்டர் அ.ஸதீஸ்குமாரின்
'கொட்டியாரச் சிங்கம்' குறுநாவல் வெளியீடு
பிரதம விருந்தினர் சி.தண்டாயுதபாணி (கல்வி அமைச்சர் கி.மா)
தி/இந்துக்கல்லூரி

2015.04.19 :
தமிழ்மணி அகளங்கள் மணிவிழா மலர் அறிமுகம்
தி/இந்துக்கல்லூரி

2015.03.15 : தலைமை.
கி.பி.அரவிந்தன் நினைவேந்தல்
யதீந்திரா, திரு.S.தர்மலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்)
யேசுவிட் ஆங்கில கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015.03.05 :
வில்லிசை மன்னன் சின்னமணி நினைவேந்தல்
டாக்டர் வை. உருத்திரா
உரை. எங்கே போகிறோம்?
Dr. இராஜதர்மராஜா, பொன் சற்சிவானந்தம் -
இந்துக்கல்லூரி

2014.12.07 :
காவலூர் இராசதுரை நினைவேந்தல்
Dr. இராஜதர்மராஜா
'மீரியபெத்த – கொஸ்லாந்த அனர்த்தமும்
மலையகம் எதிர்கொள்ளும் சவால்களும் -
எஸ்தர் விஜித் நந்தகுமார்
சூசை எட்வேட்டின் 'இவன்தான் மனிதன்'
சிறுகதைத்தொகுதி
ஓர் அனுபவப் பகிர்வு - தி/இந்துக்கல்லூரி

2014.11.23 :
கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா
சிறப்பு விருந்தினர் - தி. திருச்செந்தில்நாதன்
(சிரேஷ்ட சட்டத்தரணி)
வ.கலைச்செல்வன் (வர்த்தக சம்மேளனத் தலைவர்)
எஸ். பத்மசீலன் (அதிபர்)
நடன நிகழ்வு. (திருமதி. கோகிலா
நடன ஆசிரியையின் நெறியாள்கையில்)
தி/இந்துக்கல்லூரி

2014.10.18 :
உரை: மாகாணசபையும் 13வது திருத்தச்சட்டமும்
தி. திருச்செந்தில்நாதன்
நினைவேந்தல் - ராஜினி திரணகம –ஆ. அசனார் (JP)
கவியரங்கு : இன்னும் உறக்கமா?
தி/விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்

2014.09.08 : அஞ்சலி உரைகள்
எழுத்தாளர் சாரல் நாடன் -Dr. இராஜதர்மராஜா
எழுத்தாளர் யூ.ஆர்.அனந்தமூர்த்தி – யதீந்திரா
தொழிற்சங்கவாதி பாலா தம்பு – வே. பார்த்தீபன்
(மக்கள் வங்கி),
சமூகப்போராளி கே. தங்கவடிவேல் -
- எஸ்.ஆர். தனபாலசிங்கம்
சிறப்புரை : ஈழத்தில் தமிழில் நிகழ்ந்த பாலஸ்தீன
கவிதை மொழி பெயர்ப்பு முயற்சிகள்
- புலோலியூர் வேல் நந்தகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கு : 'கொஞ்சமோ பிரிவினைகள்'
(யாழவன் தலைமையில்) - விக்னேஸ்வரா ம.வி
2014.06.21 :
ச.திருச்செந்தூரனின் 'ஊழிக்காலப் பறவைகள்'
கட்டுரை நூல் வெளியீடு – தலைமை.
பிரதம விருந்தினர் சி. தண்டாயுதபாணி

2014.06.12 : இந்திய அரசியல் மாற்றங்களும்
தமிழ் மக்களின் எதிர்பார்க்கைகளும்
கந்தவனம் கோணேஸ்வரன் (கவிஞர். அரசியல்
பத்தி எழுத்தாளர், கட்டுரையாளர்) யதீந்திரா
கவியரங்கு : நாளை நமதாகுமா?
(க. யோகானந்தம் தலைமையில்)
பெருந்தெரு விக்னேஸ்வரா ம.வி

2014.04.27 :
சி.குருநாதனின் 'ஒரு நிருபரின் களப்பதிவுகள்'
நூல்வெளியீடு
பிரதம விருந்தினர் -சி.தண்டாயுதபாணி
கௌரவ எதிர்க்கட்சித்தலைவர்
க.செல்வராசா– கௌரவ நகரசபைத் தலைவர்)
என்.விஜேந்திரன் (வலயக்கல்விப் பணிப்பாளர்)
ஆ.ஜெகசோதி, பொ.சற்சிவானந்தம்
கலாநிதி. எஸ்.ரகுராம் (விரிவுரையாளர்,
தொடர்பாடல் கற்கைகள் துறை. திருமலைவளாகம்)
முதற்பிரதி– வேதாகமமாமணி – பிரம்ம ஸ்ரீ
சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
வெளியீட்டாளர்-திருமலை சுந்தா (அம்மா பதிப்பகம்)
தி/இந்துக்கல்லூரி

2014.02.16 :
மிராபாதியின் 'மரணம் - இழப்பு – மலர்தல்''
நூல் பற்றிய உரையாடல்
தி/விக்கினேஸ்வரா ம.வி

2014.01.18
'இனிக்கும் இலக்கியம்'– கெ.சித்திரவேலாயுதன்
(ஓய்வுநிலை ஆ.ஆலோசகர்)
கவியரங்கு : 'உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்'
தி/விக்கினேஸ்வரா ம.வி

2013.12.29: தலைமை.
கலாபூஷணம் C.N.துரைராஜா பாராட்டு நிகழ்வு
தி/கலைமகள் ம.வி, அன்புவழி புரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013.11.17 :
உரை – எம்மைச்சுற்றியுள்ள கருத்துருவங்கள்
- எஸ்.சி.சிவகுமாரன் (ஆசிரியர்)
கவியரங்கு :என்று மடியும் இந்த நாற்காலி மோகம்'
- விக்கிநேஸ்வரா ம.வி

2013.10.13 : இலக்கியமும் சமூக இருப்பும் -
பேராசிரியர் சி.சிவசேகரம்
- தி.இந்துக்கல்லூரி

2013.10.06 :
சூசை எட்வேட்டின் 'இவன்தான் மனிதன்'
சிறுகதைத்தொகுதி வெளியீடு
அருள் சுப்பிரமணியம் ஏ.எம்.எம்.அலி
தாமரைத்தீவான், ஷெல்லிதாசன்
சிறப்பு விருந்தினர்கள் - ஆ.ஜெகசோதி ,
க. அன்பழகன் (கலாசார உத்தியோகத்தர்)
நகரசபை மண்டபம்

2013.09.19: உரை : பேனா உலகமும்
ஆதிக்க உலகமும்'– டாக்டர் இராஜ தர்மராஜா
அஞ்சலி உரை : எழுத்தாளர் சுஸ்மிதா பனர்ஜி
– யதீந்திரா
கவியரங்கு : 'நன்று தேர்ந்திடுக'
(க. யோகானந்தம் தலைமையில்)
தி/இந்துக்கல்லூரி

2013.08.11 பாராட்டு நிகழ்வு
பாராட்டு – ஏ.ஏம்.எம்.அலி, தா.பி. சுப்பிரமணியம்
பாராட்டு உரை – எழுத்தாளர் மூதூர் முகைதீன்
திருமலை நவம்
பிரதம விருந்தினர் - ஆ.ஜெகசோதி,
சிறப்பு விருந்தினர் - வி.குணபாலா
இந்துக்கலாசார மண்டபம்

2013.06.22 : உரை : 'நாடகமும் தெருக்கூத்தும்'
J.K.D. இதயநேசன் (ஆசிரியர்)
கவியரங்கு –'தருமத்தின் வாழ்வு'
(விஷ்வமித்திரன் தலைமையில்)
தி/விக்கினேஸ்வரா ம.வி

2013.05.22 :
இலக்கியத்தில் கசக்கும் உண்மைகள்
-யூலியன் புஸ்பராசா (ஆங்கில போதனாசிரியர்)
கவியரங்கு – நாம் எங்கே போகிறோம்.
தி/விக்கினேஸ்வரா ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013.02.25 : சித்தி அமரசிங்கம் நினைவுரை – திருமலை சுந்தா (எழுத்தாளர்)

தொல் பொருள் சேகரிப்பாளர் வ.நா.தம்பிராசா – தா.பி. சுப்பிரமணியம்

கவியரங்கு : நாடெனப்படுவது

– தி/ விக்கினேஸ்வரா ம.வி

2012.12.27 : கேணிப்பித்தன் ச. அருளானந்தம் பவள விழாவும் கலைஞர் கௌரவிப்பும்

பவளவிழா நாயகன் - ச. அருளானந்தம்

கலைஞர்கள் - செ. விபுணசேகரம் - (நாட்டுக்கூத்து, நாட்டாரிசை)

-ஆ. அசனார் (நாடகம்)

என். விஜேந்திரன் (வலயக்கல்விப் பணிப்பாளர்) ஆ. ஜெகசோதி, தி. திருச்செந்தில்நாதன். கு. லவகுகராஜா (அகம்) வே. பார்த்திபன் (மக்கள் வங்கி) க.யோகானந்தம். ஓ. குலேந்திரன், ந.நவசஞ்சிதா. பெ.பத்மபிரஷன். துஸாந்தி.

விக்நேஸ்வரா ம.வி

2012.12.12

கவியரங்கு – எத்தனையோ அச்சங்கள் (நிலா தமிழின் தாசன் தலைமையில்)

பாரதி நினைவுரை

-புனித சவேரியார் ம.வி

2012.09.29 :

கவியரங்கு - இனியாவது ஒரு விதி செய்வோம்.

தி/விக்கினேஸ்வரா ம.வி

2012.08.09 : ஊடகவியலாளர் சேனையூர் அ. அச்சுதனின் 'எங்களையும் இந்த மண்ணில் மனிதராக வாழவிடுங்கள்'

கட்டுரை நூல் வெளியீடு – பிரதம விருந்தினர் கௌரவ. பா.உ. க. துரைரெட்ணசிங்கம்,

க. செல்வராசா (ந.ச.தலைவர்) க. பேரானந்தம் (அதிபர்). ஊடகவியலாளர் பா.விபூஷிதன். க.யோகானந்தம், தி. பவித்ரன்

-நூலக மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012.07.15 : நீங்களும் எழுதலாம் வெளியிடான அஸ்ரபா நூர்தீனின் 'ஆகக்குறைந்த பட்சம்' நூல் வெளியீடு.

திருமலை நவம், சட்டத்தரணி எழுத்தாளர் எம்.சி. சபருள்ளா.

சிறப்பு விருந்தினர் : சி.மதியழகன் அதிபர், திருமதி ரகுந்திரராஜா இமாசலகுமாரி (ஆசிரிய ஆலோசகர் தமிழ்)

தி/விக்கினேஸ்வரா ம.வி

ஆ.ஜெகசோதி, ஓட்டமாவடி எஸ்.எல்.எம்.ஹனீபா

2012.07.03 : கவியரங்கு. - மானிடம் - மதம், மொழி, தேசம்

2012.04.06 : உரையாடல் :
ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னரான இலங்கை சமூகங்களின் குறிப்பாக தமிழர்களின் உணர்வலைகள் - பொன் சற்சிவானந்தம்
கவிதை வாசிப்பு – வெளிச்சம் நமக்கு வெளியே இல்லை

தி.பவித்ரன், ந. நவசஞ்சிதா

புனித சவேரியார் ம.வி

2012.03.18 சிரேஷ்ட ஊடகவியலாளர் சி.குருநாதன் பாராட்டு நிகழ்வு
தலைமை : ஆ. ஜெகசோதி
விழாக்குழு : எஸ்.ஆர். தனபாலசிங்கம்
பொ.சற்சிவானந்தம், சேனையூர் அ.அச்சுதன் (ஊடகவியலாளர்), எஸ்.பத்மசீலன் (அதிபர்) நா. இராஜநாதன் (ஓய்வுநிலை அதிபர்)

2012.02.07 அரபுதேசத்தின் மீள் எழுச்சி (அரபு வசந்தம்) எம்.எஸ்.எம். நியாஸ்

விக்னேஸ்வரா ம.வி

2012.01.21 : தலைமை – வலயக்கல்வி பணிப்பாளர் கிறிஸ்டி முருகுப்பிள்ளையின் மீண்டு(ம்) எழுவோம். சிறுகதைத்தொகுதி வெளியீடு
பிரதம விருந்தினர் - திக்வெல்லை கமால்

தி/ இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012.01.07 தலைமை –
கவிக்குயிலன் அ.அரசரெத்தினம் அவர்களின் 'எதிர்நீச்சல் அடிப்போம். ஏமாறாமல் இருப்போம்' கவிதைத் தொகுதி வெளியிடு.
பிரதம விருந்தினர் . கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்
திருகோணமலை நூலக கேட்போர் கூடம்

2011.12.10 : கவியரங்கு 'பார் போற்றும் பாரதி' (தம்பி தில்லை முகிலன் தலைமையில்)
உரை : பேராசிரியர் க. கைலாசபதி (நினைவாக)
பெ. பத்மபிரஷன், தே. மாதுமை
கவிஞர் : சு. வில்வரெத்தினம் (நினைவாக)
க. யோகானந்தம்
- தி/புனித சவேரியார் ம.வி

2011.11.26 :
நந்தினி சேவியரின் 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' சிறுகதைத்தொகுதி வெளியீடு –
லெனின் மதிவானம், மேமன்கவி கலாநிதி.ந. இரவீந்திரன், ஷெல்லிதாசன், க.யோகானந்தம்
தி/புனித சவேரியார் ம.வி

2011.11.10 ""என்று தீரும்" கவியரங்கு
(எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில்)
தி/விக்நேஸ்வரா ம.வி
திரு.ஜெகநாதன் (ஓய்வுநிலை அதிபர்)
நிலாவெளியூர் ஜெகதர்மா, ஜே.மதிவதனி (ஆசிரியை) சௌ.சுந்திரகலா (ஆசிரியை), தி.பவித்ரன், பெ.பத்மபிரஷன், ந.நவசஞ்சிதா, ஞா.ஆன்கியூரின், ப.துஸாந்தி, தி.நிரோசன்

**விவாத அரங்கு :**
உலகமயமாக்கம் சமூகத்திற்கு நன்மை பயக்கிறது / பயக்கவில்லை- நடுவர் நந்தினிசேவியர்
மெ.சாருஜன், நாகஅர்ஜுன், பெ.பத்மபிரஷன், தி.நிரோசன், தே.மாதுமை, ஞா.ஆன்கியூரின்

2011.10.09 :
இளம் படைப்பாளிகளுக்காக
புதுமைப்பித்தன் பற்றிய உரையாடல்

2011.09.11 :
இளம்படைப்பாளிகளுக்காக –
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய உரையாடல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011..08.14 இளம் படைப்பாளிகளுக்காக – பாரதிதாசன் பற்றிய உரையாடல் (அகளங்கன்)

2011.08.24 : இளம் கவிஞர் ஒன்று கூடல் 'பட்டப்பகலினிலே பாவலர்க்கு தோன்றுவது' (எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில்) ஜ.சாரங்கன், பெ.பத்மபிரஷன், ஞா.ஆன்கியூரின், தி.நிரோசன், எஸ்.சத்தியதேவன், சம்பூர் எம்.வதனரூபன், தி.பவித்ரன், செ.ஞானராசா, வே. சுசிகலா, சஜீபன், ந. நவசஞ்சிதா

தி/விக்நேஸ்வரா ம.வி

2011.07.10 :
பேராசிரியர் கா.சிவத்தம்பி நினைவேந்தல்
நந்தினி சேவியர், டாக்டர்.இராஜதர்மராஜா, ஷெல்லிதாசன், ராணி சீதரன்

தி/ புனித சவேரியார் ம.வி

2011.06.05 : இளம் படைப்பாளிகளுக்கான பாரதியார் பற்றிய உரையாடல்

2011.05.01 : இளம்படைப்பாளிகளுக்காக – கவிதையும் கவிஞனும் நூல்பற்றிய உரையாடல்

2011.04.15 : நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் அங்குரார்ப்பணமும் கலந்துரையாடலும்

2011.04.10 கவிதைப் போட்டி பரிசளிப்பும் 'கவிதையும் கவிஞனும்' நூல் அறிமுகமும் - எம்.எஸ்.எம் நியாஸ், கனகமகேந்திரா (ஓய்வுநிலை அதிபர்) ஷெல்லிதாசன், ஜெயா தமிழினி, கேணிப்பித்தன்.

தி/புனித சவேரியார் ம.வி

2011.03.06
கவிதையும் கவிஞனும் நூல் வெளியீடும்
ஷெல்லிதாசனின் 'செம்மாதுளம்பூ' நூல் அறிமுகமும்
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி, வதிரி
தலைமை : தெணியான்
க.தணிகாசலம் ஆசிரியர் - தாயகம், புலோலியூர் வேல் நந்தகுமார், செயலாளர் அ.இ.இளங்கோ கழகம், த.அஜந்தகுமார் (விரிவுரையாளர்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.ஆர்.திருத்துவராஜா(கவிஞர்), வே.சிவராசலிங்கம் (ஓய்வுநிலை பி.சபைச்செயலாளர்)

2011.01.09 : சி.சிவசேகரத்தின் 'முட்கம்பித்தீவு' (கவிதைத்தொகுதி) அறிமுக நிகழ்வு
எஸ்.சத்யதேவன், மு.மயூரன், தெ.ஞா.மீநிலங்கோ

எழுத்தாளர் பாராட்டு : சூசை எட்வேட்
வாசகர் பாராட்டு : செ.கனகரெத்தினம் (அன்புவழிபுரம்)
தி/இந்துக்கல்லூரி

2010.08.24 நீங்களும் எழுதலாம். திருமலை கலை இலக்கிய ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்த நீங்களும் எழுதலாம் வெளியீடான ஷெல்லிதாசனின் 'செம்மாதுளம்பூ' கவிதைத் தொகுதி வெளியீடு எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை அதிதி : ஆ.ஜெகசோதி, சிறப்பு அதிதி எழுத்தாளர் தம்பு சிவா, திருமலை நவம் (திக.க.இ.ஒ. தலைவர்) கே.எம்.எம்.இக்பால்) தி.க.இ.ஒ.செயலாளர்), கவிஞர் ஏ.எம்.எம்.கலி கவிதாயின் அஸ்ரபா நூர்தீன், டாக்டர் இராஜதர்மராஜா,
நகரசபை மண்டபம், திருமலை

2009.10.15 :
பெரிய ஐங்கரனின் (அ.இ.இளங்கோ கழகம்) பிரத்தியேக வகுப்பு மாணவர்களுக்கான கவிதைப் போட்டியும் பரிசளிப்பும் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.
எஸ்.சத்யதேவன், என்.சத்தியமூர்த்தி (அதிபர்), க.யோகானந்தன் (அதிபர்), ஆர்.ஜெரோம் (அதிபர்) ஷெல்லிதாசன்

---

2020.01.14
தலைமை : எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
திருகோணமலை கலை இலக்கிய ஆர்வலர்கள் குழுவின் ஏற்பாட்டில் தி/புனித சூசையப்பர் கல்லூரியில் இலக்கியக் கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும்
இணைப்பாளர் - திருமலை மதன் (அசோக்)

சிறப்பு அதிதி : வி.என். சந்திரகாந்தி
கனகசபை தேவகடாட்சம், ஷெல்லிதாசன், வடமலை ராஜ்குமார், தி.பவித்ரன், அ.அச்சுதன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீண்டும் நூலொன்றினூடாக உங்களோடு இணையும் வரையில்...**

இந்தத் தொகுப்பின் பணிகள் முழுமையாக நிறைவுபெறும் இத்தறுவாயில் உலகில் கொடூரமாகப் பரவி இன்றுவரையில் மூன்றரைக் கோடிக்கு (38000000) மேற்பட்ட மக்களை நோயாளிகளாக்கி அண்ணளவாக பதினொரு லட்சம்(10.85000) மக்களைப் பலியாக்கிய கொரோனா வைரஸ்(Covid-19) இலங்கையில் மூன்றாம் கட்டமாக மிகத்தீவிரமாகியுள்ளது.

இந்த வேளையில் பல தடைகளைத் தாண்டி தகவுகளாக "தொகுப்பு ஒன்று" உங்களிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இதில் இலக்கியவாதிகள் மட்டுமல்ல பல செயற்பாட்டாளர்களும் உள்ளடங்குகிறார்கள். சிலர் தவறுதலாக விடுபட்டிருக்கக்கூடும்.

மேலும் தவிர்க்கமுடியாதபடி இலக்கண வழுக்கள் பல இடம்பெற்றிருத்தல் கூடும். மொழி என்ற வகையில் இவை நெருடலை ஏற்படுத்தக் கூடியனவே.

எனினும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சமதர்மக் கருத்தியலை மனுக்குலத்திற்கு அளித்த தமிழுக்கு ஆரம் சூட்டும் பணியில் பெருமனதுடன் பிழைபொறுத்து, நிறை காண்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
15.10.2020.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ISBN978-955-53138-1-0

9 789555 313810

மதுரன் கிராபிக்ஸ் & ஓவ்செற் பிறிண்டேர்ஸ், அல்வாய்.
0776688318, 021 226 3099. e-mail-mathurangraphics@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org